உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பிரேமகலாவதீயம்

இஃது

திரிசிரபுரம்

ஸ்ரீ. வை. குருஸ்வாமிசர்மா அவர்களால்

இயற்றப்பட்டது.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயவெ லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

இரண்டாம் பதிப்பு.

பரம்பக்குடி:

P. நடேசன் அண்ட் சன்ஸ், அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

கீலக ஸு—ஆடிமீ.

1908.

All Rights Reserved.

TEPPAKULAM, TRICHINOPOLY.

TEPPAKULAM, TRICHINOPOLY.

சிவமயம்.

முன்னுரை.

'புத்தகங்களுக்கு முகவுரையும் பிரஸங்கங்களுக்கு பீடிகையும் எங்கும் வழக்கமாயிருக்கிறது' என்பதற்காகவே நாம் இதையெழுதவரவில்லை. இப்புத்தகம் எழுதியதின் கருத்து அன்றே எழுதியுள்ள 'புறவீச்சு' என்பதை வாசிப்போர் அறிவது திண்ணமாதலால் அதை இங்கு பேசவேண்டுவதுமில்லை. ஆயினும் இப்புத்தகத்தை வெளியிடுவதில் 'மலைகெல்லி எலிபிடித்த' எமது ஆறுதலாலேயே இங்குச் சிறிது சொல்வதவசியமாயிற்று. இப்புத்தகம் எமது நண்பர்களுக்கும் தமிழபிமானிகளுக்கும் இன்பம் விளைத்திலதெனின் மலைகெல்லிப் பிடித்த எலியும் மாண்டொழிந்தற்றே. முதற்பதிப்பு தக்கவண்ணம் செலவானால் இதனிரண்டாம்பதிப்பு நல்லமாதிரியாய் உடனே புறப்படுவதுடன் எம்மிடமிருந்து நெடுநாளாய்த் தூங்குவதாகிய "பிரசண்ட விக்ரமம்" என்னும் இரண்டாம்புதுமையும் (Novel) வெளிவர இடமுண்டு. எமது இப்புத்தகத்துக்கு யாமே ஒரு விலை மதிப்பது எவ்வாற்றானும் நன்றல்லவாதலால் யாமிதுவரைசெய்துள்ள செலவை மட்டில் பங்கிட்டு பிரதி ஒன்றுக்கு முக்கால் ரூபாய் கூறுகிறோம். இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் தாம்தாம் கண்ணுறும்பிழைகளையும், தத்தமக்குத் தோன்றும் வழிகளையும் எமக்கு அறிவித்தலொன்றே யாம் விரும்பும் பிரதிபலன். தமிழிலும் தமிழ்த்தெய்வத்திலும் நமது நாட்டின் பூர்வீக நிலையிலும் எமக்குப் பலவித அறிவையூட்டி வளர்த்த எம்பெருங்கருணைத் தாதையார்க்கும் ஸ்ரீலஸ்ரீ-சு. சோமசுந்தரநாயகரவர்கட்கும், பிரமஸ்ரீ (பரமத கண்டன) வெங்கிடகிரி சாஸ்திரிகளவர்கட்கும் யாம் எப்போதும் எவ்வாற்றானும் பெருங்கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை மனமகிழ்ந்து வெளியிடுகிறோம்.

10—12—93,
திருச்சி.

சுபம்! சுபம்! சுபம்!

ஸ்ரீ ஸு-ந்தரேசுவரபாதாரவிந்தார்ப்பணமஸ்து.

M. D. NATESON, M.A., TEPPAKULAM, TRICHINOPOLY.

S. GAURISANKARA SARMA, HEAD ... D.P.W. No. 421

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாம் பதிப்பின் முகவுரை.

இப்புத்தகத்தின் இவ்விரண்டாம் பதிப்பை உடனே வெளியிட வெகுநாளாயெண்ணியும் முடிவுபெறுமையின் காரணம் இதன் கர்த்தாவும் என் தந்தையுமாகிய ஸ்ரீ. வை. குருஸ்வாமி சர்மா அவர்கள் காலஞ்சென்றது முதல் நான் இளைஞனுயிருந்ததே.

இப்போதிதற்கவஸரமும் நம் மஹா மேன்மை தங்கிய நண்பர்களின் மிக அவஸரமான இடைவிடாத கடிதங்களும் தூண்டுதலுமே.

இப்புத்தகம் முதல் பதிப்பின் நடையையே யனுஸரித் திருப்பினும் ஆங்காங்கு சில குறைகளை மாத்திரமே ஸரிப் படுத்தப்பட்டு வெளியாகிறது.

இதையே சில திருத்துப்பாடடன் முடிக்கவெண்ணிய என் தாதையாருடைய கையெழுத்துக்காப்பியை கால தாமதத்துக்கும் செலவுக்குமஞ்சியே இது செலவானவுடன் மூன்றுவது பதிப்பாக வெளியிட நினைக்கிறேன்.

நமது தேசாபிமானமும் பாஷாபிமானமும் உதார குணமுதலிய ஸகல நற்குணங்களும் நிறைந்த நண்பர்களின் அபிமானமிருக்குமேல் அதிசீக்கிரத்தில் என் தாதையா ரெழுதி வைத்திருக்கிற "பிரசண்ட விக்கிரமம்" என்னும் மகுடம்புனைந்த மஹா மேன்மையான நாவலையும் பின்னும் மகா விநோதமான அருமையான அநேக புத்தகங்களையும் அச்சிட்டுத்தர தயாராயிருக்கிறேன்.

15—8—08,
மதுரை.

ஜி. இராஜசிகாமணி சர்மா.

M.S. … R.P.A.
TEPPAKULAM, TRICHINOPOLY.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பிரேமகலாவதீயம்.

தேவர்களுமசுரர்களுந்திருநெடுமாலுதவியினாற்
கடல்கடைந்துதிகைத்தேயோட
மூவுலகின் சரமசரமொருங்கேயோர்நொடிமுடிய
எழுவிடத்தை
யாவருமஞ்சாதபடியாய்வலிந்துவிணாந்தெழுந்துண்
டெதுவுநன்மை
யேவருவதாகுமெனஇசைபோநீன்மணிமிடறே
யெமதுகாப்பாம்.

துணைவருமே யென்றுந் துன்பந் தவிர்க்கு
மிணைசொலவே றொன்றெங்கு மில்லை—குணமலிந்தோர்
சிந்தித்தே போற்றுஞ் சிராப்பள்ளி மாமலையிற்
சந்திரனைச் சூடிச் சரண்.

காமனையெரித்ததுங் காலனையுதைத்ததுங் கண்டதுநன்லை
யொன்றேதான்
சோமனையேற்றதுஞ் சுரநதியேற்றதும் சொரியுமருள்கொண்
டுண்டேதான்
நாமமுருகுண நாடுகுலஞ்செய னாரிமகர்தம
ரிலரோதான்
மாமழபாடியின் மாணிக்கச்சோதியின் மலரிணை தலைகொடு
பணிவேனான்.

அதிகாரம்—க.

“அதோபார்த்தியா அந்தக் கொன்னைமரத்தை! கதிர்கதிராய் அலங்கார தீபமாட்டமா அதின் பூங்கொத்துகள் நீட்டிக்கொண்டு நிற்பது எவ்வளவு அழகாய் இருக்கிறது! இப்பேர்ப்பட்ட பூவைத் தானே நாம பறச்சுக்கொண்டுபே கோவிலுக்குக் குடுக்கோணும்.

நேத்தக்கி கதைவாசிச்ச எடத்துலேகூட சொன்னாளோன்னோ? நல்லதாய் அழகாயிருக்கரதாய் அன்னிக்கிப்பூத்ததாய் இருக்கிற புஷ்பத்தை கொடலேகொடலயாப் பறச்சு ஸ்வாமிக்குக் குடுத்தா எத்தனயோ புண்யமுண்டாமே வரயாடா? சுருக்க பல்லுத்தேச் சூட்டு பூ எடுப்பம்" என்று ஒருநாட் காலையில் பிரேமநாதசர்மா என்னும் ஓர் அந்தணச் சிறுவன் தன் நண்பனான ஆத்திரேயனைப் பார்த்துச்சொன்னான்.

"நீ சொன்னத்துக்கு றெண்டுண்டாடா? என்னசொன்னாலும் கேக்கரதுதான் எனக்குப் புடிக்கும்" என்றான் ஆத்திரேயன்.

அது ஆனிமாதத்தின் பிற்காலமாதலால் பெருங்காற்றெழும்பி ஊரிலுள்ள மரம் மட்டைகளையெல்லாம் பிசாசுபிடித்த பெண்டிரைப்போல் தலைவிரிகோலமாய் ஆட்டிக்கொண்டிருந்தது. எங்கெங்கோ உள்ள உலர்ந்ததழைகளையும் சருகுகளையும் வீடுகளில் கொண்டுவந்துபோடும். கூரைகளை யெல்லாம் சின்னாபின்னம் செய்து பிரித்தெறியும். வெளியே நடப்பவர்கள் காதுகளிலும் கண்களிலும் மூக்கிலும் மண்ணைவாரிவீசும். மேற்போர்த்த துணி துண்டங்களைப்பறக்கச்செய்யும். கோடையில் கூட்டங்கூட்டமாய்த் தொங்கிக்கொண்டும் பதுங்கிக்கொண்டுமிருந்த கொசுகுகளையெல்லாம் இடத்தைவிட்டு விரட்டி ஓம்ய்ய் என்று கத்தச்செய்யும். நதி நதங்களில் தலைமூழ்கிவிட்டு வருபவர்களை மறுபடியும் புழுதியால் மூடிக் குளிப்பிக்கும். எவ்வளவோ மரங்களைமுறித்தும், எவ்வளவையோ வேரறப்பறித்தும், எவ்வளவையோ சாய்த்தும், எவ்வளவையோ ஒன்றற்கொன்று மோதியும் அலங்கோலஞ்செய்யும். பச்சையாயுள்ள மரங்களின் தழைகளில் புழுதியை வீசி அவற்றையெல்லாம் வெள்ளையாய்க் காட்டும். உலகிலுள்ள எப்பொருளையும் உலர்த்தும். சருகுகளையெல்லாம் உதிர்த்து ஓட்டும். காய்ந்துகிடந்த ஆறு, குளம், ஏரிகளுக்குத் தண்ணீரைக் கொண்டுவரும். பயிரிடுவோரையெல்லாம் பகல்முழுவதும் மண்வெட்டியுந் தோளுமாய் அலையச்செய்யும். எங்குபார்த்தாலும் உழுநரும், பரம்படிப்போரும், விதைதெளிப்போரும், நெற்கோட்டைகளை ஊரப்போடுகிறவர்களும், வாய்க்கால்வெட்டு வரப்புவெட்டுக்காக சண்டைசெய்வோருமாய் இருக்கச்செய்யும். சில இடங்களில் பச்சையாய் நடவு எழும்பியிருக்கும். சில இடங்களில் பொன்னிறமாயிருக்கும். "உழுதுண்டுவாழ்வதற் கொப்பில்லைகண்டீர் - பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்

னும்படி, பிற்காலத்தில் நல்லவிளைவைத் தரக்கூடியதாயினும் இப்போது இடுப்பொடிய யாவரும் வேலைசெய்யச்செய்யும்.

இதையெல்லாம் பற்றிப் பேசிக்கொண்டே சிறுவர்களிருவரும் மெல்லமெல்ல நடக்கும்போது தமக்கெதிரில் பெருக்கெடுத்துவரும் கொள்ளிடத்தைக்கண்டார்கள். மனிதர்களுக்குவருந் துன்பம் போல ஒருநொடியில் எங்கிருந்தோ வெள்ளம்வந்து நுரையுடனும் அலையுடனும் பேரிரைச்சலுடனும் ஆற்றின் நிறையத் தண்ணீரோடியது. ஒருநாழிகைவழி அகலமுள்ள கொள்ளிடத்தில் எங்குபார்த்தாலும் தண்ணீராய் பெரிய பெரிய மரங்களெல்லாம் வேருடனும் கிளைகளுடனும் மிதந்து புரண்டோட, செக்கச்செவேலென்றிருந்தது. கரை ஓரங்களில் நாணற்குச்சிகள், சிறுகுச்சிகள், வைக்கோற்கூளம், மூங்கிற்றழைச்சருகுகள், புங்கங்காய்கள், காய்ந்தமாங்கொட்டைகள், தென்னம்மட்டைகள், பனங்கொட்டைகள், உலர்ந்த தெங்கங்கோம்பைகள், கருவேலின் முட்கள் முதலிய குப்பைகூளங்களைக்கொண்டுவந்து ஒதுக்கியும், அங்குள்ள மரங்களின் வேர்களைப் பறித்துக்கொண்டும், கொழிந்தமணல்களை கரை ஓரங்களில் அடித்து, பொன்போல் பளபளவென்று செய்துகொண்டும், எவ்வளவோ இடங்களில் சுழிகளுடனும் எவ்வளவோ இடங்களில் இழுப்புடனும் மேன்மேலும் பொங்கிவந்தது. அங்கங்கே முளைத்திருந்த தருப்பை நாணலெல்லாம் கழுத்துவரையில் முழுகியனவாய் காற்றில் ஆடி ஆடி முழுகி எழுந்திருப்பனவாய் இருந்தன. கரை ஓரங்களிலுள்ள பலவேப்பமரங்கள் பழமெல்லாம் மூலைக்குமூலை தொப்புத் தொப்பென விழுந்துகொண்டும் பெருங்காற்றால் அங்குமிங்கும் ஆடி அலைந்தும் நின்றன. நாகைமரங்களில் பல அரும்பியும், பல காய்த்தும், பலதளிர்கள் மலிந்தும், காற்றில் அலங்கோலமாய் அடித்துக்கொண்டும் ஆடின. கருவேலின் மரங்களெல்லாம் தமது பூக்களை உதிர்த்துக் கொண்டு சுழன்றன. ஆற்றில் மிதந்தும் நீந்தியும் முழுகி முழுகி யெழுந்தும் எவ்வளவோ ஆடுமாடுகளும் பாம்பு பல்லிமுதலிய ஜந்துக்களும் கரையோரங்களில் வந்துகொண்டிருந்தன. சிலவீரர்கள் ஆற்றின் ஓரங்களில் நீந்தி எவ்வளவோ மரங்களையும் காய்கனிகளையும் கரைக்கு இழுத்துக்கொண்டு வந்தார்கள். கரை ஓரங்களில்வந்து மோதும் தண்ணீர் எவ்வளவோ உயரம் வாரி இறைத்துக்கொண்டிருந்தது. ஆகாயமும் மேகம் படர்ந்து, வெயிலும் நன்றாயிறைக்காமல் மங்கலாயிருந்தது. ஆகவே எல்லாம்சேர்ந்து பெருந்துன்பத்தைத் தெரிவிப்பனவா யிருந்தன

அப்போது, "தண் ரொம்ப வந்திருக்கு பாத்தியா? அந்தாலே இருக்கே அந்த நாணலைப் புடிச்சுக்கிண்டு அதுங்கிட்ட இருந்து பல்லுத் தேச்சுட்டு சுருக்கப்போகலாம் வா" என்றான் ஆத்திரேயன்.

பிரேமனும், "எலே! நேத்தைக்கெல்லாம் ஊத்துப்போட்டமே இன்னிக்கி அது முழுகிப்போச்சு பாத்தியா. இந்தபார்ரா! இந்த வேப்பமரத்துலே ஏரிக்கிண்டு நேத்தக்கி மரக்கொரங்காடினமே இன்னிக்கி அது விழுந்தூட்டுது பார்ரா" என்றான்.

"சுருக்க வாடா ஆத்துக்குப் போகோணும். பல்லைத்தேய்மின்னாலே. அப்பரம் நாளைக்கிப் பரிச்சுக்கலாம் பூவை". என்று சொல்லிக்கொண்டே கரியதொரு சாம்பற்கட்டியால் பல்லைத்தேய்த்தான் ஆத்திரேயன்.

"அப்பாடா! ஒனக்கென்னடா இத்தனை அவசரம்? ஒனக்கு பாத்துப் பேர்வச்சிருக்காடா ஒங்காத்துவா அவாவாக்கி சக்கனைதான் போடோணும். ஏண்டா ஆத்தரப்படரே நான்தான் கொட்டப்பாக்குக்கரி கொணுந்திருக்கேனே. அதை எடுக்கரத்துக்குள்ளே பெகு அவஸரம்டா ஒனக்கு" என்று சொல்லிக்கொண்டே தன் தலைப்பில் முடிந்திருந்த கரியை அவிழ்த்தான் பிரேமநாதன்.

"நீங்கள்ளாம் பணக்காரப்பா. நீங்க என்னன்னமோபோட்டுத்தேக்கரேள். சாம்பலுட்டுத்தேச்சாலும் பல்லுவெளுக்கரதோன்னே பாத்துக்கோயேன்" என்று ஆத்திரேயன் சொன்னான்.

"எலே! அவாத்து கோபாலரத்னம் பல்லுத்தேக்கரதே இல்லை. அவன் பல்லு புழுத்துநெளியரதுடா" என்று பிரேமன்சொல்ல, ஆத்திரேயன் "ஹூம் அவன்வாய் நாத்தம் நாரும். பாசிபடந்தமலே - பங்குனித் தேரோடும்மலே யின்னுப்பிட்டு எல்லாரும் அவனைப் பரியாஸம் பண்ணுவார், அது கடக்குடா பிரேமா சுருக்கத்தேய்டா ஆத்துக்குப்போவம்" என்றான்.

உடனே பிரேமநாதனும் "நீ வந்தாவா இல்லாபோனப்போ. நான் கொன்னைப்பூப்பரய்க்காமல் வரமாட்டேன். எத்தன்னாழியானாலும் ஆகட்டும்" என்று சொல்ல, "எனக்கென்னடாப்பா! ஒன்னய்த்தான் ஏண்டா இத்தன்னாழின்னுப்பிட்டு அடிப்பா ஒங்காத்துலே" என்றான் அவன்தோழன்.

"அடிச்சா அடிக்கட்டும் அப்பா. எனக்குத்தான் அடிபட்ரது வழக்கமாப்போச்சு. எங்கப்பா ஒரு நாக்கூட என்னய்ப்பாத்துவ

ய்யாது கெடயாது. நான் என்னசேஞ்சாலும் வாயெமூடிக்கிண்டு பேசாதயேஇருப்பர். நான்சேயரதெல்லாம் அவருக்குஸந்தோஷம். ஆனுக்கே எங்க சித்தம்மே இருக்காபாருடா அவதான் என்னே அடிப்ப. அவ அடிக்கரத்துக்கின்னே பொரந்திருக்காடா. நாயம் அஞ்ஞாயங்கூடப் பார்க்கமாட்டா. நெனச்சப்போதெல்லாம் அடிப்ப. அவளுக்கு அதுவாடிக்கையாபோச்சு. அது என்தலே லேயிழுத்துத் தானே. அது கெடக்கு சுருக்கவாடா என்று சொல்லித் தன் நண்பனை இழுத்துக்கொண்டு விரைவாய்க் கரையேறினன் பிரேமன்.

"எலே! அங்கபார்ரா என்னமோ வடக்காலே பத்திக்கிண்டு எரியராப்போலே இருக்கு" என்றான் ஆத்திரேயன்.

"போடா போடா இளிச்சவாயா இதுகூடத்தெரியாதா ஒனக்கு? அங்கெல்லாம் செம்மண்பூமியாத்தானே இருக்கு; காத்தடிக்கர அடியிலே செந்தூள் மண்ரது. அங்கேமட்டும் கொஞ்சம் வெய்யலடிக்கரது. இது தெரியாமல் நெருப்புப்புடிச்சுதுன்னு பயப்பட்டோ நீ" என்று, பிரேமன் தன் நண்பனை பரிஹஸித்தான்.

அவனும்," இருக்கும் இருக்கும். இந்த மருதாணிகூட என்ன ஆட்டம் ஆடரது பாத்தியா! இதின் எலேயையும் பூவையும் பரச்சு எங்காத்துக்குக் கொண்டுபோகோணும். நாளேக்குப்பாரு செல்றேன். பழேது சப்பிட்டேட்டு வந்து நானும் எங்க அங்கிச்சியும் மடி நரய மருதாணி பரக்யாம்," என்றான்.

பிரேமன் ஏதோயோசனைசெய்துகொண்டிருந்தவன்,"எலே! நேத்தக்கி மிந்தாநேத்தக்கெல்லாம் ராத்திரி ராத்திரி இந்த மரத்திலே எல்லாம் மின்னி மின்னிப் பூச்சி இருந்துதே அதெல்லாம் இப்ப எங்கடா போயிருக்கும்?" என்றான்.

"நமக்குப் பயந்துகிண்டு ஓடிப்பேயிருக்கும்" என்று ஆத்திரேயன் சொல்லிமுடியுமுன், பிரேமன், "ஆஹா! எலே ஆத்திரயா நேத்தக்கிருந்தது இன்னிக்கில்லேடா! நேத்தக்கி துளியூண்டு ஜலம் அரிச்சு ஓடிக்கிண்டிருந்தது. அதுலே, கூட்டங்கூட்டமா குலுகுலு வின்னு மீன்குட்டிகளெல்லாம் ஓடித் திரிஞ்சுது. இன்னிக்கு எத்தனும் ஜலம் பாத்தியாடா. அந்த மீனெல்லாம் எங்கடாபோயிருக்கும்? நேத்தக்காலம்பர காவேரிலே ஒத்தன் நடந்துடுவனு? மணலே விர்ருன்னு வாரிக் காலுலேயும் மேலயும் அடிச்சுதே" என்று ஏதேதோ சொன்னான்.

இப்படியே அவனவனுக்குத் தோன்றியதையெல்லாம் பேசிக்கொண்டு கரையிலிருந்திறங்கி கொன்றைமரத்தடியிற் சென்று எவ்வாறு பூவைக்கொண்டு போவதென நெடுநேரம் எண்ணிப்பார்த்து அருகேயுள்ள தென்னைமரத்தின் ஓலைகளைப்பறித்துக் குடலை முடையப்பார்த்துத் தெரியாமல், அங்கு அருகில் வெளுத்துப் பருத்து உயர்ந்து நுணா இலைபோலவும் வேப்பிலைபோலவும் உள்ள இலைகளுடன் கூடிய பெருமரத்தைக்கண்டு அதின் இலைகள் போதுமான அகலமுள்ளனவன்றென ஒதுக்கி, அவ்வாறே அருகிருந்த கொய்யா, பத்திராக்ஷி, சீதா, நுணா, பூங்கொத்துக்களாலும் பிஞ்சுகளாலும் நிறைந்த நாவல்முதலிய மரங்களையும் விலக்கி, அப்பால் நின்ற ஓர் பூவரசிலேறி, அதில் பாதிக்குமேல் நிறைந்திருந்த பழுப்புக்களைப்பறித்து அவற்றை அப்பூவரசின் நார்கொண்டே ஒருமாதிரி கல்லையாகக்கட்டி, அதில் பூ எடுக்கும்படி கொன்றைச்செடியிடம் வந்தார்கள். அது சிவந்தகொன்றை. அதையே மயிர்க்கொன்றையென்றும் சொல்லுவார்கள். அது ஒரு மரமாக வளரக்கூடியதென்றாலும் கீழே நின்றுகொண்டே பூவெடுக்கக்கூடிய அளவில் செடியாகவேதான் இருந்தது. அதின் அடியில் நின்றுகொண்டு சிறுவர்களிருவரும் மலர்கொய்யும்போது, ஆத்திரேயன், "ஏ! பிரேமா நீ யேண்டா வெளயாடவரதில்லே. ஒருநாளும் வரமாட்டேனுங்கரயே எண்டா அப்படி? இன்னிக்கிவரயா? ஈசரன்கோவில்லே நாங்க வெளயாடப்போரம்" என்றான்.

உடனே பிரேமன், "கோவில்லே வெளயாடரதுன்னு நான் வல்லையப்பா. அதுரொம்பப்பாவம். நாம ஒருகோவிலெக்கட்டரதுன்னு நம்பளாலே முடியுமா? கட்டத்தெரியாபோனாலும் இடிக்கத்தெரியுமுன்னுப்புட்டுக் கோவிலுக்குப் போரதோ. ரொம்பநன்னயிருக்கு" என்று சொல்லினன்.

"நீ கண்டே! வெளயாடினா ஒடனே இடிஞ்சுபோவிடுமோ? ரொம்பரொம்ப வெளயாடி வழக்கமோ நோக்கு? தெனந்தெனம் மடமடென்னு மோளமும் நகாரும் அடிக்கரா - வேட்டு போட்ரா அதுவே இடியல்லியாம். வெளயாடினாத்தான் இடியுமோ. நம்மூர் ஸாமிக்கு ரொம்பசத்திடாப்பா. அவரோ இடியாமல் தாங்கிக்கிவர். என்னென்ருக்கே. அதுகடக்கு. எலே பிரேமா நேத்தக்கி பயங்களையெல்லாம் டக்குடக்குன்னு சிங்கியடிச்சேன்பாரு! பயங்க மணிக்கட்டெல்லாம் முறிஞ்சுபோச்சு. அந்தத்தெருவு அரிஹரி இருக்கான் பாரு அவன் சும்மாவாக்கடி அடிச்சுடுவன். ஆளுக்கே வாக்கடியடிச்சா வறுத்துக்கொட்டும் இன்னுப்பிட்டு சும்மா

தோத்துப்போவன். கோலியாடரத்துலேமட்டும் என்னாட்டமா ஒத்துரும் கெடயாது" என்று சொன்னான்.

பிரோமநாதன் உடனே "அடே அதுகெடக்குடா- நீங்களெல்லாம் தடித்தனமா வெளயாடுவேளே தவிர ஒங்களுக்கு நெஜமான ஸந்தோஷங் கெடயாது. கண்ணிருந்தாலும் பார்க்கத்தெரியாது. நீ பசுவங்கன்னுக்குட்டி துள்ரத்தைப் பாத்திருக்கியா? கொணரிக் கம்போட்டுக்கிண்டு மானாட்டமா பரக்குமே என்ன அழகா இருக்கும். நாலுகாலும் பூமிக்கிமேலே இருக்கும்" என்றான்.

"அதுகடக்கு, நாங்கள்ளாம் குந்துப்புடிப்பமே ஒனக்குப் புடிக்கத்தெரியுமா? ஒனக்கு பச்சக்குதரை ஆடக்கூடத் தெரியாது. அன்னிக்கிவந்தே தாண்டத்தெரியாமே குப்புறவிழுந்தே. கோட்டாங்கோட்டான், புள்ளயார்சதர்த்தி, பேப்பந்து, எலிவால்பந்து, பலிஞ்சடார், செட்டியார்குதரை இதுலே ஒன்னுகூட நோக்குத்தெரியாது அப்படி யிருக்கரத்துலே என்னமோ எங்களைப் பரிஹாஸம்பண்ணவந்துட்டே" என்று படபடப்புடன் சொன்னான் ஆத்திரேயன்.

"நானும் நாலுநாவெளயாடினா எனக்கும் எல்லாந்தெரிஞ்சுடும்! இதுகடக்கு. குளுந்தவேளேலே மாமரத்தின் கிளையிலே எறி ஒக்காந்துக்கிண்டு அதோட மிருதுவான எலயை தன்மூக்கிலே கொத்திக்கிண்டு கிளியளெல்லாம் குதிச்சுக்குதிச்சு வெளயாடுமே நீ பாத்திருக்கயா? அதுவும் போகட்டும் ஒத்தக்கூடு ரெட்டக்கூடாக் கட்டிக்கிண்டு குருவிகள் ஸந்தோஷமாய் ஊஞ்சலாடுமே அதாவது ஒங்கண்ணுலே பட்டிருக்குமா? செலம்பிப்பூச்சிகள் தன் ஒடம்பிலிருந்தே நூலேவிட்டுக்கிண்டு தொங்கரதையாவது அதை சுருக்கச்சுருக்க சுருக்கிக்கரத்தையாவது வலேபண்ணரதையாவது இதெல்லாம் தெரியாமல், லபக்கின்னு ஒருபல்லிவந்து அதை முழுங்கரதையாவது நீங்க பாத்திருப்பேளா" என்று பிரோமன்சொன்னான்.

இப்படியே அவரவர்கள் பழக்கத்துக்கேற்ற பேச்சுக்களைப் பேசிக்கொண்டே வரும்போது "அப்பா" என்று ஒருபெருங்கூச்சலிட்டு கீழேவிழுந்து கடகடவென்று புறண்டு புறண்டு அழுது கண்ணீர் ஆறுக ஓட, உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்ட ஒரு நாழிகையளவு கிடந்தான் ஆத்திரேயன்.

பிரோமன்இதுகண்டு உள்ளம் துணுக்குற்று ஏதோபெருங்கேடு நேர்ந்ததென்று மிகவும் வருந்தி ஆத்திரேயனைத் தன்தொடைமீது

தலைவைத்துப் படுக்கச்செய்து அளவற்ற இனியமொழிகூறித் தேற்றி, நேர்ந்ததென்னையென "அப்பா! இந்தவெரலில் கொன்னை முள்ளுத்தச்சு ரத்தம் ஓடரதுபார்" என்று சொல்லி இன்னொரு முறை யழத் தொடங்கினான் ஆத்திரேயன்.

"நீ இந்த ஒரு முள்ளுத்தச்சுப்பொருக்கமாட்டாமல் ஈள்[illegible]ளுன்னு அழறே. ஒரு துளிரத்தங்கூட வல்லையிங்கரத்துக்குள்ளயே பிரமாதமாய் கூச்சல்போட ஆரம்பிச்சூட்டே. ஒரோருநாளும் இன்னபோதுங்கர தில்லாமல் பத்துமுள்ளாலே என்னை வெடுக்குன்னு புடுங்குவளே எங்க சித்தம்மை. இன்னபோதென்னுண்டா? கன்னமெல்லாம் ரத்தம் ஒழுகுமே. என்னாட்டமா நீ இருந்தா இத்தன்னாளா செத்துப்போயிருப்பியே கிள்ளியும்விட்டேட்டு எங்கயோ பேய் முள்ளுக்கிழுச்சுக்கிண்டு வந்தூட்டான் என்னு எங்கப்பாக்கிட்ட சொல்லியும் விடுவளே மஹராஜி. இதைச்சொல்லரத்துலே லாபமென்ன? அவாவாவெனைப்படி நடந்தூட்டுப்போரது; என்தலையிலிழுத்து அப்படி; அதை நான் தானே அனுபவிக்கோணும்" என்று சொல்லித்தேற்றினான். ஆனால் சொல்லும்போதே அவன் அகத்தின் வருத்தத்தைக் காட்டுவதுபோலும் மளமளவென்று அவன் கண்ணிலிருந்தும் நாலைந்துசொட்டு நீர்விழுந்து தொடைமீது தலைவைத்துப்படுத்திருந்த ஆத்திரேயன்மீது வெதுப்புடன்படவே அவனும் தன் நண்பனுடைய வருத்தத்தை உணர்ந்து அதனாலேயே தன்வலி அறவே மறந்து எ பிரேமா! அழாதேடாப்பா! நாமென்னடா பண்ணரது? "நாமள்ளாம் கொழந்தைதானே - நமக்கென்ன தெரிஞ்சூட்டுது. ஆனாலும் ஒங்கசித்தமை பொல்லாதவதாண்டாப்பா. ஒங்கம்மா இருந்தாளே நல்லவ. நான் ஒங்காத்துக்கு வந்தபோதெல்லாம் பக்ஷணம்கொடுப்ப. இவளை ஒங்கப்பா கல்யாணம்சேஞ்சுக்கிண்டதுமொதல் எனக்கு பக்ஷணம் குடுக்கரபேரே கடயாது. இவளை எப்பபாத்தாலும் வெக்கடுப்போடயே இருக்காளே ஒழிய ஒருநாளாவது ஸந்தோஷமா அப்பா வாடான்னு பேசரதே கடயாது" என்று சொன்னான்.

பிரேமநாதனுக்கு அது புண்ணில்பட்ட கோல்போலாயிற்று, ஆதலால் அவன் தன்குறைகளைப்பலவாறாக எடுத்துப்புலம்பினான். "என்னடா! இன்னத்துக்காக அடிக்கரது, இன்னபோது வையரது எங்கரவெவஸ்தையே இல்லாமல் நெனச்சபோதெல்லாம் மண்டார் மடாருன்னு வச்சுமொத்தராடா. எய் என்கன்னத்தெல்லாம் பார்ரா! எத்தனை கிள்ளுக்காயம். என் தலையை இங்கே தொட்டுப் பார்ரா! அவகிட்ட குட்டுப்பட்டுக் குட்டுப்பட்டு மொழச்சுப்போ

ச்சுடா. நான் கொழந்தைதானேடா என்னைக்கண்டு எண்டா சும்மாகாயரா? கோவம்வந்துட்டா இன்னதான் பண்ரதுன்னு கடயாது. அடிப்ப; கடிப்ப; குத்துவ; மடாருன்னுதள்ளிவிடுவ; கையிலே எது ஆப்பட்டாலும்ஸரி, முட்டையோ, ஆப்பையோ, வெறகோ, வரளியோ, விட்டெறிவ; தலேலேபடும்; வயத்துலேபடும்; காலிலேவிழும்; கொல்லேலேபோய் புளியஞ்சிமிட்டு ஒடிச்சுக்கிண்டுவந்து ஓங்கிஓங்கி அடிப்ப, எப்ப இவளைவிட்டுத் தொலவேனோ! எல்லாருக்கும் வர்ரசாவு எனக்கேன் வரமாட்டேனுங்கரது என்னுப்பிட்டு நான் நெனச்சுக்கிண்டு பொழியப்பொழிய அழுவேன். ஒங்கிட்டத்தான் இதெல்லாம் சொல்லுவானே. ஒருவேளை நீ இதையெல்லாம்சொல்லிச்சொல்லி அப்பரம்பரியாஸம்பண்ணுவே. எல்லாத்துக்கும் ஸாமி ஒத்தர் இருக்கர். இட்டமுடன் என்தலையில் எழுதிவிட்டசிவன் செத்துவிட்டானோன்னு எங்கப்பா பாடரதுண்டோன்னோ அதைத்தான் நெனச்சுக்கரோன். 'வேறே என்னகதியிருக்கு" என்று தெய்வத்தின்மீது முழு நம்பிக்கையுடன் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு, நாழியாயிற்றென்று கண்டு, விரைவில் பூவெடுத்துக்கொண்டு ஆத்திரேயனுடன் வீடுநோக்கி வந்தான்.

வரும்வழியில் ஆத்திரேயன் "பிரேமா! ஒங்கப்பா ஒனக்கு தெனம்தெனம் என்னமோ பாட்டுசொல்லிக் குடுக்கராளே அதென்ன பாட்டுடா; கொஞ்சம்சொல்லு பாப்போம்" என்று கேட்க, பிரேமநாதன் "எத்தனையோ பாட்டு" என்றான்.

ஆத்திரேயன் "ஆனால் ஒன்னுசொல்லுடா" என்றான்.

பிரேமன், "பொன்னார்மேனியனே! புலித்தோலை யரைக்கிசைத்து—மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே!—மன்னே, மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!—அன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே" என்ற ஓர் தேவாரம் பாடினான்.

"எலே! நன்னா இருக்குடா - ரொம்பஷோக்கா யிருக்குடா நம்மஊரோட பேர்கூட வந்திருக்குடா" என்றான் ஆத்திரேயன்.

"ஆமடா - நம்மூரில் மின்னே ஒரு பெரியமஹான் வந்திருந்தாராம். அவர் பாடினபாட்டாம். எங்கப்பா சொல்லிருக்கார் கேட்டிருக்கேன். அவர் ரொம்ப நல்லவராம். கையிலே சட்டுவ் மாட்டமா ஒரு பில்லுச்சதுக்கி வச்சுக்கிண்டு கோவிலுலே மொளச்சிருக்கிற பில்லையெல்லாம் சதுக்குவாராம்" என்றான் பிரேமன்.

ஆத்திரேயன், "பெரியவாளெல்லாம் அப்பிடித்தான் போலேருக்கு. நான் திருவயாத்துக்குப் போயிருந்தேன். அங்கே அப்பருக்கு மோக்ஷம்குடுத்த திருநாநடந்துது அந்த ஸ்வாமிக்குக் கூடத் தாண்டா ஒரு சட்டுவம் வச்சிருந்துது" என்றான்.

"ஆமடா - அப்பர் என்கிரவர்தான் இந்தப் பாட்டுப்பாடினராம்" என்று பிரேமன் உடனே சொன்னன்.

ஆத்திரேயன், "என்னடா, அவர் பாடினரொங்கரே. அவருக்கு மோக்ஷங்கூடக் கெடச்சிருக்கு. ஒன்பாட்டிலேயானு மழபாடியின்னு சொல்லியிருக்கு. திருமலவாடியின்னுன்னு நம்மூருக்குப்பேரு" என்றான்.

"இல்லேடாப்பா நாமள்ளாம் கொழந்தையோன்னே அதைத்தொட்டுத்தான் திருமலவாடி யெங்கரம். பெரியவாளெல்லாம் மழபாடியென்னுதான் சொல்லோணுமாம்" என்றான் பிரேமன்.

"நாம்தான் கொழந்தை அப்பா. அவாத்து திரம்பகத் தாத்தாக்கூடக் கொழந்தயோ? அவர்கூட திருமலவாடி யின்னுதானே சொன்னர் அவாவிட நம்மூருலே ஆருடாப்பா பெரியவா இருக்கா அவருக்கு தொண்ணூத்தஞ்சு பராயம் ஆச்சாமே" என்றான் ஆத்திரேயன்.

இவ்வாறே சற்றுப்பேசிவரும்போது "என்னு கூடியும் திருமலவாடி வைத்தினதன் ஆத்தோடேன்னு எல்லாரும் சொல்ராளே அதென்னடா" என்றான் ஆத்திரேயன்.

"நம்மகோவில் காவேரி ஓரத்திலே இருக்கோன்னே. அதுக்காக பரியாஸமா அப்படிச் சொல்லுவா எல்லாரும். ரொம்ப நாளா இந்தக்கோவிலிருக்காம்டா. எங்கதாத்தாவுக்குக்கூட அது தெரியுமாம். எங்கப்பா சொன்னர்டா", என்று பிரேமன் சொன்னன்.

"அதுபோகட்டும், கொன்றையணிந்தவனேன்னு சொன்னயே அதைத்தொட்டுத்தான் நம்மபடுகேலே கொன்னமரம் வச்சிருக்கோ" என்றான் ஆத்திரேயன்.

பிரேமன் "எனக்குத்தெரியாது" என்றான். ஆத்திரேயன் ஆன, நீ அதைத்தொட்டுத்தான் கொன்னேப்பூ பரச்சயோ? என்றுகேட்டான்.

பிரேமன் உடனே "எந்தப் பூவாயிருந்தாலும் பறைக்கலாம். நல்லபூவாயிருந்தாப் போருமுன்னு எங்கப்பா சொல்லியிருக்கார். பூக்கையாலட்டிப் போற்றி யென்னுத இவ்வாக்கயாற் பயனென் என்னு எங்கப்பா பாடுவர். அதைத்தொட்டு எனக்கும் அதிலே கொஞ்சம் ஆசைவந்திருக்கு" என்று மறுமொழி யுரைத்தான்.

ஆத்திரேயன் "இந்தஸ்வாமிக்கென்ன ? ஹாய்யா ஒக்காந்திருக்கு - கொன்னைப்பூ இடுத்தான்னு முள்ளுத்தக்யர சேதிதெரியும்" என்று சொல்லித் தன்விரலைப் பார்த்துக்கொண்டான்.

இப்படியே பேசிக்கொண்டு சிறுவர்களிருவரும் வீடுபோகும் வழியில் தயாநாதர் எதிரேவர இவர்கள் திடீரென்று பேச்சைநிறுத்திவிட்டார்கள். மலர்கொய்ய வந்ததுமுதல் இவர்களுடனேயே இருந்த யாரோ ஒரு பெரியவர் பிரேமநாதன் தந்தை வந்தவுடன் விரைவாய் நடந்து மறைந்துவிட்டார். தன் அருமைப்புதல்வன் தான் கற்றுக்கொடுத்ததை மறவாமலிருந்து அதன்படியே மலர் கொய்யவும் ஆசையுடன்வந்திருந்த செய்தியைத் தூரத்திலிருந்தே கேட்டு வந்த தயாநாதசர்மாவும் அன்புமிகுந்து மகனை அணைத்தெடுத்து உபசாரவார்த்தைகளால் பேசி அதுவரை எங்குசென்றிருந்தானென்று கேட்டு, பழையது உண்ணும்நேரமாயிற்றென்றும், வெயில்வரவர அதிகமாய்க்காய்கிறதென்றும் சொல்ல, பிரேமனும் தான் பல்விளக்க வந்ததாகவும் நன்ருய் மலர்ந்து நிறைந்த கொன்றைப்பூ தன் கண்ணில்பட்டதாகவும், அதைப்பறித்துக் கோயிலுக்குக் கொடுக்கலாமென்றுள்ள ஆசையால் ஆத்திரேயனுந் தானும் பறித்ததாகவும் சொன்னான். தயாநாதரும் புட்பத்தைக் கோயிலுக்குக் கொடுத்துவிட்டு வீடுசேரச்சொல்லி தமது வேலைமேற் சென்றார். சிறுவர்களும் அவ்வாறே செய்துவிட்டுப் பிரிந்துபோக பிரேமன் தன் வீட்டுக்குச்சென்ற உடன் அவன் சிற்றம்மையான கடுமுகி என்பவள் பிரேமனுடைய கன்னங்களைத் தன்கைகளால் பிடித்து இழைத்துக்கொண்டு, "எண்டா பயலே ! ஒனக்கென்ன வல்லடி ! இதுவரையில் எங்கேதொலஞ்சுபோனாய் ? போன எடத்தில் பாம்பு புடுங்கல்லியா ஒன்னை ? ஒனக்காக எத்தன்னாழி குளிக்கக்கூடப்போகாமல் ஒத்தி ஒக்காந்திருப்ப ? நீ வச்ச ஆளா ? வெளீலே போனபுருஷன் ஆவட்டை சோவட்டை யிட்டுக்கிண்டு வராலாச்சு. சமச்சுக்கொட்ட வாண்டாமா ? வேளாவேளேலே வந்து தின்னூட்டுத் தொலயலாமோன்னோ" என்று கடுமையாய்ச் சொல்லிய மொழி செவிபுக்கு பிரேமநாதனுடைய உள்ளத் தாமரையைத் தீய்த்ததெனினும் அத்தருவாயில் பதில்சொல்லுவது தனக்கே துன்பந்தருமென்றெண்ணி மௌனமாயிருந்துவிட்டான்.

அதிகாரம்—உ.

உடையவன் கண்ணோடாப் பயிரழியாதா என்னும் பழமொழியை யெண்ணிக்கொண்டு தானேயிருந்து வேளாண்டொழிலை நடத்திவரும் தயாநாதசர்மா, மறுநாட்காலையில் கோழிகூவ எழுந்து பல்தேய்த்து, காலைக்கடன் முடித்துக்கொண்டு தன் வயலைச் சுற்றிப்பார்க்கவென்று வெளிப்புறப்படும்வேளையில் அவர் மகன் எதிரேவர அவனை அன்புடன் வாரி அணைத்து, "பிரேமா! என்னோடு வருகிறாயா? நம்முடைய வயல்களைப்போய்ப் பார்த்துவிட்டு வரலாம்" என்று சொல்ல, சிறுவனும் "வயலுக்கு வந்தா என்னவரும்" என்று மறுமொழிகூறினன்.

அதற்கு "நீ வந்தால் உனக்கு நம்முடைய வயலையெல்லாம் காட்டுவேன். இப்போதுமுதல் உனக்கெல்லாந் தெரியவேண்டியது அவசியமல்லவா. நீ பெரியவனானல் என்னைப்போலவேதான் உழைக்கும்படி நேரிடும். நம்ம ஆள்களையெல்லாம் நீ பார்க்கவேண்டாமா? எப்படி உழுகிறது, எப்படி பரம்படிக்கிறது, எப்படி வேலைவாங்குகிறது, களம் எங்கே இருக்கிறது, நமக்கு உபயோகமான மதகு எங்கே இருக்கிறது, பள்ளுப்பறைகளுடன் எப்படிமாரடிக்கவேண்டியிருக்கிறது என்கிற எல்லாம் உனக்கு இப்போதுமுதல் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்தால்தான் நாளைக்கு எல்லாம் சுளுவாக இருக்கும். பணம் சேருவது கொஞ்சத்திலாகுமா? பணமில்லாத பேர்கள் எத்துடன் சேர்ந்தவர்கள்" என்று தந்தைசொல்லக்கேட்ட பிரேமநாதனும் "அப்பா இப்பவந்தா எனக்கென்னதெரிஞ்சுடப்போரது, நான் என்னத்தை கண்டேன் எனக்கென்ன கணக்குவழக்குத் தெரியும். அவாத்து அம்பிக்கு எத்தனையோ தெரியாது, அவாப்பாகூட தெனம் சொல்லிக்குடுக்கரா. வெடியாத்துக்கு மின்னலே எந்திருந்து தெனம் தெனம் என்னென்னமோ சொல்லிக்கரான். எனக்கு அப்படி சொல்லிக்குடுத்தான்னா நான் கடைக்குக்கண்ணிக்கு வயலுக்கு வாக்காலுக்கு வரலாம்," என்று பதில் சொன்னான்.

உடனே தயாநாதரும் "நீ சொல்லுவது ஸரித்தான் உன்னை பள்ளிக்கூடத்தில் தான் போடவேண்டும். உனக்கு வயது ஒன்பதாகிறது. இதுவரையில் வீட்டிலேயே வீணாய்த்திரிந்து போதுபோக்குகிறாய். உன்னோடொத்த பயல்களெல்லாம், இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, குழிமாற்று, மூஷிகவாஹநம், நீதிஸாரம்

எல்லாம் படிக்கிறார்கள். உனக்குத்தான் பிரபவாச் சுவடிகூடத் தெரியாது பள்ளிக்கூடமாவது கிட்டத்திலிருக்கிறதா அதுவுமில்லே ஒருநாழிவழி போகவேண்டியிருக்கிறது. நம்மவீட்டுக்குப் பக்கத்தில் ஒருபள்ளிக்கூடம் இருக்கிறபக்ஷத்தில் நீயும் இதுவரையில் எவ்வளவோ படித்திருப்பாய். வெயிலில் போகவேண்டுமே. புழுப்போல் துடிப்பாயே என்னசெய்யலாம் என்று விசாரமாகவே இருக்கிறது. எப்படி வேண்டுமானாலும் ஆகட்டும் இப்போது எனக்கொன்று தோன்றுகிறது. அப்படிச்செய்வது உனக்கு இஷ்டமுண்டா? அடுத்த கிராமத்தில் பள்ளிக்கூடமிருக்கிறது. அங்கே ஒருவீடு வாங்கி உன்னையும் படிக்கவைத்தால் நீ தைரியமாயிருந்து வாசித்து வருவாயா? உன் சிற்றம்மையையும் கலந்து கொண்டு ஓர் தீர்மானம் செய்வோம் வா" என்று சொல்லிக்கொண்டே பிரேமனுடன் உள்ளே நுழைந்தார். படிப்பதைச் சாக்கிட்டாவது தன் சிற்றம்மையின் அடிக்கும் திட்டுக்கும் உதைக்கும் தப்பி உயிர்வாழலாமென்று எண்ணி பிரேமநாதன் தாதையைப் பார்த்து "அப்பா என்னை வாத்தியாராத்துக்கே அனுப்பிச்சுடுங்கோ" நான் ஒங்களுக்கு ஸந்தோஷம் வரும்படி நன்னா படிக்கரேன்" என்று சொல்லிக்கொண்டே கூடப்போனான். உள்ளே சென்றதும் கடுமுகியம்மாள் எதிரே வர அவளைப்பார்த்து தயாநாதர் "அடியே! நமது குழந்தையை பள்ளிக்கூடத்தில் வைக்கவேண்டாமா? வரவர வயஸாகிறதே, உனக்கென்ன தோன்றுகிறது உன் ஸம்மதம் என்ன" என்றார்.

கடுமுகியோ அந்தப்பிள்ளை படியாமல் மூடனாக வேண்டுமென்று தீர்மானம் செய்துள்ளவளாதலால் தன் கொழுநனுக்கு மறுமொழியாய் "ஏது நீங்கள்! இவ்வளவயசாயும் தெரியாதவாளாட்டமா பேசரேளே கொழந்தை உசிரோடிருக்கரத்தில் ஒங்களுக்கு ஆசையில்லையா? வெய்யல்லே தெனம் தெனம் செண்டுதரம் போனா ஒடம்பு என்னத்துக்கு ஆகும்? ஒங்களைப்போலயே இப்பவே பிடிச்சு ராக்கடந்த எடத்தில் பகல்கடவாதே கொழந்தயும் திண்டாடவேணுமோ? ஊரிலே யிருக்கரவாளெல்லாம் வைவாளென்னுகூட ஒங்களுக்கேது தெரியவில்லை. ஏதுடீ அவாளுக்கிருக்கா ஆஸ்தியென்ன பாஸ்தியென்ன கொழந்தையை வெய்யல்லே தெனம் தெனம் அனுப்பிக்காளே. அவா புள்ளை படிச்சு இப்ப என்ன உத்தியோகம் வாரிக்கட்டவேண்டியிருக்கு? இல்லாக்குடியா? என்பாளே எனக்குன்னா வெக்கமாயிருக்கும் ஏதுங்காணம் ஒமக்கேன் கொஞ்சங்கூடத் தெரியல்லே. எளயாசொல்லைக் கே

ட்டுக்கிண்டு கொழந்தையை எத்தனும்பாடு படுத்தராண்டீ இன்னு ப்பிட்டு ஒங்களைத்தானே பத்துப்பேர் பத்துசொல்லுவா” என்று மாய்மாலம்பேசி பிரேமநாதனைக் கிட்ட அழைத்து “இங்கே வாடா எங் கண்மணியே நன்னாச்சொன்னாள். தேமேன்னு மல்லிகைப்பூவாட்டமா இருக்கிற ஒடம்பு புளியம்பூவாட்டமா வாடிப் போகோணுமா? ஐயையா வாடிப்போகோணுமா? நான் ஒரு பொம் மண்டாட்டி இருந்தும் அப்படி நடக்குமா இந்தாத்தில்” என்று மிகுந்த அன்புள்ளவள்போல் கட்டிக்கொண்டாள்.

தயாநாதரோ தன் மனைவியின் சொல்லுக்கிசைந்து ஒருபக்கமும், பையன் வயதில் வளர்ந்து படிப்பில்லாமல்போகிற துன்பம் ஒருபக்கமுமாக இன்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்க, வெளுத்ததெல்லாம் பாலென்றெண்ணும் பிரேமநாதன் தன் சிற்றம்மை அன்பாய் அணைத்துக்கொண்டதை நினைத்து உவகை மிகுந்து, “அணைக்கிறதொருகை அடிக்கிறதொருகை” யென்று உலகத்தில் சொல்லிக்கொள்ளுகிறார்களே அது உண்மைதானாகும். நம்மை இதுவரையில் துன்பப்படுத்திவந்த நமது சிற்றம்மை இப்போது அன்பாயிருக்கின்றாளாதலால் இவளைப் பொல்லாதவளென்றே நாமெண்ணியது பிசகு இனி சிலகாலம் நம்மை அதிக அன்பாய் நடத்துவாள். ‘காய்கிறது ஒருகாலம் பேய்கிறது ஒருகாலம்’ என்றும் நாம் கேட்டிருக்கிறோமே. ஆதலால் உலகத்தில் கஷ்டம் ஒருகாலம் சுகம் ஒருகாலம் என்பது உண்மைதான். அதன்படியே நமக்கும் இனி நல்லவேளை வந்துவிட்டதாக்கும், என்று தனக்குள்ளேயே எண்ணி எண்ணி ஆநந்தித்தான்.

இதனிடையில் தயாநாதருக்கு தன் மகன் படிப்பதைவிட வேறு எதுவும் பெரிதாய்ப்படாமல் மறுபடியும் தன் பெண்சாதியைப்பார்த்து, “அடியே! நம்மபயல் படிக்கிறது எவ்வளவுக்கோ நல்லதாக எனக்குப்படுகிறது. எப்படியும் படித்தவன் வீண்போகமாட்டான். படித்துக்கெட்டவன் விசேஷமாய்க் கிடையாது. படியாமல் கெட்டபேருக்குக் கணக்கில்லை. சற்று நினைத்துப் பார் உனக்கே தெரியவரும். வெயிலில் நடந்துவிட்டுவந்தால் இறந்துவிடுவானென்று நினைக்காதே. நாங்களெல்லாம் அலையவில்லையா? இந்த வயதில் அலைந்து ஒடி ஆடித்திரிந்தால்தானே உடம்பில் பலமிருக்கும். கஷ்டப்படாமல் காசுகிடைப்பதுண்டா? நம்முடைய வீட்டுக்கும் அதிக தூரத்திலிருந்து எவ்வளவோ குழந்தைகள்போய் வாசித்துவிட்டுவர இல்லையா? அந்தக் குழந்தைக

ளெல்லாம் செத்தாபோய்விட்டார்கள். கல்லுக்குண்டுபோ லிருக்க வில்லையா? வெயிலென்றும் நிழலென்றும் பார்க்காமல் கஷ்டபட்டுச் சேர்த்த ஆஸ்திதானே நம்முடைய ஆஸ்தி. அலையாமல் திரியாமல் இருந்தால் காரியம் ஆகிறவழியென்ன? பணம் ஸம்பாதிக்கிறதும் நிலத்தை செய்நேர்த்தி செய்கிறதும் என்ன வாழைப்பழம் தின்கிறதுபோலவா? தான் கஷ்டப்பட்டாலல்லவா பிறன் கஷ்டமறிய முடியும்?" என்று பலவாறு கூறினன்.

கடுமுகியோ உடனே சினங்கொண்டு "ஆஹ ஒங்க ஈஷ்டம்! நான் சொல்ரது ஒங்கிளுக்கு இப்பத் தெரியாது. நாளக்கி நம்ம கொழந்தை திண்டாட்ரபோது எல்லாம் நன்ஹத்தெரியும். அழ அழச் சொல்லுவாதமர். சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவா பொறர் என்னுப்பிட்டு நான் சொல்ரதைச் சொன்னேன். கேட்டா கேளுங்கோ-இல்லாபோனு எக்கேடுகெட்டு போகட்டுமே எனக்கென்ன? அந்தப்புளக்கி ஒரு அம்மாயிருந்தா நீங்கதான் இப்படிச் சொல்லுவேளா; அவதான் எடங்கொடுப்பாளா? தாயாரில்லாதவாசியின்ஹ ஒங்களுக்கு என்னென்னமோ தோண்றது. நாளக்கி எனக்கொரு கொழந்தை பொரந்தா அதுங்கதியும் இப்படிதானேயாகும். அம்மாடியோ! ஒங்களோடே காலக்ஷியம்பண்ரது மஹாகஷ்டம்" என்ருள்.

தயாநாதரோ தன் பெண்சாதியின் மன உண்மையை அறியுந்திறமை இல்லாதவராய், அவள் தந்திர மொழியென்னும் மயக்கமேறி, அவளிடத்திலிருந்த அன்பாகிய வலையிற்பட்டு யாதொரு போக்குந்தெரியாமல் விழித்து, சற்றே பெருமூச்செறிந்து பின்பு, "நீ சொல்லுவதும் ஒருவிதத்தில் ஸரியாய்த்தானிருக்கிறது. ஆனல் படிப்பில்லாமல் நம்ம குழந்தை கெட்டுப்போகக்கூடாது. எனக்கிப்போது ஒன்று தோன்றுகிறது. ஒரு நாழிகை வழிக்கப்புறம் இருக்கிற பள்ளிக்கூடத்தை நமது வீட்டின் பக்கத்தில் வரவழைத்துவிடுவோம். நமக்கு இது ஒரு பிரமாதமில்லே. ஸ்வாமி தயவில் வேண்டிய சொத்திருக்கிறது பார்த்துக்கொள்வோம்" என்ருர்.

கடுமுகியும் மிகுந்த சினத்துடன் "புருஷாளெல்லாம் தாங்களே மஹாசமத்துக்களுன்னும் பொண்டுகளுக்கு ஒன்னுந் தெரியாதுன்னும் நெனச்சு ரொம்ப ரொம்பத் தெரிஞ்சாப்போலே பேசரது வாடிக்கைதான். ஒங்கபேருலே என்னபெசகு. ஒங்கிளுக்கெல்லாம் உள்ள வழக்கந்தான் ஒங்கிளுக்கும் இருக்கு. எதுடா சொல்

ராளென்னு கொஞ்சமாவது லெக்ஷியமாத் தோணிணு இப்படித் தாணு மொசலுக்கு மூனுகால் எங்கரூப்போலே சொல்லுவேள். கொழந்தைகளைப் பள்ளிக்கோடத்துக்கு அனுப்பிணு ரொம்ப நல்லதுன்னு அசடுகளுன்னு சொல்லும். எங்கண்ணு இருந்தானே குப்பன் அவனைப் பள்ளிக்கோடத்துலே போட்ருந்தபோது ஒரு நாளக்கி நானும் அவன் பின்னோடே பள்ளிக்கோடத்துக்குப் போயிருந்தேன். அங்கே நடந்த அந்நியாயத்தை நெனச்சா சீ! பள்ளிக்கோடத்துக்கும் கொழந்தைகளை அனுப்புவாளோன்னு எனக்கு இன்னிக்கும் தோணாது. வாத்தியார் பண்ர அழும்பு கணக்குவழக்கில்லே. பசங்களும் ஒத்தனோடே ஒத்தன் சேர்ந்துக்கிண்டு பண்ர போக்கிரித்தனம் எண்ணித் தொலையாது. கொஞ்சம் சொல்ரேன் கேளுங்கோ, ஒரு பெரிய தின்னேலே பயங்கள்ளாம் வரிசியா ஒக்கார்ந்துண்டிருப்பா. அதிலே செலபேர் செவிடியைக் கீழே தனக்கெதிரக்க வச்சுக்கிண்டு, செவிடிக்கும் தனக்கும் நடுவுலே இருக்கர மணலே த்லாவிக்கிண்டு வாயிட்டு முணுமுணுன்னு என்னமோ சொல்லிக்கிண்டு ஆள்காட்டி வெரல்நாலேயாவது பாம்பு வெரலிட்டாவது இழுதுவா. அதுலே செலவேர் தங்க வெரல் தேயுமுன்னுப்புட்டு கழக்கோடிக் காயை ஒடச்சு அந்த கூட்டை இடுத்து வெரல் நுணீலே மாட்டிக்கிண்ட்ருப்பா, செல புள்ளையள் கையிலே செவுடியை வச்சுக்கிண்டு படிப்பா. செலவேர் மத்தப் புள்ளையளை பாடங் கேப்பா. வாத்யார் பாட்டிலே ஒரு தின்னேலே மேல் வேஷ்டியை விருச்சுப் படுத்துக்கிண்டு கொறட்டுவிட்டுக்கிண்டு தூங்குவர். ஐயா தூங்ரார்டோ என்னு சொல்லிக்கிண்டு செல புள்ளயள் வெளியிலேபோய் மாந்தோப்பு புளியந்தோப்பு கொய்யா மரம் தென்னமரம் எல்லாத்துலேயும் காய் பரக்யரதும், திங்கரதும் ஒத்தனோடே ஒத்தன் குடுமியைப் புடிச்சிக்கிண்டு சண்டைப்படரதுமாய் காடு மேய்வா. சில புள்ளைய ஒத்தரோடொத்தர் பள்ளிக்கோடத்துலேயே சண்டைபட்டுக்குவா. சில புள்ளயள் ஒக்காந்துண்டே தூங்குவா. செலபேர் பாதி தூங்கி வழிஞ்சிக்கிண்டு கண்ணுலே ஒருபக்கம் கிடாமாட்டாட்ட மாபூளை அப்பிவச்சிருக்கும், அந்த கண்ணைச்சுத்தீ கொசுகா மொய்க்கும் அவாபாட்டுக்கு ஆனையாடிக்கிண்ட்ருப்பா அதுலே ஒத்தன் தன் ரெண்டுகையாலயும் கொசுவை அடிச்சுக்கிண்டே கண்ணை பொச்சுப் பொச்சின்னு கொட்டிக்கிண்டிருப்பன். இன்னொத்தன் தன் கண்ணில் ஒக்காரர ஒரு ஈயை சொட்டேரென்னு அடிப்பன், அடிச்சு தன் கன்னத்தின் வழியாலே கையாலே கீழே இழுத்து மோவாக்கட்டையின்கிட்ட வந்ததும்

அந்த ஈயை கையிலே எடுத்துக்கிண்டு கண்ணைக் கொட்டிக்கொட்டிப்பாத்து வலதுகை ரெண்டு வெரலாலே நசுக்கிப்பாத்து விட்டெறிவன். ஒத்தன் தனக்கு பின்னாலே இருக்கர மண்ணெல்லாம் சேத்து முட்டுக்குமிப்பன் அந்த முட்டுலே தன் எழுத்தாணியை ஊணுவன். அதுந் தலையிலே எதாவது எட்டைவச்சு வித்தைசெய்வன். செக்ராட்ரது பார் என்பன். கிட்டக்க இருக்கரவனுக்குங் காட்டுவன். ஒத்தன் ஒருவா ரேட்டை இடுத்து சின்னதாய் நறிக்கி முறுக்கி இப்படி வச்சு மாப்பளை மாப்பளையின்னு போடுவன். அது தத்துக்கிளியாட்டமா எம்பிக்குதிக்கும். ஒத்தன் ஒரு ஓலையீருக்கை கிழிச்சுக்கிண்டு அதைக் கூச்சா சீவிக்கிண்டு தனக்கப்பரம் இருக்கரவனை விட்டேட்டு அதுக்கும் அப்பரம் இருக்கரவன் பின்னாலேபோய் சுருக்கின்னு குத்துவன். ஒத்தன் அங்கைப்பாத்தான் இங்கைப் பாத்தானுன்னு வெளயாடுவன். இன்னொத்தன் யாரையாவது குடிமியைப் புடிச்சு இழுத்துப்பிட்டு நானிழுக்கல்லை இவனுக்குமென்பன். இப்படி யெத்தனயோ அதிசியமெல்லாம் நடக்கும். வாத்யார் திடீருன்னு முழிச்சுக்கிண்டு யாரையாவது ஒரு எழைப் புள்ளையைக் கூப்புட்டு ஆட்டை மாட்டை அடிக்கராப்போலே எரக்கமில்லாதே அடிப்பர். இல்லாபோனா ஒரு புள்ளையைக் கிட்ட வரச்சொல்லி அவன் தொடையிலே கொழுந்து மணலாய்த் தெள்ளிப்போட்டுக்கிண்டு நிமிண்டுவர். 'இல்லேய்யா - இல்லேய்யா இன்னமேலே இல்லேய்யா' ன்னு ஒத்தைக் காலைத் தூக்கிக்கிண்டு பெலக்க அந்தப் புள்ளை கத்துவன். மணல் போராபோனால் பெரிய மணலைக்கூட வச்சுக்கிண்டு நிமிண்டுவர். ரெத்தம் வந்தாலும் கோகோன்னு கத்தினாலும் கதறினாலும் கேள்வைமொறை கெடயாது. ஒத்தன் தப்பினானுன்னாக்கே ஒருதரம் ரெண்டுதரம் சொல்லிக்குடுத்து அப்பரமும் தெரியாபோனா அடிக்கரது எங்கரதே கடயாது இடுத்த ஒடனே அடிதான். அப்பரந்தான் பாடங்கூட. பணக்காரனுத்துப் புள்ளையானுக்கே அடியேவிழாது. படிப்புங்கடயாது. அதிகச் செல்லங்குடுத்து குட்டிச்செவராக்கிவிடுவர். வாத்தியாரை யெதுத்துக் கேக்ரவங்களுன்னா சட்டாம்புள்ளை வேலைதான் கெடைக்கும். சட்டாம்புள்ளையளை வாத்தியார் அடிக்கவேமாட்டான். அவாளுக்கு மத்த புள்ளையளை அடிக்கக்கூட அதிகாரம் உண்டு. சட்டாம்புள்ளை அடிக்காதிருக்கோணுமேன்னு அவன் கக்ஷியில் சேர்ந்து பொய்சொல்ர புள்ளையள் ரொம்பப்பேர். வாத்யார் ஒருதடவை எந்திருந்து பெரம்பை எடுத்துக்கிண்டு படிச்சவன் படிக்காதவன், ஸாது துஷ்டன் என்கர வித்தியாஸம் பாக்காமல் எல்லாரையும் கிடுகிடுன்னு வரிசையா அடிப்பன்.

பசங்கள்ளாம் அப்போ வீடு இடிஞ்சுபோராப்போலே கூச்சல்போட்டுக்கிண்டு படிப்பா. பாடந்தெரியாதவன்களுக்கு தண்டனையென்னு கோதண்டம்போடுவா. தூணுலே கட்டிவச்சு அடிப்பா. வெரும் தோப்பிக்கரணம் முட்டிக்கால் தோப்பிக்கரணம் எல்லாம் போடச்சொல்லுவா. சொவத்தில் ஒக்காரவைப்பா - வெய்யல்லே நிறுத்துவா. கன்னத்தைப் புடிச்சு எழைப்பா - இடுப்புத் துணியை தலைலேசுத்தி நடுவீதியிலே நின்னுக்கிண்டு படிக்கச்சொல்லுவா. குண்டிழுத்தாணியினாலே மணிக்கட்டிலயே அடிப்பா. குடுமியைப்புடிச்சு மாவலைக்கொத்து ஆட்டுவா - மூக்குலே கொரட்டாம்பழம் கொடுப்பா - நெத்தியிலேருந்து உச்சந்தலைவரைக்கும் நெரிச்சாம்பழம் குடுப்பா இன்னம் கணக்குவழக்கில்லாத எத்தனையோ. வாத்யார்தான் இப்படியாச்சே, புள்ளையள் சேதியின்னாலோ சொல்லவேண்டாம். வாத்யாரோட பெரம்பை இடுத்து ஒளிச்சுவைப்பா. அதுலே மூக்குச்சாளியைத் தடவி வெய்யல்லே காயவைப்பா. ஏன்னா அப்படிவச்சா பெரம்பு ஒடிஞ்சுபோமாம். வாத்யார் ஒக்கார்ர எடத்துலே நெறிஞ்சிமுள்ளு, கொகுகளை முள்ளு இதுகளைப் போட்டுவைப்பா. அவர் ஒக்கார்ர மணையுங்கீழே சரிஞ்சுவிழும்படியா எதையாவது போடுவா. இவ்வளவுதானா, நான் போயிருந்தன்னிக்கி வாத்யார் செத்தே வெளீலேபோனார். அப்போ அப்பு எங்கர ஒரு புள்ளை அன்னிக்குப் புதுசாய் பள்ளிக்கோடத்துக்கு வந்திருந்த மணவாளன் எங்கரவனோட மடக்கிழுத்தாணியைக் கையிலேவாங்கிப்பாத்து அது நன்னாயிருக்குன்னு தெரிஞ்சுக்கிண்டு தன்னோட ஒடிஞ்சவாரிழுத்தாணியைக் கொடுத்துட்டு அந்த மடக்கிழுத்தாணியை எப்படியாவது புடுங்கிக்கோணுமின்னு ஆசைப்பட்டுக்கிண்டு ஏ மணவாளா ஒன்னிழுத்தாணி இலும்பு என்னுது உருக்கு - நீ வேணுமுன்னா ஒன்னிழுத்தாணிமேலே ஹா இன்னு ஊதிப்பார் தெரியுமுன்னான். மணவாளனுக்குத் தன்னிழுத்தாணியைக் குடுக்க மனஸில்லை. அப்பு அந்த மடக்கிழுத்தாணியை எட்டிலே இழுதிப்பாத்தான். ஹே கொதர்ரதுன்னு பரிஹாஸம்பண்ணினான். அந்த இழுத்தாணியோட கூர் மழுங்கிப்போம்படி அதை மண்ணில்குத்தினான். இதைக்கண்ட மணவாளனுக்கு அழுகை ஒருபக்கம்வந்துது. ஒருபக்கத்துலே ‘நாம்ளோ புதுசு. நாமவந்தபோதே புடிச்சு அப்பு ஒத்தன் தான் நம்மோடே பேசிக்கிண்ட்ருக்கான். அவன்கிட்ட எப்பிடி கண்டிப்பா இருக்கரது’ ன்னு தோணித்து. அப்புவும், ஏ மணவாளா என்வாரிழுத்தாணியைப் பாத்தியா. அது ரொம்பவெலயாக்கும். எங்கப்பா திருவாலூர் தேருக்குப் போனபோது அதை வாங்கிண்டு வந்தார்டாப்பா அத்த

னும் ஒசத்தி. இந்த பார்டான்னு தன் வாரிழுத்தாணியை அவன் கையிலேகுடுத்தான். மணவாளனுக்கு தன் னிழுத்தாணியைக் குடுக்க மனவில்லை. அதைத்தொட்டு ‘என் னிழுத்தாணியைக் குடுக்கரயா இல்லாபோனா ஐயா வந்தவுடனே சொல்லட்டுமோடா’ என்னான். அந்தக்கட்டேலே போவான் அப்பு இதுக்கெல்லாம் பயப்படரவனில்லை. ஈசனாட்டுக்கொறப்பய. திடீருன்னு ஒரு யுக்தி பண்ணினான். அன்னிக்காலம்பரத்தான் ஒரு பித்தளைமோதரம் ரெண்டு காசுகுடுத்து வாங்கி அதை நன்னா புளியைப்போட்டுத் தேச்சுப் பளபளென்னு தேச்சு தன் வெரல்லே மாட்டிக்கிண்டிருந்தான். அந்த ஞாபகம் இப்பவந்துட்டுது அவனுக்கு. அதைமொள்ள, செத்தே காட்டரதும் செத்தே மறைக்கரதுமாத்தானே காட்டி ஏ மணவாளா இதைப்பாத்தயாடாலேன்னான். ‘எலே முழுக்கக்காட்ரா - என்னடா அதுக்குள்ளே மறச்சூட்டை’ என்னு மணவாளன்கேட்டான். ‘ஆராவது பாத்துடப்போரடா - என்னடாலே ஒனக்கு சமத்துத்தெரியல்லை’ யென்னு சொல்லி செத்தே காட்ராப்போலே காட்டி ஒடனே மறுவடியும் மறச்சுக்கிண்டோட்டான் அப்பு. மணவாளன் அதைப்பாத்து மயங்கி தனக்கும் ஒருமோதரம்வேணுமுன்னு ரொம்ப ஆசைப்பட்டு ‘இது எங்கடாவாங்கினே’ இன்னான். ஒடனே அப்பூக்கு கோவம்வந்துட்டுது. ‘வாங்கவாவதுடாலே - எங்கப்பா பத்துரூபாகொடுத்து போனவருஷம் பண்ணினா - என்ன!’ இன்னான். ‘அனா அது தங்கமாடா’ இன்னுப்பிட்டு மணவாளன் கேட்டான். ‘பின்னேயென்ன? பழுப்புத்தங்கம்டா’ இன்னு சொல்லிக்கிண்டே அப்பு மொள்ள தன் வெரல்லேருந்து கழட்டி மணவாளன் வெரல்லே மாட்டி ஒடனே, ‘அடேலே! என்னடா! ஒன் வெரலுக்கு அளவுடுத்துச் சேஞ்சாப்போலே ஸரியாயிருக்கே. எம் வெரல்லே இருந்தபோதுகூட நழுவிக்கிண்டேயிருந்துதுடா - ஒனக்குத்தான் இது தக்கினமோதிரமாக்கும்-இம்! என்ன சேயரது’ இன்னு பெருமூச்சுவிட்டான். மணவாளன் தனக்குக் கெடச்சூடுமின்னு அசட்டு முழிமுழிச்சான். அதைப்பாத்து அப்பு ‘எலே! ரெண்டாம்பேரோடே சொல்லாதே எங்கப்பாவுக்குத் தெரிஞ்சா கொன்னூடுவர் என்னை. ஒனக்கிதைக் குடுத்துட்ரேன்; ஒன் ஸ்நேகம் பெரிசா மோதரம் பெரிசாடா நேக்கு’ இன்னு சொல்லிக்கிண்டே அங்கயும் இங்கயும் பாத்துக்கிண்டு நின்னான். மணவாளன் ஒரு அசட்டுக் கம்மண்டாட்டிபுள்ளை, அதுக்கு துளிகூட சமத்துத்தெரியாது. ஒடனே தன் மடக்கிழுத்தாணியெக் குடுத்துட்டு ஒவயோகமில்லாத ஒடிஞ்ச வாரிழுத்தாணியேயும் பித்தளை மோதரத்தையும் வாங்கிக்கிண்டேட்டுது. செ

த்தம்போதைக்கெல்லாம் சட்டாம்புள்ளே, 'எல்லாரும் சட்டம் இழுதுங்கோடா - இல்லாபோனா ஐயாவந்தோணயும் சொல்லி மணிக்கட்டே முறிச்சுப்பிடுவேன்' இன்னான். மோதரம் வாங்கிண்ட பெருமையைக் காட்ரத்துக்காக மணவாளன் தன் கையைநீட்டி மோதரத்தையும் முணுக்குமுணுக்கின்னு காட்டி இந்த வெரல்லேயா ஒலயெ வச்சுக்கரதுன்னான். ஒடனே சட்டாம்புள்ளே அந்த மோதரத்தைப் பாக்கோணுமுன்னு கழட்டிக் குடுக்கச்சொன்னான். மணவாளன் 'நான்மாட்டேன் அது பத்து ரூவாய்' இன்னான். ஒடனே சட்டாம்புள்ளேக்கிக் கோவம்வந்து மோதரத்தை வெடுக்குன்னு புடிங்கிக்கிண்டு பயங்களேயெல்லாம் தின்னயெவிட்டு எரங்கச்சொல்லி தாம்மட்டும் தின்னேலேதானே ஏறிக்கிண்டு, எலே பசங்களா! இந்தா ஏலம்போடப்போரேன், கேளுங்கோடோ! தஞ்சாவூர் சரபோஜி மஹாராஜாவுக்குன்னு கல்யாணத்தும்போது பண்ணின மோதிரம் நம்மணவாளமாமுனிக்கு எனுமாக்கெடச்சுது. குதிரைப் பவுன்டா கேளுங்கடா! யார் ஒசந்த வெலேக்கிக் கேட்டாலும் ஏலத்துலே விட்டேப்போரேன் இன்னான். அதுக்குள்ளே ஒத்தன் நாலாயிரத்தி நானூத்தி, நாப்பது ரூவாய்! நானூத்தி நாப்பது ரூவாய்! நாப்பது ரூவாய்! நாலு ரூவாய்! நாலுகாசு! ஒருகாசு! இன்னு கத்தினான். அப்போ அஞ்சாருபேர் நேக்கு நேக்குன்னு கத்தினா. சட்டாம்புள்ளக்கிக் கோவம்வந்தூட்டுது. ஒங்கப்பன் நாளேலே மோதரம் வாங்கீருக்கேளோடா? ஒரு காசாவதுடா? பத்தரைமாத்துத் தங்கத்தாலே பண்ணின அருமயான மோதரத்துக்குக்கூட ஒரு காசுதானோ இன்னான். இதுக்குள்ளே ஒருமூலேலே ஒக்காந்திண்டு விசிச்சு விசிச்சு அழுதுக்கிண்டிருந்த மணவாளனேப் பார்த்து எரக்கம்வந்து அப்பு இங்கரவன், 'ஏசட்டாம்புள்ளே! கடக்கரதுடா! குடுத்தூட்ரா! பொம்மண்டாட்டியாட்டமா மூலேலே ஒக்காந்திண்டு அழுரான் அந்தப்பய' இன்னான். இதைக்கேட்டோண்ணயும் சட்டாம்புள்ளேக்கி இன்னங்கொஞ்சம் ஜாஸ்தியாச்சு வெளயாட்டு. என்ன! ஒருகாசுக்குமேலே கேக்கரபேர் கடயாதா? ஒருதரேம்! ரெண்டுதரேம்! மூனுதரேம் இன்னான். ஒடனே எல்லாப்புள்ளயளும் நேக்கு நோக்குன்னு அடிச்சுக்கிண்டுது. பின்னாலே ஆருகேக்கராளோ அவாளுக்குத்தான் குடுப்பேனுன்னு சட்டாம்புள்ளே கத்தினான். நேக்குநேக்குன்னு எல்லாரும் கத்தினா. ஆனா சூரையோ சூரையின்னு சொல்லி பயங்களுக்கு நடுவுலே விட்டெறிஞ்சான் சட்டாம்புள்ளே. ஒடனே பயங்கள்ளாம் ஒத்தம்மேலே ஒத்தன் விழுந்தவனும் ஒத்தனே ஒத்தன் தள்ளிவிட்டவனுமாய்கிள்ளிக்கிண்டும், குத்திக்கிண்

டும், ஒதச்சுக்கிண்டும், கடிச்சுக்கிண்டும், ப்ராண்டிக்கிண்டும், குடுமி யப்புடிச் சுலாத்திக்கிண்டும், ஒத்தனேடொத்தன் கட்டிக்கிண்டு கடகடென்னு பொரண்டுக்கிண்டும், ஒத்தனை ஒத்தன் கீழேதள்ளி காயம்வரும்படி ச்ராய்ச்சுக்கிண்டும், எரச்சலும், கொழப்பமும், அம ளியும் உண்டாக்கிப்பிட்டா. இதுக்குள்ளே வாத்யார் தெருவுழு லேலே வந்தார். மோதாத்தேப் போட்டெடத்துலேயே போட் டேட்டு எல்லர்ப்பயங்களும் எடத்துலேபே ஒக்காந்துக்கிண்டு காச்சு மூச்சுன்னு கூச்சப்போட்டுப்படிச்சா. வாத்யார்வந்தோண்ணயும் அவர்கண்ணுலே மோதாம் பட்டுது. மணவாளனும் அழுதுக்கு ண்டே தன் மூக்குச்சளியைப் பொறங்கய்யிலே ஈஷிக்கிண்டு அதை நீளமாமுறிக்கி இழுத்து, கையெல்லாம் மூக்குச்சளியாத்தானே ஆக்கிக்கிண்டான். பசங்கள்ளாம் அதைப்பாத்து கொல்லுன்னு சிறிச்சா. வாத்யார் என்னஸங்கதியின்னுகேட்டார். பயங்கள் ளாம் சட்டாம்புள்ளேக்கி பயந்துண்டு ஒன்னுஞ்சொல்லாதபடிக்கு இருந்தா. அப்பாம் மொள்ள எல்லாச்சேதியும் தெரிஞ்சுது. ஒட னே சட்டாம்புள்ளேயைக் குடுமியை இழுத்துப்போட்டு முதுவுலே அடி அடியின்னு அடிச்சு வெளுத்துப்பிட்டார். சட்டாம்புள்ளே எந்திருந்து எலே ஐயா இருடாலே ஒன்னே ஒருநா இல்லாபோனு ஒருநா ஒதக்கரேன். எல்லாரையும் அடிக்கச்சொல்லி ஒனக்குத்தான் நாட்டாமை குடுத்திருக்கோ இன்னு சொல்லிக்கிண்டே ஓடினுன். ஒடனே பசங்களேவிட்டு சட்டாம்புள்ளயைகூட்டிக்கிண்டு வாச் சொல்லி அவனேடே ஸமாதானம் பண்ணிக்கிண்டார் வாத்யார். அப்பாம் ஒன்னுலேதானே இத்தனே எழவுன்னுசொல்லி மணவாள னேப் புடிச்சு அடி அடீன்னு அடிச்சார். பள்ளிக்கோடங்களோட யோக்யதை இந்தப்படியிருந்தா நம்ம கொழந்தயை என்னமா அனுப்பரது என்று கடுமுகியம்மாள் நெடுநேரம் கதைசொல்லிய போது தயாநாதரும் வேறு போக்கற்று "நீ சொல்லுகிறபடி ஆக ட்டும். எனக்கு இப்போதொன்றும் மனதிலே படவில்லை. வய லுக்குப் போகவேண்டும். வெயில்வந்து விட்டது" என்று சொல் லிக்கொண்டு விரைவாய் வெளியேசென்ருர்.

அதிகாரம்—ரு.

மனம்வேறு சொல்வேறுபட்டவளாய்த் தன் மையலில் கணவ னைச் சிக்கச்செய்யும் கடுமுகி ஒருநாட் காலையிலெழுந்து, சாணிதெ ளித்து, மெழுகி, பலவிதமான கோலமிட்டு பாத்திரங்களை உள்ளும் புறம்பும் நன்ருய்த்தேய்த்து, தயிர்கடைந்து வெண்ணெய் எடுத்து

சமையலுக்கு வேண்டிய காய்கறிகளை நறுக்கிவைத்து, தலையில் எண்ணெய்தடவி சிக்கறுத்து நன்றாய்வாரி ஒழுங்காய் வகிடுபிளந்து கட்டிக்கொண்டு பிரேமநாத் சர்மாவை பழயதுண்ண அழைப்பவளாய், ' எண்டா! கொட்டிக்கவாயேண்டா ஒனக்காக எத்தன்றாழி? ஒன்னோட மாரடிக்கிறதைவிட எங்கேயாவது பொறப்பட்டுப் போகலாமடாப்பா. ஒன்னைவச்சுப் பொடக்கரபேறா தெய்வமெங்கோணும். ஒருநாளாவது காலவேலேலே சாப்பிட்டான்னு ஒடம்புக்கு நல்லது. அதைவிடத்தான் வேறே ஒனக்கென்னவேலே? தின்னுப்பிட்டுத் தொலயப்பிடாதா?" என்று சொல்ல, பிரேமனும், "அம்மா நீதானே அன்னிக்கு வாசிக்கப்போவாண்டா மென்னு அப்பாகிட்ட ரொம்பரொம்பச் சொன்னே. இன்னிக்கி இப்பிடிச் சொல்லரயே" என்றான்.

அவளோ, "ஐயோ கொழந்தயாச்சேன்னு சொன்னாக்கே எம்மேலேயே பழிபோடப் பாக்கராயாடா பயலே! நீ எக்கேடுகெட்டு எருக்கு மொளச்சுப்போயேன் எனக்கென்ன? தின்னூட்டுப் போகலாமோன்னோ? பள்ளிக்கோடத்துக்குப் போகவாண்டாமுன்னு - புண்டரீகா கிடாச்செத்துது நான் பில்லருமல் பொழச்சேன் - எம்பாளே அதுபோல் அவுத்துவிட்ட கழுதயாட்டமா திரியரதுதானு வேலே?" என்று மிகவும் கடுகடுத்துச் சொல்லி அவனை உள்ளே கூட்டிக்கொண்டுபோய் ஒரு கற்சட்டியில் பழயதுபிசைந்தெடுத்து, இன்னொருகற்சட்டியில் பழங்குழம்புடன் வந்து ஓரிடத்தில் உட்கார்ந்து தன்கையாலெடுத்து அவன் கையில்போட்டு சாப்பிடச் செய்தாள். உண்மையில் கடுமுகிக்கு தன்மூத்தாள் சேயிடத்தில் எள்ளளவும் அன்பில்லையாயினும் அயல்வீட்டுக்காரருக்கு அது தெரியாமலிருக்கவேண்டுமென்னும் எண்ணத்தால் நல்ல தயிருடனும் பிரேமநாதனுக்குணவளித்தாள். இதையெல்லா மறியாத சிறுவனும் தனது சிற்றம்மைக்கு தன்மீது உண்மையில் அன்புண்டென அகமகிழ்ந்தான். இப்படியாக உண்ணும்போது எதிர்வீட்டுப்பெண்ணான பாகீரதி என்பவள் அங்கு வந்து - "எய் பிரேமா வெளயாட வரயாடா, என்றாள். கடுமுகியும் சிறுவன்படியாமல் கெட்டுப்போகவேண்டுமென்றும், பெண்களுடன் சேர்ந்து அவர்களுடைய விளையாட்டுக்களும், சித்திரக்கோலங்களும், மாதிரிகளும், பேதைமையும் பழகி, ஆண் தன்மை மறந்துபோய் எதற்கு முபயோகமில்லாமல் ஆகவேண்டுமென்றும், இதுவே அவன் பிற்காலத்தில் காமுகனாய்த் திரிவதற்குக் காரணமாகுமென்று மெண்ணி, "சுருக்கப்போட்டுக்கிண்டு போடா - சும்மா வீட்டிலே ஒக்காந்து

கிண்டு பொம்மண்டாட்டியண்டை புரிமணை, கம்மண்டாட்டியண்டை கலவடையெம்பாளே அப்படி இருக்காதே" என்றாள். எவ்வித விளையாட்டிலும் அதிக ஆசையும் அவற்றை அறிந்து கொள்வதில் அதிவேகமான புத்தியுமுடைய சிறுவனும், "சாத்தை நன்னாப்பெசை, கட்டிசட்டியாயிருக்கு" என்றான்.

பாகீரதியும், "ஐயேடி! பெசை! ஒங்க பேச்சரண வார்த்தயோ லக்ஷணமோ" என்றாள்.

உடனே கடுமுகி "பின்னே யெப்பிடீடியம்மா சொல்ரது ஒங்க வார்த்தையைக் காட்டு பாப்பம்" என்று ரோஷத்துடன் சொன்னாள்.

"பிசியின்னு சொல்லோணு" மென்றாள் பாகீரதி.

உடனே "வெகு நன்னாயிருக்கு-பிசியாவது கிசியாவது-பீஞ்சு சாட்டேட்டுப்போகவாவது - பீஞ்சாம்சாப்பட்ரதாவது - ரொம்ப அழகாயிருக்கு - ப்ரஹசரணமின்னு சொல்லக்கூட வாயிலே நொழயாமல் பேச்சரணமிங்கராப்போலே, பிசி யின்னு சொல்ரதும் அழகாத்தானிருக்கு," என்று பரிஹாசம் செய்தாள் கடுமுகி.

பாகீரதி சிறு பெண்ணாகையாலும், வேறு பேசத்தெரியாதவளாகையாலும், பிரஹசரணத்தாரைக்கண்டு வயிற்றெரிச்சலடைவதும் ஏதாவது சொல்லி பரிஹாசம்செய்து அவமானமடைந்துகொண்டிருக்கிறதும் வாடிக்கையுள்ள ஓர் வீட்டுப் பெண்ணாகையாலும், அதிகமாய்ப் பழகாதவளாதலாலும் பேச்சை வேறுமாதிரி மாற்றினாள். இது, ஸாதாரணமாய் தோற்ற கக்ஷிக்காரர்களுக்கே வழக்கை. இப்படியாவது அவர்கள் திர்ப்தியடைவார்கள். இப்படியே இரண்டொரு வார்த்தை பேசி முடிந்தபின், பாகீரதி, "ஒங்காத்துலே என்ன ஊரகா யிருக்கு" என்று கேட்க, கடுமுகியும், "ஒங்காத்துலே என்னபோட்ருக்கா?" என்றாள். ஏதாவது இருந்தாலும் இல்லாவிட்டாலும் பெருமையாய்ப் பேசுவதே தொழிலாயுள்ள வீட்டுப்பெண்ணான பாகீரதி, "எங்காத்துலே மொளகாப்படியிருக்கு" என்றவுடனே, "பலே! பேஷ்! எத்தனும்பெரிய ஊரகாய்" என்று நகைத்தான் பிரேமன். பிறர் நகைப்பதில் அதிக வெட்கங்கொள்ளும் பெண்பாலான பாகீரதி, "என்னடா பிரேமா! சொல்ரத்துக்குள்ளே பரியாஸம் பண்ணரே, முழுக்கச் சொல்லவாண்டாமா?" என்று கடிந்துவிட்டு "எங்காத்துலே வேப்பெலக்கட்டியிருக்கு - புளியம்பிஞ்சுத் தொக்கு இருக்கு. எலிமிச்சங்கா போட்டிருக்கு - கடாரங்காய், துரிஞ்சிக்காய், நார்த்தங்காய், கசப்பு நார்த்தங்காய், மொளகாத் தொகயல், நார்த்தங்கா

ய்த்தோல் தொகயல், இன்னம் எத்தனையோ யிருக்கு" என்றாள். அதற்குள் பிரேமநாதன், "எங்காத்துலே சுண்டைக்காய், வடுமாங்காய், தும்மட்டிக்காய், மணத்தக்காளிக்காய் எல்லாமிருக்கே. ஒங்காத்துலே இருக்கோ" என்றான். அவள் உடனே தங்கள் வீட்டில் இருப்பது அவனுடைய வீட்டிலில்லையென்று பரிஹஸித்தாள். பிரேமனும் "அது கடக்கட்டும், நார்த்தங்காய், கசப்புநார்த்தங்காயென்னு ரெண்டு சொன்னயே அதென்ன வித்யாஸம்? அதுபோகட்டும். ஒங்காத்துலே மாஹாளிக்கெழங்கு கெடயாதா? அடைமாங்காய் - எண்ணை மாங்காய் - மெந்தியமாங்காய் - நெல்லிக்காய் - இளாக்காய் இது ஒன்னுங் கெடயாதா" என்றான்.

பாகீரதி "எல்லாம் உண்டு சுண்டைக்காய் ஒங்க ஜாதியாட்டமா எங்க ஜாதிக்கு புடிக்காது. சொச்சமெல்லாம் அப்பப்போ போடுவா. ஏண்டா நார்த்தங்காயின்னா தெரியாதா னோக்கு. நார்த்தம்பழங்கூட நாமள்ளாம் எத்தனையோ தின்னிருக்கமே. மறந்துபோச்சா? அது கடக்கட்டும். தும்மட்டிக்கா யின்னயே அதென்ன சுக்காங்காயா?" என்றாள்.

அதற்குள் கடுமுகி கோபமூண்டு, "தின்னூட்டுப்போய் மொள்ள வம்பளவுங்கோடா. எனக்கு சாப்பிட்டேட்டு குளிக்கப்போகோணும்" என்று சொல்லிக்கொண்டு, "ஏண்டி பாயீரதி! ஒனக்கு கொளஞ்சிக்காயின்னு சொல்லத் தெரியாதா? கெழக்குத்தியாரெல்லாம் நார்த்தங்கா யும்பா - நம்மூருலேல்லாம் கொளஞ்சிக்காயும்பா - கோயம்பத்தூர் சீமேலே கொளுமிச்சங்காயும்பா. அது கடக்கு சுண்டக்காய் ஒங்க சாதிக்குப் புடிக்காதோடீ ஒத்தொத்திக்கு ஒருவேளைக்கு குறுணிவேணுமே. திருணவேலிக்கிப் போனான்னா ஒங்கசாதிப்பேர் சுண்டக்காய் திங்காது தெரியும்" என்று பரிஹஸித்தாள். இதற்குள் பிரேமநாதன் சாப்பிட்டு முடிந்ததால் கைகழுவிக்கொண்டு தெருத்திண்ணையில்வந்து பாகீரதியுடன் உட்கார்ந்து சிறுபிள்ளைகள் பச்சைக் கத்திரிக்காயை நறுக்கி மிளகாய்ப்பொடியை அதனுள் திணித்து கட்டிவைத்திருந்து தின்பதையும் வெண்டைக்காயைப் பிளந்து அதனுள் உப்பைச்செலுத்தி அதை ஈர்க்கில் கோர்த்து அடுப்பில் காட்டி சுட்டுத் தின்பதையும்பற்றி வேடிக்கையார்த்தமாய்ப் பேசிக்கொண்டிருந்தான்.

அப்போது, "ஏ பிரேமா! குக்ஷிக்கட்டான் ஆடலாம் வரயா?" என்று பாகீரதிசொல்ல அவனும் அதற்கு உடன்பட இருவருமாய்த் திண்ணையைவிட்டிறங்கி, கொல்லைக்காடுகளில் சுற்றி, அவரை இலை, ஊமத்தை இலைகளைப் பறித்துக்கொண்டும், தெருவில் குனி

ந்து குனிந்து புளியங்கொட்டை பொறுக்கிக்கொண்டும் வந்து மறுபடி திண்ணையேறி புளியங்கொட்டையில் சிலவற்றைத் தேய்த்து அவற்றில் பெரியதாய் நான்கு எடுத்துக்கொண்டு கட்டான்கிழித்து ஆடத்தொடங்கினார்கள். ஆடும்போதே சிறுவன், “ஏ பாகீரதி! நீங்களெல்லாம் என்னென்ன வெளயாட்டு வெளயாடர வாடிக்கை சொல்லு பாப்பம். நல்லதாய் எதாவது இருந்தா வெளயாடலாம்” என்றான். அவளும், நாங்கள் குந்துபிடிப்பம். அது உஸ்திக்குந்து சப்பைக்குந்துன்னு ரெண்டுவிதம். சோளாம் அடிப்போம். அப்போ குதிச்சு குதிச்சுக்கிண்டு,—

சோளாச்சோளாக் காட்டிலே சோளமடிக்கிற வீட்டிலே
பந்தடியடி மீனாளே பதக்குச்சோளாம் நாந்தரேன்
சின்னாச்சின்னா மூக்குத்தீ சின்னப்பனிட்ட மூக்குத்தீ
அத்தையிட்ட மூக்குத்தீ அரப்பணத்து மூக்குத்தீ
கண்டெடுத்த மூக்குத்தீ காப்பணத்து மூக்குத்தீ

என்னு சொல்லிக்கிண்டு ஒத்தர்மாத்தி ஒத்தராய்ப் பாடுவோம். இதுமட்டுமோ? மத்துப்பிளப்போம், கும்மியடிப்போம், அம்மானையாடுவோம்,—

எப்பு இல்லாப்பூ எங்கமன்னிக்குத் தாழம்பூ
ஊராார்மன்னிக்கு ஊமத்தம்பூ

என்னுப்பிட்டு ஒரு வெளயாட்டுண்டு. புளியம்வெளா ஆடுவம். அது பத்துப் பதினஞ்சுவிதம் உண்டு. ஒட்டி - பழம் இதெல்லாம் நீங்களும் ஆடுவேள்; நாங்கள்ளாம் இதுவும் ஆடுவம்; ஒத்தையோ ரெட்டையோ ஆடுவம்; கொங்கு - எந்து - ஏழப்பூ - சாந்துக்கொட்டாங்கச்சி - வெத்தலத்தட்டு - தளாப்பொத்து - இன்னம் எத்தனையோவிதம், புளியம்வெளா ஆடுவமே இன்னங்கேளு சாந்தே-எண்டி சந்தனக்கட்டையை எங்கேவச்சே - அசலாராத்துப்பெரேலே வச்சேன் - காணமேடி கரியாப்போவே - இருக்கேடி எரிஞ்சுபோவே என்னு ஒரு வெளயாட்டு, இந்தமட்டும் இந்தமட்டும் எங்கோடின்னு ஒரு வெளயாட்டு. சந்தணக்கட்டை - குங்குமக்குடுக்கையென்னு ஒரு வெளயாட்டு. இருடா! இத்தனைதானா கழக்கோடியாடுவம், நாலுமார்திரி பாண்டியாடுவம்; வர்க்காவெட்டி - வரப்புவெட்டி - வழியோடேபோரவன் தலெயெவெட்டீ - என்னு ஒன்னு, கரண்டாமூடி கருவேலமூடி; நெலாப்பூச்சி - நெழப்பூச்சி; தேனாபா தெந்தனபாலர்; ஒக்காந்தவா நின்னவா-எட்டிப்பரப்பட்டேன் ட்டுக்கூடை; பன்னீ பன்னீ நீச்சுக்கொட்டு; அப்பனார்; சோ ; பல்லாங்குழி; பத்துக்கட்டான்; கட்டிலுங் கட்டிலுஞ் சேந்

துதோ - ராஜா ராஜா பூஷணிக்காய்; எம்பொண்ணை யெம்பொண்ணைப் புடிப்பானே இதெல்லாம் வெளயாடுவம் - இன்னம் எத்தனையோ விதமெல்லாம் உண்டு" என்று பெருமையாய்ச் சொன்னாள்.

பிரேமநாதனும் இந்த விளையாடல்களில் அதிக ஆசை முற்றினவனாய் இரண்டொன்றின் பெயர் சொல்லி அவற்றை ஆடும்விதம் எப்படியென்று கேட்க பாகீரதி சொல்லியதையே இதோ சுருக்கிச்சொல்லுகிறோம்.

பெரும்பாலும் எந்த விளையாட்டிலும் இரண்டு கக்ஷிகள் உண்டு. ஒவ்வொரு கக்ஷிக்கும் ஒரு பிரதானமான பெண் உண்டு. அவளுக்கு பெரிய 'உஸ்தி' என்று பெயர். விளையாட்டெல்லாம் தொடங்குமுன் இரண்டுபேர் பெரிய உஸ்தி யென்று ஏற்படுவார்கள். மற்றவர்களெல்லாம் தத்தமக்கு இணையான இரண்டிரண்டுபேராய்ப் பிரிந்துபோய் ஏதாவது தங்களுக்கு ஒரு சங்கேதமான பெயர் வைத்துக்கொண்டு திரும்பிவந்து பெரிய உஸ்தியைப்பார்த்து, "உஸ்தீ உஸ்தீ ஆரோடே" என்று கேட்பார்கள். அதற்கு அவள் "ஒங்கக்காங்கச்சி தெருவோடே" என்று பதில் சொல்லுவள். அதன்மேல் "ஒனக்கு எள்ளுவேணுமோ கொள்ளுவேணுமோ" என்றுகேட்பார்கள். ஏதாவதொன்றின் பெயரைச்சொல்லி எனக்கு அதுவேண்டுமென்று ஒரு பெரிய உஸ்திசொல்லுவாள், சொன்னதும் 'எள்ளு' என்ற சங்கேதம் வைத்துக்கொண்ட பெண் ஒரு கக்ஷியிலும் 'கொள்ளு' என்ற சங்கேதம் வைத்துக்கொண்ட பெண் ஒரு கக்ஷியிலுமாய்ச் சேர்வார்கள். உடனே வேறு இரண்டு பெண்கள் பெரிய உஸ்திக்காரி ஒருத்தியிடம் வந்து இந்த மாதிரியே "உஸ்தீ உஸ்தீ யாரோடே" என்று கேட்டுவிட்டு "ஒனக்கு மண் வேணுமோ கல்வேணுமோ" என்பார்கள். எதை அந்தப் பெரிய உஸ்தி கேட்கிறாளோ அந்தப் பெயரை உடைய பெண் அந்தக் கக்ஷியிலும் மற்றப்பெண் அடுத்த கக்ஷியிலும் சேருவாள். இந்தப்படியே ஒவ்வொரு ஜோடியாய்வந்து கேட்டுக்கேட்டு கக்ஷி இரண்டாகப் பிரிப்பார்கள். இப்படிப் பிரிந்த உடன் எந்தக் கக்ஷி விளையாடத்தொடங்குவதென்று ஆலோசனை உண்டாகும். அதைக் கண்டுபிடிப்பது வெகு ஸுலபம். ஒரு கல்லையோ ஓட்டையோ அல்லது வேறெதையோ எடுத்து 'ஒனக்கெந்தப்பக்கம் வேணும்' என்று ஒரு கக்ஷிக்காரி மற்றொரு கக்ஷிக்காரியைக் கேட்பாள்! 'எனக்கு இந்தப்பரம்வேணும்' என்று ஒருபுறத்தைக் காட்டினால் அதக்கல்லையோ ஓட்டையோ உயர விட்டெறிவார்கள். எந்தப்புற மேலாக விழுமோ அந்தப்புறத்தாரே விளையாட்டுத் தொடங்குவ

கள். இரண்டு கக்ஷிகளாயில்லாத விளையாட்டில் யார் முதல்முதல் ஆடவேண்டுமென்று கண்டுபிடிக்க இரண்டுவழி உண்டு. விளையாடும்பெண்களுக்குள் கொஞ்சம் வயதும் அறிவும் முதிர்ந்த பெண் மற்றப்பேர்களையெல்லாம் வரிசையாய் நிறுத்திவைத்து "அம்மத்தை - கும்மத்தை - அரக்கீரை - செங்கீரை - வெள்ளி - விலாமச்சை - கிண்ணிய - த்தாமரா - தோமா - பூ - மலர்ந்தே" என்று பாடிக்கொண்டு ஒவ்வொரு பதத்தால் ஒவ்வொரு பெண்ணைத் தொடுவாள். யார் 'மலர்ந்தே' என்று சொல்லப்படுகிறாளோ அவள் உடனே கொஞ்சம் எட்டி விலகுவள். மறுபடியும் மீதியுள்ளவர்களுக்கு 'அம்மத்தைக் கும்மத்தை' வைப்பாள் இந்தமாதிரி வைத்துக்கொண்டேவந்து கடைசியாய் மலராமல் நின்றுவிடுகிற பெண்தான் விளையாடல் தொடங்கவேண்டும். இதுபோலவே "விடுவிடுசெங்கிலி" என்று ஒருபாடலும் அதுவழியாய் விளையாடவேண்டிய பெண் இன்னாள்தான் என்று தீர்மானிப்பதும் உண்டு.

(1) கட்டிலுங் கட்டிலும் சேர்ந்ததோ என்னும் விளையாடலில் இரண்டு கக்ஷியுண்டு இரண்டு கக்ஷியாகப் பிரிந்தபிற்பாடு ஒரு கக்ஷிக்காரரெல்லாம் பூப்பெயரும் ஒருகக்ஷிக்காரரெல்லாம் நகைப்பெயருமாய் வைத்துக்கொள்ளுவார்கள். ஆடத்தொடங்குகிற கக்ஷியார் மற்றக்கக்ஷியின் பெண்களை ஒவ்வொருத்தி ஒவ்வொருத்தி வீதம் கண்களைப் பொத்திக்கொள்வார்கள். அப்போது பொத்திய கக்ஷியின் பெரிய உஸ்தி "கட்டிலுங் கட்டிலுஞ் சேர்ந்ததோ" என்பாள். உடனே அந்தக் கக்ஷியைச்சேர்ந்த எல்லாவரும் "சேர்ந்தது" என்பார்கள். உடனே பெரிய உஸ்தி "காளுவாழையும் பூத்ததோ" என்பாள். எல்லாரும் சேர்ந்து "பூத்தது" என்பார்கள். மறுபடியும் பெரிய உஸ்திக்காரி "வெட்டினகட்டையும் துளுத்ததோ" என்பாள். மற்றெல்லாவரும் "துளுத்தது" என்பார்கள். பிறகு பெரிய உஸ்தியாயிருப்பவள், ஏதாவது ஒரு பெண்ணைப் பார்த்து அவளுடைய ஸங்கேதமான பெயரைச்சொல்லி, "மல்லிகைப்பூவே மல்லிகைப்பூவே மெள்ளவந்து துள்ளிப்போ" என்பாள். உடனே மல்லிகைப்பூ என்னும் பெயருள்ள பெண் ஓடிவந்து யாராவது ஒரு பொத்தப்பட்ட பெண்ணை ஒரு குட்டுப்போட்டுவிட்டு மறுபடிப்போய் பழயபடி தான் பொத்தியிருந்த பெண்ணை பொத்திக்கொள்ளுவாள். உடனே குட்டப்பெற்ற பெண்ணை கண்ணைத்திறந்துவிட்டு யார் குட்டினாள் என்று கேட்பதுண்டு. அவள் ஸரியாய்ச் சொல்லிவிட்டால் பொத்தப்பட்டிருந்த கக்ஷிக்காரர் விளையாடத் தொடங்குவார்கள்.

(2) பன்னீ பன்னீ நீச்சுக்கோட்டு என்னும் விளையாட்டில் இரண்டுகக்ஷியுண்டு. ஒருகக்ஷிக்காரரை வெளியே நிறுத்திவிட்டு மற்றொரு கக்ஷிக்காரரின் பெரிய உஸ்தியாயிருப்பவள் தன்னைச் சேர்ந்த ஓர் பெண்ணை பன்றியைப்போல் படுக்கவைத்து மேலெல்லாம் இரண்டு மூன்று துணிகளால் நன்றாய் மூடிவிடுவாள். பிறகு தன் கக்ஷியைச்சேர்ந்த மற்றப் பெண்களையெல்லாம் .உள்ளுக்குள்ளேயே எங்கேயாவது பதுக்கிவைப்பாள். உடனே வெளியில் நின்றவர்களைக்கூப்பிட்டு அவர்கள் வந்தவுடன் தான் பன்றியின்பேரில் படுத்துக்கொண்ட மாதிரியாய்ச் சாய்ந்துநிற்பாள். வந்தபெண்கள் "பன்னீ பன்னீ நீச்சுக்கொட்டு" என்பார்கள். உடனே கீழே மறைந்திருக்கும் பெண் க்-க்-க் என்ற மாதிரி சப்தம்செய்வாள். பிறகு "பாழும் பன்னீ நீச்சுக்கொட்டு" என்பார்கள். அப்போதும் மூடப்பட்டிருக்கிற பெண் க்-க்-க் என்பாள். மறுபடியும் "நீச்சுக்கொட்டு பன்னி நீச்சுக்கொட்டு" என்பார்கள். அப்போதும் க்-க் என்ற ஒலி உண்டாகும். உடனே வந்தபெண்கள் பன்றிவேஷப் பெண்ணுடைய பெயரைச்சொல்லுவார்கள். ஸரியாய்ச் சொல்லிவிட்டால் உடனே அவர்களெல்லாம் உள்ளே நின்றுகொண்டு முன் உள்ளே இருந்தவர்களை வெளியே அனுப்பிவிட்டுத் தாங்களும் "பன்னி" விளையாட்டுத் தொடங்குவார்கள்.

(3) எட்டிப் புறப்பட்டேன் தட்டுக்கூடை யென்பதிலும் இரண்டுகக்ஷி உண்டு. இதில் இரண்டுகக்ஷிக்காரரும் ஒருவருக்கு ஒருவர் எதிராக உட்காருவார்கள். உட்கார்ந்துகொண்டு கால்கள் இரண்டையும் முன்னால்நீட்டி, இடுப்புக்குமேலுள்ள புடவைத் தலைப்பை அவிழ்த்து காலின்மேல் ஒருமடிப்பு இரண்டுமடிப்பு மூன்றுமடிப்பாய்ப்போட்டு காலைமூடிக்கொள்ளுவார்கள். அப்போது ஒரு கக்ஷியின் தலைவி ஒரு முன்தாங்கியை (அதாவது இரும்பு மோதிரத்தை)க்கொண்டுபோய் தன் வகுப்பைச்சேர்ந்த யாராவது ஒரு பெண்ணுடைய துணிக்குள் மறைத்துவிடுவாள். உடனே மறு கக்ஷியின் பெரிய உஸ்தி, "எட்டிப்புறப்பட்டேன் தட்டுக்கூடை" என்று சொல்லிக்கொண்டே இந்தக்கக்ஷிப் பெண்களண்டை வருவாள். இந்தக்கக்ஷிப் பெரிய உஸ்தியும் உடனே "நானும் புறப்பட்டேன் பிள்ளைக்கூடை" என்று சொல்லிக்கொண்டே உடன்வருவாள். அடுத்த கக்ஷியின் பெரிய உஸ்தி "விட்டுதா பெண்ணே விட்டுதா" என்று சொல்லிக்கொண்டே ஒரு பெண்ணைப்போய்த் தொட்டு 'இவளிடமிருக்கு' என்பாள். அவளிடமே முந்தாங்கி இருந்தால் அந்தக்கக்ஷி தோற்றதென்றுபெயர். அவளிடமில்லாவிட்டால் அவள் தன்னிருப்பிடமிருந்து ஒரு கிளம்புகிளம்பி உட்கா

ருவாள். இந்தப்படியே ஒருவகுப்பினர் முழுவதும் முன்னேக்கி கிளம்பி உட்கார்வதற்கு "ஒருமடக்குப் பாயேஸம்" என்று சொல்லுவார்கள். மூன்றுதடவையும் இப்படியேயாய்விட்டால் அடுத்த கக்ஷியின் உஸ்தி மஹா முட்டாளென்று எண்ணப்படுவாள்.

(4) என்பெண்ணை யென்பெண்ணைப் பிடிப்பானேன் என்ற விளையர்ட்டில் கக்ஷிகிடையாது. ஒரு பெண் திண்ணையில் உட்கார்ந்துகொள்வாள். அவளுக்கு 'தாச்சி' என்று பெயர். ஒருத்தி தன் இருகையையும் நீட்டித் திண்ணையைப் பிடித்துக்கொள்வள். அது அவளுக்கும் திண்ணைக்கும் நடுவே பாலம்போட்டது போலிருக்கும். இந்த வேளையில் மற்ற எல்லாப் பெண்களும் ஒருவள் இடுப்பை ஒருவள் பிடித்துக்கொண்டு ஒருவள்பின் ஒருவளாய் அந்தப் பாலத்தின்கீழ் நுழைந்துபோவார்கள். அப்படிப்போமவர்களில் ஒருவளை தாச்சியாயிருப்பவள் பிடித்துக்கொள்ளுவாள். உடனே பாலம்போட்ட பெண் எழுந்துபோய் "எம்பொண்ணை யெம்பொண்ணைப் புடிப்பானே" என்று கேட்பாள். தாச்சி உடனே "பெருமாகோவில் சந்தணப்போத்தை இவளிடுப்பானேன்" என்பாள். உடனே பாலக்காரி "சந்தணப்போத்துக்குப் போத்துதாரேனே" என்பாள். தாச்சியும் "பொண்ணுக்குப்பொண்ணுதாரேனே" என்பாள். மறுபடியும் பாலக்காரி "எம்பொண்ணை யெம்பொண்ணைப் புடிப்பானே" என்பாள். தாச்சி "பெருமாகோவில் வேப்பமரத்தை யெடுப்பானே" என்பாள். இதுபோலவே கொஞ்சநேரம் வழக்காடிவிட்டு அந்தப் பெண்ணை தாச்சி விட்டுவிடுவாள். மறுபடியும் இதேமாதிரித்தான்.

இம்மாதிரியான பல விளையாடல்களையும்பற்றி இருவரும் பேசிக்கொண்டே மெய்ம்மறந்து அதிக இன்பத்தை யனுபவிக்கும்போது இதன் முன்னரே தான் அவசியமாய்ச் செய்யவேண்டிய சிலகாரியங்களை முடித்துவிட்டு குளிக்கச் சென்றிருந்த கடுமுகி வீட்டுக்குத் திரும்பிவந்தாள். இத்தருவாயில் இவர்கள் வீட்டுவாயிலில் "அம்மாளுக்கு ஜயம்வருகுது-வருகுது. ஒடியாடி சக்கம்மா நல்லவாக்கு சொல்லடீ - நல்லவாக்கு சொல்லடீ - ரணபத்ரகாளீ-கருப்புமாரீ - காப்பாத்தும்பகவதீ - ஓங்காரீ - சாமுண்டீ - கம்பளத்தாயீ-ஐயருக்கு தொந்திபோடுது தொந்திபோ ஒடுது - ஜயகாலம் வருகுது வருகுது-ஹாம் ஒய்யாரமாரீ-ஒடோடுங்கருப்பா-ரத்தகாட்டேறீ ராசுத்தும்வீரா - சுடுகாட்டுத்தேவா" என்று சொல்லிக்கொண்டே ஒரு குடுகுடுப்பாண்டியும் வந்து நின்றுன். அவனைக்கண்டதும், குளித்துவந்தவள் வீட்டு வாயிற்படியிலேயே இடுப்பில் குடமும்

அறையைச்சுற்றிப் புரிபோலும் கட்டியுள்ள ஈரத்துணியுமாய் நின்றுவிட்டாள். குடுகுடுப்பாண்டியின் உடுக்கு அதிகச் சிறியதாயிருந்தாலும் அதில் கட்டித்தொங்கிய பட்டுக்குட்டை நீளமாயிருந்தது. அவன் ஒவ்வொரு விஷயமாய்ச்சொல்லி உடுக்கடிக்கும்போதும் அதின் குட்டை அசைவது இவன்போன்றவர்கள் சொல்வதை நம்பாதீர்கள் நம்பாதீர்கள் என்று கையை அசைப்பதுபோலுமிருந்தது. அவன் தலைப்பாகையோ நான்கு விரற்கடை அகலமுள்ள பலவர்ண நீண்ட துணிகளால் சுற்றிய பெரிய சுமையாயிருந்தது. பெரிய உற்சவகாலங்களில் திருவாலவாய்க் கோயில்போன்ற பெரிய ஆலயங்களுக்கு தீவட்டிபோடவேண்டுமானால் அந்தப் பாகையில் பாதிதானே இரண்டுநாளைக்குப் போதும். அவன் காதையும்விடப் பெரிய கடுக்கன் வளையங்களை இரட்டையாக மாட்டிக்கொண்டிருந்தான். ஆளோ சிவந்தகுட்டை. தலையோ பருத்து விசாலித்துள்ளது. நெற்றித்தலம்மட்டும் அல்லாமல் கண் இமைகளின்மேலும் கண்ணின்கீழ் கொஞ்சதூரம்வரையிலும் ஒரேபூச்சாய் திருநீறு பூசியிருந்தான். புருவங்களின் இடையில் சிறிய கரிய பொட்டும் அதன்மேல் குங்குமப்பொட்டும் இட்டிருந்தான். மீசையும் தாடியும் காடுபோல்வளர்ந்து, கறுத்துச் சிறுத் திருந்தன. மேலேபோட்டிருந்த சட்டையோ இருபதினாயிரம்பங்காய்கிழிந்து தைத்துள்ள சுருக்கம்வைத்த பழந்துணி. சட்டைமேலும் தோள் மேலும் முழங்கையிலுமாக ஒருவண்ணான் மூட்டையென்று சொல்லக்கூடியபடி மிகுந்த கிழிந்த பழஞ்சேலைகளாகவே இருந்தன. ஆண்கள்கட்டும் துணியானாலும், பெண்கள்கட்டுந் துணியானாலும் வாங்கி வாங்கி மேலேபோட்டுக்கொண்டவன். இந்தலக்ஷணத்தில் பலபழங்கந்தைகளால் தைத்த அரிசிவாங்கும்பையொன்று முன்பக்கத்தில் தொங்கியது. இடுப்பில் ஒருதுணியை இறுக்கிக் கட்டியிருந்தான். காலிலும் சட்டைமாட்டியவன். காலின் கட்டைவிரல்களிலும், மோதிரவிரல்களிலும் இரும்புவளையங்கள் பெரிதுபெரிதாய் அணிந்தவன். கையின் பத்துவிரல்களிலும் மூந்தாங்கி மாட்டியவன்.

இவ்வளவு அழகாய் வேடந்தாங்கி வந்தவனைக்கண்டதும் தன்னை அறியாமல் மனத்தில் எழுந்த ஆசையே காரணமாக பிரேமநாதன் அவன்முன் வந்துநின்று ஒவ்வொரு லக்ஷணமாகக்கண்டு சிரித்துநின்றான். குடுகுடுப்பாண்டி உடனே அந்தப்பையனை உற்றுப்பார்த்து அவன் கையை நீட்டச்சொல்லி ஒவ்வொருகோட்டையும் நன்றாய் கவனித்து ‘ஸரி! ஸரி!’ என்றுசொல்லித் தலையை அசைத்து, பிறகு பையனை நெற்றியை சுருக்கிக்கொள்ளச்செய்து

அங்குண்டான கோடுகளையுங்கண்டு "ஸரி! ஸரி!" என்று ஆர
வாரித்து, முன்னும் பின்னும் திரும்பச்சொல்லி எல்லா அங்கங்க
ளையும் பார்த்து, நாக்கை நீட்டவும், கையைத் தொங்கவிடவும், த
லைமயிரை அவிழ்க்கவும் சொல்ல ஏதோ விநோதமென்று பிரேம
னும் அவ்வாறெல்லாம் செய்தான். இவ்வளவையும் பார்த்துவிட்டு
ஊரிலுள்ள காளிகள் பெயரையெல்லாம் ஒருமுறை சொல்லி "நல்
லவாக்குசொல்லடீ! நல்லவாக்குசொல்லடீ!" என்று குடுகுடுப்
பை ஒருநாழிவரையில் ஓயாமல் அடித்தான். இதையெல்லாம்பார்
த்துக்கொண்டே நின்ற கடுமுகி, "இருடா ஒன்னுஞ்சொல்லாதே
உள்ளேபோய் பொடவையைக் கட்டிக்கிண்டுவரேன்" என்றுசொ
ல்லிப்போய் அரைநொடிக்குள் அவ்வாறே வந்தாள். அதற்குள்
அவள்பெயரை அறிந்துகொண்ட கம்பளத்தானும் "கடுமுகியம்மா
ளுக்கு சந்தோஷம்வருகுது - இந்தமூலையிலிருக்கிறவன் ஐயோன்
னு இன்னும் எட்டுநாளையிலேபோறான்" என்று குடுகுடு அடித்
தான். கடுமுகியோ "நீ கட்டேலேபோகல்லியா குறிசொல்லி.
சந்தோசம்வரவாவது - இப்பத்தான் தளதளன்னு சாந்துப்பொட்
டாட்டமாயிருந்த பொடவையைப் போக்கடிச்சூட்டுவந்திருக்கேன்
சந்தோசம்வரதாம்" என்றாள். அதற்கு குடுகுடுப்பாண்டி "ஓடி
வாடி சக்கம்மா-நல்லவாக்குசொல்லடீ-எடுத்தவள் இன்னம் ரெண்டு
நாழிகைக்குள்ளே ஐயோன்னு போகிறாள்" என்றான். ஸாதார
ணமாய்ப் பெண்கள் குளிக்குமிடத்தில் பெண்பிள்ளைகளே கூட
இருந்திருப்பார்களென்ற நம்பிக்கையால் குடுகுடுப்பாண்டி இப்ப
டிச்சொன்னதையறியாமல் அவன் பெண்பிள்ளைதானெடுத்தாளெ
ன்று அறிந்து சொன்னதை அதிசயமாயெண்ணி ஏதோ இவனி
டம் மகிமை உண்டென்று நம்பி, தான் "சாந்துப்பொட்டாட்ட
மா" என்று சொன்னதையும் மறந்து, "நீ கெட்டிக்காரனானால்
என்னபொடவை சொல்லு பார்க்கலாம்" என்றாள். அவன் கடு
முகியம்மா கருப்புப்பொடவையை கட்டிக்கொண்டவா ஐயோன்
னு போகிறாங்க" என்றான். உடனே, தன் பெயரையும், கட்டி
க்கொண்ட செய்தியையும், புடவையின் நிறத்தையும் அறிந்து உள்
ளதுள்ளபடியே சொல்லிவிட்டானென்றெண்ணி அகமகிழ்ந்து தா
னே அந்த விஷயத்தைச்சொன்னாள். அவள் குளிக்குமுன் இர
ண்டுபுடவைகளைத் தோய்த்துக் கல்லின்மேல் வைத்துவிட்டு எங்
கேயோ பார்த்துக்கொண்டு பிடரியின் அழுக்கைத் தேய்த்துக்கொ
ண்டு நின்றாளாம். அதற்குள் அங்குக் கூடக்குளித்த ஒருத்தி தன்
இடுப்பிலிருந்த புடவையை மெள்ள அவிழ்த்து ஆற்றோடுவிட்டுவி
ட்டு அவள் புடவையில் ஒன்றை இடுப்பில் கட்டிக்கொண்டாளாம்.

குளித்துக் கரையேறிப்பார்த்துப் புடவையைக் காணமல் தேடி அதைத் திருடியவளைக் கண்டுபிடித்துக்கேட்டபோது அவள் கோபித்துக்கொண்டு "என்னடீ = ஆரைப்பார்த்து திருடீயின்னே - பணக்கொழுப்பா ஏழையை இப்படிசொல்ரே - நானென்ன முண்டைக் கட்டையாவா குளிக்கவந்தேன் நன்னயிருக்கு நன்னயிருக்கு" என்று உருட்டினளாம். இதைக்கேட்ட குடுகுடுப்பாண்டி "சக்கம்மா அப்படியே சொல்லுரா சரி! சரி!" என்று குடுகுடுப்பை அடித்தான். இதனுலும் இந்தமந்திரியே அவன் சொன்ன இரண்டு மூன்று விஷயங்களாலும் அவன் வார்த்தையில் கொஞ்சம் நம்புதல் பிறந்து, "எங்க கொழுந்தையைப் பார்த்து ஸரி யின்னேயே என் அப்படிச்சொன்னே" என்றபோது, அவன் தன் உடுக்கை நெடுநேரம் அடித்துவிட்டு "இந்த சின்னேயனுக்கு நல்லகாலம்வருகுது. தொந்திபோடுது - நல்லவாக்குவருது - ராஜாகிட்ட வேலையாகுது, நல்ல கலியாணம்வருகுது வருகுது" என்றுசொல்லி தான் கண்ட தொவ்வொன்றையும் விஸ்தாரமாய் வர்ணிக்கத்தொடங்கினன்.

பிரேமநாதனுக்கு சிறந்த உத்தம புருஷலக்ஷணங்கள் இருந்தனவாம். உருண்டு பருத்து உயர்ந்துள்ள தலையும், கறுத்துப் பளபளப்புடன் மிருதுவாயுள்ள அடர்ந்து செழித்த கூந்தலும், நான்கு விரற்கடை அகலத்துக்குக்குறையாது மேற்பக்கம் உயர்ந்து பரந்து பளபளப்புடன்கூடிய நெற்றியும், விற்போல் வளைந்தும் பட்டிலும் மிருதுவாயும் வண்டிலுங் கறுத்துமுள்ள இடைகூடாப் புருவங்களும், நீண்டு உயர்ந்து அளவுக்குத் தக்கபடி கொழுத்து எள்ளுப்பூப்போன்றுள்ள மூக்கும், செந்தாமரையிதழ்போல் நீண்டு சிவந்தகோடியும் வெண்டாமரையில் கார்வண்டிருந்தாலன்ன நடுவும், வான்கோழியின் மூக்கிலிருந்து தொங்கும் சதையிலும் சிவந்த அடிப்பக்கமும், காசாம்பூவிற்கரிய கருமணியும் உள்ள கண்களும், பூவரசம்பூவின் உள்ளே சிவப்பேறடமைந்த பொட்டுக்களிலும் நிறமும் பளபளப்புமுள்ள உட்பக்கங்களையுமுடைய இமையும், கொஞ்சமே யகன்றும் நீண்டுந் தொங்குவனவாகிய பளபளத்த காதும், நீண்டு சதைப்பற்றுள்ள அழகிய கன்னமும், பவளமொத்த உட்புறமுள்ள உதடுகளும், நுண்ணிதாய்ச்சிவந்து குறுகிக் கூரிய நுனியை உடைய நாவும், எயிற்றுக்கொழுப்பில்லாமல் சிறுத்து மிருதுவாயுள்ள முத்துப்போன்ற பற்களும், என்பு வெளியாகாமல் நீண்டுவிசாலித்திராமல் சற்றுப்பருத்தும் சதைகொழுத்தும் வட்டமாயும் பேசும்போதெல்லாம் எதிர்நிற்பவ ரெத்திறத்தினராயினும் தம்வயத்தராய்ச்செய்யும் மோவாய்க்கட்டையும், சற்றே குறுகிப் பருத்து மடிப்புக்கோடுகளுள்ள பளபளத்த கழுத்தும், விசாலித்த

தோளிடமும், பருத்துயர்ந்த தோளும், முழங்கால்வரையில் தொ
ங்கும் நீண்ட கையும், உயர்ந்துள்ள கக்ஷமும், முட்டிப்பரந்து இ
றுகி உயர்ந்து கொழுத்து விளங்கும் மார்பும், பருத்துயர்ந் துருண்
ட வயிறும், சிவந்து மிருதுவாய் வித்யாரேகை தனரேகை தானிய
ரேகை ஆயுள்ரேகை புத்ரஸந்தானரேகை தர்மரேகை தசசக்ர
ங்கள் முதலாயவற்றைக் கொண்ட அகங்கையும், கொழுத்து சிவ
ந்து மிருதுவாயுள்ள நகங்கள் உடைய புறங்கையும், குறுகிய பிட்
டமும், சிறுத்த இடையும், நீண்டதொடையும், குறுகிய முழந்தா
ளும் சிவந்தழகிய பாதமும், கண்டோர் அதிசயித்துப் பார்த்துக்
கொண்டே நிற்பதாகிய குதிகாலும், மெல்லிய தோலும், கம்பீரமா
ன ஆண்சிங்கப்பார்வையும், பெருமை பொலியும் இனிய குரலும்,
விடையேறுத்த நடையும், இவன்போல்யாவருக்குண்டெனவும்
ஆதலா லிவன் பெருவாழ்வு வாழ்வானெனவும், இவனுக்கு அதிக
ஐசுவரியம் பொங்குமெனவும் ஒருஜாமநேரம் சொல்லிக் குடுகுடுப்
பையடித்தான்.

அதற்குள் கடுமுகியும் தன் உள்ளங்கையைக் காட்டி இதோ
பார் என்றும், கையை நீட்டி இதோபார் என்றும் இம்மாதிரியே
அவன் பார்க்கக்கூடிய எல்லா இடங்களையும் காட்டியும் எனக்கெ
ன்ன குறிசொல்லுகிறாய் என்றாள். குடுகுடுப்பாண்டியும் நீ செ
ளாமலிருந்தால் உனக்கும் மற்ற எல்லாருக்கும் எனக்கும் நல்லதெ
ன்றான். அவளோ சொல்லவேவேண்டுமென்று கட்டளையிட்
டாள். உடனே இவன் “ ஸரி! கம்பளத்தான் வாயிலே மண் வி
ழுந்தது ” என்று தனக்கே குடுகுடுப்பை அடித்துக்கொண்டு அவ
ளுக்குப் பிள்ளைகளாவது பெண்களாவது பிறவாவென்றும், எப்
போதும் பொல்லாதஜன்மமென்றும், துர் மரணமாய்ச் சாவாளெ
ன்றும் அதற்கு பிரேமநாதசர்மாவே காரணம் ஆவான் என்றும்,
அன்றுமுதல் அவளுக்கேதாவது வருத்தமும் துன்பமும் வந்து
கொண்டேயிருக்குமென்றும் அவள் மனம் ஏதாவது பொல்லாங்கு
செய்வதிலேயே கவனமாயிருக்குமென்றும் ஒருநாழிகைவரையில்
அடித்துவிட்டு அவ்வூரில் வேறு யார்வீட்டிலும் பிச்சைவாங்க நில்
லாமல் யானை தன் தலையில் தானே மண்ணைவாரிப்போட்டுக்கொ
ள்ளுதல்போலும் நுணலை தன் வாயாலேயே கெட்டதுபோலும்
ஒருமணி அரிசியும் கிடைக்கப்பெறுதவனாக ஓடிப்போயினன்.

கடுமுகியோ அளவிலடங்காத கோபமும் பயமும் அடைந்து
நெடுநாளாய் துவேஷம் வைத்திருந்த ஸர்ப்பம் தன் எதிரியைக்க
ண்டு எப்படி சீறுமோ அவ்வாறே சீறியும், எல்லா ஆனந்தமும்

நிறைந்து பலபேர் தன்னைக் கொண்டாட, கம்பீரமாக ஒரு சபைநடுவே வீற்றிருக்கும் ஒருவனுக்கு அவன் அதிக அன்பாய் வளர்த்த தலைப்பேறான மகன் இறந்துபோனதாகச் செய்திவந்தால் என்ன நிலையில் மனம்துடிக்குமோ அவ்வாறே துடித்தும், ஒருதடவை நாற்புரமும் சுற்றிப்பார்த்து பிசாசுபிடித்தவள்போல் தலைவிரிகோலமாய் நின்று, கண்ணீர் ஆறாகப்பெருக, கம்பளத்தானை வாயில்வந்தபடி திட்டினாள். திண்ணையில் கொங்கிணியிட்டுப் படுத்துக்கொண்டு ஏதோதோ நினைந்து நினைந்தழுதாள். இவ்வாறு சிறிதுதிண்ணையைச் சேறுசெய்து பிறகு மூக்கை கொம் கொம் என்று இழுத்துக்கொண்டு ஏதோ ஓர் விதத்துணிவுசெய்து, தன் வியஸனத்தை மாற்றினவளாய்ப் புறப்பட்டு வீட்டுக்குள் சென்றாள். இதையெல்லாம் பார்த்த பிரேமநாதனுக்கு மனங்கலங்கிவிட்டது. தன்னை எவ்வளவோ கொடுமையாய் நடத்திவந்தாளானாலும் அவளிடத்தில் சிறுதும் அன்பு குறையாத சிறுவன் இன்னசெய்வதென்றறியாதவனாய் கண்ணீர் சிறிது சிறிதாய் உதிர, தானும் தன்விளையாட்டையும் தோழியையும்மறந்து உள்ளேபுக்கான். இதனிடையில் தனக்கும் ஏதாவது குறிகேட்கலாமென்ற ஆசையாலோ ஏதோ பகலவனும் அவ்வீட்டு உச்சிக்கு நேராகவந்துநின்றான்.

அதிகாரம்—௪.

“அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.”—குறள்.

அடித்தாலும் கொன்றாலும் ஆத்தாளேவேண்டும் என்னும் எண்ணத்துடன்கூடிய பிரேமநாதனையும் அவன் ஊரையும் சற்றுவிட்டுவிட்டு அடுத்தாற்போல் ஒன்றரைக் காதத்திலுள்ள ஓரிடத்தில் நடந்த அதிசயமொன்று கொஞ்சம் சொல்லுகிறோம்.

திருமழபாடியின் வடக்கில் அரியலூர் போகும்வழியில் முன்னாட்களில் ஒருபெருங்காடிருந்தது. அக்காட்டில் ஒருகாளிகோயிலுண்டு அதைச் சுற்றியுள்ள இடங்களெல்லாம் யாவருமஞ்சத்தக்க உயர்ந்த காட்டுமரங்களுண்டு வைக்கோலின் நிறத்துடன் கதிர் கதிராய்ப்பூத்து நிறைந்த கொத்துக்களுடைய கொகுகளை மரங்களும், சிறுசிறு செண்டுகளை அலங்காரமாகக் கோர்த்து வைத்ததொத்த மாம்பூநிறமுள்ள கதிர்களுடன் கூடிய வேல்மரங்களும் சிறந்த மஞ்சள் நிறத்தங்கத்தாலாகிய சிறு பூஞ்செண்டுகள் நிறைந்த கருவேல்மரங்களும், நல்லவாஸனையும் வெள்ளைநிறமுமுள்ள நிறைந்து கொழுத்த பூங்கொத்துக்களால் அலங்கார மடைந்த நரிவெள்ளி மர

ங்களும், உச்சி எவ்விடத்துள்ளதென்று நிமிர்ந்து பார்ப்பவர்களைக் கழுத்து முறியச்செய்யும்வண்ணம் நீண்டு பருத்துயர்ந்த காட்டிலவைமரங்களும், கருவேல்போ லிருந்தாலும் அதிகமாய்ப் பருத்த முட்களுடைய வேறு மரங்களும் வெள்ளையாகவும் சிவப்பாகவும் மஞ்சளாகவும் நீலமாகவும் கறுப்பாகவும் பச்சையாகவும் உள்ள பல நிறப்பூங்கொத்துக்களால் நிறைந்து ஒன்றோடொன்று பிணைந்து பச்சைக்குன்றுபோல் தோன்றும் வண்ணம் பாம்புப் புற்றுக்களைச் சுற்றியுள்ள கொடிகளும் சிலம்பிப்பூச்சியின் நூலால்சுற்றியுள்ள கிளைகளடங்கிய இண்டை முட்களும் வெள்ளிமரத்தில் சிறந்த பச்சைக்கற்களால் இலைகள்செய்து அவற்றின்நடுவே மரகதக்கற்களை மிகுதியாய்த்தொங்கவிட்டதுபோலுமுள்ள பழங்கள் நிறைந்த உயர்ந்த நாகைமரங்களும் அங்கொன்று இங்கொன்றாய் ஒழுங்கின்றி வளர்ந்திருக்கும் காடாகையால் சீர்திருத்துவோரின்றி அங்கங்கே சருகுகளுதிர்ந்து மேடாய்க்கிடக்கும். சிற்சிலகரையான் புற்றுக்களில் பெரியபாம்புகள் நுழைந்து விளையாடும்; அல்லது புற்றிலிருந்து தலையை வெளியே நீட்டிக்கொண்டு காற்றுடக்கிடக்கும் எங்கேகால் வைத்தாலும் ஆனைநெறிஞ்சியும் பேய்த்தும்மட்டியும் குந்தாணிக்கொடியும் இன்னவென்று பெயர்சொல்லமுடியாத பலவித முட்களும் சிதறிப் படர்ந்துகிடக்கும். ஒருபக்கத்தில் கொடிகளுடன் கொடியாய்ப் பச்சைப்பாம்புகள் தொங்கும். சிலமரங்களின் மேல் ஒருபக்கம் பேச்சுரை படர்ந்திருக்கும். சில இடங்களில் பேய்ப்பீர்க்கு படர்ந்து காய்ந்து காய்களால்தொங்கும் அங்கங்கே ஓங்கி வளர்ந்த பனைமரங்களி லிருந்து ஒற்றைக்கூடு இரட்டைக்கூடு முக்கூடு என்று புற்களால் கூடுகட்டிக்கொண்டு குருவிகள் குடியிருக்கும். அவற்றின்மீ துட்கார்ந்து ஆநந்தமாய் ஊசலாடும். எங்காவது, பரந்து தழைகளடர்ந்து வீழ்துகள் நிறைந்துள்ள ஆலமரங்களும் அவற்றின்மீது கிளிகள் - காட்டுப்புறாக்கள் - கோட்டான்கள் ஆந்தைகள் என்னும் பலவிதப்பறவைகளுமா யிருக்கும். சில மரங்கள் இன்னவென்று சொல்லமுடியாமல் இலையற்று காயும் பழமுமட்டும் மலிந்து பற்பல அணில்களால் கோதப்பெற்று நிற்பதைக் கண்டால் மிக மனோரம்யமாய் இருக்கும். சிற்சில படர்கொடிகளில் பலவித ஓணான்கள் இருந்துகொண்டு வெயிற்காய்வதும் பகலவன் இருப்பிடம்நோக்கி தலையை ஆட்டுவதுமாயிருக்கும். எங்கு திரும்பினாலும் பலவித ஓசைகளும் கொக்கரித்தலும் கொறித்தலும் இச்சுக்கொட்டலும்கேட்கும். இப்படிப் பலவிதமரங்களும் செடிகளும் கொடிகளும் புதர்களும் அடர்ந்து எவ்வளவோ பறவைகள் தத்தமக்குரிய இரைச்சலுடன் திரியும் அக்காட்டில் ஒரு ஒற்

றையடிப்பாதை யுண்டு. அதுவழியே சென்றால் காளிகோயிலுக்குள்போகலாம்.] அக்கோயிலின் வாயிற்கதவு மூங்கிற் பிளாச்சுகளால் குறுக்கும் நெடுக்குமாய் வைத்து சுள்ளாணிகளா லிறுக்கிய இரட்டைக்கதவு. கோயிலின் சுவரோ சிலவிடங்களில் கருங்கற்களாலமைந்தும் சிலவிடங்களில் செங்கற்களாற் கட்டியும் சிலவிடங்களில் மண்ணா லெழுப்பியு மிருக்கும். அதிலும் ஒவ்வோ ரிடமிடிந்தும், அங்கங்கே செங்கற்களிலிருந்து பொடிப்பொடியாயுதிர்ந்தும் சுவர்களில் பலவிதப்புற்றுக்கள் முளைத்தும் ஆலங்கன்றுகள் துளிர்த்தும் பாம்புச்சட்டைகள் வெளுத்துத் தொங்கிக்கொண்டும் இருக்கும். உள்ளேபோனால் இடதுகைப்புறத்தில் ஒரு பெரியகுளம் கருங்கற்படித்துறைகளால் கட்டி கருப்பஞ்சாற்றினும் தெளிந்த நீரால் நிறைந்து, பாசிமுதலிய இல்லாமல் ஆழ்ந்து, எப்போதும் சிற்றலைகள் ஒன்றன்பின் ஒன்றாய்க் கரையில்மோத, தவளைகள் தத்திக்குதிக்க, ஆமைகள் உற்சாகமாய் நீந்த] பால்போலும் இனிய சுவையுடையதாய், எந்நாளும் வற்றாமலிருக்கும். கோயிலின் உள் வீதியெல்லாம் எப்போதும் பாம்புகளும், அரணைகளும், காட்டுப் பல்லிகளும், காட்டுப்பூனைகளும், அணில்களும், ஓணான்களும் நடமாடிக்கொண்டிருக்கும். அங்கங்கே அலரிச்செடிகளும், பட்டிச் செடிகளும், நீண்ட காம்புடனும் சிறிய நான்கிதழ்களுடனும் கொத்துக் கொத்தாய் செந்நிறமலிந்து பூக்கும் இருவாசிச்செடிகளும் முளைத்திருக்கும். பச்சை ஓந்திகள் மிகுதி. இவற்றைக்கடந்து சற்று உள்ளேசென்றால் ஒரு பெரியதிண்ணை கட்டியிருக்கும். அதில் பயங்கரமாய் பருத்துக் கொழுத்துயர்ந்த பதினைந்தடி மனிதரைபோன்ற நாலைந்து உருக்கள்கையில் கத்தியுடனும், தலையில் கிரீடத்துடனும், முகத்தில் பிடிமீசையுடனும் கட்டியிருக்கும். இரண்டுமூன்றடி அப்பால்சென்றால் இரும்புத்தூண்களும் தண்டாயுதங்களும் மண்ணில்புதைந்து தலைகாட்டும். பக்கத்தில் பெரியவேலாயுதமொன்று மணிகள் கட்டியதாய் நிற்கும். அங்கே இரண்டு பனைமரங்களை ஒரு சங்கிலியாற்பிணைத்து ஓர்வித ஊசலுண்டு. அணுக்கமாய்ச் சிலமரங்களிலிருந்து சங்கிலிகள்தொங்கும். ஓரிடத்தில் சிறுகுதிரைபோலவும், பசுப்போலவும், பெண்போலவும், குழந்தையும் தாயும்போலவும், தொட்டிலும் குழந்தையும்போலவும் சிறிதும்பெரிதுமாய் உருவாரங்கள் குயவனாற்செய்து சுண்ணம்படித்தனவாய் கையொடிந்ததும் கால்போனதும் தலையிழந்ததும் இடுப்பொடிந்ததும் செவியற்றதும் கண்ணில்லாததுமாய்க் கிடக்கும். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே உள்ளேபோனால் காளியின் எதிரிற் செல்லலாகும். முன்புறத்தில் எப்போதோ என்

ணைப்பட்டு நெடுநாளாய்ப் பொருக்கெடுத்த ஓர் பலிபீடம். அதன்முன் சில பெரியகுதிரைகள்போலவும் யானைகள்போலவும் கட்டி அவற்றின்மீது அம்பாரிவைத்து அதனுள் பொம்மைகள் வைத்திருக்கும். அந்தயானைகளும் குதிரைகளும் செங்கற்களாலும் சுண்ணாம்பாலும் கட்டி எவ்வளவோ நாள்களா யிருக்குமாதலால் காலொடிந்தும் கையொடிந்தும் கொம்பொடிந்தும் காதை உதிர்ந்தும், பொம்மைகளில் பாதிபோயும், சிலவற்றுக்கு உடல்சரிந்தும், சிலவற்றின் கையிலுள்ள ஆயுதங்கள்மட்டும் மீந்தும், சில இடங்களில் மரக்கட்டைகள்மட்டும், காணப்பட்டும் கேள்விமுறையின்றிக்கிடக்கும். இவ்வளவு இலக்கணமமைந்த கோயிலில் ஒருநாட்காலையில் ஒரு பெரியவர்வந்தார். இவர்தான் முன்னமேயே பிரேமநாதன் பூப்பரித்த இடத்தில் கூட இருந்தவராக நாம் சொன்னவர். யாது காரணத்தாலோ அன்று இந்தக்காளிகோயிலுக்கு வந்தார். வந்தவுடன் அங்குள்ள குளத்தைக்கண்டு அகமகிழ்ந்து பெரியபெரிய யோகிகளிருந்து தவமியற்றவேண்டிய இட மிதுவேயென்றும், இதில் மூழ்கினால் எவ்விதநோயும் நீங்கி கடவுளது அடிநீழலில் எப்போதுமிருக்கவேண்டுமென்ற அறிவு பிறக்குமென்றும், தன்னையே கடவுளிடம் ஒப்பாக ஒப்புவித்து, " இருந்தென்னையாண்டுகொள் - விற்றுக்கொள் - ஒற்றிவை " என்று எவனும் விரக்தி யடையக்கூடிய நலம்பெறுவானென்றும், இந்தக்குளத்தின் தண்ணீரில் கொஞ்சம் அருந்தினால் எப்போதும் பரோபகார சிந்தையுண்டாகுமென்றும் பலவிதமாய் எண்ணி இங்கிருந்தே இன்று யாம் கடவுளை தியானித்துச் செல்வோமாக என மனங்கொண்டார். உடனே ஏதோ ஒரு ஆசைபிடித்திழுப்பக் கோயிலுக்குட்சென்றார். அங்கு யாருமஞ்சத்தக்க ஓர் கொடிய கொலை நடந்துகொண்டிருந்தது. யாரோ இருவர் பார்வையில் பிராமணரைப்போலவும், செய்கையில் கிராதகரைப்போலவும் அங்கு நின்றார்கள். அவர்கள் நெற்றியில் பெரிய குங்குமப்பொட்டிருந்தது. கையில் ஒரு பெரிய அரிவாளெடுத்து ஒரு சிறுவனைவெட்டி அவன் உதிரத்தை ஒரு புதுச்சட்டியில் ஏந்திக்கொண்டிருந்தனர். இதைக்கண்டு கதமிகுந்து பெரியவர் சற்று வெளியேவந்து அங்கு நாம் முந்தியேசொல்லியுள்ள பொம்மைகளில் ஒன்றின்கையிலுள்ள பெரிய அரிவாளை யெடுத்துக்கொண்டு இருவரையும் ஒரேவீச்சாகவீசிக் கொல்லவந்தார். ஆனாலும் தமக்குள்ளே பலவித யோசனைகள் தோன்றியதால் சற்றுத் தாழ்த்தார். உலகத்திலுள்ள எவ்வளவோ சிறுகுழந்தைகளை இம்மாதிரி பலியிடும்கொடியரை ஒருகணமே ஒழிக்க நம்மாலாகுமென்றாலும் நமதுசெயல் அவர்களுடையதையும்விடக் கொடியதாகுமோ

என்று ஒருபக்கம்யோசித்தார். நாமிப்போ திவர்களைக்கொன்று விட்டால் இறந்தபையனுக்கு அது எம்மட்டில் லாபம்? அவன் உயிர்த்தெழுவனோ? இவர்கள் சாவாலேயே இவ்வுலகத்தி லினி இக்கொடியசெய லொழிந்துவிடப்போகிறதா? விதிமாண்டவர்க ளே இவர்களிட மகப்படுவாராதலால் நாமெவ்வித உபாயம் செய் துமென்ன? இப்படிச் சாகவேண்டியவர்கள் இவர்களிடமில்லாவி டில் வேறு இவர்களைப்போன்றவர்களிடம் ஏன் அகப்பட்டுக்கொ ள்ளார்? ஆனால் இவர்களைத் தொலைத்துவிட்டால் இவர்கள்மட்டில் நடக்கும் தீங்குகள் ஒழிந்துவிடுமன்றோ? வைதிகமார்க்கத்தில் நீங்கி ஏதோசில குருட்டுப்புத்தகங்களைக் கைக்கொண்டு அவற்றிற்பகரும் அக்கிரமங்களில் தலைப்பட்டு குடி கொலை காமவெறி இவைகளுக் கிடமாய் நிற்கும் இந்தப்பாவிகள் நமது உலகத்தில் ஏன் பிறந்தன ரோ? புலாலுண்ணல் எவ்வளவோ விதத்தில் கொடியதாயிருந்தும் அதிலேயே தலைப்பட்டு நின்ற இப்பெரும்புலையரை என்னசெய் தாலும் தகும். புலாலுண்பதில் ஏதாவது பயனுண்டா? புலாலை நாம் நல்லதுணைக்கருவிகளைக்கொண்டு சோதித்துப்பார்த்தால் அ தில் ஒன்றுக்குப் பாதி வெறுந்தண்ணீரென்றும் மீதியின் யோக்ய தை உலர்ந்துபோன சில சருகுகளுக்குள்ளதைவிட அதிகமில்லை யென்றும் தெரியவரும். கொஞ்சச்செலவில் ஆகாரம்செய்து உட ம்பிலும் சதைப்பற்றிருக்கவேண்டுமானால் புலாலுண்பது நல்லதல் லவே. மழைகாலத்தில் நமது உடம்பில் இருக்கவேண்டிய அளவு உஷ்ணத்தை மாம்ஸம்தராது. இறைச்சிதின்பதில் உள்ளசுகம் இ ன்னதென்றுசொல்வது யாராலுமாகாது. அதற்குள்ள யோக்கிய தையெல்லாங் கூடி ஏதோவாடிக்கையில் வந்துவிட்டதோஷமும், அதனிடத்துள்ள குருட்டபிமானமுமே ஒழிய வேறில்லை. ஒரு பொன்னுக்கு வாங்கக்கூடிய இறைச்சியைவிட அதில் ஐந்திலொ ருபங்குக்கு வாங்கக்கூடிய கந்தமூலங்களில் அதிக பயனிருக்கிற தே. புலால்தின்பதா லுண்டாவது அதிகச் செலவுமட்டுமா? அ தைத்தின்பவர்களுக்கு கள்ளிலும் சாராயத்திலும் ஒருவித ஆசைக் கிடமுண்டாவதினால் அநேகர்கள் குடித்துக் கெட்டழியவும் இட முண்டாகின்றது. இவ்வளவு குறைகளுடைய புலாலில் ஆசைப்ப ட்டுத் தாம் நெற்றிவேர்வை நிலத்தில்விழப் பகலெல்லாம்வருந்தி யுழைத்துப்பெற்ற காசை அதிகமாய்ச் செலவிட்டு வீணுக்குவதும் அரிய உயிர்களை கதறக்கதறக் கொல்லுவதும் அவலமாகவே யன் றோ காணுகின்றது! கொஞ்சச்செலவில் அதிகசுகம் தரக்கூடிய ஆகாராதிகளை விட்டுவிட்டு அதிகச்செலவிலும், வருத்தத்திலும் கொலையிலும் கொஞ்சநன்மையடைவது எவ்வளவு அறிவின்மை

யாகவும், வரவுசெலவின் அருமையறியாததாகவும் அஸம்பாவிதமாகவு மன்றோ முடியும்! அநேகம் இறைச்சிகளில் ஒன்றுக்குப் பாதி சுத்தஜலாம்சமாகவே ஒழிவதால் தண்ணீருக்கல்லவோ அறைப் பங்கு பணம்தருவதாகிறது? முள்ளங்கி, செங்கிழங்கு, சிறுகிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, பிடிகிழங்கு இவற்றைவிட புலாலில் அதிகசதைப்பற்றுக்கு இடமிருக்குமானாலும், பட்டாணி, துவரை, அவரை, உளுந்து, கடலை இவற்றிலுள்ள சதைப்பற்றில் பாதியேனும் அந்தப்புலாலில் கிடையாது. இதுமட்டுமோ? உடம்புக்குவேண்டிய அளவு உஷ்ணம் செய்வதில் கோதுமைமா, ரவை, தினைமா, கேழ்வரகுமா, சோளம், கம்பு இவற்றுக்குள்ள யோக்கியதையில் காற்பங்கும் இறைச்சியினிடமில்லை என்று சிறந்த வைத்திய புஸ்தகங்கள் சொல்லுகின்றன. உயிருடன் நெடுங்காலம் சுகமாய் ஜீவித்திருப்பதற்கு இன்றியமையாதவை சதைக்கொழுப்பும் அக்னிபலமுந்தான். இவற்றைத்தருவது ஊனூட்டி (Nitrogen), இருந்தை (carbon) என்னும் இரண்டுந்தான். இவ்விரண்டும் போதுமான அளவில்லாவிடில் உடம்புக்குப் பல கேடுகள் உண்டாகும். நோயின்றி இருக்கவேண்டுமோனால் இவை நல்ல அளவாக உடம்பில் சேரவேண்டும். நமக்கு நன்றாய்த்தெரிந்ததும் அற்பவிலையே உள்ளதுமான காய்கறிகளில் இவை வேண்டிய அளவு அதிகமாய்க்கிடைக்கும். இறைச்சியைவிடப் பட்டாணியில் கால்பங்கு புஷ்டியும் கூடும் அதிகமாயிருப்பதால் அரைக்கால்காசு பட்டாணி வாங்குவதைவிட்டு ஐந்துகாசு இறைச்சிவாங்குவது எவ்வளவு மூடத்தனம்? ஆட்டிறைச்சி மாட்டிறைச்சியைவிட ஆறுமடங்கு அதிகமாய் உஷ்ணம் தருவதும் குறைந்தவிலையுள்ளதுமான அரிசி தினைமா இவை இருக்கும்போது தேகத்துக்குவேண்டிய அளவு கூடுதராத இறைச்சியைத்தின்பது அவிவேகமன்றே?

மாடும் ஆடும், பச்சிலையையும் புல்லையும் தின்னும். புலாவுண்ணும் மனிதரோ இந்தப்பச்சிலையாலுண்டான சதையைத் தின்னுவார்கள். பச்சிலையையே நேரநேரத்தின்று உடம்பைத்தேறுதல்செய்து கொள்ளாமல் அப்பச்சிலையே சதையானபின்பு அச்சதையைத் தின்பதில் லாபமென்ன? சதையின் முக்காற்பங்கு சுத்தஜலாம்சமாகவே இருக்கும்போது பச்சிலையேதின்று ஜீவிப்பதைவிட்டுவிட்டு ஒன்றுக்கு ஒன்பது விலையுள்ள இறைச்சியைத்தின்பது எவ்வளவு நஷ்டமாகிறது? நமது உடம்புக்கு அத்யாவசியமான ஊனூட்டியும் இருந்தையும் ஸாதாரணமோரிலிருப்பதைவிட இறைச்சியில் அதிகமாயில்லை. ஒருபடிதவிட்டுக்கு வாங்கக்கூடிய மோரில் எண்ணூற்று முப்பத்தெட்டுக் குன்றுமணி ஊனூட்டியும்,

எண்பத்தெட்டுக்குன்றுமணி இருந்தையும் இருக்கிறதென்றும்; பதினைந்துபடி தவிட்டின் விலைக்கு வாங்கக்கூடிய மாட்டிறைச்சியில் மூன்றாற்றிருபது குன்றுமணி ஊனூட்டியும், இருபத்துமூன்று குன்றுமணி இருந்தையுந்தானிருக்கிறதென்றும் ஓர் மஹாபண்டிதர் சொல்லியிருக்கிறார். அன்றியும், கந்தமூலங்களைத் தின்பவர்களுக்குள்ள பலத்தைவிட இறைச்சிதின்பவர்களுக்கு மிகவும் குறைந்த பலந்தான். இது தெரியாமல் பலர் பலவிதம் கூறுவதுண்டு. கந்தமூலங்களையே தின்று வளரும் குதிரைகள் யானைகள் காண்டாமிருகங்கள் ஒட்டைகள் இவைகளுக்குள்ளபலம் புலாலுண்ணும் மனிதர்களுக்காவது, இவைகளையேபோன்ற நிலையிலுள்ள மிருகங்களுக்காவது உண்டா? புலி சிங்கங்களுக்கு பலமில்லையாவெனில் விசேஷ ஆயுதங்களான நகம், பல் இவற்றால்வரும் தைரியபலமும் இவற்றைக்கண்டே அஞ்சி நடுங்கிப்போகும் மற்ற பிராணிகளின் துர்ப்பலமுமேயல்லாது யானைக்குள்ள பலம், அல்லது குதிரைக்குள்ளபலம் புலிக்காவது சிங்கத்துக்காவது கிடையாது. அறுபதடி நீளம் பத்தடிசுற்றளவுள்ள மரத்தை ஒரு முட்டாய்முட்டித் தள்ளவும், தள்ளி இழுத்துக்கொண்டு போகவும் யானையால் முடியும்; அதில் நூற்றில் ஒருபங்கு மரத்தை அசைக்கவாவது சிங்கத்தால் முடியுமா? நல்லபளுவுள்ள ஆளைத் தூக்கிக்கொண்டு மலைப்பாதையிலும் தினமொன்றுக்கு நாற்பது நாழிகைதூரம் நடக்கும் குதிரைகளுண்டே! புலியால் அது முடியுமா? இதுதான் போகட்டும். ஒரேவித வேலைசெய்துவரும் இரண்டு தொழிலாளிகளில் ஒருவன் புலாலுண்பவனும் ஒருவன் கந்தமூலங்களைத் தின்பவனுமானால் நிச்சயமாய் கந்தமூலந் தின்பவனே பலவான். இறைச்சியையே கனவிலுமறியாத மஹான் குடிப்பிராமணரிடம் இறைச்சிதின்னும் மிலேச்சரும், கள்ளரும் படும்பாடு யாரறியார்? யவனர்-பாரசீகர் முதலிய ஜனங்களுடைய சேனைகள் எப்போதும் தாவரங்களையே தின்றுகொண்டும் மஹாபலவான்களாகவும், பசிதாகங்களைப் பொறுப்பவர்களாகவும், கொழுத்த தோட்பட்டை யுடையவர்களாகவும், மிகுந்த சுருசுருப்பும் எப்போதும் நோயின்மையும் உள்ளவர்களாகவும் நெடுநாள் ஜீவிப்பவர்களாகவும், மஹா புத்திசாலிகளாகவும் இருக்கின்றார்கள். அதிலும் யவனர் மோர்கூடச் சேர்ப்பதில்லையென்றாலும் மஹாபலவான்களாகவே இருக்கின்றார்கள். இமயமலைச்சாரலி லிருப்பவர்கள் கோதுமையையே தின்று ஜீவிப்பார்களானாலும் அவர்களுடைய பலம் புலாலுண்ணும் யாருக்குமில்லை. இன்னுமெவ்வளவோ இப்படியே சொல்லலாகும். அன்றியும் சில சுரங்கங்களில் வேலைசெய்யும் ஜனங்கள் தான்யவகைகளையும் பல

வன் கீரையையுமே தின்னுபவர்களாயினும் ஸர்தாரணமாய் நாளொன்றுக்கு அறுபத்தைந்துபடி சுரங்கமண்ணைத் தூக்கிக்கொண்டு செங்குத்தாய் முந்நூரடி உயரம் பன்னிரண்டுதடவை ஏறி இறங்குவதாகத் தெரியவருகிறது. அன்றியும் புலாலே உண்ணும் பிராணிகளுக்கும் மனிதருக்கும் எவ்வளவோ வித்யாஸங்களுண்டு. நீண்டு வளைந்த மூக்குகளாவது, நீண்டகூரியவளைந்த வலுத்தநகங்களாவது மனிதனுக்கில்லை. நாய்ப்பற்போன்ற கூரிய நான்குபற்கள் மனிதர்களுக்கிருப்பதால் அவை புலாலுண்ணவென்றே ஏற்பட்டனவென்று சிலர் சொல்லுவதும் மூடத்தனமே ஒழிய வேறில்லை. நமக்கு கூரியபற்கள் உண்டென்ருலும் அவை மற்றையபற்களின் வரிசைக்கு முந்திவரவில்லை. அன்றியும் நாய்களுக்குப் புலாலுண்பதே வழக்கமல்ல. வர்டிக்கைதோஷத்தாலேயே அது ஏற்படுகிறது. அதேமாதிரிப் பல்வரிசைகளையுடைய குரங்குகள் மறந்தும் புலாலை உண்ணுமா? அற்பக்குரங்கும் விரும்பாத புலாலைத்தின்று தமது ஊனைக்கொழுக்கவைக்க எண்ணும் மாந்தர் அறிவினரன்ருே? மனிதற்கு நாய்போல் பல்லிருக்கிறதென்றெண்ணி புலால்தின்பதை நியாயமாயெண்ணினுல், எறும்பு ஈசல் இவற்றை உறிஞ்சும் பிராணிபோல் மனிதர்களுக்கு மூக்கிருப்பதால் எறும்பையும் ஈசலையுங்கூடத் தின்னுவார்களா?

அன்னக்குழாய் தர்வர ஊணுடைய பிராணிகளுக்கே நீளமர்க்வும் புலாலுண்ணும் பிராணிகளுக்கு குட்டையாகவும் இருக்கும். இதுபோலவே மனிதனுக்குள் நீண்ட அன்னக்குழாய் இருப்ப... அவன் புலால் உண்பது பெரும்பிழை.

கசாப்புக்கடைகளை நினைத்தால் அது மிகவும் அருவருக்கத்தக்கதா யிருக்கின்றது. அங்கு வந்துசேரும் மிருகங்களில் நூற்றுக்கு எண்பத்தாறு ஆவது வியாதியுள்ளன. வியாதியுள்ள பிராணிகளின் புலாலை உண்பவர்கள் தாமும் வியாதிக்குள்ளாவது உண்மையாமன்ருே? சிலகடைகளில் முதல்நாள்கொன்ற பிராணியின் புலாலை மறுநாளும் வைத்து விற்பதால் வியாதிக்கு இடமுண்டாவதில் தடையென்ன?

பெரும்பாலும் மாம்ஸந்தின்னுவோரின் ரக்தம் எப்போதும் கெட்ட பதார்த்தங்கள் கலந்தனவாய் பேதப்பட்டு நிற்பதால் வியாதிக்கு இடமாகிறது. கொஞ்சம் இடமிருந்தால் ஒருநொடியில் பிரமாதமாய் முடிந்துவிடும். மற்றவர்களுக்கோ அப்படியன்று. அன்றியும் புலாலுண்போர்க்கு மந்தத்தனம் அதிகமென்பதும் எல்லார்க்குந்தெரியும்.

இதெல்லாமெப்படிப்போனாலும் போகட்டும். ஒரு பிராணியை நன்ருய்மிதித்துக்கொண்டு ஒருவன் கழுத்தை அறுக்கும்போது அது கதறுவதையும், தன்னைக் காப்பாற்றுநரில்லையா வென்று கையைக்காலை உதறிக்கொள்வதையும் கண்டு நல்லவர்கள் யாராவது ஸஹிப்பார்களா? இவ்வளவு தொந்தரைக்கு பிராணிகளை உள்ளாக்குவதாகிய புலாலுண்ணலை ஏன் கொண்டாடவேண்டுமோ? நம்முடைய கையில் ஒரு ஊசிகுத்தினல் என்னவலிவலிக்கிறது? அற்பமுள்ளுத்தைத்தாலும் என்னபாடுபடுத்துகிறது. இவ்வுலகத்தில் யாருக்குத்தான் செத்துப்போக மனம்வரும். ஏழைமையால் வருந்துகிறவர்களானாலும், சாவுக்குத்துணிந்தவர்களென்று தம்மைச் சொல்லிக்கொள்ளுபவர்களானாலும், செத்தாலும் நல்லதென்று புலம்புவோரானாலும் உலகத்தையே வெறுத்தவர்களானாலும், முற்றத்துறந்த முனிவரெனினும் கொல்லப்படுவதற் கிசைவார்களா? கொன்றபிறகு கிடந்து நாலைந்துநாழி துடிக்கும் தலையையும் உதைத்துக்கொள்ளுங் காலையும் கண்டு எப்படித்தான் மனம்பொறுக்குமோ? துணையற்றவர், திக்கற்றது, பேசவும் தற்காப்புச்செய்துகொள்ளவும் கையாலாகாதது என்றிருப்பதே காரணமாக யாரையாவது, எதையாவது கொல்லுவது நியாயமானல் இளைத்தவர்களையெல்லாம் வலியாரடிப்பது தர்மமாகி ஒருவனொருவன் அடிபட்டு யாவரும் மடியவருமே! இதென்னபாவம்! அடாடா! இதை விலக்க வழிதேடுவது நல்லவர்களுடைய கடமையன்றோ?

ஐயோ! மனிதர்களுக்கு புலால் அருந்தல் இல்லாவிட்டால் செத்துப்போவார்களென்ருவதுண்டா? தின்பதற்குவேண்டிய அளவு கந்தமூல பலதானியாதிகளும் அனுபவித்தற்கு வேண்டிய அளவு சுகமும் இருக்கும்போது எளியபிராணிகளின் உதிரத்தில் கையைத்தோய்ப்பது என்னமடத்தனம், பூமியில் வேறேதும் உண்ணக் கிடைப்பதில்லைபோல் ஏனிவ் வடாத்தொழிலிற் றலைப்படவேண்டும்? தளதளவென்றுள்ள கனிவர்க்கங்களையும் புஷ்டியும் சுகமுந்தரும் தானியவர்க்கங்களையும் தின்னும்வாயால் பிராணிகளை அறுத்து உதிரத்தைச்சொரிந்துண்ண வெட்கமாய்த்தானிராதா? புலாலுண்ணும் இயற்கையுள்ள பிராணிகளான புலி-சிங்கம் முதலியவற்றை துஷ்டமிருகங்களென்றும் கொடியமிருகங்களென்றும் சொல்லிவரும் மனிதர் உடனே அதை மறந்து, அம்மிருகங்களுக்கு அண்ணன் தம்பிகளாய், தாமும் கொடுமைசெய்வது அந்தோ! அறியாமை! புலிக்கும் கொய்யுளிக்கும் கொன்றதையே தின்ப தியற்கை-மனிதர்க்கு வேறெவ்வளவோ தின்பதற்கிருந்தும் ஏனிந்தப் பாபத்திற்காளாய் நாக்கைக் கெடுக்கவேண்டும்?

சிறிதும் அறிவற்றதும், வீடுகளிலேயே வளர்வதும், மிக ஏழையும்,
கையாலாகாததும், தற்காத்துக்கொள்ளும் யாதொரு ஆயுதமும்
இல்லாததுமான அற்பப் பிராணிகளை அனுவசியமாய்க்கொன்று
தின்ன மனிதனுடையவயிறு எப்படி இசையுமோ? பிராணிகளை
ஏன்கொல்லவேண்டும் - அவைபார்ப்பதற்கு அழகாயில்லையா? அவ
ற்றின் குரல் ஒவ்வொருமாதிரி இனியதாயில்லையா? அவற்றின் அறி
வுள்ள காரியங்கள் சிற்சில காலங்களில் வெளியாகும்போது நம்
மை ஆநந்தபரவசமாக்க இல்லையா? என்ன இருந்தும் அதையெல்
லாம் மறந்துவிட்டு சிறிது சதைதின்பதற்காக எளிய பிராணிக
ளின் நல்லுயிரை அடியோடு அதஞ்செய்யலாமா? அவை பரிதாப
மாய் அழுவதும் கையை காலை உதைத்துக்கொள்ளுவதும் கெஞ்சி
யிரக்கும் முகத்தைக்காட்டுவதும் ஐயோ கதியில்லையே என்று
கண்ணீர் சொரிவதுமெல்லாம் கொஞ்சமும் இப்புலையரின் வன்
கண்ணுக்குப் படவில்லையா? ஐயோ கொலைகாரரே! சண்டாள
ரே! இக்கொடுந்தொழில்புரிய எங்ஙனமோ உமது மனமிசையும்?
ஒருவனுக்கு ஒரு உபகாரஞ்செய்யவாவது ஒருவயிற்றுச்சோறிடவா
வது துணியாத கொடும்பாவிகள் இவ்வெளியபிராணிகளின் ஆரு
யிரை வதைப்பதில்மட்டும் எங்கிருந்து தாராளபுத்திபெற்றீரோ?
ஜீவன்களையே கொன்றுதின்னு மியற்கையுள்ள துஷ்டமிருகங்க
ளுக்கும் மனிதனுக்கும் கொஞ்சமாவது ஒத்த அவயவமுண்டா?
வளைந்து கூரியமூக்கும், வளைந்து வலுத்துக் கூரிய நகமும், கிழி
த்தெரியும் கூரிய பல்லும், தின்றதையெல்லாம் தஹிக்கும் குடலும்,
கொழுத்த சதையையும் அலக்ஷியமாய் அசைவுபோட்டுத்தின்று ஜீர்
ணமாக்குதற்குத்தக்க சூடுள்ள ரக்தமும் இல்லாதமனிதன், தன்
மெல்லிய உள்ளடங்கிய பல்லையும், அதிகமாய்க்கொள்ளாத சிறிய
வாயையும், மிருதுவான நாக்கையும், மெள்ளவே ஜீர்ணம்செய்யும்
குடலையும், தன்னியற்கையி லமையப்பெற்றும் கொடியபுலாலுண்
ணலிற் றலைப்படுவது எற்றே! எற்றே! அங்ஙனமன்று, புலாலுண்
ணும் இயற்கையுள்ளவன்தான் மனிதன்; என்றுமன்றுடும் பெரும்
பாவிகள் தமக்குவேண்டியவற்றைத் தாமே தின்னட்டுமே! கத்தி
யாலறுத்தும், தடியாலடித்தும், மழுவால்பிளந்தும், தின்னுமல் இ
யற்கையாகவே அமைந்துள்ள ஆயுதங்களைக்கொண்டு ஊனருந்தட்
டுமே! ஓனாய் - சிங்கம் - புலி இவை எப்படி தமக்குவேண்டிய புலா
லைத் தாமே கிழித்துத் தின்னுமோ, அப்படியே ஆட்டையும் மாட்
டையும் பல்லாற்கடித்திழுத்துக் கொல்லட்டும்! பன்றியின்மேல் கு
தியொன்று பாய்ந்து விழுந்து அதின்கழுத்தைத் தம் வாயால்கவ்வி உ
திரத்தை உறிஞ்சட்டும்! ஆடு-முயல் முதலியவற்றைத் தொடர்ந்தோ

டித் தமது நகத்தாலும் பல்லாலும் கிழித்தெரியட்டும்! பிறகு வேண்டுமானல் உட்கார்ந்துகொண்டு விலாப்புடைக்கத் தின்னட்டும் அப்படியுமில்லை. இதுமட்டுமோ. இயற்கையாயுள்ள ஆயுதங்களாற்ருன் தின்னமுடியாதென்ருல் கத்திகொண்டறிந்து உயிர்போக்கியெடுக்கும் ஊனை அப்படியேயாவது தின்னமுடியுமா? அதை வேகவைத்தும் உப்பு உறைப்பு புளிப்பு முதலியகூட்டியும் எண்ணெய் கடுகுமுதலிய பதார்த்தங்கள் தாராளமாய்ச்சேர்த்தும் ஊனைஸ்வரூபம்மாற்றி வாயையும் குடலையும் மெள்ள ஏய்த்துவிட்டு உட்கொள்ளும் பாவிகாள்! உமதுவயிறென்ன கூட்டங்கூட்டமாய் மிருகங்களும் பறவைகளும் விழுந்தெரியுஞ் சுடுகாடா? அப்படியாவது உங்கள்வயிற்றுக்காட்டில் எளியபிராணிகளின் இன்னுயிர் தீப்பட்டெரிவதில் உங்களுக்கு சுகமுண்டா? தக்க ஜீர்ணமில்லாமல் பலவகை வியாதிகளுக்கு மிடனுப்த் திண்டாடி அற்பாயுளாய் மாள்வீர்களே! இதுமட்டுமோ? முதலில், கடைகளில் வாங்கித்தின்று, பின்னர் தாமேகொன்று, பின்னர் எவ்விதக்கொலைக்கும் பின்வாங்காத கொடுங்கொடிய மனமுள்ளவர்களாய்த்திரிவீர்களே! பின்னர் யாரைத்தான் கொல்லப்பின்வாங்குவீர்கள்! தாய்க்கொலையும் சால்புடைத்தென்பீர்! தடையில்லை. உங்கள் கொடுமையைக்கண்டன்ரே "புலையுங்கொலையுங்களவுந்தவிர்" என்று பெரியோருரைத்தார். மருந்துக்காகவும் சேர்க்க அவசியமில்லாத புலாலை விருந்துசெய்வது எளியபிராணிகளின் தலைவிதி இருந்தவாரே.

அந்தோ! இப்பாவிகள் நியாயம்பேசவும் தமது கொடுந்தொழில் இயற்கையே என்று தப்புரைசெய்யவும் பின்வாங்கார். எல்லாம் ஆன்மாவாயிருக்கக் கறிகாய்களை யுண்பதுமட்டும் பாபமாகாதோ? அதுமட்டும் ஜீவஹிம்ஸை யல்லவோ? என்பர். அவர்கள் ஐயறிவுடன் கூடிய மனிதர்களானல் யோசித்துப்பார்க்கட்டும். எந்தமரத்திற்காவது, செடிக்காவது கொடிக்காவது உணர்வுண்டா? ஒரு அற்பப் புழுவையும் ஈர்க்கால்குத்தினல் அதை அது உணர்கிறது. இதுபோலில்லாமல் என்ன எப்படிச்செய்தாலும் சிறிதும் உணர்வில்லாமல் மரமே சும்மாயிருக்கிறபோது இவர்களுக்குத்தானு அதுஹிம்ஸையாய்ப் படுகிறது, ஹிம்ஸையென்பது ஒருவர் அல்லது ஒன்றின் உணர்வுக்கும் மனத்துக்கும் விரோதமாய்ச் செய்வதல்லவா? எந்தக் கரிகாய் பறிக்கிறபோது எந்தமரம் தனக்கு அது ஸம்மதமில்லையென்று காட்டுகிறது? ஆதலால் எந்தப்பிராணிக்கு உணர்ச்சியும் அஸம்மதமுமுண்டோ அதைக்கொல்லுவதுதான் பாபமுங் கொடுந்தொழிலுமாகும். நமது நகத்தின்மேனீட்டலை மயிர்வினைஞன் எடுக்கும்போது நமக்கு அதனல் யாதொருவலி முத

லானதுமில்லை, மனநோக்காடுமில்லை. ஆதலால் நகத்தையெடுப்பது பாபமேயன்று. வேறு பல காரணங்களைப் பார்க்கும்போது புண்யமாகவும் அது கொள்ளப்படும். மாடுகளின் கொம்புகளைச் சீவுதலும், ஆடுகளின் உரோமங்களைக் கோடைகாலங்களில் கத்தரித்தலும், ஒருபோதும் பாபமல்ல. ஸ்மரணை (அதாவது உணர்ச்சி) தப்பிப்போனகாலத்தில் குத்தினாலும் அறுத்தாலும் உயிர்களுக்கு மனவருத்தமுண்டாகாது. வைத்தியர்கள் ஏதாவது பெரிய சிகிற்சைசெய்யவேண்டி வியாதியஸ்தர்கள் மூக்கில் ஒருமருந்தைப் பிடிப்பித்து ஸ்மரணைதப்பச்செய்வதும் பின்னர் சிகிற்சைசெய்வதும் வழக்கமல்லவா? விழித்துக்கொண்டிருக்கும்போது ஒருவனை ஒருவன் ஊசியெடுத்துக்குத்தவந்தால் அவனுடம்பெல்லாம் நடுங்கும். ஆனால்தூங்கும்போது அவனை ஊசியாற்குத்தப்போனால் அவனுடம்புநடுங்குமோ? கட்புலனாலுண்டாகும் உணர்வில்லாதகாரணத்தால் உறங்குபவனைக்குத்தப்போனால் அவனுடம்பு அசையாது. இதுமாதிரியுள்ள பல நியாயங்களால் உணர்விருந்தாலே வலிமுதலிய தெரியுமென்றும், வலிமுதலியவற்றை உணரும் ஒவ்வொருபிராணியும் அப்போது தன் உடம்பை நெளிந்து கொடுக்குமென்றும் அப்படி நெளிந்துகொடாவிடில் உணர்வில்லையென்றே உணர்வுதப்பியதன்றே சொல்லவேண்டுமென்றும் விளங்குவதால் மரக்கறி கிழங்குகளைத்தின்பது பாபமேயன்று. மேலேசொல்லிய நியாயங்களால் ஆடுமாடுகளை ஸ்மரணைதப்பசெய்து கொன்றால் தோஷமில்லையோ? என்றும் பேதைகள் எண்ணுவர். அப்படியன்று. கொல்லுவதற்காகவே ஸ்மரணைதப்பச்செய்வது மஹாபாபம். ஏனெனில் அதுமோசம். கொல்லப்படுவதாகிய செய்தியில் யார்க்கும் மனநோகும் என்பதுண்மை. மரம்முதலியவற்றிலுள்ள உயிரை அதாவது அறிவும் உணர்வுமற்றுக்கிடக்கும் ஆன்மாவை, அழிப்பதோ யாராலும் முடியாது. மரமாகிய அவ்வான்மதேகத்தை என்ன செய்தாலும் அவ்வான்மாவுக்குச் சிறிதும் துக்கமாவது கஷ்டமாவது கிடையாது. ஆதலால் மரக்கறிகள்தின்பதில் பாபமேஇல்லை. மரத்தின் பழங்களையும் காய்களையும் தின்பது அம்மரத்துக்கு உபகாரமே ஒழிய வேறில்லை. ஏனெனில் அம்மரத்தின் பழங்கள் அதனடியிலேயே விழவிழ கீழே அவையெல்லாம் நெருங்கி முளைத்து தாய்மரத்துக்கிருந்த நிலவளப்பத்தைக் குறைப்பதோடு தாமும் விர்த்தியாகாமல் நிழலடியிலிருந்து காய்ந்தவியுமாதலால் மரத்தின் காய் பழமாதிகளைப்பறித்துத் தின்பதே புண்யமும், மரத்திற்கும் மனிதர்க்கும் செய்யும் உபகாரமுமாகும். ஏனெனில் மரத்தின் பழத்தைத் தின்பவன் முதலாவது தன்வயிறு நிறைந்து திர்ப்திய

டைகிருன். இரண்டாவது அவன் வெளிக்குப்போகும்போது அப்பழத்திலிருந்த அனுரூபியான ஆன்மா கீழே இரங்கி அங்கிருந்து நன்ருய் முளைக்குமாதலால் மரத்தின்பழத்தை ஓரிடத்திருந்து மற்ருேரிடம் கொண்டுபோவதற்கு கூலிமாத்திரமா யேற்பட்டுள்ளதாகிய உண்ணல் தோஷமேயன்று. பலவிருக்ஷங்கள் அநேகருக்கு ஆகாரமாகவும், அநேகரும் புண்யம்செய்வதற்குக் காரணமாகவும் இருப்பதாலேயே அவற்றை பலமுள்ளகாலங்களில் வெட்டிஞல் பாபமென்று மனுவெனும் கடவுள் சொல்லியிருக்கிருர். இன்னு மெவ்வளவோ ரஹஸ்யங்களுண்டாகையால் மரக்கறியைத் தான் தின்னவேவேண்டும். இதைப்போல் ஒருவாற்ருலுமாகாததால் ஊனைத்தின்னு தொழியத்தான்வேண்டும்.

வேறு சில பேதைகள் மாம்ஸம் நேரநேர நமதுதேகத்தில் சேருகிறதென்றும் கறிகாய்கள் மாம்ஸமாக மாறி நமதுதேகத்தில் சேருகிறதென்றும், ஆதலால் ஊனருந்துவதே மிக நல்லதென்றும் உரறுவார்கள். அவர்கள் உடற்கூறறியாப் பேதைகளேயன்றி வேறல்லர். முதலாவது, மாம்ஸமானது நேரநேரப்போய் நமது தேகத்தில் கலப்பது உண்மையே என்று வைத்துக்கொண்டாலும் அறியாமையே நிலைக்களமான ஆட்டுச்சதையும் மாட்டுச்சதையும் நமதுடம்பிற்கலந்து நமது இயற்கையைமாற்றி தடித்தனமே அன்ருேபெருகுவிக்கும். பிறகு காமக்குரோதாதிகள் நிலைத்துநின்று விர்த்தியாகுமே! பிறகு இவர்களைத்திருத்தி நல்லநடையிற் கொண்டுபோகவும் ஆளில்லாமற் போய்விடுமென்ருே? இரண்டாவது, எதாவது நமதுவயிற்றிற்குள் ஆகாரம்போகும்போது முதலில் அதுவாயிலேயே கொஞ்சம் மசியும். அத்துடன் சாளைவாய்கலந்து சுளுவாய் விழுங்குவோம். இந்தசாளைவாயில் ஒருவிதபதார்த்தமுண்டு அது நமது ஆகாரத்தில் கலந்த உடனே அங்கங்குள்ளகஞ்சிப்பசையை சர்க்கரையாய்மாற்றும். கவளம் கவளமாய் உள்ளே போகும் தீனியெல்லாம் நமது குறவளைக்குப் பின்னுலுள்ள சோறுபோக்கி (கழுத்து=Gullet) என்னும் ஒருகுழாய்வழியாய் இரைப்பைக்குள்போய்ச்சேரும். உடனே இரைப்பையின்வாய் இறுகமூடிக்கொள்ளும். அப்போது இரைப்பை நெளிந்து கொடுக்கும். இரைப்பையின் உட்புறம், நமது நாக்கின் கீழெப்படிக் காணப்படுகிறதோ அப்படியே இருக்கும். அந்தப் பளபளத்த சதைப்பூச்சில் (inner coat) அளவற்ற சிறுகுழாய்கள் கண்ணுக்குத்தெரியாவண்ணம் செறிந்து அநேகமாயிரமாயிருக்கும். இந்தக்குழாய்களிலிருந்து ஒரு மாதிரிஜலம், இரப்பைக்குள் தீனிவிழுந்த உடனே, வெளிப்பட்டுவழியும். அந்த நீர் கிட்டத்தட்ட சாளைவாயைப்போலிரு

க்கும். அதற்கு ஜீர்ணரஸம் (Gastric juice) என்றுபெயர். அது விழுந்தவுடன் தீனிமசியும். அப்போது சோறு அநேகமாய் மசிந்துபால்போலாகும். பின்னர் இரைப்பையின் ஓர்புறத்துள்ள பிலத்வாரம் (pylorus) என்னும் ஓர் ஒட்டை திறக்கும். அதுவழியாய் மெள்ளமெள்ள அன்னப்பால் வெளியாகும். ஆனால் சாப்பிடும் போது பிருதிவிரூபமானவற்றை மட்டும் உட்கொள்ளாமலே ஜலரூபமானவற்றையும் உட்கொள்ளுகிறோமல்லவா? இவையும் இரைப்பையில் கரையக்கூடியவைகளுமாய்ச் சேர்ந்து இரைப்பையிலுள்ள பன்னாடைபோன்ற தோல்போர்த்த ரக்தக்குழாய்களுள் சேர்ந்து ரக்தத்தோடு ஓடிவிடும். ஆனால் நெய்முதலிய பதார்த்தங்கள் இரைப்பைக்குள்ளேயே ஜீரணமாகிறதில்லை. அவை அன்னப்பாலுடன் கலந்து, பிலத்வாரத்தின் வழியாய் வெளிப்பட்டு குடருக்குள் செல்லுகின்றன. குடருக்குள்வந்த உடனே, ஈரலிலிருந்து ஒருகுழாய்வழியாய் பித்தநீரும், மாம்ஸகோசத்திலிருந்து ஒருகுழாய்வழியாய் சுவைநீரும்வந்து அவற்றுடன் கலக்கின்றன. அப்போது முன்னர் மசியாதிருந்த நெய்முதலியவும் மசிந்து சுத்தமாய்ப் பால்போலாகிறது. இந்த வெளுத்தரஸம் ரக்தக்குழாய்களிற் கலந்து ஓடி இருதயத்தில்விழுந்து வெளிப்படுமுன்னர் நல்லரக்தமாய் மாறுகிறது. ஆதலால் சதை சதையோடுசேருகிறதென்பது உடற்கூறறியாப்பேதைமையே ஒழிய வேறில்லை. மூன்றாவது, கறிகாய்களைப்போலில்லாமல் மாம்ஸம் சவுக்குச்சவுக்கின்றிருப்பதால் கொஞ்சத்தில் மசியாமல் பல்லுக்கும், இரைப்பைக்கும், குடருக்கும் அதிகவேலையைத் தருவதால் ஊனருந்துதல் உடம்புக்குவீண்செய்வதேதான். நான்காவது, மாம்ஸம் இறந்துபோன பிராணிகளின் சதையாகையால் அதில் என்ன வேகவைத்தபின்னுங்கூட இறந்துபோனதும், பயனற்றதுமான பல அணுக்களுண்டு. இவற்றை உடம்பிலிருந்து எப்போதும் வெளியாக்குவதே உத்தேசமாய் நமது தேகம் அமைந்திருக்க இவற்றை வெளியிலிருந்து உள்ளே திணிப்பது அந்தோ! அறியாமை.

இதுவே போகட்டும். நமக்குமுன் கொடியசெயலிற் றலைப்பட்டுள்ள இவர்கள் பார்ப்பாராகவே அன்றோ இருக்கின்றனர். "நோன்பென்பது கொன்றுதின்னாமை." என்னும் அந்தணர் விரதத்தை அழிக்கவோ இக்கொலைஞர் அவதரித்தது? "அஹிம்ஸா பரமோதர்ம:" என்று கதறும் வைதிகமார்க்கத்துக்குப் புறம்பான செயலுடைய இன்னார் என் பிறந்தனரோ! "விக்ரீணம் மத்தியமாஸோனி ஹிபக்ஷஸ்ய சபக்ஷணம் - குர்வன்னகம்யாகமனம் சூத்றப்பததிதக்ஷணத்." என்று பராசர ஸ்மிருதியில் சூத்திரர்க்

கும் ஊனுடலும் ஊனுடுவோர் கூட்டுறவும் விலக்கப்பட்டிருக்க இந்த மஹாபாபியர் என்முன் இப்படிச் செய்கிறார்களே! " யக்ஷ ரக்ஷ பிஷரசான்னம் மத்தியமாம்ஸம் ஸுராஸவம் தத்ப்ராம்மணேனாகத்வ்யம் தேவாநாஷ்னுதாஹவி: " என்று மனுக்கடவுளே பிராமணர்களுக்குக் கூடாதென ஸ்மிருதியில் முறையிடவும் இக்கொடிய புலையர் நரனையும் பலியிடுகின்றனரே! என்ற பலவிதமாய் முன்னும் பின்னும் யோசனைசெய்து ஒருவித முடிவுமில்லாமல் இந்தத்தடவை இப்படியே போகட்டும் இன்னொருதடவை பார்த்துக்கொள்ளுவோம் என்று மனவுறுதிசெய்து அங்கேயே ஒளிந்துகொண்டு அவர்கள் செய்வதையெல்லாம் பார்த்துநின்றார். அவர்களோ இதனிடையில் அந்தச் சிறுவனின் உதிரத்தை ஒரு பாத்திரத்தில் தாங்கி அத்துடன் சோறு கலந்துவைத்து, அவனுடலத்தைக் கண்டங்கண்டமாய்த் துண்டித்துக் கறிசெய்து, இரண்டையும் காளிக்குமுன்வைத்து ஏதோ சில மந்திரங்கள் சொல்லித் தோத்திரம் செய்து பிறகு நிவேதனம்செய்து நிவேதனத்தின் பெரும்பாகத்தை கழுகுகளுக்கும் பருந்துகளுக்கும் எறிந்துவிட்டு மீதியை இருவருமாய் விலாப்புடைக்க உண்டு தங்களுடன் கொண்டுவந்திருந்த பளிங்குப்பாத்திரத்தில் நிறையவைத்திருந்த மதுவையருந்தி சிவேபாஹி என்றும், குருகடாக்ஷமென்றும் கூச்சல்போட்டுத் தலைமயக்கேறி இடுப்பிலுள்ள துணிகளவிழ ஒருவரோடொருவர் ஏதேதோ பேசியும் சண்டையிட்டும் கட்டிப்புரண்டும் நிர்வாணத்துடன் மயங்கிவிழுந்து தூங்கினார்கள். கிடந்தகிடக்கையில் நீர்விட்டுக்கொண்டும், வாயிலிருந்து நுரைதள்ளியும், ஏதேதோ பிதற்றிக்கொண்டும் தூங்கிச் சற்றுத் தாழ்த்தபின் எழுந்து குளத்தில் முழுகி இருவரும் வீடுசென்றனர். இதையெல்லாம் கண்ட பெரியவர் மனநொந்து இப்படியோ நம்மவர்கள் கெடுகின்றார்கள். எவ்வுயிரினிடத்தும் மிகக் கருணையுடனிருந்து உலகத்துக்கே வழிகாட்டிகளாய், உலகினர்க்காக உழைத்து உண்மைநெறியனைத்தும் கண்டுபிடித்து யாராவது இரக்கமேலீட்டால் தந்த வுணவுகளை அருந்திக் காலங்கழிக்கவேண்டிய பிராமணர்களாகிய இவர்கள் கொலையும் புலையும் குடியும் வெறியு மாடுவது எவ்வளவு வெட்கக்கேடென்று மிக வருந்தி கண்ணீர்சொரிந்து அங்குள்ள குளத்திலேயே தானும்முழுகி அன்று, தான்கண்ட பாபச்செயல்களால் தன்னை யாதொரு பீடையும் பற்றாவண்ணம் பற்றற்றானையும் பகவதியையும் மனதிலெண்ணித் துதித்து அங்கிருந்து வெளிப்பட்டுத் தம் வழிச்சென்றனர்.

அதிகாரம்—ரு.

" அரும்பய னாயு மறிவினர் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்."—குறள்.

வித்துவானே யானாலும் விதிப்படித்தானே நடக்குமாதலால் பெரியவர் கையால் வெட்டுண்டொழியாமல் கிராதகத்தொழிலின ருய்ந்தனர். அவர்களிருந்த இடத்திலும் தாமிருப்பதுபிழையென் அப் பெரியோரும் வேற்றிடம் சென்றனராதலின் நாமுன் அவர்க ளைவிட்டு பிரேமநாதசர்மாவைத் தொடர்வோமாக.

மிகத் தேர்ந்த அறிவினரைப்போன்று உலகினர்க்குத் தன் மேனியின் விரிசோதியால் நலந்தருங் கதிரவன் இந்திரன் திசை யினின்றும் மெள்ள எழுந்து கொஞ்சதூரம்வந்து நன்றாய்க்காய்ந்த ஓர்நாள் தயாநாதசர்மா காலையிலெழுந்து கழனிகட்குச் சென்று கரும முடித்துக்கொண்டு வீடுவந்துசேர்ந்தார். அத்தருவாயில் அவ்வீட்டுக்குள் ஓர் உபர்தானம்வாங்கும் அந்தணனும் நுழைந்தார். அந்தணனைக் கண்டதும் தயாநாதசர்மாவுக்குத் தன்னை யறியாமல் ஓர்வித ஸந்தோஷமுண்டாய், " ஐயா! நீரெவ்விடம்? உம்முடைய பெயரென்ன? உம்முடைய குரு யார்? உம்மைக்கண்டு எனக்கு ஏதோ ஓர்வித அச்சமும் அடக்கமும் மரியாதையும் உண்டாகின்றது. உமது முகமோ அறிவுபிறந்த இடம்போலவும் விளங்குகின்றது. உமது வாயினின்றும் வெளியாகும் வேதமோ ஒன்றுமறியாத எனக்கும் எப்படியோ கடவுளிடம் அன்பைப்பெருக்குகின்றது. உம்முடைய நடையும் குறலும் இவ்வுலக இன்பத்தைப்பழித்து நம்மாலென்ன இருக்கின்றது என்று தற்போதமிழக்கச் செய்கின்றது " என்று பலவாறாகச்சொல்லி வினவிக்கொண்டே இருக்கும்போது பிரேமநாதசர்மா அங்குவர, வந்த அந்தணன் அவனைப் பார்த்து " பையா! நீ என்னசுவடி படிக்கின்றாய் " என், சிறுவனும் " என்னை இன்னம் பள்ளிக்கூடத்தில் போடல்லை " என்றான். உடனே அந்தணன் " அடாடா! அப்படியா! என்னையா, உம்மைப்பார்த்தால் பெரிய பிரபுவைப்போல் காணுகிறது, இந்த ஊரில் தங்களுடையதாகவே எழெட்டுவீடுகளிருக்கின்றன. என் காதுக் கெட்டியவரையில் இவ்வூரிலுள்ள மீதி யர்வருடைய உடமைகளும் சேர்ந்தெவ்வளவோ அதுபோல் பதின்மடங்காஸ்தி உமக்கிருப்பதாகத் தெரிகிறது. படிப்பிப்பதைவிட ஒருவனுக்கு, அதிலும் மகனுக்கு, செய்யும் உபகாரம் வேறென்ன இருக்கின்றது?

" தந்தை மகற்காற்று முதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்.—என்று நாயனார் சொல்லியிருப்பது தங்கள் காதி லெட்டியதில்லையோ?

‘ அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு மாதரவால்
கொள்ளிக்கும் பட்ட் கடனுக்கு மேயெனைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்தி லேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைக்கில னேதந்தை யாகிய பாதகனே.’—என்றும்,

‘ வாலறிவின்—மிக்குயர்ந்தோர் பாலிருந்தேன் வீரன்னைக் கூட்டத்துக்-கொக்கிருந் தன்ன குனிந்து ’—என்றும் ஒரு சிறுவன் தன் அப்பனை நொந்துகொண் டழுதகதையாவது தாங்களறியீர்களா ?” என்று தயாநாதசர்மாவைக் கேட்க அவர் தன் பெண்சாதி முன்னமேயே சொல்லிய விஷயங்களைத் தெரிவித்து நின்றார்.

வந்த மறையோனும் தன் மூக்கில் விரலைவைத்து, “ ஆ ! நன்றாயிருக்கின்றது. ஒரு பெண்பிள்ளை சொல்லியதைக் கேட்டு மயங்கிப்போனீர்களே ! ஸபாஷ் ! பள்ளிக்கூடத்துக்கும் குழந்தைகளை அனுப்பலாமா என்று என் பெண்சாதி சொன்னாள் ஆதலால் என்பிள்ளையைப் படிக்கவிட இல்லையென்று சொல்ல உமது நாக்கு எப்படித் துணிந்ததோ ! உமது மைத்துனன் குப்பன் பள்ளிக்கூடத்தில் வாசித்ததாகச் சொன்னீர்களே அவனது தந்தை தாயார் செய்த காரியத்தைத் தாங்களேன் செய்யலாகாது ? அதுவே போகட்டும். தங்க ளில்லாள் சொல்லியது உண்மையாகவோ, அல்லது வஞ்சகத்தாலோ என்றும் அறிந்திலீர். நீரென்செய்வீர். ‘ ஏகாதேசித்தோசை, இளையாள்மேலே ஆசை ’ என்பது பொய்க்குமா ? நல்லறிவுடைய கைகேயிபுமன்றோ தன் மூத்தாள் மகனைத் துறத்தியடித்தாள். துருவனுடைய இளையதாய் செய்த விஷயமும் கேட்டிலீர்போலும். படிப்பதின்பெருமை தெரியாவிடில் புருஷத்தனத்திற்கிளப்பமன்றோ ? படிப்பாவதென்ன ? அதனாற் பெறுமறிவாவதென்ன ? மனிதராகிய நாம் இவ்வுலகத்தில் வாழ்கின்றோம். இதில் எவ்வளவோ பொருள்களிருக்கின்றன. அவற்றுடன் பழகும் நாம் அவை இன்ன தன்மை உடையன என்று அறியவேண்டுவதவசியம். இல்லாவிடில் அவற்றால் நன்மைவந்தாலும்வரும், சேடுவந்தாலும்வரும். கூரியகத்தியொன்றை யெடுத்துப் பழகுவோன் அதின் குணத்தையறியாமலிருந்தால் அதினால் வெட்டுண்ண நேரிடுமே. அதுபோலவே தீயுடன் பழகும் ஒருவன் அதின் குணத்தையறியாமற் பழகினால் ஓர்பொழுது சுடுபடுவானன்றோ ? அப்படியே விஷத்துடன் பழகும் ஒருவன் அதின் குணமறியாவிடில் இறந்துவிடநேரிடுமே. அதுபோலவே சாவாமருந்தே தனக்கெதிரிலிருந்தாலும் அதன்பயனடையாமற் போகவருமே. ஆதலால் மனிதர்கள் எவற்றுடன் பழகுகின்றார்களோ அவற்றை அவசியம்

அறியவேண்டும். இந்த அறிவு ஜனங்களுக்கு இன்றியமையாதது. படிப்பதும் பள்ளிக்கூடத்திற் சேர்வதும் இந்த அறிவைப்பெறவே தான் நாம் யார் நாமிருக்கும் இந்த உலகம் எப்படி உண்டாயிற்று. அதற்கும் நமக்கும் எவ்விதச்சேர்க்கை. அதிலுண்டாகும் மழை இடி மின்னல் இவற்றால் நாமடையும் லாபநஷ்டமென்ன. அவையெப்படி யுண்டாகின்றன. நமது தலைக்குமேல் கறுத்து அகன்றுள்ள இடத்தில் நக்ஷத்திரங்களும் சந்திர சூரியர்களும் இருக்கின்றவே. அவற்றிற்கும் நமக்கும் என்ன பிணை. அவைகள் அடிக்கடி இடம்மாறிவருவதால் நமக்குள்ள நன்மைதீமையென்ன. என் இடம்மாறுகின்றன. மரத்தில்பழுக்கும் பழமெல்லாம் கீழேவிழுவதை எவ்வளவோ காலங்களில் கண்டிருக்கின்றோம், அதுபோலவே சந்திரசூரியர்கள் என் கீழேவிழுவதில்லை. மரத்தின்பழம் மட்டும் என் கீழேவிழுகின்றது. இந்நிலம் சில இடங்களில் நல்ல மண்ணாகவும் சில இடங்களில் பருக்கைக்கற்களாகவும் சில இடங்களில் மணலாகவும் சில இடங்களில் சதுப்புநிலமாகவும் இருப்பதேன். நமதுணவுக்கேற்ற பொருள்களெவை. அவற்றை எப்படி எந்த உதவியால் விருத்திசெய்வது? நமக்குபயோகமாக உள்ளவற்றில் எவ்வளவை எவ்விதம் செலவிடவேண்டும். அநேகமாக உள்ள பொருள்களை யார்யார் எவ்வளவு எந்தக்கணக்காய்க் கொள்ளவேண்டும். மனிதர்கள் எந்நிலைமையிலிருந்து இப்படியானார்கள். அவர்களடையும் சந்தோஷம் துக்கம் இவற்றின்முறையும் காரணமுமென்ன. நமதுடம்பு எப்படி இருக்கிறது. எந்த இடத்திலுள்ளவர்கள் எப்படிச்செய்து என்ன நன்மை தீமை யடைந்தார்கள். நாடெங்கும் ஸௌக்யமாய் வாழவேண்டுமானால் என்னவேண்டுவது. எங்கே மலையிருக்கிறது. எங்கே நதியிருக்கிறது. பூகம்பம் எரிமலை இவற்றின்காரணமென்ன? கடவுளென்று ஒருவனைப்பற்றி எல்லா ஊராரும் எல்லாக்கொள்கையாரும் பேசுகின்றார்களே, அவரால் நாமடையும் நன்மைதீமையாது. அவர்மாட்டெவ்விதம் நாம் நடந்துகொள்ளவேண்டும் என்பது முதலாகிய விசாரணைகளைச் செய்து தெளிந்து அதற்குத்தக்கபடி நடந்துகொள்வதற்காகவே படிப்பும் பள்ளிக்கூடங்களும் ஏற்பாடாயிருக்கின்றன. உயிர்வாழ்க்கைக்கின்றியமையாத எல்லாவிஷயங்களையும் வருந்திவருந்திக் கண்டுபிடித்து நமது முன்னோர்கள் கணக்குவழக்குச் சொல்லமுடியாத அவ்வளவு புஸ்தகங்களை எழுதிவைத்திருக்கின்றார்கள். இவ்வளவும் நம்மெல்லாருக்குமென்றே இரக்கத்தால் வைத்துப் போயினர். அவர்களெழுதியது குருட்டுத்தனத்தாலல்ல. தம்முடைய ஸொந்த அனுபவத்தாலும் தமது முன்னோரெழுதிய புஸ்தகங்களைப்

படித்ததாலுமே அப்படிச்செய்யலாயிற்று. அவர்கள் படிப்பதற்காக எவ்வளவோபாடுபெட்டு எவ்வளவோ உபாத்யாயர்களண்டை எவ்வளவோநா ளூழியம்செய்து அடிபட்டுக் கற்ற கல்வியை நமக்கெல்லாமென்று மிகக்கருணையுடன் விட்டுப்போயினர். தம்முடைய ஸொந்த அனுபவத்தாலேயேமட்டும் உயிர்வாழலாமென்பது அரிது. ஒருவன் எவ்வளவோ அனுபவித்து அனுபவித்துப்பார்த்து ஒருவிஷயத்தை அறிவதற்குவேண்டிய ஆயுளும்கிடையாது. ஆதலால் தனக்கு முந்தி இருந்தவர்களது அனுபவத்தை அறிந்து அதன்படி நடக்கவேண்டும். நமக்குமுன் சென்றவர்களது அனுபவத்தை நாமறியவேண்டுமானாலும் நம்முடைய அனுபவத்தை நமக்குப் பின்வருபவர்கள் அறியவேண்டுமானாலும் வரிவடிவாகிய பாஷையால் முடியுமேயல்லது வேறில்லை. பள்ளிக்கூடங்களில் இந்தவரிவடிவான பாஷையில் எழுதியுள்ள புஸ்தகங்களை படிக்கச்செய்கிறார்கள். ஆதலால் படித்தவர்களே எல்லா நலமு மடைவார்கள். அவர்களே தம்முன்னோ ரனுபவத்தின் பயனைப் பெறுவார்கள். ஆகையால் உமது குழந்தையையும் படிக்கச்செய்யவேண்டும். பள்ளிக்கூடத்தி லேதாவது ஊழல்களிருந்தால் அவற்றைத் திருத்துவதெளிது. படியாமல் மூடனானவனை நல்லவழிக்குக் கொண்டுவருவதரிது. பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவேகூடாதென்று தங்கையில்லாள் சொன்னாளென் றீர்களே. படித்தபேர்களையும் படியாதபேர்களையும் ஒப்பிட்டுப்பார்த்து எதனால் பெரும்நஷ்டமென்று கவனித்தால் யார்தான் குழந்தைகளைப் படியாமல் மூடர்களாக்குவார்கள். படியாதவன் துன்பப்பட்டுயிர்வாழ்வான். படித்தவனோ தன் அறிவைக்கொண்டு இன்பப்பெருக்கடைவான். படியாதவன் எப்போதும் தீராச்சந்தேகப்பட நேரிடும். படித்தவன் ஒவ்வொன்றின் காரணங்களையும் நன்றாய்க் கண்டுபிடித்து தைரியமாயிருப்பான். படிப்பு எப்போதும் மனதுக்கு ஆனந்தம் தரும். படித்தவன் இழிதொழிலிற்செல்லான். படியாதவனுக்கு இன்னது மேலானகாரியம் இன்னது அவமானந்தருமென்று தெரியாதுழல்வன். பொறையுடைமை, இன்சொல், வாய்மை, தீவினையச்சம், அன்பு, அடக்கம், கொல்லாமை, கள்ளாமை, பிறனில்விழையாமை, ஈகை, சுற்றந்தழுவுதல், சேரிடமறிந்துசேர்தல், அவையடக்கம் முதலிய நற்குணங்கள் படித்தவற்கே உண்டு. படித்தோர் ஒவ்வொன்றுக்கும் ஓர் காரணந்தேடும்போது படியாதாரோ பேய் பிசாசுகளின் செயலென்று ஒவ்வொன்றையுமஞ்சுவார்கள். படித்தவனே தன்னை மற்றவர்கள் வஞ்சியாவண்ணம் ஜாக்ரதையாயிருப்பான். படித்தவனே மற்றவர்களை யடக்கியாள்வான். படித்தவனே நிறைந்து

ஆனந்தத்தை அடைய வழிதேடுவான். படியாதவன் அற்பஸந்தோஷமடைந்து காமாதிகளாற்கெட்டு உயிரைக்கெடுத்துக்கொள்ளுவான். படிப்பில்லாதவன் எதற்கும் அழுகைமூஞ்சியா யிருப்பான். படித்தவன் தனக்கும் மற்ற எல்லாருக்கும் வழிகாட்டுவன். படியாதவன் தானும் பொல்லாதவழியிற்சென்று தீங்கடைந்து தற்சேர்ந்தாரையுந் துன்பக்கடலு ளழுத்துவான். படித்தவனுக்குமேலேயே செல்வதிலும் தன்னையும் உலகத்தையும் ஆகாராதிகளையும் மறந்து ஆனந்தமாய்ப் போதுபோக்குவதிலுமே கண்ணிருக்கும். கற்றோர் பிறர் கொள்ளையிடக்கூடிய கலனை வேண்டார்கள். மற்றோரோ பொன்னாலும் வெள்ளியாலும் நகைக ளணிய ஆசைகொண்டு அவைகாரணமாகவும் எப்போதாவது துன்புறுவர். கற்றோர்க்குத் தன்னூரென்றும் அயலூரென்றும் கிடையாது எங்குசென்றாலும் புகழடைவார்கள். கல்விப்பொருளைக் கொள்ளையிட யாராலுமாகாது. அது கொடுக்கக்கொடுக்க வளருமேயொழியக் குறையாது. தாயாதி பங்காளிகளால் வழக்குச்செய்ய இடந்தராது. கறையான் செல்லு முதலியவற்றால் அரிப்புண்டு கல்விப்பொருள் அழியாது. கல்விப்பொருள் தீயிலெரியாது. தண்ணீரில்முழுகி யழியாது, கரையாது, காற்றடித்துப் பறந்துபோகாது. எங்காவது தூக்கிச்சென்றால் வலிக்காது. நெடுநாளாயிற்றேயென்று மக்கிப்போகாது. கல்விப்பொருளோ எப்போதும் ஸ்வாதீனத்தில் ஆசையைப்பெருக்கும். அஃதில்லாமையே அற்பபுத்தியை வெளிப்படுத்திக்கொண்டு இழிதொழிலுக்கு அனுப்பி கெஞ்சிக்காத்து நாய்போல் வயிறுவளர்க்கச்செய்யும். கல்வி இன்னும் எவ்வளவோ பெரும்புகழுடையது. அதை ஸாவகாசமாய்ச்சொல்ல முடியுமேயல்லது இப்படி திடீரென்றுசொல்ல முடியாது. ஆதலால் உமது மனைவிசொல்லைக்கேட்டுச் சிறுவனைப்பாழ்செய்யாமல் உடனே பள்ளிக்கனுப்ப வேண்டும். 'கற்கைநன்றே-கற்கைநன்றே-பிச்சைபுகினுங் கற்கைநன்றே - கல்லாவொருவன் குலநலம்பேசுதல்-நெல்லினுட்பிறந்த பதராகும்மே'' என்று பண்டிதர்கள் சொல்லுவதால் படிப்பில்லாவிடில் உமது செல்வச்செருக்கு யாதொருபயனுமடையாது. 'அறிவுடையொருவனை யரசனும்விரும்பும்' என்பது நீதிமொழி. நாற்பாற்குலத்தின் மேற்பாலாயிருந்தும் உமது மைந்தனைப் படிப்பிக்காவிடில் அவனைவழியொடுபோகும் கீழ்ப்பாலானும் கீழாகவேஎண்ணுவான். படியாத மூடப்பிள்ளையைத் தம்மசிறுவரென்று சொல்லுவதைவிடப் பிள்ளையேயில்லாது ஏமாந்திருப்பது மேன்மை. அற்ப வாழ்நாட்களையுடைய மனிதர்க்கு உறுதுணையாவது கல்வியேயாம். அதுவே அறஞ்செய்யப்புத்திதரும். பொருளீட்டவேண்டுமானாலும் கல்

வித்துணை இன்றிமுடியாதது. ஆதலாலேயே 'எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்'; 'எண்ணெழுத்திகழேல்', 'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு' என்று பெரியோர்கள் சொல்லிவிட்டார்கள். எவ்வளவோ துன்பங்களுக்கும் தீச்செயல்களுக்கும் காரணமாகிய பிறப்பற்று மோக்ஷமடையவேண்டுமோனால் படிப்பின்றி யமையாது. கற்ருேரோடு போதுபோக்குவதே யாவர்க்கும் இன்பந்தரும். யாவருடைய ஐயத்தையும்போக்கி அவரவர்க்காவது கூறக் கற்ருேரே அறிவார். கற்ருேர்க்கே யாவரும் எவ்வித உதவியும் மரியாதையும் செய்வார்கள். படித்தவர்களுக்குள்ள பெரும்புகழ் அவர்களிறந்தபின்னும் போகாது. 'கற்ருேர்பெருமை கடலினும் பெரிது' என்பது நீதிச்சொல். கல்வியோ 'தொடங்குங்கால் துன்பமாய் இன்பம்பயக்கும் மடங்கொன் றறிவகற்றும்' என்று பெரியோர் அறுதியிட்டுரைக்கின்றனர். 'பெறுமவற்றுள் யாமறிந்ததில்லை, அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற' என்று பொய்யாமொழியாரு முறைத்தார். ஆதலின் உமது மைந்தனை இக்கணமே நல்ல ஆசானைத்தேடி அவரிடமே அடைக்கலமாய் விட்டுவிடுவீராக" என்று உபதேசம்போலவும் கட்டளைபோலவும், நயமாகவும் நெடுநேரம் படிப்பின் பெருமையைப் புகழ்ந்துரைத்தார்.

சித்திரத்தில் எழுதிய பதுமைபோல் கொஞ்சமும் அசையாமலிருந்து அதிககவனத்துடன் இதையெல்லாங்கேட்ட தாயாநாதசர்மா தெளிவடைந்து தான் தன்மகனைப் பள்ளிக்கூடத்துக் கனுப்பாதது பிசகுதானென்றும், தன் பெண்சாதிசொல்லியது நியாயமன் றென்றும் தீர்மானித்து இன்னுமேதாவது வாயாடவேண்டும் என்ற ஆசையால் பெரியவரைப்பார்த்து, "நீங்கள் சொன்னது ஸரித்தான். குழந்தைக்குக் கொஞ்சநாள்கூடப் போகட்டுமே. இப்போது படிப்புக்கென்ன அவஸரம்" என்று சொல்ல, அவர் அது கூடாதென்று மறுத்து, "இளமையிற்கல்" என்னும் நீதிமொழியை ஆதாரமாய்க்கொண்டு நெடுநேரம் புத்திகூறினர்:—"படிப்பவர்க்கு எந்தமாதிரி இடையூறும் வரலாகாது. தன்பாடத்தைத்தவிர வேறெதற்காகவும் எள்ளளவு கவலையும் இருக்கக்கூடாது. சோற்றுக்கென்ன செய்வோமென்றும், புத்தகத்திற் கென்னசெய்வோமென்றும், வீட்டுவேலையையும் பள்ளிக்கூடத்து வேலையையும் எப்படி ஒருவனே பார்க்கப்போகிருேமென்றும் கவலைவந்துவிட்டால் மனதுபடிப்பைக்கவராது. மனதின்வாடிக்கையே எப்போதும் ஏதாவதொன்றில் ஆழ்ந்திருப்பதுதான். நாளைக்குத் தலைபோகுமென்றுதெரிந்த ஒருவனுக்கெதிரில் கந்தர்வனேவந்துபாடி

னூலும் எப்படி காதுகேளாதோ, யாவரும் தம்மைமறந்து அசையா மலிருந்து கேட்கும்படி ஒருவன்பாடும்போது எதிரில்வந்துள்ளவே ற்றுப்பொருள்கள் எப்படிக்கண்ணில் படாதோ அப்படியே வேற் றுவிசாரமடைந்தவனுடைய மனது பாடத்தில் செல்லாது. இந்த விசாரமெல்லாம் சிறுபிள்ளைகளுக்கு விசேஷமாய்க் கிடையாது. அநேகமாய் எல்லாச்சிறுபிள்ளைகளுக்கும் யாராவது ஒருகாவலன் இருப்பது வழக்கம். ஆதலால் சிறுபிராயத்தில் தான் கல்வியை யா வரும் கற்கவேண்டும். படிப்புக்கு வேறு இடையூறுகளும் உண்டு. அநேகமாய்கள்ளுக்குடித்தல், மானம்பாராட்டல், வேசையரிடத்து ஆசைகொள்ளுதல், திருடிப்பிழைத்தல், நோய், முன்கோபம் கொ ள்ளுதல், எப்போதும் தூங்குதல், இரக்கமின்மை முதலிய பலவும் சிறுபிராயத்தில்கிட்ட வழிவராது. இளமையில் யாவருடையபுத் தியும் சற்றேறக்குறைய ஒருமாதிரியாகவே இருக்கும். பிறகு பழ கும்பழக்கத்துக்குத் தக்கபடி புத்தியுண்டாகும். 'நிலத்தியல் பால் நீர்திரிந் தற்றாகு மாந்தர்க்-கினத்தியல்ப தாகு மறிவு' என்று புலவர்கூறினர். சிறுவயதில் உள்ளவர்களுடைய மனதை இள மர த்தைப்போல நமது விருப்பத்தின்படியே திருப்பலாம். ஆற்றும ணலின்மேல் வைத்த அடி எப்படிப்பதிந்து மனிதருடையது, மாட் டினது, நரியதுஎன்று சொல்லமுடியுமோ அப்படியே சிறு பிராயத் தின் பழக்கத்தைக்கண்டு இன்னவிதம் புத்தி போயிருக்கிறதென் றறியலாம். படிப்புக்குத் தூண்டுகோல்போன்ற சுருசுருப்பு சிறு பிராயத்திலேயேதானுள்ளது. வயதாகவயதாக ஓய்வும் அஸ்வா ரஸ்யமும் சோம்பேறித்தனமும் வீண்பேச்சில் ஆசையும் உண்டா கு மாதலால் சிறுவயதிலேயேதான் கல்வி கற்கவேண்டும். தொட் டிலின்பழக்கம் சுடுகாடுமட்டுமென்னும் பழமொழிப்படியே இளமை யில் யார்க்கும் கவனம் ஆழ்ந்திருக்கும். இளமையிற்படித்தது எப் போதும் மறவாமலுமிருக்கும். சிறுவயதி லுள்ளவர்க்குத்தான் யா வரும் இசைந்துபாடம்சொல்லுவர். வயதானவர்க்கென்றால் சொல் லிக்கொடுப்பவர்களும் கொஞ்சம் மேன்போக்கா யிருந்துவிடுவர். இன்னும் எவ்வளவோ சொல்லலாம். நானென்ன இப்போது படி ப்புவிஷயத்தைப்பற்றி பிரஸங்கிக்கவா இங்குவந்தேன். அல்லது எனக்குத்தான் என்னதெரியும். 'பிச்சைக்குவந்த பிராமணா பெரு ங்காயச்சொப்பைக்கண்டாயா' என்பதுபோல் பிச்சைக்குவந்த இ டத்தில் எவ்வளவுதான் நீர் கேட்பது ?"

நன்றாய் இதையெல்லாம் கேட்டுவந்த தாயாநாதசர்மா "சரித் தான். இந்தஊரிலேயோ பள்ளிக்கூடம் கிடையாது. அடுத்தகிராம த்துப் பள்ளிக்கூடத்துக்கு குழந்தையை அனுப்பினால் உடம்பெத

ற்காகும், நாலுநாளில் செத்துப்போவானே" என்று வெளிப்படச் சொல்லினாளெனினும் ஐயோ பிராம்ஹணர் இன்னும் கொஞ்சம் சொல்லமாட்டாரா என்று மனதார ஆசைகொண்டார்.

வந்தமறையோர் அப்படியொன்றும் பையனுக்குக் கெடுதிவராதென்றும் தூரதேசத்தில்போய்ப் பழகினால் எவ்வளவோ லாபம் வருமென்றும் நடப்பதினால் காலுக்கு மிகநன்மையென்றும் எண்சாணுடம்பில் காலுக்கே அதிகவேலையிருப்பதால் அது வலுவாக இருக்கும்பொருட்டு காலைமாலைகளில் நடப்பது அவசியந்தானென்றும் பெரியவர்களெல்லாம் எப்போதும், நடப்பதில் பிரியமுள்ளவர்களென்றும் அப்படி நடந்து திரிவதில் இஷ்டமில்லாவிட்டால் உள்ளூரிலேயே பாடசாலை ஏற்பாடுசெய்யவாவது வேண்டுமென்றும் சொல்லிக்கொண்டேவரும்போது கடுமுகி அம்மாள் அங்குவந்தாள்.

அவளைக்கண்டு தயாநாதசர்மா "நம்மபிரேமனைப் பள்ளிக்கூடத்தில் சீக்கிரம்போடவேண்டும். நீசொன்னது அவ்வளவுயுக்தமாயில்லை. இந்த மஹான்சொல்லுகிறதைக் கேள்" என்று சொல்ல, அவளும் "நீங்களெல்லாம் ஒரு சாதிதானே. ஒருகூடை செங்கலும் பிடாரியென்று தெரியாதா. பத்துமாஸம் சொமந்தபெருக்குன்னா பிள்ளைவருத்தம் தெரியும் நான்சொல்லவேண்டியதைச் சொல்லியாச்சு. நல்லவாத்யாரா இருந்தா ஒருவேளை தேவலையெம்பேன். ஒங்க பிராமணனைத்தான்கேளுங்களேன். எப்பேர்ப்பட்டவாத்யார்கிட்ட கொழந்தேகளை அனுப்போணும்" என்றாள். வந்தமறையோரிடம் யாவர்க்கும் ஒருவித அச்சமும் அடக்கமும் உண்டாயினமையால் கடுமுகி முன்போல அதிகமாய்ப்பேசாமல் நிறுத்திவிட்டாள்.

பெரியவர் ஆசிரியனது இலக்கணத்தை பின்வருகிறபடி சொன்னார்:—"நல்லகுலத்தில் பிறந்தவனும் கருணைநிறைந்தவனும் தெய்வபக்தியுள்ளவனும் பல மேன்மைகள் விளங்கப்பெற்றவனும் எண்ணிறந்த நூல்களை ஐயந்திரிபறக்கற்று அடங்கித் தெளிந்தவனும் எதாவது ஒருவிஷயத்தை எடுத்துச் சொல்லும்போது சொற்சுவை பொருட்சுவை நிறைத்துச்சொல்லும் வல்லவனும் உலகத்தோடொட்டி நடப்பதை யறிந்தவனும் ஆன ஒருவனே உத்தம ஆசிரியனாவான். இவனிடம் படிப்பவர் எல்லாப்புகழும், ஞானமும் தடையின்றிப் பெறுவர். இவ்வித ஆசிரியர்கள் பிறராலறியமுடியாத கல்வியறிவின் பெருமையுடையவர்கள். பெரியவாதஞ்செய்ய தம்முடன்யார்வந்தெதிர்த்தாலும் சற்றுங் கலங்காத வலிமையுடையவர்கள். தமது மாணாக்கர்கள் அறியாமையாற் செய்யும் பிழைகளைப் பொறுத்தாள்வார்கள். இவர்களிடம் படிப்பவர்கள் எவ்வளவு

முயன்றார்களோ அவ்வளவுக்குத்தக்கபடி பலனடைவது நிச்சயம். இவ்வாசிரியர் கரைகாணமுடியாத ஆழ்ந்த அறிவுடையவர்களாதலால் நெடுந்தூரத்திலுள்ளவர்களும் இவருடையபுகழை அறிய இடமுண்டாகும். 'பிறன் மனைக்கே பீடழிந்து' நிற்கும் பேதையனைப்போலிராமல் பரநாரி ஸோதரர்களாய் நிற்பாராதலால் இவர்களை 'தெய்வும் திசைநோக்கிக் கைதொழும்' மாணாக்கர்களுக்குள்ள சந்தேகவிபரீதங்களைத் தீர்க்கும் வல்லமையும் தமது மாணாக்கர்கள் ஒருவரோடொருவர் வாதுசெய்யுங்காலத்து நடுநிலைமையும் இவர்களிடம் குடிகொண்டிருக்கும். தமது மாணாக்கர்களின் பிற்காலத்தின் பெருமைப் பேற்றுக்கு இவர்களேகாரணம். இவர்களெப்போதும் முகமலர்ச்சியுடனிருந்து எதற்கு மஞ்சாததீரர்கள். இவர்கள் தங்கள் மாணாக்கர்களுக்குப் பாடம்சொல்ல உரிய மேன்மையான்காலத்தையும் தகுந்த இடத்தையும் நன்றாய் ஆராய்ந்து மேலான மணையிலிருந்து தன் வழிபடுகடவுளை மனதாறவாழ்த்தி தான் சொல்லுவதன்முன் இன்னதுதான் சொல்லப்போகின்றோமென்று வரையறுத்துத் தீர்மானம்செய்துகொண்டு அவசரப்படாமலும்தூங்கிவழியாமலும் கோபமில்லாமலும் வேற்று விஷயங்களில் மனதைச்செலுத்தாமலும் பிள்ளைகளிட மன்புமிகுந்து முகமலர்ச்சியுடனிருந்து எவன்மனம் எவ்வாறு அறிவடையுமோ அவ்வாறே பாடம்சொல்லுவார்கள். பிறர் அறியும்வகையால் பாடஞ்சொல்லத்தெரியாதவனும் கீழ்க்குணங்களுடையவனும் பிறர் கல்வியறிவையடைவதில் பொறாமையால், தனக்குத்தெரிந்ததைச் சொல்லாமல் மறைப்பவனும் பொருளாசை பிடித்தவனும் தனக்குத்தெரிந்த உண்மைப்பொருளை மறைத்துப் பொய்ப்பொருளைக்காட்டி வஞ்சிப்பவனும் கேட்பவர்கள்பயந்து நடுநடுங்கும்படி பேசுபவனும் ஆசிரியனாகக் கொள்ளப்படத்தக்கவனன்று. எந்தெந்தப்பருவத்தில் எப்படிச்சொல்லவேண்டுமோ அதைவிட்டு முன்சொல்லவேண்டுவதைப்பின்னும் பின்சொல்லவேண்டுவதை முன்னுமாக முறைதப்பிப் பாடஞ்சொல்லுவோனிடம் பிள்ளைகளை அனுப்பலாகாது. தாம் சொல்லுவதைப் பிறரறியும்வகையாற் சொல்லாமல் தமது கல்வித்திறத்தைக் காட்டுவதே காரணமாகச்சொல்லுபவரிடம் கல்விகற்கலாகாது. "சொல்லுக சொல்லிற் பயனுடையசொல்லற்க - சொல்லிற் பயனில்லாச் சொல்" என்பதையறிந்தவரே நல்ல உபாத்தியாயர்.

இவ்விதம் வரிசையாய் உபாத்யாயர்களுக்கு இருக்கவேண்டுவதும் இருக்கக்கூடாததுமான குணதோஷங்களைச் சொல்லியபோது கடுமுகி "என்னமோம்மா நீங்கசொல்லரது விசித்திரமாத்தா

னிருக்கு. இந்தமாதிரி வாத்யாரும் கெடயாது. இந்தமாதிரி வாத்யார் ஆப்பட்ரவளாக்கும் நம்மகொழந்தயைப் படிக்கவய்க்காதும் அழகன்னு. இத்தனை தூரம் பேச்சுப்படிச்சாரே இந்த பிராமணன். இவர்தான் இருந்து சொல்லிவைப்பாரா?'' என்றாள்.

இதையெல்லாம் கேட்டிருந்த பிரேமநாதனும் இவரிடமே படிக்கவேண்டுமென்றும் இவரைவிட்டு அரைநொடியும் பிரியக்கூடாதென்றும் எண்ணி தன்தந்தையின்காதில் மெதுவாய் ஏதோ சொன்னான். அவரும் அதேமாதிரி விருப்பமுடையவராதலால் வந்தபெரியவரை அடிவணங்கி "ஐயா! உங்களை ஸாதாரண உபாதானப்ராம்ஹணனென்றிருந்தேன். உங்களுடைய வித்வத்விஷயம் அபாரமாயிருக்கிறது. பெரியமனசுசெய்து தாங்களேயிருந்து என்குமாரனுக்கு பாடம்சொல்லவேண்டும். அதற்கு ஒரு ஆக்ஷேபணையும் சொல்லக்கூடாது. இதுவரையில் சொன்ன உபாத்யாயருடைய லக்ஷணமவ்வளவும் தங்களிடமே நிறைந்திருக்குமென்று தோன்றுகின்றது. தங்கள் வாக்கின்சாதுர்யத்தைப் பார்த்தால் ஸரஸ்வதியே புருஷாவதாரம் செய்தாளோ என்றும் பிருஹஸ்பதியேதான் நேரவந்தாரோ என்றும் எண்ணச்செய்கிறது. குழந்தைக்கும் உங்களிடத்திலேயே படிக்கவேண்டி அதிக இச்சை இருக்கிறது. எந்தமாதிரி ஸௌகர்யம்வேண்டுமென்கிறீர்களோ அதெல்லாம் செய்துதர நானும் தயாராயிருக்கிறேன்,'' என்ன பெரியவரும் சற்று மனமியைந்தாற் போலும், தான் இம்மாதிரிவேலைகளில் பற்றுதல் விட்டுவிட்டவர்போலும்பேச, தயாநாதசர்மா மறுபடியும் வருந்திக் கெஞ்சி வணங்கினர். பெரியவர் கருணைமிகுந்து அவர்கள் வேண்டுகோளுக்கியைந்து ஒருநல்ல நாள்குறித்து அன்று தான்வருவதாகவும் அன்று அவ்வூர்க்கோயிலில் மூர்த்திகரித்துள்ள கடவுளுக்கு அபிஷேகாதிகள் நடத்தவேண்டுமென்றும் ஏழை எளியவர்களுக்கு ஊணளித்து தர்மமும் செய்யவேண்டுமென்றும் சொல்லிவிட்டு உபாதானம்வாங்குவதை மறந்தவராய் ஏதோ கவலையுடன் எங்கோ சென்றார்.

அதிகாரம்—கூ.

"தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகாவாம் நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல்''—குமரகுருபரர்.

"'மண்டியெரியாது வயர்கடந்து பத்தாது', அந்தக்கட்டேலேபோர குடுகுடுப்பாண்டி சொன்னது ஸரியாப்போச்சு. பள்ளி

க்கோடத்துக்கு அனுப்பவாண்டாம் தூரமாயிருக்கு, வாசக்கடயிலே நடக்கர அக்கரமம் சொல்லிமுடியாதுன்னுப்பிட்டுச் சொன்னேன் ஸரீன்னு ஒப்புக்கிண்டாப்போலே யிருக்கு. அதுக்குள்ளே வாத்யார்வந்து சேந்தூட்டானே. அவன் என்னமாயம் பண்ணினானோ. என்ன சுக்குப்பொடி போட்டானோ மயங்கிப்போய் நானும் ஸரித்தானுன்னூட்டேன். நாலுநாழிக்கெல்லாம் வாத்யாரும் வந்துடுவன். அசலாத்துப்பேரெல்லாம் பரியாஸம்பண்ணாதபடி காரியமெல்லாம்சொக்கட்டா நடக்கோணும்" என்று புலம்பிக்கொண்டே ஒருவெள்ளிக்கிழமையன்று காலையில் கடுமுகியெழுந்து மிகுந்த சுருசுருப்புடன் வீட்டுவேலை பார்த்தாள்.

அத்தருவாயில் பிரேமநாதனுடைய நண்பனான ஆத்திரேயன் அவ்வீட்டுக்குவந்து பிரேமநாதனைவிளித்து "எண்டா பிரேமா ஒங்கப்பா ஒன்னேவாசிக்கவக்யப்போராளாடா, உச்சுக்கோ. எனக்குக் கர்ப்பரிசி நனைய்ய தரோணுண்டாப்பா. அன்னிக்கி எங்கப்பா ஊரிலேந்து வந்தா ஒரு மாதளம்பழம் வாங்கீண்டுவந்தா. என்ன திதிப்பாயிருந்துதுங்கரே அப்பா! ஜலதோஷம் புடிச்சுப்போமே! அத்தனும் திதிப்புடா. அன்னிக்கே எங்கப்பா என்னே பள்ளிக்கோடத்துலே போடரேன் என்னாடாப்பா - எங்கம்மாகூடச் சொன்னாளே. ஆத்துலே இருந்தா துஷ்டத்தனம் பண்ணுவன் வாசக்கடைலேதான்போடோணும் இன்னாடா எய் நானும் ஒம்பின்னோடே வாசிக்கவரட்டுமோடா" என்று சொல்ல, பிரேமநாதன் தன்தந்தையைக் கேட்கவேண்டுமென்றும் ஆசானாக வரப்போகிறவனையும் கேட்கவேண்டுமென்றும் ஆத்திரேயன் பிதா தன்பிதாவிடம் கேட்கவேண்டுமென்றும் சொன்னான்.

இப்படி இருவரும் பேசிக்கொண்டே இருக்கும்போது மேளகாரர்வந்து திண்ணையில் உட்கார்ந்து முழக்கினார்கள். ஊர்குழந்தைகளெல்லாம் அங்குவந்து நின்று தலையை ஆட்டிக்கொண்டும் பந்தற்காலைப் பிடித்துக்கொண்டும் வாழைமரத்தின் நாரை உரித்துக்கொண்டும் சண்டை பூசலும் கக்ஷி ப்ரதிகக்ஷியும் நடத்திக்கொண்டும் ஒன்றோடொன்று ஸம்பந்தமில்லாத பலபேச்சுகளைப்பேசிக்கொண்டிருந்தார்கள். தயாநாதர் கொள்ளிடத்தில்முழுகி காலைக்கருமங்கள் முடித்துக்கொண்டு பட்டைபட்டையாயிட்ட விபூதியும், முறுக்கிப் பிழிந்துவைத்த வேஷ்டித்தலையும், தோய்த்துலர்ந்த மிக வெள்ளிய விலைபெற்ற வஸ்திரங்களைச்சுற்றிய உடலமும், நீரேந்திய வலக்கையும், புஷ்பக்குடலைபிடித்த இடதுகையும், புருஷஸூக்தம்சொல்லும் நாவுமாய் வீட்டுக்குள்வந்து நுழைந்தார்,

ஊரார்களும் உறன்முறையார்களும் நண்பர்களும் அந்தணச்சிரேஷ்டர்களும் கூட்டங்கூட்டமாய்வந்து கூடினர். இதனிடையில் உபாத்யாயரும் வந்துவிட்டார். உடனே சிறுவனை எண்ணெய்முழுக்காட்டி தோய்த்துலர்ந்த ஓர் வஸ்திரத்தை இடுப்பில்சுற்றி அங்கமெல்லாம் திருநீறுபூசி அதன்மேல் திரிபுண்டரமிட்டு ஒருதட்டில் தேங்காய் பழம் வெற்றிலைபாக்கு முதலியவற்றை அவன் கையாலெடுப்பித்து அவ்வூரிலுள்ள ஆலயத்துக்கு அவனை இட்டுக்கொண்டுபோய் தரிசனம்செய்வித்து ஒவ்வோர் ஸன்னிதியிலும் தீபாராதனைநடத்தி அட்டாங்க நிலந்தோய அச்சிறுவனைப்பணிவித்து விநாயகருடைய எதிரில் இருக்கச்செய்து அக்கடவுளுக்கு அவல் பொரி காப்பரிசி கொழுக்கட்டை தேங்குழல் வடை நெய்யாப்பழம் முதலிய நிவேதனம்செய்து அங்கிருந்த எல்லாருக்கும் அவற்றை விநியோகம்செய்து பின் பிரேமநாதனுக்கு உபாத்யாயர் எழுத்துக்களைச் சொல்லிக்கொடுத்தார். பிறகு அங்கிருந்து கொட்டுமுழக்குடன் புறப்பட்டு வீடுவந்து ஓரிடத்தில் கிழக்குமுகமாய் உட்கார்ந்து சிறுவனை அரிசிமீதும் பால்மீதும் நெல்லின்மீதும் கடைசியாக மணலின்மீதும் மும்மூன்றுமுறையாக எழுதச்செய்ய அதற்குள்ளேயே அவனுக்கு எழுத்துக்களெல்லாம் வந்துவிட்டன. இதைக்கண்ட உபாத்யாயர் அளவற்ற ஆனந்தமடைந்தார். அங்கு வந்திருந்த உறவினரும் நண்பர்களும் வியப்படைந்தார்கள். சுருக்காய்ப்படிப்பவர் சுருக்காய்மறப்பதும் வழக்கமென்று உபாத்யாயர் அன்று அவ்வளவில் பாடத்தைநிறுத்தி சிறுவனை எழுந்து பெரியவர்களையெல்லாம் வந்தனம்செய்யச்சொன்னார். பிறகு எல்லாருமாக இருந்து அறுசுவையுடன்கூடிய உணவை அருந்தினார்கள். அன்றைய பகற்போதெல்லாம் பிரேமநாதனுடன் அநேகம் சிறுவர்களும், பெரியவர்களுமாய் பரிஹாஸமாகவும், உற்சாகமாகவும், விநோதமாகவும் பேசிக்கொண்டிருந்தார்கள். குருவாய்வந்த பெரியோர் தயாநாதனைப்பார்த்து "ஐயா - உம்முடைய சிறுவன் நல்லபுத்திசாலி. நீர் இவனைப்பெற்றதால் அநேகம் புகழடையப்போகின்றீர் நீரெந்த ஜன்மத்தில்செய்த பூஜாபலனோ இவனுக்குத் தந்தையாயினீர். இவனுடையபுத்தி அதிக கூர்மையுடையது. இவனுக்கல்லவா நல்லபாடங்கள் சொல்லவேண்டும். என் பிறப்பு மின்றுதான் பயன்பெற்றது. இவனை ஸாதாரணச்சிறுவனாக எண்ணக்கூடாது. நீர் ஒரு நன்மைசெய்யவேண்டும். அதாவது உம்முடைய வீடுகளில் ஏதாவதொன்றை ஒழித்துத்தரவேண்டும் அதில் என்னையும் உமது சிறுவனையுந் தவிர வேறுயாரும் வரக்கூடாது. சாப்பாட்டுநேரந்தவிர மற்றவேளைகளில் என்னுடனே உங்கள்

சிறுவன் பழகவேண்டும்" என்ன, தயாநாதரு மவ்வாறே தன் வீடுகளிலொன்றை ஒழித்துக்கொடுத்தார். அது வெகுநேர்த்தியானது. ஊருக்குச் சற்று வெளியே ஒரு தோட்டத்தில்கட்டி கூரை வேய்ந்திருந்த அந்தவீட்டைச்சுற்றி வரிசையாயும் ஒழுங்காயும் பாக்குமரங்கள் வைத்திருக்கும். தெளிந்த நீருள்ள ஒருகுளமும் அதிலிருந்து சலசலவென்று பாய்ந்தோடும் ஒருகால்வாயும் அதின்பக்கத்திலுண்டு. வீடோ மண்பூசி அதின்மேல் ஊமத்தைச்சாரும் கரியும் சாணமுமாகக்கலந்துபூசி நீத்துக்கல்லால் ஸமன்செய்யப்பெற்று கன்னங்கறேலென்று பளபளப்பாயிருக்கும். அருங்கோடையிலும் அந்தவீட்டின் தாழ்வாரங்களில் படுத்தால் ஜில்லென்று இன்பமாயிருக்கும். எப்போதும் மெதுவான குளிர்ந்தகாற்றுவீசும். இன்னலக்ஷணமுள்ள வீட்டில் மறுநாள்முதல் பிரேமநாதசர்மா படிக்கத்தொடங்கினான். இதுவரையிலவனைப்போன்ற குழந்தைகள் பிறந்ததாக நாம் எங்குங்கேட்டதில்லை. ஒரேவருஷத்துக்குள் பன்னிரண்டுவருஷப் பாடத்தைப்படித்து மிகுந்ததேர்ச்சியடைந்தான். இனிமேல் ஒரு உபாத்யாயர் வேண்டுவதில்லையென்று சொல்லக்கூடிய அவ்வளவையும் படித்துத் தேர்ந்து தன்குருவுக்குச் சிறிதும் மனம்நோகாமல் நடந்துவந்தான். ஒவ்வொருநாளும் காலையில் எழுந்து பல்தேய்த்து முகங்கழுவி திருநீறணிந்து காலைச் சந்தியாவந்தனங்களை முடித்து உடனே உபாத்யாயனை நமஸ்கரித்து அவருடைய ஆசீர்வாதம்பெற்று வருவான். அவ்வாறே மாலையிலும் தன்குருவையே தெய்வமாக எண்ணி வணங்கிவருவான். ஒவ்வொருநிமிஷமும் எதாவது ஸந்தேகங்களைக்கேட்பான். உபாத்யாயரும் மிகுந்த அன்புடன் பதில் சொல்லுவர். இன்னுமிரண்டு கேட்கமாட்டானா என்று உபாத்யாயரெண்ணுவார். இன்னுமேதாவது கேட்டுக்கொண்டு உபாத்யாயருடைய திவ்யமுகதர்சனம் செய்யமாட்டோமா என்று சிறுவனெண்ணுவன். இன்னும் தன் ஆசானுடைய பூஜைகளுக்குவேண்டிய எல்லாவேலையும் தானேசெய்வான். பெரிய குடலைகள் நிறைய நல்ல பூ எடுத்துவைப்பான். குருவின்வஸ்திரங்களைத் தானே தோய்ப்பான். சில இராக்காலங்களில் குருவின்பாதங்களைப்பிடித்து அவருக்கு ஆனந்தம் செய்வான். அப்படி அவன் வேலைசெய்யும்போதெல்லாம் குருவுக்கு இவனை வருத்தவாவது தனக்குப்பிடித்துவிடவேண்டிய அவசியமில்லையென்று சொல்லவாவது மனமில்லாமல் அவனுடைய ஆசையைத் தடுக்கக்கூடாதென்றே சும்மா இருந்துவிடுவார். அவனும் எதாவது அரியவிஷயங்களைக் கேட்டுக்கொண்டு அந்த ஆனந்தமேலீட்டால் தன் மெய்வருத்தத்தை மறந்துவிடுவான். இப்படி

யாக எல்லாவிதத்தாலும் பிரேமநாதனிடம் ஸந்தோஷமே அடைந்தாரேனும் பெரியவர்க்கு ஒருவிதத்தில்மட்டும் தீராத மனத்துன்பமுண்டாயிற்று. ஏனெனில், ஸந்தோஷமே குடிகொண்டிருக்கும் பிரேமநாதனுடைய முகாரவிந்தம் சாப்பாட்டுக்கென்று வீட்டுக்குப்போய்த் திரும்பிவரும்போதெல்லாம் வருத்தம் நிறைந்து உட்கொள்ளாமல் ததும்பும். தன்மனக்குறை தன் ஆசானுக்குத் தெரியக்கூடாதென்று தன்னாலானமட்டும் சிறுவன் அடக்கினாலும் அது அவனை அறியாமல் திடீரெனமேல்வந்துநிற்கும். இதின் காரணம் யாருக்கும்சொல்லித் தெரியவேண்டியதில்லை. கடுமுகியின் செய்தி யாவரு மறிவாரன்றோ? இந்தத் துன்பத்தைத் தவிர்க்க வேண்டுமென்று உபாத்யாயர்கூட எவ்வளவோ வழிகளைத்தேடியும் பயன்பட இல்லை,

இப்படியிருக்கும் நாட்களில் ஓர்நாள் அந்திப்பொழுதில் பிரேமநாதன் எண்ணெய்முழுக்காட வீட்டுக்குச்சென்றான். வழக்கம்போலவே அன்றைக்கும் காரணமில்லாத திட்டுக்கிடைத்தது. சிறுவன் வருத்தம்பொறாமல் தன் சிற்றம்மைக்கு உபதேசஞ்செய்யத் தொடங்கி நல்லமொழியாய் மெள்ளச் சொல்லிக்கொண்டே வரும்போது கடுமுகி, "எண்டா எனக்காடா சொல்லறை! நான் பொல்லாதவளாடா! கத்தவித்தையை பெத்ததாயண்டையாடா காட்டரது நீ கட்டேலேபோக ஒன் எழவுக்கு என்னசேஞ்சாலும் நெரக்கக்காணம். நித்யம் வாயெமூடிக்கிண்டிருப்பயே. இன்னிக்கென்னத்தெ நெனச்சுக்கிண்டே. ஊரிலெல்லாரும் ஒன்னை சமத்து எங்கரது ஒனக்குத் தலெதெரியாதபோரதாடா? அடயேண்டா இத்தனை தலைகீழாய் விழரே. என் வயத்தெரிச்செல்லாம் அடக்கி அடக்கிப் பாத்தாலும் அடக்கப்படல்லேடா. நானேதோ பொல்லாதவபோலேயும் அசடுபோலெயும் அவிசாரிபோலயும் எண்ணிக்கிண்டு ஒவதேசம்பண்ணவந்தயாடா நீ. வெரல் ஒரலானு ஒரல் எத்தனையாகாதுடா? ஒன்னெவிட இங்கே கொரச்சலில்லேடா, அடெ கட்டேலேபோவே நீயென்னடா சொன்னே. நானிருக்கிறவீட்டைவிட புலியிருக்கிறகாடு நல்லதாடா. அங்கே தொலயராதானே. இங்கேயேன் வந்து எங்கழுத்தறக்கரே. நேரச்சொன்னாத் தெரிஞ்சுக்கரவ என்னு ஆரோத்தியைச் சொல்லராப்போலே எங்கிட்டவாடா சொல்லரே! ஒன்னைத் தொலச்சுப்பிட்டு மறுகாரியம் பாக்கரேன்," என்று தாறுமாறாயுளறி அதிககோபங்கொண்டு கரண்டிக்காம்பால் ஓங்கி மண்டையிலடித்தாள். யாராயிருந்தாலும், பொறுமைக்கொரு எல்லை கிடையாதா. ஆதலால் பிரேமநாதன் மிகுந்த கோபமும் வியஸனமும் கொண்டு இறுவணையில் வழக்க

மில்லாத தன் நாவால் "அடிபாதகி! சோற்றுக்கும் துணிக்கும் நகைக்கும் கதியற்ற நித்தியதரித்திரன்வீட்டிற் பிறந்து எங்கள் வீட்டுக்குவந்துசேர்ந்த நீ உன்யோக்யதையை மறந்து என்னையும் கோபங்கொள்ளச் செய்தாய். அன்று குடுகுடுப்பாண்டி வந்தது முதல் என்னை எப்போது வீட்டைவிட்டுத் துறத்தலாமென்றும் எப்படிக் கொல்லலாமென்றும் நீ வழிபார்ப்பதும் வெளிக்கு வேஷம் போடுவதும் எனக்குத் தெரியாததல்ல! நீ விஷங்கலந்து இட்ட சோற்றுக்கு முதலாய் தப்பிப்பிழைத்தேன். தெய்வத்தினிடம் முழுநம்பிக்கையுடனும், உன் யோக்யதையை வெளியிட்டு உன்னைத் தொலைப்பதில் மனமில்லாது இரக்கத்தாலும் நான் இதுவரையில் என் தந்தைக்கும் சொல்லாமல் என் மனதிலேயே எல்லாவற்றையும் அடைத்துவைத்தேன். இனி நல்லவழி எனக்குத்தெரியும்" என்று கண்களில் நீர்த்ததும்பப்பேசி மனம்நொந்து ஒருநாளுமறியாத ஆத்திரத்துடன் எண்ணெயும் தேய்த்துக்கொள்ளாமல் தன் படிப்பு வீட்டுக்குச்சென்று ஏடும் எழுத்தாணியும்கொண்டு தன் உபாத்யாருக்குப் பின்வருமாறு கடிதமெழுதினான்.

"என்மீது பிரியமுள்ள ஓ ஒ கருணையங்கடலே! நுந்தாட்டுணைக்கி யானட்டாங்க நிலந்தோயப் பன்முறை வந்தனஞ்செய்கிறேன். பெரியோர்சொல் பொய்க்காதென்பதிற் கியானே இலக்காகிறேன் முறைதப்பி இன்று நும்பா லறிவிக்காமல் இதோ நானிவ்வூரினின் றகன்றேன். பிறரிடமுள்ள குற்றங்களை வெளியிடுவது நல்லோர்க்கழகன்றெனப் பன்முறை அடியேற்கு நூல்களிலிருந்து புகட்டியிருக்கின்றீர்களாதலின் சொல்லக்கூடாதெனினும் நும்மாட்டன்றி யெங்கு புகல்வனென்றெண்ணி இதோ வெளியிடுகிறேன். என் மனநோய்க்குக் காரணமான சிற்றவையார் விடமிட்டதும், கிணற்றில் தள்ளியதும், செய்யத்தகாச் செயல்களைச் செய்வித்ததும் நமது ஆத்திரேயனறிவன். இப்பால் எண்ணெய் முழுக்காடப்போன இடத்திற்பட்ட கரண்டிக்காம்படியும் அதனால் வெளியான உதிர எரிவும் பொறுமல், பாம்பொடு பழகேலெனு நீதிமொழியை மனத்துள்ளி இங்கிருக்கவே யியையாது வெளிப்பட்டேன். நுந்திருவடிக்குறுதியா மன்புளகாறு மையமின்றென நெஞ்சுறனோடு இதோர் புறம்போந்தேன். கருணைபொழிந்து காப்பதுங்கடமை. கலியப்தம் சதுளாஅம்அ - வைசாகசுத்தாஷ்டமி.'

இங்ஙனமெழுதிய ஓலையைச் சுருள்செய்து தன் ஆசான் உட்காரும் மணையில்வைத்து, அவரிருக்குமிடத்துக்கும் படுக்குமிடத்துக்கும் மனதாறப் பலமுறை வந்தனம்செய்துவிட்டு அந்தப்பொ

ழுதே அவ்வூரைவிட்டு பிரேமநாதன் அகன்றனன். சற்றுநேரத்துக்கெல்லாம் ஓலைச்சுருளைப் படித்துப்பார்த்த குருவும் துன்பப்பெருக்குற்று ஐயோ சிறுவனாயிற்றே எந்தவழிச்சென்றானோ. எவ்விதமானானோ உயிரையே மாய்த்துக்கொண்டானோ என்று காட்டக்கூடிய முகக்குறியுடனும் சற்று யோசித்து பின் முகமலர்ச்சியுடன் அவ்வூரைவிட்டொழிந்தனர்.

கடுமுகியோ நெடுநேரமளவும் ஏதேதோ புலம்பிக்கொண்டிருந்து முடிவில் ஒரு கொடியதீர்மானத்தைச்செய்து வெளிப்பார்வைக்கு நல்லவள்போல் நடித்து என்னாளும்போலவே வீட்டு வேலைகளை குறைவறமுடித்து உறங்கச்சென்றவள் தூக்கம்பிடியாது உறுமிக்கொண்டும் பெருமூச்சுவிட்டுக்கொண்டும் கண்களில் நீரொழுகவும் உதடுதுடிக்கவும் கோபப்பொறியெழவும் புரண்டுபுரண்டு படுத்தும் எழுந்தும் உட்காந்தும் எப்படியோ பொழுதுவிடிய ஐந்து நாழிகைவரையில் போக்கிவிட்டாள். பின்னர் மெள்ளநகர்ந்து அடுப்பண்டைசென்று அதில் இரண்டொரு கரித்துண்டையெடுத்து நன்றாய்ப் பொடிசெய்து அத்துடன் கொஞ்சம் பஞ்சுசேர்த்து நன்றாய் இடித்து அதன்மேல் பன்னாடை கதம்பை முதலியவற்றைச் சுற்றிப் பெரிய பந்தாக்கி அதை அனலில்காட்டி சிறிது தீபற்றச்செய்து கையிலெடுத்துக்கொண்டு விரைவாய்நடந்து பிரேமநாதசர்மா படித்துவந்த வீட்டின்கூரையில் ஓர் இடத்தில் கொண்டுபோய் நொழுந்திவிட்டு வீட்டுக்குத்திரும்பிவந்து ஏதுமறியாதவள்போல் படுத்துக்கொண்டு "தொலஞ்சது சனியன். இத்தன்னாளாய் இதுவே பெருங்கழுத்தறுப்பாயிருந்தது. அந்தக் குடுகுடுப்பாண்டி சொன்னானே வாழாதேபோவான் இன்னமே எப்புடிபலிக்கும்" என்று நினைந்து நினைந்து மகிழ்ந்து பொழுதுபோக்கினாள்.

கிழக்கு வெளுக்கும் ஸமயத்தில் படிப்புவீடு தீமூண்டு சடசடவென்று ஒலியுடன் பெரிய நெருப்புமலைபோல் நின்றது. தீபற்றிய செய்தி ஊரெங்கும் தெரிந்துவிட்டது. ஒருவித வாஸனையாலும் பறந்து பறந்துவிழும் கரித்தூளிகளாலும் படார்படார் என்று எழும்பும் ஓசையாலும் ஜனங்கள்பயந்து அங்கங்கோடி தம்தம் கூரைகள்மேலும், வைக்கோற் போர்கள்மேலும், பரண்மீதும், நெல்லுச்சேர்கள்மீதும், குடங்களில் நீருடன் உட்கார்ந்து தத்தம் உடைமைகளைப் பாதுகாக்கத்தொடங்கினார்கள். தயாநாதசர்மா பெருஞ்செல்வவானாய் இருப்பதில் அசூயைகொண்டவர்களாகிய அநேகர் வேடிக்கைபார்க்கவந்து வீட்டைச்சுற்றி நின்றார்களேயொழிய யாவரும் தீயை அணைக்க எண்ணியதும் இல்லை. மற்றைய இடங்க

ளில் நீர்க்குடங்களும் கையுமாய் உட்கார்ந்திருந்த ஜனங்களில் பத்தில் ஒருபங்கு ஜனங்களாவது முனைந்தால் ஒருநொடியில் அணைத்துவிடலா மென்றாலும் யாரும் அப்படிச்செய்ய மனம் இசையவில்லை. பலர் பிரேமநாதனை நினைத்து அவன்படித்த இடமாயிற்றே அவனுக்கேதாவது இடையூறுண்டோ எனவருந்தி அவனைத்தேடிக்கொண்டு வீட்டுக்குச்செல்ல அப்பொழுதுதான் விஷயத்தை அறிந்தவள்போல் கடுமுகி அலறிக்கொண்டு வெளியேவந்தாள். தயாநாதன் படுக்கையைவிட்டெழுந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு ஓடோடியும்வந்து நீழ்ண்ட இல்லத்தைச் சுற்றிச்சுற்றிப் பார்த்தான். கீழேவிழுந்து புரண்டு புரண்டழுதான். தன்மகன் இறந்துவிட்டானென்றெண்ணி மண்டையைக் கல்லில்மோதிக்கொண்டான். உதிரம் ஒழுக அதையும் கவனியாமல் 'என்கண்ணே எரிந்தாயோ!' என்று கதறிக்கொண்டு நெருப்பின்மீது விழப்போனான்; பலர்தடுத்தார்கள். இதற்குள் பிரேமநாதன் வீட்டுக்குள் அகப்பட்டுக்கொண்டானென்ற செய்தி அறிந்து அநேகர்கிளம்பி எரியை அணைக்க முயன்றார்கள். எவ்வளவோ குடங்களில் தண்ணீரை மொண்டு கொட்டினார்கள். கொட்டக்கொட்ட தீ உயர எழும்பியது. கிட்டவழிபோக இடமில்லை. மண்ணைவாரி இறைத்தும் தண்ணைக்கொண்டும் தடியைக்கொண்டுமடித்தும் பலர் பலவிதமாயணைக்கத் தலைப்பட்டார்கள். சிலர் அவஸரத்தில் கீழேவிழுந்தார்கள். சிலர் நெருப்பண்டை துணிந்துசென்று காயப்பட்டார்கள். சிலர் பொசுங்கி ஓடினார்கள். சிலர் தண்ணீர்க்குடங்களின் விளிம்புகள்பட்டு உதிரம் ஒழுக நடந்தார்கள். சிலர் அழுதார்கள். சிலர் ஐயோவென்று இரங்கினார்கள். சிலர் கூட்டங்கூட்டமாய்நின்று ஏதேதோ தோன்றிய யுக்திகளையெல்லாம் சொல்லி இப்படிச்செய்யவேண்டும் அப்படிச்செய்யவேண்டுமென்று வீண்பேச்சுப்பேசினார்கள். சிறிதுநேர மிப்படியேபோக நெருப்பு தானாகவே மெள்ளமெள்ளத் தணிந்தது. தயாநாதன் இதன்முன்னரே பலவிதமாய்ப் புலம்பிவிழுவதும் மூர்ச்சிப்பதும் மண்ணைவாரி வாயில்போட்டுக்கொள்ளுவதும் மடார்மடாரென்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொள்ளுவதும் தலைமயிரைப் பிச்சுக்கொள்ளுவதும் கடகடவென்று புரள்வதும் நெருப்பில்விழப்போவதும் பலபேருமாய்க்கட்டிப்பிடித்தும் ஆவேசங்கொண்டு திமிறிச்செல்வதுமாய்க்கிடந்தான். யார்வந்து எவ்விதம் தேற்றினாலும் தேறவில்லை. சோகத்தால் விழுவான். அப்பா என்று எழுந்திருப்பான். குழந்தாயென்று கதறுவான். மகனே என்று கண்ணீர்விடுவான். கண்ணே என்று வயிறலைத்துக்கொள்ளுவான். இந்தப் பரிதாபம்பொறுமல்

அநேகர் தயாநாதனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அவன் மேல் வஸ்திரத்தை எடுத்து தீயில்போடச்செய்து தீக்கடவுளுக்கு வணக்கம்செய்யச் சொன்னார்கள். "நாசமாய்ப்போன நெருப்புக்கு மேல் வேஷ்டியைக்கூடவா அழவேண்டும்" என்றுசொல்லி தன் ஆடைகளையெல்லாம் கழற்றியெறிந்து நிர்வாணியானான். பிறகு யாவரும் பேராவல்கொண்டு எரிந்தவீட்டை முழுவதுந்தணித்து சிறுவனைக்காணலாமென்னு மாசையுடன் அங்குமிங்குந் தேடினார்கள். கரியையெல்லாம்வாரி வெளியேகொட்டினார்கள். அறைகுறையாய்வெந்த மூங்கில் முதலியவற்றை எடுத்து அடுக்கினார்கள். இது தான் தருணமென்று சிலர் குறைக்கொள்ளியாய்நின்ற நிலைகதவுகளைத் திருடிக்கொண்டோடினார்கள். சிலர் நெருப்பணைக்கவந்திருந்த குடங்கள் பாத்திரங்கள் தாம்புக்கயிறுகள் இவற்றை அடித்துக்கொண்டோடினார்கள். உண்மையாய்த் தேடியவர்கள் அங்குமிங்கும்பார்த்து குழந்தையையாவது அவனுடைய ஓர் உறுப்பையாவது திரியதுண்டெலும்பையாவது காணாமல் ஐயோ இப்படியுமுண்டா என்று கலித்தார்கள். பெரியவர் ஒருவரிருந்தாரே என்னும் ஞாபகம்வர, அவரையாவது காணலாமென்பதற்கும் இல்லையே என்று அநேகர்கள் வருந்தினார்கள். இப்படி நெடுநேரம் போயபின் அவரவர்கள் தயாநாதருக்கு உபசாரம்சொல்லித் தேற்றிவிட்டு தம் தம் இடம்சென்றனர். கடுமுகி தான்செய்தது இவ்வளவாயிற்று என்று நடுக்கம்பிடித்து தன்கணவன் ஒருக்கா லிறந்து போவானோ என்றையுற்று தான் பொல்லாதவள்தானென்றும் சிறுவன்சொன்னது உண்மையாயிருக்கலாமென்றும் கொஞ்சநேரம் எண்ணி மனந்தளர்ந்து புலம்பலுற்றாள். தயாநாதர் பெருந்துன்பமடைந்து உலகத்தைவெறுத்து ஊணுறக்கமொழித்து பைத்தியம்பிடித்தவர்போலானார். ஒவ்வொருகால் நினைந்துநினைந்தழுவார். "என் கண்மணியே! என் அருமைச் சிறுவனே! எவ்வளவோநாள் நானும் உன் தாயாருமாய் எத்தனையோ தெய்வங்களுக்கு வேண்டிக்கொண்டு பிறந்த ஒரே செல்வமே! நான் என்செய்வேனடா? எப்படி உயிர் வாழ்வேன்? மலடியென்று பிறர் தன்னைச் சொல்லக்கூடாதென்று எல்லாக் கோயில்களுக்கும்போய் வேண்டிக்கொண்டு, எவ்வளவோ வாரம்நடந்து அடிப்ரதக்ஷிணம் அங்கப்ரதக்ஷிணம் முதலாய்ச் செய்து கோயில்களுக்கு புஷ்பம்கட்டிக்கொடுத்து அபிஷேகத்துக் குதவும்படி கொள்ளிடத்தில் தீர்த்தமெடுத்து வைத்யநாதஸ்வாமியின் கோயிலுக்குக் கொண்டுபோய்வைத்து கோயில் பசுமாடுகளுக்குப் புல் அறுத்துப்போட்டு எவ்வளவோ ஏழை எளியவர்களுக்கு அவர்கள் வேண்டாமென்றாலும் வலுவில்

உண்டு கொழுத்தலைவதற்குக் காரணம் குருட்டுநாய்க்குவந்த அதிர்ஷ்டம்போல் ஏதோ காரணத்தால் சில ஆலயங்களின் விசாரணை இவர்களிடம் வந்ததேதான். இவர்கள் கோயில்களில் எவ்வளவுவரையில் திருடலாமோ அவ்வளவும் திருடியேவிடுவார்கள். கொலைக்கும் அஞ்சாப் பாதகரென்று கேட்டும் இருக்கிறோம். இப்படிக் கொழுத்திருக்கும் காரணத்தினாலேயே ஒருமடத்தாருக்கும் இன்னொருமடத்தாருக்கும் சண்டை வந்துவிடும். நியாயஸ்தலங்களுக்கு ஒருவரையொருவர் இழுப்பார்கள். தங்கள் பக்கங்களில் ஸாக்ஷிசொல்லுவதற்கு பணங்கொடுத்து அநேகரைச் சேர்த்துக்கொள்வார்கள். இப்படிப் பல காரணங்களாலும் இவர்களுக்குப் பணந்தேவையாதலால் கோவில் நகைகளையும் உடைமைகளையும் அடமானம்செய்து நமது வாத்யாரிடம் மூன்றுவட்டி நான்குவட்டியாகப் பணங்கொள்ளுவார்கள். அந்த நகைகளைத் திரும்பி வாங்குவதுங் கிடையாது. கோவில்களுக்கு அவற்றிற்கு வேறாக ஏதாவது செய்வதுங் கிடையாது. வாத்யாரோ அந்த நகைகளை இரண்டாம் பேருக்குத் தெரியாமல் விலைப்படுத்தியும் அல்லது அழித்து விற்றும் பணமாக்குவார் இவ்வளவு லக்ஷணத்துடன் செல்வவானாகிய வாத்யார் தமது வைதிக முறைதப்பி தன் பிள்ளைக்கு ஒன்பதாம் வயதிலேயே கல்யாணம்செய்ய ஆசைகொண்டு பெண்தேடுவாராய் அவ்வூரிலேயே யிருந்த பானுசேகரசர்மா வென்னும் செல்வவானிடம் வந்தார்.

பானுசேகரசர்மா மிகவும் மேலான பல நற்குணங்கள் நிறைந்தவர். பல தலைமுறைகளாய் எல்லா வளமும் நிறைந்த உத்தமகுலத்தில் பிறந்தவர், தாமும் செவ்வனே படித்தவர். நான்கு வேதங்களிலும், ஆறு சாஸ்திரங்களிலும் எல்லாக் கலைஞானங்களிலும் ஐயந்திரிபறக்கற்றிருப்பதோடு, ஈகை, இரக்கம், பொய்யாமை, பொறையுடைமை முதலியவற்றிற்கு நிலைக்களமும் அவரே. ஆளைப் பார்த்தால் சிங்கக்குட்டிபோ லிருப்பர். அகன்ற மார்பர். நாய்போன்ற இடையும் நீண்டகையும் கொழுத்த புஜமும் பருத்த தலையும் அகன்ற நெற்றியும் பருத்தழகிய நீண்ட கண்ணும், கறுத்தடர்ந்த புருவமும், நீண்டு கூரியமூக்கும், செறிந்து கறுத்துக் கட்டையான சுருட்டை நீள் கூந்தலுமுடையவர். நல்ல பரோபகாரி. தெய்வபக்தி மலிந்தவர். சிவந்துயர்ந்து ஒற்றை நாடியான் உடலமுள்ளவர். அவருடைய எல்லா நற்குண நற்செய்கைகளுக்கும் இயைந்த கற்புக் கரசியாம் பெண்சாதி மணிமதியென்பவள். தன் கணவன் மனம் கோணுதபடி நடக்கும் பெண்பால் இவளைவிட வேறெங்குங் கிடையாது. எப்போதும் அடக்கத்தையே ஆபரணமாகப் பூண்

டவள். தன் கணவனுக்காவது தனக்காவது தங்க ளிருவருடைய முன்னோர்களுக்காவது தன்னு லெவ்விதக் கெட்டபெயரும் வராத படி நடக்க அறிந்தவள். நதிகளையெல்லாம் கங்கையுடன் ஒப்பிடு வதுபோலும், புண்ணியஸ்தலங்களையெல்லாம் காசியுடனொப்பிடு வதுபோலும், தெரிவைமாரின் நடை உடைகளுக்கோர் கட்டளை யெனச் செய்த திரு இவள்தான். வீட்டு வேலைகள் எவ்வளவிருந் தாலும் தானே அலுக்காமல் செய்வதிலேயே ஆசையுள்ளவள். தா னுக எந்தப் பிரமாதமான காரியத்தையும் செய்யமாட்டாள். தன் கணவனுடன் எதையும் கலந்து யோசித்து அவருடைய எண்ணத் தையும் தெரிந்துகொண்டு தக்க காலத்தில் தக்கபடி செய்வாள். தாய்போலவும், வேலையாள்போலவும், உண்மையான நண்பன் போலவும், நல்ல மந்திரிபோலவும், குழந்தைபோலவும் அவ்வக்கா லங்களிலிருந்து தன் கொழுநனை தானடையவேண்டிய பெரும் பதவியாக எண்ணி நடப்பவள். தன் கணவனுக்குக் கீழ்ப்பட்ட யாராஞலும் அவர்களிடத்தில் தாய்போல் கருணைநோக்கம் செய் வாள். எப்போதும் சிரித்த முகம். இனிய பேச்சொழிய வேறு பேசியறியாள். இன்பமாயினும் துன்பமாயினும் ஒருங்கே பாராட் டுவாள்.

இவ்விதமான இல்வாழ்க்கையை யுடைய மணிமதியும் பாநு சேகரும் எவ்வளவோ காலங்களில் செய்த தவப்பயனே ஓருருப் போல்வந்ததென்று சொல்லக்கூடிய ஓர் திருமகள் இவர்களுக்கு ண்டு. அவள் பெயர் கலாவதி. தந்தையின் அறிவையே உடம் பாகவும் தாயின் குணத்தையே உயிராகவும் கொண்டு பிறந்தவளெ ன்றால் இவளைப்பற்றிப் பேச யாவர் திறம்?

பாஸ்கர வாத்யார் தம்சிறுவனுக் கெப்படியாவது கலாவதி யைக் கல்யாணம்செய்துவைக்க வேண்டுமென்று தீர்மானித்தார். "சர்மாவுக்கும் செல்வப்பொருளும் நிலவளமும் மலிந்திருக்கின்ற ன. நமக்கும் செல்வம் மிகுந்திருக்கின்றது. சர்மாவுக்கும் ஒரே பெண். நமக்கும் ஒரே ஆண். அவருக்கும் எதேஷ்டம் வேலையாள் கள் வெட்டியாள்களுண்டு. நமக்கும் அப்படியே. அவரும் வேறொ ருவர் தயவை விரும்புவதில்லை. நமக்கும் வேறொருவர் தயவும்வே ண்டாம்" என்று தனக்குத் தோன்றிய ஒப்பை, தன் பெண்சாதி யிடம் வாத்யார் அடிக்கடி சொல்லுவது வழக்கம். ஆதலால் பாநு சேகர சர்மாவிடம் வந்தவர் சற்றுநேரம் வேறு எவ்வளவோ விஷ யங்களைப்பற்றிப் பேசி முடிவில், "ஐயா, நம்மபையனை பார்த்தி ருப்பேளா? எவ்வளவு கெட்டிக்காரன் என்கிறீர்கள்!" என்றார்.

அதன் பொருளை குறிப்பால் உடனே தெரிந்துகொண்ட பாநுசேகரரும் தனக்கவ்விஷயத்தில் எள்ளளவும் பேச மனமில்லாதிருந்தும், வாத்யாரின் பிள்ளையின்குணம் யோக்யமானதன்றென்று முன்னமேயே தீர்மானித்திருந்தவரேயாயினும் விளையாட்டாய், “உங்களுக்குத் தகுந்த பிள்ளையாண்டான்தான். உங்கள் அதிர்ஷ்டமையா! வேறுயாருக்காவது அப்படி கிடைக்குமா என்ன!” என்றார்.

வாத்யார் உடனே தைரியமடைந்து “என்ன பேரங்கள், பையன் சின்னவனென்றாலும் எவ்வளவு கெட்டிக்காரன் என்கிறீர்கள். ஒருகாசுகூட பிசகுவிடரதில்லை பொட்டிமகன். என் கணக்கு வழக்கவ்வளவும் இன்னவிஷயத்தி லிவ்வளவென்று ஒருபைசா விடாமல் குறிப்பாய்ச் சொல்லுவான். நமக்குக்கூட அப்படித்தெரியாது. ஒருகாசு இரண்டாம்பேருக்குக் கொடுக்கமாட்டான். அவ்வளவு ஸமர்த்தன். பொரத்தியா ரொடயதுக்கு ஒருதிரணங்கூட ஆசைப்படவுமாட்டான். அதிகாரம் பண்ணுகிறதுமட்டும் கொஞ்சமென்பீர்களா? என்கிட்டவாசிக்கிற பசங்கள் அத்தனைபேரும் அவன் வாயைக்கண்டால் கிறுக்கு மூத்திரம்பேவாளே! என்ன பெருந்தோரணை! என்ன அதிகாரம்! ஸ்வாமிதயவுலே ஆயுஸுந்தான் தீர்க்கமாயிருக்கிறதென்று ஸாமிஜோஸ்யர் சொல்லியிருக்கார்” என்றார்.

பாநுசேகரரோ “ஆயுளுக்கென்னவையா - உங்களுடைய உபகாரகுணத்துக்கும், இல்லையென்னாமல் கேட்டபேருக்கெல்லாம் கடன்கொடுக்கிறநன்மைக்கும் ஈசுவரனல்லவா இருக்கிறார்” என்றார்.

வாத்யார் “நம்மபையன் பேசிப்பார்த்ததில்லையே நீங்கள் - வெகுபடு! வெங்கலத்துலே ஆனைக்கடை - இல்லை இல்லை வெங்கல ஆனையிலே கடை — அடா! என்னமோ தட்டுப்பட்டுக்கோராது — ஆனைக்கடேலே வெங்கலம்பூந்தாப்போலத்தான் பேசுவான்” என்றார்.

பாநுசேகரரோ “அப்படித்தானே ஐயா உங்களுக்குவேண்டும். நீங்கள் நல்லவரல்லவா? பையன் கெட்டிக்காரனென்று உங்களுக்குத்தோன்றியிருக்கிற சந்தோஷந்தானே தட்டுக்கெட்டுப் பேசவும் நேரிட்டது!” என்றார்.

வாத்யாரோ “எனக்கென்னமோ ஐயா அவன் பேச்சை எடுத்தாலே ஸந்தோஷம் பொறுக்கப்படாதே வரது. எனக்கு அவன்தான் உசிர்” என்று சொல்லிப் பல்லையிளித்தார்.

‘ஆத்மாவே புத்திரனாகிறான்’ என்று வேதமேசொல்லியிருக்கிறதல்லவா?” என்றார் பாநுசேகரர்.

உடனேவாத்யார் "அவன்ஸாமர்த்யம் ஒங்களுக்கு என்னதெரியும். ஒரு தடவை இந்தூர்க் கொத்தவாலேக்கூட எச்சுப்போட்டானே. அதுமட்டுமோ? யாராவது என்கிட்ட பணங்கேக்கவந்தால் ஆள்கொஞ்சம் ஏழையென்கறதும் அவஸரமென்னுப்பிட்டும் தெரிஞ்சால் வட்டியை ஒசத்துவன். ஒரோருவேளை அப்பா இல்லே என்னு சொல்லி போகச்சொல்லுவன். அதென்னமோபோக்கோ அவன் பேச்சை எடுத்தா எனக்கு அப்பத்தான் அஞ்சுங்குளுரும்." என்றார்.

"தன் பிள்ளையிடம் பிரியமில்லாத தகப்பனுமுண்டா" என்றார் இவரும்.

இப்படியே கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து பிறகு "ஒரு காரியம் சொல்லவேண்டுமென்றிருக்கிறேன். ஆனால் நீங்களும் கடசியாஸரித்தான் என் பீர்கள் சொல்லரத்துக்குக் கொஞ்சம் என்னமோ போலேயிருக்கு - ஒன்னுமில்லே—வீட்டிலே—தினம் தினம்—தொந்தரவு பண்ணராள். என்ன சொல்லச்சொல்றோள். நம்மவருத்தமும் நாமசொல்லரநியாயமும் அவாளுக்குத் தெரியமாட்டேனெங்கரது" என்று சொல்லியதும், பாநுசேகரரும் "என்ன ஏதாவது நகைபண்ணச்சொல்லுகிறார்களோ?" என்றார்.

"அதொன்னுமில்லே அப்படியிருந்தாத்தான் தேவலேயே அதுக்கு ஒம்மகிட்ட நான்என்வரோணும். நம்மபுள்ளேயாண்டானிருக்கானேன்னே அவுனுக்கு சுருக்க கல்யாணம் செய்யவேணுமென்னு ரொம்ப ஆசைப்பட்ராள். அவா சொல்ரதைக்கேட்டா ஒருபக்கத்துலே நியாயமாயுந்தான் தோணரது. இப்பவே கல்யாணம் பண்ணிஞ அழகாத்தானிருக்கும். ஆண்வேஷம் பொண்வேஷம் போடலாம். தடியாபுள்ளேயாட்டமா போனப்பரம் என்ன அழகு. இப்பத்தான் நலங்கிட்டா நன்னாயிருக்கும் எங்கராள்" என்றார் வாத்யார்.

பாநுசேகரரோ "இப்போதென்ன அவஸரம் வந்துவிட்டது. இப்போதுமுதல் கல்யாணம்செய்துவைத்து என்ன ஆகவேண்டியிருக்கிறது. பையனல்லவா கெட்டுப்போவான். 'கல்யாணம்வித்தைக்குக்கேடு - சோபனம் எல்லாவற்றிற்கும்கேடு' என்று கேட்டதில்லேயோ தாங்கள். பெண்டுகளுக்கு அப்படித்தான் ஆசையாயிருக்கும். அதற்காக நாமும் உடன்படுகிறதா? சாஸ்திரஸம்மதங்கூடவேண்டாமா?" என்றார்.

உடனேவாத்யார், "ஆமா! எல்லாம் சாஸ்திரத்தைப் பார்த்துத்தான் நடக்கிறதாக்கும். அதுமஹான்கள் காலத்தில் ஸரியாயிருந்தது - இப்போதென்ன" என்றார்.

"ஆனாலுங்களிஷ்டம். சாஸ்திரமெல்லாம் நம்முடைய நன்மையைத்தான் சொல்லுகிறதென்று எனக்குத் தோன்றுகிறது. யுக்தியாய்ப் பார்த்தாலும் இப்போது கல்யாணம் செய்யக்கூடாது தான். அப்படியென்ன உங்கள் பையன் கல்யாணமில்லாமல் வருந்துகிறானா? என்றார் பானுசேகரர்.

"உங்களுக் கப்படிப் பட்டிருக்கிறதாக்கும். லோகம்பலவிதம். கல்யாணத்தைத்தான் பண்ணிப்போடலாமே இப்போதென்ன கெடுதிவரப்போகிறது. மனுஷ்ய ஜன்மம் என்ன சாசுவதம். இன்னிக்கிப்போனாலும்போச்சு - நாளைக்குப்போனாலும் போச்சு - இருக்கரத்துக்குள்ளே ஸந்தோஷமாயாவது பார்க்கலாமோன்னோ."

"நாளைக்குப்போனாலும் போச்சு என்றீர். அது எல்லாருக்குந் தானே."

உடனே வாத்யார்— "அது தான் நானும் சொல்லரது. அதனாலேதானே ஒங்களண்டையும் வந்தது" என்றனர்.

பானுசேகரர்,—"கைப்புண்ணுக்குக் கண்ணாடியா."

வாத்யார்—"ஏதையா நீர் ஆள் உள்ளுக்குள்ளே இருக்கிறீர். இத்தன்னாழி பரிஹாஸமாய்த்தானே பேசினீர். போகட்டும். இனி மேலாவது நான் சொல்வது உங்களிஷ்டந்தானே."

பானுசேகரர்—"அடபிராம்ஹணா! எனக்கென்ன உம்மிடத்தில் பரிஹாஸம்வேண்டியிருக்கிறது. நீர் எந்தக்காரியம்வேண்டுமோ அதை மனம்விட்டு தாராளமாய்ச் சொல்லும்."

வாத்யார்—"உம். எத்தன்னாழிதான் ஒட்டாமல் பேசுவீர். நான் தான் வெளிவிட்டுச் சொல்ரேனே. நம்மகாயமோ நாளைக்குப் போனாலும்போகும். நாமள் உசரோடே இருக்கரபோதே கொழந்தயளுக்கு கல்யாணம் செய்துவக்கவேணும். அதுதான் அழகு."

பானுசேகரர்—"குழந்தைகளுக்கு பிறந்ததுமுதல் கல்யாணத்தை யேன் செய்துவைக்கவேண்டும். ஒருக்கால் துக்கத்தூக் கிடமாய் நேர்ந்தால் என்செய்வீர்?"

வாத்யார்—"என்னகாணம் அச்சானியம்போல பேசரீர். இப்பத்தான் மொதமொத கல்யாணப்பேச்செடுத்திருக்கு. அமங்கல மாச்சொல்லாதேயும்."

பானுசேகரர்—"நம்முடைய சாவைப்பற்றிப் பேசினீரோ அது மட்டும் மங்கலமோ?'

வாத்யார்—“அது கெடக்கட்டும்; கல்யாணம் இன்னம் கொஞ்சநாப் போயாவது பண்ணிக்கொள்ளலாம். நம்மரெண்டுபேர் தானே நம்மூருக்காக பணக்காராளாயிருக்கோம்

பானுசேகரர்—“யாரைப் பணக்காரனென்று சொல்வது, யாரை ஏழையென்று சொல்வது? ‘தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை-யம்மா பெரிதென் றகமகிழ்க’ என்பது நீதிமொழி. ‘கிடைத்தமட்டில் போதுமென்றவனே பாக்யவான்’ என்பது பஞ்சதந்திரம் சொல்லுகிறது. ஊரான் பணத்துக்குப் பேயாய்ப்பறந்துகொண்டு ஜனங்களை ஒட்டாண்டியாக்குகிற பாபிகள் எவ்வளவு பணம் சேகரித்தாரேனும் அவர் பணக்காரரல்லர், ஆனால் பணம் காக்கும் பெரும்பூதங்களே யாவர்.”

வாத்யார்—“நான் யார்பணத்தை ஐயா அப்படி பறிக்கரேன். சின்னச்சின்னவார்த்தையும் சிங்காரவார்த்தையும் சொல்லரேளே.”

பானுசேகரர்—“அட! பைத்யகாரப்ராம்ஹணா! உம்மை நான் குறித்துச்சொல்லவில்லையே. ‘குற்றமுள்ள நெஞ்சு குறுகுறென்னும்,’ என்பதுபோலும் என்கிண்டியாயநம: என்று உளருதேயும். வந்தகாரியமென்ன சீக்கிரம் சொல்லும்.”

வாத்யார்—“நான் உம்ம பொண்ணை என் புள்ளக்கி இந்த வருஷமே கல்யாணம்பண்ணிப்போடரதுன்னு தீர்மானிச்சுக்கிண்டு வந்தேன். அதுகடக்கு என்னைக் கேக்காதே பக்கத்தில் மாப்பிளையை விசாரிக்காதேயும்?”

பானுசேகரர்—“விசாரப்படாமல் வீடுபோய்ச்சேரும் வருஷமாகட்டும்.”

வாத்யார்—“ஆனால் போவிட்டுவரேன். பிரியமிருக்கட்டும்,”

பானுசேகரர் “உம்மிடத்தில் எனக்கு நல்ல பிரியமுண்டு “எவ்விதமும் என்னிடத்தில் ஐயப்படாதேயும்,” என்று சொல்ல அதைக்கேட்டுத் தலைதெரியாத மகிழ்ச்சிபொங்கி வீடுசென்றவுடன் வாத்யாருடைய மனைவியார், “போயிருந்தேளே என்னசொன்னார் அந்தபிராமணன்? அவர் நல்லவரோ எனக்குத் தெரியுமே. என்னிக்கு கல்யாணம். என்னிக்கி நிச்சிதாம்பூலம் கல்யாணம் எப்படிப் பண்ணப்போரார்? பெரிசாப் பந்தல் போடோணும். நாலுநாளும் பூப்பல்லாக்குவேணும். இருந்திருந்து ஒரு கொழந்தைதான் அவருக்கும். நமக்கும் மருந்தாட்டமா ஒரு புள்ளைதானிருக்கு,” என்று மூச்சுவிடாமல் பேச, “அடியே! அவஸரமேண்டீ ஒனக்கு? பொண்ணைத் தரோனுன்னு ஸம்மதிச்சுட்டார். எல்லாம் பழந்தான்.

இந்த வருஷம் வாண்டாமுன்னும் ஜாடயாச்சொன்னுர். அந்த மனிஷியன் எல்லாம் யோஜிச்சுத்தான் சொல்லியிருப்பன் " என்று வாத்யார் சொன்னுர்.

அன்றுமுதல் வாத்யாரும் அவர் பெண்சாதியும் மனமகிழ்ச்சி மிகுந்து ஏதேதோ குருட்டுயோசனே செய்தார்கள். மாட்டுப்பெண்வந்தால் விதிக்கவேண்டிய சட்ட மிதுவென்றும் அப்படி வேண்டும்மிப்படி வேண்டுமென்றும் ஒவ்வொருநாளும் பேசிப்பேசி புருஷனும் பெண்சாதியும் தம்முள்சண்டைசெய்து திட்டிக்கொள்வார்கள். வாத்யார் மகனே, எப்போது மிந்த எண்ணமேபிடித்து தனக்குக் கல்யாணம் நடக்கிறதுபோலவும், தான் தாலிகட்டுவதுபோலவும், பட்டுக்கரைத்துணி தன் இடுப்பில் இப்போதுதான் ஏறியதுபோலவும், தான் கல்யாணப்பந்தரில் ஓர் கட்டிலில் சார்ந்துகொண் டிருப்பதுபோலவும் தன்னே யாராரோ ஏதேதோ கேட்பதுபோலவும் அதற்கெல்லாம் பதி லிந்தமாதிரியென்றும், தன்முகத்தை எப்படி வைத்துக்கொள்ளுவதென்றும், நலங்கிடுவதாகவும், பெண்டிரைக் குட்டுவதாகவும் இதுபோல் பலபலவாகவும் மனதுக்குள் எண்ணி எண்ணிவருவான். எங்காவது கலாவதியைக்கண்டால் ஜம்பமாய் நடப்பான். தன்னுடன் விளேயாடும்பிள்ளேகளிடமெல்லாம் " என்னும்படயாளேப் பாருங்கடா " என்பான்.

வாத்யார்வந்து பேசியது இன்னதென்று தானுகத் தன்புருஷனேக் கேட்க மனமில்லாமலும் அதைத் தெரிந்துகொள்ளுவதிலும் ஆசையில்லாமலும் இருந்த மணிமதியிடம் ஓர் நாள் பானுசேகரசர்மா தானுகவே அந்த விஷயத்தைச்சொல்லி அதில் அவளுடைய எண்ணமெப்படியென்று கேட்டார். அம்மங்கையும் தான் தன்புருஷனுடைய கருத்துக் கெப்போது மிசைந்தவளாதலாலும், நிழலேப்போல் தன்கொழுநனேப் பின்பற்றுதலொன்றே தனக்கு பெரும்புகழாக எண்ணி யிருத்தலாலும் " எல்லாம் உங்கள் இஷ்டப்படித்தான். ஆனுலும் என்னேக் கேட்டபடியால் நான் மற்றப்பெண்டுகளேப்போலவே, ' நமது குழந்தைக்கு பொருளில்லாத பையனுலும் படித்த புருஷன் வேண்டும் - மாமியார் கெட்டிக்காரியாயிருக்கவேண்டும் ' என்றுதான் ஆசைப்படுவேன் " என்ருள். பானுசேகரரும், " பெண்ணே ! நீ சொல்வதுண்மை. அப்படியேதான் எனக்கும் தோன்றுகிறது. வாத்யார் மகன் வேண்டவேவேண்டாம் - தோலேதோல். நமது குழந்தைக்கு வயதும் ஆய்விடவில்லே. தேடும்போதும் அவட்கு தகுந்த படிப்புடைய புருஷனேயே தேடுவோம். எல்லாம் ஈசுவரகிருபை வரும்போதுதானே வரும்.

'வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.' என்றும்,

'ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளுமீசன் செயல்.' என்றும் பெரியோர் சொல்லி

யிருத்தலால் வருவது அதனதன்காலத்தில் தானே வரட்டும்" என்று சொன்னார்.

அதிகாரம்—அ.

"தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன்புட்சிமிழ்த்தற்று"—குறள்.

"உற்றாரெல்லாம் உறவின ராவரோ" நாமென்ன செய்யலாம். அப்பனென்றும் தாயென்றும் கூடப் பிறந்தவர்களென்றும் பெயருள்ள ஏதோ உறமுறைகளுள்ள பலரும் அவரவர்களுடைய வினைவயத்தராய் கடவுளால் கூட்டுவிக்கப்படும் ஆன்மாக்களே ஒழிய வேறென்ன? அப்படிக் கூட்டுவிக்கப்பட்டவர்களால் நன்மையே நிகழ்வதும் தீமையே நிகழ்வதும் அல்லது இரண்டும் கலந்து நிகழ்வதும் உலகவழக்கே யல்லது வேறல்ல. ஆதலால் நமது சிற்றம்மையின் குணத்துக்காக நாம் வருந்துவது அழகன்று. ஓ தெய்வமே! மழபாடி மாணிக்கமே, பிறப்பிறப்பென்னும் அவதிக்கடலாகிய நோய்க்கு மரக்கலம்போன்ற வைத்தியனே! இதோ என் ஊரைவிட்டு நான் போகின்றேன். என் தந்தையாருக்கு எவ்விதத்துன்பமும் வாராமல் காப்பாற்றும். என் நண்பன் ஆத்திரேயன் என்னைக்காணவிடில் இறந்தேவிடுவானாதலால் அவனுக்கு யாதொரு மோசமும் வாராதிருக்கும்படி கருணைசெய்வீராக. என்கதி எப்படியானாலும் ஆகட்டும்; வீட்டிலிருத்துவோனும் நீயே, வெளியே துரத்துவோனும் நீயே, வேண்டத்தகுவ திதுவென்று அறிவோனும் நீயே, அப்படியே வேண்டச்செய்து யாதும் தருபவனும் நீயே ஆதலால் நான் எதற்குமஞ்சேன்" என்று ஏதேதோ எண்ணித் துதித்துக்கொண்டே ஊரைவிட்டுப் புறப்பட்டு பிரேமநாதன் வடக்குநோக்கி வரும்வழியில் ஒரு சிறுகால்வாய்; அதின் நீர் சலசலவென்று ஓசைசெய் தோடியதைப்பார்த்தால் பிரேமநாதனுடைய கதியை நினைத்து வாய்விட்டழுததுபோலிருந்தது. அந்த

நீரில் இரண்டுகை அள்ளிக்குடித்து "நமதூருக்கும் நமக்கும் உள்ள கடைசி உறவு இதுதானா? ஆ! நான் பிறந்தமண்ணே! உன்னை விட்டெப்படி நீங்குவேன்! தன்னூரென்றும், தன்னவர்களுடைய நன்மையென்றும் தன்வீடென்றும் சொல்லும் எதுவும் எனக்கு இத்துடன் விட்டொழிந்ததோ? இனி என்று காண்பேன்? அகன்ற கொள்ளிடத்தின் தெளிந்தநீரின் இனியகாற்று வீச உட்கார்ந்திருக்கும் வைத்யநாதா! என்னை மறவாமல் என்பின்னே துணைவனாயிருந்து எனக்குவரும் பொல்லாங்கையெல்லாந் தவிர்த்து எப்படியாவது நல்ல மாதிரியாய் என்னூருக்கு நான் மறுபடி வரத் துணைசெய்யவேண்டுமையனே" என்று சொல்லி கண்ணீர் ததும்ப கால்வாயைவிட்டு இன்னும் வடக்கே சென்றான்.

போகப்போக நல்ல நீர்ப்பாய்ச்சலுள்ள நிலங்களும், தெங்கு-கமுகு-மா பலா-வாழைமுதலிய அடர்ந்த தோட்டங்களும் சோலைகளும் குறைந்து நல்லநிலங்களும் மாறி கரடுமுரடான பாதைகளில் வந்தான். அங்கே போகப்போக சப்பாத்திக்கள்ளியும் ஆவாரம் செடிகளும் பூலாஞ்செடிகளும், வெளுத்துக்கூரிய சிறிய முட்களும் ஓரிலைத் தாமரை இலைபோன்று நீண்டுதடித்த பச்சை இலைகளுமுள்ள முட்செடிகளும், கருவேலின்செடிகளும் இலந்தைச்செடிகளும் தேளின் கொடுக்குப்போன்றுள்ள வளைந்து கூரியமுக்குக்காய்கள் காய்ந்து கருகித்தொங்கும் செடிகளும், நாக்கில்வைத்துக்கொண்டால் பட்டென்று வெடிக்கும் காய்களுள்ள பேப்பாச்சுற்றிச் செடிகளும், இண்டுப் புதர்களும், கொறுக்காய்ப்புளி மரங்களும் எருக்கின் செடிகளும் சிறிதும் பெரிதுமாய் முளைத்துக் காய்ந்துகிடந்தன. கிளுவை முட்களும், காரைமுட்களும் கழக்கோடி முட்களும் அங்கங்கு செறிந்துகிடக்கும் இன்னதென்று சொல்ல முடியாமல் கட்டையாகவும் முள்ளாகவும் உள்ள பலவிதச்செடிகளும், முட்செடிகளும் எங்கும் பரவியிருக்கும். மாத்வர்கள் உடம்பில் போட்டுக்கொள்ளும் முத்திரைகளில் ஒன்றுபோன்ற தலையை உடையதும் ஸ்ரீஜயந்திமுதலிய காலங்களில் சிறுவர்கள் நாமக்கட்டியையும் கரியையும் குழைத்து மேலே அடையாளம்செய்துகொள்ள உதவுவதும் தொட்டமாத்திரத்தில் அரிப்பதுமான காய்களையும் சற்றுத்தடித்து வெளுத்த பச்சை இலைகளையும் மஞ்சட்பூக்களையுமுடைய துத்திச்செடிகளும் சிற்சில இடங்களிலுமுண்டு. ஒருபக்கம் நாய்த்துளசி தன் இலையெல்லாம் உதிர்ந்து கதிர்கதிராய் நீட்டிக்கொண்டு காய்ந்துநிற்கும். ஒருபக்கம் கண்ம்புல் அடர்ந்திருக்கும். இன்னொரிடத்தில் காய்ந்த வேலைச்செடிகள் கட்டைகட்டையாய் நீட்டிக்கொண்டு நிற்கும். பூளைச்செடி ஒருபக்கம். வெ

ள்ளையாய் நீண்டு மிருதுவாயுள்ள சற்று ஊதாநிறப் பூக்களுடைய பண்ணையென்னும் செடி ஒருபக்கம். ஓரிடத்தில் கொழுஞ்சியென்னும் செடிகள் தமது தட்டையாய் நீண்ட அகலமில்லாக் காய்கள் காய்ந்து அசைந்தாட நிற்கும். அவிரிபோன்ற இலையும் கொத்தவரைபோன்ற மெல்லியகாயும் ஓரிலைத்தாமரையின் பூப்போன்ற சிவந்த சிறுபூக்களுமுடைய பொறுமியென்னும் செடிகள் சற்றுப்பச்சையாய் எங்காவதிருக்கும். காற்றில் கிலுகிலுவென்றாடும் காய்க்கொத்துகளுள்ள செடிகளும் கட்டையாய்க் காய்ந்துவிட்ட தும்பைச்செடிகளும் எங்குதொட்டாலும் முள்ளே தைப்பதான நாய்க்கடுகுச்செடிகளும் அங்குமிங்கும் கண்ணிற்படுவதோடு அவ்வழி நடப்பவர்களோடு ஏதோ ரஹஸ்யம்பேச இழுப்பதுபோல் வஸ்திரங்களைப்பற்றி இழுக்கும். சில இடங்களில் கீழே கால்வைத்த உடனே உள்ளங்கால் முழுவதும் இருபது முப்பதாக நெறிஞ்சில்முள் தைக்கும். தூரத்திலிருந்து பார்க்கும்போது ஒருவித மஞ்சள்நிறம் கலந்த பச்சையாகவும் அலது காளைமாடுகள் கட்டுமிடத்தில் வைக்கோலில்லாத வேளையில் முன்போட்டிருந்த வைக்கோலின் கூளங்களெவ்வாறு தோற்றுமோ அதுபோன்ற நிறமுள்ளதாகவும் தரையெங்கும் புற்கள் முளைத்துக் காய்ந்துகிடக்கும். கீழெல்லாம் சிறுசிறு மணிக்கற்களாக இருக்கும். அவை குத்தும். சிற்சில இடங்களில் கூரிய கற்களிருந்து காலில் உதிரம் வரச்செய்யும். நாயுருவியின் நீண்டமுட்கதிர்கள் காலெல்லாம் அரிசியரிசியாய்த் தைத்துநிற்கும். ஊவாம்பழமென்று சொல்லும் ஓர்வித ஈர்க்கின்பூ துணியில் மாட்டிக்கொண்டு குத்தும். ஒட்டடைப்புல் ஒட்டிக்கொண்டரிக்கும். கண்டங்கத்திரியும் சப்பாத்தியும் முள்ளுக்கீரையும் முள்ளிக்காய்ச் செடியும் ஒரேகாலத்தில் அநேக அம்புகளை வீசுவதுபோலும் வந்துதைக்கும். கொடிக்கள்ளியும் இலைக்கள்ளியும் ரணகள்ளியும் சதுரக்கள்ளியும் தாழையும் கற்றாழையும் சணற்றாழையும் கொலைபாதகரு மஞ்சும்படி அடர்ந்துகிடக்கும். தரை சில இடங்களில் இருமருங்கும் உயர்ந்தும் உயர்ந்தபக்கங்களில் பல பொந்துள்ளனவாயும் சுக்கான்கற்கள் பரந்தும் கிடக்கும். குளவிக்கூடுகள்போலவும், பேய்ப்பீர்க்கின்காய் உலர்ந்து மேற்றோலுதிர்ந்தபின் நிற்கும் வடிவுபோலவும், தேனடைகள்போலவும், கடற்பாசிபோலவும், சிறுபிள்ளைகள் விளையாடுவதற் கென்றுசெய்யும் தேர்-மரப்பாச்சி-பொம்மைகள்போலவும் கற்கள் எழுந்தும் பரந்தும் அரித்தும் குறைந்தும் பற்பல உருவுடன் கிடக்கும். ஒருமுனை இருமுனை மும்முனையாக நீட்டிக்கொண்டு, எவ்வளவு யோசனையுடனும் நிதானத்துடனும் காலைவைத்தாலும் குத்துவதும்

வெட்டுவதும் அரைப்பதும் தேய்ப்பதுமான பல மாறுபாடுள்ள இந்தச் சிறுக்கான் கற்களின்வழியாய் நடந்து அலுத்து ஆனாலும் மனவிசார மில்லாமல் வந்ததுவரட்டுமென்றும் எவ்வுயிரையும் காப்பதே தமக்கு ஆனந்தமான சிறுதொழிலாய்க்கொண்ட கடவுளிருக்கிறார் காப்பாற்ற என்றும் துணிவுகொண்டு பின்னும் சென்றான் பிரேமநாதன். அவ்வேளையில் சூரியன் மேற்றிசையில் மேகங்களுக்கு நடுவே சற்று வெளியாவதும் சற்று மூடுவதுமாய் அனலில் நன்றாய்க்காய்ச்சி யெடுத்த இருப்புக்குண்டுபோல் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். மேற்றிசையில் சிற்சில இடங்களில் மட்டும் செவ்வானமாயிருந்தது. சிற்சில இடங்களில் மின்னலின்வளைவு போல் மேகங்களின் விளிம்புகள் அனல்தோய்ந்து விளங்கின. சூரியனின் இரண்டுகிரணங்கள்மட்டும் மேலேநீண்டு பரந்திருந்ததைப்பார்த்தால் இதோ நான் ஸமுத்திரத்தில் முழுகிவிட்டேன் ஆழத்தைப் பாருங்களென்று கையை மேலே தூக்கியது போலிருந்தது. அரைக்கணத்தில் ஆகாயமெங்கும் நீருண்ட கார்மேகங்கள் நிறைந்துவிட்டன. மழைக்காற்று வீசியது. விளக்கேற்றிவைத்தாலும் தெரியாதென்று சொல்லும்வண்ணம் பூமியெங்கும் இருள் மூண்டுவிட்டது. திருடர்களெல்லாம் கொண்டாடுவதும் நல்லவர்களெல்லா மஞ்சுவதுமான காலம் நெருங்கிவிட்டது. பறவைகள் நானாவித இரைச்சலுடன் தத்தமிருப்பிடம் சேர்ந்தன. புலிமுதலிய கொடிய மிருகங்களும் தத்தம் குகையையடைந்தன. எவ்வித இரைச்சலும் ஓய்ந்துவிட்டது. விடர்களுக்கும் வியபிசாரிகளுக்கும் மனக்களிப்புச்செய்வதும் கட்குடியர்களுக்கும் திருட்டுத்தனமாய்ப் புலால் வாங்குவோர்க்கும் மறைவுசெய்வதும், எவ்வித உண்மை ஆனந்தத்தையும் மறைத்து எப்புலனையும் யாவர்க்கும் எவற்றிற்கும் ஓயச்செய்வதும், கடவுளின் படைப்புக்களின் இயற்கையழகைப் பார்க்க ஒட்டாமல் இருளாகிய திரையால் அவற்றை மறைப்பதும், கோட்டான்களும் ஆந்தைகளுமே மகிழ்ந்து திரிய இடந்தருவதும், எவ்விதத் துறவிகளுக்கும் உலக இன்பத்தில் சற்று நினைப்பைத்தருவதும், சிறுபிள்ளைகள் அஞ்சும்படியான பல ஞாபகங்களையும் உண்டுசெய்வதும் அற்ப இரைச்சலையும் பெரிய பயத்துடன் காட்டுவதும் தம்மை விட்டுப் பிரிந்துபோன உறன்முறையாரையெல்லாம் நினைத்து வருந்தச்செய்வதும் அது செய்யவேண்டு மிது செய்யவேண்டுமென வீணான யோசனைகளையெல்லாம் எண்ண இடந்தருவதும் கொலைகாரர்களுக்கு நன்மைசெய்வதும் வழிப்போக்கர்களுடைய மனதைக் கவலையென்னும் காய்ந்த மணலிவிட்டு வறுப்பதும், கடவுளில்லை நன்மையில்லை தீமையில்லை புண்யபாவங்கள் கிடையாவென்று

உறத்து வாதிப்பவர்களும் கடவுளென்றொருவ ரிருக்கலாமென்று தம் மனதுக்குள்ளேயே நம்பச்செய்வதும், எலி பெரிச்சாளிகளெல்லாம் இஷ்டப்படி வெளிவந்து திரிய இடந்தருவதும் தற்கொலைசெய்வோர்க்கு இனிதுமுடிவதும் கூட்டமாயிருக்கும் ஜனங்களைப் பலவாகப்பிரித்து அவரவர்களிருப்பிடத்துக்கு அனுப்புவதும் சுவரின்றிச் சித்திரமெழுதுவதுபோல் ஒன்றுமில்லாத இடத்தில் பேய்பிசாசென்றெண்ணி நடுங்கச்செய்வதும், வேஷக்காரர்களுக்கு கூத்தாடவும் பணம்பிடுங்கவும் உதவுவதுமான இராக்காலமும் வந்துவிட்டது. பார்ப்பவர்கள் கண்ணையும் மனத்தையும் பளிச்சென்றுபறித்து மறைவதும் யாவரையும் தன் கர்ஜனையால் நடுநடுங்கச்செய்யும் மிருகேந்திரனையும் அடங்கி ஒடுங்கச்செய்வதுமான மின்னல்களு மிடிகளும் வரவரமிகுந்தன. ஒரொருகால் மின்னும்போது அது துணையாகச் சற்றே இரண்டடி நடப்பான் பிரேமநாதன். சற்றே திகைத்துப்போய்நிற்பான். கடவுளை அடிக்கடி துதிப்பான். கண்ணீர்மழைசொரிவான். குருநாதா என்று வாய்விட்டலறுவான். தந்தாயென்றுருகுவான். ஆத்திரேயா என்று பெருமூச்செறிவான். இப்படிச் சிறிதுதூரம் செல்வதன் முன் பிரமாதமான சோனைமழையும் வந்துவிட்டது. பெரும்பெருந்துளிகளான கூரியகற்களால் அதிவேகமாய் மேலெல்லாம் சிறுவனையடித்து வருத்தியது. எங்குமிருளதிகரிப்பதும் இவ்விட மவ்விடமென்று காண முடியாததுமாய் தத்தித்தடுமாறி திசையறியாமல் இரண்டொருகால் கீழேவிழுவான். மேலெல்லாம் பதினாயிரம்முள்தைக்கும் ஹா ஆ அ! என்பான். ஏ மழையே! உனக்கென்ன தீங்குசெய்தேன் யான்? நீயென் சிற்றம்மைக்குறவா? அல்லதேதாவது குடுகுடுப்பாண்டி வந்து உன்னை பயமுறுத்தினனா. அல்லது உனக்கெவ்விதத்திலாவது வருத்தம்வரும்படிப் பேசினேனா? அல்லது உனக்குவேண்டிய யாவர்க்காவது ஏதாவ திடுக்கண்செய்தேனா என்பான் ஒருநேரம். இந்த உலகத்தின் அழகு இதுதானா அல்லது நமக்குத்தான் எங்குசென்றாலும் வருந்தியழவேண்டியகாலமா அல்லது காட்டுப்பாதைகளின் அழகு எப்போதும் இதுதானா என்பான் ஒருநேரம். சிரிப்பானொருநேரம் அழுவான் ஒருதடவை. கீழே உட்கார்ந்துவிடுவான் மறுபடி எழுந்திருப்பான். வரவர மழை அதிகரித்துவிட்டது. உலகமெங்கு மழியும்காலம் வந்ததோ? அல்லது ஆகாசவீதிதான் பொத்துக்கொண்டு ஜலம் ஒழுகுகின்றதோ (!) அல்லது ஏதாவது தேவதைக்குக் கோபமூண்டு உலத்தைக்கெடுக்க எண்ணியதோ? என்று ஜனங்கள் மூலைக்குமூலை சொல்லிக்கொள்ளும்படி சொரிந்தது. இரண்டொரு பிரமாதமான இடிகளும்விழுந்தன.

கீழெல்லாம் பெருவெள்ளமோடியது. பிரேமநாதனைப் புறட்டிப் புறட்டித் தள்ளிக்கொண்டேசென்றது. நடுவே ஓரிடத்தில் குப்பை கூளத்துடன் இவனையும் கொண்டுபோய்ச் சற்றே ஒதுக்கும் அங்கிருந்திழுக்கும் மறுபடி எங்காவது கொண்டுபோய் மோதும். இப்படியே தத்தித்தவறி உயிர்போய்ப்பிழைத்துக் கடைசியாய் ஓர் பாழ்மண்டபத் தண்டையில் கொண்டுபோய்விட்டது. அங்குமெள்ளப்போய் ஏறிக்கொண்டு தன் இடுப்பிலிருந்த ஒரு துணியைப்பிழிந்து உடம்பெல்லாம் நன்ருய்த் துடைத்துக்கொண்டு அதையே போர்த்துக்கொண்டு ஓரிடத்திலிருந்து, நமதுகதி யெப்படியானலும் ஆகட்டும். இந்தமாதிரி மழைக்கும் இடிக்கும் இலக்காய்த்தானே இருக்கிறது மனிதஜன்மம் ஐயோ! ஏழைகளென்செய்வார்கள். வீடுகளெல்லாம் வெள்ளத்தி லடித்துக்கொண்டுபோகுமே. நமக்கு நடுக்குவதுபோல்தானே நடுக்கும். பெண்சாதியும் புருஷனும் சிறுகுழந்தைகளுமாய்த் திண்டாடுவார்களே. அன்றன்றுதேடிப் பிழைத்துவரும் ஏழைகளுடைய சிறு வீடுகளும் அற்பஸாமான்களும் போய்விட்டால் அவற்றை மறுபடிதேடி யடைவது வருத்தந்தருமே என்று ஏதேதோ எண்ணி ஏழைகளுக்காக வருத்தப்பட்டான். இப்படிச் சிறிதுபோழ்துபோக மழையும் ஓய்ந்து மேகங்களும் விலகி பளிச்சென நிலவு புறப்பட்டது. அங்குமிங்கும் பார்த்தான் பிரேமநாதன். அவனுக்கடுத்தாற்போல் அவனைப்போலவே மழைக்கு பயந்துவந்து அண்டியனவாய் சிலபுலிகளும் பசுக்களும் மான்களும் மெய்ம்மறந்து தூங்கின. சிலபாம்புகள் கற்களின் இடுக்குகளில்போய்க் கிடந்தன. அவற்றின் பக்கத்தில் மழைக்கஞ்சாத் தவளைகள்கூட ஒடுங்கி முடங்கிக் கிடந்தன. இதுமுதலான பல ஆச்சரியங்களைக் கண்டு வியந்து பயந்து அங்கிருந்து புறப்பட்டு நிலவே வழிநடத்த நெடுந்தூரம் நடந்து பொழுதுபுலர, சற்றுநேரத்தில் மிகுந்த கோபத்துடன்வரும் அரசனைப்போல் தன்னல் பிழைக்கும் ஜனங்களைப்பார்க்கும்படி கதிரவன் அதிகச்சூட்டுடன் உதயமாயினன்.

அந்தவழியெல்லாம் பெருவருத்தம் தருவதாயிருந்தது. சிற்சில இடங்களில் பெரிதுபெரிதான கற்கள் கணக்குவழக்கில்லாமல் கிடக்கும். காலை அவற்றின்மேல் வைத்தே நடக்கவேண்டும். அப்படிவைக்கும்போது கற்கள் தவறி அல்லது கால் தவறி கீழே விழுவான். ஒருவேளை கற்களின் இடுக்குகளுக்குள் கால் அகப்பட்டு வருந்துவான். ஒருபோது காலின் இடதுபக்கம் மாட்டிக்கொள்ளும். சில கற்கள் குத்தும், சில வெட்டும், சில எரிச்சல் உண்டாக்கும், சில காலைத்தேய்க்கும்; சிலசில இடங்களில் கற்களி

ல்லாமல் மணலே அதிகமாய்க்கிடக்கும், சுக்கான் தரையாகவேயிருக்கும். வெயிலேற ஏற வியர்வை உடம்பெல்லாம் பெருக ஊணுறக்கமில்லாத துன்பத்தால் தள்ளாடிக்கொண்டே இவ்விடம் போகவேண்டுமென்ற ஒரு குறித்த இடமில்லாமல் காலிழுத்தவாறெல்லாம் சென்றான். வெயிலுக்கொதுங்கவென்றால் கருவேல்மரங்களும், நெருங்கியடர்ந்த மூங்கிற்புதர்களும் கொகுளைமரங்களுந்தவிர வேறில்லாததால் சுடச்சுடக் குதித்துக்குதித் தோடுவான். அழுவான். எங்குபார்த்தாலும் தண்ணீரென்னும் பெயர்கூட ஞாபகத்துக்கு வரும்படியான எதுவே கிடையாது, இப்படியே நெடுந்தூரம் நடந் தலுத்து போக்கற்று, காலெல்லாந்தேய்ந் துதிர மொழுக உடம்பெல்லாம் கன்னிப்போக, கண்சுழல, வயிறு குமைய, தலை கிறுகிறுக்க ஒன்றுந் தெரியாமல் அங்கோர் மரத்தடியில் வீழ்ந்தான் பிரேமநாதன். அது அரசமரம். ஏதோ நடுக்காட்டில் முளைத்திருந்ததென்றாலும் வைகாசிமாதத்தின் பின்காலமாகையால் இலையெல்லாம் உதிர்ந்து புதிது புதியாய் இளந் தளிர்கள் பளபளவென்று மின்னிக்கொண்டிருந்தனவேயன்றிக் கொஞ்சமாவது நிழல்தரவில்லை. படுத்த பையனே இவ்வுலகத்தை மறந்தவனாய்ப் பகலெல்லாந் தூங்கினான். பொழுதுபோகும்வேளையில் அங்கு தெய்வச்செயலாய் இரண்டு பார்ப்பார்கள் நடந்துவந்தார்கள். சிறுவனைக் கண்டார்கள். கிட்டவந்து உற்றுப்பார்த்தார்கள். பார்ப்பனக்குழந்தையென்றே காண அதிக சந்தோஷமுள்ளவர்களாய் 'நல்லபசு' என்று சொல்லிக்கொண்டு தட்டி எழுப்பினார்கள். எவ்வளவோ அலுப்புடனும் பசியுடனும் வலியுடனும் விசாரத்துடனும் மயங்கி விழுந்தவனாகையால் பிரேமன் எழுந்திருக்கவில்லை. அவன்முகக்குறிப்பையும் அவன் காலினின் றொழுகிக் காய்ந்திருந்த ரத்தக்குறிகளையும் இடுப்புவரையில் படிந்திருந்த புழுதியையும், வியர்வையாலும் மழையின் ஈரத்தாலும் கருத்துத்தடித்த இடுப்பின் துணியையும், வியர்த்துக் காய்ந்து அழுக்கு நிறையப் படிந்திருந்த அவன் உடம்பையுங்கண்டு உள்ளதை அறிந்து இருவருமாய்த் தூக்கிக்கொண்டு நெடுந்தூரம் நடந்து தமது வீட்டுக்குள் புகுந்து அங்கோர் அறையில் படுக்கவைத்திருந்தனர்.

முதல்நாளிரவு கழிந்து மறுநாளிரவின் முதல்யாமம்போய் சந்திரோதயமாகிறகாலத்தில் அவன் படுத்திருந்த அறையின் பலகணிகளின் வழியே குளிர்ந்த கிரணங்களால் சந்திரனேவந் தணைத்துத் தழுவியது நமது பிரேமனை. உடனே விழித்துக்கொண்டான். ஒன்றுந் தோன்றவில்லை. 'நாம் வந்தது காடல்லவா? இங்கேது விளக்கு! நாம் படுத்தது மரத்தடியல்லவா? இதேது மெத்

தை! ஓஹோ! கனவுதானோ-நமது இடமோ குளிர்ந்த நிலத்தில் மரங்கள் சுற்றிய வீட்டில் தண்ணீர் ஓரத்திலிருப்பதுபோல் தெரியவருகிறது. இந்த அறையின் சுவற்றில் பெரிய பெரிய ஜன்னல்கள் வைத்திருப்பதையும் இங்குள்ள பொருள்களையும் பார்த்தால் ஏதோ பிரபுவின் வீடுபோலிருக்கிறது. ஆபத்திலுதவும் கடவுளதுசெய்கையோ, அலது நமது மூளைதான் மிகக் கலங்கிவிட்டதோ? இல்லையானால் இவ்வளவு நொடிக்குள் துன்பம் மாறி இன்பம் வருமா? இது அதிசயந்தான்' என்றெண்ணி படுக்கையைவிட்டெழுந்தான். அவன் படுத்திருந்த இடமோ பெரிய ஊஞ்சலிவிட்ட பஞ்சணை. காலெல்லாம் தடவினால் வழவழப்பாயிருந்தது, சிறிதும் வலியில்லை. இதனால் யாரோ தன்காலில் விளக்கெண்ணெய்தடவி வெந்நீர்விட்டு உருவிக் கழுவியதாகத் தீர்மானித்தான். அங்குமிங்கும் பார்த்தான். ஒரு தொட்டிநிறைய குளிர்ந்த தண்ணீர் விட்டிருந்தது. அதன்பக்கத்தில் ஓர் முரட்டுத்துணி வைத்திருக்தது. அவை தனக்கென்றே வைத்திருந்தனவாக எண்ணி அந்நீரில் மூழ்கி உடம்பைத் துவர்த்திக்கொண்டான். உடனே படீரென அங்கோர் கதவுதிறந்தது, ஒரு சிறு பெண் உடம்பெல்லாம் ஆபரணமணிந்தவளாய் ஒரு கையில் பாலும் மறுகையில் சாதமும் கொண்டுவந்தாள். பிரேமனுக்கோ ஏதோ விபரீதமென்றே தோன்றியதொழிய பார்ப்பாரது செய்தி சிறிதும் தெரியாது. ஆதலால் நடப்பதையெல்லாம் பார்ப்போமென்றிருந்தான். வந்த சிறுமி ஓர் தோய்த்துலர்ந்த துணியை அவனுக்குக் கொடுத்துக் கட்டிக் கொள்ளச்செய்து பாலைக் குடிப்பித்துச் சற்றுக் களைப்பாறிய உடன் உணவும் அளித்து பிறகு வந்தவழியே சென்றாள். சிறுவன் ஏதேதோ எண்ணிப்பார்த்து கனவென்றே தீர்மானித்து கீழெல்லாம் தடவினான். எழும்பிக் குதித்தான். 'ஐயோ, கனவில் சோறுண்பதாகக்கண்டால் வியாதிக்கிடமென்று சொல்லுவார்களே' யென்று கையைக் கையை முகர்ந்துபார்த்தான். நெய்மணம் வீசியது. எல்லாம் பார்த்துக்கொள்ளுவோமென்று உடனே மறுபடியும் மஞ்சத்தில் படுத்து நல்ல காற்று வீச விசாரமெல்லா மொழிந்து தூங்கினான்.

மறுநாள் அருணன் இந்திரன்திசையை யடையும் தருணத்தில் பார்ப்பான் தன் தம்பியுடன் பிரேமநாதன் படுத்திருந்த அறைக்குள்போய் அவனைத் தட்டி யெழுப்ப உலகத்தாரெல்லாம் விரும்புவதும் யாவர்க்கும் நன்மைசெய்வதுமான இளஞ்சூரியனைப் போல் அலுப்பென்னும் அஸ்தகிரியினின்றும் விழுந்து தூக்கமென்னுங் கடலில் குளித்து வலியும் விசாரமும் தீர்ந்தவனாக எழுந்தா

ன் பிரேமநாதன். அங்குமிங்கும் பார்த்தான். கனவல்லவென்று துணிந்துகொண்டான். அதற்குள் பார்ப்பான் சிறுவனைத் தழுவி இனியமொழிகள் பேசி ‘நீ எந்தவூர், எந்தக்குலம், உன் தந்தை தாயர் யாவர், உன்பெயரென்ன, நீ எப்படி காட்டுவழியில் வந்தாய் எல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லப்பா’ என்று வினவவும் சிறுவனும் தன் வரலாறு ஒன்றும்விடாமல் மனக்களிப்புடன் சொன்னான். எல்லாவற்றையும் கேட்ட பார்ப்பான் முகமலர்ந்து தன் தம்பியைப் பார்த்து ஏதோ குறிப்புகள் காட்ட அவனும் அகமகிழ்ந்து பதிலான குறிகளைக் காட்டினான். சிறுவனுக்கு அக்குறிகளின் பதில் சற்றுந் தெரிய இடமில்லை. பார்ப்பான் “பையா! நீ இனி நமது குழந்தை. எதற்கும் விசாரப்படாதே. எவ்வளவும் ஐயம்கொள்ளாதே. வேண்டியதை வாய்விட்டுக் கேட்டுப் பெற்றுக் கொள். இது உன்வீடென்றும் நாங்கள் உன் மனப்படி நடப்பவர்களென்றும் நம்பு” என்று சொன்னான். அதுமுதல் பிரேமன் ராஜோபசாரத்துடன் எல்லாம் பெற்றுக் கொழுத்துப் பளபளவென்று மின்னினான். ஒவ்வொருநாளும் காலையிலெழுந்து தலைமுழுகி தேவர்கடன் இருடியர் கடன் எல்லாம் முடித்து நெடுநேரம் கடவுளைத் துதிப்பான். ஆசானை நினைந்து நினைந்து வணங்குவான். தான் இருப்பதையும் இருந்ததையும் எண்ணி ஏதேதோ தீர்மானிப்பான். இந்த நேரமும் உண்ணும் வேளையும்போக பகற்போதெல்லாம் ஏதாவது படிப்பான். அந்த வீட்டின் ஈசானிய மூலையில் தெற்கைப்பார்த்த ஒரு சிறு உள். அதில் ஒரு சிறு தேர்போல் மரத்தால் செய்து மேலெல்லாம் தங்கத்தகடிட்டுள்ள ஓரிடத்தில் உயர்ந்த பீடத்தில் பட்டுமெத்தையில் அம்மன் விக்ரஹம் ஒன்று. இதை அந்த வீட்டார்களெல்லாம் அதிக அன்பாய் பாராட்டி பூஜை நைவேத்தியங்கள் செய்துவருவார்கள். இதன்முன் உட்கார்ந்துகொண்டு இடதுகைக் கட்டைவிரலில் ஒரு பட்டுக் கயிற்றை சுற்றிக்கொண்டு ஏதோ முணுமுணுப்பார்கள். பிரேமனுக்கு இதுமட்டும் மனவேதனையாயிருக்கும். ஆனாலும் ஒருநாளாவது ஒருவார்த்தையாவது அதைப்பற்றிச் சொன்னதுகிடையாது. வெள்ளிக்கிழமைகள் வந்துவிட்டால் அந்தச் சிறு கோயிலுக்குள் ஏதேதோ நடக்கும். நெடுநேரம் மணியடிப்பார்கள். குதிப்பார்கள். தாளம்போடுவார்கள். பாடுவார்கள். பிரேமநாதன் இதிலெல்லாம் கலப்பதுகிடையாது. தனியேயிருந்து ஏதாவது ஆலோசிப்பான். கடவுளது பெருமையையும் அளவற்ற நல்ல குணங்களையும் நினைந்து நினைந்து தன்னை நினையாமல் கண்ணீர் சொரிவான். உடம்பெல்லாம் மயிர்க்குச்செறியும். உன்மத்தர்கள்போலாவான்

‘என்னே! எப்படிப்பார்த்தாலும் தாமேயாகத் தொழிற்படாப் பூதங்களை ஆன்மாக்களுடைய உபயோகத்துக்கேயாகக் கூட்டியும் பிரித்தும் திருவிளையாட்டுச்செய்கின்றனர். ‘யாவருடைய அறிவையும் தமதறிவுக்கு வசமாய்க்கொண்ட பேரறிவனாய்த் தாமொருவரே காரணனாய் அளவற்ற காரியப்பாட்டை நடத்தி மகிழ்கின்றனர்’ என்று நினைந்து இரைந்து கண்ணீரும் கம்பலையுமாய் நிற்பான். இவனுடன் இந்தக்காலங்களில் அவ்வீட்டார் கலப்பதுகிடையாது. ஆனால் வரவர இவனுக்கு உபசாரமட்டும் அதிகமாய்ச் செய்வார்கள். எந்தவேளையில் எதுவேண்டுமோ அதை முகக்குறியறிந்தே வலிந்து செய்வார்கள். பௌர்ணமி தினங்களில் அதிகவிசேஷமாகப் பூஜைமுதலியன செய்வார்களானாலும் இவனுடன் கூட யாராவதிருந்து வேண்டியது உதவுவார்கள். சிற்சில காலங்களில் பிரேமன் வெளியேசென்று கடவுளின் படைப்பின் அழகைப்பார்த்து மகிழ்வதுமுண்டு. இப்படியாகக் கிட்டத்தட்ட ஆறுமாதம் யாதொரு விசாரமுமின்றி வளர்ந்து உடம்பு தேறி புதிய களையும் புதிய மேனியும் வந்து மத்தயானைபோலாயினன்.

அப்போது நவராத்திரிக்காலம் வந்தது. ஓர்நாளதிகாலையிலெழுந்து சிறுவனை எண்ணெய் முழுக்காட்டி நல்ல தோய்த்துலர்ந்த துணியை இடுப்பில் சுற்றி தயிரும்பழையதுமாய வயிறுநிறைய உண்பித்து நெற்றியில் குங்குமமிட்டுக் கூட்டிக்கொண்டு அண்ணன் தம்பிகளிருவரும் முன் நாம் சொல்லியுள்ள காளிகோயிலை நோக்கி பூஜை நைவேத்தியத்துக்கு வேண்டிய எல்லாப் பொருள்களுடனும் புறப்பட்டார்கள். அங்கு சென்று உள்ளே புகுந்து இடதுகைப் பக்கத்திலிருந்த குளக்கரையின் ஓர் மரத்து நிழலில் சிறுவனை இருக்கச்செய்து தாம் கொணர்ந்த பொருள்களையெல்லாம் அவன்வசம் கொடுத்து விறகு கொண்டுவரும்படி அடுத்த காட்டுக்குள் நுழைந்தார்கள். இதற்குள் யாரோ ஒரு வேடன் மிகக் களைத்து வேர்வை கொட்ட பெருமூச் செறிந்துகொண்டு விரைவாய்க் குளத்தண்டை வந்து இருகைத் தண்ணீர் அள்ளிக்குடித்துச் சிறுவனைப் பார்த்து “நீங்க யாருங்க - எங்குவந்தீங்க” என்று கேட்டு தெரிந்துகொண்டு, ‘ஓ சாமி! எம்பின்னே வாங்க, யசமாங்களை கூட்டிக்கிட்டுவந்த வுங்க பராமணாளானாலும் பொணந்தின்னிப் பூச்சியுங்க. இங்ஙனே உள்ள பாப்பாரபசங்களய்த்தான் நாங்ககூட மரிசாதெ பண்ணமாட்டேங்க’ என்றான். சிறுவன் இந்தச் செய்திகேட்டு சிவசிவ என்று காதைப் பொத்திக்கொண்டு, ஐயோ கலிகாலக் கொடுமையே! எவ்வளவோ உபகாரிகளாக மற்றவர்களுக்காகவும் தாம் வலிந்து பாடுபட்டு பல கலைகளையும் கண்

டிபிடித்து அவ்வக் காலங்களில் நல்ல யுக்திகள் எல்லா வருணத்தினர்க்கும் சொல்லி ஒவ்வொருவருக்கும் மோக்ஷத்திற்கேற்ற வழியைக் கற்பிக்கும் மறையோரை இழிஜனங்கள் பாப்பாரப்பசங்க என்று சொல்லலாயிற்றே! ஒவ்வோர் காலங்களிலும் 'எல்லா ஜனங்களும் சுகமாய் வாழ்க' என்று தெய்வத்தைப் பிரார்த்திக்கும் அந்தணரை அறிவற்ற வேடர்களும் திட்டிப் பேசுவது என்ன கொடுமை! என்று எண்ணிச் சிறிதுநேரம் வருந்தி, 'யாரடா மூடா உன்னை யாரடா இங்கு வரச்சொன்னது. இங்கே பூஜை நடக்கப்போகிறது கிட்ட வராதே. வெளியேபோடா உளராதே உன்னையடிப்பே' னென்ருன்.

வேடனே 'யசமாங்க கொளந்தேங்க. ஒண்ணும் திரியாதுங்க. இந்தப் பாப்பாரப்பசங்க கள்ளும் குடிப்பானுங்க. யசமாங்களை கொன்னுபோடுவானுங்க. அவுங்க இப்பளே வரிசாவரிசம் வருவானுங்க. நானும் கண்டிட்ருக்கேனுங்க. இங்கிருக்காதயுகசாமீ! கும்பிடுபோடரேன், ஓடிப்போய்த்திடுங்க. எளெசொன்ன தள்ளாதேயுங்க. அடியன் இசிசாதிப்பயதான். ஆனுங்க இந்தப் பாப்பாரப்பசங்க கொல்லிப்போடுவானுங்க' என்று மறுபடியும் சொன்னுன்.

சிறுவன் "அடாபாவி இந்தவார்த்தையை என்னிடம் சொல்லாதே. எல்லாரையும்போல் இவர்களை நினையாதே. நான் பட்டபாடும் இவர்களிடம் வந்தபின் அடைந்த நன்மையும் கேட்டிருந்தால் இப்படி நீ சொல்லமாட்டாய். 'தன்னூன் கொழுத்தற்குத் தான் பிறிதூனுண்பா—னெங்ஙன மாளு மருள்' என்று பெரியவர் சொல்லியிருப்பதால் என்னிடம் அருளோடிருக்கும் இவர்கள் கொலையாளிகளே அல்லர். நான் உண்ட வீட்டுக் கிரண்டு நினைப்பவனல்ல. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது நீதிமொழி. அப்படியிருக்க நடுக்காட்டில் உயிர்போய்க்கிடந்த என்னை நான் அறியாமல் தூக்கிக்கொண்டுவந்து தேற்றி உயிரைத் தந்த இவர்களை எனையோராய் நீ எனெண்ணினுய்" என்று தன் கதையை விஸ்தாரமாய்ச் சொன்னுன். வேடனும் மறுபடியும் சிறுவனுக்கு முன்போலவே சொல்லி, அவர்கள் வளர்த்ததும் உதவியதும் ஆடடிப்பவனும் கோழியடிப்பவனும் அவற்றை அன்புடன் வளர்ப்பதுபோலவேதானென்று தெரிவித்து அவர்கள் கொலைகாரர்களென்பதுண்மை யென்று ஆணையிட்டு ஒரு நொடிக்குள் ஓடிவிடும்படி வேண்டிக்கொண்டான்.

சிறுவனே கோபம் மூண்டு 'அடா தடியா! சாதிக்குத் தக்க புத்தியென்று பேசிவிட்டையே. இனியென் முன் நில்லாதே. அவர்

கள் கொன்றால் அது எனக்கு மிகவும் பிரியந்தான். வலுவில்வந்த எப்போதும் பழக்கமில்லாத உன் வார்த்தையை நான் நம்பவேமாட்டேன். நீ ஓடிவிடு’ என்று மிகுந்த கதத்துடன் சொன்னான்.

வேடனும் ‘கொளந்தச்சாமீ பொல்லாத வேளைங்க. இல்லாட்டி நல்லது சொன்னா தெரியாமலிருக்குமா? இபீசனங்க சொன்னா ராவணன் கேட்டுக்கிட்டானா? அப்பங்களும் குருக்கங்களும் சொன்னபோதுங்க திரியோதனராஜா கேட்டுக்கிட்டானா? எசமாங்களுக்கு நெம்ப வயசாயிட்டில்லை அதாங்க அறிவு நல்லபடி வந்திட்டில்லேங்க. ஆட்டை பூசைபோடக் கொண்டுபோளய்க்கும் ஆடுதளதிங்கும் என்னு பாட்டுக் கேட்டிருந்தா இங்ஙனே சொல்லுவீங்களா’ என்று சொல்லிக்கொண் டகன்றனன்.

சிறுவனும் “வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
அறிவுடை யாளர்க ணில்.”—என்ற பாட்டின் கருத்தாயிருக்குமோ அவன் சொன்னதென்று ஆலோசித்துக்கொண் டேநிற்க பார்ப்பார்களிருவரும் வழக்கம்போலவே காட்டுவிறகொடித்துக்கொண்டு வந்தார்கள். தம்பியை அடுப்புமூட்டியொருநொடியில் சமையல்செய்யும்படி சொல்லிவிட்டு அண்ணன் சிறுவனைக் குளத்தில் முழுகச்சொன்னான். சிறுவன் தான் இரண்டாந்தடவை ஏன் முழுகவேண்டுமென்று சிறிதும் ஸந்தேகப்படாமலே ஒருநொடியில் குளித்துக் கரையேறினான். அவனிடுப்பில் ஓர் மஞ்சளில் நனைத்த துணியைக் கட்டிவிட்டபொழுதும் சிறுவன் ஒன்றும் எண்ணவில்லை. பிறகு குங்குமம் தீட்டியபோதும் வாய்திறந்தானில்லை. கழுத்தில் ஓர் அலரிமாலையைப் போட்டபோதும் இதுதான் வழக்கமாக்குமென்று சும்மா இருந்துவிட்டான். பிறகு கோயிலைச்சுற்றி மூன்றுதடவை வந்தபோதும் சிறுவன் மனத்தில் மாறுதலைக் காணோம். ஆனால் அதன்பின் பார்ப்பான் பிரேமனைப்பார்த்து “ஏ பசுவே! நீ பாக்யசாலி உன்னை நானிவ்வளவுநாள் வளர்த்து உன் மனம் கோணாமல் நடத்தினேன். உன்னால் எனக்கும், என்னால் உனக்கும் நன்மையுண்டாகவேண்டியிருக்கிறது. இதோ நிற்கின்றாளே பரதேவதை இவளுக்குன்னை பலியிடப்போகிறேன். நீ மனம் கோணாதே உனக் கினி பிறப்பிறப்புக் கிடையாது. நீ பயந்தால் அம்மனுக்கு கோபம்வந்து உன்னை நரகத்திலிடுவாள் எனக்கும் பைத்யம்பிடிக்கும் நினைத்தது முடியாது நீ தப்பி ஓட நான் பார்த்திருக்கவுமாட்டேன் நீயோ சிறுவன், ஒண்டி, இதுவும் தனிக்காடு” என்று சொல்லிக்கொண்டே வரும்போது பிரேமனு

க்கு சிறிது அச்சமுண்டாய் தான் வேடனுடன் பேசியதை அறிந்து தன் மனதை இப்படி பார்ப்பான் பரிக்ஷிப்பதாய் எண்ணி, "என்னையேன் இப்படி அஞ்சும்படி பரிஹாஸம் செய்கிறீர்கள்! என்னை அருமைக்கருமையாய் வளர்த்த நீங்களா கொல்லுவீர்கள்? இதென்ன விளையாட்டு" என்று சொன்னான்.

பார்ப்பானோ "ஏ பசுவே! நீ விளையாட்டாய் எண்ணாதே. உன்னைக் கொல்லவேபோகின்றேன். இதோ உனக்கு முன்னாலிருக்கிற பரதேவதையை நீ மனதாறவேண்டிக்கொள். உன்னிஷ்டத்தை அம்பாள் பரிபூர்த்திசெய்வாள். எவ்வளவுநேரம் வேண்டுமானாலும் எதிரேநின்று வேண்டிக்கொண்டிரு. ஆனால் மண்டியிட்டு முழங்காற்சில்லை ஊன்றி கண்ணை மூடி மனதை பகவதியிடத்திலேயே செலுத்து நான் உன்னை அம்பாள்பாதத்தில் சேர்த்துவிடுகிறேன்," என்று சற்று மிரக்கமின்றிப் பேசினான்.

பிரேமனுக் கிம்மொழியிற் சிறிதும் நம்பிக்கையேயில்லாமல் பலமுறை பலவிதமாக இனியமொழியால் கேட்கும் பார்ப்பான் 'கொக்குக் கொன்றேமதி' என்பதுபோல் தான் சொன்ன ஒரு சொல்லையே மறுபடி மறுபடி சொன்னான். பையனுக்கு கடைசியாய் உண்மை தெரிந்து சிறிதுநேரம் நெஞ்சந் தடுமாறி பிறகு தெளிந்து துணிந்து பகவதியின் எதிரே முழங்காற்படியிட்டு, இவ்வுலகத்திற்கும் தனக்குமுள்ள உறவெல்லா மொழிந்ததென்று கண்ணைமூடி, தன் வழிபடுகடவுளை மனதிலெண்ணி, தன் குருநாதனையும் நண்பன் ஆத்திரேயனையும் உடனே அடையவேண்டுமென்று பகவதியை ஸத்ய பக்தியுடன் வேண்டி நின்றான்.

இதற்குள் பார்ப்பான் உள்ளே நுழைந்து ஒருபெரிய அரிவாளைக்கொண்டுவந்து அதைத்தண்ணீரிற்கழுவி அதன்மேல் மஞ்சள் பூசி குங்குமம்தீட்டி அலரிப்பூவைச் சுற்றி பகவதியின் பாதத்தில் கிடத்தி சிறிது துதித்துவிட்டு "சிவேபாஹி சிவேபாஹி குருகடாக்ஷம்" என்று சொல்லிக்கொண்டே அரிவாளுடன் வந்து அதை விரைவாய் உயர்த்தி தன் கண்ணை சற்று மூடி வாயை முணுமுணுத்து பிறகு கையை ஓங்கி வீசினான். அத்தறுவாயில் ஒருநொடிக்குள் இரண்டம்புகள் ஓடோடி வந்து ஒன்று ஓங்கிய கையையும் ஒன்று அக்கையோடு கூடப்பிறந்த கழுத்தையும் இருதுண்டங்களாய் வெட்டி வீழ்த்தின. அப்போது "ஹா சிவே!" என்றலறிக்கொண்டு மூன்றுகூறாய் விழுந்து மடிந்தான் கிராதகத்தடியன். இவனுடைய குரலைக்கேட்டு இவன் தம்பி ஏதோ சிறுவன்காரியம் தீர்ந்துவிட்டதுபோல் சமைத்த சோற்றை ஒரு மண்வாணயி லெடுத்துக்

கொண்டு விரைந்தோடி வந்தான். வந்தவன்மீது ஒரு அம்புவந்து விழுந்து அவன் சிரத்தைக் கொய்தது. உடனே முன்வந்த வேடன் மறுபடி ஓடிவந்தான். சிறுவனைக் கட்டிக்கொண்டான். முத்தமிட்டான். எழும்பிக் குதித்தான். ஆனந்தமேலீட்டால் ததும்பினன். அதுவரையிற் கண்ணைமூடி இவ்வுலகத்தையே மறந்து தன் குருநாதனின் திருவடியிணையையே விசேஷமாய் நினைந்திருந்த பிரேமநாதன் கண்ணைத் திறந்தான். நடந்ததெல்லா மறிந்தான். வேடனுக் கினியமொழியாய் "அப்பனே நானே சிறுவன். நீ சொன்னதைக் கேளாமற்போனேன். நல்ல வேளையாய் எப்படியோவந் துதவினை. ஒருபோதும் என்னை யறியாமலிருந்தும் என்னால் யாதொரு உபகாரமும் அடையாதிருந்தும் என்னிடமெதையுமெதிர்ப்பாராமலிருந்தும் தக்ககாலத்தில் வலுவேவந் துதவிய உன்னைப்போன்ற உத்தமன் யாருண்டு! 'செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும் - வானகமு மாற்ற லரிது' என்றே பெரியோரும் சொன்னர். நீ யெந்த ஜாதியாயிருந்தாலென்ன? எந்தப்பழக்கமுள்ளவனுயிருந் தென்ன! உன் குணத்தாலும் செய்கையாலும் அதனுலிப்போதுள்ள முகக்குறியாலும் நீ அந்தணனேயாயினை. என் குருநாதன் அருளால் உனக்கெல்லா நன்மையும் உண்டாவதாக" என்று ஆசி கூறினன்.

வேட்டுவனும், "அது கிடக்கிடு - சாமி யிருக்குதுங்க" என்ருன். சிறுவன் பின்னும் ஆசைமிகுந்து "அப்பனே நீ கோபித்துக்கொண்டு சென்றையே. இதுவரையில் என்னமாய் அந்த கிராதகர்கள் கண்ணில்படாமல் எங்கே ஒளித்திருந்தாய்" என்றனன்.

வேடன் "அந்தலே குதிரைச்சாமி யிருக்குதுங்க கண்டீங்களா அங்கே காலடியில் ஒதுங்கிக்கிட்டேனுங்க" என்ருன். பின்னர் சற்றுச் சிறுவனைக் கடிந்துகொண்டு அதனுலேயேதான் இரண்டுபேரைக் கொல்லவேண்டி யிருந்ததென்றும், கொல்லா விரதமே தன்னுடையதென்றும் ஒருவரை யொருவர் கொல்லாதபடி உதவி செய்துகொண்டே தன்ஜன்மத்தைக் கழிப்பதில் ஆசை தனக்கு மிகுதியென்றும் ஆனல் இப்போது மிஞ்சிப்போனதைக் குறித்துப்பேசுவதிற் பயனில்லையென்றும் "நானுங்க போய்த்துவரேனுங்க. பாப்பாரச்சாமீ சொய்த்தமாப் பொய்த்திடுங்க" என்றும் சொல்லிவிட்டு மெல்ல நடந்தான்.

சிறுவனே தன்னை அக்கொடிய காட்டில் தனியாய்விட்டுப் போகக்கூடாதென்று மிகவும் வருந்திக் கேட்டதால் வேடனும் நல்லதென் றெப்புக்கொண்டு வில்லையும் அம்புப்புட்டிலையும் நனை

த்தெடுத்துக்கொண்டு விரைவில் வழிநடந்து இரண்டு ஜாமத்துக்குள் நெடுந்தூரங் கடந்து அன்பிலண்டைவந்து சிறுவனை நோக்கி "பராமணச்சாமி போய்த்திடுங்க" என்று சொல்லிவிட்டு தன் வழிச்சென்றான். பிரேமநாதனும் இவ்வளவு பரோபகாரமும் நல்லபேச்சும் வேடர்களுக் கிருப்பது ஆச்சரியமென்று பலவாறு புகழ்ந்துகொண்டே அன்பிலுக்குள் வந்து ஓர் திண்ணையில் அந்த இரா முழுவதும் படுத்துத் தூங்கினான்.

"கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து"

"அருவினை யென்ப வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்"—குறள்.

அதிகாரம்—கூ.

"அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு"—திருவள்ளுவர்.

'ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்' என்று பெரியோர் சொல்லியவண்ணமே இவ்வுலகின் காரியங்க ளிருப்பதால் பிரேமனுக்கும் நல்லகாலமும் பொல்லாதகாலமும் நிடீரென்று இதுவரைவந்துகொண்டிருந்தன. முதல்நாளெல்லாம் பயத்தாலும் அலைச்சலாலும் ஊணற்றிருந்ததாலும் அசைதி மிகுந்திருந்ததால் மறுநாட்காலையில் வழக்கம்போல் எழுந்திராது தூங்கிக்கொண்டே இருந்தான். அந்தநேரத்தில் ஓர் சிறுபெண் அங்கு தன் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்த பிரேமனைக்கண்டு தன்தகப்பனை அழைத்துக்காட்ட அவரும் 'இவன்யாரோ? தேவனோ அல்லது மனிதன்தானோ! உலகத்தாருக்குத் துன்பம்வந்தபோதெல்லாம் அவதாரம்செய்து எவ்வளவோவருந்தி யாதொரு கைம்மாறும் விரும்பாதவராய்க் காக்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுதானோ என்றால் இடதுகையைக் கீழேவைத்து தரையில் கிடக்கிறான். அண்டபிண்ட சராசரங்களையெல்லாம் படைத்தருளும் பிரமனோ எனில் இது அவருக்கு நடுப்பகலாகையால் தூங்கக்கூடாதே. தோன்றியதெல்லாம் அழியும்படிச் செய்துவரும் பிறவா நலமுடைய மறையோனாகிய உருத்திரமூர்த்தியோ எனில் நிறம்வெளுப்பல்லவே. தேவர்களுக்கெல்லாம் அதிபனாகிய இந்திரனோ எனில் ஆயிரங்கண்ணில்லை. உலகத்துக்கெல்லாம் ஒளிதந்து உயிர்களைவளர்க்கும் வெய்யவனோ எனில் குளிர்ந்த சிரித்தமுகத்துடனுள்ள இவனுடம்பிலிரு

ந்து விரியும் ஜோதியில் சூரியனுடைய ஒளி தானே மறைவதாயிருக்கிறது. உலகத்துக்கினிய சந்திரனோ வெனில் இவனிடம் யாதொரு மறுவையும் காணோம். திருமாலின் இனியமகனாகிய ஐங்கணைக்கிழவனோவெனில் பகற்காலமாயிற்றே. அக்னியோவெனில் ஏழுநாக்குக ளில்லையெனத் தோன்றுகிறதே. இனியாரைத்தான் சொல்லலாம். தேவனன்று மனிதனே எனில் அரசனன்று. யாரோ-எனிங்குவந்து படுத்தானோ. அலுப்புமிகுந்தவனென்று தெரிகிறது-எல்லாம் பார்த்துக்கொள்வோம்' என்று சொல்லிவிட்டு உள்ளேபோய்த் தன்காலைக்கடன் முடித்துக்கொண்டிருந்தார். இதற்குள் எழுந்தான் பிரேமன். கண்டாள் சிறுபெண்.

அப்பெண்ணைப்போல் உருவமமைந்த ஒருத்தி இம்மூவுலகத்தும் கிடையாது. ஸ்ரீமந்நாராயணனே கண்டு மயங்கிய பிருந்தையும் இவளுக் கீடல்ல; பிரமனே கண்டு மயங்கிய திலோத்தமையும் இவளுக்கிணையன்று; இந்திரனே கண்டு மயங்கிய அகலியை இவளின்பாதி யழகு பெறவில்லை. ராவணன் கண்டு மயங்கிய சீதாப்பிராட்டியும் இவளழகைப் பிச்சைவாங்கவேண்டும். முகத்தில் அடக்கம் அறிவு தயை பிறர்வருத்தத்தில் அச்சம்முதலிய எல்லாக் குணங்களும் விளங்கின. அவள் தலையோ பருத்து உருண்டு கூந்தல் அடர்ந்திருந்தது. கூந்தலோ கார்வண்டுபோலவும் கரிமணல் நெருங்கிக் குழைந்ததுபோலவும், மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ ஐயோ எனப்பிறர்கண்டு மையல்கொள்ளும் வண்ணமும் கறுத்தடர்ந்து தடித்திருக்கும். முகமோ களங்கமற்ற சந்திரன்போல் விளங்கும். நெற்றியோ மூன்றாம்பிறைபோலவே இருக்கும். அதன்மேற்புரத்தில் தலையை ஒட்டி சுருண்டுசுருண்டு அழகாய் சிறிய சிலமயிர்கள் அசைந்துகொண்டிருக்கும். புருவமோ விளக்கெண்ணெயும் மையும் கலந்ததுபோல் கன்னங்கறேலென்று பளபளப்புடன் தொழிற்செய்த விற்போல் வளைந்து இடையேபரந்து கடையில்கூரியதாய் நீண்டிருக்கும் மாவடு வகிர்போன்ற கண்களோ காதளவும் நீண்டனவாய் பகைவர்களது நிணந்தோய்ந்தவேற்போல் செவ்வரிபடர்ந்து மன்மதனுடைய பாணங்களையும் அர்ச்சுனனுடைய பாணங்களையும் ஆலகால விடத்தையும் கலந்தணவாய்ப் பெரியவிழிகளுடன், பார்ப்போரையெல்லாம் தம்வயமே இழுத்துக்கொண்டு நிற்கும். மூக்கோ நீண்டு சண்பகப்பூப்போலிருக்கும். காதுகளோ தங்கத்தாற்செய்த மாங்கொட்டையின் கூட்டின் உட்பக்கம்போலும் மின்னல்போலும் கத்திரிக்கோலின் வளையம்போலும் வள்ளைக்கொடிபோலு மிருக்கும். முகமோ சற்றுவிசாலித்து நீண்டிருக்கும். உதடுகள் கோவைப்பழம்போன்

று சிறுத்தும் இருக்கும். பற்களோ முத்துவரிசைபோல் சற்றுப் பருத்திருக்கும். கழுத்தோ பாக்குமரத்தின் அடித்தண்டுபோல் சற்றே நீண்டுபெருத்திருப்பதுடன் சிவந்து பளபளப்பாயுமிருக்கும். பிடரியில் சிற்சில மெல்லியமயிர் மேல்நோக்கிச் சுருண்டுகிடக்கும். உடம்பெல்லாம் மாந்தளிர்போல் மிருதுவும் பளபளப்பும் ஆனால் நல்ல சிவப்புமாயிருக்கும். தோள்கள் மூங்கிலைப்போல் வளைந்து கரும்புபோல்திணிந்து நீண்டிருக்கும். உள்ளங்கை உட்குழிந்து மேற்சலதகொழுத்து பொன்போலிருக்கும். கைவிரல்களும் கோடுகளும் தங்கம்போலவும் தாமரைபோலவும் பவழக்கொடி யோடியதுபோலவு மிருக்கும். இடுப்போ இருக்கிறதோ இல்லையோ என் றையுறலாகும். கணுக்காலும் விரல்களும் அழகிச்சிவந்து மணிமணியாயிருக்கும். அவள் காலடி தாமரைப்பூவை நகைக்கும். கழுத்தைக்கண்டு வலம்புரிச்சங்கு பொறாமையாய் நிற்கும். உதட்டைக்கண்டு பவளம் ஆசையாய்நிற்கும். கண்ணைக்கண்டு மீனெல்லாம் நாணும். கருங்குவளையெல்லாம் ஓடி ஒளிக்கும். பார்த்தவர்கள் "இவள்பெண்ணோ! மின்னற்கொடியோ! இந்திரனிடத்துள்ள பலவிதமணிகளாற்செய்த பாவையோ! அலது பொன்னாலும் முத்துக்களாலும் நவமணிகளாலும் செய்துள்ள ஆபரணங்களெல்லாம் விளங்கும்படி அவதரித்த ஒளிப்பிழம்போ! உலகத்தார் மனத்தையெல்லாம் கொல்வதற்கும் பார்த்தவர் தம்வசமழிந்து கட்டுப்படுவதற்கும் கண்ணாகிய பாசத்துடன் கூடிய யமனாக மதன்படைத்த சித்திரமோ! சித்திரமெழுதுவோரின் கர்வத்தையெல்லா மடக்கு நிமித்தம் புதிதாகப் படைக்கப்பெற்ற உருவோ!" என்று பல பலவாறு பேசிக்கொள்வார்கள். இவ்வளவுடன் செல்வவானுக்கும் கற்புக்கரசிக்கும் பிறந்து எல்லாநற்குணமும் ஊறும் ஊற்றாகவுமிருந்தாள் கலாவதி, இடுப்பில் பச்சைப்பட்டுப் பாவாடை சுற்றியிருந்தாள். அதன்மேல் பொன் ஒட்டியாணம் இறுக்கி யிருந்தாள். கழுத்தில் நல்லரத்தினங்களும் வைரங்களுமிழைத்த ஒரு பதக்கம் மாட்டியிருந்தது. கையில் பொற்காப்புப் பூண்டிருந்தாள். எவ்வளவு நகையிட்டாலென்ன? இவளுடம்புக்கு அழகுக்காகவா நகையிடவேண்டும். உடமைக்கெல்லாம் அழகுசெய்யும் உடம்பும், மைதீட்டாமலே கறுப்பமைந்த கண்ணும், மருதாணி செம்பஞ்சுழுதவிய வேண்டாமலே சிவந்தகாலும் உடையவளன்றோ இவள்?.

இத்தகைய பொற்புவாய்ந்த நங்கைக்கு பிரேமநாதனைக்கண்டதும் அவனிடமேதாவது பேசவேண்டுமென்று தோன்றியது. பிரேமனுக்கும் இவளிடம் தோழமை கொள்ளவேண்டுமென் றாசையுண்டாயிற்று. கலாவதி அவனைநோக்கி "நீர் எந்த ஊர்" என்ற

உடன் அவன் தன் கதையெல்லாம் சொல்லிக்கொண்டேவர இவளுக்கு வரவர மனமுருகி பிரேமனிடத்து அன்பும் ஆசையும் மிகுந்து கண்ணீர் சொரியச்சொரியத் தலைகுனிந்து பிறகு கிராதகர் கொல்ல நின்றதையும் கத்தியை ஓங்கினதையும் வேடனிடம் கேட்டபடியே சொல்லக்கேட்ட உடன் தலை கிறுகிறுத்துக் கீழேவீழ்ந்து மூர்ச்சித்தாள். சற்றுநேரம்போய் மறுபடி எழுந்திருந்தாள். துன்பத்தால் கண்ணெல்லாம் சிவந்து உடம்பெல்லாம் வாடி மின்னல்போல் பளபளவென் றோடிந்தாடி உள்ளே நுழைந்து பேச்சற்றவளாய் தன் தந்தையார் மடியில்வந்து விழுந்து துன்பம்பொறுமல் வாய்விட்டுக் கதறினாள் நெடுநேரம். தன் உயிரினும் அதிகமாய் கண்ணை இமைகாப்பதுபோல் கலாவதியைக்காத்து வந்த பாநுசேகரசர்மா ஒன்றுமறியாதவராய் உடம்பெல்லாம் வியர்க்க மனந்தடுமாறிப் பலமுறை பெண்ணையெடுத்து துன்பந்தணித்து முடிவில் காரணமென்னென்று கேட்க அவள் விம்மிவிம்மி அழுதுகொண்டே பிரேமனுடையசரித்திரமெல்லாம் சொன்னாள். அது அவருடைய மனதையும் மிகவருத்தியது. ஆதலால் சற்றுப்பொறுத்து "இனி அவனை எங்கும் விடுவதில்லை அவன் பட்டதுன்பமெல்லாம் போதும். நமது வீட்டிலேயே ஒரு குழந்தையாய் வளரட்டும், எனக்கும் ஆண்குழந்தையில்லை. உனக்கும் அண்ணனில்லை" யென்று சொல்லிக்கொண்டே வெளியேவந்து சிறுவனை உள்ளேயழைத்துப்போய்ப் பலவிதமாய்த்தேற்றி தன் பெண்சாதியை அழைத்து சுருக்கமாய் நடந்ததை யெல்லாம்சொல்லி "இனி நமது சிறுவனுயினன் பிரேமன்" என்ன அவளும் மனமகிழ்ந் துபசாரம் சொல்லினள்.

அது முதல் பிரேமனுக்கும் கலாவதிக்கும் அதிக நெருக்கமும் நட்புரிமையுமுண்டாயிற்று. கூடப்பிறந்த அண்ணன் தங்கைகள் கூட அவ்வளவு பிரியமாயிருக்கமாட்டார்கள். அவனுக்கும் அவளுக்கும் கொஞ்சவயதே வித்யாஸமாதலாலும் அவளுடன் விளையாடுவதற்கு வேறுயாருமில்லாததாலும் பிரேமனுக்கு முந்தியே தெரிந்திருந்த பெண்கள் விளையாட்டையெல்லாம் தான் படித்துக்கொள்ளவேண்டுமென்று கலாவதிக்கு ஆவலிருந்ததாலும் ஆத்திரேயனைப் பிரிந்தபிறகு தன்னுடன்கூட இனியபேச்சுப்பேசவும் அளவளாவவும் பிரேமனுக்கும் நண்பர்கள் வேண்டியிருந்ததாலும் இருவர்களும் எப்போதும் சேர்ந்தே இருப்பார்கள். ஒருவரைவிட்டு ஒருவர்பிரியும் நேரம் அற்பம். ஒவ்வொருவரும் தங்கள் சிறுவயதுமுதல் நடந்துள்ளவற்றையும் அப்போதப்போது காணும் கனவுகளையும் புதிது புதிதாயெண்ணு மெண்ணங்களையும் ஆசைகளையும்பற்றிப்

பேசி மகிழ்வார்கள். அவர்களதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். மன்மதனுடைய அம்புசெல்லாத சிறுவயதிலுள்ள இரண்டு நண்பர்கள் யாதொருவிசாரமுமின்றி ஒருவரோடொருவர் அனுபவிக்கும் இன்பத்துக்கிணையாய் எந்த உலகிலெதைத்தான் சொல்லமுடியும். ஒருவரோடொருவர் இனியமொழியாய்ப்பேசுவதுபோல் நடிப்பதும் மனத்தில் ஒன்றை ஒளித்து வெளியே ஒன்று சொல்வதும் எய்ப்பதும் அவர்களுக்குத்தெரியாது, ஆனாலிடையிடையே ஒருவரோடொருவர் போட்டிபோடுவதும் சிறுசண்டைசெய்வதும் அதனாலேயே பிரியம் அதிகமாவதும் வழக்கமாயிருந்தது. பிரேமநாதன் தனக்குத்தெரிந்த கல்வியனைத்தையும் கலாவதிக்கு வாய்மொழியாகவே சொல்லிவைத்தான். அவளும் மெள்ள மெள்ள எல்லாவற்றையும் கற்றுக்கொண்டு அதனாலேயே புத்தி அதிகவிசாலப்பட்டு "கற்றலிற் கேட்டலேநன்று" என்னும் மொழிக்கிலக்கானாள். இவர்களிருவரும் இப்படிசேர்ந்திருப்பதில் பானுசேகரருக்கும் கணகாண ஆநந்தம் உண்டாயிற்று. "ஏதோதெய்வம் நம்மிடத்துள்ள இரக்கத்தால் இச்சிறுவனை நமது மகளுடன் கூட்டிவைத்தது. என்னகுணசாலி! என்ன அறிவு! இவ்விதப்பழக்கமிருந்தால் நமது பெண்ணுக்கென்னகுறை? ஒருக்கால் நல்லகாலம் வாய்த்தால் இவனையே நாம் மாப்பிளையாகவும் அடையலாமன்றோ?" என்று பலவிதமாகப் பலதடவைகளிலெண்ணி மனமகிழ்வார். மணிமதி அம்மாளுக்கும் இதில் அடங்காத ஆநந்தம். குழந்தைகளிருவரும் அதிகாலையிலெழுந்திருப்பார்கள். கடவுளைத் துதிப்பார்கள். இருவருமேபோய் பல் விளக்குவார்கள். குந்துப்பிடிப்பார்கள். குதிப்பார்கள் ஆடுவார்கள் ஓடுவார்கள் படிப்பார்கள் பெரியோரிடம் பழகுவார்கள். அவரவர்களும் செய்யவேண்டியதும் செய்யக் கூடியதுமாகிய காரியங்களை செவ்வையாய்ச் செய்வார்கள். கதைகேட்கப் போவதானாலும் கோயிலுக்குப்போவதானாலும் கொள்ளிடத்துக்குப்போவதானாலும் சேர்ந்து சேர்ந்தேபோவார்கள். புதிது புதிதாய் ஒருவரை ஒருவர் கேள்விகேட்பார்கள். அதிசயமாய்ப் பதிலுரைப்பார்கள். இவர்களுக்குப் பொழுதுபோவதுகூடத் தெரியாது. இப்படி இருவரும் கண்ணும் இமையும் போலவும் பகலும் ஒளியும்போலவும் உயிரும் உடலும்போலவும் உருவும் நிழலும்போலவும் இணைபிரியாது ஒருவரையொருவர் நெருங்கி ஒருவர்க்கொருவர் நன்மைசெய்துகொண்டு போதுபோக்குவார்கள். கிராதகர்கள் வீட்டிலிருந்தபோது பிரேமனுக்கெல்லாஸுகமும் கிடைத்தாலும் இதுபோல் இன்பமாய்ப் போதுபோக்க இடமில்லை. தனியாகவே இருந்து பலவிஷயங்களையும் ஆலோசிப்பான். அவற்றை இரண்

டாம்பேருடன் சொல்வதற்கில்லாமல் ஊமைகண்டகனவுபோலா கும். இப்போதோ தான் எண்ணவும் உடனே அதைகலாவதியுடன் சொல்லவும் அவள் இவனுடைய எண்ணத்தை அதிசயித்துப்புகழவும் அத்துடன் தன்னுடைய சில நல்ல அபிப்பிராயங்களையும் கலக்கவு மிடமிருந்ததால் பிரேமனுக்கு இப்போது ஆநந்தம் மிகுந்தது. பிற ருக்குத் தெரிவித்து அவர்களும் புகழும்படியான ஒரு எண்ணத்தை ஒருவன் எண்ணினால் அதனால் உண்டாகும் இன்பம் இவ்வளவென் று கணக்கிடயாராலாகும். அதை வெளியிடும் வரைக்கும் அது பாரமாகவே இருந்து வருத்துமாகையால் கிராதகர் வீட்டிலிருந்த போது சிறுவனுக்கு உண்மையான ஆநந்தமேகிடையாது.

இப்படியாக பிரேமனுக்கு நல்லகாலம் பிறந்து பழைய வருத்த மெல்லாம் மறந்துவரும் நாட்களில் ஓர்நாள் காலையில் அவ்வூரில் ஒருகுரங்காட்டிவந்தான். அவன் ஒரு சிறுமந்தியைப்பிடித்து அத ன் காதைக்குத்தி எவ்வளவோ வளையங்களைமாட்டி சிறுபாசிமணிக ளையும் சிவப்புக்கற்களையும் கருமணிகளையும் கோர்த்துத் தொங்கவி ட்டிருந்தான். கடுவனுக்கு மூக்கும் குத்தியிருந்தது. கழுத்தில் சோழிமணியும் வெள்ளைப்பாசிமணியும் நீலமணியும் கோர்த்து மா லைமாலையாகப்போட்டிருந்தது. உடம்பெல்லாம் தெரியாதபடி அங்கிதைத்துப்போர்த்திருந்தது. முன்கையில் கருமணிக்காப்ப ணிந்திருந்தது. இடுப்பில் சதங்கையும் சங்கிலியும் கட்டியிருந்தது. அதன்கீழ் சிவப்புத்துணியாலும் வெள்ளைத்துணியாலும் முறுக்கி ஒட்டியாணம்போல் கட்டியிருந்தது. அந்தக்குரங்காட்டி வலது கையில் ஒரு சிறுகோலும் இடதுகையில் குரங்கின் கயிறும் கொட் டக்கச்சியும், அக்குளில் சிறிதும் பெரிதுமான பல கோல்களும், தோளில் மூங்கிற்சிம்பால் செய்துவளைத்த ஒரு கூடும் வைத்திருந் தான். தோளிலிருந்து பல கந்தலால் மூட்டிய ஒரு பை தொங்கி யது. அதில் என்ன இருந்ததோ யாரு மறியார். ஒரு கோவணத் தைத் தவிர அவனுக்கு வேறு ஆஸ்தியிருந்ததாகக் காணவில்லை. ஆள் சற்றுக் கறுப்படைந்து, முகத்தில் பல விசாரத்தைத் தெரிவி க்கும் கோடுகள் விழுந்து, தலையெல்லாம் சடையாய்த் தொங்கி கா லெல்லாம் நடந்து நடந்து தேய்ந்து வெடித்து பார்ப்போர்கள் வரு ந்தி உடனே பிச்சைபோடும் நிலையிலிருந்தான் சிறுவன். தந்தை தாயரைச் சிறுபிராயத்தே பிரிந்து பிச்சை வாங்கித்திரியும் ஏழை போல் காணப்பட்ட அந்த குரங்காட்டிச் சிறுவன் சில யுக்தியுள்ள தந்திரங்களைச் செய்து எல்லாருடைய கண்ணையும் மனத்தையும் தன்வசமாக்கிக்கொண்டு எங்குசென்றாலும் அநேகர் தன்பின்னே சூழ குரங்கையாட்டுவான். அங்கங்கு சிறுபிள்ளைகள் அவனைத்

தொந்திரை செய்வார்கள். அப்போது தன் குரங்கையும்விட அதிகமாய் ஒடுங்கிக்கிடப்பான்.

இவ்வித வேடத்துடன் வந்த குரங்காட்டி வீடுவீடாய்ப் பிச்சை வாங்கிவந்ததுபோலவே பானுசேகரர் வீட்டுக்கும்வந்தான். உடனே வேடிக்கை பார்க்க கலாவதியும் பிரேமனும் வந்தார்கள். அங்கு நின்று அவனை அவதிப்படுத்திவந்த சிறுவர்களை அதட்டி அடக்கினார்கள். சிறுவர்களும் ஒன்றையும்விட்டெறியாமலும், குரங்கின் வாலையாவது குரங்காட்டி தடியையாவது பிடித்திழுக்காமலும் சும்மாநின்றுவிட்டார்கள். அப்போது பிரேமன் கலாவதியைப் பார்த்து “அம்மா இதென்ன ஜன்மம் பார். ஒரு சாண் வயிற்றுக்காக என்ன பாடுபடுகிறானிவன். இப்படி உலகத்தி லின்னு மெவ்வளவோ உண்டு. எவ்வளவோபேர்களை எவ்வளவோவிதம் கெஞ்சிக் காத்துக்கிடந்தும், மனதுக்கு விரோதமாய் வேண்டுமென்று பொய்சொல்லியும், திருடியும், மாடுபோலுழைத்தும், மனிதஜன்மத்தைக் கெடுத்துக்கொண்டு இழிதொழில்களெல்லாம் செய்தும், இல்லாத குணத்தையெல்லாம் சொல்லிப் புகழ்ந்தும், நல்லவர்களையெல்லாம் திட்டியும், கோட்சொல்லியும், தூரதேசங்களுக்கு பயங்கரமான கடல் யாத்திரைகள் செய்தும் பிறர்பொருளையும் தேசங்களையும் கொள்ளையிட்டும், வேடம்போட்டுக்கொண்டு ஆணாகவும் பெண்ணாகவும் நடித்தும், நயந்தெரிந்தோ தெரியாமலோ மற்றவர்கள் தலையசைக்கும்வரை தொண்டைபோகப்பாடியும், தலையாட்டியும், கிளிபோலவும் ஆந்தைபோலவும் நாய்போலவும் கழுதைபோலவும் கத்தியும் குலைத்தும் ஊளையிட்டும் கனைத்தும் இந்த உடம்பைக் காக்க ஜனங்கள் படும்பாடு அம்மம்ம சொல்லிமுடியாது.” என்று உருக்கமாய்ச் சொல்ல அவளும் “நாமென்செய்யலாம் உலகத்தின் அழகிது அவரவர்கள் வினைக்குத் தகுந்தபடி அவரவர்களுக்குப் பலனை ஊட்டுவிக்கும் கடவுளுடைய திருவிளையாடல்கள் அநேகம். தெரியாமல்தானா ஔவையார்,—‘ ஒருநாளுணவை யொழியென்றா லொழியா

யிருநாளுக் கேலென்றா லேலாய்—ஒருநாளு
மென்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது ’ — என்று சொன்னார் ’

என மறுமொழி கூறினள்.

இதற்குள் குரங்காட்டி தன்குரங்கைப் பிடித்திழுத்து கோலைக்கீழே தட்டி ஆட்டினான். மாமியார் வீட்டுக்குத் தண்ணீர் கொண்டுபோவதுபோலவும், புருஷனுடன் ரஹஸ்யம் பேசுவது போலவும், மாயியுடன் பிணங்கி முடங்கிக்கிடப்பதுபோலவும், பிசாசுபி

டித்தாடுவதுபோலவும், லங்கையைத் தாண்டுவதுபோலவும், கோட்டைக்குள் நுழைந்து பாய்வது போலவும், மரத்தின் உச்சியில் ஏறுவது போலவும், பகைவன் வீசிய கத்தியையும் தடியையும் கல்லையும் பிடித்துக்கொள்வதுபோலவும் பலபலவிதமாய் குரங்கு வேலைசெய்தது. குரங்காட்டி உடனே அடித்தொண்டையால் பாடவே அதுகையால் தாளம்போட்டுக்கொண்டு குதிக்க ஆரம்பித்தது.

ஓராம்பள்ளிராகம்.

(க) கொழுத்தவெள்ளெறிப் பிஞ்சிலே பத்தெட்டுக்
கூசாமல் தின்னேனுன் சாகவு மில்லை
அப்படி யென்னுயிர் போகவு மில்லை
அய னெழுத்துக்கு நானென்ன செய்வேன்.

(உ) பஞ்சப் பொதியிலே பத்தெட்டு முட்டு
முட்டிக் கொண்டேனுன் சாகவு மில்லை
அப்படியென் * * * நானென்னசெய்வேன்.

(ங) சீனியு நெய்யுமாய்ச் சேர்த்துக் குழைத்து
ஆனமட்டும் தின்னேன் சாகவுமில்லை அப்படி.

(ச) தயிரும் பழேதுமாய்ச் சேர்த்துப் பிசைந்து
வயிறு வீங்கத்தின்றும் சாகவுமில்லை அப்படி.

(ரு) பாலிலே சர்க்கரை சேர்த்துக் கலக்கி
நாலு மாதமுண்டும் சாகவு மில்லை அப்படி.

(சு) எண்ணெயைக் கண்ணிலே விட்டுக் கொண்டுநான்
தண்ணில் முழுகினேன் சாகவு மில்லை அப்படி.

என்று அவன் பாடிய பாட்டு அங்கிருந்த எல்லாருக்கும் வேடிக்கையாயிருந்தது. சிறுவர்கள்கூட "ஏலே ராமா இந்தப் பய[illegible] ரும் பழேதுமாச் சாப்பட்டாறும், செத்துப்போக[illegible] பிடி ஆராவது சாவாளாடா" என்றும் அதுபோல[illegible] க்கொண்டும் கையிலிருந்த தின்பண்டங்களை குரங்[illegible] காட்டிக்கும் கொடுத்துக்கொண்டும் நின்றார்கள்.

இதைப் பாடியபின் பிரேமனுடைய முகத்தை ஒருத[illegible] பார்த்தான் குரங்காட்டி. உடனே யழுதான், தன் பையில் ஏதோ எடுப்பதுபோல் ஜாடைசெய்துகொண்டு குனிந்து கண்ணீருதிர்த்தான். பிறகு மனத்தைத் தேற்றிக்கொண்டு மறுபடிகுரங்கைப்பிடித்து இடதுகையாலிழுத்து வலதுகைக்கோலை மேழேதட்

டினன். குரங்கு குதித்தது. உடனே நாதநாமக்கிரியையில் பாம்பாட்டிப் பாட்டுபோல் பாடினன்.

ஆடுகுரங்கே திண் டாடுகுரங்கே.

(௧) உயிரு முடம்புபோல் நாங்களிருந்தோம்
ஒருவர்க் கொருவர்மிகத் தேறுதல்செய்வோம்
வயிர மிருந்துசிற் றம்மை செயும்
வஞ்சனைகளை நினைந் தாறுதல்கொள்வோம்
உயிரும் பிரியஉடல் உருகி ஆத்திரம்பட்டு
வயிறு மிகஉளைந்து வாடி நின்றனேனென்று. (ஆடு)

(௨) ஐயன்வந் துபதேசம் செய்த காலையில்
அறிவு மிகுந்ததினால் துன்ப மறப்போம்
வையமெம் மிருவர்க்கு மிணை யாகுமோ
வரவரப் பெரும்பொருள் பேசியே வந்தோம்
ஐயையோ அடிபட்டு பிரேமை தப்பியேபோக
அநியாய மாய்த்துடிக்கு மாத்திரமெங்குஞ் சென்றேன்.

(௩) அப்பனார் மாடுகுரங் காடு நாய்களும்
அவதிப் படவேபிடித் தாட்டியே வைத்து
இப்புவியெங் குஞ்சுற்றிப் பிச்சை வாங்கியே
ஏங்கித் திரிந்துபல பாடுகள் பட்டு
எப்படியு மோர்காலம் ஏற்றம் மிகவடைந்து
இனிதாய்ப்பிரேமையைக்காண வென்றே துணிந்துநின்றிங்.

என்ற இதுவரையில் கேட்டதும் பிரேமனுக்கு அடங்காத அழுகைவந்து திடீரென் றெழுந்து வீட்டுக்குள் நுழைந்து அங்கோர் விசுபலகையில் படுத்துக்கொண்டு இரும்பெல்லாம் கரையக்கரைய அழுதான். அவனெழுந்துபோய் வாராததாலும் கலாவதிக்கும் ...ச்சம் உண்மை தெரிந்துவிட்டதாலும் "அடே குரங்காட்டி! ...ன். இந்த வாயில்லாப் பூச்சியைப்பிடித்து இப்படி ...து பிசகு. விட்டுவிடு" என்னவும் அவன் காதில் ...பால் மறுபடி பாடி யாட்டினன். கலாவதி கோபம் ...போல் ஓடிவந்து குரங்கைப்பிடித்திழுத்து அதன் இடுப் ...டியிருந்த கயிற்றை அவிழ்த்துவிட்டாள். அதுவும். சந்தோஷமாய் கீச்சுக்கீச்சென்று கத்திக்கொண்டு கூரைமீதும் மரங்களின்மீதும் தாவியோடி குதித்துக்குதித்துக்கொண் டுட்காரும். "உர்ற்-உர்ற்" என்னும். அந்த வேடிக்கையைப் பார்த்துக்கொண்டும் "திம்மாதிம்மா உச்சுக்கோ--வெல்லந்தாரேன் கடிச்சுக்கோ

குச்சி தாரோன் பிடிச்சுக்கோ - கோணங்கிக்கூத் தடிச்சுக்கோ" என்று பாடிக்கொண்டும், சீரங்கீ சீரங்கீ யென்று கூவிக்கொண்டும் சிறுவர்களெல்லாம் நெடுந்தூரம் அரைத் துரத்திக்கொண்டோடினர். தன் குரங்குபோனதை நினைத் தழுபவன்போல் குறிப்பயலே நின்று அழுதான் குரங்காட்டி. அதற்குள் கலாவதியும் உள்ளேசென்று பிரேமனைத்தேற்றிக் கூட்டிக்கொண்டு வெளியேவரவும் அடங்காத ஆசையும் ஸந்தோஷமும் மீறி பிரேமனும் ஆத்திரேயனும் ஒருவனை யொருவன் கட்டிக்கொண்டு கீழே மடாரென விழுந்து கதறினர்கள்.

நெடுநாளாய்ப் பிரிந்திருந்ததாலும், திடீரென்று கண்டதாலும் கண்டஉடன் தழுவிக்கொண்டு வரவு வினவுவதற்கு முடியாமலிருந்ததாலும் தனக்காக எவ்வளவோ பாடுபட்டுவந்தானென்று தெரிந்ததாலும் பிரேமனுக்கு வாயடைத்துவிட்டது நாவெழவில்லை. மன்மே கண்வழியாய் வெளிவந்து கரைந்துகரைந் தோடியதென்று சொல்லும்வண்ணம் கண்ணீராருக ஓடியது. ஒருதடவை பார்ப்பான். இறுக்கிக் கட்டிக்கொள்வான். அப்பா என்பான். மேலே பேச முடியாமல் சற்றுப் பொறுத்து தோழா என்பான் கண்ணே யென்பான். விம்மிவிம்மிப் பெருமூச்செறிவான். முகத்துடன் முகத்தை ஒத்திக்கொள்வான். அவன் கழுத்தில் தன் முகத்தை வைத்துக்கொள்வான். உடம்பெல்லாம் முத்தமிடுவான் ஏதோ சொல்ல வருவான் தெரியாமல் திகைப்பான். ஆத்திரேயனும் அவ்வாறே என்றாலும் இயற்கையே கொஞ்சம் மன உரம் குறைந்தவனாதலால் அவன் இப்போது பட்டபாட்டைச்சொல்ல எம்மாலாகாது. ஸாதாரணமாய் பெண்கள் மனம் கல்லென்றுபெயர். அதிலும் கலாவதி மனம் படிப்புவிர்த்தியானபின் அதிக உறுதியாய்விட்டது. அவளே இந்த நண்பர்கள் படும்பாட்டை பார்க்கமாட்டாமல் தேம்பித்தேம்பி அழுதாளென்றால் உண்மை நட்பின் பெருமையை யாவரால் சொல்லிமுடியும்?

இப்படியாகச் சிறிதுநேரம் சென்றதின்மேல் கலாவதி ஆத்திரேயனுக்கு ஒரு நல்ல துணிகொடுத்து கட்டிக்கொள்ளச்செய்து, அவன் தடிகளையும் சூரியையும் துணியடைத்த ஓட்டைக்கொட்டக் கச்சியையும் ஒட்டுப்போட்டுத் தைத்த பீத்தற் பையையும் அன்புடன் வாங்கி தன் அறையிற்கொண்டுபோய் ஓர் பெட்டியில் வைத்துப் பூட்டி 'உண்மை நட்பின் அடையாளம்' என்று அந்தப் பெட்டியின்மேல் எழுதினள். பிறகு ஆத்திரேயனை நறுமணமுள்ளதைலந்தேய்த்துக்கொள்ளச்செய்து உபசரித்து 'அண்ணா இது உங்கள்

வீடு. இதிலிருக்கும்வரையில் யாதொரு ஸந்தேகமும் ஸங்கோஜமுமில்லாமல் ஸந்தோஷமாயிரும். என் பெற்றோர்கள் மிக நல்லவர்கள். நீங்கள் இன்னாரென்று முன்னமேயே எல்லாரும் அறிந்திருக்கிறோம். உமது முகமே யாவரையும் நட்புகொள்ளும் தன்மையது' என்று இனியமொழி கூறினள். பிறகு மூவருமாயிருந்து அறுசுவையோடு கூடிய உணவு கொண்டு சற்று பேசிக்கொண்டே இருக்கும்போது ஆத்திரேயன் தூங்கிவிட்டான்.

பிரேமன் அவன் வலதுபக்கத்திலும் கலாவதி இடதுபக்கத்திலு முட்கார்ந்துகொண்டு அவன் காலைப்பிடித்தார்கள். 'ஒருபயனுமில்லாத எனக்காக எவ்வளவோ பாடுபட்ட திந்தக்கால்' என்று காலை முத்தமிடுவான். இவ்வளவு உண்மையான நண்பனுக்கும் சொல்லாமல் தான்வந்தது பிசகென்றுவருந்துவான். தன்னைப்போல் யாரும் பாக்யவானன்றென உளங்களிப்பான். பிறகு தனக்கும் ஆத்திரேய்னுக்கும் இருந்தபழக்கத்தையும் ஆத்திரேயனுக்கு முதலில் படிப்பும் அறிவும் இல்லாததையும் பிறகு தான் படித்த காலத்தில் இருவருமாய் தனித்திருந்து பேசிவந்ததே காரணமாக அவனிடத்துத் தூங்கிக்கிடந்த அறிவானது வரவர மிகுந்ததையும் ஒரு முள் தைத்தாற்கூட பொறாத அவன் தனக்காக மிகுந்தபாடுபட்டிருப்பதை நினைக்க நினைக்க தனக்கு என்னமோ ஒருவித உணர்ச்சி யுண்டாவதையும் ஆதலாலேயே அதைமறுபடி மறுபடிசொல்லும்படி நேரிடுவதையும் சொன்னான் பிரேமன்.

அத்தருவாயில் பாநுசேகரர் அங்குவந்தவர் சிறுவன்யாரென்று கேட்டுதெரிந்து அதிசயப்பட்டு "இவ்வளவு சிறுவயதில் இவ்வளவுபாடுபட்டு தன் நண்பனைத்தேடியசெய்தி இதுவரைகண்டதாகவாவது கேட்டதாகவாவது கிடையாது இதுமிகவும் வியக்கத்தக்கதே. இதுவரையில் நீங்கள் பட்டபாடு போதும் உங்களூர் இங்கிருந்து மிகவும் தூரமன்று. அங்கு திரும்பிப்போக வுங்களுக் கிஷ்டமா? என்றார். அதுகேட்டு கலாவதி, "அப்பா! நீங்கள் பரிஹாஸம் செய்கின்றீர்களா அல்லது உண்மையாகவே பேசுகின்றீர்களா? இப்போது அண்ணா ஊர்போனால் என்கதி யெப்படியாகும்? எனக்கெப்படிப் போதுபோகும்? நீயும்போ என்று சொல்வதாவது அழகா? அப்படியே நானும் சென்றாலும் கடுமுகிக்கு யார் வழி சொல்வது? அவள் யோக்யதையை வெளியிட்டு அவளுக்கு அநர்த்தம் வரும்படிச்செய்வதும் அழகல்ல.

'சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்

குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.' —என்று அண்ணா வெனக்கு சொல்லித்தந்திருக்கிறானே. தூங்குகிறவர் எழுந்திருந்தமேல் அந்த ஊர்ச்செய்தியும் தெரிந்துகொள்வோம்'' என்றாள்.

பாநுசேகரரும் ' நீ சொல்வது நியாயந்தான். எல்லாம் பின்னாலேயே பார்த்துக்கொள்வோம். நீங்கள் மூன்றுபேரும் இனி சிலகாலம்வரை பிரியாமல் இங்கேயே இன்பமாயிருங்கள் என்றார்.

உடனே 'நாமிங்கே இரைந்துகூடப் பேசக்கூடாது. தூங்குகிறவனுக்கு கெடுதலாயிருக்கும். எவ்வளவோநாள் அலைந்தவனுக்கு என்னைக்கண்டவுடன் அதிக சந்தோஷமாயிருந்திருக்குமாதலால் அதிகத்துன்பம் அதிக இன்பம் என்னு மிரண்டும் ஒன்று ஓடி ஒன்றுவருவதற்குள் அசதி அதிகமாவது நியாயந்தானே. ஆதலால் அவனும் நன்றாய்த் தூங்கட்டும். நாமும் பின்னாலே பேசுவோம். வேறு எங்கேயாவது இருந்து பேசுவோமென்றால் எனக்கு அது எள்ளளவும் மனமில்லை ஆத்திரேயனைப் பார்த்துக்கொண்டே இருந்தால் போதுமென்று தோன்றுகிறது. ஸாதாரண மித்திரர்களுமல்லவா ஒருவரோடொருவர் இருப்பதிலும் ஒருவரை ஒருவர் பார்ப்பதிலும் பெரிய இன்பமிருப்பதாய் நினைப்பார்கள்' என்றான் பிரேமன்.

இப்படி கொஞ்சப்போது பேசிக்கொண்டிருந்து பாநுசேகரர் போய்விட்டார். காலவதியும் தூங்கினவ னெழுந்திருந்தா லுதவும்படி ஒரு சொம்புநிறையத் தண்ணீரும் ஏலப்பொடிபோட்டு விலாமச்சவேறின் வாசனை ஏற்றி ஜில்லென்றுள்ள குடிநீரும் சில தின்பண்டங்களும் நல்ல நீர்மோரும் கொண்டுவந்துவைத்துவிட்டு சற்றே பிரேமனுடன் விளையாடிக்கொண்டிருந்தாள்.

நெடுநேரம் தூங்கி உடம்பை முறித்துக்கொண்டு தூக்கந் தெளிந்தாலும் கண்ணை விழியாமல் ஆத்திரேயனும் தான் படுத்த இடத்தையும் தன் நண்பனையும் மறந்து ' ஹா தெய்வமே! இப்படி எவ்வளவுநாள் தூங்குவேன்? என் பிரேமனைக்காணவிடில் இனி உயிரோடிருப்பதில்லை. ஆற்றிலோ குளத்திலோவிழுவேனோ - மலையிலேறி உருள்வேனோ - மரத்திலிருந்து கயிற்றைக் கழுத்தில் கட்டிக்கொண்டு தொங்கிச் சாவேனோ - நாக்கைப் பிடுங்கிக்கொள்வேனோ மூச்சை விடாமலும் இழுககாமலும் அடக்கி வெடித்து மாய்வேனோ கிடந்தகிடக்கையில் ஐந்தாறுநாள் கண்ணை மூடிக்கொண்டேயிருந்து தொலைவேனோ - அல்லது எதையாவது பிடுங்கித்தின் றழிவேனோ - எதையாவது குடித்துத்தீர்வேனோ - நெருப்பில்விழுந்து சாம்

பராவேனே-குத்திக்கொள்வேனே-வெட்டிக்கொள்வேனே-பாம்புபுற்றுகளில் கையிடுவேனே-புலியின் குகைகளில் நுழைவேனே தெரியாது இவ்வளவுநாளாய் கெட்டசாவுக்கும் அதன்பின்னால் வருமென்று எல்லாரும்சொல்லிக்கொள்ளும் பேய்ஜன்மத்துக்கும் அஞ்சியிருந்தேன். இனி அதையும் விட்டேன். பேயானாலென்ன கடுமுகியைப் போய்ப் பிடித்துக்கொண்டு பழிவாங்குகிறேன். இனி அரை நிமிஷமும் பிரேமனைக்காணாது உயிரோடிருப்பதில்லை' என்று புலம்பித் தேம்பித்தேம்பி கண்ணீருகுத்தவனைக்கண்டு பரிதபித்து பிரேமனும் கலாவதியும் இறுகக் கட்டிக்கொண்டு மேலெல்லாம் தடவி விசிறிகொண்டு வீசினார்கள். 'நான் இதோ இருக்கையில் நீயேனப்பா அழுகிறாய்' என்று சொல்லி முத்தமிட்டான் பிரேமன்.

கண்ணை விழித்தான் ஆத்திரேயன். கண்ணீராறாகஒழுக எழுந்துட்காந்தான். தன் மனத்திலெப்போது மிவ்வளவுநாளாயிருந்த எண்ணம் தடித்திருந்ததால் தான்காண்பது கனவோவென் றையுற்றான். சிரித்தான் வெட்கப்பட்டான். 'மனத்திலிருப்பதே வெளியே தோன்றுமென்பதும் பிறகு மறைந்து அவமானஞ் செய்யுமென்பதும் உண்மையன்றோ? அப்படித்தானோ இது அல்லது உண்மையோ' என்றெண்ணிக்கொண் டிருக்கும்வேளையில் 'என்னடா கண்ணை விழித்துக்கொண்டும் கனாக்காணுகிறாய்' என்று பரிஹஸித்தான் பிரேமன். கலாவதி உடனே கொஞ்சம் நீரை யெடுத்து ஆத்திரேயன் கண்ணைத்துடைத்து 'கனவாய்த்தானிருக்கட்டும் நனவாய்த்தானிருக்கட்டும். காலைக் கழுவிக்கொண்டு உங்கள் மித்திரருடனும் என்னுடனுமிருந்து கொஞ்சம் பலகாரம் செய்ய வாருங்கள்' என்றாள்.

இதற்குள் நன்றாய்த்தெளிந்து தான் தூக்கத்தில் பிதற்றினதற்காக வெட்கமடைந்து ஆனாலும் பிரேமனைக்கண்டதற்காக உள்ள இன்பத்தால் அவனை இறுகத்தழுவிக்கொண்டு 'என்ன அநியாயம்! இவ்வளவுநாளும் பெரும்பாலும் தூங்காமலேயே இருந்த என்கண்கள் இன்றைக்கு என்னையறியாமல் அசைந்துவிட்டன. பகலிலும் கனவுகாண்பாருண்டா? நீ படிக்கிறகாலத்தில் பகலில்தூங்குவது மனிதத்தன்மைக்கு குறைவென்று சொல்லியிருந்தாய் அதையும் மறந்துவிட்டேன். உன்னைக்கண்டபின்னும் என்னைவருந்தச்செய்தது ஒரு கனவு' என்று சொல்லி ஆசையுடன்பார்த்தான் அந்தப் பார்வையின் பொருளை எழுதிக்காட்டமுடியாது. பார்த்தாலே தான் தெரியும். தன் பழையநிலைமையையும் பின்நிலைமையையும் இப்போதைய இருப்பையும் சேர்த்துக்காட்டியது அந்தப்பார்வை. கண்டோர் உடனே இரங்கக்கூடியதும் யாவரையும் நட்புக்கொள்

ளக்கூடியதும் என்ன தப்பிதமிருந்தாலும் மன்னிக்கும்படிசெய்வதும் எவ்வளவுகோபம் செய்தவனையும் உடனே சிரிக்கும்படி செய்யக்கூடியதுமாயிருந்தது.

உடனேகலாவதி 'போனதுக்கு வியஸனப்படலாமா? கொஞ்சம் ஆகாரம்செய்யலாம் வாருங்கள்' என்று சொல்ல, 'அம்மணீ! இவனென்னமோ சொல்லுகிறான். என்குருநாதன்செய்த உபதேசத்துக்கு விரோதமாய் நானே தூங்கியிருக்கிறேன். முதல்நாள்பகலில் வெயிலில்படுத்தவன் மறுநாள் முழுவதும்தூங்கி மூன்றாநாளிரவில் எழுந்திருந்தேன். என்னசெய்யலாம் ஆபத்துக்குவிதியேது? அவன் கண்டது கனவென்று சொல்லக்கூடாது. ஆத்திரேயா! முன் ஒரு தடவை நான் சொல்லியது மறந்துபோயிற்றா? நமது மனது எத்துடன் பழகுகிறதோ அதிலேயே நமது புத்தியும் எப்போதும் செல்லுமல்லவா? ஒரேகாலத்தில் மனது ஒரேவிஷயத்தில் தான் ஆழ்ந்து பதியுமென்றும் எதில்நமக்கு அதிக ஆவலோ அதையொழியவேறெதையும் நமது புலன்கள் கருதாஎன்றும் சொல்லியிருக்கிறேனல்லவா இப்போது கொஞ்சக்காலமாக உனது மனம் அங்குமிங்கும் என்னைத்தேடுவதிலும் காணாமல் வருந்துவதிலுமே பதிந்து பழகிவந்ததால் நீ தூங்கினஉடன் உன்மனம் தான் பழகியவேலையை மறுபடிசெய்தது. இதற்காகவருந்தாதே எழுந்திரு' என்றான் பிரேமன்.

பிறகு மூவருமெழுந்து கால்கைகளைக் கழுவிக்கொண்டு சிற்றுணவு அருந்த உட்கார்ந்தார்கள். உண்மையான நண்பர்கள் நெடுநாள்சென்று ஒருவரைஒருவர் காணப்பெற்று உண்பதற்காக சேர்ந்தும் உட்கார்ந்து இனியஉணவாகவுமிருந்து அவஸரப்படுத்துவோருமில்லையென்றால் கொஞ்சத்தில் எழுந்திருப்பார்களா. கொஞ்சத்தில்பேசிமுடியுமா? அதிலும் இவர்கள் மூவரும்சிறுவயதோர். ஆதலால் நெடுநேரம் பேசிக்கொண்டே உண்டனர். அப்போது கலாவதி, "அண்ணா! இன்னொருதடவை 'கொழுத்தவெள்ளெறி' எங்கேசொல்லுங்கள் கேட்கலாம்" என்றாள். உடனே எல்லாரும் சிரித்தார்கள். 'இந்தப்பாட்டெல்லாம் எங்கேடாபடித்தாய்' என்றான் பிரேமன். 'உன்னிடத்திருந்த அன்பில் படித்தேன்' என்றான் ஆத்திரேயன்.

"அண்ணா நீங்கள் எந்தெந்த ஊர்களுக்குப்போயிருந்தீர்கள். என்னென்ன செய்தீர்கள் - இங்கென்னமாய்வந்தீர்கள் - எப்போது புறப்பட்டீர்கள் - உங்களூரில் எல்லாரும்சுகமா - இவற்றையெல்லாம்கேட்டு பதில்சொல்லுவதானால் நீங்கள்பட்ட கஷ்டத்தையெல்லாம் இரண்டாந்தடவையாக மனதால் மட்டுமாவது அனுபவிக்க

நேரிடும். ஆனாலும் இவற்றை வெளியேசொன்னால் ஒரு ஆறுதலும் உண்டு - எனக்கும் அந்தமாதிரிச் செய்திகேட்பதில் கொஞ்சம் ஆசையுண்டு. ஆதலால் உங்களுக்கு மனதிருந்தால் தயவுசெய்து சொல்லுங்களென்றாள் கலாவதி. "முதலில் நமதுகுருநாதர்செய்தி ஏதாவது தெரிந்தால் சொல்லு. அவருடைய திருவடியிணைதவிர இவ்வுலகில் நமக்கு ஸத்யமான வேறுதுணைகிடையாது. கடவுளுக்கடுத்தாற்போல் அவரேயாவரினும் மேலானவர். அதிலும் நமது ஆசானுக்கும் மற்றவர்களுக்கும் எவ்வளவோ வித்யாஸமுண்டு. வலுவில்வந்து ஒருபயனுமில்லாத எனக்கும் எவ்வளவோவிஷயங்களை ஒருவருஷத்தில் தெரியவைத்தார். என்னைப்பிரிந்தென்செய்கின்றார்? என்மீது கோபமாயிருக்கின்றாரோ - அல்லது என்னை மறந்துவிட்டாரோ - நமதூரையே விட்டுப் போய்விட்டாரோ? அவருக்கு நம்மைப்போல் பதினாயிரம் பேர் கிடைப்பார்கள். நமக்கு அவரைப்போல் வேறுயாவர்" என்று உள்ளன்பின் அறிதற்குறியான கண்ணீர் இமைகளில்வந்து ததும்பி நிற்கவும் மயிர்க்குச்செறியவும் கேட்டான் பிரேமன்.

ஆத்திரேயனும் ஏதோ தின்றுகொண்டே "உங்களிரண்டுபேருக்குமாக ஒரே பதில்தானுண்டு. இதோ சொல்லுகிறேன் சற்றிருங்கள்" என்று சொல்லி கொஞ்சம் தண்ணீர்குடித்துக்கொண்டிருக்கும்போது மணிமதியம்மாள்வந்து "குழந்தைகளே - எவ்வளவுநாழி செய்கிறீர்கள். சேஷி ஊருக்குப்போக காத்துக்கொண்டிருக்கிறாளே மறந்துவிட்டீர்களா - சுருக்காய் எழுந்திருந்து அவளுக்கு ஏதாவதுள்ளதைக் கொடுத்தனுப்புங்கள்" என்று சொல்லவும் கலாவதி எழுந்து இடதுகையால் தன் பெட்டியிலிருந்த கணக்கை எடுத்துப் பிரேமநாதனைப் பார்க்கச்சொல்லி அதன்படியே உள்ளபணத்தை சேஷிக்கு கொடுத்து "நீங்கள் சுகமாய்ப்போய் திவசம்செய்துவிட்டு தாமதிக்காமல் வந்துவிடுங்கள். வீட்டுவேலைக்கு வேறு யாரையும் காணோம்" என்றுபசாரமாய்ப் பேசி அனுப்பிவிட்டு மறுபடியும் பிரேமனிருக்குமிடம் வந்தாள். இதற்குள் பானுசேகரரும் அவர்களிடம்வந்து சேர்ந்தார். குழந்தைகள் கையை கழுவிக்கொண்டு வந்துட்கார்ந்தார்கள். ஆத்திரேயன் எல்லாரையும்பார்த்து "ஸாவதானமாய்க் கேளுங்கள், எனக்கு ஸரியாய் ஞாபகமில்லை ஆனாலும் சொல்லுகிறேன். நானும் பிரேமனும் அளவிலடங்காத ஸந்தோஷத்துடன் ஒருநாள் பேசிக்கொண்டிருந்தோம். மறுநாள் அதிகாலையில் பிரேமன் வாசித்துக்கொண்டிருந்த வீடு தீபட்டெரிந்ததென்று கேட்டு மெய்ம்மறந்து உடம்பு வியர்த்து ஓடோடிவந்து பார்த்தேன். எல்லாம் படார் சடாரென்று

வெடித்துக்கொண்டிருந்தன. ஓஹோ இறந்துவிட்டானென்று நம்பிக் கீழேவிழுந்து அழுதேன். பின்னால் என்னநடந்ததோ தெரியாது. மறுநாள் ராத்திரி கண்ணைவிழித்துக்கொண்டேன். கதறினேன் மூர்ச்சித்தேன் மறுபடி எழுந்தேன். என் அப்பாவும் அம்மாளும்வந்து ஏதேதோ சொன்னார்கள் அஃதின்னவெனத் தெரியாது. பிறகு எதையோ கரைத்து வாயில் கொண்டுவந்து புகட்டினார்கள். அதுவு மின்னதென்று எனக்குத்தெரியாது. மறுநாட் காலையிலெழுந்து பிரேமன் படிப்புவீட்டை வந்துபார்த்தேன். எல்லாம் கரிந்து சாம்பராய் யாராரோ நடந்து உழுதிருந்தாற்போற் காணப்பட்டது. உடனே அங்கிருந்து கிறுக்குப்பிடித்தவன்போல் வடக்கே ஓடிவந்தேன். அங்கோர் சிறுகால்வாய். அதில் பிரேமனுடைய செருப்பு வைத்திருந்தது. அது அங்குவரக் காரணமென்னவென்று நெடுநேரம் யோசித்து ஒன்றும் தெரியாமல் அதைப் பலதடவை மாரோடணைத்துக் கட்டிக்கொண்டு ஹா! பிரேமா என்று கதறினேன் முத்தமிட்டேன்" என்றான். மேலேபேச வாயெழவில்லை. சொல்பவனும் கேட்பவரும் கண்ணீருதிர்த்தார்கள். பிரேமன் இரண்டொருதடவை மூர்ச்சித்து விழுந்தான். சொல்லும்போதே பாநுசேகரர் 'ஐயோ' என்று தன்னையறியாமல் இரண்டுமூன்று தடவை பரிதபித்தார். கலாவதியும் திகைத்து நின்றாள். பிறகு சற்றுநேரம் கழித்து தன்னைத் தான் தேற்றிக்கொண்டு தளர்ந்துபோன அறிவை நிறுத்திக்கொண்டு மறுபடியும் தொடங்கி "என்னகதறியும் கேள்விமுறை கிடையாது. அங்கிருந்து ஊருக்குத்திரும்பினேன். மறுபடி வடக்கே போனேன். இரண்டொருதடவை கீழேவிழுந்தேன். நல்லவேளையாய் எங்கள் குருநாதர் அங்கேவந்தார். ஆத்திரேயா என்றார். ஸ்வாமீ என்றேன் பதைத்தேன், சொல்லமுடியாமல் கீழேவிழுந்தேன். மிகுந்த அன்போடு தழுவியெடுத்தார். அஞ்சாதே, பிரேமன் உயிரோடிருக்கிறான் என்றார். தைரியமாய் அவர் திருவடியில் விழுந்து போகலாம் வாருங்கள் - பிரேமனைப் பார்க்கவேண்டுமென்றேன். அதற்கு அவர் பிரேமனிருக்குமிடந் தெரியாது. அவன் நல்லகுணத்துக்கும் நல்ல எண்ணங்களுக்கும் அவனுக் காபத்தொன்றும் வராது. தீயிலிருந்து தப்பி ஓடிவிட்டான். என்னுடன் சொல்லிக்கொண்டு போனால் நல்ல இடம் சொல்லியிருப்பேன் தவறிவிட்டது - குழந்தை - போகட்டும் - நீ போயவனைத்தேடு - நானும்போய் பார்க்கிறேன் - என்னை யாரும் கண்டுபிடிக்கமுடியாது. நீ மட்டும் ஜாக்ரதையாய்ப்போய்த் தேடவேண்டும். என்ன நிலையி லெங்கிருந்தாலும் தெரிந்துகொண்டு இந்த ஊருக்கே வந்துசேரு. நான் இங்கேயே இருந்து தவம்செய்ய வேண்டுகிறே

னாதலால் கூடியசீக்கிரம் வந்துவிடுவேன் என்றுசொல்லி நெற்றி நிறையத் திருநீறுபூசிவிட்டார். நானெப்படி மறைந்து தேடப் போகிறேனென்று கேட்டபோது அவர் அநேகயுக்திகள் சொல்லிக்கொடுத்து அப்பனார் மாடு, குரங்கு, ஆடு, நாய் இவற்றைக்கொண்டு ஜீவிக்கக் கட்டளையிட்டு கொழுத்தவெள்ளெறி என்னும் பாட்டும் சொல்லிக்கொடுத்தார். நானும் ஸரிதானென் றொப்புக்கொண்டேன். அதுமுத லென்னென்னமோசெய்து ஒவ்வொன்றாய் தொலைத்துக் கடைசியாய் இந்தக் குரங்குடனே அநேக இடங்களைச் சுற்றினேன். இந்த ஊரில் வந்தவுடன் என் துன்பமும் தொலைந்தது இனி விசாரமில்லை” என்று சொல்லிமுடித்தான்.

“நீங்கள் பாம்பாட்டிப்பாட்டை குரங்குக்குப் பாடினபோதே பரம்பரையாண்டியன்று என்று தெரிந்துவிட்டது” என்று சிரித்தாள் கலாவதி.

“நீ சுருக்காய்ச்சென்று உங்கள் குருநாதனை இங்கே தாமதியாமல் கூட்டிக்கொண்டுவா, நீங்களெல்லாரும் இங்கேயே ஒருவருடமாவது இருக்கவேண்டுமென்பது என் எண்ணம்” என்றார் பானுசேகரரும்.

பிரேமனோ “வீடுபற்றியெரியக் காரணமென்ன-என்சிற்றம்மையே எதாவதுசெய்திருப்பாள். அப்படி சிலஜன்மங்கள். அது போகட்டும் என்தந்தையார் சுகமாயிருக்கிறார்களா?” என்ன, ஆத்திரேயன் “எனக்குத்தெரியாது. வீடுபற்றியெரிகிறபோது நான்போயிருந்தேனே, அப்போது சிலர் அவரைக்கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தார்கள் அவ்வளவுதான் நான் சொல்லக்கூடும், அதன்பின் என்ன ஆயிற்றோ அறியேன்” என்றான்.

“யாரையாவது இங்கிருந்தனுப்பி என்தந்தையுடைய க்ஷேம ஸமாசாரம் தெரிந்துகொண்டு நமது குருநாதனையும் அழைத்துவரச்செய்தால் நல்லது,” என்றான் பிரேமன்.

“நானேபோகிறேன்” என்றான் ஆத்திரேயன்.

“அப்பா நீபோகாதே - ஒருதடவைபட்டபாடு இன்னும் ஆறவில்லையே” என்றான் பிரேமன். அதற்குள் பானுசேகரர் “யாராவது ஒரு ஆளைப்பிடித்தனுப்பினால் போதாதா? இதென்ன பிரமாதம் - இதற்காக நீ போவானேன்” என்றார்.

உடனே கலாவதி யெழுந்து மெதுவாயும் மரியாதையாயும் “அப்பாநீங்ககள் சொல்லுவது ஸரித்தான். ஆனால் தகுந்த ஆளாய்ப்போகவேண்டும். போகிறவன் தன்னை இன்னானென்று யாருக்

கும் சொல்லக்கூடாது. இவர்களுடைய குருநாதரிடம் மட்டும் தெரிவிக்கலாம். ஆனால் அவரின்னாரென்று தெரியாமல் கண்டோரிடம் சொல்லிவிட்டால் பிசகாய்முடியும். நமக்கு ஒன்று முக்கியம் இப்போது திடீரென்று அண்ணா வெளியாகக்கூடாது. கடுமுகியம்மாளுக்கு நம்மால் யாதொருதீங்கும் வரக்கூடாது. இன்னுமெவ்வளவோ உண்டு. இதெல்லாம் உங்களுக்கு தெரியாததல்லவே" என்றாள்.

"கலாவதி நல்லயுக்தியாய்ப்பேசினாய். ஏதாவது ஏற்பாடில்லாமல் நானென்வீட்டுக்குப் போகமாட்டேன். ஒன்று என்சிற்றம்மைக்கு யாராவது ஏதாவது நல்லகுணம் வரும்படிச்செய்வதாய் பிணை (ஜாமீன்) இருக்கவேண்டும். இல்லையானால் நான் நல்லஸ்திதியிலிருக்கவேண்டும்" என்றான் பிரேமன்.

"ஓஹோ! ஸபாசு!! உன் சிற்றம்மைக்கா? ஒருநொடியில் குணம் மாறிவிடும். நாயின் வாலையாவது ஒருவேளை நிமிர்த்தலாம், நெருப்பின்சூட்டை நீலக்கல்லாலாவது மாற்றலாம், பாம்பின் விடத்தை பல்லைப்பிடுங்கியாவது போக்கலாம், அவள் குணத்தை மாற்ற உன்னையும் என்னையும் படைத்த பிரமதேவன் வந்தாலும் முடியாது! முடியாது!!" என்றான் ஆத்திரேயன்.

"எவ்வளவு பொல்லாதவளாயிருந்தாலும் நம்ம வீட்டைச்சேர்ந்தவளை நாம் ஸமயத்தில் விட்டுவிடக்கூடாது" என்று பிரேமன் சொல்ல "ஆமாம் தருமபுத்திரர் 'நாம் நூற்றைவர்' என்றதுபோல், ஆனால் ஆத்திரேயண்ணா சொல்வதும் பிசகல்ல, எல்லாவற்றிற்கும் கூடிய விரைவுடன் யோசித்து ஒருமுடிவுக்கு வரவேண்டாமா" என்றாள் கலாவதி.

"நானேதான் போகவேண்டும். வேறென்னபேசி என்ன. இந்த விஷயத்தில் நான் துணிந்தகட்டை, நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம், போய் உடனே வந்துவிடுகிறேன். நமது குருநாதனைப்பிடித்தால் அவரே நல்லவழிசொல்லுவார்" என்றான் ஆத்திரேயன்.

இப்படியாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து கடைசியில் ஆத்திரேயனே போகவேண்டுமென்றும் போனஉடனே காரியத்தைப்பார்த்துக்கொண்டு இரண்டாம்பேருக்குத் தெரியாமல் திரும்பிவரவேண்டுமென்றும் போகிறவழியிலேயே குருநாதனைக்கண்டு அவர் சொல்லுகிற புத்திமதிப்படியே நடந்துகொள்ளவேண்டுமென்றும் அவனையுமெப்படியாவது அன்புலுக்குக் கூட்டிக்கொண்டு

வரவேண்டுமென்றும் தீர்மானமாயிற்று. மறுநாட்காலையில் ஆத்திரேயனை ஊருக்கனுப்பவேண்டுமென்ற துன்பம் கலாவதிக்கும் பிரேமனுக்கும் பீழைசெய்தது. ஆதலால் இருவர் முகத்திலும் நல்ல களைமாறிவிட்டது. பிறகு ஒருவாறுதேறி ஊருக்குப்போகிறபோது வியஸனப்படக்கூடாதென்று தீர்மானித்தார்கள். அன்றைப்போதெல்லாம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்து நடு இரவிலேயே தூங்கினவர்கள் மறுநாள் விடியஜாமத்துக்கே எழுந்திருந்துவிட்டார்கள். பிரயாணத்துக்கேற்ற வேலைகளைச் செய்தார்கள். யாவரும்சேர்ந்து ஆத்திரேயன் தனியாய்ப் போகக்கூடாதென்றும் ஊர்போய்ச் சேரும்வரையில் ஓர் வேலையாளை கூட அனுப்பவேண்டுமென்றும் முடிவுசெய்தார்கள். கடைசியாய் ஆத்திரேயன் காட்டிய பல நியாயங்களால் அதுவேண்டாமென்றாயிற்று. ஊருக்குப் போகவேண்டிய வேளையும் வந்தது. ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். ஆத்திரேயன் சிறிது கண்கலங்கிவிட்டான். பிரேமன் மனம் தளர்ந்தான். ஒருவரை ஒருவர் பிரியமாட்டாமல் தியங்கித்தியங்கி நின்றார்கள். கடைசியாய்ப் பிரியும்நேரத்தில் திடீரென்று பிரேமனுக்கு ஞாபகம்வர, "அப்பா நான்வந்த வழியாகவோ அல்லது எப்படியோ கிராதகர்களிருந்த வீட்டுக்குப்போ. அங்குள்ளவர்களுக்குத் தேறுதல்சொல்லு. அவர்கள் செய்தியும் அறிந்துவா. அவர்களுக்கு நம்மாலாகவேண்டுவது ஏதாவதுண்டானால் கவனமாய்வந்து சொல்லு. எங்கும் தாமதிக்காதே. ஊருக்குப்போய் ஸ்ரீ வைத்தியநாத ஸ்வாமியை வணங்கும்போது என்னை நினைத்துக்கொள்" என்று சொன்னான். பிறகு சற்றுநேரம் வரையில் "போய்விட்டு வருகிறேன்", "போய்விட்டு சீக்கிரம்வரவேண்டும்" என்னும் வார்த்தைகளை ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு ஆத்திரேயனை வழிவிட்டார்கள். ஆத்திரேயன் தெருக்கோடி போகும்வரையில் ஒவ்வொருவரும் கண்ணைக்கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அவனும் கைக்குறி காட்டிக்கொண்டும் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டும் நடந்துமறைந்தான். அன்றுமுழுவதும் பிரேமனாதியர் அவனைப்பற்றியும் அவன் பிரேமனிடம் வைத்திருந்த நட்பைப்பற்றியும் பேசிக்கொண்டு சுகமாய்ப் போதுபோக்கினார்கள்.

அதிகாரம்—ம.

" தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்ற றிந்தார்"—குறள்.

மறுநாள் காலையிலெழுந்து பிரேமநாதனும் கலாவதியும் தமது காலைக் கருமங்களை முடித்துக்கொண்டு அவ்வீட்டின் கூடத்தின் மேலைப்பக்கத்தில் இரண்டு உருண்டு திரண்டு நீண்டு பருத்துள்ள கற்றூண்களின் தலையிலேற்றி, அகன்று தடித்து நீண்டுள்ள உத்திரத்திலிருந்து நெருங்கிய பின்னல்களையுடைய இருப்புச்சங்கிலிகளால் தொங்கிய ஒரே பலகையாற் செய்த வைரமேறிய அகன்ற பூவரசம் பலகை ஊஞ்சலில் ஏறி வழக்கம்போல் உட்கார்ந்து ஆடிக்கொண்டிருக்கும்போது, கலாவதி 'ஆத்திரேயண்ண இவ்வளவு நாழி ஊருக்குப்போய்ச் சேர்ந்திருப்பானு?' என்ருள்.

பிரேமன்—" அதென்னமோ தெரியாது" என்ருன்.

கலாவதி—" ஊருக்கு நேரப்போகிருனே இல்லாவிட்டால் கிராதகர்களுடைய வீட்டுக்குப் போய்விட்டுத்தான் போகிருனே அதுவும் தெரியவில்லை. அங்கேன் அவனைப் போகச்சொல்லவேண்டும்? அது எனக்கு விசாரமாகத்தான் இருக்கிறது."

பிரேமன்—" அப்படி யொன்றும் பயப்படாதே. கொலைகாரர்கள் மாண்டபின் நமக்கு பயமேது?

கலாவதி—" வேறு யாரும் அப்படிப்பட்டவர்கள் இந்த லோகத்திலேயே கிடையாதா?"

பிரேமன்—" இருந்தால்தான் என்ன, ஆத்திரேயன் முட்டாளா? என் கதையைக் கேட்டபிறகுகூடவா தெரியாமற் போய்விடும்? 'முன்னுல் நடந்தவன் கிணற்றில் விழுந்தால் பின்னுல் நடக்கிறவனுக்கு தீவட்டி பிடித்தாற்போல' என்று நீ கேட்டதில்லையா."

கலாவதி—" அதுபோகட்டும், வழியாவது நல்லதாயிருக்குமா?"

பிரேமன்—" கொஞ்சம் பயங்கரமான வழிதான்."

கலாவதி—" பின்னேயேன் அங்குபோகச்சொல்லினை? புலி கரடி சிங்கம் முதலான காட்டுமிருகங்கள் உண்டோ?"

பிரேமன்—" இருந்தாலுமிருக்கும்."

கலாவதி—" அப்படியானுல் அந்தவழியிலே போகச்சொல்லலாமா, நான்தான் அப்போதே வேறு யாரையாவது அனுப்பலாமென்றேனே."

பிரேமன்—"இதற்கெல்லா மஞ்சியா நாம் பிழைக்கப்போகிறோம். நமது அதிர்ஷ்டமும்-கடவுளும்-குருநாதரும் நம்மைக் கைவிடப்போகிறதில்லை, பயந்து என்னவாகும். ஆத்திரேயனும் துன்பத்தி லடிபட்டவனாகையால் நல்ல யுக்திகளும் தெரிந்துகொண்டே இருப்பான்.

கலாவதி—"அது கிடக்கட்டும் கிராதகர்கள் வீட்டுக்குப்போகாமலிருந்தால் நஷ்டமென்ன? அவர்க ளுன்னைக் கொல்லவேவேண்டுமென்றுதானே வளர்த்தார்கள்.

பிரேமன்—"நமக்கு அவர்கள் கெடுதிசெய்தால் நாமும் கெடுதியே செய்யவேண்டுமோ? யாரென்னசெய்தாலும் நாம் நல்லதுதான் செய்யவேண்டும். அதுதான் நம்ம ஜாதிக்கடுத்தது. 'நன்மைவிதைத்தால் நன்மை விளையும்-தீமை விதைத்தால் தீமைவிளையும்' என்று சொல்லியிருக்கிறேனல்லவா? அன்றியும், நாமெல்லாம் அந்தணர்கள். 'அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்-செந்தண்மை பூண்டொழுகலால்' என்று சொல்லிக் கேட்டாயல்லவா? நம்மை ஒருவன் ஒன்று செய்தானென்று நாமும் பதில் செய்தால் நமக்கும் அப்படிச் செய்தவனுக்கும் என்ன வித்யாஸம்? இரண்டுபேருந்தானே மூன்றாவனால் பொல்லாதவர்களாக எண்ணப்படுவோம். நமக்குக் கெடுதிசெய்தும் நாம் நன்மையே செய்வோமேயானால் அப்போதுதான் நமக்கு தெய்வம் துணைநிற்கும். அன்றியும் வேடன்சொல்லைக் கேட்டிருந்தால் அவர்களும் செத்திருக்கமாட்டார்கள்-நானும் பிழைத்துவந்திருக்கலாம் ஆதலால் நானே அவர்களைக் கொன்றவன். அந்த வீட்டிலிப்போது ஆண்மக்களும் கிடையாது. அங்கிருப்பவர்கள் அன்யாயமாய் திண்டாடுவார்கள். அப்போது மனமுருகி அழுவார்கள். அவர்கள் மனம் கனாயக்கனாய நமக்குத்தான் கேடென்று நன்றாய் எண்ணிக்கொள்" என்றான்.

கலாவதியோ—"அண்ணா நீ சொல்வதால் உன் மனது நல்லதென்றுமட்டுந் தெரிகிறதே ஒழிய நியாயமே எனக்குப் படவில்லை. 'தன்னைக் கொல்லவந்த பசுவைக்கொல்லு' என்றல்லவோ பழமொழி. அப்படியும் நீயா கொன்றாய்? வேடனல்லவா அது செய்தான். வேடன் சொன்னதைக் கேட்டிருந்தால் அவர்கள் சாகமாட்டார்களென்றாலும் நீ கேட்டிருப்பதைவிட கேளாமல் விட்டதே மேன்மை. அவர்கள் தொலைந்துவிட்டபடியால் இனியாரும் அவர்களால் சாகமாட்டார்கள். அநேகம் உயிர்களுக்கு நன்மையுண்டாகுமென்றால் ஒரு உயிர்போனால்தான் நஷ்டமென்ன" என்று வாதித்தாள்.

"அடி பைத்தியகாரி! உன்னோடென்னசெய்கிறது? 'தன்னைக்கொல்லவந்த பசுவையுங் கொல்லு' என்றால் பழிக்குப்பழிவாங்கவேண்டுமென்று கருத்து? ஒரு பசு அல்லது ஒரு மனிதன் ஆகிய இரண்டில் ஒன்று சாகவேவேண்டுமென்றிருந்தால் அதிக அறிவும் பிரயோசனமுமுள்ள மனிதனுடைய உயிரே விசேஷமாகையால் பசுவைக்கொல்லலாம் என்றல்லவா அதன் கருத்து? எது எப்படியானாலு மாகட்டும், நானிருந்த வீட்டின் நிலைமை இப்போது பரிதபிக்கக்கூடியதா யிருக்கிறது நம்மால் கூடியவரையில் யாரையும் நாம காப்பாற்றுவதே இந்தப்பிறப்பின் பயன். தன் வயிற்றுப்பாட்டையே பார்த்துக்கொண்டும், மற்றவர்களெப்படி வேண்டுமோ போகட்டுமென்றும் விட்டுவிடுவது மனிதத்தன்மைக்குக் குறைவு. இதுமட்டோ? யாராயிருந்தாலும் எந்தச்சாதியானாலும் எவ்விதக்கொள்கையரானாலும் நாம் அவர்களை எந்தக் காரணத்தாலும் தள்ளிவிடக்கூடாது. நாமறிந்தவரையில் மற்றவர்களுடைய நன்மைக்காகவும் உழைக்கவேண்டும். மற்றவர்களுக்குத் தெரியாததை நன்றாய் தெரிவிக்கவேண்டும். மற்றவர்களிடத்துள்ள கெட்ட குணங்களை மெள்ளச் சொல்லிவிலக்கவேண்டும். நமக்கென்ன லாபம் - எது எப்படிப்போனாலென்ன - நமக்கொரு துரும்பாவது வரும்படி கிடைக்குமோ என்று வழக்குப்பேசுவது வீண் மூடத்தனம். எல்லாரும் வாழ்வதே எல்லார்க்கும் நன்மையும் பெருமையுமாகமுடியும். "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" யென்று ஔவையாரும். நம்முடைய முயற்சியாலும் உதவியாலும் மற்றவர்களின்பமடைவார்களானால் அதுவே நமக்குப்புண்ணியம். இதைவிடப் பெரிது வேறொன்றுமில்லை. ஒருவருடைய குறைகளை நன்றாயறிந்துகொண்டு அவர்களுக்கதையெடுத்துச்சொல்லி அக்குறைகள் நீங்கும் வழியைத் தேடுவதே படித்தவர்களுக்கடையாளம். அப்படி நாம் மற்றவர்களுக்காக பாடுபடும்போது அதை நன்றாயறியாத குற்றத்தால் பலபேர்கள் பலவிதமாகச் சொல்லுவார்கள். ஆனால் உண்மையான மன உறுதியுள்ளவர்கள் இவற்றில்பின் வாங்கலாகாது. எது எப்படியானாலும் மனந்தடுமாறக்கூடாது. ஊக்கத்தைக் கைவிடக்கூடாது. எவ்வித இடையூறுகளுக்கும் அஞ்சலாகாது. யாருக்காக நாம்பாடுபடுவோமோ அவர்களே நமக்கு விரோதமாய் கண்டபடி நகைத்தும், தனியாயிருந்த காலம்பார்த்துவந்தடித்தும், அல்லது கொல்லவழிதேடியும், கல்மண் சாணப்பொறுக்கு இவற்றைவிட்டெறிந்தும், கூட்டம் கூட்டமாய்க்கூடி இழிவாகப்பேசியும் வந்தாலும் அதையும் ஒருபொருட்டா யெண்ணாமல் அதற்காகவும் ஜனங்களைக்கண்டு பரிதபித்து முன்வைத்தகாலைப் பின்வாங்காமல் எதிர்த்து

நின்று போராடுவதே உண்மையான மனிதத்தன்மையைக் காட்டும். அப்படியுள்ளவர்களே கடவுளருளைப் பெறுவார்களென்ப துண்மை. அவர்களே நினைத்தது முடிப்பார்கள். அவர்கள் கீர்த்தியே எல்லா உலகங்களிலும் பரவும். அவர்களுடைய சாவுக்காகவே சராசரமான யாவும் கண்ணீர் விட்டழும். அவர்களுடைய பூத உடம்பழிந்தாலும் புகழுடம்பழிவதே கிடையாது. அவர்கள் சென்றவழியே அநேகர் பிற்காலங்களிற்செல்லுவார்கள். ஆதலால்தான் நான் அந்தக்கிராதகர்களுடைய வீட்டார்க்கும் நன்மைசெய்ய எண்ணி என்னுயிர்போன்ற ஆத்திரேயனை யனுப்பி அவர்கள் நிலைமையை நன்றாயறிந்துவரச்சொன்னேனே யல்லது வேறன்று" என்று நெடுநேரம் அதிக உருக்கத்துடனும் விறுவிறுப்புடனும் பேசினான் பிரேமநாதன்.

கலாவதியோ "ஆமப்பா நீ சொல்வது சரித்தான்.

'ஆவுக் காயினு மந்தணர்க் காயினும்
ஏவர்க் கானு மெளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் குந்தொழுந் தேவர்க ளாகுவார்'—என்று ஸ்ரீ

ராமன்கூட சொல்லிக்கொடுத்திருக்கிறார் நமக்கு. அந்தணரும் எளியவரும் பெண்பாலருமாய அவர்களுக்கு நன்மைசெய்வது சிறிதும் பிசகன்று - அதுபோகட்டும். மற்றவர்களுடைய கெட்டகுணங்களை விலக்கவேண்டுமென்று ஒருவார்த்தை சொல்லியிருக்கிறாய் ஞாபகமிருக்கிறதா?" என்றாள்.

உடனே "நன்றாய் ஞாபகமிருக்கிறது. அந்தவிஷயமாய்த் தான் நானிப்போது ஆலோசிக்கிறேன்" என்றான் பிரேமன்.

கலாவதி—"என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்" என்றாள்.

பிரேமன்—"இந்த உலகத்தின் காரியங்களைத்தான். என்னைக் கொல்லவந்தவர்களைப்போல் எவ்வளவோபேர் இருப்பார்களே அவர்களுக்கு உபதேசம்செய்து திருத்தவேண்டாமா?"

கலாவதி—"நாம் அப்படிப் பார்க்கப்போனால் எவ்வளவோ விதத்தில் நம்மவர்களைத் திருத்தவேண்டியிருக்கிறது. ஆணுக்காகட்டும் பெண்ணுக்காகட்டும், குறையும் கஷ்டமுமில்லாமல் எங்கிருக்கிறது?"

பிரேமன்—"குறையென்று தெரிந்தும் நாம் அதைப்போக்க வழிதேடாவிடில் அழகன்று. குறையுள்ளவர்களுக்கு தங்கள்குறை கண்ணிற்பட்டால் உடனே போக்கிக்கொள்ளப் பார்ப்பார்கள். ஆகையால் அவர்கள் கண்ணில்படாமல் நமக்குத் தெரிகிறபோது நாம் அவர்களுக்கு அதையெடுத்துக்காட்டி விலக்கவேண்டும்."

கலாவதி—“ கேளாவிட்டால் என்னசெய்வாய்.”

பிரேமன்—“ ஒருதடவைக்கு பத்துத்தடவையாய் நல்லஸமயம் பார்த்துச்சொல்லுவேன்.”

கலாவதி—“ நீ அதைப்பற்றிப் பேசவருகிறதற்காகவே உன்னைக் கண்டருவருப்படைந்தால் என்னசெய்வாய்?”

பிரேமன்—“ நறுக்கென்று அந்த ஸமாசாரத்தை விட்டுவிட்டு வேறுவழியில் மெள்ள ஸ்நேகம்செய்துகொண்டு நாளாக நாளாக அவர்களுக்குத் தெரியாமலே கொஞ்சம் கொஞ்சமாய் உபதேசம் செய்வேன்.”

கலாவதி—“ நீ செய்வாயப்பா.”

பிரேமன்—“ நீ மறந்துபோய்விட்டாயா?

‘ மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்’—என்று நீதிநெறி விளக்கத்தில்

நான் வாசித்துக்காட்டவில்லையா? பிறருக்கு உபகாரம்செய்வதுவே தமக்குத் தொழிலாய்க்கொண்டவர்கள் என்னவந்தாலும் பின்வாங்குவார்களா? மற்றவர்கள்வேறு தாம்வேறென்று நினைப்பார்களா? வேறுயாருக்காவது வருந் துன்பம் தம்முடையதேபோல் எண்ணமாட்டார்களா? நோய் - வெயில் - மழை - பனி - காற்று என்பவையெல்லாம் எவ்வளவு கொடுமைசெய்தாலும் நல்லவர்கள் தங்கள் பிடியைவிடுவார்களா?”

கலாவதி—“ உலகம் முழுவதுமுள்ள ஒருதப்பிதத்தை எப்படிப்போக்குவது? அதுவே முடியாதகாரியமாய்ப் பலர்திகைக்க பல தப்பிதங்களை எப்படிப்போக்குவது? இஃதெல்லாம் வீணானயோசனை’

பிரேமநாதன்—“ ஊக்கமுள்ளவனுக் கெதுதான் கையாலாகாமற்போகும். ஒருவனுக்கு இரண்டுபேருக்குச்சொல்லி மெள்ள ஐந்தாறுபேர்களை என்பக்கம் சேர்த்துக்கொண்டு எல்லாரும் ஒருமனதாய் இறங்கினோமானால் எதுதான் செய்யமுடியாது? ஒற்றுமையாலாகாத்காரியமு முண்டோ?”

கலாவதி—“ நீ என்னசெய்தாலும் பிரயோஜனமில்லாமல், உனக்குப் பழிப்பும், அவமானமும் நஷ்டமும் மேலும்மேலும் வந்துகொண்டிருந்தால் என்னசெய்வாய்? பட்டகாலிலேயே படுமென்ப

துபோல உனக்கு அவமானமும் அதிர்ப்தியும் வருவதோடு நோய்முதலியவந்தால் என்செய்வாய்? எல்லாரும் உன்னைக் கைவிட்டுவிட நீ ஒண்டியாய், சோறும்கிடைக்காமல் திண்டாடினால் என்னசெய்வாய்? இதையெல்லாம் நன்றாயெண்ணிப் பார்."

பிரேமன்—"நான் முன்னமேயே இதற்கெல்லாம் பதில்சொல்லி யிருக்கிறேன் நினைத்துப்பார்த்தால் நன்றாய்த் தெரியவரும். ஒருவரிடத்துள்ள குறையைக் கண்டுபிடித்து அதை விலக்கவேண்டிய வழியையும் தேடுவேன். அதன்பின் என்னாலானவரையில் முயல்வேன். எவ்விதமான தடைகளையும் பொருட்படுத்தாமல் மேலும்மேலும் ஊக்கமாய் நிற்பேன். இப்படியே சாகும்வரையிலிருந்தும் ஒருநன்மையும் என்னாற்செய்ய முடியாவிடில் அதுவும் நஷ்டமில்லை. இவ்வளவுதூரம் மனப்பூர்த்தியாய் எதிர்த்துப் போராடினோம் என்னு மெண்ணமே எவ்வித ஆனந்தத்தையும் கொடுக்கும். ஆதலால் நிறைந்த மனதுடன் கண்ணைமூடுவேன். நான் ஒருவனே இந்தமாதிரி எண்ணமுடையவனென்றுண்டா? இன்னுமெவ்வளவோபேர்கள் கிடையாதா? நான் தொடங்கிய காரியம் எனக்குப்பின்னால் வருமவர்களுக்கு சுளுவாய் முடியுமன்றோ? ஒரு வீடுகட்டத் துணிந்து எவ்வளவோ பாடுபட்டு கொஞ்சமாவது பொருள்சேர்த்துவைத்து ஒருவனிறந்துவிட்டால் அவன்பின்னால் வருபவர்களுக்கு அந்தப் பொருள்மட்டிலாவது முயற்சி குறையுமல்லவா? ஆதலால் வேறுவிஷயங்களில் எல்லாக்கவலையையும் செலுத்தலாமல்லவா? இப்படியே ஒருவன்பின் ஒருவனாக பத்துப்பேர் முயன்று இறந்தாலும் பதினோராவது மனிதனாவது எண்ணிய எண்ணத்தை முடித்துவிடுவானன்றோ? அதன்பின் எவ்வளவோ தலைமுறைகளாக எவ்வளவோபேர்கள் அந்த வீட்டில் குடியிருக்கலாமன்றோ? அதுபோல் உலகத்துக்கு நன்மைசெய்ய நாம்தொடங்கி அது முடிவுபெறாமல் போனாலும் நமக்குப்பின் வருபவர்களாவது அல்லது அவர்களுக்குப் பின்வருபவர்களாவது அந்த நன்மைமுடியப் பெறலாமல்லவா? ஆதலால் அவரவர்கள் செய்யக்கூடியதை முடிவெப்படியானாலும் அஞ்சாமலிருந்தே செய்யவேண்டும்" என்று மன உற்சாகத்துடன் சொன்னான்.

கலாவதி—"ஸரித்தான் இவ்வளவுதூரம் சொல்லுகிறாயே-நம்மவர்களிடத்தில் என்ன குறைகளைக் கண்டாய்? அவைகளெப்படித்தீரும்? நீ அதற்கென்ன செய்யப்போகிறாய்?" என்றாள். பிரேமனும் நல்ல உற்சாகத்துடனே "எனக்கு நல்லசமயம் கிடைத்தது. மனதிலிருந்துகொண்டு வேலைக்கொன்றாய் வெளிக்கிளம்பி ஒழுங்கில்லாமலிருந்த விஷயங்களை நீ இன்று நல்லவேளையாய் வெளியாக்

கச்சொன்னதால் ஒருவாறு ஒழுங்குபடுத்திச் சொல்லுகிறேன். அதுவே எனக்கு நல்லது. இன்னது முன்னால் இன்னது பின்னாலென்று ஒரு வழி நன்றாய் என் மனதிற் பட்டுவிடும். புதிதுபுதிதான யுக்திகளும் தோன்றும் நீயும் ஏதாவது சொல்லுவாய்" என்றான்.

"இருக்கட்டும்; என்னடா ஒரு பெண்பாலிடம்போய் என்னென்னமோ பேசிக்கொண்டிருக்கிறாய் என்று யாராவதுகேட்டால் என்னசெய்வாய்" என்றாள் கலாவதி.

"என்மனோபாவத்தை அறிந்தவளும், உயிர்த்தோழியும் ஆண்மக்களைவிட அறிவிற் குறையாதவளும் நல்ல யுக்திசாலியுமான நீயே விரும்பாத ஒன்றை வேறு யாவர்தான் விரும்புவார்கள்? ஆதலாலும் நான் சொல்லப்போவது பெண்களுக்கு முதலாய்த் தெரியவே வேண்டுமென்று நானாசைப்படுவதாலுமே, என்று பதில்சொல்லுவேன்" என்றான் சிறுவன்.

"ஆனால் சொல்லப்பா கேட்கலாம்" என்றாள் சிறுமி.

உடனே பிரேமன் கடவுளையும் தன் குருநாதனையும் மனதிலெண்ணி சற்று கண்ணைமூடிக்கொண்டிருந்து பின்னர் ஒவ்வொன்றாக சொல்லத்தொடங்கினான். "நான்சொல்வதை நீ கருத்தாய்க் கேட்கவேண்டும். சொல்லும்போது கொஞ்சமாவது உனக்கு வேறு விஷயங்களில் மனது சென்றால் உடனே நீயாகவே என்னை நிறுத்தச்சொல்லு. நெடுநாளாய் எனது மனதிலிருந்து குமுறிக்கொண்டிருக்கிற ஸங்கதிகளாகையால் எப்போது வெளிவருவோமென்று ஸமயம்பார்த்துக்கொண்டு நான் முன்னே நான் முன்னே என்று நிற்கின்றன. ஸரியாய் சொல்லத்தெரியாமல் நான் ஏதாவது உளறிவழிந்தாலும் நீ அதை ஸரிப்படுத்து.

"நமதுநாட்டில் வரவர ஒற்றுமை குறைந்துகொண்டு வருகிறது. இதுவே நமக்கு முதலாவது குறை. இந்த ஒருகுறை நீங்கினால் மற்றவெல்லாம் தாமே நீங்கிவிடும். ஒற்றுமையால் வரக்கூடிய நன்மைக்களவில்லை. ஒற்றுமையுடனிருப்பவர்களுக்கே பலமுண்டு. அவர்களுக்கே எல்லாநன்மையும் சுளுவாய்க் கிடைக்கும். ஸாதாரண ஒற்றைத்துரும்பானால் அதை ஒரோகையாலும் கிள்ளியெறியலாம். வாயால் ஊதினாலும் பறந்துபோகும். அதே துரும்பில்பலவற்றை ஒன்றாகச்சேர்த்து முறுக்கி வடமாக்கினால் பெரியதேர்களையும் அதனால் இழுக்க சுளுவாய்முடியும். துறைதப்பி மயங்கும் பெரிய மரக்கலங்களையும் அதனால் கரைக்கு இழுத்துவிடலாம். அந்தவடத்தை ஆக்குவதற்கு முதலாக பல ஆள்கள்வேண்டிவரும். அதை ஆதரவாகக்கொண்டு எவ்வளவோ பாதாளத்திலும் இறங்கலாம் எவ்வளவு

உயரத்திலு மேறலாம். ஆதலால் தனித்தனியா யிருப்பவர்க்கு எள்ளளவும் வலுவில்லை. ஒன்றுசேர்ந்தால் எதையும் ஸாதிக்கலாம். ஒற்றுமையுடனிருப்பதாலேயே பெரிய மலைப்பாம்புகளையும் சிறிய எறும்புகள் கொன்றுவிடுகின்றன. அந்த எறும்புகளைப்பார்த்தாவது மனிதர்களுக்கு அறிவுவராவிட்டால் மனிதஜன்மத்தாலடையும் லாபந்தானென்ன? ஸாதாரணமான களிமண்தரையில் மண்வெட்டிகொண்டு வெட்டி ஒருநொடியில் பெரியகிணறு தோண்டிவிடலாம். கற்பாறையிலப்படிச் செய்யமுடியுமா? பாறைகளிலுள்ள அணுக்கள் ஒன்றுக்கொன்று பிடிப்பு அதிகமா யிருப்பதாலல்லவா அவற்றைத்தோண்டுவது கஷ்டமாயிருக்கிறது. ஆதலாலேயே ஒற்றுமையுடனிருப்பவர்க்கே வலு பிகுதியென்று தெரிந்துகொள்ளாத மனிதர்கள் நடைப்பிணங்களே யொழிய வேறென்ன? ஒற்றுமையுடனிருப்பவர்களை எந்தப்பகைவனும் எதுவும் செய்யமுடியாது. பகைவர்களுடைய வீணான சதி யாலோசனையாலெல்லாம் ஒற்றுமையாய் வாழுநரை அசைக்கமுடியாது. மணலில்விட்ட தண்ணீர் ஒருநொடியில் உள்ளே போய்விடும். கற்பாறையில்விட்ட தண்ணீர் உள்ளேபோகாமல் கீழே வழிந்துவிழுந்து வெயிலாற்காய்ந்து ஆவியாகமாறும் - மணலுக்குமணல் அதிகநெருக்கமில்லாததாலே யல்லவா அதில்விடும் தண்ணீர் ஒருநொடியில் உள்ளேபோகிறது. இவற்றை யெல்லாம் கண்ணால்பார்த்துக்கொண்டிருந்தும் ஒற்றுமையில்லாமல் தலைக்குத்தலை மூப்பாயிருந்தால் என்னகாரியம் யாராலாகும்? ஒருவண்டியிற்கட்டியிருக்கும் குதிரைகள் நான்கும் ஒரேமுகமாயிழுத்தால் சுளுவாக வண்டிநினைத்த இடத்தில் விரைவாய்ப்போய்ச் சேரும். அதைவிட்டு மூலைக்கு ஒன்றாய் இழுத்தால் வண்டி ஒரு அடியாவது நகருமோ? அதுபோல் ஒருமனப்பட்டு ஜனங்களில்லாவிட்டால் யார்க்குத்தான் எதுதான் சுளுவாயும் இன்பமாயும் முடியும்? எறும்புகளிடத்திலும் ஒற்றுமையிருக்கிறதென்று முன்னமேயே சொன்னேன். காக்கைகளைப்பார்த்தாலும் ஒற்றுமை தெரிந்துகொள்ளலாம். ஒன்றாயிருந்தால் சோற்றைத்தின்பதற்கஞ்சும் காக்கைகள் காகாவென்று கத்திக்கொண்டு பலவாயிருந்து தைரியமாய்த்தின்பதை யார்தான் அறியார்கள்? பலவாயிருக்கும் கறையான்கள் சேர்ந்து எவ்வளவு வலுவான புற்றுக்களைக் கட்டுகின்றன - இப்படியே பார்த்தால் நரி - கீரி - குரங்கு - யானை - மாடு - முதலிய. எவ்வளவோ பிராணிகள் ஒற்றுமையாயிருந்து அதனாலேயே ஸந்தோஷமாய் தத்தமக்குரிய எல்லா இன்பங்களையும் அனுபவிக்கின்றன. கேவலம் மிருகங்களுக்கும் பறவைகளுக்குங் கூட ஒற்றுமையிருக்கும்போது மனிதர்களுக்கு மட்டும் அஃதில்லாவிடில் ஐயோ! மனிதப்பிறப்பு வீண் தலைவலியாகவோ முடிகின்றது!

நம்மவர்களுக் கென்றுதான் அறிவுவருமோ? என்றுதான் அவர்கள் தமது நிலைமையைத் தெரிந்துகொள்ளுவார்களோ? என்றுதான் ஒற்றுமையின் பெருமை அவர்கள் மண்டையில் நுழையுமோ! என்றுதான் தமது சிறு சண்டைகளை விட்டொழித்து ஒன்றாய்க்கூடி நன்மையை நாடுவார்களோ? ஆஅ! வைத்யநாதா! நம்மவர்களுக்குள்ள இந்தக்குறைக்கு ஒருவைத்யம் உமக்குத் தெரியாதா! மற்ற தேசத்தாரெல்லாம் கொழுத்துக்கொழித்து திரிகின்றார்களே. நாம்தானா மிருகங்களிலும் தாழ்ந்து ஒருவரை ஒருவர் உறுமிக் கடிக்க வேண்டும்? எந்த ஜாதியானாலும் எந்த மதமானாலும் எந்தச் சீமையானாலும் நன்றாய் வாழ்வதற்குக் காரணத்தையும் நம்மவர்கள் என்றைக்கும் தலைமுக்காடிட்டு அழுவதையும் பார்த்தால், யார் ஒற்றுமை - ஒற்றுமை என்றெழுதியுள்ள கொடியை உயர்த்தினார்களோ அவர்களே வாழ்வார்கள் அதில்லாதவரே தாழ்வார்கள் என்று கண்ணுக்குக் காட்டாய்ப் படுகின்றதே! இதை விட்டுவிடுவார்களோ? நமக்கென்ன? ஒற்றுமையாவது கொற்றுமையாவது? இருக்கிறதைக் காப்பாற்றி வயிறுபசியாமல் வாழ்ந்தாற் போதாதா என்று சொல்லிவிட்டு அவரவர்கள் தம்தம் வயிற்றுப்பாட்டையே பார்த்துக்கொண்டு தமது நாட்டிலேயே பிறந்து அதிலேயே வளர்ந்த மற்றவர்கள் கதி யெப்படியானாலு மாகட்டும் என்று சொல்லி வெந்ததைத்தின்று வந்ததைப் பேசித்திரியும் இந்தத் துர்வாடிக்கை என்றுதான் நம்மைவிட்டு நீங்குமோ? நமது நாட்டுக்கே நடுவில்வந்த கேடே ஒழிய வேறென்ன இந்த ஒற்றுமையின்மை? நமது முன்னோரும் மேலானவர்களும் ஒன்றாய்த்தானல்லவா பதரிகாச்சிரமம், நர்மதாதீரம், தண்டகாரண்யம், முதலாகிய இடங்களிலிருந்துகொண்டு எல்லாருக்கும் பொதுவானதும் சுகம்தருவதுமான புஸ்தகங்களை யெழுதிவைத்தார்கள். இன்றையவரையில் அவர்களுடைய வழக்கத்தாலல்லவா கல்யாணம், இழவு, கிரஹணம், சிராவணம் முதலான காலங்களில் நாமும் நமது புதுவாடிக்கையைக்கூட மறந்துவிட்டு நம்மையறியாமற் கூடி ஒரே மாதிரியான ஆனந்தமடைகிறோம். ஒற்றுமையெங்கே குறைந்துவிடுமோ என்றுதானே நமது பெரியோர்கள் ஆலயங்களையும் திருவிழாக்களையும் அங்கங்கே அதிகமாக ஏற்பாடுசெய்தார்கள்? ஒருவிஷயத்திலாவது ஒற்றுமையிருந்தால் அதுவே பலவிஷயத்திலும் ஒற்றுமையுண்டாகக் காரணம் என்று நமது முன்னோர், அரியாமலா அநேக விஷயங்களிலும் ஒன்றாயிருந்து காரியங்களைச் செய்யும்படி ஏற்பாடு செய்துவைத்துப் போனார்கள்? நாமெவ்வளவுக் கெவ்வளவுபிரிவோமோ அவ்வளவுக்கவ்வளவு நஷ்டந்தானடைவோம் தடைகி

டையாது. என்னம்மா சொல்லுகிருய் கலாவதீ! நமது முன்ளேர் கைக்கொண்டு இன்பமடைந்து வந்ததும், இப்போது நம்மை ஒழிந்த அன்னியர்கள் கைக்கொண்டு எல்லாமேன்மையையு மடைந்ததும் அடைவதும், நரி - குரங்கு - யானை - எறும்பு - கரையான் முதலிய அற்பஜந்துக்களும் கையாடுவதுமாகிய ஒற்றுமை நம்மவர்களுக் கில்லாமற்போனுல் அது ஒரு குறைதானல்லவா? ஒற்றுமையால் வரக்கூடிய நன்மையையும் அதில்லாததால் நம்மவர்கள் திண்டாடுகிற திண்டாட்டத்தையும் அறிந்த எந்த நல்லமனிதன் தான் சும்மாயிருப்பான்? படித்தவர்கள் என்று பெயர்வைத்துக்கொண்டு ஜனங்களுக்குள் ஒற்றுமை உண்டாக்க வழிதேடாமல் இருப்பவர்களை மனிதர்கள் என்று சொல்லுவதை யொழித்து வேறெதாய்ச் சொன்ளுலும் தகும். ஆதலாலிக்குறையை நம்மவர்களிடத்திலிருந்து நாம் விலக்க உடனே முயலவேண்டாமா?" என்முன் பிரேமன்.

கலாவதியோ, "அண்ணு! என்பாக்யமே பாக்யம். உன்னைக்காணவும், உன்னிடம் இதெல்லாந் தெரிந்துகொள்ளவும் நான் எந்த ஜன்மத்தில் நன்மைசெய்தேனே தெரியாது. இன்னும் சொல்லு, கேட்கவேண்டுமென்ற ஆசை எனக்கு மிகவுமிருக்கிறது" என்று சொல்லிக் கையைக்கட்டிக்கொண்டு மிகுந்த ஆவலுடன் கேட்டாள்.

"என் நல்லவேளையாலேயே இவ்வளவு ஆசையுடன் கேட்கிருயே ஒழிய வேறென்ன? இதோ சொல்லுகிறேன் கேள். இருக்கவேண்டியது இல்லாமற்போனுல் எப்படிக் குறையோ அப்படியே இல்லாமற்போகவேண்டுவது இருப்பதுங் குறைதான். நம்மவர்களுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். அவர்கள் ஸாமர்த்தியமே ஸாமர்த்தியம். யாவரும் கையாட அவசியமாயுள்ள ஒற்றுமை கிடையாதென்று சொன்னேனல்லவா? அது ஒன்றே பெருங்கேடு விளைக்கக்கூடும். அத்துடன் நில்லாமல் அசூயை (அயல்வாழப்பொறுமை) என்னும் ஒருபொல்லாத குணம் நம்மவர்களுக்கு வரவர அதிகமாய்ப் பழகுகிறது. அசூயையால் வருங் கேடு கணக்கிலடங்காது. அதை முழுவதுஞ்சொல்லயாராலு மாகாது. பிறன் நன்மையுடன் வாழ்வானு? நமக்கில்லாத நன்மை பிறனுக்கிருக்கலாமா? என்று எண்ணுவதாலேயே நமது நாடு குட்டிச்சுவராய்ப் போகிறது. நம்மைப்போல் இருப்பவர் நம்மைவிட மேன்மையடைகிறதா என்றும், நமக்கு ஸமானமாய் இன்னெருபயல் இருப்பானு? என்றும், இன்னொருவன் நன்மையடைந்தால் நமக்கு ஸமானமா

வான் ஆதலால் அவனை விர்த்தியடையவிடக்கூடாது என்றும் உள்ள பொல்லாத தப்பெண்ணங்களால் நம்மவர்களெல்லாரும் ஒருங்கே வாயில் மண்ணைப்போட்டுக்கொள்ளுகிறார்கள். நம்மவர்களே நம்மைவிடமேன்மையடைகிறதாஎன்று பொறாமையடைவதால் வரும் லாபம் மூன்றாவதுமனிதன், இரண்டுபேரையும் தட்டிவிட்டு மேன்மையடைவதேதான். ஒருவன் வயலுக்குப்பாயும் வாய்க்கால் வரவர மேடாய்ப் போயிற்றென்றும் ஆதலால் தண்ணீர் கடாசிவரையில்போய்ச் சேருகிறதில்லையென்றும் தெரிந்தால் மற்றொருவன் வந்து உதவிக்காப்பது மனிதத்தன்மை. அதை விட்டுவிட்டு அவன் குட்டிச்சுவராய்ப் போகட்டுமே- நமக்கு அந்த நிலத்தை விட்டுவிடட்டுமே என்று ஆசைப்பட்டால் நமக்கொரு ஸமயத்தில் உபகாரஞ்செய்வோரில் ஒருவனை நாமே குறைத்ததாக முடியும். நமக்கென்ன மற்றவர்கள் ஏன் நம்மால் வாழவேண்டுமென்று எல்லாரு மிருந்துவிட்டால் உடனே மனிதர்கள் கழுதைகள் என்னும் வித்யாஸமே இல்லாமல் எல்லாரும் ஒருங்கேதான் கெடவேண்டும். ஒருவர்க்கொருவர் உதவியில்லாமல் ஒன்றும் முடியாது. அப்படியிருக்க ஒருவரை ஒருவர் அசூயைப்பட்டும் வந்தாலென்னமுடியும்? நமக்குச் சாப்பிடவேண்டியிருக்கிறது. சாப்பிடுவதானால் அரிசிவேண்டும். அதற்கு நெல்லும், உலக்கையும், சலடையும், முறமும் வேண்டும். உலக்கைவேண்டுமானால் தச்சனும் கொல்லனு மில்லாமல் முடியாது. சலடையும் முறமும்வேண்டுமானால் குறவனில்லாமல் முடியாது. நெல்லு வேண்டுமானால் நிலம்வெட்டி, உழுது, பரம்படித்து விதைத்து, நாற்றுப்பிடுங்கி, நட்டுப்பயிர்செய்து, வேளாவேளைகளில் தண்ணீர்பாய்ச்சி, களைபிடுங்கி, தகுந்த காலத்தில் அறுத்துக் கட்டி, களத்தி லடிக்கவேண்டும். இவ்வளவும் செய்து அரிசியும் கிடைத்தால் குசவனில்லாவிட்டால் சமைக்கமுடியாது ஆகவே நமது வாழ்நாட்களை சுகமாப் போக்கவேண்டுமானால் ஒவ்வொருவருடைய தயவும் வேண்டும். யாவரும் ஒருமனதாயிருந்து தம்மால் கூடியதைப் பிறர்க்குச் செய்துவரவும் வேண்டும் இதைவிட்டு அவனுக்கேன் நாம் செய்யவேண்டும்? நம்மைவிட இவனேன் வாழவேண்டும் என்று ஜனங்கள் எண்ணினால் வருவது கேடே ஒழிய வேறில்லை. உனக்கேன் நான் சட்டி பானை செய்துகொடுப்பேனென்று குயவன் சொன்னால், உனக்கேன் தண்டசக்கரம் செய்துகொடுப்பேனென்றும், உனக்கேன் தட்டுக்கோல் செய்துகொடுப்பேனென்றும் தச்சன் சொல்லுவான். கடைசியில் இரண்டுபேர் வாயிலும் மண்விழும். இரண்டுபேர் சேர்ந்துகொண்டு மூன்றாவனுடன் வழக்கிட்டு நம்மிருவருக்கும் எவ்வ

ளவு மொத்தத்தில் செலவாகுமோ அது அவனொருவனுக்கே செல வாகும் ஆதலால் அவன் தன் கக்ஷியைவிட்டுவிட்டுமே நாம் லாப மடைவோமே என் றாசைப்பட்டுக் கெட்டுப்போகிறவர்க ளநேகர். நாம் கெட்டாலும் கெடுவோம் பிறனுக்கு விடுவதா? நமக்கொரு கண் போனாலும் அடுத்த வீட்டுக்காரனுக்கு இரண்டுகண்ணும் போ னால் அதுவே போதும் என்றெண்ணும் மூடர்கள் அநேகர்கள். நாம் வீதியோடுபோகிறது இந்தப் பயல் கால்மேலே கால்போட்டு க்கொண் டுட்கார்ந்திருக்கிறதா இவன் கொழுப்பை அடக்குகிறே ன் என் றெண்ணிப் பிறனைக் கெடுக்கிற கேடர்கள் அநேகர். இப் படியே ஒருவர் நன்மையை ஒருவர் விரோதித்துச் செய்யும் காரிய ங்களால் அன்ய தேசத்துக்குத்தான் நன்மை. விரோதப்பட்ட இ ரண்டுபேர்களில் ஒருவனோடு சேர்ந்துகொண்டு மற்றொருவனைக் கெடுத்து அவனுடையதைப் பிடுங்கிக்கொள்ளலாம். பிறகு வே றொருவனைச் சேர்ந்துகொண்டு இவனையே உதைத்து இவனிடமி ருப்பதையே பிடுங்கலாம். இப்படிச் செய்துகொண்டே வந்தால் முடிவில் நம்மவர்களுடையதெல்லாம் மூன்றாவன் கையிலேறுவதி ல் தடையேது? நம்மவர்கள் அசூயை காரணமாக வழக்குத் தொ டர்ந்து அன்னியரிடம் சென்றால் அவர்கள் வழக்குத் தீர்த்த குரங் குபோல் இரண்டு கக்ஷிக்காரர்கள் வாயிலும் மண்ணைப்போட்டுத் தாங்களே லாபமடைவார்கள். இப்படியெல்லா மிருப்பதால் அசூ யையைவிடப் பெருங்கேடுசெய்வது நமது நாட்டுக்கு வேறு சத்து ரு ஏது? இதை நம்மவர்கள் கையாடுவதும், எவ்வளவுபேர் எவ்வ ளவு இடங்களில் மண்டையை உடைத்துக்கொண்டு விட்டுவிடுங்க ள் என்று கெஞ்சினாலும் கேளாதிருப்பதும் நமது பூர்வீகசாஸ்திர ங்களெல்லாம் அசூயையை நிந்தித் திருந்தும் அதை அலக்ஷியம்செ ய்து அவற்றை எழுதிய, கைம்மாறு விரும்பாத, பெரியோர்களை அவமானமாகப் பேசுவதும் என்று நீங்குமோ? ஆ பரதகண்டமே! ஆ பெரியோர்களிருந்த மண்ணே! ஆ நல்லகுணமெல்லாம் நிறைந் த ஸாதுக்கள் பிறந்த நாடே! எல்லா சாஸ்திரங்களும் உண்டான இடமே! உனக்கோ இப்படிக் கேடுவந்தது? உன்னிடத்துப் பிற ந்த நம்மவர்களா இப்படி ஐக்யங் குறைந்து அசூயையில் மேலிடுகி றார்கள்? ஐயோ! ஐயோ! என்று பேசிக்கொண்டே வந்தவன் கண்ணீ ராறாக ஓட ஒன்றுந் தோன்றாமல் கீழே விழுந்து வாயை மூடிக்கிடந்தான் ஒரு நாழிகைவரையில் பிரேமநாதன்.

உடனே கலாவதி யெழுந்து ஒரு விசிறி எடுத்துக்கொண்டு வந்து பிரேமனண்டை உட்கார்ந்து அவன் தலையைத் தன் துடை

மேல்வைத்து மெள்ள விசிறினாள். சற்றுநேரத்தில் தெளிந்து எழுந்தான் பிரேமன். “அம்மணீ! ஒரு விஷயத்தைச் சொல்லுகிறவன் தானே சிரிப்பதும் தானே யழுவதும் பைத்யக்காரத்தனம். அன்றியும் நான் பேசிவந்ததும் அப்படிப் பிரமாதமானபேச்சன்றாலும் நமது நாட்டின் நிலைமையைச் சற்று நினைத்தேன் -ஒவ்வொன்றாகப் பலவிஷயங்கள் என்முன்னே வந்து நின்று என்னை ஒன்றும் தெரியாமற் செய்துவிட்டன. நானென்னசெய்வேன்” என்று மெதுவாய்ப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு பேசினான்.

“ஐக்யமின்மை, அசூயைப் பெருக்கம் என்னு மிரண்டு குறையுடன் பாஷாபிமானக்குறை யென்னு மொன்று நமது நாட்டிலிப்போது வரவரப் பெருகுகின்றது. கேள், ஒரு தேசத்தாரை இகழ்ச்சியாகவோ புகழ்ச்சியாகவோசொல்ல எதுவாயுள்ளது அந்த தேசத்தார் பேசும் பாஷைதான். அதாவது, எதுவரையில் ஒரு தேசத்தார் தமது சொந்த பாஷையாக ஒன்றைக்கொண்டிருக்கிறார்களோ அதுவரையில்தான் அவர்க்கு நீடித்த புகழ் உண்டு. ஆதலால் நாம் நமது தேசபாஷையாகிய வடமொழி தென்மொழிகளை அபிமானிக்கவேண்டுவது அவசியம். நமது முன்னோர்களின் பெருமையை நாமறியவும், நமது காரியங்களை நமக்குப் பின்னால் வருபவர் அறியவும், எல்லாரையும் ஒரேகட்டால் கட்டி ஒருவரிடம் ஒருவருக்கு அன்பும் கௌரவபுத்தியும் இருக்கும்படி செய்யவும் வல்லது நமது நாட்டின் பாஷையொன்றுதான் இது எல்லாவளமும் மிகுந்து யாதொருகுறைவுமின்றி இனிமையே வடிவாக நெடுநாளாயுள்ளது இது சீர்குலைய நாமிடந்தரலாமா? இதை முன்னுக்குக் கொண்டுவரும் வழியைத் தேடவேண்டாமா? நாமெல்லாரும் உயிரோடிருந்தும் நமது நாட்டின் சிறந்தபாஷைகள் அழிவது நமக்கொரு பெருங்குறையல்லவா? நமது உடம்பில் நல்லரத்தம் ஓடவில்லையா? அன்னியதேசத்தாரைவிட ஊண் உறக்கத்தில் தாழ்ந்தவரா நாம். அவர்களிடம் உள்ள தேச பாஷாபிமானம் நமக்கேன் இல்லாமல் போகவேண்டும்? இதற்கு எவ்வித குறையாவது இருந்தது உண்டா? லட்சணக்கிரந்தங்களும் லட்சிய கிரந்தங்களும் காவ்ய, நாடக, அலங்கார சாஸ்திரங்களும், தர்மசாஸ்திரங்களும், நீதிசாஸ்திரங்களும், மந்திர தந்திரசாஸ்திரங்களும், கர்மம், யோகம், ஞானம் முதலியவற்றை விசேஷமாய்ச்சொல்லுஞ் சாத்திரங்களும், உடம்பை வலுச்செய்வதும் ஆகாசமார்க்கமாய்க் கிளம்பிச் செல்ல வழி சொல்வதுமான சாத்திரங்களும், வைத்தியம், ஜோதிஷம், சிற்பம், பூகோளம், ககோளம், பூசாஸ்திரம், பூதசாஸ்திரம்,

சங்கீதம், சாகித்யம், பரதம், சிருங்காரம், காமம், அபிநயம், பாவம், வைராக்கியம், பாகம்முதலிய அளவற்ற சாஸ்திரங்களும் நம்மபாஷைகளில் உள்ளதுபோல் வேறு எதில் உண்டு. இப்போதோ அபிமானிப்பாரில்லாமல் நமது ஓலைச்சுவடிகளெல்லாம் பழுதுபட்டு கறையானும் செல்லும் பாச்சையும் அரித்துப் பொடிப்பொடியாயுதிருகின்றனவே. அப்புத்தகங்களுள்ள வீடுகளில் பிறந்தபலர் அவற்றின் அருமையை அறியாமல் கண்டபடி கண்டஇடம்போட்டு கண்டபடி விற்றுவருகிறார்கள். கையாளாதபண்டம்கரி; பாராத துபாழ் என்கிறபடி நமதுபாஷையிலுள்ள புத்தகங்கள் தமக்குரிய நாத னில்லாமல்வீணே அழிந்துபோகின்றன. தமக்குப்பின் வருபவர்க்கென்று எவ்வளவோவருந்தி பாடுபட்டு ஊணுறக்கங்களை ஒழித்துக் காடுகளிலும் மலைகளிலும் குடிசைகளிலுமிருந்து கடினமான எரைப்பிடித்துக் கற்பாறையில் உழுவதுபோலும் இருப்பெழுத்தாணிகளை கட்டைவிரல் முனையில் சாய்த்து ஓலை ஓலையாக எழுதி தமது உயிரினும் அதிகமாய் நமது பெரியோர்கள் காப்பாற்றிய அளவற்ற சுவடிகள் இருந்தவிடந் தெரியாமல் போகின்றனவே ஐயோ! இதுவோ நாம் நமது முன்னோருக்குச் செய்யும் நன்றி. நமது பாஷைகளிலிருக்கும் புஸ்தகங்களாலேயே நமது முன்னோர்களின் எவ்வளவோ ஆசாரங்களும், நிலைமையும், அறியமுடியும். இதை விடவிடாமல் நமது பூர்வீகர்களின் நிலைமையும், பூர்வீக சரித்திரமும், நம் முன்னோர்கள் கஷ்டப்பட் டெழுதியதும், நாமும் அவர்களும் மேன்மையாய்க்கொண்டாடுவது மாகிய எண்ணிறந்த நூல்கள் இருந்த இடந் தெரியாமல் அழிந்துவிடும். நம்முன்னோரது ஆசாரங்களும், மேலான மதமும், நிலைகுலைந்துபோய் நம்மை ஒரு ஜாதியாரென்றும், ஒரு கட்டுக் கடங்கியவரென்றும், யோக்கியர்களென்றும், தேசாபிமானிகளென்றுங் காட்டக்கூடிய எதுவும் இருந்த இடந்தெரியாமல் தொலைந்துபோய்விடும். ஒரு தேசம் விருத்தியடைவதும், நாகரீகத்தில் பெருகுவதும், அந்த தேசபாஷைப் பெருக்கத்துடன் இயைந்தே இருக்கவேண்டும். சாதாரண மனிதர்களுக்கு உயிரு முடம்பு மெப்படியோ ஞானிகளுக்கு ஆன்மாவும் கடவுளும் எப்படியோ அப்படியே ஒரு பாஷையும் அது வழங்கும்நாடும் அத்வைதப்பட்டவைகள். புதிது புதிதான விஷயங்களைநாடி, புதிதுபுதிதான சாஸ்திரங்களைக் கண்டுபிடித்து புதிதுபுதிதான ஞானவிருத்தியடைகின்றார்கள், ஒரு ஜாதியார், என்பதற்கு புதிதுபுதிதாக அவர்கள் பாஷையிலுண்டாகும் பதங்களே ஸாக்ஷி. இந்தப்பெருமையை நமதுபாஷைகளுக்கு எற்றிமகிழ்வது நம்மவர்களுக்கு முதன்மையான கடமை. அப்படி யிரு

க்க, தங்கள் ஞானத்தை குடத்திலிட்ட விளக்குப்போல் செய்து விட்டு யார்க்கும் பயன் செய்யாத வெறுங்கூட்டங்கள் கூடி, கவைக்குதவாத விஷயங்களைப்பேசி ஆரவாரித்து நம்மவர்கள் திரிவார்களானால், நமது பாஷைகள் எப்படி முன்னுக்குவரும்? இந்நாட்களில் நமது பண்டிதர்களை தகுந்தபடி அபிமானிப்போர் கிடையாது. ஒரு ஊருக்கு நீதிபோதிக்கக்கூடியது அந்த ஊரின் பாஷையில் எழுதியுள்ள நாடக அலங்காரங்களே! அவை இப்போது பெருப்பாலும் கேவலம் நாடோடிகளாலும், குடிகாரர்கள், விடர்கள், கற்றறிமோழைகள், சூதாடிகள் முதலியபலராலும் கையாளப்பட்டு அருவருக்கத்தக்க நிலையில் வந்துவிட்டன. நமது நாட்டு செல்வவான்களும், அரசர்களும், சித்தரசர்களுமாவது தேசபாஷையை எள்ளளவாவது கைதூக்கிவிடுகிறார்களா என்றால் அதுவுமில்லை. கையில் காசுகிடைத்தால் அதுவும் தான்தேடாப்பொருளாயிருந்துவிட்டால் வேசையர்கள் வீட்டுக்கும் வீண்பெருமைகாட்டுவதற்கும் வாரியிறைப்பதும், கூத்தாடிக் குரங்கோட்டிகளுக்கெல்லாம் சன்மானஞ்செய்து தோடாக்கள் செய்துபோடுவதும் வழக்கமாயிருக்கிறது. நமது நாடாயிற்றே இதன் நன்மையல்லவா நமது நன்மை என்று எள்ளளவும் அறிபவர்களில்லை. நமது நாடோ வர, வர, ஏழைமைப்பட்டுவிட்டது. ஏழைகளுக்குத் தக்க படிப்புங் கிடையாது. ஒன்றிரண்டுபேர் பணங்காக்கும் பூதங்களாய்மட்டு மிருந்து தானும் உண்ணாமல் நல்லவழியிலும் செலவிடாமல் சேர்த்துச் சேர்த்து துஷ்டப்பிள்ளைகளுக்கோ திருடர்களுக்கோ, அரசாங்கத்து வேலைக்காரர்களுக்கோ, இராஜதண்டத்துக்கோ, அல்லது ஆண்டிகளும் தம்பிரான்களும் தின்று அழிப்பதற்கோ வைக்கிறார்கள். ஹா! கஷ்டம். இப்படியுமுண்டா? அதுகிடையாது இதுகிடையாது என்று முறைமுறையாய் அழுங்காலம் வந்ததே! ஓஓ! தெய்வமே! நமது நாட்டிற் பிறந்த பெருமையை நிலைநிறுத்துவதற்கு ஆசைப்படுவோர் பத்துப்பேர்களாவது இல்லாமற்போய்விடுவார்களா? நம்முடையதெல்லாம் அழியுங்காலம் வந்துவிட்டதா? எனக்குமல்லவோ இதை நினைக்க நினைக்க மனங் கசிகின்றது! என்னையறியாமலே கண்ணீர் சொரிகின்றது! நமது பாஷைகளின் பெருமையை உள்ள துள்ளபடியே அறிந்த பெரியவர்கள் மனம் இவ்விஷயத்தை எப்படி ஸஹிக்கிறதோ! ஒருவன் தன்தந்தை தாயையும்விட நேசிக்கவேண்டிய பொருள்கள் யாதுமில்லை. அவர்களு மழிந்துபோனாலும் அன்யர் பழிக்கமாட்டார்கள். அது உலகஸ்வபாவம். ஒருவருடைய தேசபாஷை அழிந்துவிட்டால் அது ஸ்வபாவமாகுமோ? எதை யாவரும் அழிக்க முடியாதோ எது ஆளஆளக்குறையாதோ எதற்குப்பங்காளிகளால்

நஷ்டம் வாராதோ எதன்மீது படையெடுத்துவந்து அன்யர்கள் கொள்ளையிடுவதும் இளப்பமன்றோ அந்த தேசபாஷையை நாம் நமதுநாளில் பறிகொடுத்து பல்லோர்பழிக்க இடந்தரலாமா? நமது பதியையே முழுவதுமிழந்து பிறகண்டங்களுக்குப்போய் உழைத்தோ பிச்சைவாங்கியோ உண்ணுங்காலம்வந்தாலும் அதுவும் நமக்குக் குறைவன்று நம்மவர்களையெல்லாம் சிறைப்படுத்தி மூலைக்குமூலை பிரித்தனுப்பி தாய் தந்தை மனைவி மக்கள் உடன்பிறந்தார் சுற்றத்தார் என்னும் கட்டை அறவேகுலைத்து நம்மைக் கொடுந்தொழில் செய்யும்படி பிறர் அடிமையாக்கினாலும் அதுவும் ஒருகுறைவன்று. நமது வெளியுடைமையாகாது நாவோடே ஐக்யப்பட்ட பாஷையென்னும் பெரியபூஷணத்தை இழந்தோமானால் அன்றே இந்த உடலத்தையும் விட்டுவிடவேண்டியதுதான். யுத்தத்திற்சென்று ஒவ்வொரு அங்கமாய் வெட்டுப்படலாம். அபாயத்தால் கண் காது மூக்குமுதலியவற்றை துண்டிக்கப்பெறலாம். ஆனால் ஸொந்தபாஷையை இழப்பது உயிரை இழப்பதுபோலவேதான்'' என்று பேசிக்கொண்டேவந்து தொண்டையடைத்து உண்மையான தேசாபிமானிகளுக் குரியவழக்கம்போல் முத்துமுத்தாய் கண்ணீருதிர்த்தான்.

"ஐயோ! துணைசெய்வாரில்லையா? என்னுடன் கைகோர்த்துக்கொண்டு இக்குறைகளை நீக்க, இறங்குவோர் கிடையாதா'' என்று பொருள்படும் பார்வையோடு ஒருதடவை கலாவதியைப்பார்த்தான் அவளும் நல்ல ஆறுதல் சொல்லும் முகத்துடன் அவனைக் கட்டிக்கொண்டாள். அவன்முகத்திலுள்ள வியர்வையையெல்லாம் துடைத்தாள். 'அண்ணா இத்துடன் நிறுத்து - கொஞ்சம் இளைப்பாறிவிட்டு மறுபடி பேசலாம் - நாளைக்குப்பேசலாம் - அதன்பின்னால் பேசலாம். விஷயத்துக்கு தோஷம் சொல்லமாட்டேன் - நன்றாயிருக்கிறது' என்றாள். அப்படியே பிரேமனும் சற்று இளைப்பாறிக்கொண்டு அன்றைப்பொழுதைப் போக்கினான்.

மறுநாளும் தங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு கூடத்திலுள்ள ஊஞ்சலில்வந் துட்கார்ந்தார்கள். உடனே பிரேமன் 'அடி நங்காய்! நேற்று நான் பேசியவிஷயங்கள் மிகவும் சுருக்கமாகவும் பெரும்பாலும் விட்டுவிட்டும் சொன்னேன். அவற்றை விஸ்தாரமாய்ச் சொல்லுவதானால் ஒவ்வொருவிஷயத்துக்கும் ஒருபுருஷ ஆயுளும் போதாது. இன்றும் அப்படியேதான் சுருக்கமாய் இரண்டொருவிஷயங்களைப்பற்றிப் பேசப்போகிறேன். சற்று நிதானமாய்க்கேள். நம்ம நாட்டில் இப்போது வரவர தெய்வபக்தி குறை

ந்தேபோயிற்று. அண்டபிண்ட சராசரமான எல்லாவற்றையும் சு
ட்டெரித்து மீட்டும் படைத்து காத்தழித்தருளும் கடவுளண்டை
இருந்த அன்பும் வணக்கமும் பணந்தேடுவதிலேயே போகின்றன.
ஒவ்வொருநாளும் கண்ணுக்கெதிரில் அநேகர் மாண்டுபோவதைக்
கண்டுங்கூட நம்மவர்களுக்கு இனிவரப்போகிற கதியிலுள்ள எண்
ணம் மறந்து வயிரே பெரியதெய்வமாகிறது. காலை உருமம் மாலை
என்னும் நேரங்களில் செய்யவேண்டிய அநுட்டானங்களை நூற்று
க்கு தொண்ணூற்றொன்பதுபேர் விட்டுவிடுகிறார்கள். 'நான் ஸந்
தியாவந்தனம்செய்து நெடுநாளாயிற்று'—'நான் பூணூற்போட்டன்
றைக்கே முடித்துப்போட்டேன்' என்று பெருமைபாராட்டுகிறவ
ர்கள் மிகுதியாய்விட்டது. இவற்றைத் திருத்துவோர் கிடையா
து. கோயில் குளங்களுக்குப்போவோர் மிகவும் அற்பம். கோயிலை
இடித்துப் புதிப்பிக்கிறோமென்றும் கும்பாபிஷேகம் செய்கிறோ
மென்றும் பெரிய பெயர்வைத்துக்கொண்டு ஊரார்பணத்தைப் ப
றிக்கும் வேஷதாரிகள் மிகுந்துவிட்டார்கள். படிப்பதற்காகவும்
பிரஸங்கம் தர்க்கம் ஆலோசனை முதலியசெய்வதற்கென்றும் உத்தே
சித்து நம்முன்னோர்கட்டிய ஆயிரக்கால்மண்டபங்களும் நூற்றுக்
கால்மண்டபங்களும், சோற்றுக்கடையும் சாராயக்கடையும்வைக்கு
மிடமாயின. மஹாமேன்மைபொருந்திய விவேகிகளாயிருந்த நம
து முன்னோர்கள் அநேககோடிகாலமாய் மிகவும் அருமையாய்
பாதுகாத்துவந்தசாஸ்திரங்களை அப்யஸிக்கவும் பாதுகாக்கவும்
உதவும்படி மிகஅருமையாய்ச்சேர்த்துவைத்திருந்த பெரும்முதல்
கள் அவைகளுக்கென் றேற்படுத்திய விதிகளிலிருந்து வழுவி மெள்
ளமெள்ளப் பலபேர்களிடத்திலிருந்துமாறி கடைசியாய் பண்டார
ங்களென்றும் பஞ்சாயத்தாரென்றுமுள்ள சிலரிடம்வந்துவிட்டன.
இவர்களில் பண்டாரங்கள் முன்னெல்லாம் தமது நடை உடைபா
வனைகளில் சற்றேறக்குறைய பிராமண ஸன்யாசிகளுக்கொப்பாய்
எப்போதும் பரலோகசிந்தனையுடன், மண் பெண் பொன்னென்
பவற்றில் சிறிதும் ஆசையின்றி, தெய்வபக்தி மிகச்சிறந்து, தமது
ஆகாராதிகளை மிகச்சுருக்கி, பகை-பாவம்-பழி-அச்சம் இவற்
றைக் கனவிலும் கையாடாது, எவ்வுயிரிடத்தும் கருணையோடிருந்
தார்கள். பஞ்சாயத்தார்களும் நல்ல உத்தமகுலத்தில் பிறந்த தெ
ய்வபக்தர்களாகவே இருந்தார்கள். இவர்கள் வீண்செலவுகளுக்கு
கொஞ்சமும் ஸம்மதித்தது கிடையாது. கல்விமுதலியவற்றில்
தேர்ந்த பெரியோர்களாயிருந்தனர். ஆனால் வரவரப் பாழ் நரக
த்துக்குஇரையாகப்போக்கும் மஹாபாபங்களையேசெய்துகொண்டு,
இவர்கள் விசாரணையில்விட்ட நமது பூர்வீகமான அம்பாரமாயுள்ள

சாஸ்திரங்களையும், ஆலயங்களையும், மதத்தையும் நாசஞ்செய்யத் துவக்கிவிட்டார்கள், இதனுலெல்லாம் நம்மவர்களுக்கு தெய்வபக்தி மிகவும் குறைந்து காத்தான் நீத்தான் காட்டேறி தூத்தேறி மாரி காளி என்னும் எங்குமில்லாத அற்பச்செயல்களும் அருவருக்கும் சரித்திரமுமுள்ள இழிதெய்வங்களிடம் அன்புமீறிவிட்டது. ஆகவே தெய்வத்துக்குப் பயந்து விலக்கும் பொய் - வஞ்சனை - திருட்டு புறட்டுகளெல்லாம் இருந்த இடந் தெரியாமற்போய் எதை எப்படிச்செய்தாவது எவன் தலையில் கல்லைத்தூக்கிப்போட்டாவது வயிறுவளர்ப்பதுவே பெரிய ஆசாரமாகிவிட்டது. முந்தியெல்லாம் கோயில்குளங்களுக்குப் போவதானுல் மரியாதையாய் அங்கங்களையெல்லாம் ஒடுக்கிக்கொண்டு வணக்கமாய்ச்சென்றவர்கள் இப்போது அங்கியும் தலைப்பாகையு மணிந்துகொண்டும், செருப்பு மாட்டிக்கொண்டும் கண்ட இடங்களிற் செல்லுவதும் வெற்றிலைப் பாக்குப் போட்டுக்கொண்டு கண்ட இடங்களில் துப்புவதும் கௌரவமாகவும் செல்வவான்களுக்கு அடையாளமாகவும் எண்ணுகின்ருர்கள். கடவுள் மனம்வைத்தால் ஒருபுழுவும் மேன்மையை யடையும் என்பதை மறந்து, தாமடைந்த செல்வம் கெடாதிருக்கவேண்டுமானுல் அதை அருளின கடவுளை மறக்கக்கூடாதென்பதையும் விட்டு நம்மவர்கள் கெடும்கேடு அம்மா! சொல்லிமுடியாது. தெய்வமென்று தாங்கள் எண்ணும் விக்கிரஹங்களை சிறுபிள்ளைகள் மரப்பாச்சிகளை நடத்தும் மரியாதையிலும் குறைவாய் நடத்துகிருர்கள். தங்களுக்கு மேல் அதிகாரிகளாகவும் அல்லது தங்களூரிலுள்ள உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கும் வேற்று மதத்தவர்களுடைய திருப்திக்காக அவர்கள் காலடியிற்கொண்டுபோய்த் தங்கள் விக்ரஹங்களை நிறுத்தி அதனுல் ஒரு ஸந்தோஷமடையும் நம்ம பேதைகளை நினைத்தால் சிரிப்பு ஒருபக்கமும் அழுகை ஒருபக்கமும் வெட்கம் ஒருபக்கமும் வருகிறதேயொழிய வேறென்ன! அநேகம் ஊர்களில் தேவாலயங்களிலேயே மிளகாய்வற்றல் முதலிய பண்டங்களை உலர்த்துகின்ருர்கள். கனபாடிகள் என்றும், சாஸ்திரிகள் என்றும், தீட்சிதர்கள் என்றும், வாஜபேயரென்றும் பெயர்களைவைத்துக்கொண்ட மஹாயோக்யர்களான பலர் கோயில் வாசல்கள் ஒழிந்த இடங்களாகையால் அங்குபோய்க் கூட்டம்போட்டுக்கொண்டு சூதாடுகிருர்கள் என்பதை நினைக்க நினைக்க ஐயோ! இப்படியுண்டா என்று அழுகைவருகின்றது. ஹா! அகஸ்தியாதி மஹரிஷிகளே! ஹா! சங்கராசார்யாதி மஹாகுருக்களே! ஹா! மனுமுதலான தர்மசாஸ்திராதிபர்களே! ஹா! தெய்வமே! இந்த அக்கிரமங்களைக் காண்பதற்கு வரமாட்டீர்களா? தெய்வலக்ஷண

ங்களை உபதேசிப்பதற்காக எவ்வளவோ பாடுபட்டு ஆகாராதிகளையும் வெறுத்து இடதுகையே தலையணையாகவைத்துத் தரையிற்கிடந்து சிறிதுநேரமே தூங்கி கன்யாகுமரிமுதல் இமையமலைவரையில் காலால் நடந்து வருந்தி யலுத்தும் சலியாமல் இருந்த ஓஒ! புண்யகுருமூர்த்திகளே! உங்களுடைய ஸந்ததியிற் பிறந்தோர் செய்யும் அக்கிரமங்களையும் அநியாயங்களையும் பார்த்து மகிழவர மாட்டீர்களா! ஐயோ! ஐயோ!! “அடிதங்காய் கலாவதி! நான் பேசிக்கொண்டே வரும்போது நம்முன்னோர்கள் எனக்கெதிரே வந்து நிற்பதுபோல் தோன்றுகிறபடியால் அவர்களைக் கூப்பிடவும் அவர்களோடு பேசுவதுபோல் இவையவும் நேரிட்டது பார்த்தாயா! நம்மவர்கள் இப்போது வயிற்றுப்பாட்டையே பெரிதாக எண்ணிக்கொண்டு சிறுவயதுமுதல் குழந்தைகளை அதற்கேற்ற மார்க்கத்தில் பழக்கிவருவதால் அவர்களுக்கு நமது மதமாவது ஆசாரமாவது தெரிய எள்ளளவும் இடமில்லாமற்போகிறது. அன்றியும் நமது சிறுவர்கள் பழகிவரும் இடங்களிலுள்ளவர்களோ வேற்று மதாபிமானிகளாகையாலும், நம்மைப்போல் தமது மதத்தை இழவாமல் தமது மதத்துக்காகப் பாடுபடுகின்றவர்க ளாகையாலும், எப்படியாவது தமது கொள்கைக்கு மற்றவர்களை இழுக்கவேண்டுமென்ற பிடிவாதமுள்ளவர்க ளாகையாலும், நமது குழந்தைகள் குருபக்தியிற் சிறந்தவர்களாதலாலும், அப்படியில்லாவிடில் அவர்களை தாய்தந்தைமார்களே வருத்துவார்கள் என்ற பயத்தாலும், சிறுவர்களது மனம் களிமண்ணைப்போல் எப்படிப்பிசைந்து எப்படி வளைத்தாலும் வளையக்கூடியவைகளாயிருத்தலாலும் நமது குழந்தைகளுக்கு அன்னியர்களுடைய மதங்களில் அதிகப்பற்றுண்டாகின்றது. ஆதலால் நமது மேன்மைபொருந்திய பூர்வீகாசாரங்களை அநியாயமாய் இழக்கவும் பெற்ற தாய்தந்தையர் வயிறெரியவும் இடமுண்டாகிறது. நம்ம நாட்டுப் பூர்வாசார்யர்களோ எவ்வளவோ பாடுபட்டுத் தமது கொள்கைகளை ஸ்தாபித்தார்கள். நமதுநாட்டிலில்லாத புதிய மதம் வேறெங்குங் கிடையாது. பேர் மட்டும் புதிதாயிருக்குமேயொழிய முக்யமான விஷயங்களில் புதிதானமதம் நமது நாட்டுக்கு வெளியே கிடையாது. புத்தன் - சங்கரர் - ஸ்ரீகண்டர் - ராமாநுஜர் - ஆநந்ததீர்த்தர் - முதலிய பெரியோர்கள் தங்கள்தங்கள் காலங்களில் எவ்வளவோ பாடுபட்டு நல்லவழி காட்டியதாக எண்ணும் நம்மவர்கள் தமது கொள்கைகளை அடியோடு தொலைத்துவிட்டு வயிறே பெரிதாயெண்ணி நாய்போலலைவது அநியாயம்! அநியாயம்!

இதுதானிப்படியென்றால் அநேகமாக எல்லா ஆசாரங்களிலும் நம்மவர்கள் மிகவும் கெட்டுவிட்டார்கள். நான்கு ஜாதியரா

யிருந்த நமது பூர்வீகர்கள் இப்போது நாலாயிரஜாதியாரா யிருக்கின்றார்கள். அந்தந்த ஜாதிகளுக்கென் றேற்பட்ட தொழிலும் தர்மமும் அநேகமாய் சுவடிகளிலேயே யிருக்கின்றனவே ஒழிய நடத்தையில் காணோம். பொய்சொல்லல் வஞ்சகம்பேசல் முதலிய துர்க்குணங்கள் வரவர மிகுகின்றன. எல்லாவற்றிலும் கொடிய பாதகங்களான கட்குடித்தல், ஊன்தின்றல் முதலிய ஆசாரங்கள் பிராமணர்களுக்குள்ளேயும் வரவர மிகுகின்றன. அவற்றைக்காணும் மற்றவர்கள் அவற்றைத்திருத்த வழிதேடாமல் வைத்யவிஷயமாய் இவையாகுமென்று பரிந்து பேசுகின்றார்கள். தமது வயிற்றுப்பாட்டையே பெரிதாய் எண்ணி அதற்கெங்கே கேடுவருகின்றதோ என்றஞ்சி குடியர்கள்பக்கத்திற்சேர்ந்து நியாயம்பேசுவோர் அநேகர்களுக்கு வைதிகர்கள் என்றேபெயர். வியபிசாரம் என்னும் பெரும்பாவம் சிறிதும் பிழையென்று நம்மவர்களுக்குப் படவில்லை. அரண்மனைச் சேவகமாக ஒருகாசு வேலையானாலும் அவர்களுடைய வியபிசாரம் குற்றமன்றென்று ஸாதிக்க அநேகம் சாஸ்திரிகளிருக்கின்றார்கள். விளையாட்டுக்கென்றாலும் சூதாடக்கூடாது என்ற பெரியோர்மொழிகளை அலக்ஷியம் செய்துவிட்டு சாஸ்திரிமார்களும் பெரியவர்களுமே கூட்டங்கூட்டமாயிருந்து வெட்டுப்பழி குத்துப்பழியாய்க் கூச்சலிட்டுக்கொண்டு சூதாடுகின்றார்கள். ஒருவனை ஒருவன் கோபமாய்ப் பேசினாலும் பொறுமலிருந்த ஜனங்களின் வம்சத்தில் பிறந்தவர்கள், 'கீழோராயினுந் தாழ வுரை' என்னும் நீதிமொழியை அடியோடே தொலைத்துவிட்டு அக்காளை ஆத்தாளையென்று பேசுவதும், மறைவிற்செய்யும் காரியங்களை வெளிப்படையாய்க் கூறுவதும், இயற்கையிலேயே மிருகங்களுக்கு முதலாய்மூடியுள்ள அங்கங்களைப்பற்றி பத்துபேர்களுக்கு முன்னாற்பேசுவதும், நாடகமென்றும், பஜனையென்றும், கதைசெய்கிறதென்றும், கோணங்கிக்கூத்தென்றும் பெயர்வைத்துக்கொண்டுமிருந்த அக்கிரமமான வார்த்தைகளைச் சொல்லுவதும் சொல்லவேண்டாமென்று யாராவது மன்றாடினால் அவர்களைத்திட்டி, சொல்வது நியாயந்தானென்றும், முத்துக்குளிப்பவர் பாசத்தையும் வாருவதுபோல் தேவபஜனங்களைச் செய்பவர் அஸப்ய வசனங்களையும் சொல்லலாமென்றும் வாதிப்பதும் பெண்டுகள் புருஷர்கள் என்னும் வித்யாஸத்தைவிட்டு எந்தக்கூட்டத்திலும் எவ்விதப்பேச்சும் பேசுவதும் தமக்கு ஆசாரமாய்க்கொண் டிருக்கின்றார்கள். இந்த இழிவான பேச்சுகளையே மிகவும் உறவையும் பரிவையும்காட்டும் பேச்சுக்களாக எண்ணுகின்றார்கள். தாய்தகப்பன்மார்களுக்கு செய்யும் திதிகளும் அமாவாசைமுதலிய புண்யதினங்களில் செய்யவேண்

டிய தர்ப்பணாதிகளும் அநேகமாய்த் தொலைந்தும் அகாலங்களில் செய்யப்பட்டும் போகின்றன. கலியாணம்செய்யவேண்டிய முறைமை அடியோடு தப்பிப்போய் சிறுவயதிலேயே படிப்பாவதன்முன் செய்வதும் அதனால் சிறுவர்கள் கெடுவதுமாயிருக்கின்றது. சில ஜாதிகளில் ஒன்றரைவயதுப் பெண்ணுக்கும் ஐந்துவயதுப் பிள்ளைக்கும் தாலிகட்டிவைக்கின்றார்கள். சிலஜாதிகளில் பெண்களை ஆயிரம் இரண்டாயிரமென்று வாங்கிக்கொண்டு விலைக்கு விற்கிறார்கள். இதனால் பெண் பெரிதாகுமுன் மாப்பிள்ளை தன் பொருளையெல்லாமிழந்து பெரிய கடனாளியாகிறான். இப்படியெல்லாம் நம்மவர்களுடைய ஆசாரம் மாறுவதும் அவரவர்கள் தமது செல்வச் செருக்கால் தோன்றியது செய்வதும், சாஸ்திரிகளென்று பெயர் வைத்துக்கொண்ட அநேகர் தமது வயிற்றுக்கொடுமையால் அநாசாரங்களையெல்லாம் ஆசாரம்போல் காட்டுவதும் நமது நாட்டுக்குப் பெருங்குறைவல்லவா?

இதுமட்டோ! உலகத்தாருக்கென்று எவ்வளவோ பாடுபட்டு நமது பெரியோர்கள் உண்மையாய்க் கண்டுபிடித்த ஆசாராதிகளையும், சாஸ்திரங்களையும் காப்பாற்றுவதற்கென்று அங்கங்கே சில மடங்களேற்பட்டுள்ளன. அவற்றிலுள்ள ஆசார்யர்கள் இப்போது தங்கள் காரியங்களைச் செய்யாமல், உலகின்கேடுகளையொழிக்க வழிதேடாமல், பூர்வீகமாயுள்ளவற்றை நிலைநிறுத்த எண்ணாமல், தாங்களாவது கற்றுத் தேறாமல் சோம்பேறிக்கூட்டங்களை விர்த்தியாக்குவதிலும், வயிறுவீங்கத் தின்னச்செய்வதிலும் தின்பதிலும் சுகந்த தைலங்கள் தேய்த்துக்கொண்டு முழுகுவதிலுமே தங்கள் வாழ்நாளையெல்லாம் கழிக்கின்றார்கள். இப்படி அக்கிரமம் செய்பவர்களுக்கு உதவும்படி அங்கங்கே உள்ளவர்கள் சந்திரமௌலீச்சுரர்பேராலும் ஆசாரியர்பேராலும் தமக்கு சுபகாலம் நேரிடும்போதெல்லாம் பொருளைக் கொடுக்கின்றார்கள். நம்மவர்கள் யாருக்குப் பொருள்கொடுத்தாலும் என் கொடுக்கின்றோமென்று, கொடுக்கும்போதாவது, நமதுபொருள் என்னவாயிற்று என்று பின்னாலேயாவது யோசிப்பது கிடையாது. யாருக்கெதைக்கொடுப்பதானாலும் முதலில் வாயை மூடிக்கொண்டு கொடுப்பதும், பின்னால் நாமென்னசெய்யலாம் வாடிக்கையாய்விட்டது ஆதலால் அதை நிறுத்தக்கூடாதென்பதும் வழக்கமாயிருக்கிறது. இதெல்லாம் குறைகள்தானே. இவற்றை நீக்க வழிதேடவேண்டாமா?

இன்னும், நம்மவர்கள் தாம் விர்த்தியடையும் வழியைத்தேடுவதே கிடையாது. நம்ம நாட்டுநிலங்களில் முற்காலங்களில் எவ்வளவு விளைந்தனவோ அவற்றில் பாதிகூட இப்போது விளைவதில்

லே. அவை விளைவதற்கேற்ற வழியையும் இவர்கள் தேடுவதுகி டையாது. அரசாங்கத்திலும் தொந்திரை மிகுதி. அரசாங்கத் துச் சேவகர்கள் செய்யும் துன்பமும் பொறுக்கமுடியாது. இன் னருடையதுதான் இன்னபொருள் என்றெண்ணி நம்பியிருக்க இடத்தையுங் காணேம். வெள்ளத்தையும் - தீயையும் - காற்றையு மடக்கக் கையாலாகாத அரசாங்கத்தார் ஜனங்களுடைய பொரு ளைத்தட்டிப் பிடுங்கமட்டும் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்" என்று நெடுநேரம் வாயலுக்காமல் மனந்தடுமாறாமல் சொன்னான்.

அப்போது கலாவதி "அண்ணா! நீ சொல்லுவதெல்லாம் புரு ஷர்கள் விஷயமாயாவது, பொதுவாயாவதுள்ளகுறைகள். பெண் களுக்குரிய குறைகள் உனக்குத்தெரியாதா? அவற்றை நீ கவனி த்ததில்லையா? அவற்றைப்பற்றி படித்ததில்லையா? அல்லது அந் தக்குறைகளை நீ குறையாயெண்ணுவது கிடையாதா?" என்றாள்.

பிரேமனே! "அம்மா! அப்படியன்று புருஷர்களுடைய கு றைதான் உனக்குத்தெரியாது. பெண்டுகளுடைய குறைகள் உ னக்குத்தெரிந்திருக்குமே என்றும், நீ கேட்டால் சொல்லலாமெ ன்றும், உன்னிடத்திலேயே நான் கேட்கலாமென்றும், அப்படி யே நானே சொல்லவேண்டுமென்றால் கடைசியில் சொல்லலாமெ ன்றுமிருந்தேனே யொழிய வேறில்லை" என்றான்.

"நீ சொன்னால்தான் நன்றாயிருக்கும். எனக்கும் ஒன்றும் தெரியாது நீ எங்கள் வீட்டுக்கு வருவதன்முன் நான் ஒன்றும் தெ ரிந்தவளன்று. யாருடனும் பேசியவளுமன்று எனக்கேதாவது சொல்லவாவது என்னுடன் பேசவாவது யாரும்கிடையாது. பெ ண்பிள்ளைகள் விளையாட்டுக்கூட நீதானே சொல்லிக்கொடுத்தாய் ஞாபகமில்லையா?" என்றாள் கலாவதி.

உடனே பிரேமன் "ஆனால் சொல்லுகிறேன் கேள் - எனக்கு மட்டும் தெரிந்ததாக எதாவதிருந்தால் அதை நான் ஒளிப்பதே கிடையாது. பிறருக்கு பிரயோஜன மில்லாததாயிருந்தால் என் னிடத்திலேயும் இருக்கக்கூடாது. எனக்குப் பெண்டுகளிடத்து ள்ள குறை இரண்டுதான்தெரியும் அதுவும் நான் காதால்கேட்டு அறிந்ததுதான்."

"புருஷர்கள் யோக்யமாய்த் தங்கள் காரியங்களைச்செய்து கொண்டிருந்தபோது அவர்களுக்குதவியாயிருந்து பெண்டுகள் வே ண்டியதுசெய்வார்கள். இப்போது புருஷர்களெல்லாம் சூதாடுவ தும், புகையிலைவாட்டி அனைப்பதும், பகலில் தூங்குவதும், ஒன் றற்கொன்று பொருந்தாத எதாவது விஷயங்களைப்பேசுவதும்,

எப்படியாவது காசுதேடுவதே பெரிதாக எண்ணி பல்தேய்ப்பதை முதற்கொண்டு விட்டுவிட்டு அங்குமிங்குஞ் சுற்றிப் பொய்சொல்லியோ, எய்த்தோ திரிந்து பதினைந்துநாழிகைக்குமேல் வந்து வாயைக்குழப்பி உமிழ்ந்துவிட்டு உண்ண உட்காருவதும் வாடிக்கையாய்விட்டபடியால் பெண்டுகளுக்குத் தங்கள் பொழுதை எப்படிப் போக்குவதென்று தெரியவில்லை இதுதான் முதற்குறை. இதனால் விளையுந்தீங்கென்னவென்றால் குளிக்கப்போகு மிடங்களிலும், சோறுதின்றானபிறகு தெருத்திண்ணைகளில் அல்லது கூடங்களிலும் கூட்டங்கூட்டமாயிருந்து ஊர்வம்பெல்லாம் பேசுவதும், பிறரிடத்தில் இல்லாத குற்றங்களையெல்லாம் ஏற்றுவதும் தாம்கூடியிருக்கும் கூட்டத்திற்குத்தக்கபடி எல்லாருக்கும் இன்பமான அவதூறுகளைச் சொல்லுவதும் தன்னுடைய கௌரவம் என்று ஒன்றுண்டென்பதைமறந்து தன்மாமியாரையும், நாத்தியாரையும் கொழுநனையுமேபற்றிக் குறைகூறுவதும் தான். இப்படிக் கூடுவதினால் பெண்டுகளுக்குத் துணிவும் குடிரமும் அதிகப்படுகின்றது. அநேகர்கள் கெட்டகுணம் பழகுகின்றார்கள் அநேகர் மிகவும் பரிவுபோல்பேசி நல்லவர்களையெல்லாம் பாழ்செய்துவிடுகின்றார்கள். ஒருபெண் தன்னுடைய பொல்லாத்தனத்தையெல்லாம் பற்றிப் புகழ்ந்து பேசிப் பெருமை பாராட்டும்போது பக்கத்திலுள்ளவர்கள் பலேபலே என்றுசொல்லுவதால் அந்தப் பெண்ணுடைய கெட்டகுணம் உறுதியாகின்றது. தான்செய்வது ஸரியென்று எண்ணிவிடுகிறாள். அதைப்பார்த்து மற்றவர்களும் கெட்டுப்போகின்றார்கள். பேய்பிடித்தது, பிசாசுபிடித்தது என்று சொல்லுவோரில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர்வரையில் செய்வது வேஷம்தான். நாலுபெண்கள் உட்கார்ந்துகொண்டு 'அவாத்து சேஷிக்கு பிசாசு புடிச்சிருக்காம்டீ! என்னத்தெ சொல்லச்சொல்றே, காவேரிக்குப்போவிட்டுவரா-திடீருன்னு கொடத்தைப்போடரா-விழுந்துடராகீழே-எந்திருக்கவேமாட்டேனுங்கரா. தேமேன்னு அவமாமியார்தான் எல்லாக்காரியமுஞ் சேயரா' என்று ஒருவள் சொல்லுவதும், இன்னொருத்தி 'அடிபோடீ! ஒனக்குத்தெரியாது-எனக்கும் அவளுக்கும் எத்தனும் ரஹஸ்யமிங்கறே எல்லாம் என்னோடே சொல்லியிருக்காடீ-அப்படிப் பண்ணுபோனா அவாமாமியார் லகுப்பட்டவ இங்கனாயோ-கண்ணுலே துரும்பெவிட்டு ஆட்டமாட்டாளாடீ' என்று சொல்லுவதும், 'ஆமீடீ-நீ கண்டே-தேமென்னு அந்தப்பொண்ணோடே ஒடம்பைப்போட்டுக்கிண்டு உருக்கு உருக்கின்னு உருக்கரதுடீ பிசாசு-நீ இன்னா பொருத்துக்கிண்டிருப்பயா-பூசாரிவந்து எத்தனும் அடி அடிக்கிறான்.

எத்தனும் பெரியகல்லைத்தூக்கரா" என்று வேறொருத்தி சொல்லுவதும், 'நீ அறுத்துப்புடுங்கல்லியா ஒனக்கு ரொம்பத்தெரியுமோன்னே - அந்தக்கம்மண்டாட்டி பொண்பண்ரதத்தனையும் மாமாலம் நீ அசடுதானே ஒனக்கென்னதெரியும் - அப்படி நடக்கத்தொட்டுன்னு எளநீரும் தோசையுமா வச்சுமொக்கரா - பூசாரிகிட்ட அடிபடாபோனு ஒனக்காரோ இடிக்கராளோ" என்று இன்னொருத்திபேசுவதும், இதையெல்லாம் கேட்டு ஒரு பெண் ஆனால் நமக்கும் அப்படி நடக்கட்டுமே என்று தைரியங்கொண்டு ஜாலம் செய்வதும் வழக்கமாய்விடுகிறது. இப்படியே வேலையற்றபெண்டுகள் ஒன்று சேரச்சேர அவர்களுக்கு எல்லாத்துணிவும்வந்து புருஷனையாவது, அவனுடன் பிறந்தவர்களையாவது, அவர்களுடைய குழந்தைகளையாவது, மாமனார் மாமிமார்களையாவது லக்ஷியம்செய்யாமல் பிடிவாதம் அதிகமாகின்றது. இதுபொருத புருஷர்கள் தங்கள் பெண்டுகளையடித்தாலும் கோவித்துக்கொண்டாலும், தான் சும்மா இருந்தால் குற்றம்வருமென்று எண்ணித் தாய்மார்கள் வந்து இதம்போல் சொல்லுவதும், ஒருபக்கமும் போவதற்கில்லாமல் புருஷன் விழிப்பதுமாய்விடுகின்றது. அல்லது தாய்க்கும் மகனுக்கும் விரோதம்வருகிறது. அல்லது புருஷனுக்கும் பெண்சாதிக்கும் சண்டைவந்து ஒருவர் முகத்தை ஒருவர் பாரர்மல் இருவர்நடத்தையும் கெட்டுப்போக இடமுண்டாகின்றது. இதுபெருங்குறை. இதைத்திருத்தவழி தேடாமற்போனால் நமதுநாடு மிகவுங்கெட்டுப்போமென்பதில் தடையேகிடையாது.

"நமது நாட்டில் புருஷர்கள் தங்கள் பெண்டுகள் ஆபரணமணிவதை ஒரு அழகாயெண்ணி வளையலடுக்கவென்றும், தட்டானிடம் வேலைவாங்க என்றும் நினைத்தபடி போகத்தங்கள் பெண்சாதிகளைவிட்டுவிடுகிறார்கள். இதுவும் ஒருபெருங்குறை - வளையல் அடுக்குவதும், தட்டர்ன் வீடுகளுக்குப்போவதும் பிசகென்று நான் சொல்லவர இல்லை. அதனாலுண்டாகும் சிலகுறைகளைமட்டும் நீக்கவேண்டியது அறிவுள்ளவர்களது கடமையாயிருக்கிறது. வளையலடுக்கிக்கொள்ளுவதானால் தம்மைப்போன்ற பெண்பாலரிடத்திலேயே அடுக்கிக்கொள்ளவேண்டும். அல்லது தமது புருஷர்களிடத்திலேயே அடுக்கிக்கொள்ளவேண்டும். இதைவிட்டு வேறுபுருஷர்கள் தமது கையைப்பிடிக்கவும் - விரல்களைச்சொடுக்கவும் - அங்கங்களையெல்லாம் பிசையவும் - அக்குள்வரைசொரிந்து கிச்சுக்கிச்சுப் பாச்சிவிளையாடவும், கைக்குப் பெரியவளையலைமாட்டவும் திரும்பியெடுக்கவும், கைக்கடங்காத சிறியவளையல்களைப் போட்டு அலைத்து அதனால் மேலேமூடிருக்கும் துணி இடம்விட்

டுப் பெயரும்படிசெய்யவும்; ஊர்வம்பெல்லாம் பேசவும் ஒருநொடியிலாகும் காரியத்துக்கு ஒருநாழிவரையில் குந்திட்டுக்கொண்டு உட்காரச்செய்யவும் நமது பெண்களுக்கிடந்தருவது அன்னியர்கள் பார்த்துப்பழிக்கவும் நமக்கே மானக்குறைவுநேரிடவும் ஆகுமன்றோ? இப்படியே தட்டார்கள் வீட்டுக்கு நமது பெண்களை அனுப்புவதும் பிசகாய்முடியும் - வயதான கிழவிகளைத் தட்டார் வீடுகளுக்கனுப்பலாம் - அல்லது புருஷர்களே போகலாம் - இதைவிட்டு, சிறுபெண்களையனுப்புவதும் அவர்கள் தங்களுக்கு நகையணிவதில் உள்ள ஆசையால் மானத்தை இழப்பதும் ஒரு பெருங்குறைதான்.

"பெண்களிடத்துள்ளதும் திருத்தவேண்டுவதுமான குறைகள் இன்னும்சில எனக்குத்தெரியும் ஆனாலும் அவை இப்போது வேண்டாம் நான்குநாழிகையாய் யாரோ ஒருவன் அங்குமறைந்துகொண்டு என்னமோசெய்கிறான் அதைப்பார்" என்றுசொல்ல கலாவதியெழுந்து போய்ப்பார்த்தாள். அங்கு பாஸ்கர வாத்யார் வந்து கதவண்டையில் நின்றுகொண்டிருந்தார் உடனே எங்குவந்தாரென்று கேட்டுத் தன் தகப்பனாரிடத்து வந்ததாகத்தெரிந்துகொண்டு "அங்கேநிற்பானேன் - உள்ளபோங்கள் - அப்பா இருக்கிறார்" என்றாள்:

அவர் அப்படியேபோய்ச் சேர்ந்தபிறகு பிரேமன்; "அம்மணீ! நமது நாட்டுக்கின்னும் பலகுறைகள் உண்டு. அவற்றை மெள்ளச்சொல்லுகிறேன். பணத்தின் வீண்செலவையும், அரசாங்கத்தால் உள்ள குறைகளையும்பற்றி நாளைக்கு என்னைக்கேட்க மறந்துபோகாதே" என்றான்:

கலாவதி, "அண்ணா நீ இவ்வளவு குறைகளையும் எப்படித்தெரிந்துகொண்டாய்? தெரிந்ததுமுதல் இதுவரையில் அவற்றிற்காக என்னசெய்தாய்" என்றுகேட்க, அவனும் "நமது குருநாதர் மிகவும் நல்லவர் அவர் எப்போதாவது என்னைக்கூட்டிக்கொண்டு ஒருவருமில்லாத இடத்திற்போவார் - அங்கு மரங்களையும், மட்டைகளையும் பார்த்து இவற்றையெல்லாம் சொல்லுவார் - கண்ணில் நீர் ததும்பும் - பிறகு என்னைப்பார்ப்பார்: 'அப்பனே! உன் முகமே எனக்கு ஆறுதல்' என்பார் - என்னவென்று கேட்டால் சொல்லவாயெடுப்பார் அடக்கிவிடுவார். இப்படியெல்லாம் பலதடவைகேட்ட எனக்கு ஒவ்வொருகாலங்களில் இவை ஞாபகத்துக்குவந்து மனதிலிருக்கும் வேறெல்லா எண்ணங்களையும் துரத்திவிட்டுத் தாமே நின்றுவிருக்கும். அந்த வேளைகளில் என்கண்கள் திறந்திருந்தாலும் எதையும்பார்க்கா காதுகளும் கேட்கா - மூக்குக்கும் வா

சனைதெரியாது - யார்வந்து என்னசொன்னாலும் செய்தாலும் ஏரு து. நமக்கு நல்லகாலம் வரஇல்லை! வயதும் ஆகவில்லையே! என்று வருந்தினாலும், நம்மாலென்ன ஆகுமென்று முடிவுசெய்தாலும், என்மனதைவிட்டுப் போகாது. சற்றே வெளியேசென்று ஏதே தோ யோசித்துவிட்டுத் திரும்பிவந்தாலும் திடீரென்று ஞாபகத் துக்குவரும். ஏதாவது விஷயங்களை நன்றாய் கவனித்துவரும் காலங்களிலும், யாரோடாவது பேசிக்கொண்டிருக்கும் வேளைகளி லும் நடக்கும்போதும், உட்காரும்போதும், படுக்கும்போதும் க னவிலும் எப்போதாவது திடீரென்று இந்த விஷயங்கள் மனதில் தோன்றி என் சிற்றம்மையினும் ஆயிரமடங் கதிகமாய் என்னைப் பீடிக்கும். என்னசெய்தாலும் என்னைவிட்டு நீங்காது,'' என்று சொல்லி அங்கிருந்து எழுந்து சற்றே உலாவினான். கலாவதியும் இவ்விஷயங்களை ஒவ்வொன்றாய் எண்ணிப்பார்த்து பிரேமனிட த்து அதிக ஆசையும் ஸந்தோஷமு மடைந்தவளாய் ஏதேதோ எண்ணிக்கொண்டிருந்தாள்.

உள்ளே சென்ற பாஸ்கரவாத்யார் பானுசேகரசர்மாவிடம் சற்றுநேரம் (ஊர்வம்பெல்லாம்) பேசி, முடிவில், "என்ன = ஞாப கமிருக்கிறதா? தை பொறந்தால் பையனுக்கு கல்யாணம்செய்கிற தாய்த் தீர்மானம் செய்துபோட்டேன்'' என்றார்.

பானு.—"ஸந்தோஷம்.''

வாத்.—"கல்யாணம் ரொம்ப நன்னாய் நடக்கோணும்.''

பானு.—"உங்களுக் கென்னையா குறைவு?''

வாத்.—"எல்லாரையும் அழைக்கப்போறேன்.''

பானு.—"அப்படியே செய்யுங்கள்.''

வாத்.—"நம்ம பையனை நீங்கள் இப்பல்லவா பார்க்கோணும்! இனிமேல் அவனாட்டமா இந்த பிருதிவீலே கிடையாது.''

பானு.—"உங்கள திர்ஷ்டம்.''

வாத்.—"கல்யாணம் இந்தத்தையிலே செய்யலாமோன்னோ?''

பானு.—"தடையில்லாமல்''

வாத்.—"நீங்களென்ன ஸ்ரீதனம் கொடுக்கப்போறேள்?''

பானு.—"எல்லாம் கல்யாணம் நடக்கிறபோதல்லவா அந்த யோசனை?''

வாத்.—"என்னையா இன்னம் ஒருமாசங்கூட இல்லை, ஸ்ரீதன மின்னதுன்னு சொல்லப்படாதா? எங்கிட்டவே சொல்லப்படா தா?''

பாநு.—“ என் பெண்ணுக்கு கல்யாணம் செய்கிறதைப்பற்றி நான் யோசிக்கவேயில்லை. உங்கள் பிள்ளைக் கெங்கேயாவது கல்யாணம் செய்யப்போகிறீர்களாக்குமென் றெண்ணிக்கொண் டல்லவா இருக்கிறேன்.”

வாத்.—“ என்னகாணம் திடீரின்னு கல்லைத்தூக்கிப்போடறீர்? அதுக்கு அன்னிக்கே சொல்லப்பிடாதா. என்பிள்ளையைவிட மஹாயோக்யனு ஒங்காத்துக்கு வந்திருக்கிற பயல்? இல்லாபோனு பணக்காரனு? இல்லாபோனுல் அதிகார தோரணையாவது தெரியுமா? யாரோ ஊரைவிட்டு ஊர் ஓடிவந்த நாய்தான் ஒமக்குப்புடிச்சுதாக்கும்,”

பாநு.—“ ஒய்! போதும்-போதும்! நிறுத்தும்.”

வாத்.—“ பின்னே! என்னமோ பிரமாதம்பண்ணிக்கிறீரே!”

பாநு.—“ ஒய் அன்றைக்கும் நான் என் பெண்ணைக் கொடுப்பதாய்ச் சொல்லவில்லை. இன்றைக்கும் என் பெண்ணுக்கு வரன் தேடிவிட்டதாய்ச் சொல்லவில்லை. நான் இந்தவருஷம் கல்யாணம் பண்ணப்போகிறதுமில்லை,”

வாத்.—“ தெரியுங்காணும் எல்லாம்-உம்மயோக்யதை எனக்கு ரொம்பநாளாய்த் தெரியுமே! என்பிள்ளையைவிட ஒமக்கெங்கேருந்தோ குதிச்சுடப்போராங்காணம். என்னமோ சொன்னு என்னகாணம்-அதிருக்கட்டங்காணம்” என்று பெருங்குறலிட்டுக் கூச்சலிட்டுவிட்டுப் பிறகு மெதுவாய் “ நம்ம பையன் இருக்கானே ஒமக்கின்னம் தெரியல்லையாக்கும் ஒய்! அவனுட்டமாய்க் கிடைக்காதுகாணம், நான் சொல்லரத்தை வாங்கிக்கொண்டு பேசுங்காணும்” என்றார்.

பாநு.—“ நான் இந்த வருஷம் கல்யாணம் செய்யப்போகிறதில்லை.”

வாத்.—“ ஒய்! அப்படியானுல் வரவருஷமாவது எங்க பையனுக்கு குடுக்கிறீராங்காணம்? அப்படி முடிச்சாவது போடலாம் சொல்லுங்காணம்.”

பாநு.—“எல்லாம்பார்த்துக்கொள்வோமே என்ன அவசரம்!”

வாத்.—“ ஒய்! ஒம்ம யோக்யதை இவ்வளவுதானேங்காணும்? நீர் யாருக்குவேணுமோ அவனுக்குக் குடுத்துக்குங்காணும் ஒம்ம பொண்ணை. ஒம்ம கண்ணுக்கு மின்னுலே இந்த வருஷமே கிளியாட்டமா ஒருத்தியைக் கல்லியாணம்பண்ணி வக்யரேன் பாருங்காணம் பொண்ணேபொண்ணேன்று மினுக்கு மூனுகாசு இந்தமாதிரியாய்ப் பேசராப்போலேருக்கு-ஹாம்!” என்று சொல்லிவி

ட்டு மிகுந்த கோபத்துடன் வரும்வழியில் கலாவதிகண்டு, "அப்பாவைப் பார்த்தீர்களா ?" என்று கேட்க, ஒங்கப்பனையுங் கண்டா ஒன்னையுங்கண்டா ஒங்களுக்கெல்லாம் கொழுப்புப்புடிச்சிருக்கோடீ எரக்கர வழியா எரக்குரேன்" என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

அதிகாரம்—௧௧.

"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு."—குறள்.

"மூர்க்கனை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம்."—ஔவையார்.

"மோசம்போனேமே! போனவருஷமே கல்யாணஞ் செய்திருந்தால் கலாவதி நம்மவீட்டு மாட்டுப்பெண்ணாகவே இருப்பாளே. அந்த மடப்பயல் எங்கிருந்தோ நமக்கு சனியனாய் வாய்ச்சானே. ஸ்வாமிமட்டும் பிரியம்வைத்தால் நம்ம பையனுக்கே அவள் கிடைப்பதில் தடையில்லை. கொஞ்சம் கடைக்கண்பார்வை பார்க்கவாவதுமாட்டாரா ஸ்வாமீ! ஸ்வாமீ! புள்ளையாரே! வாசுதேவா! கோபாலா! அந்தப் பெண்மட்டும் எம்புள்ளைக்கு வாக்கப்படும்படி ஒரு தேவமாவது இரங்கமாட்டீர்களா? அரசமரத்தடிப்பிள்ளையாரே ஒமக்கு அம்பது தேங்காய் உடைக்கிறேன். ஆச்சிமணியம்மா ஒனக்கு இந்த வெசை காப்புக்கட்டினு ரெண்டு காவு கொடுக்கரேன். கமலக்கொத்தரே ஒம்ம கோவிலுக்கு மஞ்சசோமனோடே புள்ளையையும் மாட்டுப்பொண்ணையும் கூட்டிக்கிண்டுவந்து அபிஷேகம் செய்துவக்கரேன், அரியூர்ச்சப்பாணீ ஒனக்கு கொடம்பால் வாங்கி அபிஷேகம் பண்ணரேன், ஒரு பன்னிபூசைபோடரேன். அங்கப்பிரதக்ஷணம் பண்ணச்சொல்லரேன். எப்படியாவது யாராவது செத்தே மனசுவையுங்கோ" என்றே புலம்பிக்கொண்டே கண்ணொரு பக்கம்பார்க்க, காலொருபக்கமிழுக்க முகமெல்லாம் வாடி உதடெல்லா முலர்ந்து தள்ளாடித் தத்தளித்து நடந்து வழியிற்கிடந்த ஒரு சாணிப்புட்டடையில் காலைவைத்து அக்காலை உதறிக்கொண்டும் கண்ட இடங்களில் காலைத்தீத்திக்கொண்டும் இரண்டொரு இடங்களில் வீதியில் நிறுத்தியிருந்த வண்டிகளில் முட்டிக்கொண்டும் வீடுவந்துசேர்ந்தார் பாஸ்கர வாத்யார்.

அத்தருவாயில் அவர் பெண்சாதியோ எவ்வளவோ அழுக்கேறிசாணிப்பாலும் உமியும் பட்டுத் தடித்து சுண்ணாம்புக்கறையுடனும்

எண்ணெய்க்கறையுடனும் விளங்கும் ஓர் கறுப்புச்சேலையை பெருந்தொடைவரையில் வழித்துக்கொண்டு இறக்கிக்கட்டிசொழுந்தி, மார்பின் நடுவில் முறுக்கிய பூணூல்மாலைபோல் - மேல்தலைப்பு அசைந்தாட, வாயில் வெற்றிலைபாக்கு அடக்கி, நெற்றிமுகமெல்லாம் வியர்த்துக்கொட்ட, தலைமயிரவிழ்ந்து அவ்வஸரத்தில் இடதுகையால் சுற்றிசொழுந்திய சொருக்கு ஒருபக்கம்பார்க்க, முழங்கைமுதல் விரல்நுனிகள்வரையில் சாணிதட்டிய அடையாளமாக உமியும் கூளமும் காணமும் ஒட்டிக்கொண்டு மின்ன, முழங்கால்முதல் கீழே பாதம் முடிய சாணிதுவைத்த அடையாளத்தைக்காட்ட ஓடோடிவந்து வாயிற் கதவைத்திறந்து அதன்பக்கத்திலேயே நின்றுகொண்டு சாணிதட்டிய தன் இடதுகையாலே ஒருதலைப்பை அவிழ்த்துச் சற்றேதொங்கவிட்டு இடதுபுஜத்தால் நெற்றிவேர்வையைக் கலைத்துக்கொண்டு "என்னசேதி? என்னிக்கு கல்யாண நிச்சிதாம்பூலம் பண்ணப்போறேள்? நீங்க இத்தன்னூழி கழிச்சுவந்தபோதே எனக்கொல்லாம் தெரிஞ்சுபோச்சு, வந்தவழிலே சாணியை முதிச்சேளா. ஐயே! காலெல்லாம் சாணி!" என்றாள்.

"என்னை என்னபண்ணச்சொல்றே! ஒரு பெரியசாணிப்பட்ரேலே நொளக்கின்னு காலெவச்சேன்" என்றார் வாத்யார்.

"அப்படின்னு மொள்ள எடதுகையிலே உருட்டி இடுத்துக்கிண்டுவரதுதானே! அப்படியெல்லாம் சமத்தா இருந்தாட்டாத்தான் நானேன் இப்படியிருக்கேன். ரெண்டாம்பேருக்குத் தெரியாமே துணியெப்போட்டு மூடிக்கிண்டாவது வர்ரதானே வெக்கமாயிருந்தா? வெக்கமொருகேடா ஒங்களுக்கு?"

"நான் என்னபண்ணுவேன்? என் கிரஹசாரகாலம் எங்கே போனாலும் எடால்தான். எங்கேபோனாலும் சொகமில்லே எங்கே போனாலும் எஞ்சொல்லு ஏரமாட்டேனிங்கரது. அங்கெபோனா அவனும் ஆகாசத்தைப் பார்க்கரான். இங்கேவந்தா இவளும் ஒரு பக்கத்துலே புடுங்கரா, நான் கல்யாணம்பண்ணிக்கிண்டதும் புள்ளெப்பெத்ததும் போருமடாப்பா - இன்னம் எட்டு ஜென்மத்துக்குப்போரும்" என்றார் வாத்யார்.

"இல்லாபோனா ஒங்கமூஞ்சியெப் பாத்தா தெரியாதா! பொண்ணைத் தரமாட்டானின்னாட்டானேன்னே? வெடிஞ்சுது! வெடியாமூஞ்சி வேலைக்கிப்போனா வேலையாப்பட்டாலும் கூலியாப் படாது" என்றாள் அவர் மனைவி.

"நானென்னடீ பண்ணுவேன் உம்ஹ்ற - உம்ஹ்ற உம்ஹ்றம்ஹ்ற - என்னைத்தானே நீகூடப் புடுங்கரயேடீ - நான் போஹல்லியா - எம்

பேலே எட்றதப்பு உம்ஹ்ற-உம்ஹ்றம்ஹ்றம்ஹ்ற = எட்ருலே ஆடவனைக்குஞ்ஜொலித்தான் பாத்தேன்," என்றார் வாத்யார்.

"நீங்க என்ன தான் கேட்டேள் அதைத்தான் சொல்லிக்கொளுத்துங்கோ-ஒங்கிளுக்குப் புளுகிர வாடிக்கையின்னு அப்புடிக்கில்லாம நடந்ததுகடந்தாப்போலெ சொல்லுங்கோ" என்றாள் அவர் பெண்டாட்டி.

வாத்.—"எட்டி! ஒக்கிட்டக்கூட டான் பொய்சொல்ர துட்டாழ"

பெண்டாட்டி—"அதுக்கென்ன ஒங்ககூட்டத்துக்கே குசும்பும், பொய்யும், பொரகடழும் என்னைளும் உண்டு."

வாத்.—"கடக்கு-நீதான் ஒத்தி அரிச்சந்திரன் இருக்கயோன்னேஞ்-அரிச்சந்திரன் ஒங்காத்துக் கொல்லெவழியாத்தான் போனைனுக்கும்"

பெண்டாட்டி—"இதிலேயே தெரியல்லியா நீங்க அசடுங்காது அரிச்சந்திரனின்னுப்பிட்டு பொம்மண்டாட்டிக்குத் தான் சொல்ரதோ? போகட்டும். எதாவதுகேட்டா கேட்டத்துக்கு பதல்சொல்லுவேளா குறுக்கேபென்னத்துக்கு வெளெவெட்ரேள்."

வாத்.—"அம்மா நான் தான் என்னபண்ணரது. நீ இப்படியும் சொல்லுவே-அப்பிடியும் சொல்லுவே. இதுக்குத்தானே பொம்மண்டாட்டியளைக் கண்டா சீ யின்னு வரதெனக்கு-அப்பா! பொண்ணெக்கொண்டேயோ பேயெக்கொண்டேயோ எங்கர வசனம் ஸரியாயிருக்குடாப்பா"

பெண்டாண்டி—"நான்தான் பேயாச்சே-எங்கிட்டப்பேசாதேயுங்கோ-அப்பாம் ஒங்களைப் புடிச்சுக்கிண்டுடுவேன்."

வாத்.—"அடியே! அடியே!!"

பெண்.—"அடியேயுங்கண்டா-தடியேயுங்கண்டா-நான்தான்பேயாச்சே-ஒங்களை எத்தன்னைப்புடிச்சு ஆட்டினேன். நீங்க எத்தனை வைத்யம் பண்ணிக்கிண்டேள்."

வாத்.—"என்னடீ! வசனத்துக்குச் சொன்னு சண்டெக்கிவரே."

பெண்.—"கடக்கு-அந்தப்ராமணன் என்ன சொன்னார்?"

"அந்த வயத்தெரிச்சலே என்னடீ கேக்கரே" என்றார் வாத்தியார்.

பெண்.—"சொல்லித்தான் அழுமே சுருக்க."

வாத்.—"போனேனா - கேளுடீபோனேனேன்னா - இங்கெ வாடி சொல்ரேன்" என்று தன்கிட்ட அழைத்து மெதுவாய்ச் சொல்லத் தொடங்கி மேலே கையைப்போட்டார்.

பெண்.—"ஒங்கிளுக்கு என்னாளும் இதுதான். இதுக்குத் தானா கிட்டவரசசொன்னேள் - நீங்க பொம்மண்டாட்டியா யிருந்தானா தெரியும்வருத்தம். கொழந்தைக்கு கல்யாணம் பேசப் போனேளே என்னன்னா, இப்பத்தான் மாப்பிளைத்தனம் கொண் டாட்ரேள் இப்பிடி ஆனபிராயத்துக் கடையாளமில்லாதே நீங்க இருக்கவேண்டியேயில்லை:"

வாத்.—"நான்தான் சொல்லவந்தேனேடீ:"

பெண்.—"ஒங்கவெளயாட்டுக்கெல்லாம் நான் ஆட்டாளியம்மா - நான் கடக்கேன் தேமேன்னு செத்துச்சிவனடஞ்சு. ஒங்கிளுக்கென்ன? கொழுப்பாவரதாக்கும்:"

வாத்.—"அடியே நீ கேட்டாகேளு கேக்காட்டாப்போ - நான் என்னாலெ ஆனவரைக்கும் கேட்டாச்சு. அந்த பிராமணனுக்கு கட்டோடே ஸம்மதமில்லை."

பெண்டாட்டி—"நீங்க அசட்டுப்பிசட்டின்னு அழுது வழிஞ்சிருப்பேள்: இவனூர்ராவனின்னு அவருக்குத் தோணியிருக்கும்: நயமாச்சொன்னேளோ என்னமோ! நயத்துலே, பயத்துலே சொல்லிப்பார்க்க ஒங்கிளுக்குத் தெரியாது."

வாத்.—"அடி யின்னமே என்னாலெ முடியாது நீ வேணுன்னாப்போய் எப்பிடிவேணுமோ அப்படிகேளுடீ. நான் என்மண்டையை ஒடச்சுக்கொண்டாச்சு: ஆனமேலே இருக்கிரவனை சுண்ணாம்புகேக்கராப்போலே அவனைப்போய்க் கேக்கரதென்ன."

பெண்டா.—"நீங்க தெரியாதவாளா ஒங்கிளுக்குத்தான் என்ன அக்கரையில்லியா? அந்தப்பிராமணன் ஏன் குடுக்கமாட்டேனுங்கரான்."

வாத்.—"அந்தக்குட்டி ரொம்ப அழகுடீ - இல்லாபோனா அவளை யாரு சீந்தரா?"

பெண்.—"அழகோடெதான் இருக்கான்னு கண்டேளாக்கும். ஏத்தனும் சமத்துங்கிரேள்."

வாத்.—"நாம் குடுத்துவச்சிருந்தாத்தானே கெடக்கும்"

பெண்.—"ஆமா-அதிர்ஷ்டம் வாண்டாமா எல்லாத்துக்கும்."

வாத்.—"எல்லாம் ஸ்வாமி தலையிலே பாரத்தைப்போட்டுட்டுத்தான் இருக்கேன்."

பெண்.—"அந்தபிராமணனை பயமுறுத்தியாவது கேட்டுப் பாக்கரதுதானே."

வாத்.—"நம்ம ஜம்பமெல்லாம் அவன்கிட்ட ஸரிப்படாது; அவன் நம்மெவிட எதுலே கொரஞ்சவன்?"

பெண்.—"யாருக்குத்தான் குடுக்கப்போரான் அந்தப்பொண்ணை - ஆகட்டும்போ - இன்னமே நம்மகொழந்தயெவிட யாரோ அழகர், சமத்தர் வந்தூடப்போராருக்கும். அதையுந்தான் பாக்கத்தானே போரேன்: எல்லாம் வலுவிலேபோனா சாதிக்கெளப்பம் தன்னாலே வருவன்யிருங்கோ. சாக்கடைத்தண்ணுக்குப் போக்கெடமெங்கே."

வாத்.—"இல்லேடீ! அவாத்துலே ஆரோ ஒருபய ஓடுகாலித்தறுதலெ வந்திருக்கு. அவனுக்கு குடுப்பன்போலேருக்கு."

பெண்.—"என் இதுபேர்லே இருக்கு - வேறெ ஒன்னும் போலேல இல்லே. எல்லானாயும்சொல்லி என் கொழந்தையையும் சொல்றதா? பட்டுக்கும்பழுதாம் - பழுக்காத்தடிக்கும் சிலும்பலாம்; என்கண்ணுட்டியோட காலழகுக்குக்கட்டுவாளா இன்னொருத்தர்?"

வாத்.—"நம்ம கொழந்தையாட்டமா வருமாடீ; அவன் காலிமூத்தூஞ்சரி எல்லார் தலையெழுத்தும் சரி."

பெண்.—"பேசாதிருங்கோ - துள்ளின மாடு பொதிசொமக்கும்."

வாத்.—"எய்! நான் ஒருகாரியம்பண்ணரேன் பாக்கரியா என்சாமர்த்தியத்தை? அந்தக்குட்டியெ மொள்ளதூக்கிண்டு போய் விடச்சொல்ரேன் நம்மபசங்களெவிட்டு."

பெண்.—"சீ அது அழகன்னு. அந்தப்புள்ளெயை மொள்ள அடிச்சு வெரட்டச்சொல்லுங்கோ பாக்கரேன் ஒங்கசமத்தை."

வாத்.—"ஆமடீ! ஆமடீ!! எனக்குத்தெரியலெலெப் பாத்தியா - இதுக்குத்தான் பெண்டாட்டி வேணுங்கரது; நீ கெட்டிக்காரிடீ."

பெண்.—"பின்னெ! இந்தக்கழிச்சேலே போரபுள்ளெ நம்மக்கொரு லக்ஷியமா? கொசுவாட்டமா நசுக்கி எறியாத்துக்கில்லீரே."

வாத்.— "அதுவும் சேவோம், நீ மாரியம்மன்கோவிலுக்குப்
பே அம்மனுக்கும் வேண்டிக்கோ. தேவத்துக்கும் பண்ணிப்பாக்க
ரது. எப்படியாவது காரியம் ஆனுலரி. அம்மனுக்கு எற்கவே
அந்தப்புள்ளெமேலே எரிச்சவந்திருக்கும். அந்தப்பயல் ஒன்ன
ரெச்சானிருந்துக்கிண்டு அம்மனைப்புடிச்சு பரியாஸமாப் பேசிக்
கொண்டிருந்தான்; நான் நம்ம ஜோஸியனைக் கேட்கவும் சே
யரேன்."

பெண்.— "அப்படியின்னுப் போங்கோ."

இவ்விதமாக வாத்யாரும் அவர் மனைவியும் நெடுநேரம் பேசிக்
கொண்டிருந்ததால் அவர் பெண்சாதியின் கால் கைகளிலிருந்த சா
ணியும் அவர் காலிலிருந்த சாணியும் உலர்ந்துபோனதுமல்லாமல்
தட்டுவதற்கென்று குவித்துக்கிடந்த போரும்காயத்தொடங்கியது.
அந்த ஸமயத்தில் அவர்கள் அருமையாய்ப் பெற்றெடுத்த குழந்
தையும் வயிற்றைக் காட்டிக்கொண்டு வந்துசேர்ந்தான். உடனே
பெற்றோர் இருவரும் அவனை 'துக்குறி' என்றும், 'அதிர்ஷ்டக்க
ட்டை' யென்றும், 'வெடியாதபயல்' என்றும்; 'கெட்டசுழி' 'மூ
தேவிபிடிச்சமூஞ்சி' 'பரதை' யென்றும் இன்னும் ஏதேதோ சொ
ல்லியும் திட்டினார்கள். சற்றே அழுதார்கள். சற்றுநேரம் வே
தாந்தம் பேசினார்கள். அவனுக்கும் குரங்கு சாகக்கொடுத்த ஆண்
டிபோலாயிற்று; விம்மி விம்மிப் பெருமூச்சு வரும் கீழே குனிந்
துகொண்டழுவான். சற்றே மனதை உறுதிசெய்துகொள்வான்;
கல்யாணம்மட்டும் ஆகிறதென்று தீர்மானம்செய்திருந்தால் எவ்வ
ளவு நன்றாயிருக்குமென்றும் என்னென்னமோ செய்ய இருந்ததா
கவும் அவ்வளவும் அனியாயமாய் வீணாயிற்றே என்றும் எண்ணி
வருந்துவான். இந்தக்கல்யாணப்பேச்சே இல்லாமலிருந்தால் இவ்
வளவுபாடுபட இடமில்லையே என்பான். வீணாய் ஆசைப்பட்டு
மோசம்போனதாக எண்ணி அழுவான். "இருக்கட்டும்; ஸ்வாமி
தயவிலே எப்படியாவது அந்தக்குட்டிமட்டும் நமக்குகிடைச்சுண்
ணும். இப்பப்பட்ட வர்த்தத்தையெல்லாம்வட்டியும்மொத்துமா வா
ங்கரேன்" என்பான்; "என்னைத்தவிரவேறேஒரு கல்யாணம்ப
ண்ணிக்கிண்டாலும் அவன் ஒரு மார்கழிமாசக் கழிச்சலிலே போ
கவேண்டும்" என்றும், "கல்யாணம் ஆரத்தாக்குமின்னமேலே பாம்பு
கடிச்சி படக்கின்னுசாகேணும்" என்றும், கெட்டசினைவெல்லாம்
கொள்ளுவான். இப்படியாக அந்த வீடுமுழுவதும் அன்றைக்கு
இழவுபட்டபாடுபட்டது. அன்று முதல் சிறுகுள்ளன் எப்போ
தும் தனியாய் இருந்து புலம்புவான்; இதேவிஷயமாகக் கனவுகா
ண்பான். பிதற்றுவான்; பைத்யம் பிடித்ததுபோலானான். பக

றப்பொழுதில் கொடிய வெயில் காயும்போது கொள்ளிடக்கரைக்குப்போய் அங்கு யாரும் வரமாட்டார்களாதலால் அங்குள்ளமரங்களின் நிழலில் உட்கார்ந்துகொண்டு குருட்டு யோசனையெல்லாம் செய்வான். ஒருதடவைகூடக் கல்யாணம் ஆவதற்கில்லையென்றாலும் மனதால் பதினாயிரம் தடவை கல்யாணம் செய்வான். அவற்றில் சிலதடவைகளில் ஒருநாள் கல்யாணம் முடியத்தான் எண்ணுவான், சிலதடவைகளில் இரண்டுநாள் கல்யாணம்தான் எண்ணுவான். சிலதடவைகளில் கொஞ்சங்கொஞ்ச மெண்ணுவதும் வேறுவிஷயங்களில் மனதைச் செலுத்துவதும் உடனே திரும்பி கல்யாணத்தைப்பற்றி யோசிப்பதுமாக இருப்பான். பிள்ளைபிறக்கிறவரையில் ஒருதடவை எண்ணிப்பார்ப்பான். பெண்சாதியை கோபித்துக்கொள்ளுகிறமாதிரியாய் நினைப்பான். அடிக்கடி "ஸ்வாமி தயவிலே கல்யாணம்மட்டும் ஆகோணும்" என்பான். இப்படியெல்லாம் போதுபோக்கி அந்தி வேளையில் கொள்ளிடத்தின் மணலில் தென்கரை ஓரத்திற்போய் கீழெல்லாம் சூடாக இருந்தாலும் பாராட்டாமல் உட்கார்ந்து தனக்கெதிரில், பாதகுறடுபோலவும், அனுமார்போலவும், மணலில் சித்திரமெழுதிக்கொண்டு ராம, ராம என்றும், அனுமந்தா, ஆஞ்சனேயா என்றும் கண்ணைமூடி ஜபம் செய்வான். சிலவேளைகளில் தெய்வமே கிடையாதென்றும் இருந்தால் இவ்வளவுதூரம் ஜெபம் செய்தும் பயனில்லாமற் போகுமா என்றும் நினைப்பான். மறுபடி கோடுகிழித்துக்கொண்டு துதிப்பான். புராணத்தில்கேட்டுள்ள கதையையெல்லாம் நினைத்து நினைத்துப்பார்த்து "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்கள்" என்றும், "தெய்வமென்னுளும் தஞ்சமாய் நிற்பது" என்றும் சொல்லிக்கொண்டு இதோ ஆயிற்று அதோ ஆயிற்று, நம்முடைய ஆஞ்சனேயர் நம்முடைய மாமனார் மனசில் புகுந்து கூட்டிவைப்பார்" என்று தைரியமடைவான்.

இப்படிச் சிலநாள் செல்ல ஓர்நாள் வாத்யாருடைய சீடப்பிள்ளைகள் மூன்றுபேர் அவ்வூரின் கோயிலுக்குள் தென்புறத்தில் உள்ள ஓர் மகிழமரத்தின்மேல் ஏறி அதன் கிளைகளில் உட்கார்ந்து பூப்பரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் வீரபாகு என்பவன் சேஷசாமீ என்பவனைப் பார்த்து "எலே! சேச்சாமீ! நம்ம ஐயா அன்னிக்குச் சொன்னுரே ஞாபகம் இருக்கா"? என்றான்:

"வீரா! அவ்வாத்தா—வெளியிலேன்னு வரமாட்டேனுங்கரான், வந்தா ஒதைக்கர ஒதையிலே மண்ணைக் கவ்வவேண்டாமா?" என்றான் சேஷசாமீ.

"எலே சேச்சாமீ நம்ம சத்தரத்து மணியக்காரன் இருக்கானுன்னே, அவன் வச்சுக்கிண்டிருக்கான்பாரு, அவளோடேசொல்லி மொள்ள அந்தக் குட்டியெ அழைச்சுக்கிண்டு வரச்சொல்லி அவளெ தூக்கிக்கிண்டு ராத்திரியே வந்து கல்யாணத்தைப் பண்ணிப்பிட்டா என்னடா?" என்றான் வீரபாகு.

"இல்லேடா! ஐயா அன்னிக்கி அப்பிடிச்சொன்னுரா? மிந்தானேத்தைக்கு சொல்ரார் அந்தப்பயலே ஒதச்சு ஊரைவிட்டு வெரட்டோணும்டா எங்கரார்ரா அன்னிக்கி" என்றான் சேஷசாமீ.

"எண்டாலே சேஷாமீ! நீயே சொல்லுடா அந்தப்பெண்ணேடே அழகென்ன அறிவென்ன கணக்கென்ன காரியமென்ன நம்ம ஐயாப்பிள்ளேக்கிம் அவளுக்கும் எணிவச்சுப்பாக்கோணும்டா எலே! நான் ஒன்னுசொல்ரேன் கோவிச்சுக்குவையோ நீமட்டும் கோவிச்சுக்காதே இருந்தா நான் ஒருசேதி சொல்ரேன்" என்றான் வீரபாகு.

சே.—"என்னடாலே! என்னடாலே!"

வீ.—"எலே ஒத்தரோடயும் சொல்லாதே."

சே.—"இல்லேடா."

வீ.—"ஒங்கப்பனுணே."

சே.—"எங்கப்பனுணே."

வீ.—"எலே! அப்பரம் சொல்லிவிட்டா என்னடா பண்ணரது!"

சே.—"இல்லேடாலே எங்கிட்டே அவ்வளவுகூட நம்பிக்கெ இல்லியாடா? அன்னிக்கி இழுத்தாணியைத் திருடினியே இதுவரைக்கும் நான் ஆருக்காவது சொல்லியிருப்பேனு. அன்னிக்கு ஐயா ஆம்படையா ஒனக்கு தலேவாரிவிட்டாளே நான் ரெண்டாம் பேருக்குச் சொன்னேனு. ஒனக்கு தெனம்தெனம் பக்ஷணந்தராளே ஒன்னேடெ நித்யம் பேசராளே நீகூட அன்னிக்கு அவளுக்கு மொகிழம்பூப் பரச்சுக் கோத்துக்குடுத்தயே நான் வெளிவிட்டிருப்பேனுடா."

வீ.—"அதுகடக்குடா அந்தக் குட்டியிருக்கா பாரு கலாவதி அவளெமொள்ள நாம்தூக்கிண்டுபே கல்யாணம்பண்ணிக்கிண்டோட்டா இப்ப என்னடா பிரமாதம்" என்று இப்படிப் பேசிக்கொண்டே இருந்தவன் ஒருகிளை மளமளஎன்று முறிய கீழேவிழுந்தான். அங்கு ஒரு கருங்கல்லில் அவன் கால்பட்டு சப்பை நழுவிப்போய் விட்டது. இதுதான் ஸமயம் இங்கிருந்தால் நம்மபேரில் பழிவிழு

மென்று சேஷசாயியும் இன்னொருபையனும் வேர்க்க விறுவிறுக்க ஓடிவிட்டார்கள். அன்றுமுழுவதும் நினைப்புதப்பிப்போய்க் கிடந்து மறுநாள் எழுந்து மெள்ளமெள்ள நொண்டிநொண்டி நடந்துகொண்டே "ஐயோ! கோவில்மரத்திலே ஏறாதென்னு எத்தனையோதரம் பெரியவாளெல்லாம் சொன்னாளே கேட்டேனா? தலையிலே இழுத்து" என்று சொல்லிக்கொண்டும், சேஷசாயியாரிடமாவது சொல்லிவிடுவானோ என்று பயந்துகொண்டும் சத்திரத்தில்வந்து விழுந்தான் வீரபாகு - அவனுக்கு ஜ்வரமும் வந்துவிட்டது. சத்திரக்காரன் வீரபாகுவினிடம் அதிக அன்புள்ளவனாகையாலும் சத்திரத்துவேலைக்காரியும் வீரபாகுவால் அதிகசுகமடைந்தவளாகையாலும் அவனைவிட்டு ஓர் அம்பட்டனை இட்டுக்கொண்டுவரச் சொல்லி யனுப்பினான். இந்தச் செய்திகேட்டு வாத்யார் ஓடிவந்தார். அவர், மணியகாரன், இன்னும் சிலபேரிருந்து "ஐயோ வீரபாகு செத்துப்போனாலென்னசெய்கிறது. அவன் வீட்டுவாளெல்லாம் பெருந்தொண்டைக் காராளாச்சே" என்றாலோசித்து கடைசியாக பிரேமநாதன் தலையில் இந்தப்பழியைப் போடுகிறதென்று தீர்மானித்தார்கள்.

அன்றுகாலையில் வாத்யார் பெண்சாதியெழுந்து தலைமுழுகி ஈரப்புடவையைக் கட்டிக்கொண்டே மாவிடித்து, வெல்லங்கலந்து, ஒரு தாம்பாளத்தில் விளக்குப்போற்செய்துவைத்து எடுத்துக்கொண்டு ஒருகையில் வெண்கலப்பாத்திரத்தில் பசுநெய்யும், மடியில்வெற்றிலைபாக்கு, குங்குமம், பழம், கற்பூரம், சாம்பிராணி, தேங்காய், பூ, முதலியவும் எடுத்துக்கொண்டு அன்பிலுக்கு மேற்கேஉள்ள ஆச்சிமணியம்மன் கோயிலுக்குச் சென்றாள்.

அந்தக் கோயில் ஒரு மணல்திட்டு மீதுள்ளது. நன்செய்களே மிகுதியாயுள்ள சோழநாட்டின் நடுவில் இப்படி மணல்திட்டிருப்பது நல்லவர்களுடைய வாழ்நாட்களிலேயும் துன்பப்படும் நாட்களுண்டென்பதற் கறிகுறியேயொழிய வேறில்லை. தலைமுறை தலைமுறையாய் நல்ல பேர்வாங்கிய குடும்பங்களில் வியபிசாரிகள் பிறப்பதுபோலும், ஜனங்களிடத்து மிகுந்த கருணையோடுகூடிய ஒருவன் வயிற்றில் புலாலுண்போன் பிறப்பதுபோலும், தெய்வபக்தி மிகச்சிறந்து ஸத்யமான அன்புடன் பரமசிவத்தை வழிபடு மொருவனுக்கு பிடாரி மாரியாத்தா முதலானவற்றைத் தொழும் பெண்சாதிகிடைப்பதுபோலுமே சிறந்த விளைநிலங்களுக்கு நடுவில் வெயிற்காலத்தில் நடப்பவர் கால்களைப் பொசுக்குவதும், காற்றுக்காலத்தில் கண் காது மூக்குகளில் வாரி இறைப்பதுமான மணற்றிட்டும் புன்செய்களும் ஏறக்குறைய ஏழெட்டுக் காணிக்கிடப்புவனாயி

விருந்தன. இந்தத்திட்டின் நடுவில் பல பனைகள் ஆகாயத்தை அளாவிநிற்கும். பல முளைப்பனவாயும், பல சற்று வெளிவந்தனவாயும், பல அறைமரமாயினவாயும், பிசாசுகள்போல் தலைவிரித்து இரம்பம்போல் பற்கள்நெருங்கிய அடிமட்டைகளுடையனவாய் சாணார் கள்ளெடுப்பதற்காகக் கவிழ்த்துள்ள சட்டிகளோ காய்களோ என்று பேதங் கண்டுபிடிக்க முடியாமல் பெருத்த குலைகளையுடையனவாய் நெருங்கி மூன்று காணியளவும் உள்ள பனந்தோப்பின் நடுவில் வடக்குநோக்கியுள்ள அந்த ஆச்சிமணியம்மன்கோயிலை ஆச்சிராமவல்லியம்மன்கோயில் என்றும் ஆச்சாமணிகோயி லென்றுங்கூடச் சொல்லுவார்கள். கோயிலுக்கு அடுத்த தெற்கில் பனந்தோப்புக்குள்ளேயே ஒறு சிறு குட்டை உண்டு. அதைப் பார்த்தால் காவிரியிற் போட்டுள்ள ஊற்றுப்போலவேயிருக்கும். ஊற்றுக்குப் பல கண்களிருப்பதுபோலும் அங்கங்கே எப்புறமும் மழைத்தண்ணீ ரறுத்தூக்கொண்டுவந்து விழுந்த அடையாளமுண்டு. அந்தக்குட்டையில் நுரைத்துக்கொண்டு பாசம் எடுபட்டிருக்கும். உள்ளே, புழு பூச்சிகள் நிறைந்து மட்டை ஊறிய நாற்றமும் நிறமும் கொண்ட தண்ணீருண்டு. அதில் தவளைகளும் மீன்களும் இருப்பதால் அவற்றைத் தின்று பிழைப்பதற்காக அந்தக்கோயிலின் பாம்புகள் அங்குமிங்கும் சுற்றிக்கொண்டிருக்கும். மேற்குநோக்கி ஒரு மண்குதிரையும், வடக்குநோக்கி ஒன்றும், தெற்குநோக்கி ஒன்றுமாய் கோயிலின் கிழக்கும் வடக்கும் குதிரைகளுண்டு. கிழக்குப்பார்த்த மூன்று கோயில்களும் தெற்குப்பார்த்த ஒன்றும் வடக்குப்பார்த்த ஆச்சிமணியம்மனு மிருப்பதுடன் மேலப்புறச் சுவரை ஒட்டி சிறுதிண்ணைகள் இரண்டுள. அவற்றின்மேல் ஆனையடிச் செங்கல்களை இரண்டிரண்டாயடுக்கி திண்ணை ஒன்றுக்கு எட்டு அடுக்கு பத்தடுக்கென்று கருப்புகளும் காட்டேறிகளும் இருக்கிறபாவனை செய்திருக்கும். இவ்வளவு அழகுள்ள கோயிலுக்கு, வந்தவளாகிய வாத்யார் பெண்சாதி அங்கு ஆச்சிமணிக் கெதிரில் மாவிளக்கேற்றி, வேண்டிக்கொண்டு விழுந்து கும்பிட்டுவிட்டு கோயிலைச் சுற்றிவருகையில் அங்கு யாரோ தடியன் இடுப்பில் கோவணம் ஒன்றே கட்டியவனாய் கருத்துத் தடித்துக் குறுகிய உடம்பும், மீசை தாடிகள் மண்டிய முகமும், சடைவிழுந்து இழுத்துக்கட்டிய தலையுமுள்ளவனாக யாழ்ப்பாணத் தேங்காயோடொன்றை கப்புறையாய் கையிலேந்திப் பாடிக்கொண்டு குறிசொல்லிக்கொண்டு நின்றான். உடனே தன்பங்கில் அம்மனிருக்கிறதாக அடங்காத ஆனந்தங்கொண்டு அவனிடம் குறிகேட்க உள்ள ஆசையால் "ஏ பண்டாரம் எனக்கொரு குறிசொல்லு" என்றாள். அங்குள்ளவர்கள் உடனே கூட்டத்தை விலக்கினார்கள். குறிகாரனும் "அம்மா வா

ங்க வாங்க சங்கிலிக்கருப்பன் ஒங்க பக்கத்துலே இருக்கிறுங்க'' என்றுன்.

"அடே அதெல்லாங் கிடக்கு, நாளுெருகாரிய மெண்ணியிருக்கேன் அது பலிக்குமா பலிக்காமலே போவிடுமோ'' என்றுள் வாத்தியார் மனைவி.

"சத்துரு பயங்கொஞ்சம் உண்டு—ஆனுல்
சாதித்து சங்கடம் போக்கிவைப் பேனுன்
எத்தனை பேர்கள்வந் தாலும்—அந்த
எத்தனை பேர்கள்வந் தாலும்—அரகரா (எத்தனை)
எனக்குச் சமானமாய் கருப்புகள் உண்டோ?

தனதந்தி நாதந்தி தானு.

காட்டா மணக்குமங் குண்டு—அந்தக்
கருவேல மரமும் பொரசுமங் குண்டு
மாட்டாங் காரப்பயல் வருவான்—அந்த
மாட்டாங் காரப்பயல் வருவான்—சிவசிவா (மாட்டாங்)
அந்த - மாட்டுமே லேறி வெளயாடு வேனுன்
மருதை கொய்யா அடம் புண்டு - அங்கே
மலைமலை யாகவே மரங்களு முண்டு
எல்லா மரங்களும் பார்த்தால் - எமன்
பாசங் கொண்டுபடை யோடுவந் ததுபோல்
இருக்குமே யந்தத்தோப் புத்தான் - அதில்
இரும்பு வளையத்தில் விளையாடும் கருப்பு
என்னலே என்ன ஆகாது - எவன்
என்ன விரோதத்தைச் செய்தாலு மம்மா
புள்ளை பொறவாதென் றுலும் - நல்ல
புத்திரன் புத்திரி நான்தர இருக்கேன்
அஞ்சாதே யஞ்சாதே யம்மா'' என்று நாதநாமக்கிரியையில்பாடி தன் கப்பரையில் தாளமும் போட்டுக்கொண்டே வந்தபோது இந்த இடத்தில் வந்ததும் வாத்யார் மனைவியின் முகத்தைப் பார்த்தான். அவளும் "புள்ளைகுட்டியெல்லாம் ஸ்வாமி தயவுலே கெடெச்சிருக்கு, அதுகளையிட்டுத்தான் வருத்தம் அதைத்தான் கேக்கரேன்'' என்றுள்.

அதற்குள் குறிகாரன் கோபங்கொண்டான். கிட்ட இருந்த ஒருவன் "அம்மா சாமிக்கெல்லாந் தெரியுங்க நீங்க ஒன்னும் சொல்லாதேயுங்க. இல்லாகட்டி கோவம் வந்திடும். சாமிக் கொன்னுந் தெரியாதாங்காட்டியும் நீங்க சொல்லப்போரிங்களோ'' என்றுன்.

உடனே அவள் " தப்பிதம் - தப்பிதம் இன்னமே கேக்கரதில்லே" என்ருள்.

குறிகாரன் கோபந் தணியாதவன்போல் பெருமூச்சு விட்டுக்கொண்டு " பிள்ளேயொன்றுண்டேயுனக்கு" என்ருன்.

" ஸரி ஸரி - நெசந்தான் " என்ருள்.

குறிகாரன் " அதற் - குடம்புநோய் வந்தாலுங் காப்பதென்பாரம்
மெள்ளமெள்ளச் சொல்லக்கேளும் - அந்த
மூதேவிப் பசங்களே முடுக்கியே விடுவேன்
பள்ளிக்கோடத்திலே படித்து - அவன்
பலருக்கு மேலான ஆக்கினே செய்வான் "—என்று சொல்லிக்கொண்டே வந்தபோது அது தன் பிள்ளேயைப் பற்றியேயென்றும் " மூதேவி பசங்க" என்றது பிரேமனேப்பற்றியென்றும் தீர்மானித்து " எம்புள்ளக்கி இந்தவருஷம் " என்ருள். அதற்குள் குறிகார ஆண்டி தன் கை யிரண்டையும் கீழே ஓங்கி யடித்து மிகுந்த கோபங்கொண்டதுபோல் கண்ணே உருட்டிவிழித்து, பல்லே நெறநெறவென்று கடித்து மேல்மூச்சும் கீழ்மூச்சுமாய் கொஞ்சநேரம் பெருமூச்சுவிட்டு மறுபடி கப்பறையை யெடுத்து,

" கல்யாணம் செய்துவைப்பேன்யான் - எந்த
கலகம் வந்தாலும் கலங்கவே வேண்டாம்
கருப்பன்என் றென்னே யெண்ணிக்கொள் - அந்தக்
காட்டேறி வீரன்சா முண்டிமகாளி,
மருதன் சென்னி பாவாடை - அந்த
மாமுண்டி சன்னசியெல் லார்க்கும்பெரியான்
தெனதந்தி நாதந்தி தானு"

என்று சொன்னதும் அவளும் முகமலர்ந்து " அப்படித்தான் செய்துவைக்கோணும் ஸாமீ ஸாமீ" என்ருள்.

உடனே குறிகாரன் கப்பறையை யெறிந்துவிட்டு இடதுகை விரல்களே மடக்கி தன்முகத்துக்கெதிரில் பிடித்துக்கொண்டு மடக்கிய கையே உடுக்காக அதின் சுண்டுவிரலின்மேல் தன் வலதுகை ஆள்காட்டி விரலால் படபடவென்று அடிக்கத்தொடங்கி கட்டைவிரல் நீங்கலாக மற்றைய மூன்றுவிரல்களும் இடதுபுறங்கையிற்பட வீராவேசங்கொண்டவன்போல் அங்கு வைத்திருந்த சாம்பலே யெடுத்து மேலே பூசிக்கொண்டு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்ட, ஹூம் - ஹூம் என்று தலேயை யாட்டி,

எம் மருதமலெ வீரப்பா ஆ அ அ மணமுடிக்க வேண்டுமெடா ஆ ஆ ஆ
டெம்டும் டுடும்டும் டுடும்டும் டுடும்டும்.

ஒனக் கார்டுதரேன் கோழிதரேன் ஒசாந்தசாம்பிராணிதரேன்
நீ - பாடுபட்டு பொங்கதின்னு பாப்பாத்தி கலியாணம்
அது - நன்னுக வேமுடிந்தால் நல்லவேட்டி ரெண்டுதாரேன்
நீ - சத்துருவை மூக்காலே வாயாலே ரத்தங்கொட்ட
ஐய - ஊரைவிட்டுத் தானோட்டி ஒதவிசெய வாராயோ

என்று உடுக்கடித்து, சோர்ந்தவன்போல் கீழே விழுந்து அங்கிருந்த ஒரு தடியையெடுத்து மடார் மடார் என்று தன் முதுகிலடித்துக்கொண்டு, சற்று அழுது “ஏ பாப்பாத்தி ஒனக்கு கலியாணம்செய்திட்டா என்னு தந்திடுவே” என்று கேட்டான். அவளும் “ஸாமீ நீங்க என்ன கேக்கரேளோ அது தரேன்” என்றுள். “நீங்க அஞ்சவேண்டாமம்மா இந்த அடையாளம் ஆணையிட்டேன்” என்றுசொல்லி அங்கே ஒரு கர்ப்பூரக்கட்டியைக் கொளுத்திப்போட்டு வாயால் ஊதி யணைத்தான். அது தானே யணைந்ததென்றும் தன்காரியம் உண்மையாகவே பலிக்குமென்றும், நம்பிக்கொண்டு குறிகாரனை வீட்டுக்கு வரச்சொல்லிவிட்டு தான் முகமலர்ச்சியுடன் வீடுசேர்ந்தாள்.

அப்போதுதான் வாத்யாரும் வீரபாகுவைப் பார்த்துவிட்டு பிரேமன்மேல் பழிபோட இடமுண்டாயிற்றென்றும் அதுகாரணமாக பிரேமன் தொலைந்துபோவானென்றும் ஆதலால் தன்மகனுக்கே கல்யாண மாகுமென்றும் தீர்மானித்து அடங்கா மனமகிழ்ச்சியுடன் வீடுவந்தார்.

அவர் மனைவி தான் கோவிலுக்குப்போய்வந்த செய்தியெல்லாம் சொன்னுள். அவர் தான் சோதிடனிடம் சென்றதும், அவன் கல்யாணம் நிச்சயமாய் ஆகலாமென்று சொன்னதுமான விஷயத்தையும் வீரபாகுவின் செய்தியையும் சொல்லி ஆர்வாரித்தார்.

“நீங்க என்னதான் சொன்னேள் அந்த ஆச்சிமணியம்மனுக்கு மஹா சக்திதான் நம்ம புள்ளைக்கி கல்யாணம் என்னுலேதான் ஆகப்போகிறது நான் வேண்டிக்காதே போனு வீரபாகு மரத்துலிருந்து விழுவானே” என்றுள் அவர் மனைவி.

“நான்மட்டும் வேண்டிக்கல்லியோ நீ கண்டயோ என்னுலே தான் கல்யாணம் நடக்கப்போகிறது” என்றுர் வாத்யார்.

“ஒங்கிளுக் கென்னுளும் இதுதான் சந்தம். நான் எத்தனை சேஞ்சாலும் கொக்கமாட்டேனெங்காது நான் பொறந்தவேளை,

அந்தக் கம்மண்டாட்டி வயத்துலே பொரந்து எந்தக் கழிச்சேலே போவானேயோதேடி வாக்கப்பட்டு ஒருநாளும் சொகமில்லே'' என்று விம்மி விம்மி அழுதாள் அவர் மனைவி.

இப்படியாக திடீரென்று அழுவதும் சிரிப்பதும் சண்டையிடுவதுமாய் புருஷனும் பெண்சாதியுமாய் தங்கள் பொழுதைப் போக்கிக்கொண்டு கல்யாணமாகுமென்ற நம்பிக்கையோடிருந்தார்கள்.

அதிகாரம்—கஉ.

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.''—குறள்.

"அடைக்கலான் குருவிக்கு ஆயிரத்தெட்டு கெண்டம் என்பதுபோல் நம்ம ஐயா நம்மை என்னபாடு படுத்துகிறாரப்பா. நமக்கெல்லாம் கரும்பாயிருக்கவேண்டியவர் விஷமாயிருக்கிறாரன்றோ? அந்த பிரேமநாதன் எங்கெங்கே போவானோ அங்கெல்லாம் நாமும் கூட்டங்கூட்டமாயிருந்து இலக்குவைக்கிறதே தொழிலாய்ப் போயிற்று. இவர்கிட்ட வந்ததுமுதல், நானுந்தான் பார்க்கிறேன், பணத்தை எண்ணுகிறதும் பத்திரத்தைப் பார்க்கிறதும் தொழிலாயிருக்கிறதே யொழிய ஒருநாளாவது கிரமமாக அத்யயனம் நடக்கவில்லே. போதாக்குறைக்கு இந்தவேலே ஒன்று வந்துவிட்டது. நம்ம ஐயாவுடைய பிள்ளைக்கு கல்யாணம் ஆகவில்லை யென்றுதான் நமக்கெல்லாம் தூக்கமில்லையாக்கும்? இந்தப்பயலென்ன அழகா? அல்லது புத்திசாலியா? நம்மை யென்னபாடுபடுத்துகிறான். இவனுக்காக நாமேன் பிரேமனை கண்ணிவைத்துப் பிடிக்கவேண்டும்? அவனென்ன நம்மவலையிற் சிக்குகிறானா? இவ்வளவுநாளாய்ப் பார்த்தோமே ஸமயம் கிடைத்ததா? இன்றைக்குத்தானென்ன அகப்பட்டுக்கொள்ளப்போகிறானா? குருவாயிற்றே என்று சொன்னபடி கேட்டால் ஐயா தலைக்குமேலே துள்ளுகிறார். நான் இனி உங்கள் கூட்டத்தில் சேருவதில்லை. நான் சொல்வதைக்கேட்டால் நலம் பெறுவீர்கள். இல்லையானால் எனக்கென்ன? நம்மபாட்டில் எல்லாரும் ஒருமித்து வேறு எங்கேயாவதுபோய் அத்யயனம் செய்தாலும் பிழைக்கலாம். திருணதூமாக்னி சிரௌதிகள் இருக்கிறாரன்றோ வடக்குத்தெருவில்? அவரிடம் ஸாமம் சொல்லுகிற பிள்ளைகளெல்லாம் எவ்வளவு நன்றாயிருக்கிறார்கள்'' என்று நமது பாஸ்கரவாத்யாரின் சிடனொருவன் ஒருநாட்காலையில் தன்னோடுள்ள தோழரிடம் சொல்ல அவர்களும் அவன் கருத்துக்கிணங்கி ஏதேதோ பே

சிக்கொண்டு அன்பிலுக்கு வடகிழக்கில் நின்றூர்கள். அத் தருண த்தில் நமது பிரேமன் அடுத்தாற்போலுள்ள அரியூரிலிருந்து வய ல்களின் வழியாய் ஸந்தோஷமாய் நடந்துவந்தான். அவன் பின் ஞேடு ஒரு வேலைக்காரன் ஒரு புதியதோண்டியில் கருப்பஞ்சாறு டன் வந்தான். அன்று காலையில் பிரேமன் அரியூர்வாயிற் செ ன்றவன் அங்கோர் இலுப்பைத் தோப்பில் கரும்பாலை ஆடக்கண்டு வேடிக்கை பார்த்துநிற்க இவன் பாநுசேகரருடைய குழந்தையெ ன்று கொஞ்சம் சாறு குடிக்கக்கொடுத்தார்கள் அவன் அதைக்குடி த்து அதிக மதுரமென்றறிந்து கலாவதிமுதலியவர்களும் அதைக் குடிக்கவேண்டுமென்றுள்ள ஆசையால் வீட்டுக்கு கொஞ்சம் அனு ப்பும்படி கேட்க அங்குள்ளவர்கள் பிரேமனுடன் கூட வந்த ஆளி ன்தலையில் அதை அனுப்பினூர்கள்.

பிரேமன் வருவதை தூரத்திலேயே கண்ட சேஷசாயி என்ப வன் " அந்தா வர்ராண்டா அந்தப்பயல்'' என்றான் ' வந்தால் வர ட்டுமே' என்றான் ஒருவன்.

' போங்கோடா குருத்துரோகிகளா' என்றான் சேஷசாயி.

' உதையடா அந்தப்பயலை'—' அடி ! மண்டையிலே'—' ஹத் துங்கோத்தாளே '—' ஒதக்யர ஒதயிலே ஒங் கம்மாத்தா போட்டின செவ்வண்ணையெல்லாம் கக்கவேண்டாமா'—' இத்தனைபேர் இருக் கரத்துலே ஒனக்குத்தான் வந்துட்டுதோ'—' வெகு குருத்ரோகத் தை கண்டவனேடா' என்று மூலைக்குமூலை சொல்லிக்கொண்டு சே ஷசாயியை மற்றப் பிள்ளைகளெல்லா மடித்தார்கள். அவனும் ' அடி பட்டகாய் குரைக்கும்' என்பதுபோல் கண்டபடி ஆத்தாளை அக் காளையென்று திட்டினன். மற்றப்பிள்ளைகளும் ' வசவுக்கோரடி மஹாதேவா' என்று சொல்லிக்கொண்டு மேலுமேலும் அடித்தார் கள்.

' ஏலே ! இருங்கோடா ! ஐயாவோடே இப்பவே சொல்லி ஒங் க வாயிலேல்லாம் ஈரவாரி மண்ணைத் தெள்ளிப்போடறேன்' என் று சொல்லிக்கொண்டோடினன் சேஷசாயி. அவனைப் பின்தொ டர்ந்துகொண்டே மற்றப் பிள்ளைகள் ஓடினூர்கள்.

இதற்குள் பிரேமன் கிட்டவந்துவிட்டபடியால் சேஷசாயி ஒரு மண்ணுங்கட்டியை யெடுத்து அவனை அடித்தான். அது சிறு வன் நெற்றியிற்பட்டு முழைத்துவிட்டது. பிரேமன் அதைப் பா ராட்டாமல் அவனை இறுகப் பிடித்துக்கொண்டு ' ஏனப்பா என்னை யடித்தாய்' என்றான்.

'விடரயா இல்லியாடா' என்று சொல்லி அவன் கையினின்றும் பலமுறை திமிறப் பார்த்தும் முடியாமல் வெடுக்கென்று பிரேமனைப் பல்லால் பிடுங்கினான். அது பிரேமனுக்கே மிகவும் கோபம் செய்ததாலும், அற்பர்களுடன் எவ்வளவுநாழி பேச்சென்று அவன் எண்ணியதாலும், தனக்கு சீக்கிரம் போகவேண்டுமென்று அவா இருந்ததாலும், தன்னுடன்வந்த வேலையாளிதைக் கண்டால் சேஷசாயியை யமலோகத்துக் கனுப்பிவிடுவானென்ற அச்சத்தாலும் சேஷசாயியைக் குடுமியைப்பற்றி ஆட்டி இழுத்து கீழேதள்ளி இடுப்பில் கொடுத்தான் ஒரு உதை. "குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி - கணமேனும் காத்தலரிது." என்ப துண்மையாகையால் அடிபொறாமல் கண்ணை உருட்டி விழித்துக்கொண்டு மண்ணைக்கவ்வினான் துஷ்டன். இதற்குள் கிட்டவந்த மற்றபிள்ளைகள் 'வேண்டும் தடியா வேண்டும்'? அடாதகாரியம் செய்தால் படாதபாடுபடும் 'துள்ளின மாடு பொதிசுமக்கும்' என்று மூலைக்கொருவனாய்ச் சொல்லிக்கொண்டு கீழே விழுந்தவனைப் பார்த்து நகைத்தார்கள். இதனிடையில் சற்றுதூரத்தில் வந்த வேலையாளைக் கூவிக்கொண்டு விரைவாய் நடந்து வீடுசேர்ந்தான் பிரேமநாதன். அங்கு:சென்றதும் ஒரு வெண்கலபாத்திரங் கொண்டுவரச்சொல்லி அதில் கொஞ்சங் கொஞ்சமாய் கருப்பஞ்சாற்றைவிட்டு ஒவ்வொருவருக்கும் குடிக்கக்கொடுத்தான். அந்தவீட்டு வேலைக்காரி அவன் கொடுத்ததையெல்லாம் ஒவ்வொருவருக்கும் கொண்டுபோய்க் கொடுக்க அவரவர்களும் குடித்து மிகுந்த களிப்புற்றார்கள். பிரேமனைக் கொண்டாடினார்கள். நன்றாயிருக்கிறதென்று சொன்னவர்களும் இதன்முன் எவ்வளவுதடவைகளில் யார் யார் கருப்பஞ்சாறு குடித்தகாலங்களில் என்னென்ன நடந்ததோ அதையெல்லாம் உற்சாகமாய் கதையாய்ச் சொன்னவர்களுமாய் யாவருமிருந்தார்கள். மீதியிருந்ததில் ஒருபங்கு கலாவதிக்கென்று கொடுத்தனுப்பிவிட்டு மீதியை அப்படியே தான் பருகிவிட்டு வேலையாளை இனிய மொழிகள்சொல்லி அனுப்பினான் பிரேமன். திடீரென்று கல்வந்து விழுந்தாற்போல் ஒரிரைச்சல் வீட்டுக்குள் உண்டாயிற்று. பெண்மக்கள் ஐயோ ஐயோ என்று கூச்சலிட்டார்கள். வீட்டுவேலைக்காரி உடம்பெல்லாம் வியர்த்துக்கொட்ட மார்கழிமாதப் பனியில் தொங்குகிழவர்களுக்கு [illegible]ங்குவதைப்போல் நடுக்கிக்கொண்டு - உதடு உலர - அடி பெயர்த்துவைக்கத் தள்ளாமல் உடம்பெல்லாம் ஆடி வெளிப்பக்கம் வந்து அங்கு உட்கார்ந்திருந்த பானுசேகரிடம் 'ஐயோ ஐயோ கலாவதீ! அம்மா கலாவதீ! கலாவதி மயக்கம் வாங்கோ' என்று உளறிவழிந்து சொல்லிவிட்டு திகைத்து நின்

றாள். ஏதோ ஆபத்துவந்ததென்று தீர்மானித்து ‘கருப்பஞ்சக்கை தொண்டையில் சிக்கியதோ’ என்றையப்பட்டு அவ்வூரிலுள்ள தன் அருமை நண்பரான ஒரு சிறந்த வைத்யனை விரைவாய் அழைத்துக்கொண்டு வரும்படி பிரேமனை அனுப்பிவிட்டு உள்ளே நுழைந்தார் பானுசேகரரும். அங்கே பேச்சுமூச்சற்று உடம்பெல்லாம் வியர்த்து காலெல்லாம் ஜில்லென்றாய் வாயால் நுரைதள்ளிக்கொண்டு கண் சுழலக்கிடந்தாள் கலாவதி. அவளைக் கண்டதும் பானுசேகரர் ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நின்று ஏதேதோ எண்ணி கண்ணால் நீருதிர்த்து தெய்வத்தைப் பலமுறை துதித்து பெருமூச்செறிந்து கொஞ்சந் திருநீரெடுத்துக் கையால் விமிர்ஜித்து தன் நெற்றியி லணிந்துகொண்டு என்ன ஆபத்து வந்தாலும் தவிர்க்கக்கூடிய தெய்வத்தின் பெயரை வாய்விட்டுப் பலமுறைசொல்லித் தன் அருமைப் பெண்குழந்தையின் தலைமுதல் கால்வரையில் தடவினார். “மீனவன் மேனியின் வெப்பை விடுவித்த என் கண்மணியே! முயலக னகற்றி கொல்லி மழவன் பெண்ணைக்காத்த பரமகுருவே! மருகலி லரவவிடந் தீர்த்த மறையோனே! ஈரமிலா என்னை உருச்செய்த இன்பமே” என்று என்னமோசொல்லித் துதித்து கண்ணை மூடிக்கொண்டு பானுசேகரர் மெய்ம்மறந்து உட்கார்ந்திருக்கும் வேளையில் அவர் நண்பர் தன் எல்லா வேலையையும் விட்டுவிட்டு மருந்துப்பையுடன் உள்ளே ஓடிவந்து கீழேகிடந்த சிறுமியை உற்றுநோக்கி வாயைப்பிளந்து நாக்கைத் தொட்டுப்பார்த்து கண்ணிமையைத் திறந்து அதன் மாறுதலை உணர்ந்துகொண்டு கையைப் பிடித்துப் பார்த்து இடதுபாகத்தில் கையைவைத்து பொட்டைத்தொட்டு உச்சந்தலையின் செய்கையை கவனித்து உள்ளங்கால் மறத்துப்போயிற்றென்று சொல்லி தன் பையைத் திறந்து ஏதோ ஒருதிரியை எடுத்து நெருப்பிற்கொளுத்தி உண்டான புகையை மூக்கிற்பிடித்து மறுபடி கையைப் பையில்வைத்து ஒரு கூழாங்கல்லைப்போன்ற கட்டியை எடுத்து கொஞ்சம் முலைப்பால் தருவித்து அதில் உரைத்து சிறுமியின் நாக்கில் தடவினார். உடனே பெருமூச்சுவிட்டுக்கொண்டு புரண்டாள் கலாவதி.

“பிழைத்தாளப்பா இந்தப்பூட்டுக்கு - நல்லவேளையாய்ப் பிழைத்தாளப்பா” என்றார் வைத்யர். அந்தச் சொல் காதில்விழச் சற்று தெளிந்து பானுசேகரர் கண்ணைவிழித்தார், தன் நண்பரைக்கண்டார் கட்டிக்கொண்டார், பேச வாயெழாமல் தேம்பித் தேம்பி யழுதார். “என்னப்பா பைத்யமாயிருக்கிறாய் ஏது? நீகூட இப்படி மனம்கலங்குகிறாய், உன்னை மஹா மேன்மையாய் எண்ணியிருந்தேனே, எவ்வளவோ ஆபத்துவந்தபோதெல்லாம் மனங்கலங்காதி

ருந்த நீகூடவா பைத்யம்பிடித்துப்போயினே ? நல்ல வேளையா தான் நல்லதருணத்தில் சொல்லியனுப்பிவிட்டாய் சற்றுத் தப்பினால் ஆபத்துவந்திருக்கும் தடையில்லை. நீ நல்ல தெய்வபக்தனானபடியால் உன்னைக் காப்பாற்றினார் கடவுளும். அது கிடக்கட்டும் நம்மகுட்டிக்கு யார் என்ன கொடுத்தார்கள்" என்றார் வைத்யரும்.

பானுசேகரரும் உடனே "நம்ம குழந்தை பிரேமநாதன் இன்று அரியூருக்குப்போயிருந்தான் கருப்பஞ்சாறு கொணர்ந்தான். எல்லாருமாய்க் குடித்தோம். அவனுக்கும் கொடுத்தோம். நாங்களெல்லாம் பருகி மீந்ததை நம்ம சிறுவனும் குடித்தான்" என்றார்.

"அப்படியா ? கொண்டுவாப்பா உன்கையை" என்று விறுவிறுப்புடன் அவனுடைய வலது கையையிழுத்து அதின் முன்பக்க மணிக்கட்டில் தன் வலதுகை மூன்று நடுவிரல்களையும் வைத்துப் பார்த்து அதில் யாதொரு குற்றமில்லையென்று கண்டு ஸந்தோஷித்து கருப்பஞ்சாறு எதில் கொண்டுவந்தானென்று கேட்டார். உடனே பிரேமனும் தான் கொண்டுவந்த தோண்டியைக் காட்டினான். அதை நன்றாயுற்றுப்பார்த்து அதில் ஒரு கெடுதலுமில்லையென்று கண்டு எதால் குடித்தானென்று கேட்டு பிரேமனொழிய மற்றவர்கள் வெண்கலத்தில் அருந்தியசெய்தி தெரிந்துகொண்டு அதைப்பார்க்க ஆசைப்பட அங்கிருந்த வேலைக்காரி உடனே சென்று கொண்டுவர அதை நன்றாய் உற்று நோக்கி வேலைக்காரியே ஒவ்வொருவருக்கும் கொண்டுபோய்க் கொடுத்த செய்தியும் தெரிந்ததால் உடனே ஓலையும் எழுத்தாணியுமெடுத்து நன்றாய் ஓலையை வாரி தலையையும் கடையையும் துண்டித் தெறிந்து, முதலில் ஒரு பெருந்துண்டு அதில் நறுக்கி அத்துண்டில் ஏதோ கிறுகிறு என்று எழுதி மீந்த ஓலைத்துண்டை சுருள்செய்து அதனுள், எழுதிய ஓலையைப் புகுவித்து மேல்விலாசம் எழுதி தன் சீடப்பிள்ளையிடம் கொடுத்து "ஒரு நொடியில்வா" என்றார். பிறகு "என்னமோ அப்பா பெருமோசமாயிருக்கிறது, உள்ளுக்குள்ளேயே கள்ளனிருக்கிறான், யாரோ விஷம் கலந்துவிட்டார்கள் கருப்பஞ்சாற்றில்" என்று வைத்யர் சொல்லிக்கொண்டே வர, வேலைக்காரி, "ஈந்தப் புள்ளயே சேஞ்சிருக்கோணும் அவன் திருட்டுத்தனத்தை நான் அப்பவேகண்டேட்டேன். முழிக்கரத்தைப் பாரு கொறவனாட்டமா. இல்லாபோனா நம்ம கலாவதிக்கு ரெண்டாந்தரம் என்னத்துக்கு குடுக்கரான். தான்மட்டும் தோண்டியோடே குடிப்பானே ? கள்ளப்பயல். அவனிருக்கற எடம் எட்டூருவேகுமே, அந்த வாழாதேபோவான் நம்ம கொழந்தக்கி நமனாய் இருந்தான். இப்பேர்ப்பட்ட பாவிகளை வீட்டில் வச்சுக்குவாளா ? கழுதக்கி ஒவகா

னுசெய்தா காலாலே ஒதக்குமுன்னுப்பிட்டு விச்சாதான் சொல்ராளா லோகத்துலே. அவனைக் குழியவெட்டி யெறக்கினாலும் பாவமில்லை. நோண்டு முழியை! தடிக்கட்டேலே போவானை. என்ன பண்ணினானோ ஒத்தச்சு வெரட்டிவிட்டா அவன் சித்தம்மை! இல்லாப்போனா ஓடிப்போச்சே பாவ முன்னு அவனப்பனாவது இந்த மண்ணாபோரவனை தேடிக்கிண்டு வரமாட்டானா? கூத்தாட்டியும் கொரங்கோட்டியுந்தானே அவனுக்குத் தோழன். அன்னிக்கெல்லாம் நான் முடடிக்கிண்டேனே அமமா ஆரு கேட்டா? என்று மூச்சுவிடாமல் அவனை நிந்தித்துவிட்டு, “அம்மா பொழச்சயே இந்தமட்டுக்கும். அந்த பிராமணன்வந்து உசிர்ப்பிச்சை போட்டு எங்களுக்கும் மூக்குவச்சார் எங்கண்ணே! நாங்க என்னென்னமோ எண்ணிக்கிண் டிருக்கிறபோது எல்லார் வாயிலேயும் மண்ணைப் போட்ரத்துக்கு இந்த இடி இடிச்சுதே. என் உத்தமிபெத்த ரத்தினமே, என் பத்தினிபெத்த பால்கொடமே, தருமதேவதையே, ஒரு மயிர்க்கடை தப்பினால் எல்லார் வாயிலயும் மண்ணைப் போட்டு நீயும் மண்ணைவாரிப் போட்டுக்கொண்டிருப்பையே” என்று சொல்லி அழுதாள். இவையொன்றும் தெரியாமல் மயங்கிமயங்கித் தெளிந்துகொண்டுகிடந்தாள் கலாவதி. நின்ற இடத்தில் மலைத்து நின்றாள் அவள்தாயார். “ஒருநாளும் இவன் இப்படிச் செய்யவேமாட்டான் ஏதோ விபரீதமாயிருக்கிறது, ஒன்றும் வெளியாகவில்லை, எல்லாம் பார்த்துக்கொள்ளுவோம்” என்றார் பானுசேகரர். இந்தச் செய்திதெரிந்து ஓடிவந்த அண்டை அயலார்கள் தங்களுக்குத் தோன்றியபடி பிரேமனைத் திட்டினார்கள். முகத்திலிடித்தார்கள். மயிரைப்பிடித்திழுத்தார்கள். காறி உமிழ்ந்தார்கள். கன்னத்தி லறைந்தார்கள். எசினார்கள், கலாவதியைக் கட்டிக்கொள்ளவந்தார்கள். வைத்யரோ இதிலெல்லாம் தன்மனதைச் செல்லவிடாது யாரையும் கலாவதியண்டை போகவிடாது அவளைப்பாதுகாத்துக்கொண்டு நின்றார். வீட்டுவேலைக்காரி அங்கு வந்தவர்களிடமெல்லாம் பிரேமனைப்பற்றி கண்டபடி திட்டுவாள். அவன்செய்யாத தப்பிதங்களையெல்லாம் அவன்மீது சுமர்த்துவாள். தன்னைப்பற்றி புகழ்ந்துகொள்ளுவாள். இந்த அமளிக்கு நடுவில் பிரேமநாதன் என்னசெய்தானென்று தெரிந்துகொள்ள இதைவாசிக்கும் யாவருக்கும் விருப்பமுண்டாகலாம். அதைச்சொல்ல நமக்கு மனம்நடுங்குகின்றது. இதுவரையில் நாம்சொல்லிவந்த விஷயங்களைப் படித்தபேர்களுக்கு அவனிடத்தில் எள்ளளவு ஐயமும் உண்டாகாது. ஆனால் எது எப்படியோ போகப் போகத் தெரியவரும். அந்தவேளையில் பிரேமன்கதி யென்னமாயிருந்த தென்ப

தைமட்டும் சற்றுச் சொல்லுகிறோம் "ஐயோ ! நாமென்செய்வோம் நம்மீது இந்தப் பழிவந்துவிடுமோ" என்று எண்ணுவான் ஒருபோது. 'நம்ம கலாவதிக்குவந்த ஆபத்து தப்பியதே' என்று கடவுளை மனதால் துதிப்பான் சற்றுநேரம். 'நமது கதி யென்னவாகுமோ' என நினைப்பான் ஒருகாலம். 'நமது பிறப்பின் காலமகிமையே மகிமை ! இப்படியும் அவதிப்படுவாருண்டா ?' என்று மனம் கசிவான் சற்றுநேரம். 'நமது குருநாதர் கிருபையால் எல்லாம் நன்மையாகவே முடியும்' என்று உரம்கொள்வான் ஓர்பொழுது 'இதுவெல்லாம் நம்மால் பொறுக்கமுடியாது' என்றுசற்று வருந்துவான் 'பண்டமோரிடம் பழி பத்திடம்' என்பார்களே அதுபோல 'யாரோ ஏதோசெய்துவிட்டுப்போக நம்மை இடிக்கிறார்களெல்லாரும்' என்றுமயங்குவான் ஒருகாலம். 'இந்த அடுப்பில் பாலைவைத்தேன் இங்கேயும் வந்தது பூனை' என்பதுபோல் ஊரிலிருந்த ஒரு சிற்றம்மைக்கு தப்பி ஓடிவந்த இந்த இடத்தில் ஓராயிரம் சிற்றம்மைகளாய்ப் பிடுங்குகின்றார்களே தெய்வமே ஏ' என்று தேம்பித் தேம்பி அழுவான் ஒருசமயம். இஃதெல்லாம் கனவாயிருந்தா லாகாதா ? இவையெல்லாம் தொலைந்து விழிப்பு வரலாகாதா ? என்று ஆசைப்பட் டுருகுவான் சற்றுநேரம். 'திடீரென்று இப் பதியைவிட்டு எங்கேயாவது ஓடிவிடுவோமென்றால் அதுவே நம்மிடத்தில் ஐயத்தை எண்ணச்செய்யும். மற்றவர்களிட மகப்படாமல் இருக்கவும் வழிகிடையாது. உயிர் துறப்போமென்றால் இன்னுங் கெடுதலாகத்தான் என்ன வைபவம் நமக்குவருமோ ஏதோ யாரறிவார். நாமெண்ணியுள்ள எண்ணமென்ன ! உலகமுள்ள நிலையென்ன ! நமக்குவந்தபேரவதியென்ன ! ஹா ! தெய்வமே ஏ ஏ ! இப்படி அவதிப்பட்டு கொடிக்குநொடி வருந்தியழும் எனக்கேன் தேசாபிமானம், நம்மவர்களென்னு மன்பு, நம்மபாஷை யென்னு மாசை, நம்மமதமென்னும் கசிவுமுதலிய தந்தாய் ! நல்ல நிலையிலுள்ள எவ்வளவோபேர்க ளிருக்க இந்த அழுகைமூஞ்சி மூடனுக்கா நல்ல எண்ணங்கள் உண்டாகவேண்டும் ! நான்குபுறத்திலும் இடரலடைந்து ஒரு வயிற்றுக்கஞ்சிக்குக்கூட கதியில்லாமல் புல்லாந்தரையைவிட வேறு படுக்கும் இடமாவது இடதுகையைவிட வேறு தலையணையாவது ஸொந்தமாயில்லாமல், எவ்வளவோபேர் இல்லாத் தப்பிதங்களை ஏற்றி ஏசி, இடித்து அடித்து திட்டும் நிலையில் தத்தளிக்கும் என்போலியர்களுக்கு கொடுத்துள்ள தேசாபிமானம் முதலியவற்றை நல்ல பொருளும் செல்வாக்கும் நிறைந்த இன்பமுமுள்ளவர்களுக்கு கொடுத்தாலாகாதா ? தெய்வமே ! ஹாஹா !!' என்றெண்ணி அலறுவான் சிறுபோழ்து. அவ்வெண்ணங்களுக்குத் தக்கபடி வெளியாகும் முகக்குறிகளை வேறுவிதமாகப் பொருள்படுத்தி மற்

றையபெண்டுகளுக்கு சொல்லிக்காட்டுவாள் அவ்வீட்டு வேலைக்காரி.

இங்கிப்படி அல்லோலகல்லோலப்பட்டுக் கிடக்க திடீரென்று வைத்யருடைய சீடப்பிள்ளையும் அரசாங்கத்துச் சேவகர்கள் நால்வருமாய் வந்து அந்த வீட்டுக்குள் நுழைந்து அங்குள்ளவர்களை அமர்த்தி நடந்ததென்னென்று வினவித் தெரிந்துகொண்டு வீடுமுழுவதும் சோதித்தார்கள். அப்படிச் செய்துவரும்போது பிரேமனுக்கென்று பாநுசேகரர் கொடுத்திருந்த பெட்டிமட்டும் பூட்டியிருந்ததால் அதின் திறவுகோலை சேவகர்கள் கேட்க பிரேமன் தன்னிடமிருந்த ஒரு கொத்து திறவுகோல்களைக் கொடுத்தான். அதில் அவன் பெட்டியைச்சேர்ந்தது மட்டும் காணவில்லை. ஆதலால் சேவகர்கள் அந்தப் பெட்டியை உடைக்கத்தொடங்கினார்கள். அது நல்லபெட்டியாகையாலும் கலாவதி தன் கையால் பிரேமனுக்குக் கொடுத்த ஒன்றாதலாலும் அதை உடைக்கவேண்டாமென்று மன்றாடினான் சிறுவன். "பாரு! திருட்டுக்கட்டேலேபோவே! எங்கே தப்பினேடா நீ வாழாதபோக, இத்தனை தொரகுவல் இருக்கரபோது ஒன்னுதுக்கு மட்டும் எங்கேந்தோ கள்ளன் வந்துட்டானே" என்றாள் அவ்வீட்டு வேலைக்காரி. சேவகர்கள் அவளை அதட்டி விரட்டிவிட்டு பெட்டியை உடைத்தார்கள். அதில் ஒரு மாட்டுக் கொம்புச் சிமிழ் கண்டெடுத்தார்கள். அது மேல்மூடி திறந்து கிடந்தது. அதனுள் கொடியவிடம் வைத்திருந்தது. அதை வைத்யருக்குக் காட்டினார்கள் உடனே அவர் அது மிகவும் கொடிய நஞ்சென்றும் அதேநஞ்சுதான் கருப்பஞ்சாற்றில் கலந்திருந்ததென்றும் சொன்னார். ஆதலால் சிறுவனைப்பிடித்து அவன் கையை பின்கட்டுமுறையாகக் கட்டி கரகரவென் றிழுத்துச்சென்றார்கள். தன்பெட்டியிலேயே விடமிருந்ததும் அந்தப் பெட்டித்திறவுகோல் மட்டும காணமற்போனதும் மூலைக்குமூலை இழிஜனங்கள் முதலாய்த் தன்னை ஏசுவதும் தான் உலகத்துக்குச் செய்யப்போவதாக எண்ணியிருந்த எண்ணங்களெல்லாம் ஒன்றொன்றாய் ஞாபகத்துக்கு வருவதும், தான் யாரிடத்தில் அதிக உறவு கொண்டாடினானே, யாருக்குப் பலவித நல்லறிவை ஊட்டினானே, யாரைவிட்டெப்போதும் பிரியாதிருந்தானே, யாருடன் கூடவிருந்து போதுபோக்குவதே இன்பமாய் நினைத்தானே அவளையே தான் கொல்ல நினைத்ததாக ஏற்பட்டதும், தன்னை யார் குழந்தைபோல் பாராட்டினார்களோ அவர்களே வெறுக்கும்படியானதும், தான் கனவிலும் எண்ணியிராத கடும்பழி தன்மீது சுமந்ததும், நல்ல குணமுடைய வைத்யர் தாம் செய்யப்போவது இன்னதென்று வெளியிடாமல்

திடீரென்று அரசாங்கத்துக்குத் தெரிவித்து சேவகர்களை வருவித்து யமகிங்கரர்கள் போன்ற அவர்கள் சற்றுமிரக்கமின்றி தன்னைக் கட்டி இழுத்துச் செல்ல ஒன்றும் பேசாமல் வாயை மூடிக்கொண்டிருப்பதும் ஒன்றன்பின் ஒன்றாய் நமது பிரேமநாதனுடைய மனத்தில் தோன்றி அவனைத் தாமரையிலை நீர்போல் தத்தளிக்கச்செய்தது. ஆதலால் சேவகர்க ளிழுத்துச்செல்லும்போது “நீங்களுமா என்னைக் கைவிட்டீர்கள்” என்னும் முகக்குறியுடன் பானுசேகரரைப்பார்த்தான். அவரோ பைத்யம்பிடித்தவரைப் போல் ஒன்றுந் தெரியாமல் விழித்தார்; மிக நல்லவனாக இருந்த சிறுவன் ஒரு நொடியில் பெருங்குற்றவாளியாய் நெஞ்சால் நினைக்க முடியாத கொடுஞ்செயலில் தலைப்பட்டு எல்லார்க்குந் தீயனாக ஆனது அவர் புத்தியை மாற்றிவிட்டதால் தான் அனுபவிக்கும் அனுபவம் உண்மையோ அல்லது வீண்தோற்றமோ என்றெண்ணி தலை மயக்கேறியது. அவர் மனைவியோ தன் கணவனே தான் போற்ற வேண்டிய பெரும்பொருளென் றெண்ணி நடப்பவளாக நாம் முந்தியே சொல்லியுள்ளபடியே பானுசேகரர் இப்படி மயங்கி உன்மத்தர்போ லிருப்பதைக் கண்டு வருந்தி, தன்பெண் எவ்வாறாயினள் என்றுகூடப் பாராமல், தான் தன் குழந்தைபோலவே நடத்திவந்த பிரேமநாதனை யமபடாள்போன்ற சேவகர்கள் இழுத்துச் செல்வதையும் உணராமல் அவரிடம்போய் அவரை மெல்லப் பிடித்துக் கூட்டிக்கொண்டு உள்ளே சென்றாள். அவரும் பிரேமனைத் திரும்பிப் பார்த்துக்கொண்டு அவன் தலை மறையும்வரையில் ஊமை போலும் பித்தன்போலு மிருந்து பிற்கு தன் உயிரே உடலிலிருந்து போய்விட்டதுபோல் சற்றுநேரம் அசைவறக் கிடந்து பின் தெளிந்து “எஎ! பிரேமா! எங்கு சென்றாயடா அப்பா!” என்றார். அங்குநின்ற வைத்யர் “ஏ பானு! நீ ஒருநாழிகைவரை ஒன்றும் யாருடனும் பேசக்கூடாது. உன்பெண்டாட்டிமட்டும் உன்னண்டைநின்று விசிறிக்கொண்டிருக்கட்டும். அம்மா நீயும் ஒன்றும் பேசாதே. ஏதாவது அவன் பேசவந்தாலும் நீ வாயை மூடிக்கொண்டிரு. இல்லாமற்போனால் பைத்யமாய்ப்போகும். பிறகுதிருந்துவது மிகவருத்தப்படும் கலாவதியைப்பற்றி ஒரு விசாரமும் வேண்டாம். செத்தேபோயிருப்பாள். நம்முடைய அதிர்ஷ்டம் தப்பினாள். நாளைக்கெல்லாம் ஸரியாய்ப்போய்விடும். அவளிடம் நாளை முழுவதும் யாரும் பேசாதேயுங்கள். மறுநாள் என்னபேசினாலும் அச்சமில்லை” என்று சொல்லிவிட்டு தன் வீட்டுக்குப்போகப் புறப்பட்டார். பானுசேகரரோ, “பிரேமன்?” என்றார். அந்தப் பரிதாபக்குறலைக் கேட்டதும் கண்ணீர் ததும்பிய வைத்யர் “அப்பா பயப்

படாதே. என்னமோ பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்தது. எல்லாம் நானிருந்து இனிமேலாவது ஜாக்ரதையாய் பார்த்துக்கொள்ளுவேன். நாளை அஸ்தமனத்துக்குள் இங்கே கூட்டிக்கொண்டு நல்லபடித்தான் வருவேன். நீ அதுவரை யாருடனும் எதுவும் அதிகமாய்ப் பேசாதே" என்று சொல்லிப்போய்விட்டார். வீட்டு வேலைக்காரியோ தன் வேலைகளையெல்லாம் செய்து முடித்துவிட்டு கலாவதியண்டையில் வந்தாள் கலாவதியின் தாயார் "அடீ! அவளண்டையிற் போகாதே! குழந்தை தூங்கட்டும்" என்றாள்.

"பாத்தேளாம்மா அந்தப்பயசேஞ்சகாரியத்தை. இந்தக்காலத்துலயே ஒவகாரம் சேஞ்சா அவகாரமாத்தான் முடியரது. என்னப்புடிச்ச அதுஷ்டம் நல்லவேளையா முடிஞ்சுது. அவன் பொட்டீலே மட்டும் வெஷம் ஆப்படாபோனா என்னக்கூடத்தானே எல்லாரும் சொல்லுவா" என்றாள் சேஷி.

"அடீ! நீ இனிமேல் அந்தக் குழந்தையைப்பற்றி என்கிட்டப் பேசாதே! புறத்தியாரைப்பற்றி என்னண்டை ஒன்றும் சொல்லக்கூடாதென்று எவ்வளவுதடவைதான் உனக்குச் சொல்லட்டும் நீ கேட்கிறதுகிடையாது. பிரேமன் நம்ம வீட்டிலிருந்தவரையில் நம்ம குழந்தைபோலவே இருந்தான், அவனால் யாருக்கும் இடஞ்சலும் கிடையாது. கலாவதியும் நன்றாய் அவனிடம் எவ்வளவோ தெரிந்துகொண்டாள். நம்ம யஜமானனும் அவனை எவ்வளவோ மேன்மையாய் எண்ணிக்கொண்டிருந்தார், எதோ போதாதவேளை அவன்மேல் குற்றம் சுமர்ந்தது. எல்லார்க்கும் பொதுவாய் தெய்வமொன்றுண்டு. தன்னாலே திருடன் அகப்படுவான் பார்த்துக்கொள்வோம்" என்றாள் கலாவதியின் தாய்.

"என்னம்மா நீங்கள் சொல்லரத்தைப் பாத்தா என்னமோ எம்பேருலே சந்தேகப்பட்டாப்போலயே இருக்கே. சொல்லாமச் சொல்ரயள் எனக்குத் தெரியாதா" என்றாள் சேஷி.

"குற்றமுள்ள நெஞ்சம் குறுகுறென்னும் என்பதுபோலே நீ என்னடீ சொல்லவருகிறாய். நீகூட அந்த விஷச்செய்தியில் கலந்தவளோ" என்றாள் கலாவதியின் தாய்.

"இத்தன்னாளா ஒங்காத்துலே ஒழச்சத்துக்கு இந்தப்பேர்தான் கொரச்சல் போகட்டும் போங்கோ. நான் அசடுதானே எதாவது ஒளரிவக்யரேன் அது சுத்தமாவந்து முடியரது. என் தலேலே இழுத்தம்மா. தேமேன்னு வாயெ மூடிக்கிண்டிருக்கலாமோன்னோ?" என்றாள் சேஷி.

இங்கிப்படியிருக்க பிரேமநாதனை இழுத்துச்சென்ற சேவகர்கள் போகும்வழியில் அவனை கண்டபடி திட்டினார்கள். அவனே விஷம் கலந்தானென்று ஒப்புக்கொள்ளும்படி அடித்தார்கள் சிறுவனுக்கு இன்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான். பிறகு 'தலைக்குமேலோடிய ஜலம் சாணானாலென்ன முழமானாலென்ன' என்று எண்ணிக்கொண்டு துணிவுடன் கைக்கட்டை அறுத்துக்கொண்டு தன்னை வருந்திய சேவகர்களை நன்றாய் அடித்து உறுக்கினான். அடிபட்டு அடங்கிய சேவகர்கள் அவனை அவ்வூரின் அதிகாரியிடம் கொண்டுபோய்விட்டார்கள். தங்களை யடித்தசெய்தியையும் விஷமிட்ட செய்தியையும் சொன்னார்கள். அந்த அதிகாரிக்குக் கோபம் வந்து உடனே விசாரிக்கத் தீர்மானித்தான். இந்தவிஷயம் தெரிந்துகொண்ட அநேகர்கள் நியாயஸ்தலத்துக்கு வந்து கூடினார்கள். சிலர் வேடிக்கைபார்ப்பதற்கும், சிலர் பிரேமனிடத்துள்ள பிரியத்தால் விசாரத்துடனும், சிலர் வம்புக்கு ஆசைப்பட்டும், சிலர் நியாயாதிபதியின் செய்கைகளை கவனிப்பதற்கும், சிலர் தமது நண்பர்க ளழைத்ததாலும், சிலர் தமது நடை உடைகளை மற்றவர்களறிந்து அதனால் தம்மைப் புகழ்ந்து பேசுவதற்கும், சிலர் யார்யார் வந்திருக்கிறார்களென் றறிவதற்கும், சிலர் யாரையாவது மோசஞ்செய்து தட்டிப்பறித்துக்கொள்ளலாமென்றும், சிலர் தாம் வந்த செய்தியை மற்றவர்களுக்குச் சொல்லி தமக்கும் மற்றவர்களுக்கும் வித்யாஸ முண்டென்று மறுநாள் பெருமைபாராட்டுவதற்குமாய் அங்கு வந்து நியாயஸ்தலத்தைச் சுற்றி நின்றுகொண்டு கசபிசவெனப் பேசிக்கொண்டிருந்தார்கள். அண்டை அயல் கிராமங்களிலிருந்தும் பலர் இந்த வேடிக்கை பார்க்க வந்துகொண்டிருந்தார்கள்.

நியாயஸ்தலமோ ஊருக்குக் கிழக்கில் கொள்ளிடத்தின் ஓரத்தில் மேற்குநோக்கி கட்டியிருந்த ஒரு கருங்கல் மண்டபம். அதைச் சுற்றி நான்கு புறங்களிலும் நீண்டு அகண்ட திண்ணைகளுண்டு. அவற்றிலிருந்து பார்த்தால் உள்ளேநடப்பதெல்லாம் தெரியும்படிக்கும், உள்ளே இருப்பவர்க்கு வேண்டிய அளவு வெளிச்சமும் காற்றும் கிடைக்கும்படிக்கும் அந்த மண்டபத்தில் நான்குபுறங்களிலும் வாசிற்படிகளும் ஜன்னல்களும் வைத்திருந்தன. இவற்றையெல்லாம் சுற்றி பலவிதப் பூஞ்செடிகளும், கமுகு, மகிழ், மந்தாரை, கொன்றை, வேம்புமுதலிய பல மரங்களும் வைத்திருந்ததால் எந்தக்காலத்திலும் குளிர்ந்த வாஸனையுள்ள காற்று அடித்துக்கொண்டிருக்கும். மண்டபத்தின் நடுவில் மேற்குநோக்கி ஒரு சிறு சித்திர

மண்டபம். அது நான்கு மரக்கால்களின் மேற்கட்டிய சிறுசிகரம் வைத்த மண்டபம். கால்களிலெல்லாம் கொடிகள்போலவும் செடிகள் போலவும் பலவித யானை, குதிரை, ஒட்டை, யுத்தவீரர் முதலிய உருக்கள்போலவும் பலவித வர்ணங்களால் எழுதியிருக்கும். அந்தச் சித்திரமண்டபத்தின்மேல் அழகிய விலையுயர்ந்த கம்பளம் விரித்திருக்கும். அதின்மேல் பலவித வர்ணங்களுடன் சித்திரமெழுதிய ஓர் சிங்காஸனமுண்டு அது இக்காலத்திய நாற்காலிகளைப்போலிராது. அதின்கால்கள் சிங்கத்தின் கால்களைப்போலவே இருக்கும். அந்தக்கால்களின்மேல் இரண்டுமுழச் சதுரப்பலகை தைத்து பலகையின் விளிம்புகளிலெல்லாம் தங்கமலாம் பூசி உட்பக்கத்தில் சிறந்த பட்டுமெத்தை தைத்துவைத்திருக்கும். அந்தச்சிங்காதனத்துக்கடுத்தாற்போல் சற்றுச் சிறிய ஓர் மணையிருக்கும். உயர்ந்த ஆசனத்தில் அதிகாரியும் மணையில் அவனுடைய முதல்மந்திரியும் இருப்பார்கள். இந்த அதிகாரி சோழராஜனுக்குக் கீழ்ப்பட்டவனும் அன்பில் முதலிய பத்து கிராமங்களுக்கு மேல்விசாரணைக்காரனும் ஒரு சிறிய சேனைக்குத் தலைவனுமா யிருந்தான். இந்த சித்திரமண்டபத்தின் முன்பக்கத்தில் இரண்டு நீண்ட மணைகளில் பக்கத்துக்கு ஆறுபேர்வீதம் இரண்டு வரிசையாக மந்திரிகள் உட்கார்ந்திருப்பார்கள். அவர்களுக்கும் அந்த மண்டபத்துக்கும் இடையில் சிங்கமுகம் வைத்த இரண்டு வெள்ளித்தடிபிடித்த சேவகர்கள் பக்கத்துக்கொருவராய் நிற்பார்கள். இவர்களெல்லாருக்கும் வெளியில் ஒரு சேவகன் நீண்ட மூங்கிற்கழி ஒன்று கையில் பிடித்துக்கொண்டு அடிக்கடி எழுந்து "ஸத்து! ஸத்து! பேசாதே! பேசாதே!" என்று சொல்லுவான்.

இவ்வளவு இலக்கணங்களமைந்த நியாயமன்றில் பிரேமனைக் கொண்டுபோய்நிறுத்தியதும் அவனுக்கு அச்சம் ஒருபக்கமும் அழுகை ஒருபக்கமும் வெட்க மொருபக்கமு மதிகரித்து இன்ன செய்வதென்று தோன்ருமல் திகைத்துக் கலங்கினன். அதிகாரி தன் இடதுகாலைக் கீழே தொங்கவிட்டுக்கொண்டு அதன்மேல் வலதுகால் பாதம்படும்படி அக்காலைமடக்கிப்போட்டுகொண்டு அப்பாதத்தை கிடுகிடென்ருட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனுடைய பார்வையும் கறுத்தபிடிமீசையும் அவனுடன் என்னளும் பழகியவர்களையுங்கூட பயப்படச் செய்யுமென்ருல் பிரேமன் விஷயத்தில் கேட்பானேன். ஆதலால், "அடே பயலே உன்பெட்டியில் விஷமிருந்ததுண்டா" என்று அவன் கேட்டபோது உடம்பில் உயிர் இருக்கிறதோ இல்லையோ என்று சொல்லும்வண்ணம் ஒடு

ங்கிப்போனான் பிரேமன். அதிகாரியோ தன்னாலானவரையில் நயமாகவும் பயமாகவும் யுக்தியாகவும் சிரிக்கும்படியாகவும் உள்ள பலகேள்விகள் கேட்டான். ஒன்றற்கும் பதிலைக்காணோம்.

“அடா நீ ஊமையா?” என்றான். “உன்னை அடிப்பேன் இந்தபார் இதோபார்” என்று அடித்துவிடுபவன்போல் ஜாடைகள் செய்தான். “அடே இவன் கையில் கிட்டிபோடுங்களடா” என்று கண்ணைச்சிமிட்டிக்கொண்டு மற்றவர்களைப்பார்த்துச் சொன்னான். என்னசொல்லியும் சிறுவன் வாய்திறக்கும்வழியைக்காணோம். சேவகர்களையும் வைத்யனையும் விசாரித்துப்பார்த்தான், சிறுவன்மீது குற்றமிருப்பதாக நன்றாய் வெளியாயிற்று. ஆனாலும் உண்மைவிளங்கவில்லையென்று தன் மந்திரிகளைப்பார்த்தான். அவர்களும் ஒன்றும் தெரியாதவர்களாய் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். “ஹாம் ஹ்ம் ஹ்ம். அவடத்துக்கே முடியாதகாரியம் எங்களாலேயா ஆகும்” என்றும் “இதுவரையில் இந்தமாதிரி பார்த்ததில்லை” என்றும், “இவ்வளவுதுணிவுபார்த்ததில்லை” என்றும், “கிரமப்படி முடிவுசெய்வதுதான் நியாயம்” என்றும், மூலைக்கொருவிதம் சொன்னார்கள்.

இப்படியிருக்கும் வேளையில் எழெட்டு சீடர்களுடனும் பாஸ்கரவாத்யார் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு நியாயஸ்தலத்தண்டை வந்து “ஐயோ கேள்விமுறையில்லையா! அட கூ கூ! அநியாயமே! அநியாயமே!” என்று கதறினார். வெளிப்பக்கத்துச்சேவகன் ‘ஸத்து!’ என்றான். நியாயாதிபதி ‘என்ன கூச்சல்? இங்கேவரச்சொல்லு’ என்றான். தடபிடலாய் வர்த்யாரும் சீடர்களும் உள்ளேவந்து தமது மேல்வஸ்திரங்களை இடுப்பில்கட்டிக்கொண்டு கைகட்டி வாய்பொத்தி கால்களைக்கூட்டிவைத்துக்கொண்டு ஒடுங்கிவணங்கி நின்றார்கள். ‘என் கூச்சல்போடுகிறீர்கள்’ என்று அதிபதிகேட்க “ஐயா என்னசொல்ரேள் ஐயோ போச்சே அநியாயமாய்ப் போச்சே! வீரா வீரா! அடேவீரா! நானென்னடா பண்ணுவேன்? என் அருமையானசிஷா! ஐயையோ” என்று கூச்சலிட்டார் வாத்யார்.

அதிபன்—“பதறாமல்சொல்லுங்கள். அஞ்சவேண்டாம்”.

வாத்—“ஐயா என்னசொல்லுவேன்! என்வீரபாகுவைப்பார்க்கப்போரேனா? ஐயோ சொத்துப்போவிட்டானே ஐயையோ ஐயையோ”.

முதல் மந்திரி உடனே—“எப்படி இறந்தான்” என்றான்.

வாத்—“ஆரோ பிரேமனும். நாசமாப்போரபய, அவன் என்

சிஷ்யனுக்கு யமனாவந்தானய்யா. ஐயோவீரா! ஐயையோ ஐயையோ!”

ஊராள்வோன்—“இதேது புதுமை இந்தச்சிறுவன் மஹா துஷ்டன்போலிருக்கிறதே! ஓய் வாத்தியாரே. நன்றாய் நிறுத்தி பதறாமல் சொல்லும்.”

வாத்—“அந்தப்ரேமனுங்கரவன் என்னமோ வெஷம்வாங்கிண்டு போனானாம். எங்கவீரபாகு அவனைப்பாத்து என்னடா கொண்டுபோரேன்னானாம். பிரேமன் சொல்லமாட்டேன் நோக்கென்னடா என்னானாம். ரெண்டு பேருக்கும் சண்டையாச்சாம். வெஷம் கீழே சிமிழோடே விழுந்துதாம். என் சிஷ்யனுக்கு வெஷப்பரிக்ஷை நன்னாத்தெரியுமே! ஐயோ செத்துப்போவிட்டானே! ஐயையோ ஆய்யய்யோ! அடா டா டா டா டா டா”.

ஒரு மந்திரி—“முழுவதும் சொல்லும் பார்ப்போம்.”

வாத்—“நல்ல உசிர்போச்சே ஐயோபோச்சே! பிரேமனெங்கரவன் தடிப்பயலானபடியாலே வீரபாகுவை ஒருபாழுங்கெணத்துலே புடிச்சுதள்ளிப்பிட்டு ஓடிப்போவிட்டானாம். ஒடனே வீரனுக்கு கையெல்லாம் அடி - காலெல்லாம் அடி - கெணத்துக்குள்ளே விழுந்து ரெண்டு மூனுவா ஜலம் குடிச்சானாம். நல்லவேளயா என் சீஷன் இன்னொத்தன் சேஷசாயீங்கரவன் என்னமோ அங்கோ போனவன் கெணத்துலே என்னடா ஓசையென்னு எட்டிப்பாத்தானாம். ஆரோ ஆளுன்னு தெரிஞ்சு நல்ல பலசாலித்தனமா கீழே எரங்கிப்பாத்து வீரனுன்னு கண்டு கைகாலோஞ்சுபே ஓடி வந்து அலரிப்பொடச்சுக்கிண்டுவிழுந்தான். எனக்குத்தெரிஞ்சு என்னாலானவைத்யம் பண்ணிப்பாத்தேன். ரெண்டு நாளா ராத்தூக்கமில்லாமல் படுக்கயின்கிட்ட ஒக்காந்திருந்தேன் ஐயையோ செத்துப்போவிட்டானே அடா டா டா!” என்றார்.

உடனே அவர் சீடப்பிள்ளைகளும் “ஐயோ வீரா! ஏலே வீரா! அடா டா” என்று மூலைக்குமூலை கூப்பாடுபோட்டார்கள்.

இதையெல்லாம்கண்ட அதிகாரி வாத்யாரையும் சீடர்களையும் தேற்றி அனுப்பிவிட்டு ஸபையார்களைப்பார்த்து “மந்திரிமார்களே, நான் செய்யக்கூடியதென்ன? பையனோ சிறுவன். அவன் மீதுள்ள தப்பிதமோகொடிது கொடிது; நமது சேவகர்களையும் அடித்தானாம். விடம்கலந்ததாகவும், அவன் பெட்டியில் விடமிருந்ததாகவும், விடம் வாங்கிக்கொண்டு வந்ததாகவும் அதைத்தெரிந்து தடுத்தவனைக்கிணற்றில் தள்ளியதாகவும் இவன் மீது எவ்வளவோ

பழிசுமர்ந்துவிட்டன. ஆனல் முதலில் இவன்மேலிருந்தகோபம் எனக்கு மாறிவிட்டது. இவனை இப்படியேவிட்டுவிட்டால் இன்னு மென்னசெய்வானே யாரறிவார். கேட்டால் வாயைத்திறந்து ஒன் றும் சொல்லுவதும் கிடையாது. இவனை நமது அரசர்பெருமான் சோழமஹாராஜாவிடம் அனுப்பலாமென்றெண்ணுகிறேன். அவ ரே இவனுக்குத் தக்க தண்டனைசெய்யவுரியார். என்று பேசிக் கொண்டே வரும்போது ஒரு சிறு பெண்மிகுந்த நடையால் வரு ந்தி, காலெல்லாம் புழுதிபடிந்து, முகமெல்லாம்வியர்த்துக்கொட்ட ஓடோடிவந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு கீழேவிழுந்து "அர சனே அபயம்! உயிர்களையெல்லாம் காப்பவனே அபயம். துஷ் டர்களைத் தொலைத்து ஏழைகளைக்காப்பாற்றும் எந்தலே அபயம்" என்று கதறினள்.

அங்குள்ளமந்திரிமார் பலவாறு தேற்றியும் எழுந்திராமல் அதி பன்சொல்லியும் கேளாமல் 'என்னைக் காப்பதாக ஸத்யம் செய் தால்தான் எழுந்திருப்பேன்' என்று சொன்னாள் அப்பெண். நியா யாதிபதியும் அப்படியே ஆகட்டுமென, எழுந்து நின்று தன்குறை யைச்சொன்னாள்:—ஐயா, என்தகப்பனும் சிற்றப்பனும் ஒருநாள் எங்கேயோ போய்விட்டுவந்தார்கள். வழியிலே ஒருவன் சாகிறவன் போலே கிடந்தான். அவனைக்கண்டு மனமுருகிதோட்பட்டை வலிக்க இரண்டு காதவழி தூக்கிக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்து ஒரு வருஷம் வளர்த்தார்கள். பலகால் பாலூட்டிவளர்த்தாலும் நஞ் சூட்டிக்கொல்லும் பாம்பைப்போன்ற அந்தப்பாபி, ஓர்நாள் கோயி லுக்கு என்தகப்பன் சிற்றப்பனுடன் கூடப்போய், அங்கு தன் இஷ்டனை ஓர் வேடனுடன் சேர்ந்துகொண்டு என்தந்தையையும் அவர் தம்பியையும்கொன்றுவிட்டு இவ்வூருக்குவந்திருக்கிறானாம். அவன் பெயர் பிரேமநாதனென்று சொல்லுவார்கள்! என்று வரி சையாய்ச் சொல்லிக்கொண்டேவர பிரேமநாதன் தன்நிலைமையை யும் தன்மீது சுமரும் குற்றங்களையும் நினைந்து கண்களிரண்டும் நீர் வடிய, முகம்மாறி, உதடுலர்ந்து நின்று பெருமூச்சுவிட்டான்.

அதிபனே இதைக்கேட்டதும் பிரேமனிடத்துச்சற்றுவெறுப் படைந்து தமது மந்திரிகளைப்பார்த்து 'இவன் பெரும்பாவி' இன் னும் சற்றுநேரமிருந்தாலெவ்வளவுபழி இவன் மீது சுமருமோதெரி யாது. 'இவனைக்கையைக்கட்டி கொள்ளிடத்திலிப்போது வந்துள் ள நடுவெள்ளத்தில் தூக்கி யெறிந்துவிட்டு வரும்படிச்செய்வதே என் எண்ணம். உங்களிஷ்டமென்ன' என்றான். மந்திரிமார்களோ அதுவேஸரி என்றார்கள். அங்கு வந்திருந்த வைத்யர், யாவரையும்

பார்த்து 'இந்தச்சிறுவனை என்னிடம்விடுங்கள். நான் உண்மையைக் கண்டுபிடிப்பேன். அன்றியும் இவனுடம்பும் புத்தியும் மிகமாறியிருக்கின்றன' என்ன, ஜனங்களெல்லாரும் ஒரேமூச்சாய் கொள்ளிடத்திலேயே போடவேண்டுமென்று கூப்பாடுபோட்டார்கள். வைத்யர் தன்னாலானமட்டும் சொல்லியும்கெஞ்சிப்பார்த்தும் பயன்படவில்லை. ஜனங்களெல்லாம் மறுபடி மறுபடிப்பேரிரைச்சல் செய்து கொள்ளிடத்திலேயே போடச்சொன்னார்கள். அதிபனும் கடைசியாக அவ்வாறே தீர்மானித்துக் கைகழுவிவிட்டான். வெள்ளித்தடிச் சேவகர்கள் தீர்மானத்தை எல்லாருமறியப்படித்துக்காட்டி, அரசன் மந்திரிகள் இவர்களுக்குமுன் உயரத்தில் சுருட்டிக் கட்டித்தூக்கியிருந்த கறுப்புச்சேலைத்திரையை அவிழ்த்து மளமளவென்று தொங்கவிட்டார்கள். இரண்டு கொடியசேவகர்கள் உடனே பிரேமனைப்பிடித்து பின்கட்டுமுறையாய் இறுகக்கட்டி கரகரவென்று இழுத்துக்கொண்டே சென்றார்கள். உயிருள்ள எதையும் யாரும் அவ்வண்ணமிழுத்திருக்கமாட்டார்கள். கையெல்லாம் நோக, கால் நோக இரண்டு மூன்றிடத்தில் கீழே விழுந்து அடிபட்டுச் சிராய்க்க உதிரமோட கண்களில் நீர் உதிர, மனம்தடுமாற, நமது பிரேமநாதனை அக்கொடியபாபிகள் ஓரோடத்திலேற்றி நிறைந்து செல்லும் நீருடைய கொள்ளிடத்தின் நடுவில் கொண்டுபோய்கனத்திலறைந்து, குட்டி, அவமானம்செய்து தலை கீழாய்த்தூக்கி சற்றுமிரக்கமில்லாமல் எறிந்துவிட்டு ஐயோ! தமது வீடு சேர்ந்தனர்.

"வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலா
னைத்தாய நூலகத்து மில்லை."

அதிகாரம்—௧௫.

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினு
நற்றுணை யாவது நமச்சி வாயவே."—அப்பர்.

முழுகினான் தண்ணீரில். மூக்குக்குள்ளும் வாய்க்குள்ளும் நீர்புகுந்து கண்களை விழித்துக்கொண்டு தலையெல்லாம் அலங்கோலையாய்ச் சுற்ற எழுந்தான். வாயால் நீர்கொட்ட, கண்ணெல்லாம் சிவந்து, திண்டுமுண்டாடினான். உலகத்துக்கும் தனக்குமுள்ள எல்லாப்பற்றுமொழிந்ததென்றெண்ணி கடவுளே கதியென்று நம்பித்

துதித்தான். சற்றே மூச்சடக்கி மிதப்பான். சற்றே ஓய்ந்து
முழுகி விடுவான். ஹா! தெய்வமே! உலகத்துக் குறுதுணையே!
எல்லாப்புண்யமும் பிறந்த இடமே. ஒருகொடியாவது உபகாரமல்
லாமல் வேறெதையுஞ் செய்ய இசையாத பெரியவனே, கரங்கு
விவாருண்மகிழும் கோனே, சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரியா,
ஈசா, எந்தாய், செம்பொற்சோதியே, சிவனே, தின்னத் தின்
னத் தெவிட்டாத இன்பத்தை யருளும் மலையே! யாதொருமருவும்
தன்னிடம் சிறிது மெய்தப்பெறாத பரிசுத்தனே! நடுக்கோடையின்
நடுப்பகலில் வெயிலிற்கிடந்து வாடுமுயிர்க்குத் தண்ணென்றுள்ள
நீர்க்காற் றெப்படியோ அப்படியே பிறப்பிறப்பென்னும் வெயிலிற்
கிடந்து வெதும்பி என்செய்வது எங்குசெல்வதென் றறியாமல் வேச
றும் ஆன்மாக்களுக்கு குளிர்ந்த அருள்செய்யும் அருளே, வடிவா
யுள்ளவனே! உன்னையறியாமலும் மதியாமலும் பிறப்பின்பயனை
யடையாமலும் வேதாதிகளிற் சொல்லிய உன் கட்டளைகளை மீறி
யும் கெடுகின்ற ஆன்மகோடிகளிடத்தும் அதிகப் பொறுமையோடி
ருந்து அவர்கள் வெறுக்கவெறுக்கச் செயினும் நன்மையேசெய்து
வருவதாகிய பெருமைபெருகும் ஸத்தியமூர்த்தியே! மேலானதெ
ன்று சொல்லக்கூடியதும் எழுதக்கூடியதும் எண்ணக்கூடியதுமா
கிய யாவருக்கும் யாவற்றுக்கும் ஐயனே! மிகவும் அற்பனானாலும்
கூர்மையான அறிவில்லாதவனானாலும், இல்லாதவற்றை யெல்லாம்
இருப்பதாக எண்ணியும், ஒன்றை நூறாகக் காட்டிப் பொய் சொல்
லியும் வருபவனானாலும் தம்மை யடைந்துவிட்டால் யாரையும் கைவி
டுவதில்லையென்ற பெருமையையுடைய புண்ணியமூர்த்தி! எது
எப்படியாயினும் தான் எக்கணமும் எவ்வாற்றாலும் மாறாத ஆதித்
தனியனே! அந்தந்த ஆன்மாக்கள் நிமித்தம் பலபல காரியங்களைச்
செய்யவேண்டிப் பலவாயுள்ளவனே, பல்கோடியாயுள்ள உயிர்க
ளுக்கு உறுதியான துணைவனே, எது அழிந்தாலும் எக்காலத்தும்
தான் அழிவதில்லையாகிய பெருமையுள்ள நித்தியனே, சராசரமா
யுள்ள யாவற்றுள்ளும் யாவருமறியாமல் அததற்குத் தகுந்தபடி
பொருந்திக் காரியம் நடத்தும் தன்னிலைமை மாறாத சிறிதும் கலக்
கமில்லாத பேரறிவனே! உண்மையான அன்பர்கள் மனத்தில்
அவர்களுக்கின்பமான உருவோடு எழுந்தருளித் திருநடனஞ்செய்
யும் பெருவாழ்வே! சூரியனுடைய ஒளி எங்குசெல்லாதோ சந்திர
னுடைய ஒளி எங்கு பயன்படாதோ நக்ஷத்திரங்களுடைய ஒளி
எதையறிய உதவாதோ எதன்முன் நெருப்பின் ஒளியும் இருட்டு
ப்போலாய்விடுமோ, எதனால் சந்திரசூரியாக்னியெல்லாம் தமது
காந்தியும் பெருமையும் நிலைபெறப்பெறுமோ அந்த உரை யுணர்வி

நந்த பெருஞ்சோதியே! பெருமைபொருந்திய இனிய பாதாரவிந்
தங்களைப் போற்றவும் பேசவும் கிடைத்த நாட்களே நல்ல நாட்க
ளென்றும் எவ்வித உலக இன்பங் கிடைக்கப்பெறினும் அந்தச்
சீர்பெறுத்தாட்டுணையைப் போற்றப்பெருத நாட்களே தீவினை
யிழைத்த நாட்களென்றும் எண்ணி அன்பே உருவாய் நிற்கும் அடி
யார்களின் தலைவனே, ஆன்மாக்களின் மனத்தகத்துள்ள அழுக்
கையெல்லாம் மாற்றி அவர்களுக்கென்று தனியாய் (ஸ்வதந்திர
மான) யாதொரு செய்கையு மில்லாததால், அவர்களுக்கு நல்லதிது
வெனத் தெரிந்து அதனால் செய்யக்கூடியதிதுவென்று நினைத்து
அந்த நினைப்பின்படியே நீதமாய் அருளும் பெரியவனே! மிகுந்த
அன்புபற்றிய அன்பர்களுக்கு அவர்கள் அடையவேண்டிய கதி
நிலை இதுவென்று காட்டும்போதனே! கணக்கி லடங்காத அண்
டபிண்ட சராசரமான யாவற்றுக்கும் நாதனே! மாயாகார்யமாகிய
ஸத்வ ரஜஸ் தமோ குணங்களில் ஒன்றுந் தம்பால் சிறிதேனு மெய்
தப்பெருத நிர்க்குணனே, ஒருநாளுந் துன்பந்தராததும் என்னு
மின்பந் தருவதும், நம்பின அடியார்களை உலகினர் யார்க்கும் குடி
யல்லாமற் செய்வதும் அண்டினவர்களை நமனுக்கு நமனுய்ச்செய்வ
தும் தற்சேர்ந்தாரை நரகத்திலிருந்து தவிர்த்து எப்பிணியையும்
அவர்களடைந் தஞ்சாமற் காத்து, தம்பெருமானையும் அவனைச்
சேர்ந்தோரையு மல்லது வேறு யாரையும் பணியாத மன உறுதி
தருவதுமான உண்மைச்சமயத்தின் கணவனே! வேதங்களின்
சிரத்திற் சூடிய பாதமுள்ளோனே! உன்னை யடைந்த அறிவுள்ள
பெரியோர் உன்னின்றும் பிரியுந்தன்மையில்லாவகையாய்க் கலந்து
நிற்கும் புண்ணியமூர்த்தி! அவரவர்களது மனதின் நிலைமைக்குத்
தக்கபடி அவரவர்களும் வழிபட்டுய்யவேண்டுமென்று, யாவரிட
த்தும் கருணையோடிருந்து பலபல மதங்களையுண்டுசெய்து
அந்தந்த மதத்திலும் வேறுவேறு பெயரால் விளங்குந் தெய்
வமே! எவ்வளவோ பல்கோடியண்டங்களை யமைத்து அந்தந்த ஆன்
மகோடிகளுக்குத் தகுந்தபடி தநுகரணபோகாதிகளைக்கொடுத்து
அவ்வவர்களுங் கடைத்தேறுவதற்கான மார்க்கங்களையும் ஏற்பாடு
செய்து யாவரிடத்தும் கருணையோடுவிளங்கும் அரியபொருளே!
அமிர்தமும் கட்டி மாம்பழமும் மலைவாழைப்பழமும் நாரிலாது பழு
த்த பலாப்பழமும் சிறந்த கற்கண்டும் கொம்புத்தேனும் சர்க்கரை
யும் பாலும் கலந்தாற்போன்ற பேரின்பமாகிய மோக்ஷத்தை அடி
யார்க்கே தரும் நன்னலத்தவனே! சென்றுபோன காலத்துள்ள
எப்பொருளும், நடுவேயுள்ள காலத்தின் எப்பொருளும் தானே
யாய் தன்னையின்றி வாழ இடமில்லாது, எல்லாவற்றினும் பெரிய

வன் என்னும் தன்மையோடிருந்து எவ்வுயிர்களையும் தன்வயமாக்கி நடத்தி நிலைபெற்றுள்ள கருணையங் கடல்வடிவமே! மனங்கசிந்து மயங்கி ஆடிப்பாடி கண்ணீர் ஆறாக ஒழுகும் மெய்த்தொண்டர்கள் விரும்பி விரும்பிச் சண்டைசெய்துண்ணும் தேன்வெள்ளமே! கள்ளன், வஞ்சகன், காமுகன், தெளிவில்லாதவன், ஈகையற்றவன், அறிவிலி, சிறிதும் உயிர்களிடத் திரக்கமில்லாதவன் என்று யாரையுந் தள்ளாமல் ஒவ்வொருவர்க்கும் மெள்ள மெள்ள பருவமறிந்து ஞானத்தை ஊட்டுகின்ற நற்றாயே! பெரியவர்களால் புகழப்பெற்று நல்ல ஆராய்ச்சியுடன், வேத மடங்கலும் கற்றுத்தேர்ந்த உணர்வுள்ளோர்க்கும் தன்னருளாலன்றித் தோன்றாத பரிசுத்தனே! கடலின் அலையைப்போலமேன்மேலும் வந்துகொண்டேயிருக்கும் துன்பத்தை நீக்கி ஆன்மாக்களது உடல்பொருளாவியென்னு மூன்றையும் கைக்கொள்ளும் அரசனே! நீயே கதியொழிய வேறில்லையென்று கடைப்பிடித்து தம்மையே ஒப்புவித்த அன்பர்களுள்ளத்தில் பொழியும் கருணைமுகிலே! அன்பர்களுடைய பாசமாம் பாம்பு நடுநடுங்கும்படி வரும் இடியேறே! இவ்வுலகமே எல்லாமாயிற்று என்னும் அறிவோடிருந்து பின்பு சற்றுத் தேறி நான் என்ற ஒரு முதலுண்டெனக் கடைப்பிடித்து அதுவே எல்லாமென்று துணிந்த ஆன்மாக்கள் வெட்கமடையும்படி அவர்களுக் குள்ளிருந்து உணர்வைத் தந்து அவ்வுணர்வு காரணமாக ஒப்பில்லாத ஆனந்தவெள்ளத்திலழுத்தி அறிவைமாற்றி எல்லாம் சிவமென்றுணரவும் அப்படியுணர்ந்ததையு முணராமல் பேச்சுமூச்சற்றுக் கிடக்கவும் எல்லா ஞானமும் ஒடுங்கவும் செய்யும் பெருந்துணையே! தீயிற்பட்ட மெழுகுபோலவும் வெயிலிற்பட்ட வெண்ணெய்போலவும் நெஞ்சம் கரைந்து உன்னைக் கண்டளவில் கசிய திருவுருக்காட்டும் அருபியே! சற்றுஞ் சலியாத நெஞ்சமே ஓர் வள்ளமாகவும், யாதொரு குற்றமுமில்லாத அருளுடைய நீயே அமிர்தமாகவும் கொண்டு உளங்குளிரப் பருகி அதனால் ஏறிய பேரின்பமயக்கம் பெருகி பற்றெல்லாம் தொலைத்து தூங்காமற்றூங்கும் பெரியோர்களிடம் கன்றையுடைய பசுவாய் அன்புசுரந்து நிற்பவனே! இன்னகுலத்தில் இன்ன தாய் தந்தையர்க்குப் பிறந்தானென்றாவது, இன்ன குணமுடையவனென்றாவது, இன்ன அடையாளந்தானுடையவனென்றாவது, இன்ன குறைகளையுடையனென்றாவது மைந்தர் மனைவியென்னும் சுற்றமுடையவனென்றாவது, சிறிதாவது மனக்கலக்கமுடையவனென்றாவது தன்னிமித்த மின்னசெய்தானென்றாவது சொல்லுவதற்கிடமில்லாமல் எல்லாம் அருட்செயலாகவுடைய நடனவள்ளலே! ஒவ்வொருவரும் தேடுவதற்குரிய ஓரே பொருளாய் பலரை யாட்

கொள்ளும் பரஞ்சுடராய் எல்லரும் தன்னுலேயன்றி எதையும் செய்யமாட்டாமலிருக்க தானே யாவருடைய விசாரத்தையும் மேற்கொண்டவனுன தெய்வமே! வேதங்களின் நடுநாயகமான யஜுர் வேதத்தின் எழுகாண்டங்களுள் நடுக்காண்டமாகிய நான்காவதில் நடுவே விளங்கும் ஸ்ரீருத்திரத்தின் இடையே உள்ளமஹாமந்திரத்தின் ஸாரமாய் அதன் நட்டநடுவுள் விளங்கும் திவ்யநாமத்தால் உலகுக்கெல்லாம் மங்களத்தைச் செய்துவரும் தலைவனே! தலையில் பிரணவத்தையும் நடுவே வணக்கத்தையும் கடைசியில் 'உலகிற்கு சுபம் செய்பவன்பொருட்டு' என்று பொருள்தரும் வாக்கியத்தையும் உடையதாய் கேட்டவர்களுக்கு நீங்காத ஸாயுஜ்யஸாம்பிராஜ்யம் தருவதாயுள்ள ஸ்ரீ தாரகமஹாமந்திரத்தின் உண்மைப்பொருளே! 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் - பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய்க் - கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் - வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச் - செல்லாஅ நின்ற இத் தாவர ஜங்கமம்' என்று பெரியோரால் சொல்லப்பட்டபடியே உள்ள பல்வகைப் பிறப்பையும் ஆன்மாக்களுக்கு அறுக்கும் பிஞ்ஞகனே! வேதங்களெல்லாம் ஜயஜய ஜயா எனத் துதித்தலுக்கும்படி எட்டாமல் உயர்ந்து ஆழ்ந்து விரிந்த சிறவனே! வெப்பமாகவும் குளிர்ச்சியாகவும் உள்ள விமலனே! தன்னைப் படைத்தவர்களாவது காப்பவர்களாவது அழிப்பவர்களாவதில்லாமல் தானே அண்டபிண்ட சராசரமான யாவற்றையும் உண்டாக்கிக் காத்தழித்து மறைத்தருளுந் தனிமுதலே! யாவரும் தம் ஒவ்வொருபுலனுலும் அடையக்கூடிய எவ்வித இன்பத்துக்கும் எரிபோலுள்ளவனே! யாவர்க்கு மருகிலிருந்தே அவரவர்களுக்கு நன்மையானவற்றைச் செய்துவந்தாலும் முதிர்ந்த அன்பில்லாதவர்களுடைய அறிவுக்கு தூரமானவனே! பாலில் நெய் மறைந்துறைவதும்போல், எக்கணமும் செய்வதாகிய தமது அருளான திருவிளையாட்டில் மறைந்து கிடக்கும் திருடனே! புண்ணியபாவமென்னும் கர்மத்தினளவான உடலத்தைக்கொடுக்கும் உத்தமனே! புழுவழுக்குமலிந்த தோற்போர்வையாய், ஒன்பதுவாயாலும் எப்போதும் மலம் சொரிவதாய், ஐந்து வழியாலும் எவ்வளவோவஞ்சனை செய்வதாய் உள்ள தேகத்தைக்கொடுத்தே கர்மத்தின் பலனை உண்ணச்செய்து வேடிக்கை பார்ப்பவனே! எவ்வளவு நன்மையடைந்திருந்தாலும் திடீரென்று கோபம்வந்து வெள்ளென்று பிடுங்குவதும், தனக்குக்கிடைக்காவிட்டாலும் வேறொருவனுக்கும் கிடைக்கக்கூடாதென்றெண்ணுவதும், சற்று நிதானித்துப்பார்த்துத் தன்பிழையெல்லா முணர்ந்து அவற்றைவிட்டுவிடுவதென்று தீர்மானித்து உடனே அனதமற

ந்து மறபடியும் பிழையே செய்வதுமான நாயினும் கீழ்ப்பட்டவர்களிடத்தும் அருமையான தாயினும் மிகுந்தகருணைபாராட்டும் செல்வமே! அரிசியினிடம் அநாதியே உள்ள முளைதவிடுமிபோன்ற ஆணவாதிமலக்கட்டை வேரறுத்து ஆன்மாக்களை உய்விக்கும் தூயவனே! என்றும் குறையாததும் தன்னிலைமை மாறாததுமான பெரியகருணை ஓடும்பேராறே! இன்ன தன்மையனென எதனாலும் யாராலும் அளவிடற்கரிய கள்வனே! தன்னையறியாதவருள்ளத்திருந்து அவர்கட்கும் நன்மைசெய்தே வந்தாலும் அவர்களா லெப்போது மறியமுடியாதபேரொளியே! தற்சேர்ந்தாரை வெயிலின்முன்னுள்ள பனிக்கட்டிபோல உருகிவழியச்செய்துநீராக்கி, அவர்களுயிரையே தானிருக்கும் உடம்பாகச்செய்துகொண்ட நாராயணனே! முதிர்ந்த அன்புள்ளவர்களுக்கு அவர்களையும்விட அருமையான அன்பனே! எல்லாம் தம்மையின்றி இல்லையாகவும் தாம் அவையல்லவாகவும் உள்ளவனே! கூரியமெய்ஞானத்தால் ஆராய்பவருள்ளத்தும் சுளுவாய்க்காணமுடியாத நுண்ணுணர்வே! வேறு வேறான உருவத்துடனும் வேறு வேறான தன்மையுடனும் உலகினருய்யும்வண்ணம் தாமும் தமது திருவருளாகிய அம்மையுமாய் வெளியாகும் அருளுடையாய்! எவ்வெவர் தன்மையையும் தன்னிடத்தே அடங்கச்செய்து தானே எல்லாமாகிய தயாபரமூர்த்தீ, எல்லாவற்றையும் படைப்பவனை முன்னமேயே தானேபடைத்த பெருமையும், யாவற்றையும் காக்குமவனைத்தானே காக்கும் மேன்மையும் யாவற்றையும் அழிப்பவன் தன்வயமே என்ற அவ்வேலையைச்செய்யும்படி நடத்தும் புகழும் உடைய கடவுளே! எந்நாளும் சூரியனுக்கு ஒளியைத்தருபவனும், யாவரையும் களிப்பிக்கும் சந்திரனுக்கு குளிர்ந்த தன்மையை கொடுப்பவனும், எவற்றையும் சுட்டெரிக்கும் வலுவுள்ளநெருப்புக்கு வெண்மையைத்தருபவனும், ஆகாசத்துக்கு மற்றெல்லாப் பூதங்களும் தன்னிடத்தேவிரவிநிற்கச் செய்யும் பெருமையைத்தந்தவனும், யாவரும் விரும்பத்தக்க காற்றுக்கு ஓட்டத்தைத்தந்தவனும், தண்ணீர்க்கு எல்லாப்பிராணிகளையும் வளர்க்கும் இனிய தன்மையைத்தந்தவனும், மண்ணில் திண்மையைவைத்தவனும் இன்னும் எதெதுஎன்ன தன்மையுடன் காணப்படுமோ அந்தந்தத்தன்மையையெல்லாம் அததற்குத்தந்தவனுமான பரம்பொருளே! சிரிப்பவர்களும் களிப்பவர்களும், மனத்துள்ளே அடைத்துக்கொண்டு தியானிப்பவர்களும் கூட்டங்கூட்டமாய்நின்று பெருமை பெருமையாய் வேதாதிகளாலெடுத்து விரிப்பவரும் கேட்பவரும் மெச்சுவோர்களும், தனித்தனியே இருந்து அரியயோகாதிகளைச்செய்து தம்முள்ளத்திலேயேகண்டு தரிசிப்பவருமாய் ஆகா

நாதிகளிலும் கருத்தில்லாதுள்ள அடியார்களினரும்பொருளே! எவ்வளவோகாலங்களாகத் தொடர்ந்துவரும் அன்பே காரணமாக உரையுணர்விறந்து நின்று உணரப்பெற்றநல்லோய்! எண்ணிக்கையில்லாத ஊழிகாலங்களில் தவம்செய்து மேலெல்லாம் புற்றுமுளைத்து மூடவும் மரம்முளைக்கவும் தண்ணீரையோ காற்றையோ ஆதாரவாகக்கொண்டு எல்லா மொடுங்கித்தேடும் பரமயோகிகளுக்கும் தேடரும்பொருளே! பிறையுலாஞ்சடைப்பிஞ்ஞகனே! சித்தமும் செல்லாவிடத்தில் இருப்பினும் அன்பரது உண்மைத்தொண்டென்னும் வலையில் தானேவந்து சிக்கிக்கொள்ளும்பரமனே! ஒருவனென்று எவராலும் சொல்வதற்குரிய ஒருவனே! அரியதில் அரிய அரியாய் உண்டாவதும்செல்வதும் நிற்பதுமாய் மேலொடுகீழாய் விரிந்த எம்மானே! இவ்வுலகத்தினுடையவும் பற்பலகற்பங்களுடையவும் முதலையும் இறுதியையும் கண்டவனே! சொல்லால் தெரிவிக்கமுடியாமலும், மன உணர்ச்சியிற்கொள்ளப்படாமலும், கண்முதலிய இந்திரியங்களால் காணமுடியாமலும் உள்ளபழையபொருளே! தாம்பிடித்தபிடியைவிடாது, சற்றும்சலிப்படையாது, நெருப்பினிடம் சேர்ந்தமெழுகைப்போல உள்ளமுருகித்தொழுதழுது உடலமெல்லாம் நடுக்க மயிர்க்குச்செறிய ஆடி அலறிப் பாடிப்பரவி, பசுமரத்தாணிபோல் தடையின்றி உள்ளமும் இடையறா அன்பில் 'முதலையும் மூர்க்கரும் கொண்டதுவிடா' எனும்படியாய் நினைத்து நினைத்துக் கசிவதுபெருகிக் கடலெனமறுகி, உலகினர் தன்னைப் பேயனென்றவமதித்த காலத்தும் வெட்கமடையாமல், அப்பழிப்பையே தனக்கோர் ஆபரணமாய்க்கொண்டு கன்றையிழந்த பசுப்போல் கதறிப்பதறி, உருவத்தைவிட்டுப் பிரியாத நிழல்போல் எப்போதும் திருவடியிணையை விட்டுப்பிரியாமனத்தராய், என்பெல்லாங்கரைய நெக்கு நெக்கேங்கி, அன்பெனும்பேராறு கரைபுரள எப்போதும் அலற்றி, உரைதடுமாறி—கைகுவித்து—கண்களினின்றும் சிறுசிறு துளிகளாய் அரும்பிவெளியாக, நாள்தோறும் பேரானந்தமடையும் பெரியோரின் நற்றுணையே! கல்லில் நாரிருப்பதுபோன்று கயவர் மனத்திலும் அன்பைப் பெருகச்செய்யும் கண்மணியே! மண்ணில் சுவை ஒளி ஊறோசை நாற்றமாகவும், தண்ணில் சுவையொளி ஊறோசையாகவும், தீயில் ஒளி ஊறோசையாகவும், காற்றில் ஊறோசையாகவும், வெளியில் ஓசைமட்டுமேயாகவும் இருந்து உலகத்தைவளர்க்கும் பரமகாருண்ய மூர்த்தியே! புலிமுலை புல்வாய்க்கருளிய புருஷனே! தேவருலகமென்பதும் மண்ணுலகென்பதும் தானேயாகி, சலிக்கும் தன்மையுடைய எதுவும் பிரகாசம்செய்யும் எதுவும் தானேயாகி, உடலத்தை

நிறைந்த ஊடனெல்லாம் தானேயாகி யாவற்றுக்கும் யாவருக்கும் உயிருமாகி இவையெல்லாமின்மையுமாகி யாவற்றுக்கும் அதிபனுமாகி யானெனதென்னும் ஆசைக்கயிற்றில்கட்டி அவரவர்களையும் கூத்தாட்டுவானாகின்ற ஐயனே! பிறப்பென்னும் ஆழ்ந்தகன்ற கடலில்பலபல ஆசையாகிய அலைகளால் எற்றுண்டு யாதொருபற்றுமில்லாமல் காமம்வெகுளிமயக்கம் என்னும் காற்றால் மிகவும் கலங்கி ஒருசாண்வயிற்றின் கொடுமையாகிய பெரிய சுறுமீனின்வாயிலகப்பட்டு உய்யவகையற்ற ஏழைகட்கு திருவடியென்னும் புணையைக்காட்டி அதனால் மெள்ளமெள்ளக்கரை ஏற்றும் பெருந்துணையே! எழுத்துக்களையெல்லாம் ஆட்டிவைக்கும் அகர உயிரெழுத்தைப்போன்று ஜகஜீவன்களையெல்லா மாட்டிவைத்து தமக்கு வேறொரு உதவிவேண்டாமல் எள்ளுளெண்ணெய்போல் கீழ்மேல் நடுவென்னும் யாவற்றுள்ளும் கலந்து நிற்பவனே! யாவற்றையும் காணும்படி கண்ணுக்குத் துணையாய் நின்றும் தன்னைக்காண்பதற்கும் தானே துணையாய் கதிரொளிபோல் யாவற்றையும் தன்னையும் தானாகவே அறிவிக்கும்தாணுவே! சிறுசிறுபுட்பங்களின் பின்புறத்தில் உள்ள தேனை கொஞ்சம் கொஞ்சமாய் உண்ணுவதுபோலில்லாமல் நினைதொறும் காண்டொறும் பேசும்போதுங்கூட இடைவிடாதுள்ளேயிருந்து அன்பர்கட் கென்பெலா நெக்குவிட ஆநந்தத்தேன் மழைசொரிந்து பருகச்செய்யும்கருணைமுகிலே! உருகிப்பெருகி உளங்குளிரமுகுந்துகொண்டு பருகற்கினிய பரங்கருணைத்தடங்கடலே! வான்கெட்டு மாருதமாய்ந்து அழல் நீர் மண்கெடினும் தான்கெட்டலின்றிச் சலிப்பறியாச் சங்கரனே! இருள் திணிந்தெழுந்திட்ட ஒரு வல்வினைச் சிறுவீடாகிய இவ்வுடம்பிலிருந்து மத்திடும்போதுடைந்து தாழியைப்பரவும் தயிர்போல் தத்தளித்து, இவ்வல்லலெல்லாம் தொலையும்வண்ணம் நெக்குநெக்குள்ளுருகி, நின்றும் இருந்தும், கிடந்தும் எழுந்தும், நகைத்தும் அழுதும், தொழுதும் வாழ்த்தியும், பற்பலவாறு பரவசப்பட்டுக் கூத்தாடிக்கொண்டானடித்தும் உடம்பெல்லாம் சிலிர்சிலிர்த்தும் உய்ந்ததிருவடியார்கூட்டத்தின் காமதேனுவே! அன்பர்களுடைய உள்ளத்திலிருந்து அவர்களுடைய எலும்பையுமுருக்கி புண்ணியபாவமென்னும் கட்டையுமீடழித்து, எத்துன்பமுமில்லாமற் போக்கி, அநாதிமலக்கட்டை வரவரமாய்த்துத் தூய்மைசெய்து முன்பேயுள்ளதாகிய எதையும் முழுவதுமழியச் செய்யுமன்பனே! உடலும் உயிரும் ஏன்வயமெனக்காட்டும் அகரம்போன்ற பிரணவமே! ஆணவமாயா கர்மங்கட்கறிகுறியாய் சுண்டுவிரல், பவித்ரவிரல், பாம்புவிரல் என்னும் மூன்றையும் விலக்கி பசுவைக்காட்டும் ஆட்காட்டிவிரலை, இவற்றுடன் இணையாத கட்

டைவிரலில் சாய்த்து இரவே உய்யுநெறி எனவிளக்கும் சின்முத்ராதரனே! தம்மையே மறந்து தமக்குவிரோதமாய் அன்யனுடன் கலந்து தம்மை நிந்திக்கும் பெரும்பாவியானாலும் மனமுருகிநின்றழுங்காலத்தில் தலையிலும் வைத்துத்தாங்கும் சந்திரசூடா! தன் முன்னோர்க்கும் உலகினர்யாவர்க்கும் உபகாரமாய் பலகாலும்துதி செய்த பகீரதனுக்கிரங்கி அன்யஸாத்யமாகாத பேருதவிசெய்த கங்காதரா. பேதைமையால் 'நானேபிரமம்' என்று கொழுத்துத் திரியும் வாதிகள் பதைப்படங்கவும் அகங்காரத்துடன் தேடுவோர்க்கு ஒருநாளும் கிட்டாத தன்மையைக்காட்டவும், நீயேதாய், நீயே தந்தை, உடன்பிறந்தார், சுற்றத்தார், பெரியோன், வலியோன், யாவற்றுக்கும் தலைவனும் காரணனும்நீயே என்று தற்போதமிழந்து துதித்தபோது இரங்கிய பெருமையை அறிந்துயாவரும் வழிபடவும் ஸாக்ஷியாயுள்ள வியோமகேசா! குடங்கை நீரும் பச்சிலையிடுவார்க்கு இமையாதகுஞ்சரமும் படங்கொள் பாயும் பூவணையுந்தரும் கொன்றைசூடி, மின்னிலங்கு செஞ்சடையாய், ஸமஸ்த அண்டபிண்ட சராசரங்களையும் சுட்டெரிக்கும் வல்லமையுள்ள லலாடாக்ஷா! வினைவயத்தராய் மொத்துண்டுழலும் ஆன்மகோடிகளைப்போலில்லாமல் தானே யாவற்றுக்குந்தலைவனென்பதையும் தானுடு உலகாமென்பதையும் காட்டிய—சிற்றின்பத்தைக்கடந்த—பேரின்பஸ்வரூபியாகிய மன்மதாரே! உலகத்துக்கு ஒளிதருவ தாமே என்று யாவரும் அறிந்துய்யச்செய்யும் முக்கண்ணா! இரும்பு வெள்ளிதங்கமென்னும் மூன்றுகோட்டைகளாலும் அவதிப்பட்டு வாடிய தேவதைகள் உய்யவும், தாமேபசுபதியென்றும் மற்றவர்கள் பரவந்திரர்களான பசுக்களே என்றும் காட்டவும், யார்யார் எவ்வளவுகாரியம்தம்மாலாகுமென்று மதித்திருந்தாலும் அவ்வளவும் தமது திருவருளில்லாதவழி பயன்படாவென்று வற்புறுத்தவும் புன்சிரிப்புச்செய்த யக்ஷமூர்த்தியாகிய புராரே! சாவதாகிய தமது தன்மையை மாற்றிக்கொள்ள ஆசைப்பட்டு அமிர்தம் கடைந்து அப்போது வெளியான ஒவ்வொன்றையும் ஆசையால் கைக்கொண்டு பிறகுண்டானவிடவேகத்தால் மெய்நொந்து மூலைக்குமூலை இருந்தோடிய தேவர்கள்முதலாக யாவரும், தம்துணையின்றி எதையும் எப்போதும்செய்யமுடியாதசெய்தி அறிந்துய்யவும், அமிர்தமுண்டும் சாவொழியாத தேவர்களைப்போன்றவனன்று என்று யாரும்தம்மையே பற்றவும், விடமும்தமக்கு யாதொரு தீங்கும் செய்யாதென்பதை அறிந்து யாரும் தம்மிடத்திலேயே அன்புசெய்யவும் காரணமாய் உள்ள-எப்போதும் மங்களரூபியான நீலகண்டனே! எவ்வளவு அதிகாரிகளானாலும் எவ்வளவு நாளுயிரோடிருந்தாலும்

அழியவேண்டியவர்களேயானதேவர்களின் சிரமாலைகளை அள்விலவணியும் எண்டோளனே! புலித்தோலும் சிங்கத்தோலும் யானைத்தோலும் ஆமையோடும் மீன்கண்ணும் பன்றிக்கொம்பும் குதிரைப்பல்லும் தொங்க அணிந்த வேடர் உருவனே! முதுகெலும்பும் கபறையும் கையிலேந்தியபைரவரூபியே! துஷ்டர்களும் தம்மை மறந்தவர்களுமாகிய தாருகாவனத்தவரனுப்பிய எதனாலும் எள்ளளவும் அவதியடையாமல் தம்பால் எவ்விதத்தீங்கும் நிகழப்பெறாதென்பதும் தாம் இயற்கையே நிர்மலனெனவும் யாவரும் அறிந்துகொள்ளும் வண்ணம் மானையும் மழுவையும் உடுக்கையும் கையிலேந்தி, பாம்பை ஆபரணமாகவே அணிந்து, அபஸ்மாரன் முதுகில் காலையூன்றி யாவர்க்கும் உய்யும் நெறி இதுவே என்று தமதுகுஞ்சிதபாதத்தைக்காட்டி ஆடும் சிவனே! தேவர்களும் மனிதர்களும் நான்மறையும் ஓலமிட்டுத் தேடுவதும், கண்ணைப்பிடுங்கிப் போடுபவர்களும் தலையிடுமினென்பவர்களும் தண்ணீராலும் கண்ணீராலும் அபிஷேகம் செய்பவர்களும் குடலை குடலையாய் கணக்கற்ற மலரைச்சொரிபவர்களும் துதிப்பவர்களுமாய் அன்பர்களெல்லாம் ஆராதிப்பதும், அரியயோகாதிகளைச்செய்து மூச்சையடக்கி மூல அனலை எழுப்பி சந்திரகலையினின்றும் பெருகிவரும் பேரமுதுண்டு தமதுள்ளத்தினிடைவிடாது பெரியோரடைத்துவைப்பதும், பலபல்யுக்திகளா[illegible] பலம்பெறும் உண்டென்று துணிவதும், நீரையும் தழையையும் சருகையும் காற்றையும் புசித்து வேறுவேலைகளையெல்லாம் விட்டு நடுக்காட்டின் குடிசைகளிலிருந்து எப்போதும் முனிவர்களெண்ணுவதும், பிரமசாரி-யதி-வானப்ரஸ்தன்-இம்மூவர்க்கும் நல்லாற்றினின்ற துணைவனான இல்வாழ்வான் என்பவர் தத்தமக்குரியவேடத்துடனும் உபகரணத்துடனும் ஆசையாய்ப் போற்றுவதும், உண்மையன்புதப்பிப்போய் மமதை மேலிட்டபோது எவ்வளவு கடுமுரணேனமாகியும் கீழேழ்தலமுருவ இடந்து தேடி எய்த்தும் காணமுடியாமல் 'ஊழிமுதல்வ ஜயஜய' என்று அறிவுமேலிட்டுத்துதித்தக்காலத்து எளிதில்கிடைப்பதுமான திவ்யபாதாம்புஜனே! அந்தகாஸுரனையும் தக்ஷனையும் ஜலந்தரனையும் கஜமுகாஸுரனையும் இமைப்பொழுதில் வெற்றிகொண்டு யாவரையும் உய்வித்தபெருந்துணையே! தன்னையார் எந்தஇடத்தில் துதித்தாலும் அதையே அவர்களுக்குத் துணையாய்த்தருபவனென்பதையும் தற்சேர்ந்தாருக்கும் தனக்கும் இறத்தலென்னும் அமங்கலமில்லாமல் காப்பவனென்பதையும் தெரிவிப்பதாய் மறைமுனியார்க்கண்டேயர்க்கு தமது திருவடியிணையையேதந்த காலகாலா! யாவருடைய வந்தனைவழிபாடுகளும் கடைசியாய்வந்து சேருமிடமான முதல்வனே!

எந்தக்கர்மத்துக்கும் தக்கபடி பலனை தன்மைமுன்னிலைபடர்க்கையென்னும் மூவாற்றில் ஒன்றால் தந்தருளும் ஐயனே! பெண் ஆண் என்னும் இருபாலருக்கும் அவரவர்க்கியைந்த உருவோடெழுந்தருள்வதினிமித்தம் 'தோலுந்துகிலும் குழையும் சுருள்தோடும்—பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்—சூலமும் தொக்கவளையு முடைத்தொன்மைக்—கோலமே' பூண்ட உமார்த்தரூபனே! தேவர்களையெல்லாம் இருந்த இடத்தில் இல்லாதபடிப் பிடித்துவந்த தாரகாதிகளைக்களைவதின் நிமித்தம் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் (பிறர் நிமித்தம்செய்யும்) ஐந்தொழிலையும் தம் இயற்கையையும் அறிகுறியாய்க்காட்டுவதாகிய ஆறுமுகத்துடனும்வெளிவந்து திருவிளையாட்டுச்செய்த பிரணவப் பெருந்தகையே! விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஒக்க அருள்வோமென்று மூலைக்குமூலையிருந்தருளும் *கஜமுகனே! காணாத அறிவினுக்கும் உருவினுக்கும் *காரணமான ஸௌந்தரலிங்கமே! இப்படியன் ** இந்நிறத்தன் *** இவ்வண்ணத்தன் என்று தெரிவிக்க *** முடியாவண்ணம் அருமையாயுள்ள ** தெய்வமே! எல்லா **** அறிவும் பிறந்த ** பேரறிவே ** ஸர்வஸம்ஹாரகாலத்து ***** சேஷமாயுள்ள ——————' என்றளவில் துதித்து உணர்வெல்லாமழிந்து உணர்வழிந்ததையும் மறந்து தலையொருபக்கம்சாய, கால் ஒருபக்கம் தூக்க, கயிறுகட்டிய கையிரண்டுந் தாழ சிறுசிறு குமிழிகளாய் இரண்டு மூன்று கொப்புளங்கள் வெளியேவர அமிழ்ந்தான் நீரில்.

அதிகாரம் கச.

"இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்."—குறள்.

"யார் என்னவஞ்சனைசெய்தார்களோ நமது பிரேமன் அநியாயமாய்ப்போனான். எப்படியும் திருட்டைவெளியாக்குவதுதெய்வத்தின் கடமை. நமதூர் அதிகாரி என்னசெய்தானோ தெரியாது. வாக்குதத்தம்செய்த வைத்யனையும் காணோம். நாம்பித்துப்பிடித்துப்போனோம் இல்லையானால் நியாயஸ்தலத்துக்கேன் போகக்கூடாது? திடீரென்று ஒருநொடியில் எவ்வளவோ நடந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே தன் வீட்டுத்திண்ணைவரையில்வந்து எட்டிப்பார்ப்பதும் உள்ளே போவதும் மனம் தளர்வதும் தடுமாறி விழுவதும் தன்னையே நோவதும் கடவுளைத் துதிப்பதுமாய் பாநு

சேகரர் இருந்தபோது ஓராளோடோடிவந்து அவரிடம் ஓர் சீட்டுக் கொடுத்தான். அதில் தன்னாலானவரையில் முயன்றும் பயன்படாததையும் பிரேமனுடையகதியையும் விஸ்தாரமாய் எழுதியிருந்தார் வைத்யர். அதைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுத்திகைத்தார் பாநுசேகரர். பைத்யம்பிடித்தவர்போலான அவர் நிலைமையைக் கண்டு வருந்திய மணிமதியம்மாள் அவரிடம் வர உடனே நடந்ததையெல்லாம் சொல்லி அழுகைக்குறியாயிருந்தார். மணிமதியம்மாளும் இச்செய்திகேட்டு மிக வெதும்பினாள்.

இவர்களிப்படியிருக்க மயக்கமெல்லாந்தீர்ந்து எழுந்தாள் கலாவதி - தாயிடம்சென்றாள் - முக வாட்டத்தைக் கண்டாள் - நடந்ததென்னென்று கேட்டுத் தெரிந்தபோது பகீரென்று அடிவயிற்றில் தீபற்றியது. என்றாலும் சிரித்தமுகம்போலவே பாசாங்குசெய்துகொண்டு தன் தாயைத் தேற்றிவிட்டு, தாதைவிடம்போனாள். தூரத்தில் கண்டபோதே அவருடைய முகக் குறிகளையும் பெருமூச்சையும் கண்டு துணுக்குற்றாள். அவரிடம் போக மனமில்லாமல் தனித்த ஓரிடத்திற்சென்றாள். கண்களில் நீரொழுக துக்கம்பொங்கிப் பொங்கி எழுந்து மூக்கும் உதடும் துடிக்க உடம்பெல்லாஞ் சூடுபட அடிக்கடி மயிர்க்குச்செறிய தன் முன்தலைப்பைக் கீழே விரித்துப் படுத்தாள். ஏதேதோ எண்ணினாள் அண்ணா அண்ணா என்றாள். இப்படியோ உன் தலைவிதி யென்று அழுதாள் எவ்வளவோ உபதேசங்களைச் செய்த குருவே என்பாள். "நீ சாக நான் எப்படியப்பா உயிர் வாழ்வேன். இவ்வுலகத்தையெல்லாம் ஒருதிராசிலும் உன்னையொருதிராசிலும் வைத்து எதுவேண்டுமென்று யாராவது கேட்டால் உன்னையேயன்றோ விரும்புவேன். உலகத்தாருக்கு அதுகுறை இதுகுறையென்று வரிசையாய்ச் சொல்லிவருந்திய அண்ணலே - அவற்றையெல்லாம் தீர்க்காதபடி பெருங்குறையுடன் மாண்டாயோ! என்ன வாயினையோ? ஒருக்கால் மறுபடிபிறந்து பழைய எண்ணங்களுடனேயே வளர்வாயோ. அல்லது யாவர்க்குமேகிடைப்பரிய பேரின்பவெள்ளத்தில் விளையாடுகின்றாயோ? சற்றும் பயனில்லாத உலகத்தில் என்னைமட்டும் திண்டாடவிட்டு நீயேன் தப்பிப்போயினையோ தண்ணீரில் தூக்கி எறிந்தபோது எங்கெங்கு அது நுழைந்து என்ன அவத்தைப்பட்டாயோ. எவ்வளவு தடவை மேலே எழுப்பி எவ்வளவுதடவை கீழே அமுக்கியதோ. என்னை நினைத்துக்கொண்டு வருந்தினையோ - அல்லது என்னால் வந்த கேடாதலால் என்னைத் திட்டினையோ. உன்னிடம் எவ்வளவோ அருமையான விஷயங்களைக் கற்றதற்கு குருதக்ஷிணையாக உன்னுயிர்போக்கநின்றேனே. எங்கே கொண்டுபோய் சொருகி

யதோ. எந்த முதலையோ மீனோ கடித்து அரித்துத் தின்றுவிட்டதோ. அல்லது உன் அருமையான உடம்பு தண்ணீரிலேயே கிடந்து பருத்தழுகி நாறியதோ கழுகுகள் கொத்தும்படி மிதக்கின்றாயோ - அண்ணா! அண்ணா! என் துணைவனே - நல்லவிவேகியே - என்னுடைய குணங்களுக்கும் ஒழுக்கங்களுக்கும் கல்வியறிவுக்கும் விதையிட்டு அவ் விதையின் விளைவைக் கண்டனுபவியாமல் இடையே அழிந்தாயே. ஆத்திரேயன்வந்து கேட்டால் என் செய்வேனடா. உனக்காகத் தன் சுகதுக்கங்களையெல்லாம் விட்டொழித்து ஆண் உடையெல்லாம் மாற்றி துஷ்டமிருகங்களையெல்லாம் வசப்படுத்தியாட்டி எவ்வளவோபேர் நகைக்க எவ்வளவோபேர் திட்ட எவ்வளவோபேர் பரிதபிக்க ஊரூராய்த் திரிந்தலுத்து கடைசியாய் இங்குவந்து கண்டு அதனால் துன்பமெல்லாம் மாறி சற்று இன்பமடைவதற்குள் ஆத்திரேயனுக்கு இந்தச்செய்தி எப்படிச்சொல்லுவேனடா என் துரையே. எவ்வளவோ நன்மைசெய்ய இருந்த உன்னை இழந்து இவ்வுலகம் இனி எப்படித்திருந்துமடா. என் வீடுவராமல் வேறெங்காவது போயிருந்தாயானால் உயிருடனிருந்தாலுமிருப்பாயே. அல்லது இங்கு வந்ததுமுதல் ஊமைபோலிருந்தாலும் என் மனத்தை துன்பம் உருவிச் செல்லாதடா. அல்லது சருப்பஞ்சாறு கொண்டுவராவிட்டாலும் கலக்கமில்லையடா - உன்னை எப்படிமறப்பேன். சாப்பிடப்போனால் உன் எண்ணம் வருமே. ஊஞ்சலைக்கண்டாலும் வருத்தமுண்டாகுமே. திண்ணைக்குச் சென்றாலும் நீபடுத்திருந்த நிலை மனதிற்படுமே. குளிக்கச் சென்றாலும் கோயிலுக்குப்போனாலும் பூப்பறிப்பதானாலும் கதை கேட்கப்போனாலும் உன்னை மறக்க முடியாதே. ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்திருந்தாலும் நீ நிமிர்ந்துட்காரச்சொன்னது நினைவுக்குவருமே. என்னசெய்வேன் - எப்படிப் போதுபோகும் —ஐயா! ஐயா!! குருநாதன் காப்பாற்றுவாரென்றெண்ணியிறுமாந்திருந்த உன்னை அவரும்கைவிட்டாரோ? மிகுந்த ஆபத்துக்காலத்தில் வந்துதவிய வேடனாவது உனக்குத் துணைசெய்யவாரானோ - கடவுளை நினைத்து நினைத்துக் கண்ணீரொழுக தேம்பித்தேம்பி நின்று உன் இனியகுரலால் மதுரமான தேவார திருவாசகங்களைப் பாடிவந்தாயே! அதையாவது நினைத்துக்கொண்டு திரும்பிவரமாட்டாயா? "செத்தால் வந் துதவுவா ரொருவரில்லை - சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாஅ நிற்பர்" என்னும் தாண்டகத்தை இன்னொருமுறை உன் வாயால் கேட்கமாட்டேனோ? 'நாளான போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே - ஆளான அன்புசெய்வோம் மடநெஞ்சே' என்று பாடிக் கண்ணீருதிர்ப்பதை இன்னொருமுறை

பாரோனே? 'குணமிலி - மானிடன் - தேய்மதியன்' என்பதின் அருமையைப் பலவாறு புகழ்ந்துரைக்க என் காது இனியொருதடவை பாக்கியம் செய்யாதா! உன் அருமையான பிரசங்கங்களையும் அறிவைத் தரும் கதைகளையும் கேட்ட என் காது இனி எவ்வணைக் கொள்ளுமடா? எப்போதும் புன்சிரிப்புடன் கூடிய உன் முகத்தைப் பார்த்த என் கண்கள் இனி புண்களேயாய் வருத்துமன்றோ? பொய்சொல்லக்கூடாதென்ற நீ என்னைவிட்டுப் பிரிவதில்லையென்பதைமட்டும் பொய்ப்படுத்தலாமா? 'மடமெல் லியலார் தம்மைப் போல் நிலத்தின்மேல் வீழ்ந்தழுவதே' என்ற வாக்கு உறுதியாகும்படி என்னை சோகநதியில் தூக்கி யெறிந்துவிட்டு நீயும் கொள்ளிடத்திலா குதித்தாய்? என்னப்பா! அப்பா!! என்று பலபலவாறு நினைந்துநினைந்துருகிக் கரைந்தழுதாள்.

இந்தச்செய்தி தெரிந்து பானுசேகரர் மிக மனநொந்து தான் செய்ததே பிழையென்றெண்ணி, எவ்வளவோ கற்றும் கேட்டும் தெளிந்தும் பின்னும் மயங்கலாகாதென்று துணிந்து மெள்ள எழுந்து கலாவதியண்டையில் வந்து அவளைத்தேற்றினார்; தேற்றத்தேற்ற அழுகையிருந்ததேயொழிய வேறு காணோம். இவளழஅழ அவருக்கும் மனந் தளர்ந்தது. பிரேமனுடைய ஒவ்வொரு நல்லகுணத்தையும் இருவருமாய்ப் புகழ்ந்து புகழ்ந்து பேசினார்கள். இருவருமேயழுதார்கள். பிறகு "நான் மட்டும் மயங்கிக்கிடவாவிட்டால் நியாயஸ்தலத்திக்குப்போய்க் கெஞ்சியிருப்பேன்" என்றாள் கலாவதி.

பானு—"நீமயங்காதிருந்தால் இந்த ஆபத்தேது?"

கலா—"விஷமெப்படிவந்தது தெரியவேண்டாமா"

பானு—"யாராவதுகொண்டுவந்து வைத்திருக்கவேண்டும்."

கலா—"அப்படி யார்தான் துணிந்திருப்பார்கள்!"

பானு—"அதுதான் தெரியவில்லை. ஒருவேளை சேஷியோ என்றையப்படுகிறேன்."

கலா—"கண்ணாரப்பாராமல் ஒருத்திமேல் கள்ளம் நினைக்கலாமா? உண்மையெப்படியோ!" என்றாள்.

இப்படியே பேசிக்கொண்டுவரும்போது திடீரென்று மறுபடி கலாவதிக்கு அழுகைவந்து தன் தகப்பனுடைய மடியில் படுத்து தேம்பித்தேம்பி யழுதாள். அவரும் இன்னசெய்வதென்று தெரியாமல் ஸமயத்துக்குதவுவதும், மயங்கியவர்களை அதிகமாய் மயக்கி ஒருவாறு தெளிவிப்பதும் கிருஷ்ணனால் அர்ஜுனனுக்குச் சொல்லப்பட்டு அவன்தன் உறவினரைக்கொல்வது தப்பிதமன்றென்

றெண்ணியுத்தம் செய்யத் தூண்டிவிட்டதுமாகிய ஆன்மவாத உப
தேசம் செய்யத் தொடங்கினர்:—"கலாவதீ! குழந்தாய்! நான்
சொல்வதைக்கேள். கடைசியாக நம் ஆராய்ந்துபார்த்தால் சர்வா
வது பிறப்பாவது பிழைப்பாவது என்ன? இதெல்லாம் வீண்பித்
தையல்லவா? யார் செத்தார்கள்? ஆன்மாவோ ஒருநாளும் சாகாது;
அது முன்னில்லாததுமல்ல. இனியில்லாமற் போகிறதுமல்ல.
என்றும் நித்யமாய் இருப்பது அது. அஸத்தான உடம்பு செத்
ததோ என்றால் அதுவே பார்க்கும்போது இல்லாமற்போகிற
மாயை, ஆதலால் இல்லாத ஒன்றுக்கு சாவேது? அப்படியிருக்க
நீயேன் அழவேண்டும்? யாருக்காக அழுகின்றாய்? இந்த ஒரு உட
ம்பிலேயே, பால்யம் கௌமாரம் யௌவனம் வயோதிகம் என்று
நான்குமாறுபாடு மாயையால்தோன்றுகிறதுபோல் ஒருதேகம்விட்
டுப் பின்னொருதேகமும் வருவதாய்த்தோன்றும். பஞ்சதன்மாத்தி
ரைகளிலே பிறந்த சப்தஸ்பர்சரூபரஸ கந்தமெல்லாம் வருகிறதும்
போகிறதும்போல் தோன்றுமே ஒழிய உண்மையில் ஒன்றுங்கிடை
யாது. இந்த உலகம் அநித்யமென்றுதெரிந்துகொள். இதற்கு அஸ
த்தென்றும் இல்லாததென்றும் பெயர். ஸத்தாகிய ஆன்மா ஒன்றே
நித்யமென்பதும் அஸத்தாகிய உலகம் அநித்யமென்பதும் தத்துவ
ஞானிகளுக்கே தெரியும். ஆன்மாவினிடத்தே தோற்றல்மாத்திரமா
யுள்ள பிரகிருதியும் தேகாதிகளும் மனம்முதலிய இந்திரியங்களும்
அந்த ஸத்தான ஆன்மாவை அறியமாட்டா. ஆன்மாவோ நித்ய
மாய் நாசமில்லாமலிருக்கும். ஆன்மாசெத்ததென்று யார்சொல்
வானோ அவன் அறிவில்லாதவனே யொழிய வேறில்லை. நித்யமான
ஆன்மா ஒருநாளும் சாகிறதுமில்லை, கொல்லப்படுகிறதுமில்லை;
பிறப்பில்லாததாய் நித்தியமாய் யதார்த்தமாய்பூரணமாய் ஒருவித
பேதமுமில்லாமல் ஆநந்தமயமாயிருக்கிறது ஆன்மா. இந்த ஸத்ய
த்தை அறிந்தவர்களே ஜீவன்முக்தர்கள். ஆன்மாவை அம்புகளால்
பேதிக்கமுடியாது, தண்ணீரால் நனைக்கமுடியாது, தீயாலெரிக்கமு
டியாது, வாயுவாலுலர்த்தமுடியாது, மண்ணில்புதைக்கமுடியாது.
ஆகாசம் அதற்குவசமாய் நிற்கும். இப்படியே, ஸ்திரமாய் அசலமாய்
சாசுவதமாய் அவ்யக்தமாய் அசிந்தியமாய் அவிகாரியாய் ஸர்வவிக
ல்பரஹித சூன்யமாய் தோஷரஹிதமாய் நிர்மலமாய் உள்ள ஆன்மா
வைக் குறித்து துக்கிக்கலாகாது. ஆதலால், நிறுத்து உன் அழுகை
யை நான் சொல்வதையறிந்தால் பின்னை யொன்றும் அறியவேண்
டுவதில்லை. இந்தஞானத்தை அறிந்து வித்திபெற அநேகமாயிரம்
பேர்களிலொருவனுக்குத்தான் அதிர்ஷ்டம் கிடைக்கும். அவ்வி
தமான வித்தர்கள் பதினாயிர ஆயிரம்பேர்களில் ஒருவன் தான் ஆன்

மதர்சனம் செய்வான். மண் தண் நெருப்பு காற்று ஆகாசம் மனது புத்தி அகங்காரம் என்று பலபலபேதமுள்ள ஸகலத்துக்கும் காரணமான பிரகிருதி ஆன்மாவின்வசப்பட்டதே ஒழிய வேறில்லை. ஆன்மாவே ஜகதுத்பத்திலயங்களுக்குக் காரணம். அதற்குமேலானதும் அன்யமானதும் முன்னுள்ளதும் பின்னுள்ளதும் எங்கும் கிடையாது.”

இப்படியேவரிசையாய்ச் சொல்லிவரும்போது கலாவதி “அப்பா! நீங்கள் என்னை எவ்வளவாக மயக்கப்பார்த்தாலும் செவ்வளவு தெரியாத வார்த்தைகளால் மயக்கினாலும் நான் துன்பம் தீரேன். என்னையறியாமல் திடீரென்று பக்குப்பக்கென எழும்துக்கத்தை என்வசமுள்ளதாக நான் நினைக்கவில்லை. நான் அதன்வசமேதான். நீங்கள் பிரேமனுடன் அதிகமாய் பழகியவர்களன்று. அவனுடைய நல்லகுணத்தை முழுதும் கண்டவர்களன்று. அவன் இதையெல்லாம் எனக்குச்சொன்னதுண்டு. எங்கே? பதில்சொல்லுங்கள் பார்க்கிறேன். இந்த உலகம் அனுபவத்திலிருந்தும் அதையேன் மாயையென்றும் மயக்கமென்றும் சொல்லவேண்டும். ஆன்மாவைத்தவிர வேறு கிடையாதானால் நாம் பிரத்யக்ஷத்தில் அனுபவிக்கிறவெல்லாவற்றுக்கும் காரணமென்ன? தானே தனக்குகெடுதல் தேடுவார்கிடையாதே. அப்படியிருக்க இந்தமயக்கம் எங்கிருந்து எப்படி வந்தது” என்றாள்.

உடனே பாநுசேகரர், ‘இதேதடா குட்டிஞானங் குடியைக் கெடுக்குமென்பதுபோலாயிற்று. இவளென்ன வேதாந்தம் பேசுகிறாள். கலிகால மஹிமைதான்’ என்று எண்ணிக்கொண்டு “குழந்தாய் உனக்கு இதுகூடத் தெரியவில்லை பார்! கனவில்கண்ட பிரபஞ்சம் விழித்தெழுந்தபோதெங்கே? அதுபோல் தோற்றல் மாத்திரமாயும் சொல்மாத்திரமாயுமுள்ளது இவ்வுலகம், வேறொன்றுமில்லை” என்றார்.

உடனே, “ஐயாவே! இப்படி திடீரென்றுசொல்லி உருட்டுகிற செய்தி எனக்குத்தெரியும். முதலாவது, சொல்மாத்திரமாயிருப்பது தோற்றல்மாத்திரமாயுமெப்படியிருக்கும்? ஆட்டுமுட்டை - உலக்கைக்கொழுந்து - முயற்கொம்பு என்பன சொல்மாத்திரப் பொருள்கள். ஆடு ஒருநாளும் முட்டையிடாது - உலக்கையானமரம் ஒருநாளும் கொழுந்துவிடாது. முயலுக்கும் ஒருநாளும் கொம்புமுளைக்காது. ஆகவே இம்மூன்றும் முக்காலத்தும் இல்லாதன. என்றாலும் ஒருநாளும் ஒருவர் அனுபவத்துக்கும் ஒருவிதமாகவும் வராது. இப்படி சொல்மாத்திரமாயுள்ளவை எப்படி ஒருவனுக்கு தோற்றல்மாத்திரமாகும். யாராவது ‘ஓஹோ! அது ஆட்டுமுட்டைபோல்

தோன்றியது. ஆனால் உண்மையில் வேறாயிருந்தது' என்று சொல்வதுண்டா? ஆதலால் சொல்மாத்திரமாகவும் தோற்றல்மாத்திரமாகவும் ஒரேபொருள் இருக்காது! இருக்காது! இரண்டாவது, சொல்மாத்திரமாயிருப்பது ஒருநாளும் அனுபவத்துக்குவராது. ஆகவே உண்மையாகவே அனுபவிக்கப்பட்ட பிரபஞ்சத்தையாவது, உண்மையாகவே அனுபவிக்கப்பட்ட கனவையாவது சொல்மாத்திரமென்பது பிசகு என்று தோன்றுகிறது. மூன்றாவது தோற்றல்மாத்திர மென்பது கானல்நீர்போல் இக்கரையில் நிற்போருக்கு அக்கரையில் ஓடுவதுபோலும் அக்கரையில் நிற்போருக்கு இக்கரையிலோடுவதுபோலு முள்ளது - வியஸனம் ஸந்தோஷம் இவற்றுக்கிடமாயுள்ள கனவாகட்டும் பிரபஞ்சமாகட்டும் தோற்றல்தானென்று எப்படிச்சொல்வது? ஐயோ பிரேமன்போய் விட்டானே என்று, குபீர் குபீர் என்று என்னை அறியாமல் எனக்கு அடங்காமல்வரும் அழுகையை எப்படி ஐயா தோற்றல்மாத்திரமென்பது? அன்றியும் கண்ணின் தோஷத்தாலும் வெயிலின் உக்ரத்தாலும் திர்ஷ்டியின் தூரத்தாலுமே கானலை நீரென்று பிசகிக்க இடமிருக்கிறது. ஒன்றுமில்லை பிரமம்தானுள்ளது என்னும் நீங்கள் எதை எதாக யாருக்கு எப்போது என் தோன்றியதென்று சொல்லுவீர்கள்? ஆதலால் கனவையாவது நனவையாவது தோற்றல் மாத்திரமென்பதுங் கூடாதுதான். நான்காவது, பிரமத்தைத்தவிர வேறுகிடையாதென்று சொல்லும் தாங்கள் கனவில்காணும் பிரபஞ்சத்தை என் உதாரணம் சொல்லுவீர்கள்? கனவுதான் எனையாவக்தது? பிரபஞ்சம் இன்னதென்றுசொல்லப்புகுந்து கனவுமட்டும் உள்பொருளாக எப்படிக்கொள்வது? ஒருமயக்கத்துக்குக் காரணம் சொல்லவந்து அதில் அடங்கிய சிறுமயக்கத்தைமட்டும் மயக்கமன்றென எப்படி நம்புவது? என் அண்ணா பிரேமனல்லவோ மாண்டான். 'கனவின் பயனும் நனவின் பயனும் வினையின்பயன். அவை பொய்யெனல்வேண்டாம்' என்ற என் துணை இறந்துவிட்டானே" என்று சொல்லிக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதாள் கலாவதி.

இதேதடா பெரிய ஆபத்தாய் இருக்கிறது. நம்மால் இவளழுகையை தீர்ப்பது பிரயாஸையாய் முடியும்போல் தோன்றுகிறது. ஆனாலும் பார்ப்போமென்று "குழந்தாய்! இருள் என்பது எப்படி இல்லாத ஒருபொருளோ அப்படியே பிரபஞ்சமும் அதன் வியவகாரமும் இல்லாப்பொருள்களென்று நம்பு. வெளிச்சம் இல்லாததே இருளல்லவா? அதுபோலாகும் ஞானமில்லாதவர்க்கு பிரபஞ்சமும் ஆகையால் உன் அழுகையை ஒழி" என்றார் பானுசேகரர். கலாவ

றியோ "அப்பா நீங்கள் இதையெல்லாம் சொல்லச்சொல்ல எனக்கு வியஸனம் பொங்குகிறதே ஒழிய அடங்கவில்லை. ஏனென்றால் இதையெல்லாம் நானும் பிரேமனும் பலதடவை ஆலோசித்து தர்க்கித்திருக்கிறோம். சொல்லுவேன் கேளுங்கள். பெயரும் - உருவும்- நிறமுங்கொண்டு கண்ணுக்கு விஷயமாகும் ஒன்றை எப்படி இல்பொருள் என்பது? பகலில் தெரியாதபடியால் நக்ஷத்திரத்தின் ஒளியை இல்பொருளென்னக்கூடாததுபோல், தேயுப்பொதுமையான ஒளியைக்கொண்டு, இருளை இல்பொருளென்பது தப்பு. உங்கள் நியாயப்படியே பார்த்தால் வாயுப் பொதுமைக்குமுன் வெளிச்சமும் இல்பொருளாகும். அவ்வாறே ஆகாசப்பொதுமைக்குமுன் வாயுப்பொருளு மில்பொருளாகும். ஆதலால் இல்பொருளென்று ஒன்றையும் சொல்லக்கூடாது. அன்றியும், தேயுப்பொதுமையான ஒளி, கண்டப்பொருள். அதுபோலில்லாமல் அகண்டமாயுள்ள ஸத்தினிடத்தில் பிரபஞ்சத்தை எந்த நியாயத்தால் அபாவமென்பது!" என்று சொல்லி அடங்கா அழுகையால் விம்மி வெதும்பினாள்.

இவளுடைய அழுகையைத் தீர்ப்பதா தன்கக்ஷிக்கு நியாயம் சொல்வதா தன்னையும் அடக்கி மேலெழும் துக்கத்தை அது வெளியாகாவண்ணம் அடக்க முயல்வதா என்று ஆலோசித்துக்கொண்டு தானும் மயக்கமடைந்தார் பாநுசேகரர்.

இங்கிப்படியெல்லாம் குழப்பமாயிருக்க அங்கே வாத்யார் வீட்டின் வைபவத்தையும் கொஞ்சம் பார்ப்போம். பிரேமநாதன்மேல் தானேற்றியபழி உடனே பிரயோஜனத்தைக் கொடுத்து விட்டதாலுண்டான ஸந்தோஷத்தில் தன் சிஷர்களுடன் மிகுந்த விநோதமாய் நடந்து தன்வீடுவந்தார் வாத்யார். அவர் பெண்சாதி அப்போதுதான் எருமை மாடு கறந்துகொண்டிருந்தாள். அங்கே ஓர் மூஞ்செலி சத்தம் செய்தது. அதைக்கேட்டு ஏதோ நல்ல காலம்வந்து விட்டதென்றெண்ணி "ஸ்வாமீ! பிள்ளையாரே எங்ககாரியம் ஜெயமானா இந்த வெள்ளிக்கெழமயே தேங்காயும் ஒடச்சு கொழக்கட்டையும் பண்ணரே" என்று வேண்டிக்கொண்டாள். அதேநொடிக்குள் வாத்யாரும் வாசிற்கதவை இடித்தார். "ஆர்டீங்கே. ஏழேளீ - அடீஇ - தெரவுடிகதவே - ஏசெவுட்டுப்பொணமே தாக்கராயா என்ன" என்று சொல்லிக்கொண்டே மடார் மடாரென்ற இடித்த கூச்சல் காதில்பட, இடதுகையில் கைவிளக்கும் வலதுகையில் பாலும் தோளில் தலைகயிறமாக நடந்துவந்தாள். வரும்போதே "இந்த எழவு ஆராலே இருக்கு அந்த பாழாப்போரமாட்டை கறந்தப்புட்டுப்போகலாமோன்னோ. அதுக்குள்ளே தனக்குத்தான்

படையிருக்குன்னுப்புட்டு எல்லாப்பயங்களையும் கூட்டிக்கிண்டு போவானே, அந்த மொட்டச்சி புள்ளயளுக்குத்தான் தெரியவாண்டாமா? ஏதுடா ஒத்தியமா பால் கரக்க ஆராலே இருக்குன்னு யோசிக்கவேண்டாமா. இருங்கோ இந்தாவந்துட்டேன். என்ன வெட்டிக்கிண்டு போரது அவஸரம்? இருங்கோளேன். அம்மாடீ செத்தெ இருந்தாத்தான் என்ன தலே வெடிச்சாபோவிடும் நான் தாக்கரதில்லே ஒங்களாலானவாய்க்கும் இடியுங்கோ-இப்பிடி இடிச்சா கதவு என்னத்துக்காகும்?" என்று சொல்லிக்கொண்டேவந்து விளக்கை கீழேவைத்துவிட்டு இடது கையால் தாளைத்திறந்துகொண்டு அங்கேயே நின்று வாத்யாரை கண்டபடி திட்டினாள். உடனே அவருக்கும் கோபம்வந்துவிட்டது. தான் ஸந்தோஷச் செய்தி கொண்டுவரும்போது கூடத் தன்னைத்திட்டுவது அவருக்குப்பொறுக்கவில்லை. தன்னைப்போலவே அவளும் ஏன் ஸந்தோஷமாய் இருக்கவில்லையென்று கோபம்மிகுந்துவிட்டது. தெரிந்தால் ஸந்தோஷப்படக்கூடியவள் தான். ஆனால் தெரியுமுன் என்னசெய்வது? இப்படி இருவருக்குமாய்ச் சச்சரவு நடந்துகொண்டிருக்க பின்னோடு வந்த பிள்ளைகளில் ஒவ்வொருவனும் நான்தான் சொல்லுவேன் - நான் தான் சொல்லுவேன் என்று பேசிக்கொண்டும் அது காரணமாக ஒருவனை ஒருவன் அடக்கிக்கொண்டு மிருந்தார்கள். அப்போது சேஷசாயி என்பவன் 'அம்மா இன்னிக்கு நம்மபக்ஷம் ஜயிச்சுதே - எங்களுக்கெல்லாம் கொழக்கட்டையும் பாயஸமும் நாயத்தரோணும். ஜயம் ஜயம் ஜயம்' என்றான். உடனே வாத்யாருக்குக் கோபம்பிறந்து, 'தடி ஒங்காய்யே,—கட்டைத்தடிமடப்பயவா, அடி மாட்டாங்காரப் பயலே - ஒன்னை ஆருடா சொல்லச்சொன்னு' நான்தான் சொல்லாதேன்னேனே 'நானுன்னு சொல்லோணுமுன்னிருந்தேன்' என்று சொல்லி அடித்தார் அவனை. உடனே மற்றப்பிள்ளைகளெல்லாருமாய் அவனை அடித்து நறுக்கி விட்டார்கள்.

"என்னசேதி? என்னசேதி? எப்படி ஜெயிச்சுது, என் ஆச்சிமணி யம்மனுன்னு ஒவகாரம் பண்ணினு' என்றாள் வாத்யார் பெண்டாட்டி.

"போரபோதே நல்ல சகுனமாச்சுடீ" என்றார் வாத்யார்.

"ஆமய்யா ரெண்டுகொக்காய் எடத்துலேந்து வலமாப்போச்சு" என்றான் ஒரு சிஷ்யன்.

"எலே! இல்லேடாலே -காடை எடத்துலே போச்சுடா 'கட்டிக்காடை எடமாணு குட்டிச்சொவரும் பொன்னாகும்' என்னு

சொல்லுவாளோன்னோ" என்றான் வேறொரு சீடன்.

"எலே இதுவெல்லாமா இருக்கு. நீங்களேண்டா வாயாலே கத்தரேன். ஆனா இந்தக்காலத்துலயே அதுதான் வாடிக்கயாப்போயிருக்கு. அந்தரங்கமாச்சேயர காரியம் ஆருக்குத்தெரியும். நம்மவாக்யாங்களைப் புள்ளயாருக்கு நான் வேண்டிக்கிண்டேன் ஜயிச்சுது தெனம் எத்தனே குட்டுப்போட்டுக்குவேன் எத்தனே தோப்பிக்காரணம்போடுவேன் தெரியுமா" என்றான் இன்னொருவன்.

"அந்தப் புள்ளயாருண்டோன்னோ, எலே அந்தப் புள்ளயார்டா- கேளுங்கொடாலே - எலே அந்தப் புள்ளயார் ரொம்பசக்தீடாலே" என்றான் வாத்யார் மகன்.

இதனிடையில் சேஷசாயிமட்டும் ஒரு ஓரத்திலுட்கார்ந்து கனையக்கனைய அழுதுகொண்டிருந்தான். யார் என்ன ஸமாதனம்செய்தும் கேட்கவில்லே. வாத்யாரை கண்டபடி திட்டினான் - "நடந்ததை எல்லாம் ஊராருக்கு வெளியிட்டுரேன் பாரு. ஒம்புள்ளக்கி கல்யாணம் ஆகல்லேன்னுப்பிட்டுத்தான் எங்களுக்கெல்லாம் தூக்கம் வல்லியாக்கும் இந்தக்காலத்துலயே ஒத்தருக்கொன்னு சேயப்படாது, சேஞ்சாகைமேலேபலன்தான்" என்று ஏதேதோ புலம்பிக்கொண்டிருந்தான். இதையெல்லாம் கண்டு வாத்யார் மனைவி தான் ஸமாதானம்செய்வதாச்சொல்லி அவனைத் தனியே கூட்டிக்கொண்டுபோனாள். உடனே ஷேசாயி கோபத்தைநிறுத்தி வாத்யார் பெண்சாதியுடன் ஆசைவார்த்தையாய்ப் பேசிக்கொண்டிருந்தான். பிறகு அவனைத் தன்கருத்துக்கிணங்கும்படிக்கும் இல்லையானல் அவளுக்கும் வீரபாகுவுக்கும் இருந்த உறவை எல்லாருக்கும் சொல்லுவதாகவும், வீரபாகுவின் சாவைப்பற்றிய உண்மையை அரசாங்கத்துக்கு வெளியிடுவதாகவும் சொன்னான். அவளும் இன்னசெய்வதென்றறியாமல் ஊமைகண்ட கனவுபோல் தன்மனதுக்குள்ளேயும் வைத்துக்கொள்ள எண்ணாமல் வெளியேசொல்லவும் வெட்கப்பட்டு நின்றாள். இதற்குள் சேஷசாயி அவளை இறுகக் கட்டிக்கொண்டான், இதை இரண்டொருபையன்கள் கண்டுவிட்டார்கள். உடனே கோஹோஎன்று கூச்சலிட்டாளவள். அப்போதே எல்லாருமாய்க் கூடி சேஷசாயியைப் பிடித்துக்கட்டி விளக்குமாற்றின் அடிக்கட்டையால் கைநோகும்வரையிலடித்து, குடுமியை அறுத்து, சாணத்தைக்கரைத்து அவன் தலையிற்கொட்டித் துரத்திவிட்டார்கள்.

அதன்பிறகு அவனைக்கண்டபடி திட்டினாள் வாத்யார் மனைவி:—"அடபாவீ! என்னுடம்பெல்லாம் பதர்ரதடா! என்னைப்பார்த்து என்னசொன்னே - என்ன சேஞ்சயடா - நெருப்பைத்தொட்

டாளரிஞ்சுபோவான்னு தெரியாதா நீகட்டேலேபோக. யாருன்னு பாத்தேடா என்னை? பொண்வதை பொல்லாதுடா - ஒன்னை ஒரு வாருலே வாரிக்கிண்டுபோக - சந்திரனுட்டமா நீரழிவுவந்து நீநாசமாப்போக - சீதையைத்தொட்டான் ராவணன் அழிஞ்சான். தமயந்தியைத்தொட்டான் வேடன் அழிஞ்சான் - அகலியைத்தொட்டான் இந்திரன் கெட்டான்' என்று சொல்லிச்சொல்லி அழுதுகொண்டு உடம்பெல்லாம் நடுங்கி, மேகமண்டலம்வரையில் ஆகாசம் கிழிந்து போகும்படி கூச்சலிட்டாள். மூலைக்குமூலை எல்லாருமாய் அவளைத்தேற்றினார்கள். வரவரப் பெருங்கூச்சலிட்டாள். எல்லாரையும் திட்டினாள். இப்படியே கொஞ்சநேரம்போக பிறகு வாத்யார் 'நானிப்போது பானுசேகரனுத்துக்குப் போகட்டுமா?' என்றார்.

அவளோ 'அப்படி ஒன்னும் வாண்டாம். நாம்மளா இன்னமேப்போரது கடயாது. அந்த அரத்துப்போர பொண்ணே அவாளே வந்து வலுவுலே குடுக்கட்டுமே. வேணுங் கரியாப்போக' என்றாள்.

'அவாளா வலுவுலேவந்து தங்கவெள்ளுவெளயும் சங்கிலியும் பண்ணிப்போட்டு இடுப்புக்கும் சண்டுவெரப் பெருமன்லே அரணாப்போட்டாத்தானே நான் கல்யாணம் பண்ணிக்குவேன். இல்லாபோனா ஆருக்குவேண்டியிருக்கு? எத்தனையோ பட்டியள் இருக்கா நமக்கொத்தி இல்லாமையா அஸ்தமிச்சுப்போச்சு' என்றான் அவள் மகன்.

'அப்படிசொல்லாதிருங்கோபாக்கலாம். எப்படியும் கல்யாணம் ஆரத்துக்கு பின்னாலே நாம் ஒன்னும் சொல்லவாண்டாம்' என்றார் வாத்யார்.

இங்கிவர்களிப்படி இருக்க வெளியேபோன சேஷசாயி கொள்ளிடத்திற்குவந்து தலைமுழுகிக் கரை ஏறினான். அப்பொழுது பானுசேகரர் வீட்டு வேலைக்காரி தலையில் ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு அங்கு வந்தாள். அவனைக் கண்டாள். சிகை அறுபடுவானேனென்று கேட்டாள். அவனு மங்குமிங்கும்பார்த்து யாருமில்லையெனக்கண்டு தன்பேரில் ஒரு குற்றமுமில்லாமலும் வாத்யார்மேலும் அவர் மனைவிமேலும் பலவாகக் குற்றமாகவும் சொன்னான். அவளும் அவனிடத்தில் அதிக அன்பாய்ப் பேசிக்கொண்டே தான் கொண்டுவந்த பெட்டியை கொள்ளிடத்தில் தூக்கி யெறிந்தாள்.

'அதென்ன' என்றான் சேஷசாயி.

‘என்ன எழுவோ! எங்காத்துப் பொண் இருக்காளோன்னு கலாவதி அவ இதை இப்படி ஆத்துலே விட்டேட்டுவரச்சொன்னு’ என்றாள் சேஷி.

உடனே அவன் ‘நான் ஒரு சேதி சொல்லோணும்முன்னு நெனக்கரேன் ஆனா பயமா இருக்கு’ என்றான்.

அவளும் சிரித்துக்கொண்டே ‘எங்கிட்டச் சொல்லேன். அதுக்கென்ன. நான் ஒங்கக்காளாட்டமா நெனச்சுக்கோயேன்’ என்றாள்.

சேஷன்—‘சொல்லுவேன் - பயமாயிருக்கு - நீ மாட்டேனுன்னூட்டா என்ன பண்ரது - அப்பரம் தலைக்குவருமே.’

சேஷி—‘ஆணப்புடிக்க நான் ஒத்தர் கிட்டவும் சொல்ரதில்லை நானும் என்ன வாத்யாராம்படயான்னுபயப்படரயா? பயப்படாதேசொல்லு’.

சேஷன்—‘நீ ஏழை தானே. நான் ஒருயுத்திசொல்ரேன் கேட்டா ஒனக்கு ரொம்ப பணம் கெடக்கும்.

சேஷி—‘அப்படீன்னா சொல்லுடா. நீ என்னசொன்னாலும் கேக்கரேன். ஒம்மேலே கூட எனக்கு ரொம்பநாளா கண்ணுண்டு. நீதான் நிமிந்துகூட பாக்கரதில்லை’ என்றாள். பிறகு இருவருமாய் நெடுநேரம் ஏதேதோ ரஹஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருந்து கலைந்து விட்டார்கள்.

இதெல்லாம் இப்படி இருக்க மறுநாள் பொழுதுவிடிந்து கிட்டத்தட்ட எழுநாழிகையானபொழுது அவ்வூரில் ஒரு வடக்குத்தியான் வந்தான். எண்ணெயைக்கண்டு எவ்வளவோ வருஷமான அவன் தலைமயிரை உயர்த்தி உடுக்குப்போல் கொண்டைகட்டியிருந்தான் நெற்றி முழுவதும் முகமெங்கும் இடுப்புக்கு மேலுடம்பெங்கும் ஒரொ பூச்சாய் திருநீறுபூசியிருந்தான். நல்ல லக்ஷணங்களுடன் கூடிய அவன் செம்முகத்தில் கன்னங்கறேலென்று மீசையும் தாடியும் ஜ்வலித்துக்கொண்டிருந்தது. கழுத்தில் எழெட்டுவடமாக சிறிதும் பெரிதும் குட்டையும் நீளமுமாய் ருத்திராக்கமாலை யணிந்திருந்தான். தோள்களிரண்டிலுமிருந்து கம்பளப்போர்வைகளும் அழுக்கேறித்தடித்த துணிகளும் மடித்துப்போட்டுத்தொங்கின. அத்துடன் இரண்டொரு துணிமுடிச்சுக்கட்டுகளும் தொங்கின. அவற்றின்மேல் காசிப்பித்தளைச்சொம்பு ஒருபக்கமும் சுரைக்குடுக்கை ஒரு பக்கமும் தொங்கின. இவற்றையெல்லாம் வரிந்து ஒரு அழுக்குத்துணியால் தன் உடம்புமேல் கட்டியிருந்தான். இட

துகையில் பிடித்துக்கொண்டு இடதுதோளில் சார்த்தியனவாய் இரண்டொரு கோணலுள்ள தடிகளும் முண்டு முறடுள்ள தடிகளும் யோகதண்டமுமிருந்தன. வலதுகையில் சற்று நீட்டுப்போக்குள்ளதும் ஸன்யாஸிகளுடைய கடம் போன்றதும் மேலேமூடிபோட்டு வளையமும் வைத்ததுமான ஒரு பாத்திரம்வைத்திருந்தான். சாணைப்பால் நிறமுள்ள ஒரு பெருந்துணியை இடுப்பில்கட்டி முன்கச்சு பின்கச்சாக வரிந்திருந்தான். காலெல்லாம் ரோமராசிகள் மண்டி வளர்ந்து நெடுந்தூரவழிப்பயணத்தால் புழுதிபடிந்து அதன்மேல் ஓரோரிடத்தில் வேர்வை வழிந்து அழகாயிருந்தது அவன் பேசிய வார்த்தையோ யாவர்க்கும் தெரியவில்லை. இடையே ராமேச்சுரமென்றும் பிராமணன் என்றும் ஸ்தலயாத்திரையென்றும் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரொருவார்த்தை வரும் தமிழில் ஏதாவது சொன்னால் சிரிப்பான். சிறுவர்களைக்கண்டால் தட்டிக்கொடுப்பான். இவனைக்கண்டு யாவரும் அங்கங்கே கெக்கலி கொட்டுவார்கள். சிரித்துக்கொண்டே கண்டபடி தமிழ்மொழியால் திட்டுவார்கள் பரிஹஸிப்பார்கள். அவன் ஏதாவது சொல்லுவான். அவனுடைய பேச்சுக்கும் ஜனங்களுடைய பேச்சுக்கும் ஸம்பந்தமே இராது.

இப்படியாகவந்து ஊர்முழுதும் சுற்றி பிச்சைவாங்கி கிட்டத்தட்ட இருபது நாழிகைப் பொழுதிற்குமேல் கொள்ளிடத்திற்குச் சென்று அங்கோர் மரத்தடியில் சோறுபொங்கி தன்மூட்டையை அவிழ்த்து அதிலிருந்து ஓர் இருப்புத்தகிட்டை எடுத்து அடுப்பின் மேல்வைத்து நெருப்பை நன்றாய்மூட்டி தன்முடிச்சிலிருந்து கோதுமைமா கொஞ்சமெடுத்துப்பிசைந்து சிறுசிறுரொட்டியாய்த்தட்டிக் காய்ச்சி மொறுமொறுக்கச் செய்தெடுத்துக்கொண்டு ஆற்றோரத்துக்குவந்து அங்கெல்லாம் நன்றாய்க்கூட்டி சுத்திசெய்து கண்ணைமூடிக்கொண்டு கடவுளைத்துதித்திருக்க அந்நேரத்தில் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு சேஷசாயிவந்து அருகே உட்கார்ந்து உற்றுநோக்கினவனாக சற்றுநேரமிருந்தான். அப்பால் பாநுசேகரர் வீட்டு வேலைக்காரியும் தான் முந்தியே செய்துகொண்ட ஏற்பாட்டின்படி அங்கு வந்துசேர்ந்தாள். அவளைக்கண்டு அளவற்ற ஆநந்தங்கொண்டு சேஷசாயி 'நல்ல வேளையாவந்து சேந்தயே - எங்கேவராமலே இருந்துவெயோன்னு ரொம்பவிசாரமா இருந்தது' என்றான். 'பார்த்துப்பேசவாண்டாமா' என்றாள் அவளும்.

சேஷ—'அதெல்லாம் பயப்படாதே. அவனுக்கு நம்மபேச்சு கொஞ்சங்கூடத்தெரியாது. அதுவுமில்லாமல் அவன்கொஞ்சம் செவிடாட்டமா இருக்கு எல்லாம் காலம்பரப் பாத்தூட்டேன்'.

சேஷி—'வேறே ஆராவது வந்துட்டா என்னடாப்பா பண்ரது?'

சேஷ—'அதெல்லாம் நானுன்னு இருக்கேன். இந்தத்தொரக்கியாராவது வர்ரதுண்டா? அதுவும் இத்தன்னுழிப்போதுலே.'

சேஷி—'என்னய்க்கண்டால் ஆருக்குத்தான் புடிக்கும்? மொட்டத்தலச்சியோன்னே?

சேஷ—'அதெல்லாம் எனக்குத்தேவலே. ஒங்கிட்டத்தான் என் பிராணனெல்லாம் இருக்கு. மொட்டத்தலயா இருந்துட்டா பிரமாதமாக்கும்? நீ ஒரு பாட்டுக்கேட்டதில்லையா?'

சேஷி—"எங்கடா - எங்கடா - சொல்லுபாப்பம்."

சேஷன்—'கட்டுப்படாது அழுக்கடையாது கனத்தசண்டைக்
கெட்டுப்படாது எண்ணெய்செல்லாதிள மாதர்கையால்
குட்டுப்பட்டாலும் கெணீர்கெணீரென்ன ஓசையிடும்
மொட்டைத்தலைக்குச் சரியோமயிர்த்தலை மூடர்களே?

சேஷி—'யாரோ புருஷன் சொன்ன பாட்டாட்டமா இருக்கு எங்கண்ணே! எத்தனை நன்னாயிருக்குடீ! இதைப்பாடினவன் ரொம்ப கெட்டிக்காரனா இருக்கோணும்.'

உடனே சேஷசாயி "அடியே ஒன்னை நான் சேஷீன்னு கூப்படரேன். என்னை சேஷான்னு கூப்படரயா!" என்றான்.

"எம்பேரு அதுதாண்டா - ஒனக்குத் தெரியாதா" என்றாள் சேஷி.

இப்படியே சேஷனும் சேஷியுமாக நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து முடிவில் ஏதோ ஒருவிஷயமாகத் திரும்பி "நாய்வித்தகாசு கொலக்குமா? நமக்கென்ன எப்புடியாவது இறக்கி முடியவேண்டியதுதானே. கிள்ளட்டிகையின்னுப்போலே வருவா? அதுவும் நூரு எரணூருபோட்டாத்தானே வரும்" என்றாள் சேஷி.

சேஷன்—'அதெல்லாம் கடக்கு. நாம ஒத்தர் ஜோலிக்கும் போகவாண்டாம். பேசாதெ நான்சொன்னபடி சேஞ்சமோ ஸொஹமுண்டு!

சேஷி—'நீ என்ன சொன்னாலும் எனக்கு ஸம்மதந்தான்.'

சேஷ—'ஒனக்கென்ன - நாளக்கே வாத்யாரை ஊருக்குப் போகச்சொல்ரேன். நீ எங்கயாவதுபே இத்தனை கஞ்சாமருந்து வாங்கிண்டுவா. அதை உருட்டி ஆளுக்கு கொஞ்சமாக்குடுத்தா

பயங்களெல்லாம் மயங்கிண்டு கெடப்பன். நீ வாத்யாராம்படயாகிட்ட படுத்துக்கிண்டு மொள்ள தொரகுவலேமட்டும் அவுத்துக்கிண்டு எங்கிட்டகொண்டுவந்துருடு. நான் உள்ளபே தூக்கப்பூட்ட மட்டுமேலே துணியெவிரிச்சுக்கட்டிக்கிண்டு வெடியரத்துக்கு மின்னாலே கல்லணைக்குப்பேசுசேர்ரேன். நீ வெடிஞ்சதும் பரப்பட்டு அங்கே வந்துசேரு. அப்பரம்பாத்துக்குவம்.'

சேஷி—'அப்பரங்கூட எனக்கு தெரியாதா. மகளே ஒஞ் சமத்துன்னு கேட்டதில்லியா? என்றாள்.

இப்படியே நெடுநேரம் பேசிக்கொண்டு ஒருவரோடொருவர் உல்லாஸமாய் இருக்கையில் வடக்குத்தியான் கடவுளைத் துதித்து விட்டு தான்சமைத்த சோற்றையும் தட்டியரொட்டியையும் காக்கை கட்கும் மீன்களுக்கும் போட்டுவிட்டு, 'ஜெய் பிஸ்பநாத்-மஹாதேவ் ஜய் பிசாலாக்ஷி' என்று பெருங்கூச்சலிட்டான். அந்த இரைச் சலைக்கேட்டு ஆற்றின் வேறொரு துறையிலிருந்த சிறுபிள்ளைகள் ஓடி வந்தார்கள்- அதைப்பார்த்து சேஷிமெள்ள வடக்குத்தியானை பரி ஹாஸமாய் பேசுவதுபோல் அபிநயித்துவிட்டு நழுவினாள். பிள்ளை களெல்லாம் தமது வழக்கம்போலவே வடக்குத்தியானை தொந்திரை செய்தார்கள். அதுபொறுமல் அவன் அங்கிருந்து ஏதோசொல்லி க்கொண்டு விரைவாய் நடந்தான். சேஷசாயியும் நல்ல வேளையாய் வேறுயாரும்பாராமல் சிறுவர்களே பார்த்தார்களே என்று மனமகி ழ்ச்சியுடன் அங்கிருந்தகன்றனன். அத்தறுவாயில் வாத்யார் அவ னுக்கெதிரில் வந்து அவனை இறுகத்தழுவிக்கொண்டு "எலே சேஷா ஒன்னய் நான் எத்தனெ அந்தரங்கமா எண்ணியிருந்தேன்.. நீகூட இப்பிடிப்பண்ணலாமா. அந்தப்போக்கிரிமுண்டைஎன்ன மோ எண்ணிக்கிண்டு ஒம்மேலே பழிபோட்டா. படவாப்பசங்க என்னமோ ஒன்னும் விசாரிக்காதபடி ஒன்னே அடிச்சுப்பிட்டான். நீயாவது எனக்கு சொல்லப்படாதா? ரொம்ப அடிச்சுப்பிட்டானா என்ன? என்னடா சேஷா நான் சொல்ரது ஒன்காதுலே படல் லியா? எங்கயோ பாத்துக்கிண்டு நிக்கிரயேடா? ஹ்ம்-நானென்ன பண்ரதுபோராதவேளெ! இல்லாபோனா என் எனக்கு மஹா அந்த ரங்கமாயிருந்த சிஷ்யாளிலே ஒத்தன் மாத்துலேந்து விழுந்து செத்தான். ஒத்தன் நான் சொல்ரத்தைக்கூட கவனிக்கமாட்டே னுங்கரான் என்று வரிசையாய்ச் சொல்லி அழுதார்.

பார்த்தான் சேஷசாயி. நல்லவேளையாய் வாத்யாரே வலுவி லேவந்து ஸமாதானம் செய்துகொண்டாரென்று அகமகிழ்ந்தான். அவரைத் தேற்றினன். "நான் செய்யர தொன்னும் பெசகாய்

இராதுன்னுதான் ஒங்களுக்குத் தெரியுமே. என் பொல்லாதவேளை தான் நீங்ககூட அடிச்சேள். இல்லாபோனா எங் குடுமியை இப்படி அறுக்க பார்த்துக்கிண்டிருப்பேளா? என்றழுதான்.”

“அழாதேடாப்பா சேஷா ஒனக்கு என் காசித்துப்பட்டாவைத்தரேன். அதையாவது குடுமி வளர்ரவரையில் தலையில் கட்டிக்கோ. நம்மாத்துக்குப் போகலாம் வா. நீ இல்லாபோனா எனக்கென்ன இருக்கு. நீ ஆத்துலயே இரு, இன்னம் ஒருவாரஷம் வெளிலேயே வரவாண்டாம். ஆர்வேணுமோ எப்படிவேணுமோ வம்பளக்கட்டும். நீ பயப்படாதே” என்று சொல்லி அவனைத்தேற்றி அழைத்துக்கொண்டு, தன் மனோரதம் முடிந்ததென்றும், தன் குற்றங்களையெல்லாம் சேஷசாயி மறைத்தே வைப்பானென்றும், அவன் எது செய்தாலும் செய்யட்டுமென்றும், எண்ணிக்கொண்டே வீடு சேர்ந்தார். சேஷனும் தன் எண்ணம் எளிதில் முடியுமென்று மனதிலெண்ணி வெளிக்கு ஆசைவார்த்தை சொல்லிக்கொண்டு பின் நடந்து வீட்டுவாயிலிற் சென்றதும் சற்றே தாழ்த்து நின்றான். உள்ளேவரச்சொல்லிப் பலவாறு பிடிவாதஞ்செய்தும் மசியவில்லை. “நானென்னதான் பண்ரது” என்று தலையி லடித்துக்கொண்டார் வாத்யார். நாளைக்கி அகண்டகாவேரிக்குப் பரப்பட்டுப்பே எனக்கு ஒரு சொம்புஜலம் கொண்டுவரதாயிருந்தாக்கே நான் உள்ளே வர்ரேன், நீங்களேபேய்க் கொண்டுவரோணும் நான் அந்தத் தண்ணிலே ஸ்நாநம் பண்ணோணும்” என்றான் சேஷன். ஸரித்தான் என்று ஒப்புக்கொண்டார் ஏழை வாத்யாரும். என்ன பண்ணிருந்தென்ன? அறிவு கொஞ்சமாவது இல்லாவிடில் எல்லாம் வீண் அவலமாகவே முடிவதில் தடையேது?

சேஷசாயி வீட்டுக்கு வந்ததும் எல்லாரும் அவனிடம் அன்பு காட்டினார்கள். தாங்கள் செய்தது பிழையென்று ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்டு தம்மை மன்னிக்கும்படி வேண்டினார்கள். இப்படியாக ஒருநொடியில் முன்னிலும் அதிகமாக சேஷசாயி யாவருடனும் பழகிவந்தான். நெல்லினுமி சிறிது நீங்கிப் பழமைபோல் புல்லினும் பழைய திண்மை நிலைகெட்டுவிடுவதுபோல் அவனும் அவர்களெல்லாரிடத்தும் சொல்வேறு மனம்வேறாய் நடித்துவந்தான்.

அதிகாரம் ௧௫.

“சுட்டுக்கோல் போல எரியும் புகுவரோ
நட்டாரெனப்படுபவர்”—நாலடியார்.

“உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு.”—குறள்.

"இன்பமும் துன்பமும் வருவதும் போவதுமான அவத்தைகளையுடைய ஓர் மனிதன் தண்ணீரில் முழுகிவிட்டான்போ லிருக்கிறது. நெடுந்தூரத்திலிருந்தே மனிதனாகத்தானிருக்கவேண்டுமென்றெண்ணுவதற் கெவ்வளவோ குறிகளிருந்தன. எந்த உயிரானுலும் தன்னுயிரைப்போலவே எண்ணிக் காப்பாற்றுவது அந்தணர்க்கு இன்றியமையாக்கடமை. அப்படியிருக்க மனிதனையே என் காப்பாற்றுமலிருப்பேன். மனிதனுக்கு மனிதன் உபகாரமில்லாவிட்டால் அறிவென்ப தொன் றிருப்பதில் லாபமென்ன? இது யாராயிருந்தாலும் ஸரி, எதுவாயிருந்தாலும் ஸரி நாம் ஒருகை பார்ப்போம்" என்றெண்ணுவதுபோன்ற முகக்குறியுடன் ஓர் தவவடிவினர் கொள்ளிடத்தில் குதித்து நீந்தி நட்டாற்றிற்சென்று, அங்கு கையோய்ந்து காலோய்ந்து மெய்ம்மறந்து உடம்பெல்லாம் மறத்துப்போய் நீலநிறமடைந்து தலை தாழ்ந்து கைசோர்ந்து கால் பரந்துகிடந்த பிரேமநாதனை காலைப்பற்றி யீர்த்துக்கொண்டு கரைக்குவந்தார். அவன் உருவழகையும் உடல் தண்ணீரில் மாறிய மாற்றத்தையும் கண்டு கண்களில் நீர்பெருகி வெள்ளமாயோட உதடு துடிக்க மார்பு படபடவென்றடிக்க உடம்பெங்குஞ் சூடுபட சற்றுத் திகைத்துநின்று பிரேமனின் இரண்டு கால்களையும் தமது இரு கைகளா லிறுக்கிப்பிடித்து கிறுகிறுவெனத் தட்டாமாலை சுற்றினர் ஜீவகாருண்யமூர்த்தியாகிய பெரியோர். சுற்றச்சுற்ற பிரேமனுடைய வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் கண்களிலிருந்தும் நீர் கொட்டியது. ஆனாலும் அவன் உயிர்த்தானில்லை. பிறகு அவனைக் கீழே மல்லாத்திப்போட்டு அவனுடம்பிலிருந்த துணியை அவிழ்த்தெறிந்து அவன் கைக்கட்டை அறுத்து அவனுக்கெதிராக நின்றுகொண்டு அவன் இருகைகளையும் தன் இருகைகளாற்பிடித்து அவற்றை அகட்டியும் மார்புமீதுவைத்து அழுத்திக்கட்டியும் பலமுறையாக அவனுடைய மூக்கின்வழியே தண்ணீர் ஓடிவரச்செய்தார். பிறகு இன்னொருதடவை தட்டாமாலை சுற்றினர். இப்படியே ஒரு முகூர்த்தநேரம் சென்று நல்லவேளையாய் பிழைத்தான் பிரேமன். சிறிது சுவாசம் வந்தது. கால்களைப் புறட்டினான். நாக்கை உள்ளே இழுத்துக்கொண்டான். கடைசியாய் கண்ணைவிழித்தான். உடனே தவமுனிவர் சில சிறுசிறுய்களைக் கொண்டுவந்து தீமூட்டி அதில் தன் கைகளைக் காய்ச்சி அவன் தலையில் பிடித்தார். சிறு கற்களைக் சூடுபிடிப்பித்து சுடச்சுட அவனுடைய தலையிலும் உள்ளங்காலிலும் வைத்தார். இப்படியே ஏதேதோ செய்து கடைசியாய் நல்லறிவு அவனுக்கு வர, தன் நன்றியைக் காட்டும்படி வாயைத் திறந்தான் நா எழவில்லை. கையைத் தூக்கி குறிகாட்டப்பார்த்

தான் அதுவும் உதவவில்லை. முகத்தாலேயே வணக்கத்தைக் காட்ட எண்ணினன். தலையை அசைக்க முடியவில்லை. பிறகு சிரித்தான் கொஞ்சம். கடைக்கண்களின் வழியே நீர் ததும்பி காலைநேரத்தில் புல்நுனியிலிருந்து சொட்டும் பனித்துளிபோல் முத்துமுத்தாய் உதிர்ந்தது. இதையெல்லாம் முகக்குறியினுலேயே உணர்ந்த பெரியவர் சிறுவனுடைய உடம்பையெல்லாம் நன்ருய்ப் பிடித்துவிட்டு சொடகுவாங்கினர். பிறகு ஏதோ கொஞ்சம் உணவு தேடிவந்து கொடுத்தார். பிறகு சிறுவனைத் தன் தோளிலேற்றிக் கொண்டு நெடுந்தூரம் கிழக்கேவந்தார். வரவர இருட்டும் அதிகரித்தது. எங்குபார்த்தாலும் மரங்களும் தோப்புகளுமாகவே இருந்தன. அவ்வழியே மெள்ள நடக்கும்போது பெரியவர் சிறுவனுக்கு எவ்வளவோ தத்வோபதேசங்களும் தந்திரங்களும் சாஸ்திரங்களும் வெளியிட்டு இடையிடையே அவன் நகைக்கும்படியான கதைகளும், அவனையும்விடத் துன்பப்பட்டவர்களுடைய வரலாறுகளும், அவன் இவ்வுலகில் நடந்துகொள்ளவேண்டிய வழியும் சொல்லிப் போழ்துபோக்கினர். இரவில் பதினைந்து நாழிகைப் போழ்து இப்படிப்போக பெரியவர் பிரேமனைப் பார்த்து " சிறுவ! நீ இவ்வழியே ஏகுக யானுன்னுடன் இனி வருவேனல்லேன். இதோ ஊரடுத்தது. இவ்வூராள்வோன் என் பகைஞன்போல்வான். என்னுயிர்வாங்கக் காத்திருப்பவன். ஆதலின் யான் வேற்றுத்துறையிற் சேறல்வேண்டும். நீ யாதுமஞ்சற்க இவ்வூர்க்காவலன் உன்பால் மிக நட்புரிமையோடிருந்து வேண்டியதுதவுவன். இனி உனக்கெல்லாம் சுபமேவருக. எவ்வுயிருடனும் விரகிற்றீ, பாலிற்படுநெய், பூவினற்றம், எள்ளுளெண்ணெய் என்றுங்கு விரவிநிற்கும் இறைவன் உனக்கு அலகிலின்பந்தரும். அன்னேன் செய்ஞ்ஞின்றெரியும் விளக்கொத்த நீலமணிமிடற்றை மறவாது அவன் திருவடிக்குறுதியா மன்பொடொழுகுவையேல் இம்மையும் மறுமையும் உய்ந்தனை எஞ்சொற்கெதிர்மாற்ற மியம்பற்க " என்ருர்.

இதுகேட்டு சிறுவன் அடியற்ற பனைபோல் அவர் அடிக்கமலத்தில் அலறி வீழ்ந்து பேச்சறியாமல் திகைத்து விம்மி விம்மியழுது தன்னைக் கைவிடக்கூடாதென மன்ருடினன்.

" அடா இளைஞ! உன்னோடிருப்புழி யான் துன்புறுவேன் ஐயமின்று. என்னை விட்டொழிதி, மூத்தோர் சொல்லை மீருதே. சிறுபோழ்தில் உன் நண்பரையெல்லாம் பெறுவை, உன்போலினி இன்புற உள்ளோர் இடையாது. அகறி! இக்கணமே விரைந்தகறி " என்ருர் தாபதர்.

“எனக்கெந்த நன்மைவருவதாயினும் உம்மை விட்டு நீங்கேன் பெரியாரைத் துணைக்கொள் என்பது நீதிமொழி. நீங்களென்னை விட்டுப் பிரிந்தால் எனக்கு எந்த இன்பமும்வேண்டாம்” என்றான் சிறுவன்.

“ஏதடா! கொடிறும் பேதையும் கொண்டது விடா எனப் பற்றுகின்றனை. இனி என்மொழி தவறில் வெகுள்வேன்” என்று பெரியோர் சொல்லிக்கொண்டு வரும்போதே என்னைக்காப்பாற்றி உயிர்தந்த நீங்களே கோபங்கொண்டு தள்ளிவிட்டால் நானெங்குச் செல்வேன்? எனக்கு வேறுகதியாவர்! ஹா! பொல்லாத பிறப்பே! ஐயகோ ஓ” என அழுதலறினான் பிரேமநாதன்.

உடனே பெரியவர் போக்கற்று “உன் செயலிதுவாயின் என் பின்னேவா. வருவ வரட்டும்” என்று அவனை அன்புடன் அணைத்தழைத்துக்கொண்டு சிறிது தூரம் சென்று ஓர் மரத்தடியில் புல்லாந்தரையிலுட்கார்ந்தார். சிறுவனும் உடனே உட்கார்ந்தான். கொஞ்சநேரத்தில் சிறுவன் அயர்ந்து நித்திரைபோய்விட்டான். இதுதான் தருணமென எழுந்தார் பெரியவர். நிலவில் விளங்கிய அவன் முகத்தைக்கண்டு இவனை எப்படி நீங்குவேன் என்றெண்ணினார். சற்றேற முன் நடந்தார். திரும்பி வந்தார். மறுபடி சென்றார். அன்பாகிய தளையால் கட்டுண்டு அப்புறமிப்புற மசையமாட்டாமல் திகைத்தார். “போயொருகால் மீளும், புகுந்தொருகால் மீண்டேகும்- ஆயர்கொணர்ந்த அடுபாலின்-தோயல்-கடைவார்தம் கைபோலுமாயிற்றே” என்றதுபோல் மனம் அசைந்து இன்னொருமுறை அவனிடம்வந்து அவனுக்கு யாதொரு தீங்கும் வராதிருக்கும்படி நம்தாயானசெல்வத்தை மனதில் எண்ணி கையில் திருநீறெடுத்து திரியம்பகமந்திரம் ஜபித்து அவனுடம்பெல்லாம் பூசிவிட்டு விரைந்துபோயகன்றார்.

பலவித அசைவுகாரணமாகப் பெருந்தூக்கம் தூங்கிய பிரேமன் இரவின் இருபத்தாறு நாழிகைக்குமேல் விழித்து பக்கத்திலெல்லாம் தடவிப்பார்த்து அங்குமிங்குஞ்சுற்றி பெரியவரை எவ்விடத்துங் காணாமல் ஐயகோ என்னைப் போய்வீழ்ந்து கதறுந்தறுவாயில் “புடீ! புடீ! சிக்கிக்கொண்டான் பயல்” என்று பெருங்கூச்சலிட்டுக்கொண்டு அநேகம் சேவகர்கள் தீவட்டியும் தடியுமாகவந்து சிறுவனை வளைந்தார்கள். பிடித்தார்கள் இறுகக்கட்டினார்கள். குத்து உதையென்று ஆளுக்கோரிடத்தில் கூச்சலிட்டு அவனை இழுத்துக்கொண்டு பலபல்லென்று விடியுந்தருணத்தில் அரசனிடம் கொண்டுபோய்விட்டார்கள்.

அவ்வரசர்பெருமான் சோழன். உறையூரே தனக்கு உறைவிடமாகக்கொண்டிருந்தானானாலும் செம்பொற் சோதீச்சுரனை ஐயாற்றப்பனை வழிபடுவதற்காக திருவையாற்றில்வந்து ஒருமாதமாக இருந்தான். எல்லாநற்குணமும் அவனிடமே குடிகொண்டிருக்கும். உயிர்களிடத்து அளவில்லா அன்புடையவன். எப்போதும் யாவரிடத்தும் சிரித்தமுகத்தோடிருப்பவன். ஆதலால் சிறுவனை அவ்வாறு அவர்கள் கொண்டுவந்ததற்கு சிறிது கோபங்காட்டினான். உடனே தன் பக்கத்திலுள்ளவர்களுக்கு கட்டளையிட்டு ஒருநொடியில் சிறுவனுக்கு காலைக்கடனெல்லாம் முடித்துவைத்து அறுசுவையுடன் கூடிய உணவுகிடைப்பித்து, தன்விடுதியில் ஓர் நல்ல படுக்கையில்படுத்துறங்கச்செய்தான். அப்படியே தூங்கும்போது இடையிடையே எழுப்பி அந்தந்த நேரத்தின் நித்யகர்மங்களை செய்யச்செய்து, நல்ல உணவுகொடுத்து மறுபடி படுக்கச்செய்தும் வந்தான்.

தண்ணீரில் முழுகிய அசதிகாரணமாக ஒருநாள் முழுவதும் இப்படியிருந்து மறுநாள் எல்லாந்தெளிந்தெழுந்தான் சிறுவன். இதேது புதுமையாயிருக்கிறது. நாம் படுத்தது காடல்லவோ. நம்மோடு துணைவராயிருந்தது பெரியோரல்லவோ என்னமாயிங்குவந்தோமோ யார்செய்த உதவியோ என்றெண்ணி அங்குமிங்கும் பார்க்கையில் அரசர்பெருமான் எதிர்வரக்கண்டான். உடனே தன் நன்றியுணர்வைக்காட்டி "ஏந்தலே! உம்முடைய அரசு நெடுநாள் நிலைத்திருக்கட்டும். உம்மைப்போல் பரம உபகாரி யாவருண்டு. கேளாதேயிருக்க வலிது வந்து உபகாரம்செய்த கருணைமேகம் நீரே. உமக்கு நானென்னசெய்யப்போகின்றேன். செய்யாமற் செய்த உதவி உம்மிடத்திலேயேகண்டேன். காப்பதே தொழிலாயுள்ள ஸ்ரீ மஹாவிஷ்ணுவே போலிருக்கின்ற உமக்கு என்னால் ஆவதென்ன இருக்கின்றது. ஆனாலும் உமது கருத்துக்கிசைந்த எதுவும்செய்யக் காத்திருக்கின்றேன்" என்றான்.

அரசர்கோவும் "எனக்கும்மாலாவதொன்றுண்டு. செய்வீரோ" என்றான்.

"அது எதுவானாலும் செய்வேன் - செய்வேன் - செய்வேன்" என மும்முறைசொன்னான் பிரேமன்.

"மொழிவது மறுக்கக்கூடாது" என்றான் ஏந்தல்.

"தவறேன் - தவறேன்." என்றான் சிறுவன்.

அன்று பகல் பதினைந்துநாழிகைப்போழ்தில் உணவானபின் நல்ல வாஸனைகலந்த சந்தனம்பூசி உயர்ந்த மலர்சூடி தாம்பூலந்தரி

த்து தன் உடைவாளைக் கையிலேந்தி, பிரேமனுடனும், அவைகாப்பார் மெய்காப்பவர்களுடனும் புறப்பட்டு ஸ்ரீபிரணதார்த்திஹாருடைய திருக்கோயிலுக்குச் சென்றான் அரசன். அங்கு பெருமான் முன்பாக ஒருவரைக்கட்டி நிறுத்தியிருந்தது. அவர்தான் பிரேமநாதனை கொள்ளிடத்திலிருந்தெடுத்துக்காத்த பெரியவர். அவரைக்கண்டதும் பிரேமன் ஓடித் தழுவினான். முத்தமிட்டான். அவர்கட்டை அவிழ்த்தான். விழுந்துவிழுந்து வணங்கினான். கண்களில் ஆநந்தநீர்சொரிய தாயைக்கண்டகன்றைப்போல் நின்றான். அரசர்பெருமான் சிறுவனைப்பிடித்திழுத்து, "அவரண்டை போகவேண்டாம்" என்று சொல்லி, தன் மெய்காப்பாரைப் பார்த்தான். அவர்கள் சிறுவனைப் பிடித்திழுத்துக் கொண்டுவந்தார்கள். உடனே இரண்டுசேவகர்கள் அந்தப் பெரியவரை எங்கோ அழைத்துக்கொண்டுபோய் அவர் உடம்பெல்லாம் கலவைகள் பூசிப் பன்னீர்தெளித்து தலையில் பூமுடித்து இடுப்பில் உயர்ந்த பட்டாடைசுற்றி இரண்டுகைகளையும் பிணித்து ஓர் பட்டுக்கயிற்றால் மெதுவாய்க்கட்டி பலிபீடத்தண்டையில் கொண்டுவந்தார்கள். பெரியவர் பெரும்பெருமான் முன் முழங்காலிட்டு உட்கார்ந்து கண்ணைமூடினார். அத்தறுவாயில் அரசன் சிறுவனைப்பார்த்து "இவரை உமதுகையால் இரண்டுதுண்டமாக இந்தக்கத்தியால் வெட்டி யெறியவேண்டும். இதுவே நீர் எனக்குச்செய்யவேண்டிய உதவி. இதில் தவறக்கூடாது" என்றான்.

சிறுவனோ காதைப்பொத்திக்கொண்டு, "இதுவென்ன அநியாயம்! இடமோ சொல்லாலும் பொருளாலும் மனதாலும் நினைக்கமுடியாத பிறப்பில் பெருமான் திருக்கோயில். இங்கு கொல்லப்பட நிற்பவரோ அந்தணர் - பெரியவர் நல்லவர். எனக்கு பரம உபகாரி. மேலான விஷயங்களை உபதேசித்தகுரு-செய்யும்செய்கையோ கனவிலும் கையாடத்தகாதகொலை. இதுதானா உமது அரசாளும் ஒழுக்கம். பலே!!" என்றான்.

கோமானும் "அதெல்லாம் உம்மைக்கேட்கவில்லை. நான்செய்துகொண்ட பிரதிக்ஞை அது. எனக்கு அவர் வேறுபட்டவர். சொன்னசொல்தவறவா போகின்றீர்" என்றான்.

பிரேமனோ "அரசே! நீர் எல்லாநீதியும் கற்றவர். உம்முடன் யார்தான் பேசவல்லவர். இவரை விட்டுவிடலாகாதா?" என்றான்.

வேந்தன்—"நான் அரசனாகையால் பிடித்ததுவிடேன். உமது கையாலேயே அவர் வெட்டுப்படவேண்டும்."

பிரேமன்—"நீரும்உபகாரி; அவரும்உபகாரி. இரண்டுஉபகாரிகளில் ஒருவர்சொல்ல இன்னொருவரை கொல்லல் அழகல்ல."

வந்தல்—"அந்தணனுயிருந்தும் சொன்னசொல் தவறலாமா? உயிர்போனாலும் ஸத்யம் தவறலாமா? தவறேன் தவறேன் என்று வெகு ஒழுங்காய் சப்தம்செய்தீரே! பளா!!."

பிரேமன்—"அந்தணனு யிருப்பதால்தான் கொலையில் பின் வாங்குகிறது. நானே இதுசெய்வது என் சாதிக்கே வீண்பழிப்புக்கிடனாகும். ஆதலால் என்னை இதில் உள்ளாக்காதேயும்."

அரசு—"இவ்விஷயத்தில் நான் எள்ளளவும் இரக்கமில்லாதவனுனேன் நீர் கொல்லுவீரா மாட்டீரா? பொய்ஸத்யமா செய்தீர்?"

சிறுவனும் நெடுநேரம் எண்ணிப்பார்த்து வாக்குத்தவறுவது பெரும்பிழையோ உபகாரமும் உபதேசமும்மறந்து, கொலையும் செய்வது பெரும்பிழையோ என்று முடிவுசெய்யமாட்டாமல் ஒருயுக்திசெய்து "ஓ நிருபனே! நீரொன்றும் தெரியாதவரன்று. இந்த மனிதஜன்மம் நிலைத்ததா? எப்பொழுது எந்த இடத்தில் எந்தமாதிரி இக்காயம் விழுமோ? அவரவர் வினைக்கேற்கவருவதும் போவதுமாயுள்ள இந்த உடம்பைப் பெரிதாயெண்ணி எவ்வளவோ பிழைகள்செய்வது கேடாகத்தானே முடியும்? எப்பொழுதோ நம்மைக்கேளாமல் கன்னங்கறேலென்ற மேனியும், குண்டுகுண்டான கண்விழிகளும், கோரமான பிறை எயிறும் ஆபாஸவடிவமும்கொண்ட அந்தகன்வருவது உண்மையன்றோ? 'தறியாறெருகணம் தறுகணாளன்' என்றதும் படித்ததில்லையோ? பிறந்துவிட்டால் இறப்பைத்தவிர்வது யாரால் முடியும். கோபம் பிடிவாதம்முதலிய எதுவும் சாங்காலத்து சிறிதும் பயன்படாதே. 'போற்றினும்போகான்' என்றும் அறியீரோ? அதிகாரம் ஆட்படைமுதலிய எதுவாவது சாங்காலத்தில் உமக்குத் துணைநின்று கூற்றுவனுடன் போர்புரியுமோ? 'நல்லாரென்னுன் - நல்குரவுன்னுன்' என்பதைக் கேட்டுமிலையோ? முடிசாய்ந்த மன்னரும் முடிவில் பிடிசாம்பரே யாவாரென்பதை மறந்தீரோ? நான் அரசனல்லவா என்று நீர் இப்போதெண்ணக்கூடும். அது என்னபெருமை? அதனுல் ஒருதுரும்பாவது சுகமுண்டா? யாவருடைய உயிருக்கும், ஆன்மாக்களுக்கும், கொடுக்கவேண்டுவது வாங்கவேண்டுவதாகிய பொருள்களுக்கும் கடன்களுக்கும், பெண்கள் பிள்ளைகளுடைய சுகத்திற்குமாகப் பாடுபடவேண்டிய பாரம் அரசனுடைய தன்றோ? ஜனங்கள்செய்யும்பாபத்துக்கு வரும் தண்டனை அரசனுக்குமன்றோ? எல்லாம் சுமக்கவேண்டிய கொடியஜன்மமல்லவா அரசனுடையது? ராஜாவென்று என்றைக்குப் பெயர்வந்ததோ அன்றே கஷ்டமும்கூட வந்தது. ஒவ்வொருவனும் தன்தன் புத்திக்கேற்ப எதாவது கோணலாகப்பட்டால் இந்த ராஜ்யத்தி லிப்படித்தானென்று திட்

டுவானே ஒழிய வேறென்ன? ஸாதாரண ஜனங்கள் அனுபவிக்கும் இன்பத்தில் ஆயிரத்திலொன்றாவது அரசனுக்குண்டா? மற்ற மனிதர்களைவிட அரசனுக்கென்னதான் பிரமாதமாயிருக்கிறது? எல்லாருமாய்ச்சேர்ந்து ராஜாதிராஜா என்று துதித்துப் புகழ்கின்றார்களே இந்தவீண்வார்த்தைதவிர உண்மையானலாபம் என்ன இருக்கிறது? இந்தப்புகழால் வரும் துன்பத்தைவிட அப்படிப் புகழ்பவர்களிடம் உள்ள இன்பமே அதிகமாய்த் தோன்றுகின்றது. உண்மையில் ஏதாவது வரும்படியுண்டா இந்தப்பெயரால்? கண்டவர்கள் அஞ்சி ஒதுங்கும்படியான ஓர் நிலைமையும் வேஷமும் வீண்டம்பமுமே ஒழிய அரசன் என்பதில் என்ன அதிகப்படி? அப்படி அஞ்சுவதால் அரசனுக்கு ஆநந்தக்குறைவே ஒழிய, அஞ்சுபவர்களைப்போல் பத்துப்பேருடன்கலந்து சுகமாய்ப்பேசி மற்றவர்கள் தன்னைச்சொல்லவும் தான் அவர்களைச்சொல்லவும் ஒருவரை ஒருவர் நெருங்கியிருக்கவுமான இன்பத்தை அனுபவிக்கமுடியுமா அரசன்? பிரமாதமாய் முகஸ்துதிசெய்வார்களே ஒழிய, உள்ளதைச் சொல்ல யாருமஞ்சும்படியான நிலைமை அரசனுடையது. தலையைக்காலை வலித்ததானால் ஜனங்களுடைய ஸ்தோத்ரம்வந்து அதை சொஸ்தம் பண்ணுமா? பிரமாதமானஜ்வரம் ஸன்னிமுதலியவற்றை ஜனங்களுடைய ஸ்தோத்ரம் நீக்குமா? ராஜாதிராஜா - ராஜமார்த்தாண்டா என்னும் புகழாகட்டும், உடம்பை விற்போல்வளைத்து கைகட்டி வாய்புதைத்து நிற்பதாகட்டும் தரையிற்கிடந்து வணங்குவதாகட்டும் அந்த அபாயகாலங்களில் பயன்தருமா? அரசனாக இருந்தால் மற்றவர்களுக்கு நோயுண்டாகும்படி தண்டிக்கலாம். ஆனால் அவர்களுடைய நோயைப்போக்க இவனுடைய கிரீடத்தாலாவது தோள்வளையங்களாலாவது செங்கோலாலாவது சிங்காஸனத்தாலாவது மகரகுண்டல ஹாரகேயூரங்களாலாவது குடை கொடி சின்னங்களாலாவது முடியுமா? இவ்வளவும் வைத்துக்கொண்டும் தங்கத்தாலும் ரத்னங்களாலுமிழைத்த துணிமணிகளை அணிந்துகொண்டு பராக் எத்ஸரீகா என்று புகழ்களை காதில் ஏற்றுக்கொண்டும் ஸாதாரண ஏழைகளைப்போலாவது இன்பமாய்த் தூங்கமுடியுமா? ஏழைகளுக்கென்ன ஊணில் குறைவா உறக்கத்தில் குறைவா? அடித்துப்போட்ட நாய்போல் தூங்குவதும் காலைமுதல் மாலைவரையில் தன் உடம்பை உழைத்து நெற்றிவேர்வை நிலத்தில் விழப் பாடுபட்டு லாபமடைந்து நிறைந்த மனதுடன் பிரும்ஹாநந்தமாய் மறுபடி தூங்கப்போவதும் அவர்களுக்கு வாடிக்கை. இப்படி அவர்களெல்லாம் ஆநந்தப்பட அரசனோ ரௌரவாதிநரகத்தைவிட அதிக அச்சந்தருவதாகிய கொடிய எண்ணங்களுடனும், ஜனங்களுக்காக கவலையுடனும் பகைவர்களிடத்து நிருந்தபயத்துடனும்

எப்போதும் ஸஞ்சலப்பட்டுக்கொண்டேதான் இருக்கவேண்டும். தன் தோள்களே துணையாக இராக்காலங்களில் உருமாறிப் புறப்பட்டு ஊரெல்லாம் அலைந்து ஜனங்களுடைய குறைவுநிறைவுகளை அறிந்து அதற்குத்தக்கபடி நடக்கவேண்டும். இவ்வளவு கஷ்டப்படுவதையும் எள்ளளவும் உணராமல் திடீரென்று வாய்புளித்ததோ மாங்காய்புளித்ததோ என்னும்படி அரசனை நிந்தித்துப் பேசுவார்கள்மட்டு மதிகம். ஆதலாலிந்த ஜன்மத்தை எடுத்து அடையக்கூடிய பலன் பரோபகாரமும் நிறைந்த கருணையுந்தான். இதில் பின்வாங்காதேயும். நான் சொல்வதைக்கேளும் என்னைப் பழியினின்றும் காரும்” என்றான்.”

அரசன்—“ஐயா, இந்தப்பிரஸங்கமெல்லாம் உம்மை யார்கேட்டார்கள். நல்லவேளையை வீணாக்கிப்போடுகின்றீர்கள். சொன்னபடி செய்வீர்களா மாட்டீர்களா.

என்னசெய்வான் சிறுவன்! மனந் தடுமாறினான். சொன்னசொல் தவறுவது பெரும்பிழையென்றான். நன்றி மறப்பது நன்றல்ல என்றான். நன்றி கொன்றவர்களுக்கு எவ்வுலகத்தும் கதியில்லை. அதுவே எல்லாவற்றிலும் கொடிய பாவம். “எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை — செய்ந்நன்றி கொன்ற மகற்கு” என திருவள்ளுவர் சொல்லியிருப்பதை அடிக்கடி எண்ணினான். பெரியவனை வீசிவிட்டால் கொலை, குருத்துரோகம், நன்றிமறந்தமை என மூன்றுபழி சுமரும். வீசாவிட்டால் சொன்னசொல்தவறல், அரசன்மொழி கேளாமை, நன்றிமறந்தமை என்னும் மூன்று பழி சுமரும், எப்படிச்செய்தாலும் நன்றிமறந்தமை வருவது திண்ணம் ஆதலின் இன்னொருமுறை கேட்பதே துணிவென்றெண்ணி “பூபாலா! என்னால் கொலைநடக்கவேண்டாம். எனக்கந்த ஒருவரம் தாரும். வேறு என்னசொன்னாலும் கேட்கிறேன்” என்றான்.

அரசனே “நீர் இந்த ஒருகாரியந்தான் எனக்குச் செய்யவேண்டும், வேறெதுவும் வேண்டாம்” என்றான்.

பிரேமனே போக்கற்று “அடாடா! எப்படியானாலும் பாபந்தானே சுமருகிறது. என்செய்வேன். நீர்தான் ஒருவழி சொல்லும். நன்றிமறந்தமை என்னும் தோஷத்துக்கு எப்படி தப்புவது!” என்று சொல்லிவிழித்தான்.

அரசன் “நீர் எப்படியாவது செய்யும், என் காரியந்தானெனக்குப் பெரிது” என்றான்.

சிறுவன் "அண்ணலே! அவனை அவிழ்த்துவிட்டு என்னை அங்கு கட்டி யாரையாவது கொண்டு என்னை வெட்டச்செய்யும்" என்முன்.

அரசன் "வீண்வார்த்தை வளர்க்காதேயும். நான் உம்மை என் கொல்லவேண்டும், வயிறுநிறைய சோற்றையும் போட்டுவிட்டு கொல்வதும் செய்வேனு? 'தாம் வளர்த்ததோர் நச்சுமாமரம் ஆயினும் கொலார்' என்று கேட்டிலீர்போலும். நீர் இந்த ஒருகார்யம் செய்துவிட்டு இஷ்டப்ரகாரம் செல்லலாம்" என்முன். சிறுவன், இவ்வளவுக்கும் காரணம் நமதுயிரேயன்றோ? இவ்வுயிரால் என்ன பயன். இதைக்கொண்டு நாம் இதுவரை அடைந்ததெல்லாந்துன்பமும், பிறர்மனத்துக்கு வருத்தமும் வீணுசையும்தானே! ஆதலால் இதையே தொலைப்போம். இதுகாரணமாக ஓர்கால் தபோதனர்க்கும் அரசனுக்கும் நட்புரிமை விளையட்டும்" என்று தனக்குள்தானே இளைந்து பேசி அரசன் கையிலிருந்த உடைவாளைப்பிடுங்கி அதை உறையினின்றும் கழற்றி தன் கழுத்தையே இரண்டுதுண்டாய் ஒருநொடியில் துணிப்பதாக வீசினுன். தடுத்துப் பிடுங்கிக்கொண்டான் அரசன் "அந்தணச்சிறுவரே உமது வீரமே வீரம். இதுவரையில் நாம் உம்மைப்போல் கண்டதில்லை. நீர் எனக்குச்செய்த வாக்குதத்தம் நிறைவேறியாயிற்றென்று மனப்பூர்த்தியாய் எண்ணிக்கொள்வேன். இனி உமது பாட்டைப் பார்த்துக்கொண்டு நிறைந்த மனதுடன் எங்குவேண்டுமானுலும் செல்லலாம். உம்மை ஸத்யமாய் ஒன்றினுலும் கட்டுப்படுத்துகிறதில்லை" என்முன்.

"என் உபகாரியை என்னசெய்யப்போகிறீர்" என்முன் சிறுவன்.

"அந்தவிஷயம் உமக்கென்ன? உம்பாட்டில் நீர்போகலாம் நான் அரசனல்லவா? என்னண்டை வாழுங் குடிகளை நானெப்படிச் செய்தாலும் நீர் கேட்கவேண்டாம். யாரையோவிட்டு நான் கொல்லச்செய்கிறேன். நீங்கள் போங்கள்" என்முன் அரசன்.

பார்த்தான் சிறுவன், "அரசனே! எனது உபகாரியான ஒருவருக்கு ஓர் இடஞ்சல்வர அதைப்பார்த்துக்கொண்டு இங்கிருந்து போவதிலும் கழுகுகளுக்கும் காக்கைகளுக்கும் என்னுடல் விருந்தாகும்வரையில் சண்டையிடுவதேமேன்மை. நீர் அரசனேதான் தடையில்லை. நாங்களெல்லாம் பிரஜைகள்தான் பிசகன்று. உமது எண்ணப்படி நடக்க நாங்கள் சிறிதும் பின்னிடமாட்டோம். ஆனுல் நீர் அடாத காரியஞ் செய்தால் பார்த்துக்கொண்டு 'எல்லாம் தலைவிதி' என்றெண்ணி வாயை மூடிக்கொண்டிருப்பது பெரும்பிழை. அந்த

ணர்களாகிய எங்கள் ஜாதியாரோ அரசர்களிலும் பெரியவர். அரசர்களுக்கு நல்லவழிசொல்லவும் கேளாவிடில் திட்டவும் அதிகாரமுண்டு. நாங்களெல்லாம் உம்முடைய பிரஜைகள்தான். ஆனால் ஸர்வலோக சரண்யனால் படைக்கப்பெற்று உம்மைப்போலவே இவ்வுலகவின்பத்தை அனுபவிக்க பாத்யம் பெற்றவர்கள்தான் நாங்கள். எங்களை நன்றாயாளவேண்டியது உங்கள் பொறுப்பு. அதில் தவறினால் புத்திசொல்லி திருத்தவேண்டியது எங்கள் கடமை. எங்களை மீறி இப்படித்தான் செய்வேனென்று பிடிவாதம் செய்வீரானால் தெய்வம் சீறும்" என்று படபடப்புடன் பேசினான்.

"ஓய் சிறுபிள்ளாய்! நீரா எனக்கு சட்டம் விதிப்பவர். இதோ நானே அவனைக்கொல்லுவேன் பாரும்" என்று கையை ஓங்கினான் இறைவன்.

"என் உடம்பில் சதை - உதிரம் - என்பு - உயிரும் இருக்க நானிதைப் பார்த்துக்கொண்டா நிற்பேன்" என்று பெருங்கூச்சலிட்டுக்கொண்டே அரசனுடைய கையினின்றும் வாளைப்பிடுங்கி வீசி எறிந்தான் பையன்.

அரசனும் நல்ல அடக்கத்துடனும் சந்தோஷத்துடனும் 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி-கணமேனும் காத்த லரிது' என்பதை மெதுவாய்ச் சொல்லிக்கொண்டே நிற்க, அத்தருவாயில் பெரியவர் வாய்திறந்து "அடா பையா! நீ இளங்கன்று பயமிலதென்றாக்குச் செய்கின்றனை. முன்னரே என்னைவிட்டொழிந்திலை - இவ்வல்லலி லுழன்றேன். இப்போழ்தேனும் என் ஆணையில் நிற்பையேல் நலம்பெறுவை. இங்கிருந்து புறம்போந்தகல். அஃதொன்றே நானுன்பால் விரும்புவது 'சொல்லாமற் செய்பவர் பெரியவர், சிறியர் சொல்லியும் செய்கலாதார்' என்பதை நன்குணர்தி" என்றார்.

மந்திரத்தால் கட்டுண்ட பாம்புபோல் பெரியவர் வார்த்தையால் வாயை மூடிக்கொண்டு வேறு செயலற்று தான் செய்வதின்னதென்றே அறியாதவனாய் ஸ்ரீ பிரணதார்த்திஹரனையும், அறம்வளர்த்ததாயையும், சூரறுத்த குமரக்கடவுளையும் நன்றாய்ப் பலமுறை அட்டாங்க நிலந்தோய வணங்கி அங்கிருந்துவெளிவந்து, மாதர்ப்பிறைக்கண்ணியானும் மலையான் மகளுமாய் திருநாவுக்கரசுக்குக் காட்சிகொடுத்த இடத்தில் வந்திருந்து பலபலவிதமாய் மெய்ம்மறந்து பாடி, பிறகு அறிவு சற்றேறவர "நாமென்னசெய்வோம், இப்படியெல்லாம் அவதிப்பட்டுக்கொண்டு இருப்பதைவிட சாவதே உத்தமம். சாகலாமா வேண்டாமா என்பதையே இப்போது யோசித்துப் பார்ப்போம். நமது துரதிர்ஷ்டம் எவ்வளவு கேட்டைத்

தந்தாலும் அதனால் எவ்வளவு அலைச்சலும் திண்டாட்டமும் அவதியுண்டானாலும் பொறுத்துக்கொண்டுதான் இருப்போமே என்றால் அது முடியவில்லை. என்ன கேடுவந்தாலும் ஒருகை பார்ப்போம். அவற்றையெல்லாம் தைரியமாய் மேற்கொள்ளுவோம் என்றெண்ணினால் அது நம்மால் முடியவில்லை. செத்தால் எல்லா அவத்தையும் தொலையும். தூக்கத்தில் எப்படி ஒன்றும் தெரியாமலிருக்கிறதோ அப்படியே மரணத்தாலும் நமது அவத்தைகளெல்லாம் ஒழிந்துவிடுமென்பது நிச்சயமாய்த் தெரிந்தால் இப்போதே சாவது அவசியம். சாவதிலும் மேலான நல்லவழி வேறு இராது. ஆனால் இறந்தபின்னால் வரும் அவத்தை மிகுதியானால் என்னசெய்வது? நம்முடைய துன்பம் ஒழியாவிட்டால் நாமிறப்பதாலடையும் லாபந்தானென்ன? இறந்தபின் என்ன ஆவோமோ? ஒருக்கால் அதிகத்துன்பமும் தீராத அழுகையுந்தான் கிடைக்குமோ என்று நினைக்கும்போது என்ன அவத்தைப்பட்டுக்கொண்டாவது உயிரோடிருப்பதே மேன்மை என்று தோன்றுகின்றதே! மூலைக்குமூலை அவதிப்பட்டுக்கொண்டு சிறிதும் மனதுக்கு இன்பமில்லாது தொட்டகாரியத்திலெல்லாம் துன்பமே அடைந்து யாராலும் நன்குமதிக்கப்படாமல் நமது எண்ணமும் ஒன்றும் நிறைவேறாமல் நடந்தும் ஓடியும் காலெல்லாம் வருந்த இவ்வுயிரை நாம் தாங்கிக்கொண்டிருப்பதில்தான் லாபமென்ன? ஒரு சிறுமுள் தைத்தாலும் பொறுக்காத இவ்வுடம்பு, காற்று வீசியடித்தால் வெளியே நடமாட முடியாது. தண்ணீரில் கொஞ்சநாழி இருந்தால் மூக்கொழுகிக் கண்ணொழுகித் தலைநோயும் உண்டாகும், நெருப்பின் கிட்டவழிபோக அஞ்சுவோம். இப்படியே பஞ்சபூதங்களாலும் மொத்துண்டு அவற்றின் வசமாய் நின்று வேறு போக்கில்லாமல் திண்டாடும் இவ்வுயிரால் என்னதான் லாபம்? இதனால்யாருக்கு சுகமுண்டு. ஆடு மாடு குதிரை புலி முதலிய பலவற்றின் தோலும், மீன் யானைமுதலியவற்றின் எலும்பும், மான் மாடு முதலியவற்றின் கொம்பும், பன்றி முதலியவற்றின் மயிரும் உபயோகத்துக்காகும். மனிதனுடைய எந்த அங்கம் எதற்குப்பயன்படும்? இப்படிப் பயனற்றதும் - துன்பத்திற்கு நிலைக்களமும் - பொய் குறளை வன்சொல் முதலிய ஊறு பிடமுமாகிய உடலத்தைவைத்துக் காப்பதில்தான் லாபமென்ன? ஒருக்கால் உயிரோடிருந்தாலும் நமது குருநாதர், ஆத்திரேயன், கலாவதி முதலியோரைக் கண்டு ஆனந்தப்படலாமென்றாலோ அதில்தான் உண்மையான லாபமென்ன? அந்த லாபத்தை அடையவொட்டாமல்தானே நம்விதி விரட்டியடித்தது? ஆதலால் சாவதே துணியென்றாலும் அதுவும் முடியாதுபோலிருக்கிறது. கொள்ளிடத்திலிருந்துங்கூட நமது கர்மம் நம்மை உயிர்ப்பித்ததல்லவா?

அன்றேல் நமதூருக்குப்போய் நம் தந்தைக்கேற்ற காரியங்களைச்
செய்வோமென்றால் கடுமூகி இருக்கின்றாளே! அவள் செத்தால்
நமக்கு க்ஷேமம், அவள் க்ஷேமத்தைக் கெடுத்துக்கொண்டு அப்படி
யாவது உயிர்வாழ்வதில்தான் பயனென்ன? தற்கொலை பெரும்பாவ
மல்லவோ ஆதலால் வேண்டாமென்றால் ஒவ்வொரு நிமிஷமும் சா
காமல்செத்துக்கொண்டு உயிர்வாழ்வதுதான் என்ன சுகம். எப்படி
யோ சாவதும் மறுபடி பிறப்பதும் மறுபடி சாகுதும் இயற்கையாயி
ருக்கிறதே யன்றி வேறென்ன? ஆதலால் சாவதே நன்று. சாவதும்
பிறப்பதும் நமதெண்ணப்படியாமோ? ஆட்டுவிப்பானில்லாமல்
ஓரணுவு மசையாதே. நமது கர்மவினை கட்டறுப்பான் அவனல்
லவோ," ஆதலால் இவ்வெண்ணங்களையே ஒழிப்போமென்றாலும்
வேறொன்றும் மனதிற் படவில்லையே. அஞ்சேலென்பா ராரிங்கு?
கடவுளையே பல்காலும் எண்ணி எண்ணி யழைத்தாலும் 'உருவத்
தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம் பருவத்தா லன்றிப் பழா' என்
றபடி நமது வினைபரிபாகம் அடைந்தல்லவா அவனைக் காண்? நமது
எல்லா எண்ணங்களுக்கும் எல்லாச் செயலுக்கும் எல்லா முடிபுக்கும்
அவனே கடவுளாதலால் வந்தது வரட்டும் சாவதே துணிபு.—

"இன்னவினை யின்னதலத் தின்னபொழு தின்னதின்
வின்னபடி யாய்ப்பொருந்து மென்றிசைத்தே—அன்னவினை
அன்னபடி யன்னதலத் தன்னபொழு தன்னதினால்
பின்னமறக் கூட்டும் பிரான்."—ஆதலின் இறந்தபின் என்ன
வந்தாலும் வரட்டும்" என்று முன்னுக்குப்பின் ஓடாமல் ஓர்முடி
வுசெய்து அங்குமிங்கும் பார்த்தான். அப்போதோர் வழிப்போக்
கன் சற்றுதூரத்தில் வர அவனை 'எங்குபோகின்றீர்' என்று கேட்
டான் அவன் 'திருமலவாடிக்கி' என்றான்.

பிரேமன்—"நீரெந்த ஊர்?"

வழிப்போக்கன்—"கொஞ்சநாளா நான் அந்த ஊர்தான்."

பிரேமன்—"ஆனால் உங்களுங்கு தயாநாதசர்மாவைத் தெரியு
மோ?"

வழிப்போக்கன்—"நான் ஊரைவிட்டுப் புறப்பட்டு ஆறுமாச
மாச்சு. அவரை எனக்குத் தெரியும். அவரென்னமோ பைத்யம்
புடிச்சாப்போலே ரொம்பநாளா இருக்கார். அவருக்கு புத்ரசோக
முன்னு எல்லாரும் சொல்லுவா. ஆனால் அவர் செத்துப்போவிட்டா
ர்போலே இருக்கே! ஆரோ சொன்னமாதிரி ஞாபகம்" என்றான்.

பிரேமன் இதுகேட்டு இறந்தவன்போல் அசைவற்று நின்று
தன்னை அறியாமல் வரும் கண்ணீரையும் துக்கத்தையும் அடக்கிக்

கொண்டு "நாமோ சாகப்போகிறோம். இப்போதுகூட நமக்கென்ன துன்பம் பார்த்தாயா? கூடப்பிறந்தவரும் கூட இறப்பவரும் எங்காவதுண்டா? 'தாரம் மனைமட்டும் - தனையறிந்தோ ரூர்மட்டும் - சேரு முறவவ்வூர்த் தெருமட்டும் - சேர்வதன்றி எங்கு முதவாதே' என்றல்லவா உண்மை; 'பாராரும் நீயுமல்லால்' ஆர்துணை பாழ்மனமே! என்றலவோ பெரியோ ருரைத்தார். ஆதலால் நமக்கென்ன துக்கம்வேண்டி யிருக்கிறது" என்று ஒருவிதம் தைரியம் செய்துகொண்டு வழிப்போக்கனை நோக்கி "ஐயா அவர் உயிரோடிருந்தால் நான் சொல்லும் செய்தியை அவருக்குச் சொல்லும். சொல்வீரா? என்றான். அதற்கவனும் தன்னாலது ஆகுமென்றாலும் பலவேலைகளி லுழல்வதால் மறந்துவிடவும் இடமுண்டென்றும் ஆதலால் தான் ஏடும் எழுத்தாணியும் தருவதாயும் அதிலெழுதிக் கொடுத்தால் கொண்டுபோவதாகவும் ஒப்புக்கொண்டான்.

உடனே பிரேமனும் ஒருலெர்டியில் ஏதோ எழுதிக்கொடுத்துவிட்டு வயிறெல்லாம் பற்றி எரிய கண்ணீர் ஓயாதொழுக வழிப்போக்கன் தலைமறையும்வரையில் வாயைமூடிக்கொண்டிருந்து பிறகு அடக்கமுடியாமல் வாயைப் பிளந்துகொண் டோசைசெய்த அழுகைக் கிடம்கொடுத்து 'எற்பெற்று நீபெற்ற தின்னுயிர்போய் நீங்கலோ?' என்று புலம்பினான். பிறகு அங்கிருந்தெழுந்து காவிரிகடந்து அக்கரையில் இருந்த தோப்புக்குள் நுழைந்து அங்குமிங்கும் பார்த்து யாரையும் காணோமென்று நிச்சயத்துடன் ஓர்மரத்திலேறினான் அதின் உச்சியில் நின்று ஸ்ரீவைத்யநாதனையும், குருநாதனையும் ஆத்திரேயனையும் கலாவதியையும் தயாநாதனையும் நினைந்தழுது பிறகு மனதை உறுதிசெய்துகொண்டு தன் இடுப்பின் வஸ்திரத்தை இழுத்துக்கட்டி கண்ணைமூடி கீழே குதித்திறக்கத்துணிந்து ஒரேயடியாய்க் கிளம்பிவிட்டான்.

எப்போதும் மரணஅவஸ்தைப்படும் பிரேமன் கதி எப்படியானாலும் ஆகட்டும் சற்று அன்பிலின்செய்தியைப் பார்ப்போம். அன்று விடியுமுன் ஆத்திரேயன் பாநுசேகரர்வீட்டுக் கதவண்டையில் நின்றுகொண்டு கண்ணீர் ஆறாக ஓட "அண்ணா! அண்ணா!!" என்று கதவைத்தட்டினான். உடனே வேலைக்காரிவந்து திறந்தாள். உள்ளே ஓடினான். பாநுசேகரர் ஓரிடத்தில் சுவற்றில் சாய்ந்துகொண்டு சோர்ந்து உட்கார்ந்திருந்தார். அவர்முகம் துன்பத்தால் பழுத்து தொங்கியது. அங்கிருந்து வேறோரிடம் சென்றான். அங்கொரு கட்டிலில் தலைவிரிகோலமாய் படுத்துக்கொண்டு கீழைப்பார்த்த முகமும் நீரொழுகு கண்ணும் இடையிடையே தூக்கிப்போடும் பெருமூச்சுமாய் கிடந்தாள் கலாவதி. கண்டான் அவளை. நட்புரிமையால்

கட்டுப்பட்ட மனத்தினின்று எழும் அழுகையையும் ஆனந்தத்தையும் அடைப்பதான ஓர் அணையும் உலகத்திலுண்டோ?" அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்—புன்கண்ணீர் பூசல் தரும்" என்றலவோ நீதி? ஆதலால் கண்ணீர் மளமளவென்று சொரிய நாத்தழுதழுப்ப வாயுளறகால் தட்டித்தடுமாற அருகில்சென்று இறுகக் கட்டிக்கொண்டான். இருவருமாய் நெடுநேர மழுதார்கள். பின்பு ஒருவர் மற்றொருவரைத் தேற்றுவதும், ஒருவருடைய முகத்தைப்பார்த்து இன்னொருவர் அழுவதும், இடையிடையே பிரேமநாதனுக்கு வந்த கேட்டை கலாவதி சொல்லுவதுமாய் இருபதெட்டு நாழிகைவரையில் போயிற்று. இதனிடையில் பாநுசேகரரும் மனோமதியுங்கூட வந்தார்கள். யாவருமாய்க் கூடி துன்பத்தைத் தணித்துக்கொண்டிருக்க ஆத்திரேயன் "நீங்க ளஞ்சவேண்டாம். இதோ எங்கள் குருநாதரைக் கண்டுபிடித்து உண்மை தெரிந்துகொண்டு வருகிறேன். அவர் சொல்லியதொன்றும் இதுவரையில் பிசகினதில்லை. பிரேமனுக்கு நல்லகாலம் வரும் என்றதுமட்டும் எப்படிப் பொய்யாகும்!" என்றான்.

"நீதான் இதில்கெட்டிக்காரன். பிரேமன் போனாலும்போகட்டும். செத்துப்போனவனைக் குறித்து என்னசெய்தால்தான் லாபமுண்டு? விஷம்வைத்த செய்தியைமட்டும் எப்படியாவது வெளியாக்கு பார்ப்போம்" என்றார் பாநுசேகரர். அப்படியே நல்லதென்று யாவருடனும் சொல்லிக்கொண்டு தன் குருநாதரைத் தேடுவதற்குப் புறப்பட்டான் ஆத்திரேயன்.

இந்த அழுகைமூஞ்சிக்கூட்டமே நமக்குவேண்டாம். வாத்யாரண்டையில் செல்வோமாக. அன்றுகாலையில் விடிய நான்குநாழிகைக்குமுன் எழுந்தான் சேஷசாயி. வாத்யாரை எழுப்பினான். அவரும் தன் மூட்டைகளையெல்லாம் கட்டிக்கொண்டு இரண்டு மூன்று சிட்டப்பிள்ளைகளுடன் புறப்பட்டு அகண்டகாவிரி நீர் கொண்டுவரப் போனார். போகும்வழியில் பாநுசேகரர் வீட்டுக்குள் நுழைந்து அவரைக் கூப்பிட்டார். அவரோ இவரை சிறிதும் கவனியாமல் இருந்துவிட்டார். அவர் வீட்டு வேலைக்காரிமட்டும் வெளியேவந்து 'என் கூப்படரேள் அவர் வரமாட்டார்' என்றாள்.

"அது கடக்குடீ சேஷீ நல்லவேளையாய் ஞாபகத்துக்குவந்தது நான் இன்னிக்கி அகண்டாவேரி ஸ்நாநத்துக்குப் போறேன். நாளை ராத்திரித்தான் வருவேன். எங்காத்தை பாத்துக்கோ. பொம்மண்டாட்டிகளுக்குத் தொணயாயிரு. சிஷ்யாளோடே சொல்லியிருக்கேன் அந்தப்பசங்க வாசல்லேயும் கொல்லேலேயும் வந்து நித்யம் போலே படுத்துக்குவன்கள். ம் ம்!" என்று சொல்லி வாத்யார்

லைவிட்டு விரைவாய் நடந்தார். சேஷசாயி நல்ல புண்யசாலி என்றும் அவனால் தனக்கு அகண்டகாவேரி ஸ்நாநம் கிடைத்ததென்றும் அவன்பேரில் தன்பெண்சாதி அடாதபழிதான் சுமர்த்தினாள் என்றும் நிச்சயித்துக்கொண்டு போம்போது, "அடே! அதென்னடா காக்காயா? வலத்துலே போரது. நல்லசகுனந்தான்" என்றான்.

"அப்படித்தானையா தோண்டரது" என்றான் ஒருசிஷன்.

"எலே, தோண்டரதுன்னு என்னடா" என்றான் இரண்டாவது சிஷன்,

"அவன் எலெக்குணமாப்பேசராண்டா" என்றான் மூன்றாவது சிஷன்.

"ஒனக்கெப்போதும் சோத்திலேயே திர்ஷ்டிதாண்டா. எலெக்குணம் எலையிலெ ஒக்காரரகோணமா? முட்டாள் எலக்கணம் என்னுசொல்லுடா" என்றான் இரண்டாவது சிஷன்.

"எனக்கதெல்லாம் தெரியாதப்பா, எப்பிடிவேணுமோ அப்படி தோண்டட்டும்" என்றான் மூன்றாவன்.

"என்னத்தேடாலே தோண்டரது. குழியை இன்னடா தோண்டுவா. பெரு எலக்கணமோ, தோண்டரதாம், நோண்டரதாம் தோணரது என்னப்போராதோ?" என்றான் இரண்டாவன்.

"படிச்சவா சொன்னு படிக்காதவா பரியாசந்தான் பண்ணுவா 'கட்டொணந்தார் சொல்கூத்தம்' என்னுகூட பாட்டுண்டு. நிர்மாணதேசத்துலே கோமணம் கட்டிக்கிண்டவன் பைத்தாரன்" என்றான் முதல் சிடன்.

"ஆமடப்பா நிர்மாணம், ஒங்கப்பன் நிருமிச்சானே? நிர்மாணமென்றுகூடச் சொல்லத் தெரியவில்லை. இவன்தான் எலக்கணக்காரனும் அகஸ்தியாவதாரந்தான் பொட்டிமகன். ஐயா அது; காக்கா இல்லேய்யா கொட்டப்ராந்தாட்டமா இருக்கு" என்றான் இரண்டாவன்.

"ஆமய்யா கழுத்துக்கூட வெள்ளயா இருக்குப் பாருங்கோ" என்றான் மூத்தசிஷன்.

"ஆமடலே அப்படித்தான்போலருக்கு" என்றார் வாத்யார்.

"ஐயாய்யா அந்தப்ராந்துக்கு கழுத்துக்கூட வெள்ளயாருக்கு பாருங்கோ" என்றான் இரண்டாவன்.

"தடிங் கொக்காளே - சீபடவா - கொட்டப்ராந்துங்கரயா கிக்ஷஸாமியைப்பார்த்து நாத்திக்கெழமயும் அதுவுமா பகவான் தெரிசன்மாரது ஔர்ரயா? ஹரிஹரி! கிஷ்ணா! நந்தகோபகுமாரா ராதாகிருஷ்ணா, கிஷ்ணா, கிஷ்ணா!" என்றார் வாத்யார்.

"ஐயா, கிக்ஷஸாமி எடத்துவேன்னு போகோணும். பகவான் வலமாப்போராரே" என்றான் மூத்தான்.

"வலமாகவும் போகல்லே எளகலாகவும் போகல்லே ஒங்ககிருக்ஷசாமி பேதிக்கி வாங்கிண்டிருக்கோ" என்றான் இரண்டாவன்.

உடனே வாத்யார் அவனை மிகக் கடிந்தார். சற்றுதூரம் சென்றதும் ஒரு பன்றி சென்றது அதைக் கண்ட இரண்டாம் சீடன் தன் துணிமணியையெல்லாம் வரிந்து கட்டிக்கொண்டு ஹரி ஹரி! நாராயணா! ஜநார்த்தனா என்று வணங்கினான்.

"என்னடா நீ கழுதைத்தடியனாய் இருக்கே" என்று சொல்லியடித்தார் குருநாதர்.

"ஐயா என்னைய்த்தான் நீங்க அடிப்பேள். ஒங்கிளுக்கு ராப்பொரந்த புள்ளயும் ஆகாது. பகல் பொரந்த புள்ளயும் ஆகாது என்னய்யாபண்டாரது ஒங்களோடே! ப்ராந்தைக்கண்டால் அடிச்சுக்கோணுமாம்- அதோவாகனம். நான் ஸாக்ஷாத் அவதாரமாச்சேன்னு விழுந்து கும்புட்டா அதுவும் பெசகா. நான் ஒங்களோடே வல்லேய்யா இப்படி அடிச்சா" என்றான் இரண்டாமவன்.

"அவன் அப்பவே விடிச்சுத்தான் பரியாஸமாப் பேசரான் தான் தான் ரொம்பப் படிச்சூட்டாபோல" என்றான் மூத்தவன்.

"எப்ப விடிச்சுடா? நான் இன்னம் கொலக்கிப் போகவே இல்லே" என்றான் இரண்டாவன்.

"ஒனக்கு ஒடம்பெல்லாம் தலையரட்டை" என்று சொல்லி அவனை அடித்தார் ஆசார்யார். அவனும் 'ஒங்களுக்குத்தான் கய்யெல்லாம் மூக்கரட்டை' என்று சொல்லிக்கொண்டு ஓடிவிட்டான்.

இப்படியே பேசிக்கொண்டும் சகுனம் பார்த்துக்கொண்டும் இரண்டோரிடத்தில் அபசகுனம் என்று சொல்லி வீட்டுக்குத் திரும்ப எண்ணியும் பிறகு சேஷசாயிக்குப் பயந்து முன்னோக்கியும் சென்றார் வாத்யார்.

இங்கு பகற்பொழுதில் இருபத்தைந்து நாழிகைக்கு சேஷியம்மாள் புறப்பட்டு கடைத்தெருவிற் சென்று அங்கொரு வீட்டுக்குள் நுழைந்தாள். அது திண்ணையில்லாத வீடு மழைபெய்தும் வெயிலடித்தும் பொறுக்கெடுத்துள்ள பல குட்டிச்சுவர்களுக்கு நடுவில்

எட்டடிச்சதுரம் மட்டும் கூரைவேய்ந்து அதுவும் சிலசில இடங்களில் ஓட்டைவிழுந்திருக்கும். நெடுநாளைக்கு முன்னமே நல்ல நிலையில் பல அறைகளுடனிருந்து விளங்கின வீடுபோல் தோன்றியது. ஆனால் மேலே இருந்தகூரையெல்லாம் போய் சுவர்களும் இடிந்தும் கரைந்தும் பரந்தும் மொட்டையும் குட்டையுமாய் நிற்கும் அந்த உள்ளுகளிலெல்லாம் ஒட்டடை மூக்கரட்டை, சாரணை, காக்கரட்டை, மூக்குத்தி, முள்ளுக்கீரை, ஊமத்தைமுதலிய பலபுல்லும் முள்ளும் செடியும் கொடியுமாய் முளைத்து பாம்புபல்லிகள் புழங்குவதாய் கால்வைக்க முடியாமலிருக்கும். கொல்லையில் ஒரு மண் கிணறுண்டு. அதன்மேல் பெரிய மரக்கட்டை போட்டிருக்கும். தண்ணீர் மொள்ளுவோர் அதன்மேலே கயிற்றைப்போட் டிழுப்பதால் எழெட்டுப் பள்ளம் விழுந்திருக்கும். கிணற்றுக்கருகில் ஒரு பழைய அம்மியும் தேய்ந்த குழவியுமுண்டு. அந்த அம்மியைச்சுற்றி கும்பியும் சேறும் நீருமாய் சொதசொதவென்றிருக்கும். கொஞ்சம் அடுத்தாற்போல் அறைக்கீரைப் பாற்றி எழெட்டிருக்கும். இவ்வளவு இலக்கணம் உள்ள வீட்டில் ஒரு தம்பிரான் குடியிருந்தான். அவன் கஞ்சாமுதலிய தின்று மயங்கி மயங்கித் தன் ஆஸ்தியையெல்லாமிழந்து பெயரும் கெட்டு உடம்புவற்றி இருப்பவன். எப்போது வீட்டுக்குப்போனாலும் கிணற்றடியி லுட்கார்ந்து அம்மியில் கஞ்சா அரைப்பதுவே அவனுக்குத் தொழிலென்று காணலாம். ஆதலால் சேஷியம்மாள் அங்கு வந்தபோது அதுவே அரைத்துக்கொண்டிருந்தவன் அவளைப்பார்த்து, "ஏ பாப்பாத்தி! ஒம் சாதித்தொழில் போரதில்லியாங்காட்டியும் எத்தனைநாளா ஒளிஞ்சுதிரிவே எனக்கு குடுக்கவேண்டியது மரந்திட்டியோ" என்றான்.

"ஒனக்கு நான் துரோஹம்பண்ணுவேனாடா? கன்னக்கோல் சாத்தக்கூட ஒரு மூலை வாண்டாமா எல்லாரையும் மோசம் பண்ணினா? ஒங்காட்டுலேதான் மழை பேஞ்சிருக்கு வா இன்னி ராத்திரி ஒரு யோஜனை சேஞ்சிருக்கு. ஒனக்கு வேணுமுங்கிரது நீயே வந்து இடுத்துக்கலாம்" என்றாள் மறுமொழி.

"போடீ போடீ புத்திகெட்ட பாப்பாத்தி. பாருப் பாப்பான் வீட்டுச்சொத்தை உள்ளநாளும் தின்னுப்போட்டு அந்த வீட்டிலேயே திருடவும் பாக்கலாமா? சாமி கண்ணையல்ல அவிச்சிடும்" என்றான் தம்பிரான்.

"இல்லேடா - அசட்டுப் பெசட்டுன்னு ஒளராதே. நானென்ன அப்படி தெரியாதவளா வேறெ பாத்திருக்கடா அதெல்லாம் தோஷமா இராது" என்றாள் சேஷி.

"அது சொல்லத்தான் வந்திமோம்மா" என்ற தம்பிரானுக்கு "ஆமாமா நீ ஒரு ஒத்தாசைசேயோணும் நறைய மருந்தளைச்சுக் குடுக்கோணும்" என்று சேஷிசொல்ல அவனும் "எங்காட்டு?" என்று கேட்டான். உடனே அவளும்சங்கதிமுழுவதையும்வெளியிட்டாள் அவனும் ஸந்தோஷம் பொருதவனாய் "அந்தப் பாப்பாரப்பயலை நான் எப்படியாவது அடக்கத்தான்எண்ணினேன் நல்லவேளைவந்திடுச்சு இப்ப விடுவேனா? என்னுங்க!" என்று சொல்லிச் சிரித்து மயங்கினான்.

"நல்ல நாவகம் இருக்கட்டும். ராத்திரி பத்துநாழிக்கி தெரியுமா? மறந்துடாதே. தின்னேல வந்து படுத்துக்குண்டிரு. நான் வந்து இழுப்பரேன். குமாசிமா பேசாதே" என்றாள் சேஷி.

தம்பிரானும் உடனே தன் வீட்டிலிருந்த கஞ்சாத்தழையையெல்லாம் சுத்தியும்செய்யாமல்பிடிப்பிடியாய்எடுத்துவைத்து அத்துடன் கசகசா – மிளகு – தேங்காய்த்துறுவல் – ஜாதிக்காய்எல்லாம் வைத்து நன்றாயரைத்து மதனகாமேசுவரி தைலத்தில் இருபது சொட்டுவரையில் அத்துடன்விட்டுக் கலந்து சர்க்கரையும் நெய்யுங்கூட்டி சேஷியம்மாளிடம் கொடுத்துவிட்டு அளவிலடங்காத ஆநந்தத்துட னிருந்தான். இதனிடையில் அவள் தன் மடிநிறைய அறைக்கீரை அறுத்துக் கட்டிக்கொண்டாள். தம்பிரான் அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை. ஏனெனில் நெடுநாளாய் யாராவது தம்பிரான்வீட்டுக்கு வருவதும் வியபிசாரம், கஞ்சாத்தின்னல், உக்காகுடித்தல், சூதாடல் முதலிய செய்வதும் ஊரார் அவ்விஷயத்தில் ஸந்தேகம் கொள்ளாதபடி மடிநிறையக் கீரை கொண்டுபோவதும் வழக்கமாயிருந்தது சேஷியம்மாள் கஞ்சாமருந்தை வாங்கி அதை ஓர் பூவரச இலையில் வைத்துச் சுற்றி எக்குமடியில் நொழுந்திக்கொண்டு மடிநிறையக் கீரையுடனும் அந்த வீட்டிலிருந்து வெளிப்படுந்தருணத்தில் நமது ஆத்திரேயன் அந்த வீதிவழியாய்வந்தவன் இவளைப்பார்த்துவிட்டான். உடனே மடியிலென்னவென்று கேட்டான் கீரையென்று பதில் சொல்லிவிட்டு விடுவிடென்று அவள் போக இவனுக்குப்பெருஞ்சந்தேகமுண்டாயிற்று. பாநுசேகரர்வீட்டுக்கும் இந்த இடத்துக்கும் நெடுந்தூர மிருந்ததாலும் ஸாதாரணமாய் வீதியில்வரும்போது வாங்கக்கூடிய கீரைக்காக இவ்வளவுதூரம் வரவேண்டியதில்லையாதலாலும் கீரையென்று சொல்லிவிட்டு உடனே விடுவிடுவென்று நடந்துபோய்விட்டதாலும் அவளிடத்தில் முன்னமே ஐயமிருந்தபடியாலும் சற்றுநேரம் யோசித்துப்பார்த்து அந்தத் தம்பிரான்வீட்டுக்குள் நுழைந்தான். அங்கு அப்போதுதான் தனக்கென்று வைத்துக்கொண்டிருந்த கஞ்சாவை உருட்டி வாயில் போட்டு

க்கொண்டான் தம்பிரானும். ஆளரவம் காதில்பட உடனே "ஆருங்காணம் அங்கே" என்றான்.

'என் நான்தான்' என்று சொல்லிவிட்டு கொல்லையில் கிடுகிடெனச் சென்று அங்கு அம்மியில் பச்சையாய் ஏதோ அரைத்திருப்பதையும் பக்கத்தில் மிளகாய்க்காம்பும் தேங்காய்க் கொட்டக்கச்சியும் இருப்பதையும் கண்டு ஆலோசித்து நிற்க, தம்பிரானும் "என்னுங்காணம் கேக்குறோன், ஒன்னும் சொல்லாதே வெகு ரோக்யமாய் நான்தானென்னு சொல்லிக்கிட்டு பொண்ணுகட்டிய மாப்பளயாட்டமாப் போரீமே," என்றான்.

"இல்லேடாப்பா கோவித்துக்கொள்ளாதே. கொஞ்சம் புல்லுருவி மருந்துக்குவேண்டும். இந்தவீட்டு கிணற்றைச்சுற்றி முளைத்திருக்குமென்றுகேள்விப்பட்டேன் அதுதான் பறிக்கவந்தேன்" என்று சொல்லிக்கொண்டே தம்பிரான் முகத்தைப்பார்த்தான். அந்த மடையனுக்குப் புல்லுருவி மரத்தின்மேலிருக்கும் என்கிறதும் கீழே முளையாதென்பதும் தெரியாததால் "இங்கே ஏதுங்காணம் புல்லுருவி வயலிலேபோய்ப் பார்த்தா அல்லா கிட்டும். புல்லுமொளச்ச எடமே இங்கே கெடயாதுங்காணம். போங்காணும் வெளியே" என்றான்.

இதனிடையில் கண்டான் அவனை ஆத்திரேயன். உட்குழிந்த கண்ணும், புகையடைந்த முகமும், சுருங்கி ஒட்டியகன்னமும், மயக்கங்கொண்ட பார்வையும் தொய்ந்து தொங்கிய கையும், சதைப்பற்றிழந்த தோளும் குடுக்கை விழுந்த வயிறும் ஒட்டி உலர்ந்த உடலும் சிவந்த விழியுமாய், கேளாமே கஞ்சாத்தின்போனென்றறியத்தக்கவண்ண மிருந்த அவனைக் கண்ட அளவில் சேஷியிடத்துள்ள ஐயம் வலுத்ததால் சிறிது மஞ்சாது அவளெங்குவந்தாளென்று கேட்க "ஒனக்கென்னுங்காணம் போங்காணம் வெளியே. வந்திட்டாருள்ளே வெகு விசாரணைக்காரன்போலே. தம்புரான் மடத்தில் பாப்பானுக் கென்னுங்காணம் சோலி. புய்ப்பம்வச்சிருக்கும் பாப்பான் கண்பட்டா கருகியல்லோ போய்த்திடும்" என்றான்.

ஆத்திரேயனும் "அங்கே காணுகிற" மரத்தில் களிப்பாக்குக் காய்த்துத்தொங்குகிறதே அதிலாவது கொஞ்சம் பறித்துக்கொண்டு போகிறேன்" என்றான். தம்பிரான் "என்னுங்காணம் எளவாயிருக்குது. மடத்திலே ஏதுங்காணம் களிப்பாக்கு மரம். அதெல்லாம் ராஜாக்க, உத்யோகிஸ்த்தங்க இவுக வீட்டுக்குப்போனால்லே உண்டு" என்றான்.

பார்த்தான் ஆத்திரேயன். "இந்தத் தடியனுடன் நமக்கென்ன பரிஹாஸம்? வேட்டை பிடிக்கிற சமையத்தில் நீர்விடநின்ற நாயைப்போல் சேஷியைப்போகவிட்டுவிட்டு இவனிடமென்னவேண்டியிருக்கிறது" என்று எண்ணி வெளிவந்து பகல் முழுதும் நன்றாய் ஆலோசனைசெய்து இரவில் தன் உடைகளையெல்லாம் கழற்றி ஓரிடத்தில் பதுக்கி வைத்து தன்மேலெல்லாம் கரியை அரைத்துத்தடவிக்கொண்டு தலையில் சவுரிவைத்துக்கட்டி இயற்கையிலேயே தலைநிறைய சிகை உள்ளதுபோல் செய்து ஓர் கோவணத்துடன் தெருவில்வந்து பாநுசேகரர்வீட்டுவாயிலில் ஏதோபொறுக்கித்தின்பவன்போ லபிநயித்துக்கொண்டிருந்தான்.

சேஷியும் தன் வேலையையெல்லாம் முடித்துவிட்டு இரவில் பத்துநாழிகைக்குமேல்இரண்டாம்பேருக்குத்தெரியாமல்வெளியே வந்து தெருக்கதவை வெளிப்பக்கமாக சங்கிலிபோட்டுவிட்டு மெள்ளநடந்தான் வாத்யார்வீட்டைநோக்கி, ஆத்திரேயனும் பின்சென்று அந்த வீட்டுவாயிலையே சுற்றிக்கொண்டிருந்தான். வாத்யாரின் சீடர்கள் அவனைக்கூப்பிட்டு 'நீ ஆரடா' என்ன, அவனும் "பிச்சைக்காரன். ராப்பிச்சைக்குவந்தவன்" என்றான். அவர்கள் "இவ்வளவு நாழியாச்சே, இன்னமே ஆரு ஒனக்கு போடப்போரா - நீ நல்லபாட்டாய்ப்பாடினுக்கே காலம்பர ஒனக்கு பழேதுபோடச்சொல்ரோம்" என்றார்கள். அவன் அவர்களுக்கு என்னபாட்டு வேண்டுமென்று கேட்க அவர்கள் தங்கள் குருவின் மகனுடைய கல்யாணத்துக்கு உதவும்படி நலங்குபாடச்சொன்னார்கள். பார்த்தான் ஆத்திரேயன். முன்னுக்குப்பின் ஸம்பந்த மில்லாமலும் கேட்டால்மட்டும் சிரிப்பு வரும்படியாகவும் பாடுவதாய் தீர்மானித்து,

(சங்கராபரணம்) நலங்கு.

காக்கைக்கி நீளமூக்கு காப்பிரிக்கி சப்பைமூக்கு
கழுதைக்கி வெள்ளிமூக்கு காவேறிச்கி ஊழமூக்கு (௧)

ஒட்டகைக்கு கல்யாணம் ஓடிவாரும் கழுதைகளே
சட்டமாக பாட்டுபாடும் ஸம்மானம் வாங்கித்தரேன் (௨)

ஓஹோரூபம் மாப்பிளைபெண் ஓஹோவென்று கழுதைபாட
ஓஹோத்வனீ கழுதைக்கென்று ஒங்கிஸபாஸ் கிடைத்ததுவே,

என்று பாடினான். அதுகேட்டு சந்தோஷமடைந்த சீடர்கள் "நீ ஒரு பத்யம்மட்டும் சொல்லு நிச்சியமா ஒனக்கு இங்கயே படுத்துக்கக்கூட எடந்தரோம்" என்றார்கள். துணிந்துவிட்டான் ஆத்திரேயனும்.

ஆநந்தபைரவி (பத்யம்.)

கோபால னூத்துமேல கொழக்கட்டை பண்ணினாள்
கோதண்டராமையன் திருடிவிட்டான்,
தீபாவளிக்கென்று வாங்கின வேஷ்டியை
தீபிடிக்காதபடி அடுப்பில் வைத்தாள்,
மாபாவி கோவிந்தன் மாட்டுப்பெண் பட்டினி
மாங்காயும் பழமதும் மூன்றுவேளை,
நீபாவி குடிகாரன் நீத்திறப் கள்ளிலே
நெய்வந்து பூனைக்குடிச்சுப்போச்சு,
கொடிய கலிகால மஹிமையை என்ன சொல்வேன்
விடிய ஒருநாழிகைக்குமுன் வெளியில் வந்தேன்,
பொடியுமில்லாமல் மூக்கோட்டை அடசசுப்போச்சு
மடியில் வெறும்பட்டையுமில்லையோ வாத்தியாரே.

என்று பாடி இழுத்தான் ஒருநாழிகையளவு பையன்களெல்லாம் இவனை உபசாரம் செய்யத்தொடங்கினார்கள் - நல்ல கெட்டிக்காரனென்றும், பிச்சைக்காரனென்றால் எல்லாரும்இந்தமாதிரி ஆகமாட்டார்களென்றும், ஓட்டைக்குடத்தில்தான் சர்க்கரை யிருக்குமென்றும் பலபலவாறு அவனைப் புகழ்ந்தார்கள். உட்காரச்சொன்னார்கள் - கதைதெரியுமா என்று கேட்டார்கள். அவனுக்கும் எப்படியாவது இவர்களை நட்புச்செய்துகொண்டு சேஷியை கவனிக்கவேண்டுமென்று ஆசையிருந்ததால் "நான் ஒரே ஒரு கதைதான் இப்போது சொல்வேன் அதுவும் புதியதன்று - நெடுநாளைக்கு முன்னேயே உள்ள கதை. கேளுங்கள். முன்னாளில் இந்த ஊரில் ஒரு சுங்கச்சாவடி இருந்தது. அதைக்கடந்து ஊருக்குள் வருகிற வியாபாரிகளிடம் மூட்டைக்கு ஒருகாசு சுங்கம் வாங்குகிற வாடிக்கை. இப்போது ஆயத்துரைக்கோட்டவாசல் என்று இவ்வூரில் சொல்லுகிறார்களே அதுதான் சுங்கச்சாவடியாயிருந்தது. அந்தக்காலத்தில் சிவசிவபிராமணன் என்று ஒருவர் பெரிய சொம்புநிறைய மிளகு நிறைத்துக்கொண்டு அதின்மேல் ஒருபிடி அரிசியிட்டு மூடிவிட்டு இதுஉபாதானம் வாங்கும் அரிசியென்று சொல்லிவிட்டு சுங்கக்காரனை ஏய்த்துவிட்டு ஊருக்குள் வந்து வியாபாரஞ்செய்வது வாடிக்கை. அதேகாலத்தில் ஆறுமுகத்தம்பிரான் என்று ஒருவனிருந்தான். அவன் பிரமாதசடையுள்ளவனாதலால் தன் சடையைச் சுற்றி அதன்மேல் துணியும் கட்டியிருப்பான். ஒருநாள் இந்தத் தம்பிரானும் அந்த ப்ராம்ஹணனும் ஊருக்கு ஒருநாழிகைவழிக்கப்புறமுள்ள ஒரு மண்டபத்தில் வந்து சந்தித்தார்கள். தம்பிரான் பிராமணனுக்கு தினம் இவ்வளவு அரிசி கிடைக்கிறதா என்று வயிற்றெரிச்சலால் செம்பையெடுத்துக்

குலுக்கினன். பிளகு வெளிப்பட்டது. பிராமணனுக்கு கோபம்வந்து தம்பிரான் சடையைத் தட்டிவிட்டான். உடனே தம்பிரானுடைய கள்ளத்தனமும் வெளியாயிற்று. எங்ஙனமெனில் சடைக்குள் குறுணி கிராம்புவைத்துக் கட்டியிருந்தான். இருவரும் உடனே தம் தம்மில் சமாதானம் செய்துகொண்டு ஒவ்வொருவரும் மற்றவருடைய கள்ளத்தனத்தை வெளியிடாது நெடுநாள்போயிற்று. இப்படியிருக்க, ஒருநாள் இருவரும் அந்திப்பொழுதில் ஏககாலத்தில்வந்து சுங்கச்சாவடியண்டை கூடி, சந்தியாவந்தனம் அனுட்டானம் இதுகளை முடிக்கவெண்ணி பக்கத்திலிருந்த குளத்திற்குச்சென்றார்கள். அங்குச் சென்றதும் தம்பிரான் தன் விபூதியிலிருந்து கொஞ்சம் விபூதியெடுத்து “சிவ சிவ செம்பொச்சோதீ” என்று நாலைந்துதடவை சொல்லிக்கொண்டே ஆகாசத்தைப் பார்த்து நிமிர்ந்து தன் நெற்றியில் பூசிக்கொண்டான். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறென்னும் என்றபடி பிராமணன், ‘சிவசிவ செம்பொற்சோதீ’’ என்றதை விபரீதமாய் எண்ணி தன் ஷம்புடத்தின் விபூதிமுழுவதையும் கையில்கொட்டிக்கொண்டு ‘இந்தப்பயலுக்கு இவ்வளவாச்சா - நம்ம சொம்பை சோதிக்கிரதாமே - விட்டேனு பார்’’ என்றெண்ணி நீரை விட்டு விபூதியைக் குழைத்து வெகு விறுவிறுப்புடன் உடம்பெல்லாமாட்டிக்கொண்டு ‘தம்புரான் சடையைச் சோதீ! தம்புரான் சடையைச்சோதீ! என்று சொல்லிக்கொண்டே பட்டைபட்டையாய் உடம்புமுழுதும் விபூதியணிந்தான். கிட்ட இருந்தவர்கள் இதுதெரிந்து இரண்டுபேரையும் நன்றாய்ப்புடைத்து பிளகைச்சொம்புடன் வாங்கிக்கொண்டு தம்பிரானையும் சடையை அறுத்துவிட்டார்கள்’’ என்றான். இதைக்கேட்டு சிரித்து வயிறெல்லாம் புண்ணான சீடர்கள் நீ உள்ளேவாடா பிச்சைக்காரா என்று அவனைக் கூட்டிக்கொண்டு உள்ளே சென்றனர். அதுவரையில் வாத்யார் பெண்சாதியுடன் பேசிக்கொண்டிருந்த சேஷி அப்போதுதான், “அடாடா மறந்துபோவிட்டேனே! எங்க கலாவதிக்கு வயத்துவலிக்குப் பண்ணின மருந்தை இடுப்பிலேயே வச்சுக்கிண்டிருந்தாட்டேன்’’ என்றாள். அருகே பேச்சுக்கேட்டுக்கொண்டிருந்த சேஷன் தனக்குக் கொஞ்சந்தரச்சொல்லி, வாங்கி தின்பவன்போல் ஜாடைசெய்து “அப்பா! ரொம்ப நன்னயிருக்கு தித்திக்கொது’’ என்றான். உடனே எனக்கு எனக்கு என்று அங்கிருந்த சீடர்களெல்லாம் ஆளுக்குக் கொஞ்சமாய் வாங்கித் தின்றார்கள். ‘எனக்குந்தான் கொஞ்சங்கொடேன்’ என்று வாத்யார்பெண்சாதி வாங்கித் தின்றாள். அவள்மகன் தனக்கும் கேட்டான். ஆனால் அதற்குள் மருந்து ஆய்விட்டது அவள்போதாவேளையால். இப்படியாக சீடர்களும் குருபத்னியுமாய் கஞ்சாத்-

தின்று சற்றுநேரம்சும்மாயிருந்தபின் ஒருசீடன் திடீரென்றெழுந்து "க்ரிசபக்! க்ரிசபக்!" என்று கூத்தாடினான் இன்னொருவன் "ஹி ஹி ஹிஹ் ஹிஹி ஹ்ஹஹ் ஹிஹ்ஹா" என்று ஓயாமல் சிரித்தான், ஒருவன் தாழம்போட்டான். ஒருவன் "ஊம் உம்உம் உம்--ஊம்ம் மூம்மூம்" என்றழுதான். ஒருவன் துணிதுண்டங்களை அவிழ்த்தெறிந்துவிட்டு அங்குமிங்கு மோடி முட்டிக்கொண்டு கதறினான், ஒருவன் வாயில்வந்தபடி ஆத்தாளை அக்காளை என்று திட்டினான். ஒருவன் வாயிலெடுத்துக்கொண்டு கண்ணைப் புரட்டிப்புரட்டி விழித்தான், ஒருவ்வன் தன்கிடக்கையிலேயே நீர்விட்டுக்கொண்டான். ஒருவன் தூங்கினான். ஒருவன் கண்ணைவிழித்துக்கொண்டும் தனக்குத்தானே பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் கிடந்தான்: வாத்யார்பெண்சாதியோ தன் துணிதுண்டங்களையெல்லாம்அவிழ்த்தெறிந்துவிட்டு வாய்க்கு வழங்காததும் கேட்க லஜ்ஜையுள்ளதுமான பேச்சுக்களைச்சொல்லிக்கொண்டே பிதற்றினாள். இதையெல்லாம் கண்டு அவள்மகன்; "இருங்கோடாலே அப்பா இல்லேன்னூட்டா இப்படிப்பண்ணரேள், வரட்டும் சொல்ரேன் ஒங்க தலையைச் சரைச்சு சாணாத்தைக் கொட்டச் சொல்ரேன்" என்று சொல்லிக்கொண்டு இலிபிடித்து உட்கார்ந்தான். பொழுதும் பதினைந்துநாழிகைக்கு மேலாயிற்று. அத்தருவாயில் ஆத்திரேயனை வெளியேபோகச்சொல்லி வெளிப்பக்கத்துக்கதவை நன்றாய்த்தாளிட்டுக்கொண்டு சேஷனும் சேஷியுமாய் உள்ளேசென்று வாத்யார் மனைவியின் இடுப்பிலிருந்த திறவுகோலைமெள்ள அவிழ்த்தார்கள். வாசற்பக்கத்தில் தம்பிரான்வந்துசேஷிசொன்னபடியே நெடுநாழி இருந்துபார்த்தும் அவள் வாராததால் மெள்ள தந்திரம்செய்து கதவைத்திறந்து உள்ளே விளக்குக்காணப்பட்டதால் உட்பக்கத்திலேயே கதவண்டையில் நின்றுவிட்டான் திறவுகோலை அவிழ்த்து எடுத்துக்கொண்டவுடன் கையில் விளக்குடனும் அரங்குள்ளே நுழைந்து அதின் ஓர் சுவற்றிலிருந்த ஆணியைத்திருக அங்கோர் கதவுதிறந்தது. அதுவழியாய் உள்ளேபோய் அங்கு பெட்டிபெட்டியாய் வைத்திருந்த கோயில் திருவாபரணங்களையும் பத்திரங்களையும் பணத்தையும் பரிசோதித்து வாத்யாரை ஒருதடவை திட்டிவிட்டு தன் மேல்வஸ்திரத்தைவிரித்து அதில் நல்ல பல நகைகளையும் நாணயங்களையும் கொட்டி ஒரேமூட்டையாய்க்கட்டித் தூக்கினான் முக்கி முக்கிச் சேஷன். இதைக்கண்ட வாத்யார்மகன் அதிகாரம் செய்யவந்தான். சேஷசாயிக்கு உடனே கோபம்வந்து பக்கத்திலிருந்த கட்டப்பாறையை எடுத்து அதின் கூரால் அவன் தலையில் ஓங்கிக்குத்தினான், அது பட்டு கோஹோவென்று கதறி விழிபிதுங்கி உதிரத்தால் உடலெல்

லாம் நனைந்து மூளை சிதறி மாண்டான் வாத்யார் குழந்தை. அதனு டன் கலாவதியிடமிருந்த அவனுசையும் மாண்டது. உடனே அங் கிருந்த பத்திரங்களை சேஷனும் சேஷியுமாய் கிழித்தும் எரித்தும் ஒடித்தும் அழித்தார்கள்.

அத்தருவாயில் யமகிங்கரர்கள்போல் இருபது முப்பது சேவ கர்கள் உள்ளே திடீரென்று நுழைந்து இவர்களைப்பார்த்து 'இங்கே வாருங்கள்' என்றபோது அடிவயிற்றில் தீப்பற்றியதுபோலாய் ஒன் றும் தெரியாமல் மயங்கினார்கள் சேஷனும் சேஷியும். உயிர்போய்ப் பிழைத்ததுபோல் மயங்கித்தெளிந்து இன்ன செய்வதென்றறியாமல் அங்குமிங்கும் பார்த்தான் ஓடவும் வழியில்லை. "யாரடா திருட்டுப் பயங்களா எங்கள் வாத்யார் வீட்டுக்குள் நொழஞ்சது" என்றதட்டி னன் சேஷசர்மா. விட்டான் கன்னத்திலோரடி அவனை ஒரு சேவ கன். பிறகு அங்கிருந்த எல்லோரையும் தம்பிரானையும் பின் கட்டு முறையாய்ப்பிணைத்து இருந்தபொருள்களையெல்லாம் எடுப்பித்துக் கொண்டு இரவே வழிநடந்து திருவையாறுபோய்ச் சேர்ந்தார்கள் சேவகர்கள்.

இதன் நெடுநாழிகைக்கு முன்பே ஆத்திரேயன் பானுசேகரர் வீடுசென்று கலாவதி மணிமதியம்மாளுள்பட யாவருடனும் விடியும் வரையில் பேசிக்கொண்டிருந்து பிறகு ஒரு நொடியில் நித்யகர்மா நுஷ்டானங்களை முடித்துவிட்டு அதற்குள்வந்துகாத்திருந்த வண்டி யிலேறிக்கொண்டு எல்லாருடனும் திருவையாறுபோய்ச்சேர்ந்தான். கூடச் சென்ற கலாவதிக்கு ஆநந்தமும் அழுகையும் விசாரமுமாய்ப் போது போயிற்று. பானுசேகரரோ தனக்கு முந்தியே சேஷியிடம் ஐயமிருந்ததையும் தெய்வானுகூலத்தால் அவள் அகப்பட்டதையும் சொல்லி ஆனால் பிரேமன் கதி அநியாயமாயிற்றென்று வருந்தினார். மணிமதியம்மாளும் அவர் சொல்லுவதையெல்லாம் கேட்டுக்கொண் டே போனாள்.

அதிகாரம் கக.

"நல்லோர் செயுங்கேண்மை நாடோறு நன்றாகு
மல்லோர் செயுங்கேண்மை யாகாதே."—சிவப்பிரகாசர்.

கொட்டுமுழக்கும் பேரிகையின் ஓசையும் தாளத்தின் நாத மும் அன்று காலையில் ஊரெங்கும் கேட்டது. பொழுதுவிடியுமுன் யாவரு மெழுந்திருந்து தங்கள் தங்கள் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு நல்ல விலையுயர்ந்த வஸ்திரங்களையும், பட்டாடைகளையும் துப்பட்டாக்களையும் உடுத்து, நல்ல உணவருந்தி, சந்தனம் அத்தர்

னீர் புனுகு ஜவ்வாது முதலிய பூசி, ஏலம் கிராம்பு ஜாதிக்காய் ஜாதிபத்திரி வால்மிளகு கொட்டைப்பாக்கு கொப்பரைத்தேங்காய்த்துருவலென்றுள்ள பலவித ஸாதனங்களுடன் கூடிய தாம்பூலந் தரித்து உல்லாஸமாய் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டு பலபல விதமாய் நடந்து மெள்ளமெள்ள புஷ்யமண்டபத்துக்கு வந்துசேர்ந்தார்கள். வீதிகளிலெல்லாம் செப்பனிட்டு ஒழுங்குபடுத்தி தண்ணீர்தெளித்துப் பலவிதக்கோலமிட்டு வைத்திருந்தது. எல்லாவீடுகளிலும் மாக்கோலம் செம்மண் என்னும் அலங்காரக்கோலமிட்டு பார்க்குந்தோறும் ஆனந்தமாயிருந்தது. "தோரணநடுவாரும் தூணிறை பொதிவாரும் - பூரணகுடமெங்கும் - புனைதுகில்புனைவாரும் - காரணிநெடுமாடங் - கதிர்மணியணிவாரு"மாய் வீதிகள்தோறும் ஆள்கள் நிறைந்து வேலைசெய்துகொண்டிருந்தனர். பகற்காலமாயினும் திண்ணைகளிலெல்லாம் தகதகவென்று மின்னுகுத்துவிளக்குகள் ஆனந்தக்குறியான குங்குமம் - புஷ்பம் இவற்றை அணிந்தனவாய் கொழுந்துவிட் டெரிந்துகொண்டிருந்தன. வீடுகள்தோறும் பெண்கள் நல்ல உடைஉடுத்து தலைவாரிப்பின்னி பலவித ஆபரணங்களணிந்துகொண்டு மை தீட்டிய கண்ணும், திலதம்வைத்த நெற்றியுமாய் உலாவிக்கொண்டு நின்றனர். புஷ்யமண்டபத்தைச்சுற்றி எங்கும் பந்தல்போட்டு தண்ணீர் தெளித்திருந்தது. அங்கங்கே வாழைமரங்களும் தென்னங்குலைகளும் நெல் முடிகள் வாழைக்காய்க்குலைகள் பரங்கிக்காய் பூசணி சுரை மிளகாய் கரும்பு பலவகைத்தோரணங்கள் மாவிலைக்கொத்துகள் பலாக்காய் மாங்காய்க்கொத்துக்கள் கத்திரிக்காய் முத்துச்சோளக்கொண்டைகள் முதலிய பல பல, கட்டி அமைந்திருந்தன. ஏதோ பெரிய குற்றம் நடந்திருக்கிறதென்றும் சோழராஜனே நேரிலிருந்து விசாரிக்கப்போகிறாரென்றும் மட்டும் ஜனங்களுக்குத்தெரியுமேயொழிய வேறொன்றும்தெரியாது அரசர்கோவும் அவ்வூர்க்கு வந்ததுமுதல் அன்றுவரை வெளிப்புறப்படாமலும் இருந்தார். பௌத்தமதத்தின் கொள்கைப்படியேநடந்து கொஞ்சக்காலமாய்த்தான் சைவஸமயியாக மாறினாரென்றும் அதனாலேயே அவரைக்காணவேண்டுமென்றும் அநேகர் ஆசைகொண்டிருந்தனர். ஆதலால் புஷ்யமண்டபத்தைச்சுற்றி நின்றவர்கள் பலபல விதமாய்ப்பேசிக்கொண்டு குதூஹலமாயிருந்தார்கள். அங்கங்கே சில இடங்களில் கொடிச்சேலைகளும் - தொங்கவிட்டங்களும் - மேல்தூக்கிகளும்-விதம் விதமான பாவைகளும் படங்களும் கண்ணாடிகளும் தொங்கி காற்றில் ஆடிக்கொண்டிருந்தன. ஆகாயமெங்கும் சிறுமேகங்கள் பரவி - வெயிலின் கொடுமை தெரியாமல் அடங்கிவந்தது. காவிரியின் குளிர்ந்த காற்றும் வீசியது. மண்டபத்தின் மேல் நல்ல விலையுயர்ந்த பெரிய கம்பளமும் அதன் நடுவில் தங்கத்

குமிழ்களுள்ள பீடமும் அத்துடன் சேர்ந்து சாய்பலகையுமிட்டிருந்தன. அவற்றின்மேல் விலையுயர்ந்த பட்டு மெத்தையும் போட்டிருந்தது. பீடத்தின் இருபுறமும் பூதங்கள்போன்ற பெரிய இரண்டு உருவங்கள் கைநீட்டி விளக்கேந்தியனவாய் நின்றன. சற்றேறக்குறையப் பத்துநாழிகையானதும் திடீர் திடீரென்று இரண்டுவேட்டுகளின் சப்தம் கேட்டது. ஜனங்களெல்லாம் ராஜாபுறப்பட்டுவிட்டாரென்றும் இதோவந்தார் அதோவந்தாரென்றும் சொல்லிக்கொண்டு தம்மையறியாமல் ஆனந்தமடைந்துகொண்டிருந்தார் சற்றுநேரத்துக்கெல்லாம் அறுபதெழுபது சேவகர்கள் வந்து அங்கங்கே நின்றுகொண்டு ஜனங்களுடைய கூச்சலையும் சந்தடியையும் அடக்கினார்கள். உடனே சில வெள்ளித்தடிக்காரர்கள் வந்து ஒவ்வோரிடத்தையும் பார்த்துவிட்டு ஒவ்வொரு சேவகர்களுக்கும் சில விதிகளைச்சொல்லிவிட்டுத் திரும்பிச்சென்றார்கள். சோழராஜாவும் ஸ்ரீ பஞ்சனதீச்சுவரனுடைய ஆலயத்துக்குச்சென்று கடவுளைத் தொழுது, அங்கிருந்து வெளிப்பட்டு தன் அதிகாரத்துக்குரிய விலையுயர்ந்த உடுப்புகளைதரித்து தன் பட்டத்துயானைமேல் வந்தேறினான். உடனே இரண்டு வெடிதீர்ந்தார்கள். கொடிகளும் சாமரைகளும் குடைகளும் விசிறிகளும் ஆலவட்டங்களும் தூக்கினவர்களாகவும், ஈட்டி-பாலா - உருவினகத்தி - வேல் - தடி - தண்டம் - உலக்கை-உடுக்கை - சூலம் முதலிய ஆயுத வரிசைகளேந்தினவர்களாகவும் வீதியின் ஓரங்களிரண்டிலும் ஒருவர்பின் ஒருவராய் அணியணியாய் அநேகர் முன்னடந்தார்கள். இவர்களுக்கிடையில் ஆண்பூதங்கள்போலவும் பெண்பூதங்கள்போலவும் - தத்தம்மில் முட்டிக்கொள்ளும் ஆடுகள்போலவும், குதிரைகள் போலவும், ஒட்டகைகள் போலவும், மத்துப்பிளக்கும் பெண்டிரைப்போலவும் உள்ள உருக்களில் புகுந்துகொண்டு குதித்துக்குதித்து விளையாடிச்சென்றனர் சிலர். அதன்பின் பதினெண்வகை வாத்தியங்களும் முழங்கிச்சென்றன. அடுத்தாற்போல் புகழ்கூறிக்கொண்டு கட்டியக்காரர்கள் சென்றனர். இப்படியே ஆரவாரத்துடன் புறப்பட்டு இடையிடையே ஆரத்தி முதலிய சுற்றவும், அட்டமங்கலமேந்தவும், பூர்ணகும்ப மளிக்கவும், புஷ்பமாரிபெய்யவும், பனிநீர்தெளிக்கவும் ஆநந்தமாய் மெள்ளவந்து பூசமண்டபத்தில் ஏறி "ஜயாவிஜயீபவா!" என்று யாவரும் வாழ்த்த அந்தணர்கள் மங்களாக்ஷதை வீச-தன் பீடத்தில்வந்திருந்தான் அரசன். "கோல்வருஞ் செம்மையும் - குடவருந் தண்மையும் - சால்வரும் செல்வமென் - றுணர்பெறும்" சோழனும் தன் அமைதியில் இருந்தபின்னர் அங்கு வந்திருந்த மற்றையவரையெல்லாம் உட்காரும்படி வேண்டினான். அப்போதே, உட்காருங்கள் - உட்காருங்கள் என்று மூலைக்குமூலை ஓசையெழும்பி எவ்விதச் சந்தடியுமோய்ந்தது.

எல்லாரும் அவ்வவர்களுக்குத் தக்க இடங்களிலிருந்து கைகட்டி வாய் பொத்திக்கொண்டிருந்தபோது அரசன் குற்றவாளிகளை யெல்லாம் வரவழைக்கச்சொன்னான். அப்போது சடைவிழுந்து செம்பட்டையாய்த் தொங்கிய சிகையும் அழுக்கேறியும் கண்ட இடங்களில் முட்டிக்கொண்டு காயப்பட்டுக் காய்ந்தும் உள்ள தலையும் துன்பம் பூசிக் கண்ணீர்ப்பட்டையடித்த முகமும் அழுக்குத் துணி போர்த்த உடம்பும் யாரையும் ஒரு பொருட்டாயெண்ணாத பார்வையுமாய் பைத்யகாரன்போல் ஒருவனை ஒரு வெள்ளித்தடிக் காரன் மெள்ள நடக்கச்செய்து கூட்டிக்கொண்டு வந்தான். அரசன், 'இவன்' நாமே விசாரிப்பதாய்ச்சொன்ன ஆளல்லவோ? என்று சொல்லிக்கொண்டே குற்றமென்னவென, அந்த வெள்ளித் தடிக்காரன் எழுந்து, "மஹாராஜா அவர்களுடைய ஆணை தப்பி அவருடைய தோட்டத்துக்குள் நுழைந்து அங்கு தகாதகாரியம் செய்தான்" என்று மூன்று முறை சொன்னான்.

"ஆ அ? அப்படியா? என்ப்பா நமது ஆணையை மீறிச்சென்றாய்" என்று அரசன் கேட்டான்.

குற்றவாளி உடனே தன் மடியிலிருந்த ஓர் ஓலைச்சுருளை யெடுத்துக்கண்ணீர் சொறிந்துகொண்டே அதனைப்பிரித்து ஏதோ சொல்ல வாயெடுத்து முடியாமல் வாய்விட்டு "துரையே கண்ணே" என்று விம்மிவிம்மி அழுதான். அரசர் பெருமானும் அடுத்து இருந்த ஓர் மந்திரிக்கு சைகைசெய்ய அவன் அவ்வோலையை வாங்கி வாசித்தான் :—

"என் பிரியமுள்ள ஐயாவே;

உங்கள் தாட்டுணைக் கென் சென்னி நிலந்தோயப் பன்முறை வந்தனம். என் சிற்றன்னைசெய்த கொடுமை பொறுமலும் விடங் கலந்து சோறூட்டியும் கிணற்றில் தள்ளியும் இழிதொழில்கள் செய்யச்செய்தும் படியாமலிருப்பதிற்கேற்ற எவ்வளவோ இடஞ் சல்கள் செய்தும் என்னை அவள் கொல்லவும் கெடுக்கவும் பார்த்த தற்கஞ்சியும் நமதூரை விட்டுப்புறப்பட்டு, என்னுயிர்க்கு நற்றுணை யான குருநாதனிடமாவது என்னுயிரின் ஊற்றாகிய தங்களிடமா வது ஒன்றும் சொல்லாமல் வெளிப்பட்டு, யமனும் அஞ்சக்கூடிய கொடிய காட்டுப்பாதையில் மழையிலும் வெயிலிலுங் கற்பாறை யிலும் முள்ளிலும் வாடிவருந்தி நடைமெலிந்து வீழ்ந்து, பின்னர் கிராதகர்களால் வஞ்சனையான மனத்துடன் வளர்க்கப்பட்டுக் கொழுத்து காளிகோயிலில் பலிபோடுவதற்காகக் கொண்டுபோகப் பட்டு அங்கோர் தருமமூர்த்தியான வேடனுடைய கருணையால்

தப்பி உயிர் பிழைத்து, அன்பில் வந்து சேர்ந்து அங்கென்னை உய்விக்க அவதரித்த தெய்வம்போலிருந்த பாநுசேகரர் வீட்டில் என்னுயிரின் நிலைக்களமென்னத்தகுந்த கலாவதியுடன் வளர்ந்து பொல்லாத வேளையால் நான் அவளைக்கொல்ல வழிதேடியதாக என்மீது வஞ்சனையான குற்றம் சுமர்ந்து அத்துடன் வேறு சில அடாப்பழிகளுங்கூட, அவ்வூராள்வோனால் கொள்ளிடத்தில் தலைகீழாய்த் தூக்கி எறியப்பட்டு, நெடுநேரம் மிதந்தும் நீந்தியும் ஒன்றுமாகாமல் கைசோர்ந்து கால்சோர்ந்து உடம்பெல்லாம் நொந்து நினைவழிந்து அமிழ்ந்திபோம் வேளையில் ஓர் தவமுனிவரால் அங்கிருந்தெடுக்கப்பெற்று, சோழமஹாராஜாவினிடம் அகப்பட்டு அவரால் உதவிபெற்று உயிர்பெற்றாலும் அவர் சொல்லியபடியே என் உபகாரியைக்கொல்லமாட்டாமலும் கொல்லவிட எண்ணமில்லாமலும் வருந்தி, பின்பு அந்த உபகாரியான தவமுனிவரே கடிந்துகொள்ள அங்கிருந்து வெளிப்பட்டேன். இவ்வுலகின் கொடுமை சிறிதும் பொறுக்க என்னாலில்லை. எங்கு சென்றாலும் துன்பமேயாய் உள்ள இப்பிறவியைத் தொலைத்துவிட எண்ணித்துணிந்துவிட்டேன். இன்னும் ஒரு கணத்திலிங்குள்ள மரத்திலேறித் தலைகீழாய்க் கீழேவிழுந்து உயிர் துறப்பது துணிவு. என்னையிட்டு நீங்கள் வருந்தவேண்டாம். எப்படியும் பிள்ளையாய்ப் பிறந்ததற்குள்ள கடனை முடிக்கலாமென்றெண்ணி எவ்வளவோ பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும் இவ்வுலகின் தன்மை என்னை இப்படி முடியச்செய்கிறது. என் செய்வேன் என் தந்தாய்! பொய்யும் வஞ்சனையும் பொறாமையும் மலிந்த இந்த உலகத்தில் நோய்-பிணி-மூப்பு-வறுமை இவற்றிற்கிடமாய், நரம்பு-மூளை-என்பு-தோல்-சதை-தசை-நிணம் இவற்றாற்கட்டி ஈ மொய்த்து- அழுக்கொடுத்திரியும் இச்சிறுகுடிசிலில், புண்யம் பாவம் இன்பம் துன்பம் என்னும் ஊசலாடும் இவ்வாழ்வு வெறுக்கத்தக்கதே 'எல்லாப் படியாலு மெண்ணினு லிவ்வுடம்பு - பொல்லாப் புழுமலி நோய் புன்குரம்பை' தந்தை- தாய்- என்னும் சுற்றமெல்லாம் அந்தந்த உடம்பை ஒட்டியதே யொழியவேறென்ன? அவரவர் வினைக்கேற்ப ஒருவரோடொருவர் உறவினராய்க்கூட்டப்பட்டும் ஒருவருக்கொருவர் விரோதியாய்ப்பிரிக்கப்பட்டும் கடவுளாலாட்டி வைக்கப்படும் இவ்வான்மாவைக்குறித்து அழுவதால் லாபமென்ன? 'தந்தையார் தாயாருடன் பிறந்தார்தாரமார் புத்திரரார்தாந்தாமாரோ, வந்தவாறெங்ஙனேபோமாறேதோ மாயமாமிதற்கேது மகிழவேண்டா; சிந்தையீருமக்கொன்று சொல்லக்கேண்மின் றிகழ்மதியும் வாளரவுந்திளைக்குஞ்சென்னி, யெந்தையார்திருநாம நமச்சிவாயவென்றெழுவார்க்கிருவிசும்பிலிருக்கலாமே'? என்றும், 'மிகத்தேடும் செம்பொன்

னும் வேட்ட மனையாளும் - மகப்பேறு மங்குதவ வாரா-பகைத் துறுக்கி-கையாற்கதையேந்திக் காலன்வரில்" என்றும் பெரியோர்கள் சொல்லியவற்றை நினைந்து துன்பம்மாறி, சராசராத்மகனை பகவான் ஸ்ரீபவானிபதியையே துணிவாயும் துணையாயும் கொள்ளுங்கள்."

தங்கள் சிறுவன்;

பிரேமநாதன்.

இந்தக்கடிதத்தை வாசிக்கும்போதும் வாசித்து முடிந்த உடனும் 'ஐயையோ!' என்று 'நானென்ன பெரும்பாவி' என்றும் சொல்லிச்சொல்லி அழுதார் தயாநாதர். அவரையும் அவர்மகனையும் எண்ணி மனங்கசியாதவர்கள் அப்பெருங்கூட்டத்தில் யாருமில்லை. அரசர்பெருமானும் அவரை அருகே அழைத்து இருக்கச்செய்து, அவரழுகையைத் தவிர்ப்பதான ஆறுதல்கள் சொல்லி அவர்மகனுடைய தேகத்தை தேடிக் கொண்டுவரவும் ஆளனுப்பினான்.

தயாநாதருடைய தப்பிதத்தை மன்னித்ததுபோலவே தம்மையும் விட்டுவிடுவார்களென்றெண்ணிக்கொண்டு சேஷசாயி முதலியவர்களிருக்க, "வேறு குற்றவாளிகளை வரவழைக்கலாம்" என்றுண்டான அரசன்கட்டளைப்படியே சேஷசாயி முதலிய பெருங்கூட்டத்தாரைக்கொண்டுவந்து நிறுத்தினார்கள் சேவகர்கள். கஞ்சாமருந்தின் வேகந்தணியாமல் மயங்கிமயங்கித் தெளிந்தும்சிரித்தும் அழுதும் திட்டியும் பெருங்கூச்சலும் ஆரவாரமும் செய்துகொண்டும் இருந்த அவ்வளவு பேர்களையும் பார்த்து, குற்றவாளிகளில் முக்யரான சேஷனையும் சேஷியையும் மட்டும் இருக்கச்செய்து மற்றவர்களை வெளியே கொண்டுபோகச் சொன்னான். பிறகு ஓர் வெள்ளித்தடிச்சேவகன் அரசனுத்திரவாலெழுந்து, "மஹாராஜாவின்பிரஜைகளில் ஒருவரைக்கொண்டு, ஒருவருடைய பொருளைக் கொள்ளையிட்டு அநேகரை மயங்கச்செய்தானிவன்" என்று சேஷசாயிமீது குற்றஞ் சுமர்த்தி உட்கார்ந்தான்.

உடனே சேஷசாயி எழுந்து "ராஜப்பிரபோ! என் விண்ணப்பத்தை தயவுசெய்து கேளுங்கள், இந்தக்காலம் நல்லவர்களுக்காகாது. சூது - பொய் - வஞ்சனை - திருட்டு - புரட்டு - தட்டிப்பிடுங்கல் பெரியவர்களை நிந்தித்தல் - கள்ளுக்குடித்தல் - வியபிசாரஞ்செய்தல் சூதாடல்முதலியசெய்வோர்களுக்கே எங்கேபோனாலும் இப்போது ஜயகாலம். தெய்வமென்று இருக்கிறவர்களுக்கு எப்போதும் ஆபத்துத்தான். தெரியாமல்தானா, மெய்யுடைய ஒருவன் சொல்லமாட்டாததால் பொய்போலத்தோணும் என்றுபாட்டுக்கூடச்சொல்வது?

எவனாவது ஒருவன் திருடிவிட்டு யோக்யன்போலே வெளியிலே வேஷம்போட்டுக்கொண்டு வருவான் அவனுக்குத்தான் ராஜாக்கள் முதலாக மரியாதைசெய்வார்கள். எவனாவது ஒருவன் ஒருவர்வழிக்கும்போகாமல் ஸாதுவாயிருப்பான். அவன்மேலேதான் அடாப்பழி வரும். யாரைச்சொல்லி யென்ன ? என் குருநாதர் பணக்காரராயிருக்கிறதில் வெகுபேருக்கு வயத்தெரிச்சல். அவருடைய பணத்தை எப்படியாவது கொள்ளையடிக்க ஆசைப்படுவோர் அநேகம் பேர்கள். ஆனால் ஆருக்கும் இதுவரையில் ஸமயம் கிடைக்கவில்லை. கேத்தக்கி அவர் இரண்டாம்பேருக்கு தெரியாமல் அகண்ட காவேரிக்குப்போனார். அதை யெப்படியோ தெரிஞ்சுகொண்டு ஒரு திருட்டுப்பயல் வந்தான். அவனை குண்டுக்கட்டாய் கட்டிப் போட்டம். செத்தநேரத்துக்கெல்லாம் இருவது முப்பது சேகுவராய் வந்து உள்ளே பூந்து பணத்தையெல்லாம் மூட்டை கட்டினான். எண்டா என்று கேட்டான் எங்க ஐயாபுள்ளை. அவனை உடனே கொன்னுப்போட்டான்கள் ஐயையோ ! என் வயிறெல்லாம் பத்தி எரியறதே ! ஐயா ! நாங்க கட்டிப்போட்டிருந்த திருடனை கட்டவுத்து ஓடிப்போகவும் சொன்னான்கள். எங்களையும் குட்டைமாட்டிக் கொண்டுவந்துவிட்டான்கள். இந்த அக்ரமம் உம்ம ராஜ்யத்தில் அடுக்குமா ? சேஞ்சகாரியம் செரிக்க கிழவி கின்னரம் பாடினாள் எங்கிராப்போலே எங்களை யிப்படிச்செய்ததுமில்லாமல் என்பேரிலேயும் பழிபோட்டுவிட்டார்கள். அடடா இந்த அன்யாயத்தை நான் எங்கேபோய் முறையிடுவேன். தர்மராஜாவே நீர் கேட்டாகேளும் இல்லாபோனா தெய்வந்தானிருக்கிறது" என்று பேசினான்.

பார்த்தான் கோமகன், 'நீ சொல்வ துண்மைதானா ? பொய் சொல்லாதே ! "தாம் செய் வினையல்லாமல் தம்மொடு செய்வது மற்றியாங்கணுந் தேரிற் பிரிதில்லை" என்பதை மறக்காதே. "வான்கவிந்த வையகமெல்லாம் யெறினும் உரையற்க-பொய்யோடிடைமிடந்த சொல்" என்பது தர்ம்மசாஸ்திரம்.

"இம்மை யம்மைவீ டெனமறை புலங்கொள வியம்பும்
மும்மை யந்தரு முறையுடைத் தெனுநிலை முரணி
எம்மை யாழ்வயிற் றடக்கிமீட் டெழ்கலா வெரிவாய்
வெம்மைகூர்நர குய்க்கினும் மெய்ம்மையை விடேமால்."—

என்றே ஒவ்வொருவரும் கம்பீரமாய்ச் சொல்லிக்கொள்ளல் வேண்டும். ஆதலால் நடந்ததை ஒளியாதே' என்று சொன்னான்.

"இவ்வளவு பெரிய சபையிலே இத்தனைபேருக்கு மின்னாலே பொய் சொல்லத்தான் துணிவனா ஒருத்தன்" என்றான் சேஷன்.

அரசனோ “நீ சொல்வதுண்மையானால் உன்னை விட்டுவிடுவதில் கொஞ்சமும் தடையில்லை, பயப்படாதே” என்று தைரியம் செய்வதுபோல் பேசினான். துணிந்துவிட்டான் சேஷசாயி. “நான் யோக்யனா அயோக்யனான்னு நாலுபேரைக் கேட்டுப் பாருங்கோ. தெய்வமாட்டமா நீங்கள் என்னை கேட்கிறபோது பொய் யெப்படி வரும். இந்த புஷ்யமண்டபத்திலே இருந்துகிண்டு - காவேரியம்மாளுக்கு பின்னாலே ஆகாசவாணி பூமிதேவி ஸாக்ஷியா - வேதப்ராம்மணா ஸாக்ஷியா - இந்த ஊர் ஜல்பேசர் சாக்ஷியாச் சொல்ரேன்; நான் சொன்னது அத்தனையும் ஸத்யம் ஸத்யம். எங்க குரு பாஸ்கராவாத்யார்மேலே ஆணைப்புடிக்கச் சொல்ரேன்” என்றான்.

உடனே இறைமகன் சேஷியைப்பார்த்து, “இவன் சொல்வது நிஜந்தானா? பொய்சொல்லாதே. உள்ளது உள்ளபடியாய்ச் சொல்லு. நீயோ கைம்பெண். ‘மனத்தொடு வாய்மை மொழியில் தவத்தொடு - தானம் சைய்வாரிற் றலை’ என்று உனக்கு கட்டாயமாய்த் தெரியவேண்டும்” என்றான்.

சேஷியம்மாள் கைகட்டிக்கொண்டு, கோசாம் - கீழ்த்தலைப்பு இவற்றை இழுத்துக்கீழே மறைத்து, மேல் தலப்பை இழுத்து தோள்மார்பெல்லாம் நன்றாய்மூடி, முக்காட்டை இழுத்துக்கொண்டு குனிந்து நின்று “ஏ தருமராஜாவே! நானோ பொம்மண்டாட்டி - நடந்ததைத்தான் சொல்லுவேன் - எனக்கு புருஷனும் போவிட்டான் ஆனதால் பொம்மண்டாட்டியிலேயும் கேடுகெட்ட கம்மண்டாட்டி - எனக்கு ஒம்மைவிட்டா வேறே ஆர் துணை நான் சொல்ரேன் என்னை ரக்ஷிக்கரதுன்னாலும் நீர்தான் பக்ஷிக்கிறதுன்னாலும் நீர்தான். ஒங்களயே தெய்வமா எண்ணித்தான் நான் தைரியமா இருக்கேன். இல்லாபோனா வேறே நாதியேது? ஆம்படையான் இல்லாதவா வேறே என்னத்தோடே சேத்தி. என்னமோ உசிரிருக்கொன்னோ - அதுவரக்கும் எதாவது கால்வயத்துக்குத்தேடி திங்கத்தானே வேணும் - அப்படியிருக்க அதுலேயும் மண்ணைப்போட்டுக்குவேனா பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிட்டாதே - அப்புடி நாலு பேராட்டமா, பொய் சொல்லிக்கொண்டு - திருடிக்கொண்டு வச்சத்தை எடுத்து வயரெரிச்சுக்கொண்டு சண்டை மூட்டிக்கொண்டு இருந்தால்தான் இப்படியெல்லாம் வராதே. இத்தனை புருஷாளுக்கு நடுவிலே நான் உத்தமி பத்தினியை திரோவதையாட்டமா ஸபயிலே கொண்டுவந்து நிறுத்தும்படி ஆச்சே என் தலையெழுத்து. ஆனாலும் பதனம் பத்துக்கெளி என்னுப்பிட்டுத்தான் வாயே மூடிக்கிண்டிருக்கேன்.

தர்மம் தலைகாக்கும் - எளச்சானை வலிச்சாரடிச்சா - வலிச்சானை தேவம் அடிக்கும் ஈசொரா! பணதாத்தியரா! இப்படி ஆயிரம் புருஷாளுக்கு நடுவிலே வந்து நிக்கும்படி ஆச்சே! உஹிம்-ஹ்ம் ஹ்ம்-ம்ஹ். நான் ஒரு பாவத்தையும் அரியேனே-தடதடன்னு வந்து வாத்யார் வீட்டில் பூந்து என்னையும் இழுத்துக்கிண்டு வந்து விட்டானே பாவிப்பயங்க. ராஜாவே நான் சொல்ரேன் கேளும்- அந்தப்பிள்ளை சேஷன் சொன்னதெல்லாம் நெஷந்தான் பெசகே யில்லை - நான் வேணுமுன்னா கொடம்நெய்யிலே கையிடரேன் என்று அடிக்கடி மூக்கைச் சிந்திக்கொண்டும், கண்ணில் ஒரு பொட்டு ஜலம் வராவிட்டாலும் பொழியப்பொழிய அழுதுகொண்டும் கீழைப்பார்த்துக்கொண்டும், வலதுகால் கட்டை விரலால் பூமியில் வில்லைப்போலக் கோடுகிழித்துக்கொண்டும் சொன்னாள்.

"காவலனும் தன் ஸபையைப்பார்த்து இவர்கள் சொல்வதையும் அழுவதையும் பார்த்தால் நமக்கு மிக வருத்தமாயிருக்கின்றது. பெண்வதை பொல்லாதது. 'மனுநெறி முறையின் வழக்கிழந்தவர்தாம் - மனமுற மறுகிநின் றழுத கண்ணீர் - முறையுறத் தேவர் மூவர் காக்கினும் - வழிவழி யீர்வதோர் வாளாகும்மே' என்று நம்மைப்போன்ற ஒரு அரசன் சொல்லியிருப்பது நமக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால் இவர்களை விட்டுவிடத்தான் யோசனை - ஆனாவிந்த ஸபையிலுள்ள யாராவது ஏதாவது இந்த விஷயத்தை நன்றாய்த்தெரியும்படி செய்ய முடியுமானால் வெளிவரலாம்" என்றான்.

உடனே எழுந்தான் அங்குள்ள ஓர் சிறுவன். அங்குள்ள யாவரும் அரசனும் விரும்பியபடியே அரசனருகில்போய் நின்று படபட வென்றெழுந்த கோபத்தை தன்னாலானவரையி லடக்கிக்கொண்டு சேஷியைப்பார்த்து 'வாத்தியார் வீட்டுக்கு நீ எப்படிப் போயினை? நீ இருப்பது வேறு வீடல்லவோ'? என்றான்.

அதுவரையில் ஆத்திரேயனைப்பாராதிருந்த சேஷி "அடகட்டேலே போவே! இங்கேயும் வந்துட்டாயா - எங்காத்துக்கு வந்துதான் எங்க பொண்ணுக்கு வெஷம்வச்சுக் கொல்லச்சொன்னையே! ஒஞ்சேதி எனக்குத்தெரியாதா? நான் சொல்லவாண்டாமுன்னுன்னா பார்த்தேன் நமக்கென்னத்துக்குன்னு அன்னிக்கு விட்டதினாலென்னா இத்தனை யோக்யாளுக்கு நடுவிலே பேசவந்தே. அவாளெல்லாம் சும்மா இருக்கிறபோது திடீரென்னு ஒனக்கென்னடா பொத்துக்கிண்டது. முன்னாலே முத்தைவிட்டெறிஞ்சால் பின்னாலே என்ன சேவா தெரியுமோன்னோ? இந்தா சொல்ரேன் பாரு, மஹாராஜாவே கேளுங்கோ அந்தத் தடிவாழாதே போவான் எங்காத்துக்கு வந்திருந்தான். இவனுக்கு முன்னாலே

இன்னொரு கழிச்சேலேபோரவன் வந்திருந்தான். அவன்கிட்ட இவன் ஒரு சிமிழ்கொண்டுந்து கொடுத்தான். ரெண்டுபேருமாய் சேந்துக்கிண்டு எங்காத்துப் பொண்ணே கொல்லப்பாத்தா இவன் தான் இப்ப பேசவந்துட்டான் ரொம்ப யோக்யன்போலே” என்றாள்.

அரசனும் தன் அருகிலிருந்த மந்திரிகளிடம் மெதுவாய், “பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதைகள் சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் நல்லாய், மணலில் முழுகி மறைந்து கிடக்கும் நுணலுந்தன் வாயாற்கெடும்” என்பதுபோல் இவள் வார்த்தையாலேயே இவள் யோக்யதை எனக்குத் தெரிந்துவிட்டது. ‘அம்பட்டன் குப்பையை நோண்டினுல் அத்தனையும் மண்ணும் மயிரும்’ என்பதுபோல் இத்தகைய ஆள்களை கிரமம் போல் விசாரித்தால் அபஸவ்யமெல்லாம் வெளியாகுமென்றஞ்சி இன்றைய விசாரணையே புதுமாதிரியாய்த் தொடங்கினேம் என்றாலும் என்னென்னவோ அதிசயமெல்லாம் வெளிப்படும்போலிருக்கிறது பார்த்துக்கொள்வோம்” என்று சொல்லிவிட்டு சேஷியைப் பார்த்து, “கேட்டதற்குப்பதிலெங்கே? நீ யேன் வாத்யார் வீட்டுக்குப்போயினே” என்றான் அரசன்.

சேஷி—“கோவிச்சுக்காதயுங்கோ இதோ சொல்ரேன் இன்னிக் காலம்பர இல்லே இல்லே நேத்தயக்காலம்பர அந்த வாத்யார் ப்ராமணன் என்னைக்கூப்பிட்டு தங்காத்துலேயே ராத்திரி படுத்துக்கவும் அவனும்படையாளுக்குத் துணையாயிருக்கவும் சொன்னான். இல்லாபோனு அவாத்துலே எனக்கென்ன காரியம்.

ஆத்திரேயன்—“உன் யஜமானை ஏன் கேட்டுக்கொண்டுபோகவில்லை. யாருடனும் சொல்லாமல் வாசிற்கதவையிழுத்து வெளிப்பக்கம் சங்கிலியிட்டுக்கொண்டு ராத்திரி பத்துநாழிகைக்குமேல் நீபோகவில்லையா” என்று அதட்டிக்கேட்டான்.

சேஷி—“நான் வாத்யாராத்துலேயே படுத்துக்கரதா இருந்தான்னு கேட்டுக்கிண்டு போகோணும். நான் வரமாட்டேனுன்னு சொல்லப்போனேன். அதுக்குள்ளேதான் இந்த வல்லடி வந்துட்டுதே”

ஆத்—“அதுபோகட்டும் நேற்று பகல் இருபத்தைந்து நாழிகைக்கு கடைத் தெருவிலுள்ள தம்பிரான் வீட்டுக்கு ஏன் போயினே?”

சேஷி—“நீ என்னடா கட்டேலேபோவே! நான் எங்கே போனேன் எங்கே வந்தேனென்று பாத்துக்கிண்டே ஒக்காந்

திருந்தயா நேத்தை முழுக்க? நான் கீரை பரய்க்கன்ன போனேன்."

ஆத்—" உங்கள் வீட்டுக்கொல்லையில் கீரையில்லையா?"

சேஷி—" கடைத்தெருவுக்கு காரியமாய் போயிருந்தேன் அங்கே நல்ல கீரயாய் இருக்குமுன்னு நொழஞ்சேன்."

ஆத்—" அங்கே அம்பியி லைாத்திருந்ததே என்ன உனக்குத் தெரியாதா?

சேஷி—" அதெல்லாம் நான் என்னத்தைக் கண்டேன். அந்த நாசமாப்போர தம்புரான் கஞ்சா அரச்சானுக்கும்."

ஆத்—" உனக்குத்தெரியாதா ஒன்றும்? நீ வாத்யார் வீட்டுக்குள் நுழைந்து கதவை யடைத்தபிற்பாடு மடியிலிருந்து மருந்தெடுத்து மாயமாலம் பேசவில்லையா? கலாவதிக்கு வயிற்றுவலிக்குச் செய்த மருந்தென்று நீ சொன்னவுடன் எல்லாருமாய் வாங்கித் தின்று மயங்கவில்லையா? தின்பதுபோல் ஜாடைசெய்து சேஷசாயிமட்டும் அதை எறிந்துவிட இல்லையா"

சேஷி—" அட கட்டேலேபோவே! நீ எத்தனைபேர் தலையிலே இந்த மாதிரி கல்லைத்தூக்கிப்போட்டாயோ! என்டா இந்த அடாப்பழி சொல்லுகிறாய்!"

ஆத்—" என்னைக்கூட நீ தம்பிரானு என்றுகேட்க இல்லையா?"

சோஷசாயி—" நீதானே நேத்தக்கித் திருடவந்தவன். இப்படியெல்லாம் உன்னை சொல்லச்சொல்லி சேகுவனெல்லாம் சொல்லிக்குடுத்தானே!"

ஆத்—" மஹாராஜாவே! இப்போதே அந்தத் தம்பிரானை வரவழையுங்கள்."

சேஷன்—" அவனென்னத்துக் கிங்கே?"

சேஷி—" நீயேண்டா பயப்படரயே. தம்புரான்தான் வரட்டுமே ஒரு கூடை செங்கலுமா பிடாரி?" என்றாள்.

இதற்குள் அரசனுடைய உத்தரவால் வந்துவிட்டான் தம்பிரான். பார்த்தாள் சேஷி. " ராஜாவே! நீர்தான் எனக்கு கதி. நான் வாயில்லாப்பூச்சி. ஆம்படையான் போனபேதே என் பவிஷெல்லாம் போச்சு. இல்லாபோனா நான் இத்தனைக்கும் எளைக்கலமா இருப்பேனா" என்றாள்.

அவளைப்பார்த்துக் கையமர்த்திவிட்டு, அரசன் தம்பிரானைப் பார்த்து " அடா! நீயேன் நேற்று கஞ்சாமருந்து கொடுத்தாய் அவளுக்கு? நடந்ததைசொல்லு" என்றான்.

தம்பிரான் ஒன்றுந்தெரியாதவன்போல் பாசாங்குசெய்ய அர சன் தன் கைப்பிரம்பால் அவனை ஒங்கி ஒங்கி கைகொண்டமட்டில் அடித்தான். அவனும் "சாமீ அடிக்காதியுங்க. நடந்தத்தை சொல்லீடரேன். இந்தப் பாப்பாத்தியெ ஒன்னரவரி சமா நான் பார்த்திருப்பேன். அடிக்கடி யென்னுண்டே வரும் அப்படி இருந்துச்சா? என்னுங்க இருந்துச்சா? ஒருவாட்டிவந்து கொஞ்சம் மருந்துக்கு நஞ்சு கேட்டுடிச்சு கேட்டுடிச்சா? என்னுங்க தெரியுதுங்களா நஞ்சு கேட்டுடிச்சா" என்று சொல்லிக் கொண்டே வரும்போது அரசன் கோபமூண்டு "என்னடா பயலே கேட்கிறேன் சுருக்க பதில் சொல்லாமல் விளையாடுகிறாய்" என்று சொல்லி ஒங்கி அடிமேலடியா யடித்தான். 'அடிக்காதியுங்க சாமி' என்று குதித்துக் குதித்துக்கொண்டும் பல் வெளிப்பட வாயைப் பிளந்து கதறிக்கொண்டும் சொன்னான் தம்பிரான். சேஷியம்மாள் ஒருநாள் பகல் இருபத்தைந்து நாழிகை சுமாருக்கு தன்னை விஷம் கேட்டதாகவும், தான் ஸந்தோஷப்பட்டு அதன் காரணமென்னவென்று கேட்டதற்கு ஒன்றும் தெளிவாய்ச்சொல்லாமல் கையில் ஒரு வெள்ளிச்சங்கிலியைக் கொடுத்து தற்காலத்துக்கு வைத்துக்கொள்ளும்படி சொன்னதாகவும், பிறகு வேறொரு நாள் அதேபோழ்தில்போய் கஞ்சா மருந்து கேட்டதாகவும் அன்றிரவில் பத்துநாழிகைக்கு பாஸ்கர வாத்தியார் வீட்டுக்கு வந்தால் வேண்டிய அளவு பணம் கிடைக்குமென்று சொன்னதாகவும் சொல்லிய அவன் வார்த்தையையும் கஞ்சாமயக்கந் தெளியாத அவன் முகத்தையும் பார்த்து அரசன் தன் அருகேயிருந்த மந்திரிகளுடன் ஏதோ சொல்லிக்கொண்டிருக்கையில் பார்த்தாள் சேஷி. தப்பித்துக்கொள்ள வேறு வழியில்லை ஆதலால் அரசனை விளித்து "மஹாராஜாவே! என் பொல்லாத வேளை எல்லாரும் ஒரேயடியா சாதிக்கரா. இனிமேல் நான் என்ன சொன்னாலும் என் வார்த்தை எறப்போரதா அது கிடையாது. எனக்கின்னமே தெய்வந்தான் தொணை. இன்னம் ஆராவது ஒரு சாக்ஷியைக்கேட்டுத் தீர்மானம் செய்யுங்கோ. வீணு ஒத்தியை அடியோடே தொலைச்சுப்பிடாதயுங்கோ" என்றாள். இதற்குள் ஜனங்கள் மூலைக்குமூலை அப்போதப்போது கைகொட்டியும், பலேபலே யென்று சொல்லியும் ஒருவரோடொருவர் கசமசவென்று பேசியும் ஒருவரிடம் ஒருவர் சேஷியைப்பற்றித் தமது அபிப்பிராயங்களைச் சொல்லியும் திட்டியும் பெருங்கூச்சல் போட்டார்கள். எல்லாவற்றையும் ஒரு நொடியில் ஓயச்செய்து அந்த சபையைப்பார்த்து "இந்த அம்மாளுடைய நிலைமை மிக்க பரிதாபமாயிருக்கிறது. இவள் நடத்தை நன்றாய்த்தெரியவேணுமானால் எந்த வீட்டில்

வேலைபார்த்தாளோ அந்த வீட்டாருடைய அபிப்பிராயத்தைக் கேட்டே ஆகவேண்டும், அதற்கு இனறு முடியாது; இங்கே அந்த ஊரைச் சேர்ந்தவர்களாவது யாராவது உண்டா அப்படி உண்டானாலும் போதும்” என்றான் அரசன். ஜனங்களோ அந்த நொடியிலேயே தீர்மானம் சொல்லும்படிக் கூச்சலிட அதற்குள் ஒருவர் எழுந்து “இவள் யஜமானன் இந்த ஊருக்கு வந்திருக்கிறார் நான் கண்டேன்’ என்றார். ஆத்திரேயன் எழுந்து இங்கு உட்கார்ந்தும் இருக்கிறார்’ என்று பாநுசேகரர் இருக்குமிடத்தையும் காட்டினான். அரசன் உடனே அவரை அருகிலழைக்க அவர் கலாவதியுடன் எழுந்து சென்றார். பாநுசேகரர் முகமோ ஒரு விதம் தெளிவடைந்து ஆனால் ஆழ்ந்த துன்பக்குறியுடன் இருந்தது. கலாவதியோ பிரேமனைப்பிரிந்ததுமுதல் நல்ல ஊண் உடைகளை விரும்பாமலும், தலையை வாரிக்கட்டாமலும் மஞ்சள் மை குங்குமமுதலிய அணுகாமலும் இருந்தாளேனும் “சொன்னலங்கடந்த காமச்சுவையை யோருருவமாக்கி இன்னலந்தெரியவல்லாரெழுதியதென்ன நின்றாள்.” அவளைக்கண்ட எல்லாவரும் பரிதாபத்துடனும் ஆவலுடனும் ஒருவர்க்கொருவர் பேச அரசனும் அவளைக்கண்டு வியந்து மலைத்து நிற்க சேஷியம்மாள் அடிவயிறெரியப் பார்த்து வெதும்பினாள். அரசன் மிக மரியாதையுடன் கலாவதியை பிரியமாயழைத்து சேஷியைப் பற்றி சில கேள்விகள் கேட்க, கலாவதியும் பதில் சொல்லாமல் கொஞ்சநாழி இருந்து அச்சம், மடமை கோபம் முதலியபலவாற்றாற் பீடிக்கப்பட்டு அததற்குத் தக்கபடி முகம் மாறி பிறகு கீழை நோக்கிக்கொண்டே இனிய குரலால் “வைகலும் நீருட் கிடப்பினும் கல்லிற்கு - மெல்லென்றல் சால அரிதாகு - மஃதேபோல் - வைகலும் நல்லறம் கேட்பினும் கீழ்கட்குக் கல்லினும் வல்லென்னும் நெஞ்சு,” “மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும் - உப்பொழிதல் செல்லா வொலிகடல்போல் - மிக்க இனநல நன்குடைய வாயினு மென்றும் - மனநல மாகாவாம் கீழ்” என்று இரண்டு பாடல்களைச் சொல்லி ‘ஹா! பிரேமா!’ என்றழுதாள். அரசன் அதென்னென்று கேட்க, பாநுசேகரர் அந்தப் பையனிடம் தான் கற்ற பாடல்களைச்சொன்னதும் அவன் நினைவும் கூடவந்து நொந்தாளென்றார். விசாரணை உடனே முடியவேண்டுமென்று எல்லாவரும் ஆத்திரப்பட, “அடி சேஷீ! நீயும் சேஷனுமாக ஆற்றின்கரையி லிருந்துகொண்டு ஏதாவது பேசியதுண்டா” என்று ஓர் பேரிரைச்சலுண்டாயிற்று. எல்லாவரும் அங்குமிங்கும் பார்த்தார்கள். யார் அந்தப்படி கேட்டதென்று அரசன்வினவ யாதொருவரும் பதில்சொல்லாமையால் எல்லாவரும் திகைத்து நிற்க “நாய்விற்றகாசு குரைக்குமா என்றும், கிள்ளட்டிகையென்றா விளக்

பமோ. அதுவும் நூறு இருநூறு விலையல்லவா என்றும் நீ சொல்ல
வில்லையா ?" என்று மறுபடியும் ஓர் ஓசையுண்டாயிற்று. எல்லாவரு
ம் ஆச்சரியப்பட்டார்கள். இன்னார் பேசுகிறாரென்று தெரியாதபடி
யால் தெய்வீகமென்றும் ஆகாசவாக்கென்றும் எண்ணிக்கொண்டு
சேஷியைப் பார்த்து நீ இப்போதுண்டான கேள்விகளுக்கு என்ன
பதில்சொல்லுகிறாய் ? என, ' அதற்கென்ன இப்போ ? சேஷனோ
டே பேசவேபடாதா ? என்றாள். உடனே மறுபடியும் எழுந்தது
ஆகாசவாக்கு. எல்லாரும் நன்றாய் கவனித்தார்கள். அரசனுக்குப்
பக்கத்தில் தெளிவாயும் கம்பீரமாயும் "அடீ - சேஷீ ! நீ எல்லாரிட
த்தும் பொய்சொல்வது போலவும் எல்லாரையும் ஏய்ப்பது போல
வும் என்னிடமும் செய்யமுடியாதல்லவா ? நாளைக்கே ஐயாவை
ஊருக்கு அனுப்புகிறேன் - நீ எங்கிருந்தாவது கொஞ்சம் கஞ்சா
மருந்து வாங்கிக்கொண்டு வா என்று உன் கல்லாமக்கன் சேஷன்
சொன்னது எனக்குத் தெரியாதா ? உன் செய்தி முழுவதையும்
ஆதியோடந்தமாய் வெளியிடுகிறேன் பார்" என்றும் வெளிப்பட்ட
அந்த வாக்கைக் கண்டு யாவரும் வியந்தார்கள்.

கை பதற - கால் பதற - கண் குறுணி பதக்காய் விழிக்க -
உடம்பெல்லாம் நடுங்க - நெஞ்சுலர - மார்பு படபடவென்றடிக்க -
உதடு கறுக்க - முகம் பிணமாற்றம் மாற, உடம்பெல்லாம் அக்னிஜ்
வாலைபோல் பற்றி எரிய - உதிரக்குழாய்கள் வழியாய் நெருப்பா
று ஓடியதுபோல் உடம்பெல்லாம் விறுவிறுப்புண்டாக எல்லாரையும்
பார்த்து ஒருவார்த்தைசொன்னாள் சேஷி. "கெட்டிக்காரன் புளுகு
எட்டுநாளையில் தெரியும் என்பதுபோல் எப்படியும் என்யோக்ய
தை தெரியத்தான் போகிறது. நடந்தத்தையெல்லாம் உள்ள துள்ள
படி சொல்லிவிடறேன். இத்தனைபேருமாய்ப் பார்த்து என்னை விட்
டாலும் விடுங்கோ சுட்டாலும் சுடுங்கோ - அவாவா காரியம் அவா
வாளைச் சேராதே பின்னை என்னதான் செயும். தன்வினை தன்னை
ச்சுடுமுன்னு சொல்றாளோன்னோ, பத்துப்பேருக்குச் சொன்னா
பாவம்போகுமுன்னு பேரு. அதுதான் இப்ப எல்லாத்தயும் சொல்
றேன் - நான் கொழந்தயிலே கிளியாட்டமா கொஞ்சம் அழகாய்த்
தானிருப்பேன். எங்கப்பா எனக்கு மன்மதனாட்டமா ஒரு ஆம்ப
டையானை கல்யாணம் சேஞ்சுவச்சார். நான் நகை போட்டுக்க ரொ
ம்ப ஆசைப்பட்டுக்கிண்டு எங்கூர்த் தட்டான்கிட்ட ஒரு சரப்பளி
பண்ணக்குடுத்தேன். அந்தக்கட்டேலேபோவான் எல்லாருத்தை
யும் தொட்டுத்தொட்டுப் பாத்துட்டுத்தான் என்வேலையைப் பாப்
பன். ஒருநா ரொம்பநாழி ஆச்சு என்னென்னமோ பேசிக்கிண்டிருந்
தான் அவன் கழிச்சல்லேபோக அவனுக்கும் எனக்கும் ஒறவாப்

போச்சு. அதேபுடிச்சு தெனம் தெனம் அவன்வீட்டுக்குப்போவேன். புதிசு புதிசா எத்தனயோ நகையெல்லாம் காட்டுவன். ஒருநா ரெண்டுநா போட்டுக்கவும் சேவேன். இப்படி இருந்தபோது ஒருநா நானும் அவனுமா இருந்ததைப் பாத்து என்னாம்படையான் எங்கூர்க் கொளத்துலே விழுந்து செத்துப்போவிட்டான். என் தலைலே எழுத்து அவனோடே எல்லா பாக்யமும் தொலஞ்சுது. தலையைச் சரச்சு இந்த முட்டாக்குப்போட்டுவெச்சா எல்லாரும். அதுபோச்சுன்னிருந்தேன். இந்தத்தலைசரச்சுக்கர எழவு ஒன்று வந்துதே அதுவும் ரெண்டாம்பேருக்குத் தெரியாதேன்னா சரச்சுக்கோணும். அதுலே பரியாரிக்கும் எனக்கும் ஒறவாச்சு. ஒடனே கொஞ்சநாப் போனத்துக்கப்பரம் என்னை அடிச்சுத் திட்டி, புதுக்கோட்டையை விட்டு தொரத்திவிட்டான். அப்பரம் கொஞ்சம் நல்லபுத்தி வந்தது. பட்டாத்தெரியும் பாப்பாத்திக்கின்னுகூட வசனமுண்டோன்னோ இதெல்லாம் கொட்டிக்கொட்டித்தான் அளப்பானே. திண்டாடித் தெருவிலே நின்னு அம்பிலுக்குவந்து சேர்ந்தேன். இங்கே இருக்கிரத்துலே இந்தப் புள்ளயளெல்லாம் வந்தது எனக்கு ரொம்ப எடஞ்சலாத்தான் ஆச்சு. நான் ஒடனே தெவசமுன்னு சொல்லி அங்கேந்து பரப்பட்டு திருமலவாடிக்கி வந்து ராத்தங்கினேன். அங்கே ஒரம்மா கடுமுகி யெங்கரவ என்னோடே பேசிக்கொண்டிருந்தபோது நான் இந்தப்புள்ளயள் அங்கே இருக்குன்னு சொன்னேன். எப்படியாவதுபிரேமனைக்கொன்னூட்டா தன் கிள்ளட்டியைத் தரேனுன்னா. அந்த ஆசைபுடிச்சு மொள்ள வெஷம் வாங்கினேன். கலாவதிக்கு கருப்பஞ்சார் கொடுக்கரபோது அந்த வெஷத்துலே கொஞ்சம் போட்டுக் குடுத்தூட்டு மீதியை அந்தப் புள்ளை பொட்டியிலேயே வச்சுப் பூட்டி அந்தப் பொட்டித்தொரகுலைமாத்திரம் அந்தாத்துக் கெணத்துலே எரிஞ்சுட்டேன். அப்பரம் இந்தத்தடிவாழாதேபோவான் பேச்சைக் கேட்டு இப்போ ஆப்பிட்டுக்கிண்டு முழிக்கரேன் இதுதான் என்சேதி. என்னவேணுமோ பண்ணிக்குங்கோ" என்றாள்.

அவள் பேசிமுடிந்ததும் எண்ணெய்க்கொப்பறையில் அவளைப்போடவேண்டுமென்றம், செக்கிலிட்டுத் திரிக்கும்படிக்கும், ஒரே வீச்சாய் வீசவும், நெஞ்சில் உப்புக்கல்லை வைத்துச் சுடும்படிக்கும், குழியை வெட்டிப் புதைக்கவும், யானையின் காலில் வைத்து இடரவேண்டுமென்றும் மூலைக்குமூலை பெருங்கூச்சலுண்டாயிற்று இப்பொழுதுதான் தன் இளையாளின் யோக்யதையை நன்றாய் அறிந்த தயாநாதர் மிக்கவருத்தப்பட்டார். கலாவதியும் அவள் தங்கையும் கண்கலுழ்ந்தார்கள். எழுந்தான் சேஷன் தலைக்குமேலோடிய ஜல

ம் சானாலென்ன முழமானாலென்ன என்று நினைத்து எல்லாரையும் ஒருதடவை பார்த்து, தப்பித்துக்கொள்ள வழியில்லாத தைரியப்பார்வையாய் நின்று தன் குற்றங்களையெல்லாம் ஒப்புக்கொண்டு, தான் ஒரேபிள்ளையென்று தன் மாதா பிதாக்கள் வயது சென்றவர்களென்றும் சொல்லி அந்நினைவு வந்தபடியால் வாய்விட்டுக் கதறி தன்னைத் தேற்றிக்கொண்டு, பாஸ்கரவாத்யாருடைய புரட்டுகளையும் ஒன்றும்விடாமல் வெளியிட்டான். அப்போது தான் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவந்தார் வாத்யார். அரசர்பெருமானும் வீண்போதுபோக்க எண்ணமில்லாமல், சேஷசாயியைக் கழுவிலேற்றவும் அவன் இறந்தபின் அவனையும் சேஷியையும் சேர்த்து தலையொடு கால்கட்டி நடுக்காட்டில் கொண்டுபோய்ப் புதைக்கவும் உத்தரவுசெய்து, தம்பிரானொழிந்த மற்றவர்களை விட்டுவிட்டு வாத்யாரை நிறுத்தி, கடுமுகிக்கும் ஆளனுப்பினான். இதற்குள் சேஷசாயியை உயர்ந்த மேடையில் நிறுத்தி அறுசுவையோடுகூடிய ஊணளித்து அவன் இஷ்டப்படியேயுள்ள மூன்றுவரம் கேட்கும்படி சொன்னார்கள். அவன், எல்லாரும் தன்னை மன்னித்துவிட வேண்டுவதே முதல்வரமென்றும்; தன்கதையை எல்லாரும் நன்றாய்க் கேட்டு தன்னைப்போலிராமல் நல்ல நடக்கையுடனிருக்கவேண்டுவதே இரண்டாவது வரமென்றும் சொல்லிவிட்டு, ஓ மஹாஜனங்களே! உங்கள் பிள்ளைகள் படிக்கவேண்டுமானால் அவர்களை இந்தமாதிரியான வாத்யாரிடம் அனுப்பவேண்டாம். பிள்ளைகள் வாழவேண்டும் - நமது சந்ததி விளங்கவேண்டும் என்றுதானே உங்கள் பிள்ளைகளுக்கு ஆஸ்தி சேர்த்துவைத்து கல்யாணம் நடத்துகிறீர்கள். அது போலவே உங்கள் பிள்ளைகள் யோக்யனாயிருக்கவேண்டும், அவர்களுக்கு நல்லகதி வேண்டும் என்றுங்கூட ஆசைப்பட்டு நல்ல உபாத்யாயரிடம் அனுப்பாமற் போனால் நீங்கள் என்ன தகப்பன்மார்கள்? கழுதையெல்லாம் குட்டியில் அழகு என்பதுபோல் நான் சிறுவயதில் நல்ல சமத்து. பள்ளிக்கூடத்திலும் எல்லாரையும்போல் படித்து நல்ல கெட்டிக்காரனென்று பெயரும் வாங்கினேன். ஆனால் இந்த பாஸ்கரவாத்யாரிடம் வந்தது முதல் செய்திருக்கிற அக்ரமத்துக்கு கணக்கில்லை. எவ்வளவுதூரம் ஒருவன் பிசகு செய்தால் அதற்கப்புரம் வேறு பிசகுசெய்யக் கிடைக்காதோ அவ்வளவையும் இம்மஹானுபாவனிடம் வந்தபிறகு பழகிக்கொண்டேன். உங்களுக்கு புத்தியுண்டானால் இனிமேலும் இந்தவாத்யாரிடம் உங்கள் குழந்தைகளை அனுப்பாதேயுங்கள். அவருடைய கடன்காரர் வீட்டுக்கு அலைந்தலைந்து உங்கள் பிள்ளைகள் கெட்டுப்போவதில் இஷ்டமிருந்தால், அயோக்யதை யென்பதெல்லாம் ஒன்றும் குறையாமல் உங்கள் குமாரர்களுக்குப் பழகவேண்டு

மென்று உங்களுக்காசையிருந்தால் பஞ்சமகாபாதகங்களும் உங்கள் புத்திராளுக்கு படிப்படியாய் வரவேண்டுமென்று ஸம்மதித்தீர்களானால், அவர்களுக்காக புதுநகரம் உண்டாக்கவேண்டுமென்றெண்ணினீர்களானால் என்னைப்போலவே ஊரார் காறிஉமிய கழுமரத்திலேறி பரந்தும் காக்கையும் கண்ணையும் முழியையும் மூக்கையும் உதடையும் கொத்திக் கொளறித் தின்னும்படி அவர்களுஞ்சலாடுவது உங்களுக்கு ஸம்மதமானால் இந்த வாத்யாரிடம் அனுப்பி உங்கள் பின்னேழுஜன்மம் ரௌரவாதி நரகங்களில் கிடந்து அவதிப்படுங்கள். இல்லையோ, வேறெங்கேயாவது உங்கள் குழந்தைகளை யனுப்பி சாஸ்திரவித்தை வேதாத்யயனம் ஆசாரம் இவற்றை நன்றாய்ப்பழக்குங்கள். இதைவிட எந்த சாசுவதமான உபகாரந்தான் உங்கள் பிள்ளைகளுக்காகச்செய்யப்போகிறீர்கள். கேட்டால் கேளுங்கள் இல்லையானாற் போங்கள். என்கதி நன்றாய் ஞாபகத்திலிருக்கட்டும் என்று நெடுநேரம் அறதியிட்டுரைத்து நின்றான். அரசன் முதலான யாவரும் அவனையும் அவன் வார்த்தைகளையும் கண்டு கேட்டு மிகவும் பரிதபித்தார்கள்.

சேஷியும் எழுந்தாள் “நான்சொல்ரத்தையும் கேட்டுக்குங்கோ ஒங்களுக்கு பொண்கள் பொரந்தால் அவாளை தானே பொரப்பட்டு தட்டான் வீட்டுக்குப் போக விடாதேயுங்கோ. அந்த எழவுதான் இப்படியாச்சு. புருஷாளாய் இருக்கப்பட்டவாளோடே எந்தக்காரியமும் சேயவிடாதயுங்கோ. பழம் - காய்கறிகள் வாங்குவதானால் கூட புருஷாள் கிட்டப்போகச் சொல்லாதியுங்கோ கல்யாணங் கார்த்திவந்தால் புருஷப்புள்ளயள் சமயலுக்கு வருவாளே அவாகிட்ட ஒங்க பொம்மண்டாட்டியளை நிக்கக்கூட விடாதயுங்கோ. உப்புப் புளிகூட பொம்மண்டாட்டியள் இடுத்துக் குடுக்க வாண்டாம். எல்லாத்தயும்விட அம்பட்டன்கிட்ட தனியாவிட்டு வேடிக்கைபாக்காதேயுங்கோ. சொன்னேன் சொன்னேன் இதுதான் நீங்களெல்லாம் சேயோணும்” என்றாள்.

அவர்களை உடனே அப்புறப்படுத்த உத்தரவுசெய்தான் அரசன். கா கூ என்று கத்தினவர்களாலும், எழுந்துநின்று சேஷன் சேஷியைப் பார்த்துக்கொண்டே நின்றவர்களாலும், ஒருவர்க்கொருவர் கசபிசவென்று பேசியவர்களாலும் “ஜயாவிஜயீபவ” என்று அரசைவாழ்த்தியவர்களாலும் உண்டான பெருஞ்சந்தடியில் அரசனுக்கருகில் இருந்த விளக்கேந்திய ஓர் பூத உரு - கிளம்பிப்போய் ஜனக்கூட்டத்தில் விழுந்ததால் பேரிரைச்சலும் குழப்பமுமுண்டாயது. உடனே அரசனுத்திரவுப்படியே அறைநொடியில் எல்லாம் அடங்கியது. அப்போது தனக்கெதிரில் பெரியவர் நிற்

கக்கண்டு அவரெப்படி வந்தார். எப்போது வந்தார் என்பதையறியாமல் சற்றுத்திகைத்து பிறகு ஸபையைப்பார்த்து 'இந்த மஹானுபாவர் பிரேமநாதனைக் காப்பாற்றிய பெரியவர். கிராதகர்களுடைய வஞ்சனையினின்றும் அவனைத்தப்புவித்த தாயமூர்த்தி" என்று சந்தோஷமாய்ச்சொல்லி அவரை வலம்வந்து வணங்கினான். எல்லாரும் குதூஹலமாய்ப்பேரிரைச்சல் செய்து அடக்க அடக்க முடியாமல் ஆரவாரித்து நின்றார்கள். எங்கே நான் பார்க்கிறேன் எங்கே நான் பார்க்கிறேன் என்று ஒவ்வொருவராய் எழுந்து பார்ப்பவரும், மண்டியிட்டிருந்து பார்ப்பவரும் நின்று பார்ப்பவரும் நுனிக்காலால் நின்று எழும்பிப்பார்ப்பவரும், அவர்தானென்று தூரத்திலிருந்து கைகாட்டுபவரும் தெரியவில்லையென்று தம்மை நொந்துகொள்ளுபவருமாய்ப் பலர் பேரிரைச்சல் செய்த அமளியின் இடையில் கலாவதி ஒருபக்கமும் ஆத்திரேயன் ஒருபக்கமும் அவரைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டார்கள். வணங்கினார்கள். மனங்குழைந்து பலவாறு அவரைத் தழுவி அவரால் அன்போடு தட்டிக்கொடுக்கப் பெற்றனர். தயாநாதருக்கும் முகம் மலர்ந்து தன் மகனைக்காணலாமென்று தைரியத்தால் ஸந்தோஷம் மிகுந்து பரவசமானார். பாநுசேகரரோ பெரியவரைப்பார்த்துப் பார்த்து மகிழ்ந்து பெருங்களிப்படைந்தார். அதேகாலத்தில் அரசன் அடக்கமுடியாத ஆநந்தத்துடன் "நீங்கள் இதுதானா கண்டீர்கள் அந்த உத்தமன் வேடன் மட்டுமோ? தவவடிவினராய் வந்து உங்கள் பிரேமனைக்காப்பாற்றிய கருணைக்கடல் வேறுயாவர்? வடக்குத்தியாராயிருந்து சேஷன் சேஷியுடைய பேச்சைக்கண்டு திருட்டுப் பிடித்த புண்யபுருஷன் யாவர்? உங்கள் பிரேமனுக்கு உபதேசஞ் செய்த குருமூர்த்தியாவர்? குடுகுடுப்பாண்டியாய் வந்து அவனைப் பிரித்த கீர்த்திமான் யாவர்? கடைசியாய் மரத்தினின்றும் விழநின்ற பிரேமனைக்காப்பாற்றி உயிர் தந்தவரும் இவரேயன்றோ? என்னையும் உய்வித்து நான் அமணசமயப் படுகுழியிலழியாமல், வைதிகசைவத்தில் என்னைத்தூக்கிவைத்த என் குருநாதனும் இவரேயன்றோ என்று சொல்லி அவரை இன்னொருமுறை வலம் வந்து வணங்கினான். உடனே பலவகை வாத்தியங்களும் முழங்க யாவரும் அவரைப் பலபல விதமாய்த்துதித்து மகிழ்ந்தார்கள். இதனிடையில் இன்று தான் இவ்வளவுமறிந்த ஆத்திரேயன் கரைய்யயிடித்துக்கொண்டோடும் பெருவெள்ளம்போல் அன்பானது இழுத்துச்செல்ல அவர்மேல் பாய்ந்து கட்டிக்கொண்டான். முத்தமிட்டான்-பலமுறை சுற்றிவந்தான்-வணங்கினான்-பலவாறு துதித்தான்-ஒவ்வொரு தடவையிலும் அவர் பிரேமனுக்குச்செய்துள்ள உபகாரத்தையும் சொல்லிச்சொல்லி மகிழ்ந்தான். அவரும் தன்

அபாரகருணையோடு கூடிய குளிர்ந்த நோக்கால் பார்த்து ஆத்தி ரேயனையணைத்து முத்தமிட்டு, "இளவலே! இச்சிறு பிராயத்தில் என்னாலும் பிரேமனாலும் உனக்கு நேர்ந்த இணையில்லாத்துன்பங் களை மறந்து எங்களை மன்னிப்பாய்" என்று சொல்லிவிட்டு, தம்தம் வினைக்கேற்கத் தனுகரண புவந போகங்களைப் பெற்றுப் பலபல விதமாய் நடந்து ஸந்தோஷம் வியஸன மிவற்றூற்பிடியுண்டு மயங் கும் ஆன்மகோடிகளிடத்து தாயிற்சிறந்த தயவோடு நோக்கும் ஸ்ரீ பரமேச்சுரன்போல் எல்லாவற்றுக்கும் ஸாக்ஷிபூதனாக மட்டும் நின்றார்.

உடனே எல்லாவரும் ஒரே மனதாய் பிரேமனைக்காணவேண் டுமென்று பேராவல் காட்ட, பெரியவர் எழுந்து "அரசனே! நீ செய்வதொன்றுளது. இந்த வாத்யார் செய்த தீவினையால் அவர் மகன் இறந்ததே போதும். ஆனாலும் அவருடைய செல்வத்தில் முக்காற்பங்கு நமது குழந்தை ஆத்திரேயனைச் சேரவேண்டியது. மீதியுள்ள கால்பங்கு கிராதகர்களுடைய பெண்ணைச்சேரவேண்டி யது. அந்தப்பெண் நமது பிரேமனாலும் என்னாலும் அநாதையாய் விட்டாள். ஆத்திரேயன் ஊருக்குப்போம் வழியில் அவளைக் கண்டு பிரேமனிடம் பேரகச்சொல்லி அனுப்பினான். ஏனெனில் ஒன்றுதவிசெய்யினும் அவ்வுதவி மறவாமல் பின்றை யவர்செய் பிழைபொறுத்திடுவர் பெரியோர்—நன்றி பலவாக ஒருநவை புரிவ ரேனும் கன்றுடுவதன்றி முது கவர் நினையாரே' என்ற உண்மைப் படியே நமது பிரேமன் தனது பெருந்தன்மையால், கிராதகர்கள் வீட்டுக்குப்போய் அப்படிச்செய்யும்படி ஆத்திரேயனுக்குச்சொல் லியிருந்தான். அப்படியே அப்பெண்ணும் அன்பிலுக்குப்போ னாள். ஆனால் இந்த வாத்யார்தான் அவளைக்குறுக்கிட்டு அவள் மனதைக்கெடுத்து, பிரேமன்மீது குற்றஞ்சுமார்த்தும்படிக்குஞ் சொல்லிக்கொடுத்தான். நமது ஆத்திரேயன்போல் நல்ல பிள்ளை இனி எங்குங்கிடையாது. உலகத்தில் எல்லாவரும் நான் ஸ்நேகி தன் நான் ஸ்நேகிதன் என்று சொல்லிக்கொள்ளுவார்கள். இந்தச் சிறு வயதில் நமது ஆத்திரேயன் தனதுயிரைத் துரும்பாயெண்ணி இன்பமெல்லாம் விட்டு, மாடு குரங்கு ஆடு நாய் முதலியவற்றைப் பிடித்துப்பழக்கி ஆட்டிக்கொண்டே அங்கங்குபோய் தன் நேச னைக் கண்டுபிடித்து என்னைத்தேடிவந்து சொல்லுவான்; இவனை போலெங்குண்டு" என்றுசொல்லி சிறுவனைத் தழுவினார். இடை யிடையே பிரேமனைக் காணவேண்டுமென்று எல்லாவரும் பேரி ரைச்சல்செய்ய மறுபடியும் பெரியவரெழுந்து தயாநாதனை ஒரு கையிலும் பாநுசேகரனை ஒரு கையிலும் பிடித்துக்கொண்டு 'நீங்

களிருவரும் என்னைவேண்டி ஒருகாரியம் செய்யவேண்டும்; மறக்கக்கூடாது ' என்றார். அவ்வளவு பெரியவர் அப்படிச்சொல்வதின் எளிமையைக்கண்டு மனம் மெலிந்து அவர் காலில் விழுந்து இருவரும் “ சொல்லிய வண்ணம் ஊழியம் செய்யக் காத்திருக்கிறோம் ” என்றார்கள்.

“ ஆனால் நீங்களிருவரும் ஒருவருடன் ஒருவர் ஸம்பந்தஞ்செய்துகொண்டு கலாவதியும் பிரேமனும் நெடுங்காலம் இல்லறத்தை நடத்தி ஆனந்திக்க இடந்தரவேண்டும் ” என்றார் பெரியவர்.

இச்சொல்லமுதம் செவியிற்பாய்ந்து உள்ளெலாம் பரந்து பெருகி சிரிப்பாய் வெளிவந்து வழிந்ததென்ன இனித்த முகத்தைக் காட்டிக்கொண்டு இருவரும் பேசத்தெரியாமல் நின்றார்கள். அப்போது ஆத்திரேயன் “இவ்விதமான கல்யாணங்கள் செய்யலாகுமோ? அண்ணன் தங்கைபோல் வளர்ந்தவர்களை புருஷன் பெண்சாதிகளாக்கலாமா ?” என்றான்.

பெரியவர் அதுதான் ஸரியென்றும், படிப்பு அறிவு முதலியவற்றால் ஒத்து, ஒருவருடைய மனதை ஒருவர் நன்றாயறிந்த இருவர்க்கே கல்யாணம் தக்கதென்றும், கல்யாணகாலங்களில் கூட இருந்து உண்ணச்செய்தல் கலம் மாற்றல் அளவளாவி நலங்கிடல் ஒருவர்பெயரை ஒருவர் சொல்லிப்பழகல் இருவரும் சேர்ந்து படுத்தல் முதலிய வைத்திருத்தல் இதே எண்ணத்துடன் தான் என்றும், முற்காலங்களில் கல்யாணம் ஆனவுடனே பெண்சாதியை கணவன் வீட்டுக்கழைத்துப்போவதும், அங்குள்ளவருடைய நடை உடையைச்சிறுமி பழகுவதும் அது என்னாளைக்கும் சாசுவதமான உபகாரமாவதுமாயிருந்ததென்றும் ஆதலாலிம்மாதிரிக் கல்யாணந்தான் தக்கதென்றும் சொன்னார். தன் எண்ணமும் அதற்கியைந்ததே என்று பானுசேகரர் தெரிவித்தார். கலாவதியும் தன் மனத்துள் மிகக்களித்து, ஸந்தோஷத்தை வெளிக்காட்டாமலடக்கி யடக்கிப்பார்த்தும் முடியாமல் புன்சிரிப்பாய் நின்று கடவுளை மனதாறத்துதித்தாள். உடனே அரசனும் கூடக்கலந்து இதுவே நிச்சயதாம்பூல காலமாயிருக்கட்டுமென்று சொல்லி பலவகை வாத்திய மங்கலம் முழங்க இரண்டுபேருக்கும் வெற்றிலை பாக்கு மாற்றினான்.

இதனிடையில் பொறுக்காமல் பலமுறையாய் பிரேமன், பிரேமன் என்று எல்லாருமாய்க் கத்த பெரியவர் எழுந்து நின்று “ ஏ பூதேவி ! உன்னில் ஒளித்துள்ள சிறுவனைத் தருதி ” என்று சொல்லிகீழே ஓரிடத்து தன் கால்கட்டைவிரலினாலழுத்தினார். அப்போ

து எல்லாருங் காண அரசன் முன்னிருந்த விளக்கேந்திய பூதவுருகிளம்பி நெடுந்தூரத்தில் விழுந்தது. பார்த்தவர் மனத்தையும் கண்ணையும் தன்னழகால் இளகுவிக்கும் பாலசூரியனே! சிவபெருமானருளால் எரியுண்டு பின் எழுந்த மன்மதனே! சூரபன்மனை இருகூறாய்ப்பிளந்து வாகனமும் கொடியுமாய்க் கொண்டு தேவர்கள் காண நின்ற சிவகுருவோ! என்னும்படி திவ்ய தேஜஸ்ஸுடனும் காணப்பட்ட பிரேமனும், "பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று - வல்லதாம் தாய்நாடிக் கோடலை" என்றபடியே தன்குருவும், நண்பனும் தோழியுமாகிய எல்லாவரையும் விட்டுவிட்டு, மடைதிறந் தோடும் நீர்போல் தன் தந்தைபால் ஓடிக் கட்டிக்கொண்டழுதான். தயாநாதருடைய நிலையைச்சொல்ல யாராலாகும்? இனிக் காணுவதில்லையென்ற நிலையில் அழுதழுது பித்தேறியிருந்த முகங்கூட உடனே மாறி ஆநந்தமிகுந்து தன் எதிரிலேயே உயிரோடு மகனைக் கண்டார். களித்தார் - அழுதார் - சிரித்தார் - ஓடிக் கையிலேந்தி முத்தமிட்டார் - என் செல்வமே - என் உயிரே - தேனே - தேவாமிழ்தே - கண்ணே - கண்மணியே - என வாய் அலற்ற, ஸ்ரீசிதம்பரேசன் கோபுரத்தைக்கண்டாநந்தனுநிலும்பரபரப்புடன், சீகாளத்தியப்பனின் கண்ணினின்றும் பெருகிய உதிரவொழுக்கை தன் கண்ணப்பி நிறுத்திய எங் கண்ணப்பநாயனைப்போல் உன்மத்தனானார். மகனை அடிக்கடி கட்டிக்கொள்வது முத்தமிடுவது பெருமூச்செறிவதும் பலபல ஞாபகங்களெல்லாம் வர அழுவதுமாய் நெடுநேரம் போக்கினார். அரசனும் இதையெல்லாங்கண்டு மகிழ்ந்திருந்தான். பாநுசேகரரும் தன் மகனையும் மகளையும் கண்குளிரக்கண்டு ஆநந்தித்தார். ஆத்திரேயனும் கலாவதியும் முகமலர்ந்து பெரும்பாக்யம் பெற்றவர்போல் நின்றார்கள். அரசனும் காலதாமதம் செய்ய எண்ணாமல் தம்பிரானை மூக்கை அறுத்து கழுதைமேல் ஏற்றி ஊரைவிட்டுத் துறத்தும்படி உத்தரவு செய்துவிட்டு "தேனகு குழலாள் தன் திருமண வினைநாளை - பூநகுமணிவாசமபுனைநக ரணிவீரென் - றானையின் மிசையாணர் அணிமுரசறைகென்றான்"

இச்செய்தியெல்லாம் அப்போதப்போது கேட்டவளான கடுமூகி உள்ளம் வெதும்பி, திருமழபாடியின் கிழக்கேயுள்ள ஓர் பாழ்ங்கிணற்றில் விழுந்து மாண்டாள்; ஆதலால் அவளைக் கூப்பிடப் போன ஆள் அவளைக் காணோமென்று சொல்லிக்கொண்டேவந்தான். அதையொரு பொருட்டாயெண்ணாமல் கிரமப்படி மறுநாள் கல்யாணம் நடந்தது. அரசன் தனக்கு யாதொரு மகப்பேறுமில்லையாதலால் கலாவதியையே மகளென்றுபாவித்து பாநுசேகரனை

க் கட்டாயப்படுத்தி ஸ்ரீபஞ்சநதக்ஷேத்திரத்திலேயே எல்லாம் நடத்தினான். பிரேமநாதனுக்கு எதேஷ்டம் வெகுமதிகள் கொடுத்து தன்னிடத்தே ஓர் மந்திரியாகவும் அதிகாரம் கொடுத்தான். பெரியவர் கூடவே இருந்து நான்குநாள் கல்யாணமும் நன்றாய் நடத்தி ஐந்தாம்நாள் ஆசீர்வாதகாலத்தில் அரசர் முதலிய யாவரும் வீற்றிருக்க எழுந்து நின்று மங்களாக்ஷதையெடுத்து "தயாநிதியான எம் தாயானசெல்வத்தின் திருவருளான, வஸிஷ்டரும் அருந்ததியும் போலவும், அத்ரியும் அநசூயையும் போலவும், பிரசண்டவிக்ரமனும் மஞ்சுபாஷிணியும் போலவும் கீர்த்தியுடன் நெடுநாள் வாழக்கடவீர்" என்று சொல்லி ஆசீர்வதித்து 'உடம்புயிரைத்தொடர்கின்றதை யொத்த' கலாவதியையும் பிரேமனையும் அன்பால் தழுவி அரசனைப்பார்த்தார். அதற்குள் அவனும் "பிர்சண்டவிக்ரமன் மஞ்சுபாஷிணி என்பவர் யாரென்றறிய விரும்புகிறேன்" என "தெரியாதா உனக்கு? ஆர்த்திசமனபுரத்தின் திலதம்போன்றவனும், ஸ்ரீபாரத்வாஜகுலஜாதனும், ஸ்ரீஸுந்தரேசுவரரின் தலைப்பேரனவனும், ஸ்ரீஅம்பிகாநாதருடைய செல்வப்பேரனும், எம்தாயுமான தயாபரனுடைய உண்மைத் தொழும்பனுமாகிய வைத்யநாதசர்மா எழுதியுள்ள கதையின் நாயகனையும் நாயகியையும் பற்றி நீயேன் இதுவரை தெரிந்துகொள்ளவில்லை" என்றார். "ஆ அ! அப்படியொருவரிருக்கிறாரா? ஆனால் அவரை வரவழைத்து நமது பிரேமன் சரிதத்தையும் எழுதச்சொல்லுங்கள்" என்றான் அரசன்.

"அவன் முன்னமே யென்னிடம் ஒப்புக்கொண்டிருக்கிறான். 'தெய்வபக்தி என்னும் தாய்க்கும் ஜீவகாருண்யம் என்னும் தந்தைக்கும் பிறந்து தெய்வபக்திசாக, அன்யர் படையெடுப்பென்னும் கொடிய இளையதாயால் வருத்துண்டு, ஆத்திரமென்னுந்தோழனும் படிப்பென்னும் பெண்சாதியும் வந்து சேர, இளையதாய் இறந்து இனிது வீற்றிருந்தான் நமது தேசமாகிய புருடன்,' என்ற தாத்பரியமுள்ள ஓர்கதை எழுதவே தொடங்கினான். நமது பிரேமன் சரித்திரமும் சொல்வாலும் பொருளாலும் அக்கதையை ஒத்திருத்தலின் நிச்சயமாய் அவனே இதையும் எழுதுவான். ஆனால் என்னபிரயோஜனம்? அவன் கதைகள் வெளிவரும்படி உவிதசெய்து அபிமானிப்போர்கிடையாது; அது கிடக்கட்டும். ஓ எந்தலே! என் நோன்பு நிறைவேறியது. ஆற்றின்கரையில் அழுது புலம்பிய பிரேமநாதனை இம்மட்டில் கொண்டுவந்து நீ கேட்டுக்கொண்டபடியே மந்திரியாகவும் தந்தேன். இப்போது என்னூருக்கு நான் போகவேண்டும். நெடுநாளாயிற்று. எது எப்படியிருந்தாலும் கடவுளே வந்து என்னை இங்கிருக்கச்சொன்னாலும் நானினி அரைக்கணமு மிரேன். தேடுவார்களுக் கரும்பொருளாய்

நம்பியவர்களுக்கு நற்றுணையாய் உள்ள எம் தாயான செல்வத்தைப் பாராத கண்கள் என்னகண்கள். தன்னாைவிட ஒருவனுக் கெது பெரிது ? யார்வேண்டுமோ எப்படி வேண்டுமோ சொல்லட்டும் எம் திரிசிரபுரியைப்போல் ஊரும், ஸ்ரீமாத்ருபூதேசுவரர் போன்ற. தெய்வமும் அவர் திருக்கோயில்போன்ற மலையும் இனி வேறெங்கே உண்டு ? எந்த இடத்தில் என்காயம் போகுமே அது திரிசிரபுரமேயாகவும், எந்த எண்ணத்துடன் ஆவி நீங்குமோ அது என் தாயான தயாபரனுடைய பாதத்திலிட்ட எண்ணமாகவும் இருக்கும்படி அவரே திருவருள் புரிவாராக,'' என்று சொல்லி அங்கிருந்தகன்றனர் பெரியவர்.

அதுமுதல் யாதொரு குறைவுமின்றி பிரேமநாதனும் கலாவதியும் நெடுங்காலம் வாழ்ந்து ஸகலபாக்யங்களையும் அடைந்து பெரியவர் பாதாரவிந்தத்தை மறவாம லினித்திருந்தனர். ஆத்திரேயனும் பிரேமனும் பரதனும் ராமனும்போலவும் வீமனும் தருமனும் போலவும் ஒத்து உயிரொன் றுடலிரண்டாய் சுகமாக இருந்தனர்.

திருச்சிற்றம்பலம்.

“நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே.”

திருச்சிற்றம்பலம்.

புறவீச்சு.

நாம் எழுதிய தெழுதியாயிற்று. இதேபுத்தகத்தை வேறு யாராவது, அல்லது நாமே வேறு காலங்களிலாவது எழுதினல் மிக நேர்த்தியாய் எழுதி முடிக்கலாம். நமது காலவித்தியாஸத்தாலோ, அறியாமையாலோ இது தொடங்கியதுமுதல் ஒருநாள் இருந்த இடத்தில் இன்னொருநாளில்லை என்று சொல்லக்கூடிய வண்ணம் அங்குமிங்கு மலைய நேரிட்டது. 'அவன் உலையில் ஒரு இரும்புக்கதிகம் காய்கிறது என்றும், 'அவன் உருள் கல்' என்றும் நமது நண்பர்களே நம்மைச்சொல்லும் காலமே இது. இதன் ஒரு அதிகாரமாவது ஒரே இடத்தில் தொடங்கி ஒரே இடத்தில் முடிந்ததென்பது கிடையாது. சில பக்கங்களை எழுதும்போது எழெட்டிடங்களில் ஒரேநாளில் இருக்கும்படிக்கும், ஒருவரி இரண்டுவரி அப்போதப்போது எழுதும்படிக்கும் நேர்ந்தது. சில நாட்களில் ஒருவரி எழுதுவதும் யாராவது கூப்பிடுவதும் எங்காவது போகும்படி நேரிடுவதும் பாதி எழுதும்போதே நச்சு நச்சென்று யாராவது பேச்சுக்கொடுத்து மேலே ஓட ஒட்டாமல் செய்வதும் அப்பப்ப! நினைக்க வருத்தமாயிருக்கின்றது.

நல்ல நடையில் நல்லவிதமாய் எழுத நம்மாலாகுமென்றெண்ணியிருந்தோம். அதை தக்கபடி பரிக்ஷித்துப்பார்க்க ஸமயமில்லாமற்போயிற்றே என்பது எமக்குப்பெருந்துன்பம். இத்தகைய புத்தகங்கள் எழுதுவோர் ஒரே உற்சாகத்துடனிருந்தால்தான் படிப்பவர்க்குப் பயன்பட எழுதலாம். எழுதுபவர் மனம் ஒருவித ஆவேசத்திலிருக்கும்போது வேறுவித ஆவேசம் அதில் வந்து கலந்தாலெது செய்யமுடியும்? இந்த ஒன்றுதான் நம் பெரும் ஸங்கடம். எழுதியதை திரும்பிப்பார்க்கக்கூட நமக்கு மனம் வரமாட்டேனென்கிறது. புத்தகத்தைக்கண்டாலும் நமது துன்பமெல்லாம் மனதுக்கு வந்து மனம் உடைந்துபோகின்றது. இந்த நிலையிலேயே இப்புத்தகத்தால் ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மையுண்டாகலாமென்பது எமது நம்பிக்கை. இருபத்திரண்டு அதிகாரமாய் முடிக்கிறதென்று முதலில் உத்தேசித்து கதை வகுத்தயாம் பதினாறுக்குள்ளேயே மிக நெருக்கமாய் முடிக்கும்படி ஆனதும் அதிர்ப்திதான். இதுதான் இப்போது அச்சாய் வெளிவரப்போகிறதா? அந்த நம்பிக்கையுமில்லை. நமது நண்பர்களும் அதைச்செய்கிறேம் இதைச்செய்கிறேமென்று வீணாசை காட்டுகிறர்களே ஒழிய காரியத்தில் உதவுவோர் கிடையாது. சிபார்சுமிருந்தால் யூனிவர்ஸிடிப் பரிக்ஷைகளுக்கு முதலாய்ப்பாட

மாக வைக்கப்பெறும் புத்தகங்களுமுள்ளன; நமக்கதுவுமில்லை. கடன்வாங்கியாவது அச்சிட்டால் விலையாகுமா என்று ஐயம். கடன் கொடுப்போருமில்லை. நம்மவர்களுக்கும் மற்ற தேசத்தார்களைப்போல் புதிய புத்தகங்களைப் படிக்க ஆசையும் கிடையாது. அன்ய பாஷாபிமானமும் ஸ்வபாஷையில் வெறுப்புமுள்ள நண்பர்கள் பலர் பி. ஏ. பட்டம்பெற்றிருப்பதில் லாபமுமில்லை. நமது நிலை எப்படியெனில் மனதுக்கென்னதான் குதூஹலமுண்டு? இதுநிற்க,

புத்தகத்தின் ஆரம்பத்தில் நாம் எழுதியுள்ள தெய்வ வணக்கங்களை செய்யுளாயெண்ணி குற்றஞ்சொல்ல வராதபடி பண்டிதர்களை கேட்டுக்கொள்ளுகிறோம். அவை ஒருக்கால் செய்யுளாயானாலுமாகும். நாம் தெய்வ வணக்கமாய் மட்டுமெண்ணினோமல்லது செய்யுளாயெண்ணி எழுதவுமில்லை. செய்யுளிலக்கணமுமறிந்தோமன்று.

பெண்கள் விளையாட்டில் சிலவற்றை எழுதியிருக்கிறோம். அது சிலர்க்கு அகௌரமாய்ப்படும். இன்னம் கொஞ்சநாள் சென்றால் நமது பெண்மக்கள் அவற்றின் பெயர்களையும் புதியனவென்று நினைக்கும்படியான காலம் வரும் எனத்தோற்றுவதால் இவ்விதமான சில விளையாடல்கள் நமது நாட்டிலு மிருந்தனவென்று மேலையில் எல்லாரும் அறியவேண்டியே அவற்றை நாம் எழுதினோம்.

படிப்பவர்கள் பலவித நண்பர்களாயிருப்பாராததால் மழலைநடையும், விளையாட்டுப்ரஸங்கங்களும், வீண்வர்ணனையும், கடுமைநிலையும், புலால்மறுப்பும், பணவாசையின் இழிவும், வேடிக்கைப்பாடல்களும், தற்காலத்தின் அவஸ்தையும், கடவுள் துதியும், வேதாந்தமும் இவைபோன்ற பலவும் அங்கங்கே அமைத்தோம். 'எல்லாரையும் திருப்திசெய்ய எண்ணியவன் ஒருவரையும் திருப்திசெய்யான்' என்ற பழமொழி நம்மிடம் பலிக்குமோ என்று இப்போது கொஞ்சம் அச்சமுமுண்டு. பெரியோர்களுடைய வாக்குக்களை ஆங்காங்கு உதகரித்திருக்கிறோம். ஆளத்தெரியாமல் எடுத்தாண்டிருந்தால் அதனால் வரும் பெரும்பிழைகளை இப்போதுள்ள பெரியோரும் ஸ்ரீமாத்ரு பூதேசனுமாய் மன்னித்து எம்மைக்காக்கட்டும்.

எல்லாங்கூடி, ஒருவித நன்மையை மனதிலெண்ணிக்கொண்டு இவ்விதம் கதை யெழுதினோம். இதுவே முதலாவதாகக்கொண்டு பதினாறு கதைகளால் எம்மனத்திலுள்ளவற்றை வெளியிடப்புறப்பட்ட எமது கருத்தனைத்தும் கருணாநிதியான நம் சிராப்பள்ளித்தாயின் கருணையாலும் பெரியோருடைய ஆசீர்வாதங்களாலும் குறைவின்றி முடிவதாக. சுபம்.